ஓம்

# திருக்குறள் விளக்கம்

இதில் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவருள்செய்த

திருக்குறள் மூலமும், அதற்குப் பரிமேலழகர் உரையும்

சேர்ந்துள்ளன.



இது "சித்தாந்தப்" பத்திராசிரியர்

திருவாளர் - கிருஷ்ணாம்பேட்டை - குப்புசாமி முதலியார்

அவர்களால் இயற்றப்பட்டு

ஷை யார் மாணவர்கள்

கா. ரா. காளத்தீசுர முதலியார்

முதலியோரால் பதிப்பிக்கப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

உ

கடவுள் துணை.

# திருக்குறள் விளக்கம்

"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமாணாக்கர்" *

என்றபடி அன்னத்தையும், பசுவையும் ஒத்தவர் தலைமாணாக்கர்; மண்ணையும், கிளியையும் ஒத்தவர் இடைமாணாக்கர்; பொள்ளல் உடைய குடத்தையும், ஆட்டினையும், எருமையையும், பன்னாடையையும் ஒத்தவர் கடைமாணாக்கர் ஆவர். ஆதலால், பாலினுள் கலந்த நீரைப் பிரித்துப் பாலைப்பருகும் அன்னப்பறவையையும், முள் நிறைந்த இடத்துமுளைத்த புல்லை முள் நீக்கி வயிறு நிறைய உண்டுப் பின்புதான் மேய்ந்த புல்லை ஓர் தனியிடத் திருந்து அசையிட்டுத் தின்று உயிர்வாழும் பசுவினையும்போல், ஆசிரியன் கூறும் அறம், பொருள், இன்பம் பயக்கும் சொற்களில் உயிர்க்குறுதியைத் தரும் அறப் பொருள் ஒன்றையே மிகக்கொண்டு, ஏனைய ஒழித்தும், ஆசிரியன் தனது நிறைந்த கல்வியறிவாற்கூறிய பொருள்களைத் தன்னுள் நிறையக்கொண்டு பின்பு ஓர் தனியிடத்திருந்து சிறிது சிறிதாகச் சிந்தித்து உண்மைப் பொருள்கொண்டும் நிற்கின்ற மாணாக்கர் பலர்,

"குலன் அருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே" †

என்றபடி நற்குலமும், அருளும், தெய்வபக்தியும், மேம்பாடும்,

---

* நன்னூல், † நன்னூல்.

நூல்களிலே பன்னாள் பழகிய தெளிவும், தொடுத்துச் சொல்லு கின்ற உரைவலிமையும், நிலத்தையும், மலையையும், துலாக்கோலை யும், மலரையும் ஒத்த குணங்களும், உலக நடையை அறியும் அறி வும், உயர்வாகிய குணங்கள் இவைபோல்வன பிறவும்நிறைந்தோன் நூல் கற்பிக்கும் ஆசிரியன் ஆவானாதலால், அந்தகைய ஆசிரியர் ஒருவரை அடுத்து,

"குரவனே அயன் அரி குரவனே சிவன்
குரவனே தந்தைதாய் குரவனே எலாம்
குரவனே என்று நூற் கூறும் உண்மையைக்
குரவனே என்னிடை இன்று காட்டினாய்" *

என்றபடி ஆசிரியனே பிரமன், விஷ்ணு, சிவன், தந்தை தாய், ஏனையவெல்லாம் என்று உண்மைநூல்கள் முறையிடுகின்றன† வாத லால், ஓ! எந்தையே! அஞ்ஞானமாகிய இருட்கடலினின்றும் மெய்ஞ்ஞானமாகிய அருட்கடலிற் சென்று அறம், பொருள், இன் பம், வீடு ஆகிய நான்கினையும் அடையத் தேவரீர் ஓர் தோணி‡ போல்வீர். ஆதலால், எங்கட்கு அவ்வறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினையும் பயக்கும் ஓர் நூலைக் கற்பித்தருளல் வேண்டும் என்று பன்முறைக் கேட்டலும், அந்நல்லாசிரியர்,

"ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப" §

என்றபடி பாடஞ் சொல்லும் ஒருவன் காலத்தையும் இடத் தையும் தூயவாக இருக்கப்பார்த்து, ஓர் சிறந்த இடத்து இருந்து, வழிபடுங் கடவுளை வாழ்த்துதல் செய்து, தான் சொல்லப்போகும் பொருளைத் தன் கருத்தின்கண் நிறைத்து, அவ்வாறு சொல்லுங்

---

* காஞ்சிப் புராணம். † முறையிடுகின்றன=சொல்லுகின்றன.
‡ தோணி=தெப்பம். § நன்னூல்.

கால் விரைந்து சொல்லாதவனும், தன் மாணுக்கர் கேட்கும் வினுக்களுக்கு விடைதாக் கோபியாதவனும், மனத்தால் விரும்பி, முகத்தால் மலர்ந்து, கேட்பவரது அறிவினை அறிந்து, அவரது மனத்தில் தான் சொல்லும் பொருள்களை ஏற்றுக்கொள்ள மாறுபாடில்லாத மனத்தோடு கூறுவான் வேண்டுமாதலால், தானும் ஓர் நல்லிடத்து இருந்து, காலத்தையும் இடத்தையும் தூயனவாக நோக்கி, ஓ! எனது மக்காள்! நீவிர் விரும்பிக் கேட்கும் விடயம் மிகச் சிறந்ததேயாம். யான் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையேனுயினும், எங்கும் நிறைந்த இறைவன் திருவருளை மனத்துட் கொண்டு, என் வழிபடு கடவுளாகிய இறைவனைக்

"கல்லால் நிழல்மலை வில்லார் * அருளிய
பொல்லார் † இணைமலர் நல்லார் புனைவரே" ‡

என்று வாழ்த்தி, நீங்கள் விரும்பிய அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கினுள் வீடு நீங்கலாக அறம், பொருள், இன்பம் மூன்றனையும், உலகத்து உயிர்கள் பிறவி என்னுங் கடலைத் தாண்டி முத்தி என்னும் வளந்தங்கிய கரையைச் சேர, அருள் செய்த முதறிஞர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனுர் ஆவர். அஃது திருக்குறள் என்னும் நூல் ஆகும். அதை விளக்குவேன் என்றனர்.

அது கேட்ட மாணுக்கர் பலரும், எந்தையே! நாங்கள் திருக்குறள் என்பதைத் தெரிந்து கொள்ளுதற்குமுன், அதன் ஆசிரியர் திருப்பெயரின் தன்மையையும், அவரது தெய்வத்தன்மை தங்கிய புலமையையும் அறிவான் விரும்புகின்ருேம் என்னலும், ஆசிரியர் கூறுவார்.

மைந்தர்காள்! ஆசிரியர் திருவள்ளுவனுர் திருப் பெயரின் தன்மை இதுவென விளக்குவதன் முன் அவரது தெய்வத்தன்மை தங்கிய புலமை ஈதென விளக்குவேன்.

ஆசிரியர் திருவள்ளுவனுர், தாம் அருள்செய்த திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாகிய திருவள்ளுவ மாலையினுள் முதன் முதலாக அசரீரி கூறியதாகவுள்ள பாவானது,

---

* மலைவில்லார்=மலையை வில்லாக உடையவர்; மலைவு இல்லார்.
† பொல்லார்=பொல்லாப்பிள்ளையார், ‡ சிவஞானபோதம்.

"திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு
உருத்தகு நற்பலகை* யொக்க—விருக்க
உருத்திர சன்ம †ரெனவுரைத்து வானில்
ஒருக்கவோ வென்றதோர் சொல்,"

என்று உள்ளதாலும், மூன்றுவதாகக்கூறிய இறையனர்,

"என்றும் புலராது ‡ யாணர் § நாட்செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் ¶ நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச் சொல்,"

என்று சிறப்பித்துச் சொல்லி உள்ளதாலும், தெய்வத்தன்மை உடையார் என்பது சொல்லாமலே விளங்கும். அன்றியும் சைவ சந்தான குரவருள் ஒருவராகிய, கோற்றவன்குடி உமாபதி சிவம், தமது நெஞ்சுவிடுதூதில், $

"..................—தேருங்கால்
உன்னை யொழிய உறவில்லை யென்னுமது
தன்னையறிவைத் தனியறிவை—முன்னந்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவரென்று—நிலைத் தமிழின்
தெய்வப்புலமைத் திருவள்ளுவருரைத்த
மெய்வைத்தசொல்லை விரும்பாமல்—ஐவர்க்கும்
ஆவதுவே செய்தங்கு அவர்வழியைத தப்பாமல்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்தி—பூவையர்தம்
கண்வலையிற்பட்டுக் கலவிக் கலையின்றங்கு
உண்மை நிலையுணர்ச்சி யோராமல்—திண்மையினால்
நாவிற்கொடுமை பலபிதற்றி நாடோறும்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங்—காவிநிலை
நிற்கும் வகைபாராய் நிலையான நெஞ்சமே
பொற்பினுடன் யானே புகலக்கேள்"

---

* நற்பலகை=சங்கப்பலகை.

† உருத்திர சன்மர்=முருகக்கடவுளுடைய அவதாரமாகிய மூங்கைப்பிள்ளை

‡ புலராது=கெடாமல். § யாணர்=அழகு.

¶ பிலிற்றும்=சொரியும்.

$ சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று.

எனவெடுத்து அருளிச்செய்ததனுள், தம்நெஞ்சைப் பார்த்து, ஓ. நெஞ்சமே!

"தலைப்பட்டார் தீரத்துறந்தார்
மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்"

என்று நிலைத்தமிழின் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உரைத்த மெய்வைத்த சொல்லை மேவாமல் என்று ஆசிரியரைத் தெய்வப் புலவரென்றும், அவர் தமிழ் நிலைத்த தமிழ் என்றும், அவர் கூறுஞ் சொல் மெய்யறிவினைப் பயக்குஞ் சொல் என்றும் அறிகின்றோ மாதலால், ஆசிரியர் தெய்வப்புலவர் ஆயினாரென்க.

அவர் ஒருவரே புலவர் ஏனையோர் புலவரல்லர் என்பதற்கு

"புலவர் திருவள்ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளி மாலைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருள் மாலைக்கும் பெயர்" †

என்ற செய்யுளே சான்றாகும்.

இனி, இவரது தெய்வத்தன்மையையும், ஒப்பிலாப்புலமையை யும், இவரது சரித்திரத்தையும், இவர் அருள்செய்த நூலினையும் பேசும்போது பேசுவோம். முதலில் ஆசிரியர் திருநாமங்கள் இன்னவை யென்றும் அவைவந்தன் காரணங்களையும் ஆராய்வோம்.

இவர்க்குப் பத்துத் திருநாமங்கள் உள.

அவை,

1. கண்டோரால் விரும்பப்படும் தன்மையும், முதல்வுள்ளல் தன்மையும் உடையராதல் பற்றித் "திருவள்ளுவர்" என்றும்,
2. இல்லறம், துறவறம் என்னும் இரண்டையும் நடத்திக் காட்டுவோர் என்னும் பொருளில் "நாயனார்" என்றும்,
3. தெய்வத்தன்மை யுடையவர் என்னும் காரணங் கொண்டு தேவர் என்றும்,

---

திருக்குறள்—348. † திருவள்ளுவ மாலை.

4. எப்பாவலரினுஞ் சிறந்து நிற்றலால் "முதற்பாவலர்" என்றும்,

5. வினையில் நீங்கி விளங்கிய அறிவினராதல் பற்றித் "தெய்வப்புலவர்" என்றும்,

6. நான்முகன் ஓதிய வேதம் போல் சிறந்த திருக்குறளினை அருள்செய்தார் ஆதலால் "நான்முகனார்" என்றும்,

7. சங்கத்தார் முழுத்தருக்கினை * ஒழித்த காரணம்பற்றி "மாதாநுபங்கி" என்றும்,

8. ஏனையோர் நாவிற்கும் இவரது நாவிற்கும் வேற்றுமை தோன்ற "செந்நாப்போதர்" என்றும்,

9. நாவலர் என்று தம்மைத் தாமே புகழ்ந்து பேசும் ஏனைய நாவலர் போலாது உண்மை நாவலர் ஆதலால் "பெரு நாவலர்" என்றும்,

10. மற்றைய புலவர் யாவரும் தம்தம் மதங்கருதிப் பேசும் உரைபோலாது, எந்நூலாரும், எம்மதத்தினரும் சம் மதங்கொள்ளும்படிப் பேசினார் ஆதலால் "பொய்யில் புலவர்" என்றும் கூறுவனவாம்.

நிற்க, இவரைத் திருவள்ளுவர் என்று அழைப்பது எற்றிற்கு என்னின்? இவரது சரிதை என்று பலர் கூறும் கட்டுரையாலும், † இவரது நூல் உலகோர்க்குத் தரும் பெரும் பயனாலுமேயாம். என்னை யோவெனின்? இவர் பார்ப்பனராகிய பகவன் என்பார்க்கும், ஆதி என்னும் புலைச்சேரியில் வளர்ந்த அரிவை ஒருத்திக்கும், ஔவை, உப்பை, அதிகமான், உருவை, கபிலர், வள்ளியம்மை என்கின்ற அறுவருக்குப்பின் தோன்றினார் என்ப. இவ்வெழுவரும், தாய் தந்தையர் இருவரும் ஒவ்வோர் குழந்தையையும் பிறந்தவுடன் அவ்வவ்விடங்களில் விட்டுச்செல்ல வேண்டியிருந்ததால் அப்பிரிவாற்றாமைக்கு வருந்திய ஒவ்வொரு காலத்தும் முறையே,

"என்னுடைய இருவினைப்பயனுக்குத்தக்க அளவாக என்னைக் கருவில் அமைத்து, ஏனைய பேறு இழவு ஆகிய எல்லாவற்றையும் செய்யச் சிவன் ஒருவன் இன்னும் இருக்கின்றான். அவன் இறந்து

---

* தருக்கு = கருவம்; இறுமாப்பு. † கட்டுரை = புனைந்துரை.

விடவில்லை. அவன் ஆதியும் அந்தமுமற்றவன். உயிர்களைக்காக்கும் பாரம்முற்றும் அவனுடையதாகும். தோன்றி மறையுந் தாயாராகிய நீர்! ஆதி என்னுந் திருநாமத்தோடு இருந்தாலும், உம்மால் செய்யக் கூடுவது ஒன்றுமில்லை. தேவரீர் தமது நாயகருடன் செல்லுதல் கூடும். நீர் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை" என்னும் பொருள்பட

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்துவிட்டானோ?—முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய்!
நெஞ்சமே அஞ்சாதே நீ!" என்றும்,

"யானைமுதல் எறும்பீறுகச் சொல்லப்பட்ட அசைவனவாகிய உயிர்களையும், புல் முதல் மலையீறுகச் சொல்லப்பட்ட அசைவற்றனவாகிய உயிர்களையும் திருவருள் மேலீட்டால் வேண்டுவன யாவும் கொடுத்துப் பின் அறம் முதலாகச் சொல்லப்பட்ட உயிர்க் குறுதிப் பொருளாகும் நான்கினையும் போதித்த உண்மை யாசிரியன் ஆகிய இறைவன் இன்றும் இல்லாமல் இறந்துவிட்டானோ? அருட்பெருங் கடலாகிய அவன் என்னையுங் காத்தல் அவன் கடமைகளில் ஒன்றன்றோ? அச்சிவன் அற்பன் ஆவானோ? ஆதலால் வருந்தாதீர்!" என்னுங் கருத்தமைந்த

"அத்திமுதல் எறும்பீறுன உயிர் அனைத்தும்
சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானோ? காக்கக்கடனிலையோ?
அற்பனோ அன்னாய் அரன்?" என்றும்,

"கருவினுள் இருக்கும் முட்டைக்கும், கல்லினுள் இருக்கும் தேரைக்கும் பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்பரிந்து உண்பிக்கும் இறைவன் என்னை ஊட்டி வளர்க்கானோ? தாயே! ஈதறியாது மயங்குவது என்னை?" என்னுங் கருத்தமைந்த

"கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டிவளர்க்கானோ? ஓ! கெடுவாய் அன்னாய் கேள்!
வாட்டம் உனக்கேன்? மகிழ்" என்றும்,

“சண்டைப்பை என்கின்ற கருப்பையுள்ளிருக்கும் உயிர் ஒன்று, தன் தாய் உண்ணுந்தோறும் உண்டு, உயிர் பிழைப்பது நீர் அறிந்திருந்தும், அண்டத்தின் வெளியேகிடக்கும் உயிர் ஒன்றோ பிழைப்பது ஆச்சரியம்? மலமயக்கத்தால் உண்மை அறியாது மயங்குகின்ற தாயே! எல்லாவற்றிற்கும் இறைவனாகிய சிவபெருமானது உண்மையை யறிந்து நீர் வருந்தாமலிரும்” என்னும் கருத்துத் தோன்ற

“சண்டைப்பைக்குள்ளுயிர்தன் தாயருந்தத்தான் அருந்தும்
அண்டத்துயிர் பிழைப்பதாச்சரியம்?—அண்டி
அலைகின்ற அன்னாய்! அரனுடைய உண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்” என்றும்,

“கண்ணொளியும் சூரியனொளியும் நுழையக்கூடாத காட்டிலுள்ள கருங்கல்லினுள் இருக்கும் தவளைக்கும் உண்ணும்படி அதற்கேற்ற உணவினை ஊட்டும் நாரிபாகராகிய சிவபெருமான் நமக்கும் படியளந்து ஊட்டுவர். அவர்க்கு இத்தொழிலன்றி வேறுதொழில் யாது உளது? அன்னாய்! வருந்தல் வேண்டாம்” என்னும் கருத்துத் தோன்ற

“கண்நுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கும்
உண்ணும்படி அறிந்து ஊட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழில் என்னதான்?” என்றும்,

“தாயாகிய உமது வயிற்றில் நீர் உண்ணுந்தோறும் ஊட்டி வளர்த்தாராகிய சிவபெருமான் இன்னும் என்னை வளர்க்காரோ? எல்லாம் ஒழிந்து நின்ற சுடுகாட்டில் நிலைபெற்று விளையாடுபவர் அவராதலால், நீர் அஞ்சற்க!” என்னும் கருத்துத்தோன்ற

“அன்னைவயிற்றில் அருத்திவளர்த்தவன் தான்
இன்னும் வளர்க்கானோ என்தாயே?—மின்னரவம்
சூடும் பெருமான் சுடுகாட்டில் நின்று விளை
யாடும் பெருமான் அவன்” என்றும்,

“எல்லா உயிரையும் காக்க ஒருதலைவன் உண்டோ, இல்லையோ? அதைத் தேவரீர் அறியீரோ? அறிந்திருப்பீரானால், அத்

தலைவன் காக்கும் உயிர்களுள் நானும் ஒருவன் என்று அறிதல் வேண்டும். ஈதறியாது மயங்குவதென்னை ? வருவதுதானே வரும் என்னும் ஊழ்முறையை அறியீர்போலும் ?" என்னும் கருத்தமைந்த

"எவ்வுயிரும் காக்க ஒரு ஈசன் உண்டோ இல்லையோ ?
அவ்வுயிரில் யான் ஒருவன் அல்லவோ ?—வவ்வி
அருகுவது கொண்டிங்கு அலைவதேன் அன்னே ?
வருகுவது தானேவரும்" என்றும்,

கூறுதலைக் கேட்ட தாய் தந்தையர் இருவரும், அக்குழந்தைகளை அவைபிறந்த இடங்களாகிய பாணர் சேரியில் உள்ள ஒரு மண்டபத்திலும், ஊற்றுக் காட்டிலுள்ள ஒரு மண்டபத்திலும், கருவூரிலுள்ள ஒரு சோலையிலும், காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள ஒரு மண்டபத்திலும், திருவாரூரில் ஓர் மடத்திலும், வேளின் மலைச்சாரலின் ஓரிடத்தும், திருமயிலாப்பூரில் இலுப்பைத் தோப்பிலும் விட்டுச் சென்றனர் எனக் கூறுவதுடன்,

அருந்தவ மாமுனியாம் பகவற்குக்
கருவூர் பெரும்பதிக்கண் பெரும் புலைச்சி
ஆதிவயிற்றினில் அன்றவதரித்த
கான்முளை * யாகிய கபிலனும் யானே,
என்னுடன் பிறந்தவர் எத்தனையோ ரெனில் ?
ஆண்பால் மூவர், பெண்பால் நால்வர்,
யாம் வளர்திறம் சிறிது இயம்புவல் கேண்மின் !
ஊற்றுக் காடெனும் ஊர் தனிற்றங்கியே
வண்ணார் அகத்தினில் உப்பை வளர்ந்தனள்,
காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் † சேரியில்
சான்றார் அகந்தனில் உறுவை வளர்ந்தனள்,
நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள்,

---

* கான்முளை = பிள்ளை. † கள்விலைஞர் = கள் விற்போர்.

குறவர் கோமான் கொய் தினைப்புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளிவளர்ந்தனள்,
தொண்டை மண்டலத்தில் வண்தமிழ் மயிலைப்
பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்,
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிகன் இல்லிடை அதிகமான் வளர்ந்தனன்,
பாரூர் நீர்நாட்டு ஆரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்."

என்னும் கபிலர் அகவலையும் இச்சரித்திரத்திற்குச் சான் * றாகக் கூறுகின்றனர்.

பின்னர் இவ்விதம் பிறந்த குழந்தைகளில் ஒருவராகிய திருவள்ளுவரைத் திருமயிலையிலிருந்த ஒரு வேளாளர் வளர்த்து வந்தனர் என்றும், அவர், பிறகு தவஞ்செய்ய ஓர் மலையை யடுத்துத் தவநெறியைப் பூண்டிருந்த காலத்துக் காவேரிப்பாக்கத்து உழுவித்துண்ணும் வேளாளரில் ஒருவர், வேதாளமொன்று பயிர்களை அழித்தும் உயிர்களை ஒழித்தும் வந்தமையால், அத்துன்பந் தீரத் திருவள்ளுவரிடம் முறையிட்டனர் என்றும், திருவள்ளுவர் அவ்வேதாளத்தை ஐந்தெழுத்தோதி † அடக்கிவிட்டமையால், அவ்வேளாளர் தமது புத்திரியாராகிய வாசுகியம்மையைத் திருவள்ளுவருக்கு மணஞ்செய்வித்தனர் என்றும், அது முதல் திருவள்ளுவர் தம் மனைவியோடு இல்லறத்தை நடத்திவந்து மனைவி யிறந்தபின் யோக நிலையில் நின்று சமாதி கொண்டனர் என்றும் கூறுகின்றனர்.

அன்றியும் இவரது சரிதையை ஆசிரியர் ஒருவர் தாமியற்றிய அபிதான சிந்தாமணி என்னும் நூலில் பின்வருமாறு எழுதி இருக்கின்றனர்.

[" இவர்க்குத் தந்தை யாளிதத்தன் எனும் வேதியன் என்பது பழைய நூல்,

" யாளி கூவற்றூண்டு மாதப் புலைச்சி, காதற் காசனியாகி
மேதினி, யின்னிசை யெழுவர்ப் பயந்தனளீண்டே "

* சான்று=சாக்ஷி

† ஐந்தெழுத்தோதி=பஞ்சாக்ஷர மந்திரத்தை செபித்து.

என்னும் ஞானமிர்தத்தாலறிக. இவரை, திருவள்ளுவ மாலையிற் புகழ்ந்திருத்தலன்றிப் பொய்யாமொழிப் புலவர் முதலியவர் பிற்காலத்தும் புகழ்ந்திருக்கின்றனர்.

" குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
யுறுவிலைக்கு விற்றதனோ டொக்கும்—தொறு கவியைச்
செற்றவேன் மாற! திருவள் ளுவனார் வாய்ச்
சொற்றகுமுப் பால் வாழ்த்துச் சொல்" என்றும்,

" முப்பாலு முண்டோ முலைப்பா லினி நுகரோம்
எப்பாலுக் கப்பாலு மாயினோ—மெய்ப்பொருளும்
உள்ள படி யுணர்ந்தோம் ஓதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து" என்றும்,

சைனர் வாழ்த்து,

" வாழிமறை யாணினங்கள் வாழிமறை யாகமங்கள்,
வாழி மனு நீதி மன்னர் மன்பதைகள்—வாழியரோ,
தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர்" என்றும்,

மற்றொருவர்,

" எப்பாலு மேத்துவா மின்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று—முப்பதா
வோரடி முக்கால் உரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலுமே" என்றும்,

" அவனே புலவன், அவனே கவிஞன்,
அவனே தமிழையறிவோன்,—சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவனுளன்" என்றும்;

இவரைச் சோழநாட்டில் மதுரையில் வசித்திருந்ததாகவுங் கூறுவர். அதனை வள்ளுவமாலையில் நல்கூர் வேள்வியார்,

" உப்பக்க நோக்கின் உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புனச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"] என்பதால் அறிக.

இனி, இவருடைய உண்மைச்சரிதம் இதுவென யாவரும் அறிதற்கில்லாமையாலும், மாமூலனார் கூறியதாகவுள்ள திருவள்ளுவமாலைச் செய்யுளில்

> " அறம், பொருள், இன்பம், வீடென்னும் அந்நான்கின்
> திறந்தெரிந்து செப்பியதேவை—மறந்தேயும்
> வள்ளுவனென்பான் ஓர் பேதை ; அவன் வாய்ச்சொல்
> கொள்ளார் அறிவுடையார் "

என்றிருத்தலாலும், அவர் திருநாமம், உலகத்தார்க்கு வள்ளல் போன்றிருந்து திருக்குறளை அருள் செய்ததினாலேயே, காரணப் பெயராய் " திருவள்ளுவர் " என்று வழங்கிவருகின்றதென்று முடிந்த பொருளாகக் கொள்ளுதல் வேண்டும்.

எது எவ்வாறாயினும் ஆகுக. நமது சிவஞான முனிவர் அருள் செய்த சோமேசர் முதுமொழி வெண்பாவில்

> " மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம்
> துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா—உய்த்தறியின்
> மேற்பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
> கற்றார் அனைத்திலர் பாடு "

என்பதே, நமக்கு அவர் நூல் ஒன்றையே போற்றி உயிர் வாழ்ந்து உய்யவேண்டும் என்பது ஆயிற்று.

இனி, இவர் திருவருள் செய்த நூல் திருக்குறள் என்றோம். ஆயின் ஆசிரியர் அவர்கட்குப் பத்துத் திருப்பெயர்கள் அமைந்தன போல், அவரால் இயற்றப்பட்ட இந்நூலுக்கும் பத்துத் திருநாமங்கள் உள.

அவை,

1. கருத்தாவாகு பெயராய்த் " திருவள்ளுவர் " என்றும்,
2. மூன்று பால்களை உடைமையால் " முப்பால் " என்றும்,
3. வேதத்திற்குப் பின் தோன்றியதால் " உத்தரவேதம் " என்றும்,
4. தெய்வத் தன்மையமைந்த நூல் என்பதால் " தெய்வ நூல் " என்றும்,

5. ஏனைய நூல்கள் போலாது உண்மைப் பொருளையே உணர்த்தும் நூல் என்பதால் "பொய்யாமொழி" என்றும்,

6. சாதலைத் தவிர்க்கும் மருந்து போலவதால் "வாயுறை வாழ்த்து" என்றும்,

7. தமிழ்ப்பாஷையாலாகிய வேதமாதலால் "தமிழ்மறை என்றும்,

8. முதல் மூன்று வருணத்தார்க்கே உரியது மற்றையோர்க்கு மறைக்கப்பட்டது என்னுமல், யார்க்கும் ஒப்ப நிலவுதலால் "போதுமறை" என்றும்,

9. திருவள்ளுவரால் அருள் செய்யப்பட்ட பயன் நிறைந்த நூல் எனப் பொருள்படுதலால் "திருவள்ளுவப் பயன்" என்றும்,

10. குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்டமையாலும், ஏனைய குறட்பாக்களில் சிறந்தமையாலும் "திருக்குறள்" என்றும் அழைக்கப்படுகின்றன.

இவ்விதம் பத்துத் திருநாமங்களால் அழைககபபடினும திருக்குறள் என்னும் பெயரே உலகோரால் பெரும்பாலும் வழங்கப்படுகிறது. இனி "ஔவைக்குறள்' என்ற தொடக்கத்து நூல்கள் முற்றும் குறட்பாக்களால் அமைந்தனவே யாயினும், அவைகளை அவ்வவ்வாசிரியர் பெயர்களோடு சேர்த்து வழங்க இதனை மாத்திரம், இதன் உயர்வு நோக்கி, திருக்குறள் என்றே அழைக்கப்படுகிறது. இது பூவென்னுஞ் சொல் எல்லாப்பூவிற்கும் பொதுவாக இருக்கினும் தாமரைக்கே செல்வது போலாம்.

இவ்வித தகுதி வாய்ந்த நூல் இயற்றிய காலம் இன்றைக்கு (2000) இரண்டாயிரம் வருடங்களாகிறது என்று நவீனநூல் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். ஆனால் வீர சோழியப் பதிப்புரை ஆசிரியர் முதலியோர், சில்லாண்டிற்கு முன் எழுதிய சரிதங்களுள் (3000)மூவாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட காலம் என்கின்றனர்.

மேலும், இவர் நூல் பொதுநூல் என்றதற் கேற்ப கடவுள் வாழ்த்தும் பொதுப்படக் கூறினர் என்று நாம் அறிந்தாலும்,

இவர் தோன்றியபோது இவரும், இவருடன் தோன்றியவரும், சிவபெருமானே தஞ்சம் என்று கூறியிருத்தலாலும்,

"பூவில் அயனும் * புரந்தரனும் † பூவுலகைத்
தாவி அளந்தோனும் ‡ தாமிருக்க—நாவில்
இழை நக்கி நூல் நெருடும் ஏழை யறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்$ தன் கூத்து"

என்னும் செய்யுளும்,

"கோளில் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" ¶

என்னுந் திருக்குறளும், சைவர்களுக்குச் சைவர் என்றே உறுதியைப் பயந்துநிற்கும். இன்னும் இவர் சிவபூசை செய்த திருக்கோயிலில் இவர்க்கும் இவரது பத்தினியார்க்கும் திருக்கோயில் § அமைத்துப் பூசை செய்து வருகின்றனர். வைணவர்கள் இவரைத் தம்மதத்தவர் என்று சொல்லிக்கொண்டு

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாயது எல்லாம் ஒருங்கு" ||

"தாம் வீழ்வார் மென் தோள்துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"**

என்கின்ற திருக்குறள்கள் அதற்காதாரமாய் இருக்கின்றனவென்று எடுத்துக்காட்டினும், அவர்கள் நாயனார்க்குத் திருக்கோயிலும் திருவுருவும் அமைத்துத் தம் மதத்திற்கேற்ப வணங்குவதாகக் காணப்படவில்லை.

இவ்விதமே ஏனைய மதத்தினரும் இவரைத் தங்கள் தங்கள் மதத்தினரென்று கூறி வழக்குரைக்கின்றனர்.

எது எவ்வாறாயினும் ஆகுக. அவர் காலமும், மதமும், குல

---

* அயன்=பிரமன். † புரந்தரன்=இந்திரன்.

‡ பூவுலகைத்தாவி அளந்தோன்=வாமனனாகிய விஷ்ணு.

$ பிஞ்ஞகன்=சிவபெருமான். ¶ திருக்குறள்—9.

§ திருக்கோயில்=சென்னைக்கடுத்த திருமயிலாப்பூரில் ஸ்ரீ கபாலீசு ஆலயத்தின் பக்கலில் இத்திருக்கோயிலைக் காணலாம்.

|| திருக்குறள்—610. ** திருக்குறள்—1103.

மும் இதுவென ஆராய்வதில் நம் சின்னாள்களைப் போக்கிவிடாமல், அவர் அருளிய நூலைப் பொன்னேபோல் போற்றி, அந்நூலுள் பொதிந்துகிடக்கும் உண்மைப் பொருள்களையே, முன் உங்களுக்குக் கூறியபடி, விளக்குவேன்.

அவ்வாறு விளக்குவதில், பத்துப்பெயர்கள் ஆசிரியர்க்கு இருப்பதுபோலப் பத்துத்திருப் பெயர்கள் இந்நூலுக்கும் உண்டென்று முன்பு கூறினேன். அவ்வாறே இந்நூலுக்குப் பதின்மர் உரையும் உண்டு என்று உங்களுக்குக் கூறுவேன்.

அவர் "தருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமேலழகர் திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்"

என்ற பதின்மர் எனப்படுவர். அவ்வாறு உரை பத்துடுத்ததாயினும்

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ—நூலில்
பரித்த உரையெல்லாம் பரிமேலழகன்
தெரித்த உரையாமோ? தெளி"

என்றபடி பரிமேலழகர் உரையே சிறந்ததென்று உலகோர் கொள்ளுகின்றனர். ஆதலால் அவ்வுரை கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்குத் தெள்ளிதின் விளங்காமையின் விளங்கக் கூறுவன் என ஆசிரியர் உரைத்தலும், அது கேட்ட மாணாக்கர் மிகுதியும் அவாவுடன், எங்கள் அன்பார்ந்த அண்ணல்! தேவரீர் இந்நூலைப் பரிமேலழகர் கண்ட ஒப்பிலா உரையின் வண்ணம் அடியேங்கட்கு விளக்கிக் காட்டுவதன் முன் அப்பெரியாரது சரிதையையும் சுருக்கமாக அறிவிக்க வேண்டுமென்று விண்ணப்பித்தலும், ஆசிரியர் பின்வருமாறு கூறலாயினர்.

எனது அன்புக்கு உரிய மாணவர்காள்! பரிமேலழகர் சரிதையும் நமது நாயனார் சரிதையைப்போல் ஈதென உண்மை அறிந்து கொள்ளுதற்குத் தக்க சான்றுகள் இதுவரையும் காண்பதற்கில்லை. ஆயின், இவர் தொண்டை நாட்டில், காஞ்சிமாநகரில், அருச்சகர் மரபில் பிறந்தவரென்றும், தமிழ் மொழியன்றி வடமொழியினும்

வல்லவ ரென்றும், இவர் இருந்த காலம் சற்றேறக்குறைய ஆயிரத்து இருநூறு (1200) வருடங்களுக்கு முன் என்றும் ஒருவாறு நூல் வல்லவர் துணிகின்றனர்.

இவர், தமது நுண்ணிய அறிவால் பலர்க்கும் பயன் படும்வண்ணம் ஒப்புயர் வில்லாத் திருக்குறளைத் தமக்குமுன் எழுதியிருந்த உரைகளிலுள்ள குற்றங்களை நீக்கவேண்டி, நூலாசிரியர் உள்ளக் கருத்தினை முற்றும் உள்ளவாறு உணர்ந்து, அக்கருத்திற்கிசைய விழுப்பொருள் பயக்கும் விரிவுரை ஒன்று யாவராலும் போற்றப்படும் வண்ணம் இயற்றி, தமது புகழை என்றும் நிலை நாட்டிநிற்கின்றனரென்று கூறுகின்றனர். அன்றியும் இவர் உரையிலுள்ள மட்டுக்கடங்காச் சிறப்புகளைக் கண்ட மூதறிஞர், பலர், திருவள்ளுவரே பரிமேலழகரெனத் தோன்றித் தமது நூலிலுள்ள உண்மைகளை உலகோர்க்கு வெளியாக்கினர் என்றும் இவரைப் புகழ்ந்து கூறுகின்றனர்.

இனி, இவர் தமது உரையைப் பாண்டியன் அவைக்களத்துப் பல அறிஞர் குழுமிய*கூட்டமொன்றில் வெண்கலப்பரிமேல் இவர்ந்து, அப்பரி இயங்கும்† வண்ணம் காட்டி, அரங்கேற்றினர் என்றும், அவ்விதம் அவ் வெண்கலப்பரி தனது இடம் பெயர்ந்து இயங்கிய காரணத்தால் இவர் உரை உண்மையுரை என்றும், ஏனைய உரைகளைவிடச் சிறந்ததென்று யாவராலும் கொள்ளப்படுவ தென்றும், பரிமேல் இவர்ந்த காரணத்தால் இவர்க்குப் பரிமேலழகர் என்னும் காரணப்பெயர் உண்டாகியதென்றும், இவருடைய இயற்பெயர் இன்னதென அறியப்படவில்லை யென்றும் கர்ணபரம்பரையாக ஒரு கதை வழங்கிவருகின்றது. இது வல்லாமலும், தீயினால் பழுக்கக் காய்ச்சிய வெண்கலப் பரிமேல் இவர்ந்து பல புலவர்கள் வினவிய வினக்களுக்கு விடையளித்துத் தாம் இயற்றிய அரும்பெருமுரையை அரங்கேற்றினரென்றும், ஆலவாய் என்னும் மதுரைமாநகரில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபிரானது திருநாமங்களில் ஒன்றாகிய "பரிமேலழகியார்" என்பதையே சைவராகும் இவருடைய தாய் தந்தையர்கள் இவர்க்கு இயற்பெயராக வைத்து வழங்கினர்களென்றும், வேறு கதைகளும் அறிவுடையோர்களால்

---

*குழுமிய=சேர்ந்த. †இயங்குதல்=அசைதல்.

வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இவரைச் சைவர்கள் சைவ ரென்றும், வைணவர்கள் தங்கள் மதத்தினரென்றும், இன்னுஞ் சிலர் வேறு விதமாகவும் பலவாறு தங்கள் தங்களுக்கு வேண்டிய ஆதாரங்களை அவரால் இயற்றப்பட்ட உரையினின்றும் எடுத்துக் காட்டி வாதிடுகின்றனர். இவர் எம்மதத்தினராயினும் நமக்குச் சம்மதமே. ஒருவித ஐயத்திற்கும் * இடமின்றி உண்மை இது வென்று சித்தாந்தப் படுத்துவதற்கு முன் அதைக்குறித்து வாதிட்டாவதில் பயன் யாதும் கண்டிலோம்.

ஆதலால், முடிந்த பொருளாக "எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடியில் கற்றோரை வருகவென்பார்" † என்று அதி வீரராமபாண்டியர் கூறிய வண்ணம், இவர் எக்குலத்தினராயினுஞ் சரியே, எம்மதத்தினராயினுஞ் சரியே, நூலாசிரியரைப்போல் உரையாசிரியரும் தமது உண்மைக் கொள்கையை வெளிப்படை யாகக் காட்டாது, தாம் விரிக்க எடுத்துக்கொண்ட பொது நூலுக்கு யாவரும் ஒப்பத்தகும் உரையை உலகோர் பயன் அடையும்படி எழுதி முடித்தனர் என்பதை அறிவீர்களாக! என்று பரிமேலழகர் சரிதத்தை ஒருவாறு கூறி நின்றனர்.

மைந்தர்காள்! இதுகாறும் நாம் விளக்க எடுத்துக்கொண்ட நூலை இயற்றியருளிய ஆசிரியர் திருவள்ளுவனாரது சரித்திரத்தையும், அந்நூலுக்கு யாவராலும் பொன்னேபோல் போற்றப்படும் உரையை இயற்றிய பரிமேலழகரது சரித்திரத்தையும் ஒரு சிறிது ஆராய்ந்தோம். இனி, எங்கும் நிறைந்துள்ள வாலறிவன் நற்றாள் தொழுது இந்நூலினுள் பிரவேசிப்போம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தாம் இயற்றியருளிய திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பகுதிகளையுடையதாக வகுத்து, அவற்றுள் ஒவ்வொன்றையும் பிரித்து இன்னின்ன இயலையுடையதெனக் காட்டி, அவ்விதமே ஒவ்வொரு இயலும் பல அதிகாரங்களை உட்கொண்டதாக முழுவதும் 1330 குறட்பாக்களால் முடித்திருப்பதை நீங்கள் முன்னர் அறிவது நன்மையாமாதலால், இதன் உட்பொருளை இங்கு வரிந்திருக்கும் வரிவடிவத்தாலும், விஷய அகராதியாலும் நீங்கள் அறிதல் கூடும். இவ்விதம் நீங்கள் அறிவதால் நூலில் தொடர்ந்து செல்வதற்கு எளிமையாகும் என்றனர்.

---

* ஐயம் = சந்தேகம். † நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கை.

## திருக்குறளின் பகுப்பை இன்னதெனக்காட்டும் " வரிவடிவம். "

**திருக்குறள்.**
(133 அதிகாரங்கள்=1330 குறட்பாக்கள்)

- I அறத்துப்பால். (38 அதிகாரங்கள்)
  - (1) பாயிரம். (4 அதி.)
  - (2) இல்லறவியல். (20 அதி.)
  - (3) துறவறவியல். (13 அதி.)
    - i விரதம். (9 அதி.)
    - ii ஞானம். (4 அதி.)
- II பொருட்பால். (70 அதிகாரங்கள்)
  - (1) அரசியல். (25 அதிகாரங்கள்.)
  - (2) அங்கவியல். (32 அதிகாரங்கள்.)
    - i. அமைச்சு. (10 அதி.)
    - ii. நாடு. (1 அதி.)
    - iii. அரண். (1 அதி.)
    - iv. கூழ். (1 அதி.)
    - v. படை. (2 அதி.)
    - vi. நட்பு. (17 அதி.)
  - (3) ஒழிபியல். (13 அதிகாரங்கள்.)
- III காமத்துப்பால். (25 அதிகாரங்கள்)
  - (1) களவியல். (7 அதிகா.)
  - (2) கற்பியல். (18 அதிகா.)
- " ஊழ். " (ஒரு அதிகாரம்.) [I, II, III ஆகிய மூன்றோடும் இணைக்கப்பட்டுள்ளது]

**குறிப்புகள் :**

1. திருக்குறள்=" முப்பால் " காரணப்பெயர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனமூன்று பால்களை யுடையதாகலின்.
2. காமம்=இன்பம். (அறம், பொருள், இன்பம் என்பனவற்றை அறம், பொருள், காமம் என வகுத்துள்ளது.)
3. ஊழ்=இது, பொருள், இன்பம் ஆகிய இவ்விரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், அறத்தோடு இயை புடைமையானும், அறத்துப் பாலின் கடைசியில் 38-வது அதிகாரமாக வைக்கப்பட்டுள்ளது.

## திருக்குறளின் பகுப்பைக் காட்டும்

# "விஷய அகராதி"

## I. அறத்துப்பால்.

### (1) பாயிரம்.


அதிகார எண். விஷயம்.

1. கடவுள் வாழ்த்து.
2. வான் சிறப்பு.
3. நீத்தார் பெருமை.
4. அறன் வலியுறுத்தல்.


### (2) இல்லறவியல்.


5. இல்வாழ்க்கை.
6. வாழ்க்கைத் துணை நலம்.
7. புதல்வரைப் பெறுதல்.
8. அன்புடைமை.
9. விருந்தோம்பல்.
10. இனியவை கூறல்.
11. செய்ந்நன்றி யறிதல்.
12. நடுவு நிலைமை.
13. அடக்கமுடைமை.
14. ஒழுக்கமுடைமை.
15. பிறனில் விழையாமை.
16. பொறையுடைமை.
17. அழுக்காறாமை.
18. வெஃகாமை.
19. புறங்கூறாமை.
20. பயனில சொல்லாமை.
21. தீவினை யச்சம்.
22. ஒப்புரவறிதல்.
23. ஈகை.
24. புகழ்.


### (3) துறவறவியல்.

#### (i) விரதம்.


25. அருளுடைமை.
26. புலான் மறுத்தல்.
27. தவம்.

(தொடர்ச்சி)

அதிகார எண். விஷயம்.

28. கூடாவொழுக்கம்.
29. கள்ளாமை.
30. வாய்மை.
31. வெகுளாமை.
32. இன்னா செய்யாமை.
33. கொல்லாமை.


#### (ii) ஞானம்.


34. நிலையாமை.
35. துறவு.
36. மெய்யுணர்தல்.
37. அவாவறுத்தல்.

38. ஊழ்.


## II. பொருட்பால்.

### (1) அரசியல்.


39. இறை மாட்சி.
40. கல்வி.
41. கல்லாமை.
42. கேள்வி.
43. அறிவுடைமை.
44. குற்றங் கடிதல்.
45. பெரியாரைத்துணைக்கோடல்.
46. சிற்றினஞ் சேராமை.
47. தெரிந்து செயல்வகை.
48. வலியறிதல்.
49. காலமறிதல்.
50. இடனறிதல்.
51. தெரிந்து தெளிதல்.
52. தெரிந்து வினையாடல்.
53. சுற்றந் தழால்.

(தொடர்ச்சி)

| அதிகார எண். | விஷயம். |
|---|---|
| 54. | பொச்சாவாமை. |
| 55. | செங்கோன்மை. |
| 56. | கொடுங்கோன்மை. |
| 57. | வெருவந்த செய்யாமை. |
| 58. | கண்ணோட்டம். |
| 59. | ஒற்றாடல். |
| 60. | ஊக்கமுடைமை. |
| 61. | மடியின்மை. |
| 62. | ஆள்வினையுடைமை. |
| 63. | இடுக்கணழியாமை. |

## (2) அங்கவியல்.

### (i) அமைச்சு.

64. அமைச்சு.
65. சொல்வன்மை.
66. வினைத்தூய்மை.
67. வினைத்திட்பம்.
68. வினைசெயல் வகை.
69. தூது.
70. மன்னரைச் சேர்ந்தொழுகல்.
71. குறிப்பறிதல்.
72. அவையறிதல்.
73. அவையஞ்சாமை.

### (ii) நாடு.

74. நாடு.

### (iii) அரண்.

75. அரண்.

### (iv) கூழ்.

76. பொருள் செயல் வகை.

### (v) படை.

77. படைமாட்சி.
78. படைச்செருக்கு.

### (vi) நட்பு.

79. நட்பு.
80. நட்பாராய்தல்.
81. பழைமை.
82. தீநட்பு.

(தொடர்ச்சி)

| அதிகார எண். | விஷயம். |
|---|---|
| 83. | கூடாநட்பு. |
| 84. | பேதைமை. |
| 85. | புல்லறிவாண்மை. |
| 86. | இகல். |
| 87. | பகைமாட்சி. |
| 88. | பகைத்திறந்தெரிதல். |
| 89. | உட்பகை. |
| 90. | பெரியாரைப் பிழையாமை. |
| 91. | பெண்வழிச்சேறல். |
| 92. | வரைவின் மகளிர். |
| 93. | கள்ளுண்ணாமை. |
| 94. | சூது. |
| 95. | மருந்து. |

## (3) ஒழிபியல்.

96. குடிமை.
97. மானம்.
98. பெருமை.
99. சான்றாண்மை.
100. பண்புடைமை.
101. நன்றியில் செல்வம்.
102. நாணுடைமை.
103. குடி செயல்வகை.
104. உழவு.
105. நல்குரவு.
106. இரவு.
107. இரவச்சம்.
108. கயமை.

# III காமத்துப்பால்.

## (1) களவியல்.

109. தகையணங்குறுத்தல்.
110. குறிப்பறிதல்.
111. புணர்ச்சி மகிழ்தல்.
112. நலம் புனைந்துரைத்தல்.
113. காதற்சிறப்புரைத்தல்.
114. நாணுத்துறவுரைத்தல்.
115. அலரறிவுறுத்தல்.

உ

கடவுள் துணை.

# திருக்குறள் விளக்கம்

## அறத்துப் பால்.

### பரிமேலழகர் உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதி யென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு* என்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கணவகையால் கூறப் படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் † என மூவகைப்படும்.

அவற்றுள்,

(1) ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் ‡ நின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

(2) வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு

---

* அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றை வடநூலார் முறையே தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்பர்.

† ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பனவற்றை வடநூலார் முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர்.

‡ நிலை = ஆசிரமம்.

அப்பொருள்மேல் செல்வது. அது கடன் கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம். *

(3) தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல்.

இவற்றுள், வழக்கும், தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்கள் உயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பில வாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும், தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் "சிறப்புடைய ஒழுக்கமே அறம்" என எடுத்துக்கொள்ளப் பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின், சிறு பான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொது இயல்புபற்றி, இல்லறம், துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது.

---

* வழக்கு பதினெட்டுப் பதத்தது. அவையாவன--, 1. கடன் வாங்குதல், 2. உபநிதி, 3. கூடிமேம்படுதல், 4. கொடுத்ததைக் கொடாமை, 5. வேலை செய்வதற்கு ஒத்துக்கொண்டு பின் செய்யாது விடுத்தல், 6. ஒருவன் செய்த வேலைக்குக் கூலி கொடாமை, 7. தனக்குச் சொந்தமில்லாத பொருளை ஒருவன் விற்று விடுதல், 8. ஒருவன் தனது பொருளை விற்றுவிட்டு, விற்றதாகிய அப்பொருளை ஒப்பியாமை, 9. ஒரு பொருளை விலைபேசி வாங்கிப்பின் பேசிய விலையைக் கொடுத்து வாங்க ஒப்பாமை, 10. விதியைக்கடந்து விலக்கான விஷயங்களில் செல்லுகின்ற கட்டுப்பாடு கடத்தல், 11. நிலத்தைப்பற்றிய வழக்கு, 12. ஆண், பெண் ஆகிய இரண்டு பகுதியார்க்கும் சொல்லிய தருமம், 13. பங்காளிகளுக்குரிய பாகம் என்னும் தாயபாகம், 14. கொடிய செய்கை என்னும் வன்செய்கை, 15. நாவடக்கம் இல்லாது பிதற்றும் சொற்கொடுமை, 16. தண்டித்த காலத்துக் கொடுமையாகத் தண்டித்தல், 17. சூதாடல், 18. ஒழித்துவிடுதல் என்னும் ஒழிபு.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லு கின்ற நெறிக்கண் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கண் கூறு வான் தொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

"விளக்கம்"

"ஆயிரம் முகத்தான் அகன்றதாயினும
பாயிரம் இல்லது பனுவல் அன்றே"

என்று பவணந்தியார் எடுத்துக்காட்டிய வண்ணம், பரிமேலழகர் தாம் எழுதப்புகுந்த உரைக்கு "உரைப்பாயிரம்" முதலில் கூறினர். •இவ்வுரைப்பாயிரம் திருக்குறளில் கூறியுள்ள விஷயங்கள் இவை யென்றும், அவைகளை எடுத்தாண்ட காரணங்களையும் தொகுத்துச் சொல்லி, நூலின் தன்மையை ஈதென விளக்குகின்றது. அது எவ்வாறெனின்,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்........." என்று,

தாயுமானர் கூறியவண்ணம், புல்முதல் மலை யீருகவும், எறும்பு முதல் யானை யீருகவும் உள்ள நிலைத்திணை இயங்குதிணை என்பன வற்றுள் மக்கள் உயிரே ஏனையவற்றின் சிறந்ததென்றும், அது ஒன்றே இம்மை, மறுமை, வீடு என்பனவற்றை அடைதற்குத் தகுதியுடையதென்றும் அறியப்படுகின்றது. ஆதலால், இப்பாரத கண்டத்தில் நூல் வல்லவர்களால் புகழ்ந்து சொல்லப்பட்ட இந்தி ரன் முதலிய பல தலைவர்களது பதங்களையும், எக்காலத்தும் அழி வில்லாத இன்பத்தையே தரக்கூடியதுமாகிய வீட்டை (மோக்ஷ த்தை) யும் அடைதற்கு இதுதான் நெறியென்று உணர்ந்து ஒழுகுவதற்கு உயர்ந்தோரால் எடுத்துச் சொல்லிய பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவேயாம். இந்நான்கினுள்ளும், முதல் மூன்றுமே நூல்களால் கூறத்தக்கன. நான்காவதாகிய வீடு என்பது ஓர் ஞானசிரியரை வழிபட்டு

* தன்னூல்.

அவர் உணர்த்த உணரவேண்டுவது. ஆதலால், தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றனையும் திருவருள் செய்துள்ளனர். அம்மூன்றனுள்ளும், முதற் கூறும் அறம் என்பது மனுமுதலிய நூல்களில் விதித்த வண்ணம் செய்தலும், விலக்கியவண்ணம் செய்யாது விடுத்தலுமாம். அவ்வறமாவது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றுள்,

(1) ஒழுக்கமாவது :—அந்தணர் முதலிய வருணத்தவர் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவு என்னும் நான்கு நிலைகளில் நின்று அந்தந்த நிலைகளுக்குச் சொல்லப்பட்ட தருமங்களினின்றும் வழுவாது நடந்து கொள்ளுதலாகும்.

(2) வழக்காவது:—ஒருபொருளினையே என்னுடையது என்னுடையது என்று ஒருவர்க்கொருவர் மாறுபட்டு, அப்பொருள் தமக்குக்கிடைக்கும் வண்ணம் நீதிச்சாலைக்குச் சென்று தம் உரிமையை நிலை நாட்டுதல். அது கடன் கோடல் முதலாகப் பதினெட்டு வகைப்படும்.

(3) தண்டமாவது:—மேற்சொன்ன ஒழுக்கவழியினும் வழக்கு வழியினும் தவறினவரை அவ்வழியிலே நின்று ஒழுகும் பொருட்டுக் குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டித்தல்.

ஆயினும், மேற்சொன்ன மூன்றனுள்ளும் வழக்கும், தண்டமும் மாந்தரை உலகவழியிலே நிறுத்துமே யல்லாமல் ஒழுக்கம் போல் மக்களுயிர்க்கு உறுதியைப் பயவா. மேலும் அவைகளை நூல்களாலே யல்லாமல், அறிவுமிகுதியாலும், தேச இயற்கையாலும் தெரிந்துகொள்ளுதல் கூடும். ஆகவே அவ்விரண்டையும் நீக்கி, இங்கு தெய்வப்புலமைத் திருவள்ளுவர் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொண்டனர்.

ஆகவே, அறம் என்பது ஒழுக்கம் எனக்கண்டோம். இது பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவறம் என நால்வகை

நிலைகளையுடையதாய் வருணந்தோறும் வேறுபடுகின்றது. ஆயின், இல்லறம், துறவறம் என்னும் இரண்டு நிலைகளே எல்லாவருணத்தார்க்கும் பெரும்பான்மையும் பொதுப்பட ஒத்திருக்கின்றன. ஆகவே, "அறத்துப்பால்" என்னும் திருக்குறளின் முதற்பகுதியை இரண்டு நிலைகளாகப் பிரித்து "இல்லறவியல்," "துறவறவியல்" என இருவகை நிலைகளாலேயே கூறப்பட்டிருக்கின்றது. அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற தருமங்களைக் கைக்கொண்டு, அவ்வாழ்க்கையைச் சிறப்புடன் நடத்துவதற்கு உதவியாக ஓர் கற்புடைய மனைவியோடு இருந்து செய்கின்ற வாழ்க்கையாகும்.

இதை முதலில் கூறத்தொடங்கி, தாம் எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட்டு, நமது ஆசிரியர், கடவுள் வாழ்த்து முதலாக நான்கு அதிகாரங்களைப் பாயிரமாகவைத்து, முதலில் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றனர்.

# பாயிரம்

## 1. அதிகாரம்.

## கடவுள் வாழ்த்து.

அதாவது கடவுளை வாழ்த்தும் வாழ்த்து என்றார் ஆசிரியர். அதுகேட்ட மாணாக்கர், "தாங்கள் கடவுள் வாழ்த்து இது என விளக்குவதன் முன் கடவுள் இல்லை யென்பார் கொள்கை இது வென்றும், அல்லது உண்டு என்கின்ற நமது கொள்கை இது வென்றும் முதலில் தெரிவித்தல் வேண்டும்" என்று விண்ணப்பித்தலும், ஆசிரியர் கூறுவாராயினார். "கடவுள் இல்லை என்கின்ற கொள்கை யுடையவர்களுள் முதலாவான் உலோகாயதன். இவன் காண்டல், கருதல், உரை என்கின்ற மூன்றனுள், காண்டல் என்கின்ற பிரத்தியக்ஷ அளவையே தனக்கு உடன்பாடு என்று கொண்டவன். அவ்வித உடன்பாட்டால், பூதங்கள் ஐந்தனுள், கண்ணுக்குப் புலப் படுகின்ற நிலம், நீர், தீ, காற்று என்கின்ற நான்கினையே எப்போதும் உள்ள பொருள்கள் என்று ஒத்துக்கொள்ளுகின்றான். ஐந்தாவதாகிய ஆகாயம் என்பது புலப்படாமையால், தான் அதை ஒத்துக் கொள்ள முடியாதென்கின்றான். இவ்விதம் மெய் என்றுதான் கொண்ட நிலம், நீர், தீ, காற்றாகிய நான்கினது சம்பந்தமே உடம்பு தோன்றுவதற்குக் காரணமென்கின்றான். அது எது போலெனின் பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு ஆகிய மூன்றனையும் ஒருவன் வாயிலிட்டு உண்கின்ற காலத்துச் செந்நிறம் தோன்றுவது போல் இப் பூதங்களின் சேர்க்கையால் அவற்றிற்கு வேறாகிய ஓர் உணர்வு உண்டாகிற தென்கின்றான். அவ்வுணர்ச்சியானது உடம்பு வளருந்தோறும் வளருந்தோறும் வளர்ந்து, தேயுந்தோறும் தேயுந்தோறும் தேய்ந்து போவதேயன்றி, உடம்பிற்கு வேறாக உயிர் என்பது ஒன்று உண்டென்பது பொய் என்கின்றான். அன்றியும், உடம்பிற்கு நல்வினை, தீவினைகள் என்கின்ற இரு வினையால் இன்ப துன்பங்கள்

வருவன என்பதும் பொய்; அவ்வின்ப துன்பங்கள் உடலிற்கு இயல்பாகவே வுள்ளன; ஆகையால் இருவினை யென்பது பொய்; மேலும், கடவுள் ஒன்று உண்டு என்பதும் பொய்; மயில் ஒன்றினை அழகு படச்சித்திரிப்பாரும், குயில் ஒன்றினை இனிமைபடக் கூவுவிப்பாரும் இவ்வுலகத்துக் காணாமையினால், அவை இயற்கையாக அமைந்து உள்ளன போன்று, இவ்வுலகம் அமைந்து உள்ளது இயற்கையின் தன்மை என்கின்றான். அல்லாமலும், இப்பொய்ம்மையாகிய கடவுள் உண்டு என்னும் மார்க்கத்தைத் தழுவி மோட்ச இன்பம் என்னும் ஒன்றினை அடைவோம் என்று கொள்ளும் கொள்கையும் பொய் யாகும்; ஆனால், தான் கருதுகிறபடி இவ்வுலகத்தில் உள்ள வரை யில் இளம்பருவம் உடைய பெண்களை மணந்து, நல்ல உணவு களை உண்டு, நல்ல ஆடைகளையுடுத்துப் போகத்துடன் வாழ்வதே மோட்ச இன்பம் என்கின்றான். அவ்வித இன்பத்தைப் பெறாது பகைவராலும், நோயாலும், வறுமையாலும் வருந்துவதே (நரகத் துன்பம்) நிரயத்துன்பம் ஆகும் என்று கூறுகின்றான்."

"ஆனால், இவ்விதம் கூறிய நான்கு பூதக்கூட்டுறவில் பிராண வாயுவொன்று நீங்குமானால், முன் வளர்ந்த உணர்வு என்பது நீங்கி உடம்பு என்பதும் நாசமாகும். அதுவே வீடு என்கின்ற மோட்சத்தை யடைகின்ற பேறாகும். ஆகையால் இவ்வுண்மை உணராத அறிவிலாதோர் மறுமை, வீடு என்பன உண்டு என்று கொண்டு, தவங்கிடந்து, பட்டினியிருந்து, உடலைவருத்துகின்றனர். அன்றியும், "கற்பு இலக்கணம்" என்று பெண்களுக்குக் கூறுவ தாகிய ஓர் நூல் தேகவன்மையின்றி நின்ற அறிவிலாதோரால் செய்யப்பட்டதாகும். பொன்தானம், நிலத்தானம், உணவுத் தானம் என்று பலநூல்களை எழுதியவர்கள் வறுமை நோயால் பிடிக்கப்பட்டவர்களாவார். 'ஆலயம், தண்ணீர்ப்பந்தல், கிணறு, குளம், சோலை, முதலியன தருமத்துக்குஅமைப்போர் உயர்ந்தவர்' என்று சொல்லுகின்ற நூல்கள், வழிச் செல்பவர் தாம் செல்லுங் காலத்து இளைப்பு அடையாமலும், தேக கஷ்டமில்லாமலும், பணச் செலவில்லாமலும், தங்கள் பிரயாணத்தை முடிக்கவேண்டிய தின் நிமித்தம் எழுதிய நூல்களாகும். ஆகையால், வீணாகிய இவை யெல்லாம் கைவிட்டு, உழுது உண்டும்,பசுக்களைக்காத்தும், வாணிகம்

செய்தும், மேற் கூறிய அளவாக இம்மை இன்பங்களை யெல்லாம் அடைந்து வாழ்தலே உறுதிப்பயன் என்கின்றான்."

"இனி, இவன் கொள்கை தவறுடையது என்று காட்டும் நம் மூதறிஞர், அவனை நோக்கி, 'ஓ! காட்சியளவை ஒன்றையே உறுதி யெனக் கொண்ட உரவோனே! நீ பிள்ளையாய்த் தோன்றிய காலத்திலேயே உன் தாயுந் தந்தையும் இறந்து போயிருப்பார்களானால், அவர்களை நீ காணாமையால், அவர்கள் இருந்ததில்லை என்று நீ கூறுவை போலும். அன்றியும், மேகமானது முழங்கி, மின்னி, இருண்டு, ஆகாயத்தில் பரந்து எழுந்த இடத்து, அதனால் மழை பெய்யு மென்று நினைத்தது காட்சியளவை கருதியோ? அல்லாமலும், அகிற்கட்டை, சந்தனமரங்கள், முதலியவைகளை ஆறொன்று அடித்துக்கொண்டு வந்தகாலத்தே, மலையினிடத்தே மழை பெய்து அதனால் உண்டாகிய வெள்ளத்தினால் இவைகள் அடித்துக் கொண்டுவரப்பட்டன என்றுநிச்சயித்தது,நீ காட்சியளவைகொண்டோ? அன்று. அவை அனுமான அளவையால் அறிந்தனவன்றோ? ஆதலால், அனுமான அளவை இல்லையென்பது அறியாமையேயாம். அன்றியும், பூமியின்கண் சோதிடநூலோர் ஒன்றினை எண்ணிக் கூறுவது எதிர்காலத்தே நிகழ்வதை நாம் கண்ணுறக் காண்கின்றோமாதலால் ஆகம அளவையும் உண்டு என்பது நிச்சயமாகும். அதுவன்றியும், நூல் வல்லவர்கள் கூறியபடி இலக்கணமமைந்த சில இடங்களில் தோண்டியெடுத்த காலத்துப் புதையல் கிடைப்பதால் ஆகம அளவை இல்லையென்பது அறிவிலாமையேயாகும். ஈதன்றியும், பூதங்கள் நித்தம் என்பதும், அவற்றின் கூட்டத்தால் உருக்கள் தோன்றி அவ்வுருக்களில் புத்தி முதலாயின தோன்றும் என்பதும் உண்மையன்று. இதனை யாக்குவான் ஒரு கருத்தா உண்டு என்பதை விசாரித்தறிதல் வேண்டும். பூதக்கூட்டத்தில் தோன்றியது காரியபூதமேயன்றி ஞானமன்று.மேல்கூறிய உவமையின்படி வெற்றிலைப் பாக்குச் சுண்ணாம்பு ஆகிய மூன்றும் கூடி ஓர் சிவப்பென்னுந் தன்மையை யுண்டாக்குவதற்கு அதை மென்று தின்கின்ற புருடன் ஒருவன் வேண்டும். 'அதுபோல், இருவினைக்குத்தக்க அளவாகத் தேகமும், அதனுள் ஞானமும், செயலும் செய்வானாகிய கருத்தா, ஒருவன் இருத்தல் வேண்

டும் என்று நன்கு அறிதல்வேண்டும்' என்று உலோகாயதனுக்குக் கடவுள் உண்டென்று உறுதி கூறுகின்றார்களாதலால், நம்மாசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் தாம் எடுத்துக்கொண்ட நூலுக்கு ஏற்ற அளவாக பொதுப்படத் தெய்வவணக்கம் அருள் செய்கின்றனர். என்னை? கடவுள் வாழ்த்து எனில் 'கடவுளுக்கு வாழ்த்து' அல்லது 'கடவுளை வாழ்த்தும் வாழ்த்து' என்று விரிதலால் எல்லாம் வல்ல இறைவனாகிய முழுமுதற்பொருளைச் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுயிராகிய நாம் ஏன் வாழ்த்துதல் வேண்டும்? அவனை எவ்விதம் வாழ்த்துதல் வேண்டும்? என்று நீவிர் சந்தேகித்தல் கூடும். மக்காள்! கடவுளை வாழ்த்தும் வாழ்த்து நாம் வாழ்வதற்காகவேயன்றி நித்தியமாய், சேதனனாய், ஞானவுருவினனாய் உள்ள அவன் பொருட்டன்று. இது செய்வது மக்கள் மாத்திரமன்று; தேவர்களும் தாம் வாழ்வதற்கும், தம்மை எல்லாரும் தொழுவதற்கும் இறைவனை வாழ்த்துகின்றனர் என்பதை

'வாழ்த்துவதும் வானவர்கள்
  தாம் வாழ்வான் மனம் நின்பால்,
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
  தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரமுரலுந்
  தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத்திடுவான்
  யானும் உன்னைப் பரவுவனே

என்னும் அருள்வாக்கால் அறிகின்றோம் என்றனர்.

## பரிமேலழகர் உரை.

அஃதாவது:—கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை என வறிக: என்னை? சத்துவம் முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற் கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனவுணர்க.

---

* திருவாசகம்.

விளக்கம்:—இவ்வாறு உரையாசிரியர் தமது அவதாரிகையில் கடவுள் வாழ்த்து என்பதைக் கூறியதால், கவிஞன் ஒருவன், தான் ஓர் நூலினை இயற்றஎண்ணுவானாயின், தான்வழிபடும் தெய்வத்தை யானும் அல்லது தான் இயற்றவெண்ணிய நூலிற்கு உரிய தெய் வத்தையானும் வாழ்த்துதல் மரபு என்று கண்டோம். அவ்விதம் வாழ்த்துகின்ற மரபில் நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் உலகத்து உள்ள மக்கள் யாவர்க்கும் பொதுவாகக் கூறிய இத் திருக்குறளிற்குப் பொதுவாகவுள்ள தெய்வவணக்கமே கூறுகின் றனர். அது எவ்விதமோ வெனின்? தாம் எடுத்துக்கொண்ட முப் பொருளினுள் முதலாவதாகிய அறத்திற்குச் சத்துவகுணமும், இரண்டாவதாகிய பொருளுக்கு ராசதகுணமும், மூன்றாவதாகிய இன்பத்திற்குத் தாமசகுணமும் காரணங்களாகையால், அக்கார ணங்களுக்கு முதற் கடவுளோடு சம்பந்தமுண்மையால், அவ்வகை வாழ்த்துதல் அம்மும்மூர்த்திகளையும் வாழ்த்தலாம். ஆதலால், இக்கடவுள் வாழ்த்து அம் முக்குணத் தலைவர்களாகிய மூவர்க்கும் கூறினரென்று அறிக.

இனி கடவுள் உண்டென்று ஐயம் திரிபு அறவுணர்ந்த மாணாக் கர், தமது நல்லாசிரியரை நோக்கிக் 'கடவுள் உண்டென்பதை அறிந்தோம்; அதை எங்கட்கு ஓர் உவமை வாயிலாக அறிவித்தல் வேண்டும்' என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

**பரிமேலழகர் உரை.**

(இதன் பொருள்.) எழுத்தெல்லாம் அகர முதல=எழுத்துக்களெல் லாம் அகரமாகிய முதலையுடையன:—உலகு ஆதிபகவன் முதற்று=அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து. என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பால் பிறத்த லானும், ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர் வான் முற்றுமுணர்தலானுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத் திற்கும் முதலாதல் நோக்கி, எழுத்தெல்லா மென்றார். ஆதிபகவன் என்னு

யிருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூல்முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக் கூறினர்; கூறினரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண்வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

விளக்கம் :—இம்முதல் திருக்குறளால் உலகத்துள்ள எழுத்துககளெல்லாம் அகரமாகிய எழுத்து ஒன்றினையே தமக்கு முதலெழுத்தாகக் கொண்டனபோல், இயங்குதிணை நிலைத்திணையாய் அதாவது, அசைவும் அசையாதனவுமாகிய உயிர்களைக் கொண்ட உலகமும் ஆதிபகவனாகிய ஒரு முதலைத்தனக்கு முதலாகக்கொண்டு உள்ளதாயிற்று. என்னையோ வெனின்? அகரம் தன்னை யொழிந்த உயிரெழுத்துக்களையும், ஏனைய மெய்யெழுத்துக்களையும்இயக்குவது போல், இறைவன், அருதியாய்த்தான் எல்லாப் பொருள்களுடன் கலப்புற்று நின்று அவைகளை இயக்கியும், தான் யாதொருபற்றும் அற்று நிற்கின்றான் என்பதைவிளக்கிக் காட்டுவதால், இதுஎடுத்துக் காட்டுவமையாயிற்று. அன்றியும் அகரமானது தான் பிறக்கும் இயல்பால் தலைமை வகிப்பதுபோல், ஆதிபகவனும், தம் இயற்கை உணர்வால் முழுவதும் உணர்வதால் தலைமையாயினன். அதாவது, உவமான உவமேயங்களின் வெவ்வேறு தர்மங்களைப் பிம்பப் பிரதிபிம்பபாவமாகவுரைத்தல்எடுத்துக்காட்டு உவமை. பிம்பப்பிரதி பிம்பபாவமாவது, இயற்கையில் பின்னங்களாயிருக்கினும் ஒன்றற்கொன்றுண்டாகிய ஒப்புமையினால் அபின்னங்களாகிய உபமானோபமேயங்களின் தருமங்களை யிரண்டு வாக்கியங்களில் தனித்தனிக் கூறுதலாம். இதனை வடநூலார் திருஷ்டாந்தாலங்காரமென்ப. இது இருவகைப்படும். அதாவது, நிகரெடுத்துக்காட்டு, முரணெடுத்துக்காட்டு என. அவற்றுள் இது நிகரெடுத்துக்காட்டாகும். உலகு என்றது ஈண்டு உயிர்கள்மேல் நின்றது என்றனர். இது இடவாகு பெயராய் உயிர்களை யுணர்த்தி நின்றதாதலின்

" விற்பிரம்பால் உற்றவடு மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—சொற்சிறந்த
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு " * என்னும் வெண்பாவால்,

* சிவ சிவ வெண்பா.

இறைவனை வில்லாலும் பிரம்பாலும் அருச்சுனனும் பாண்டியனும் அடித்த காலங்களில் அவன்மீதுபட்ட அடிகள் உலகிலுள்ள உயிர்கள்மீதெல்லாம் பட்டன என்று இருப்பதாலும்; இக்கருத்தையே ஸ்ரீ வில்லிபுத்தூரர்

"விண்ணிலுறை வானவரில் யாரடிபடாதவர்
விரிஞ்சன் அரியே முதலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடிபடாதவர்
மனுக்கள் முதலோர்கள் அதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடிபடாதவர்
கட்செவி மகீபன் முதலோர்
எண்ணிலுறை யோனியினும் யாவடிபடாதன
இருந்துழி இருந்துழியரோ" *

"வேதமடியுண்டன விரிந்தபலவாகம
விதங்களடி யுண்டன ஓரைம்
பூதமடியுண்டன விநாழிகைமுதற்புகல்செய்
பொழுதொடு சலிப்பில் பொருளின்
பேதமடியுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலரசன் றன்மகளார்
நாதனமலன் சமரவேட வடிவங்கொடு
நான்கை யடியுண்ட பொழுதே."

என்று கூறியிருத்தலாலும், இறைவன் என்றும் உலகிற்கு முதல்வனென்றும், உயிர்களெல்லாம் அவன் வடிவமாகுமென்றும், அவன் அசையினன்றி ஓர் அணுவும் அசையாதென்பதுவும் அறிந்தோம். இதனை அருணைக் கலம்பகத்தினுள்

"எல்லா உயிர்க்குமுயிர் அருணேசர் இவர் அசைவின்
அல்லாது அணுவுமசையாது என்பது அறிந்தனம்—மேல்
வில்லாடன் மாறன் இருக்கவும் யோகம் விளைத்தவர்நான்
புல்லாதிருந்தன வெல்லா உயிரும் தம்போகத்தையே"

என்றமையே உலகிற்கு முதல்வனாகிய ஆதிபகவன் அசைந்தால் யாவும் அசையும் அல்லாவிடில் அணுவும் அசையாது என்பதை நிலைநாட்டுகின்றது. மேலும்,

---

* பாரதம்.

"தானலாது உலகமில்லை சகமலாது அடிமையில்லை
கானலாது ஆடலில்லை கருதுவார் தங்களுக்கு
வானலாது அருளுமில்லை வார்குழல் மங்கையோடு
மானலாது ஊர்வதில்லை ஐயனை யாறனார்க்கே" *

என்று திருநாவுக்கரையர் ஓதியுள்ள திருவாக்காலும்,

"கையும் காலும் நிமிர்த்துக்கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால்
ஐயநா வழித்தாளுக்கு அங்காந்திட
வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே" †

"வாயுள் வையகம் கண்டமடநல்லார்
ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப்பாலகன்
மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே" †

என்று பெரியாழ்வார் திருவருள்செய்த திருவிருத்தங்களாலும் உலகிற்கு ஆதிபகவனே முதல்வனாயினான் என்பது பெற்றாம். இறைவன் ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுகுணங்களை உடையான் என்னும் பொருளில் பகவன் எனப்பட்டனன். காணப்பட்ட உலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுட்கு உண்மை கூறினாராதலின் இது அனுமான அளவையாயிற்று. அது, புகை கண்டான் ஒருவன் நெருப்பு உண்டென்று தீர்மானிப்பதுபோலும். ஆதலால், முடிந்தது முடித்தலாக எழுத்துக்களெல்லாம் அகரமாகிய எழுத்தினை முதலாகவுடையதுபோல், உலகமும் கடவுள் என்னும் முதலையுடையது என்று முடிந்ததாயிற்று. ‡

இனி, கடவுள் உண்டென்று அறிந்த மாணக்கர்கள், ஆசிரியரை நோக்கி "எம்பெரியோய்! கடவுள் உண்டென்பதை யறிந்தனம். அவன் உலகிற்கு முதல்வன் என்பதும் அறிந்தோம். இனி, அவன் விடயத்து நாம் செயய வேண்டுவது எது?" என்று கேட்

* தேவாரம். † பெரியாழ்வார் திருமொழி.

‡ இதனை ஆதியும் பகவனும் என்னும் உம்மைத் தொகையாக்கித் தம் தாய் தந்தையரைக் கூறியதாக நயம்படக் கூறுகின்றனர். ஆயின் அது உரையன்று.

டனும், ஆசிரியர், 'கடவுள் உண்டென்று அறிந்தநீவிர் உமது மக்கட்பிறப்பாலாய பயனை யடைதல் வேண்டின் அவன் திருவடிகளைத் தொழுதல் வேண்டும். பலபிறவிகளில் உழன்று உழன்று அரியதோர் பிறவியாகிய மானிடப்பிறவியை யடைந்தது அதற்கேயாகும். புல் முதல் மனிதர் ஈறாக நாம் பிறவிகளை எடுத்தோம் என்பதை

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடு உற்றேன்"*

என்னும் திருவாக்கால் பலபிறவிகட்குப் பிறகு இம் மானிட யாக்கையை யடைந்தோமென்றறிகின்றோம். அன்றியும் அவ்வாக்கையாலாகிய பயனை அடைதற்குக் கற்கவேண்டிய நூல்களையும் கற்கின்றோம். இனி, அந்நூல்களாலாய பயனையடையவேண்டியே இறைவனடியைத் தொழுதல் வேண்டும் என்னும் புத்திபோதிப்பிற்காகவே இரண்டாவது திருக்குறள் எழுந்தது.'

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

(பரி.) இ-ள். கற்றதனால் ஆய பயன் என்?=எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வி யறிவானாய பயன் யாது?—வாலறிவன் நற்றாள் தொழார் எனின்=மெய்யுணர்வினையுடையானது நல்ல தாள்களைத்தொழாராயின். எ-று.

எவனென்னும் வினாப்பெயர் என்னென்றாய், ஈண்டின்மை குறித்து நின்றது. கொல்லென்பது அசைநிலை. 'பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், நற்றாளென்றார். ஆகம அறிவிற்குப்பயன் அவன்றாளைத் தொழுது பிறவியறுத்தலென்பது இதனாற் கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—கற்கவேண்டிய நூல்கள் என்றமையால், கற்கவேண்டா நூல்களும் உள்ளனவோ என்று மாணாக்கர் ஐயுறலும்,

* திருவாசகம்.

ஆசிரியர், ஆம்; உலகத்தில் கற்கவேண்டிய நூல்கள் அறிவு நூல்களாம்; கற்கவேண்டாதன உலக நூல்களாம். அறிவு நூல்கள் என்பன பிறப்பினையறுத்து முத்தியை யடைவதற்குக் கடவுளின் திருவடியை யடையவல்ல மார்க்கங்களைப் போதிக்கும் நூல்களாகும். உலக நூலாவது இம்மைக்கு வேண்டுவனவாகிய போகம் ஒன்றையே கொடுத்து இடையறாப் பிறப்பில் செலுத்துவது ஒன்றாகும். அவை, முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைப் பயப்பிக்கின்ற பதிநூல்களும்; அறிவு, ஆற்றல், இன்பங்களைப் பயப்பிக்கின்ற பசுநூல்களுமேயாம். ஈது அறிவிப்பதற்கு

“ அலகுசால் கற்றும் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவதெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணை யறிவாரில்”

என்றபடியால், அறிவு நூல் கற்று அதன்பயன் அடைதற்கு நீண்ட அறிவினைத்தொழல் வேண்டும் என்று ஆசிரியர் கூறினார். இதைக் கேட்ட மாணவர்கள் “அவ்வாறு அவனடி தொழுவார் யாவர்க்கும் அவன் அருள் செய்தல் கூடுமோ?” என்று வினவுதலும். ஆசிரியர், “அவனடியை இடைவிடாது நினைத்தார்களது மனமென்னுங் கமலத்தில் ‘நினைப்பவர்மனங் கோயிலாக் கொள்பவன்’ என்றபடி சிறிதுந்தாமதியாது விரைந்து செல்வன் என்பதை யறிவிக்கவே மூன்றாவது திருக்குறளில்

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். என்றனர்.”

(பரி.) இ-ள். மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்=மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்—நிலமிசை நீடு வாழ்வார்=எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார். எ-று.

அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்தவடிவோடுவிரைந்துசேறலின், ஏகினானென இறந்தகாலத்தாற்கூறினார்: என்னை? “வாராக் காலத்து நிகழுங் காலத்து—மோராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி—யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்—விரைந்த பொருள

* நாலடியார்.

வென்மனார் புலவர்" * என்பது ஒத்தாகலின். † இதனைப் "பூமேனடந் தான்" என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட் கேற்று வாருமுளர், சேர்தல்=இடைவிடாது நினைத்தல். (௩)

விளக்கம்:—இதனை, "சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால், அவனருளாலே அவன் தாள்வணங்கி" ‡ என்றதாலறிக. எவ்வுயிரிடத்தும் நிறைந்து நிற்கும் இறைவனை அவன் திருவருள் கொண்டு அவன் திருவடியை இடைவிடாது நினைப்பதற்கு மனத்தின் தகுதியை ஒருவன் வாய்க்கப் பெறுவானானால், அவன் மற்றோர் முறை பிறப்பினிடத்தே வாராது முத்தி என்னும் வீட்டில் யாதோரழிவுமில்லாது வாழ்வான் என்று அறியலாயிற்று. மனம், வாக்கு காயமாகிய இம்மூன்றனுள் சிந்தித்தல், கூறல், செய்தல் என்கின்ற செயல்களுள் மனத்தானாகிய சிந்தித்தல் இதனால் கூறியதாயிற்று. ஆதலால்,

"பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்பவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ" §

என்ற திருவாக்கின்படி, ஆன்மா ஓர் நொடியளவும் மறவாது அவன் திருவடியையே நினைத்து நிற்றல் வேண்டுமென்றும், அவ்வாறு நின்றால் வீட்டினையடைவது திண்ணமென்பதும் பெற்றாம். இதுகேட்ட மாணாக்கர் ஆசிரியரைநோக்கி "நாங்கள் எதுசெய்வதென்று அறிவதற்கில்லையே: இவ்வுலகத்து மக்கட்கு உறுதியென இடை விடாது உழன்று தேடும் பொருள்களாகிய மண், பெண், பொன் மூன்றும் எங்களை விடாது வருத்துகின்றன. அவை காரணமாக மனம், ஓயாத கடலலை ஓய்ந்து நின்றாலும், ஓயமாட்டேன் என்கின்றது. அவற்றின் மீது செல்லுகின்ற அவாவின் கூற்றில் ஆயிரத்தில் ஒரு கூறும் இறைவன் திருவடியில் செல்லுவதற்கு மனத்தில் இடமில்லை. என்செய்வம்?" என்றனர். அது கேட்ட ஆசிரியர், "மக்காள்! இது கருதியன்றோ தமது நான்காவது திருக்குறளினை

---

* தொல்காப்பியம்—வினையியல். † ஒத்து=நூல்.

‡ திருவாசகம். § திருநாவுக்கரசர்—தேவாரம்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. என அருளினர்."

(பரி.) இ-ள். வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு=ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலுமில்லாதவனடியைச் சேர்ந்தார்க்கு,—யாண்டும் இடும்பை இல=எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா. எ-று.

பிறவித்துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமென மூவகையான் வருந் துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டு* மின்மையின், அவைகாரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

விளக்கம் :—இறைவன் விருப்பும், வெறுப்பும் அற்றவன் என்றும், அவனடியைச் சேரவிரும்புவாரும் அவ்விரண்டும் அற்று நின்றாலொழியச் சேர்தல் கூடாதென்றும் அறிவிக்கப்பட்டது. உலகத்துப் பொருள்களாகிய மண், பெண், பொன் மூன்றும், இம்மை, மறுமை இன்பங்களாகிய இரண்டற்கே உரியன. அவை வீட்டிற்குக் காரணமாகா என்று உணர்ந்தோம். வீட்டிற்குக் காரணமாகிய அவன் திருவடியை நினைத்தற்கு ஆன்மாவானது அப்பொருள்களிடத்தே விருப்பும், வெறுப்பும் அற்று நிற்றல் வேண்டும். ஆயின், அவ்விதம் விருப்பு, வெறுப்பு அற்று நிற்றல் வேண்டுவான் இவ்வுலகத்து இல்லறத்தானாக இருப்பவன் செய்தல் கூடுமோ? என்று ஐயுறுதல் வேண்டாம். அவன் திருவடியை நினைக்கும் முறையைக்கைக்கொண்டு வாழ்கின்றவன் எல்லாப் பொருள்களோடும் எங்கு இருக்கினும் அவற்றில் தோயாது நிற்றலும் கூடும். துறவி யொருவன் வீட்டை விட்டுக் காட்டிற் சென்று கடிய விரதங்களை அனுட்டித்தாலும் மனத்தை அவன் திருவடியில் செலுத்தாது விடுவானாயின் அத்துறவறத்தால் ஆகிய பயனை யடையான். ஆதலால், நாம் இல்லறத்து இருந்தே எங்கும் நிறைந்த திருவடியை நினைத்தல் கூடும்; ஆயின், இதற்கு உபாயம், கழைக்கூத்தாடி யொருவன் தான் மூங்கிலின்மீது நின்று உலகத்தார் மகிழ் வெய்தும்படி ஆடுகின்றகாலத்தே தன் உடலின்மீதும் பாதுகாப்பு இருத்தல்போல, மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்

* அவ்விரண்டும்=வேண்டுதலும் வேண்டாமையும்.

றம் என்பவர்களோடு கூடி இன்புற்றிருக்கினும் அவை அநித்தம் என்று எண்ணி நித்தமாகிய இறைவனது திருவடியில் நினைப்பினைச் செலுத்தல்வேண்டும். இது கருதியன்றோ,

"பரவையாடினும் நதிகளாடினும்
படியெலாம் நடந்து அடிகள் தேயினும்
குரவராயினும் கனலில்நின்று அதின்
கொதிபொறுக்கினும் கதிகிடைக்குமோ?
அரவம் ஆடு செஞ்சடிலர் அங்கணர்
அமுதர் தாள் நினைந்து அடியர் தம்மொடும்
விரவி நீறணிந்து அருணைசேர்வரேல்
வெற்றராயினும் முத்தராவரே" என்றும்,

"மனைவி தாய்தந்தை மக்கள் மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகைக் காரோணம் மேயசென்னி
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சில் நீரே" * என்றும்,

"காயிலைதின்றும் கானிலுறைந்தும் கதிதேடித்
தீயிடைநின்றும் பூவலம்வந்தும் திரிவீர்காள்
நாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே" † என்றும்,

"வருந்துவரைப்பட்ட மங்கையர் எண்மர் மனங்களைக்க
வரும்துவரைப்பட்ட வாயரங்கேசனை வஞ்சப் பகை
வருந்துவரைப்பட்ட வேழமட்டானை மறந்து உலகோர்
வருந்துவர் ஐப்பட்ட ஈப்போல் மடந்தையர் மால்வலைக்கே ‡"

என்றும், முறையே அருணைக் கலம்பகக்காரரும் திருநாவுக்கரையரும் பிள்ளைப் பெருமாளையங்காரும் புத்தி போதித்தனர் என்று கூறலும் மாணாக்கர்கள் ஆசிரியரை நோக்கிப் "பெரியோய்! உமது நல்லன்பால் இறைவனை இவ்விதம் நினைத்தல்வேண்டும் என்று அறிந்தோம். இனி, அவ்வித விருப்பும் வெறுப்பும் அற்ற இறைவனை எவ்விதம் நாங்கள் அறிந்து உய்வது. உலகத்து மக்கள் தாம் எண்ணிறந்த மதங்களை மேற்கொண்டு தெய்வத் தொழுகையைச் செய்கின்றனர்.

* தேவாரம். † திருவரங்கக்கலம்பகம். ‡ திருவரங்கத்தந்தாதி.

இவ்வித் தெய்வக் கொள்கையினில் இருவினைப்பற்று நீங்கிப் பிறப்பினை அறுத்தற்கு எவ்வித இலக்கணமமைந்த தெய்வத்தைத் தொழல் வேண்டும்" என்று கேட்டலும், கேட்ட மாணாக்கர்க்கு ஆசிரியர், "மக்காள்! இது கருதியன்றோ நம் தெய்வப் புலவர் ஐந்தாவது திருக்குறளினை அருளினர்."

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

(பரி.) இ-ள். இருள்சேர் இருவினையும் சேரா=மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையும் உளவாகா,—இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு=இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து. எ-று.

இன்னதன்மைத்தென ஒருவராலுங்கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறத்தற்கேதுவாகலான் இருவினையுஞ்சேராவென்றுங் கூறினர். இறைமைக்குணங்கள் இலராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேர்வாகலின், அவைமுற்றவுமுடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப் பட்டது. புரிதல்=எப்பொழுதும் சொல்லுதல். (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால் மெய்ம்மைசேர்ந்த புகழ் உடையான் இறைவனென்றும், இவ்வாறு தலைமைக்குணம் இல்லாதார் இறைவராகாரென்றும் அறிந்தோம். ஈதறிவித்தற் பொருட்டன்றோ நம்மணிவாசகப் பெருந்தகை தமது திருவாசகத்தில்

"ஆதியு மந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியை
யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டு மிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் ஈதே
எத்தோழி பரிசேலோரெம்பாவாய்" என்றும்,

"கீதமினியகுயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்

சோதி மணிமுடி சொல்லில் சொல் இறந்துநின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றுமில்லான் அந்தமிலான் வரக்கூவாய்'' என்றும்,

"தினைத்துணையுள்ளதோர் பூவினுள் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்றும், முறையே பெண் ஒருத்தியைநோக்கி, 'ஆதியும்அந்தமுமில்லாத அரிய பெரிய சோதிமயமாகிய இறைவனை விருப்பும் வெறுப்பும் நீங்கி உயிர்கள் யாவும் ஒன்றெனக்காணும் அறிவினையுடைய யாம் புகழ்ந்து பாடக் கேட்டும் இன்னும் உறங்குகின்றனையோ?' என்று அவள் மெய்ம்மை சேர்ந்த புகழை எடுத்துக்காட்டியும்; தாம் எதிரே கண்ட குயில் ஒன்றினை நோக்கிக் கூறுவதுபோல், 'ஓ! சிறந்த இனிமை தங்கிய குரல் வாய்ந்த குயிற் பிள்ளாய்! நீ தோன்றிய நாள்தொட்டு இதுவரையும் உனது இனியதோர்குரல் கொண்டு கூவி நின்றதில் பயன் என்னை? நீ உண்மையாகவே இனிமைதங்கிய குரலைப் பெற்றதாலாகிய பயனையடைய வேண்டுமாயின் உலகெங்கும் நிறைந்தானாய், ஆதியந்த மற்றானையுள்ள இறைவனையே கூவுவாயாக!' என்று அருள்செய்தும்; தம் எதிரே காணப்பட்ட வண்டு ஒன்றினைப்பார்த்து, 'ஓ! வண்டுகளிற் சிறந்த தும்பீ! உனது உயிர் வாழ்க்கை மணம் தங்கியபூவினுள்ள தேனினையுண்டு வாழ்வதெனஅறிந்தேன். அவ்வித உயிர் வாழ்க்கையை யுடைய உனது முயற்சியை நோக்குங்கால் பூக்கள் தோறும் பொழுதறிந்து சென்று நீ ஊதினாலும் அப்பூக்களில் கிடைக்கும் தேன் தினையென்னும் சிறுதானியத்தின் அளவாகவே யுள்ளது. அன்றியும், அவ்வித சிறியதோரளவினையுடைய தேன்துளிகளை மிகமுயன்று நீயுண்டு வாழ்ந்து இம்மைப்பயன் ஒன்றற்கே உரிய பறவையாகவிருக்கின்றாய். நீ உண்மையாகவே உயிர்வாழ்ந்து இம்மை, மறுமை, வீடு என்கின்ற மூன்றினையும் இப்பிறவியிலேயே யடைய வேண்டுமாயின் நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும், எப்போதும் எலும்பும் உருகிப்போகும் வண்ணம் ஆனந்தமயமாகிய தேனினைச்சொரியும் அவன் திருவடியாகிய மலரிடத்தே சென்று

னைதக்கடவாய்!'' என்று அவனது மெய்ம்மைசேர்ந்த புகழினை விளக்கினாராயினர். ஆதலால், மெய்ம்மை சேர்ந்த புகழுடையான் ஆதியும் அந்தமும் அற்றவன். அவனை எப்போதும் நாம் புகழ்ந்து சொல்லல் வேண்டும் என்பார் "புரிந்தார் மாட்டு" என்றார்; இவ்விதம் புகழ்ந்து சொல்லுபவரிடத்து இருவினையென்கின்ற நல்வினை தீவினை உண்டாகா என்றும் கூறினர். அன்றியும், நல்வினை என்றது தேவபோகம் முதலிய நிலையா வின்பத்தைப் பயக்கும் வேள்வி முதலிய காரியங்களைச் செய்தலாகாது என்பார் நல்வினையும் உடன்கூட்டிக் கூறுவாராயினர். ஏனெனின்? யாகமுதலிய வற்றைச்செய்து தேவபோகம் முதலிய வின்பத்தை யொருவன் அடைந்தாலும், நல்வினையின்பயன் ஒழிந்தகாலத்தே மீண்டும் பூமியிற் பிறக்கவேண்டு மாதலால், அவ்வேள்வி முதலியன பயனற்றன வாகும். அன்றியும், இந்நல்வினை, தீவினையிரண்டும் ஒருவனுக்கு விரதம், ஞானம் ஆகிய இரண்டினையும் உண்டாக்காது தடுப்பதில் பொன்விலங்கும், இரும்பு விலங்கும்போல உள்ளன. விலங்கினைத் தரிப்பானுகருப் பொன்னாலாகிய விலங்காயினும், இரும்பாலாகிய விலங்காயினும், துன்புறுத்தலில் இரண்டும் ஒன்றாகவே வுள்ளனவாகையால், இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழைச் சொல்லுகின்றவன் இவ்விதம் ஞானத்தைத்தடுக்கும் யாகம் முதலியவற்றைச்செய்யாது சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நான்கு வாயில்களை வீடு என்னும் நிரதிசய இன்பத்தை யடைவதற்கு வழியாகக்கொள்ளல் வேண்டும் என்பார் "இருள்சேர் இருவினையுஞ் சேரா" என்றனர். இதனைக்

"கருப்ப யோனியில் சுழிப்படுபவக் கடல் கடப்பப்
பொருப்பின் எம்பிரான் உயிர்க்கெலாம் புணையெனப் புகன்ற
விருப்பஞான அஞ்செழுத்தினை யுளத்திடை வித்தில்
தருப்பை சுட்டிடும் வேள்வியேன்? தானமேன்? தவமேன்?"

என்ற இப்பிரமோத்தரகாண்டச்செய்யுளும் நிலைநாட்டும். ஆதலால், முன்னர் மூன்றாவது, நான்காவது திருக்குறள்களில் புத்திபோதித்தபடி அவன் திருவடியை யிடைவிடாது நினைத்து அவன் மெய்ம்மை சேர்ந்த புகழினையும் எக்காலத்தும் புகழ்தல்வேண்டும் என்பதாயிற்று என்றனர்.

இதுகேட்ட மாணவர், "ஓ! தேசிகரே! நாங்கள் அஞ்ஞானக் கடலினின்று நீங்கி மெய்ஞ்ஞானத்தையடைய, தலைமைக் குண முடைய தலைவனது இலக்கணம் இதுவென்று அருள்செய்தீர். இனி அத்தலைவனையடைய நினைத்தலுஞ், சொல்லுதலும் ஆகிய மனம் வாக்குக்களின் தொழில்களை யறிந்தோம். இனி, அவன் திருவடியடைதற்கு எவ்வித வொழுக்கத்தோடு அடியேங்களிருத் தல் வேண்டும்?" என்று இரந்து கேட்டனர். ஆசிரியர் தமதுமாணாக் கர் தீவிர சக்தியை யுணர்ந்து, மிக்கதோர் மகிழ்வெய்தி, "என் தோன்றல்காள்! இது அறிவித்தற் பொருட்டன்றோ நம் தெய்வப் புலவர் தமது ஆறுவது திருக்குறளை அருளினர்" என்றனர்.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

(பரி.) இ-ள். பொறிவாயில் ஐந்து * அவித்தான்† =மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினை யும் அறுத்தானது,-பொய் தீர் ஒழுக்கநெறி ‡ நின்றார்=மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார்,—நீடுவாழ்வார்=பிறப்பின்றி எக்காலத் தும் ஒருதன்மையராய் வாழ்வார். எ-று.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட்செல்கின்ற அவாவும் ஐந்தா யிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானாற் சொல்லப்பட்டமையின், ஆண்டை யாறனுருபு செய்யுட்கிழமைக்கண் வந்தது; 'கபிலரது பாட்டு' என்பது போல. இவை நான்கு பீட்டானும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவரென்பது கூறப்பட்டது. (சு)

விளக்கம் :—முன்னர் நான்காவது திருக்குறளில் வேண்டுதல் வேண்டாமையிலான் என்று அருள்செய்த தெய்வப்புலவர் அவ் வேண்டுதல் ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐந்தன்வழி ஓடுகின்ற ஐந்து ஆசையென்றும், அவ்வித ஐந்து ஆசையினையும் அறுத்தான் இறைவனென்றும், அவ்விறை வன் உயிர்கள்பொருட்டு ஓதிய நூல்களில் உள்ள ஒழுக்கநெறியில் சிறிதும் வழுவாது நிற்பவர் எவராயினும் பிறப்பு, இறப்பு அற்ற

* ஐந்து—தொகைக்குறிப்பு. † அவித்தல்—இலக்கணை.
‡ ஒழுக்கநெறி=ஒழுக்கங் கூறிய வேதாகமங்கள்.

அவ்விறைவன் திருவடியின் நீழலில் சென்று எக்காலத்தும் துன்பம் நீங்கி ஒருதன்மையராகவே வாழ்வார்களென்றும் விரித்துக் கூறினர். இத்திருக்குறளால் இல்லறத்தாராக இருப்பவர்

"நிலையிற்றிரியாது அடங்கியான் தோற்றம்,
மலையினும் மாணப்பெரிது." *

என்றபடி தமக்கு உள்ள மனைவியரோடு ஐம்புலன்கள் ஆரத்துய்த்து, பிறன் மனை நயவாதும், பரதையர்ப்புணராதும் நிற்றல் வேண்டுமென்றும், பின்னர் இல்லறத்தில் வெறுப்புற்றுத் துறவறத்தையடைந்த காலத்தே தவம்பூண்டு, கூடாவொழுக்கம் நீத்து நிற்றலே ஒழுக்கநெறி என்றுங் கண்டோம். இதனையே நம் மணிவாசகப் பெருந்தகை தமது திருவாசகத்தில்,

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனி என்னே உய்யுமாறு என்றென்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே" என்றும்,

"ஆனை வெம்போரில் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்
டேனை எந்தாய் விட்டிடுதிகண்டாய் வினையேன் மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலையும் அமுததத்தையு மொத்து
ஊனையும் என்பினையும் உருக்கா நின்ற வொண்மையனே"

என்றும், புலனால் உயிர்கள் அலைப்புண்ணுதலை மிகுதியும் எடுத்துக் காட்டினர். புலன்களை வென்றோர் எவரோ அவரே புலன்களை வென்றானுள்ள இறைவன் திருவடியைத் தொழுதல் கூடும் என்றறிந்தோம் என்று ஆசிரியர் கூறுதலும், மாணாக்கர், "நான்காவது திருக்குறளில் கூறியபடி, இத்திருக்குறளிலும் அவா அறுத்தலைக் கூறியதாக நாங்கள் கண்டோம். ஆயின், ஐந்தாவது திருக்குறளில் கூறிய இறைவன் என்னும் இலக்கணத்துக்கு அமைய இறைவனைப்

* திருக்குறள்—124.

பற்றிக் கூறிய இலக்கணம் இன்னும் ஏதேனும் இக்கடவுள் வாழ்த்தில் கூறுகின்றனரா?" என்னலும்,ஆசிரியர்,"அவ்விறைமைக்குணத்தை முற்றிலும் அறிவிப்பதே ஏழாவது திருக்குறள்" என்றனர்.

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(பரி.) இ-ள். தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்=ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க் கல்லது,—மனக்கவலை யாற்றல் அரிது=மனத்தின்கண் நிகழுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது. எ—று.

"உறற்பால—தீண்டாவிடுதலரிது" என்றாற்போல ஈண்டு அருமை இன்மை மேனின்றது. தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய காம, வெகுளி, மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந் துன்பங்களுள் அழுந்துவரென்பதாம். (எ)

விளக்கம்:—இத்திருக்குறள் ஒரு விதத்தாலும் தனக்கு ஒப்பில்லாதவன் எவனோ அவனே இறைவன் என்று எடுத்துக்காட்டியதாயிற்று.ஏனெனில்,இவனுக்கு ஒப்பும், உயர்வும் ஆனோர்வேறொருவரிலாதலின் என்க. இருப்பாராயின் "தெய்வம் ஒன்றென்றிரு, அது உண்டென்றிரு" என்பதற்கு மாறாகும். ஆதலால், ஒப்பு, உயர்வு அற்ற இறைவன் ஒருவனே யென்றும், அவனது திருவடியைச் சேர்ந்தால் அல்லது காமத்தினையும், வெகுளியினையும், மயக்கத்தினையும் நீக்கமுடியாது புலன்களில் செல்லுகின்ற அவாவில் அழுந்திப் பல பிறவிகளையெடுத்து அப்பிறவிகள்தோறும் வரும் துன்பக்கடலுள் அழுந்துவரென்றும் கூறியதாயிற்று. இவ்விதம் கூறலும் மாணாக்கர், "அவன் திருவடியைச் சாராவிடில் காம, வெகுளி, மயக்கங்களை நீக்கலாகாதோ?" என்று வினவுதலும், ஆசிரியர் எட்டாவது திருக்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(பரி.) இ-ள். அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்=அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது,—பிற ஆழி நீந்தல் அரிது=அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது. எ-று.

அறம், பொருள், இன்பம் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள், அறத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் பிற வெனப்பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவாகவுடையனாகலின், அறவாழி யந்தணனென்றார். 'அறவாழி' என்பதனைத்தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்றுரைப்பாருமுளர். அப்புணையைச் சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே யழுந்துவராகலின், நீந்தலரிதென்றார். இஃதேகதேசவுருவகம். * (அ)

விளக்கம்:—இறைவன் அறக்கடலாதலால், அவ்வித அறக் கடலாகிய இறைவனது திருவடியாகிய தெப்பத்தைச் சேர்ந்தவர் களல்லாமல், அத்தெப்பத்தைச் சேராதவர் அறத்திற்கு வேறாகிய பொருளாசை என்னுங் கடலுள்ளும், இன்ப ஆசை என்னுங் கடலுள்ளும், அழுந்துவரேயன்றி அவற்றினைத்தாண்டிச்செல்லார் எனக்கூறியதாயிற்று. ஏனெனின்? முன்னர்க்கூறிய அளவாகவே வெறுப்பும், விருப்பும்அற்றுப் புலன்களில் ஆசையைச்செலுத் தாதவர்களே மேலாகிய வீட்டின்பத்தை யடைவார்களென்பதால், இத்திருக்குறளால், ஒழியவேண்டுவன பொருளாசையும், இன்ப ஆசையும் என்றும், அற ஆசை ஒன்றே யிருத்தல் வேண்டுமென் றும், அதனை அடைதற்கு அறக்கடலாகிய அந்தணன் என்னும் அருட்பெருந் தகையின் திருவடியைச் சேர்தல்வேண்டும் என்றும் கூறப்பட்டது. இது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் அவன் தாளைச் சேர்வதற்கு மனத்தானும் வாக்கானும் செய்ய வேண்டுவனவற்றை அறிந்தோம். ஆயினும், எவ்வறத்தினையும் மனம், வாக்கு, காயங்க ளால் செய்தல் வேண்டும் என்று தேவரீர் பன்முறை கூறி யிருப்ப தால், இனி, காயத்தால் செய்யவேண்டிய செயல் யாது?" என்று கேட்டனர்.

அது கருதியே இத்திருக்குறள் அருள் செய்யப்பட்டதென்று, ஆசிரியர் ஒன்பதாவது திருக்குறளைக் கூறலுற்றனர்.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

(பரி.) இ-ள். கோள் இல் பொறியிற்குணம் இல=தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடைய வல்ல,—எண் குணத்தான் தாளை‡ வணங்காத் தலை‡=எண் வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள். எ-று.

---

* ஏகதேசவுருவகமாவது, அங்கம் பலவற்றுள்ளும் ஒன்றனை யுருவகஞ் செய்து மற்றவைகளை வாளா விடுவது.

எண்குணங்களாவன:—தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. அணி மாவை முதலாகவுடையன வெனவும், கடையிலாவறிவை முதலாகவுடை யன வெனவும் உரைப்பாருமுளர். காணுதகண் முதலியனபோல வணங் காத தலைகள் பயனிலவெனத்தலைமேல் வைத்துக்கூறினார்; கூறினரே னும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதூஉ ங்கொள்க. இவை மூன்று பாட்டானும் அவனை நினைத்தலும், வாழ்த்த லும், வணங்கலுஞ் செய்யாவழிப்படுங்குற்றங் கூறப்பட்டது. (௬)

விளக்கம்:—இத்திருக்குறளால், காயத்தால் செய்யவேண்டு வனவாகிய தலை‡ முதல் தாள்‡ வரையில்உள்ள உறுப்புகள் யாவும், அவன் பொருட்டே பயனுற வேண்டுமென்றும், அவ்வாறு பய னுறுவிடில் மானிடப் பிறவியாலாகிய பயனை அடைவதற்கு இல்லை என்றும் கூறப்பட்டது. இதுகருதியே, திருநாவுக்கரையரும்

"தலையே நீ வணங்காய்
  தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
  தலையே நீ வணங்காய்"

என்ற திருப்பாசுர முதல்

"இறுமாந்திருப்பன் கொலோ
ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
அங்கு இறுமாந்திருப்பன் கொலோ"

என்று புத்திபோதித்தனர். அன்றியும், திருஞான சம்பந்தப் பெருமான்

"நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யார் அறிவார்
சாநாளும் வாழ் நாளும் சாய்க்காட்டு எம்பெருமாற்குப்
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமம் செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப்பெறலாமே நல்வினையே"

என்றும் அருளினர்.

---

‡ ‡ 'தாள்—தலை' என்றதனால், இறைவனிடத்து ஆன்மா கலப்புற்று நிற்கும் உண்மைநிலை, நாயனார் இத்திருக்குறளால் கூறியதும் ஆயிற்று. தாள், தலை என்பன ஆகுபெயர்கள்.

மற்றும் மணிவாசகப் பெருந்தகையார்

" ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு
அன்பிலை என்பு உருகிப்
பாடுகின்றிலைப் பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வதொன்று அறியேனே " என்றும் அருளினர்.

ஆதலால், நாம், அவன் திருவடியைப்பெறுதற்கு ஆவனவாகிய செயல்களைச் செய்தல்வேண்டும். அச்செயல்கள் இவையென்று உங்களுக்கு,

" நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக்கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கராசெய போற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே "

என்னும் திருத்தாண்டகமும் அறிவிக்கும். ஆதலால் நாம் காயத்தால் நிகழ்த்தவேண்டுவன இவையென்றறிந்தோம், என்றனர்.

அது கேட்டமாணுக்கர், " ஐயனே! மனமொழிமெய்களால் செய்யவேண்டுவன இவை என்றறிந்தோம். அவ்விதம்செய்தார்க்கு உண்டாகும் பயன் இதுவென்றும், செய்யாதார் அடையும்பயன் இதுவென்றும் தொகுத்துச்சொல்லல் வேண்டும்" என்றுகேட்டலும், ஆசிரியர் பத்தாவது திருக்குறளை எடுத்துக் கூறினர்.

10. பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

(பரி) இ-ள்: இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப்பெருங்கடல் [illegible]வர் = இறைவனடி என்னும் புணையைச்சேர்ந்தார் பிறவியாகிய [illegible]

கடலை நீந்துவர்,—சேராதார் நீந்தார்=அதனைச் சேராதார் நீந்தமாட்டா ராய் அதனுளழுந்துவர். எ-று.

காரண காரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தாரென்பதுசொல்லெச்சம். உலகியல்பைநினை யாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதருமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப் பட்டன. (ய)

விளக்கம்:—இதனால், நீங்கள் காரண காரியத் தொடர்ச்சியாய் அளவு அற்று வருகின்ற பிறவி என்னும் பெருங் கடலைத்தாண்ட வேண்டுமாயின், இறைவன் திருவடியாகிய தெப்பத்தைச் சேர வேண்டுமென்றும், அவ்விதம் சேர்ந்தால் பிறவியென்னும் பெருங் கடலைத் தாண்டிமுத்தியென்னுங் கரையைச் சேர்தல் திண்ணம் என் றும், அல்லாவிடில் அப்பிறவிக் கடலைத் தாண்டுதல் ஆகாதென்றும் முடிந்தது முடித்தலாகத் தீர்மானித்ததாயிற்று. ஆதலால் அவன் திருவடியைச் சேர்ந்து, என்றும் இறவாத புகழ் உடம்பினையும், புண் ணியதநினையும் பெற்றவரே உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயத்தை யும் நிலைநாட்டியதலைவர்களாவார்கள். நாமும் அவ்வண்ணமே அவன் திருவடி நிழலை யடைவதற்கு வேண்டுவனவாகிய மெய், மொழி, மனங்களை அவன்பாற் செலுத்தி இப்பிறப்பினலாகிய பயனை யடைவோமாக! என்று கடவுள் வாழ்த்தை முடித்தனர்.

## 2. அதிகாரம்

## வான்சிறப்பு.

(பரி.) அஃதாவது அக்கடவுள தாணையான் உலகமும், அதற்குறுதி யாகிய அறம், பொருள், இன்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம்:—மேல் அதிகாரத்தில் கடவுளது இலக்கணத்தை யும், அவன் வழிப்பட்டாரையும், அவராடையும் பயனையும் அறிந்த

மாணுக்கர்கள், "பெரியோய்! கடவுள் உண்டென்பதும், அவரால் படைக்கப்பட்ட உலகம் உண்டென்பதும், அவ்வுலகத்து உயிர்கள் உய்வதற்கு அறம், பொருள், இன்பங்கள் ஏதுவென்பதும், கேட்டறிந்தோம். இனி, அவ்வறம், பொருள், இன்பங்கள் நடத்தற்குத் துணைக்காரணமாகவுள்ளது எது?" என்று கேட்டலும், ஆசிரியர், "மக்காள்! மேற் கூறிய மூன்றினையும் இயலச் செய்வது மழையேயாம். இதனாலன்றோ நம் தெய்வப் புலவர் இரண்டாம் அதிகாரமாக 'வான்சிறப்பு' என்பதனைக் கடவுள்வாழ்த்துக்குப் பின்னர் வைத்தனர்?" என்று முதற்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(பரி.) இ-ள். வான் நின்று உலகம் வழங்கி வருதலால்=மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான்,—தான் அமிழ்தமென்று உணரற்பாற்று=அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையை யுடைத்து. எ—று.

நிற்ப வென்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது ஈண்டுயிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது பிறப்பு இடையறாமையின் என்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலை பெறுதலின், உலகத்தை நிலை பெறுத்துகின்ற வானை அமிழ்தமென்றுணர்க வென்றார். (க)

விளக்கம்:—இத்திருக்குறளால் மழை விடாது பெய்வதால் உலகம் ஆகிய உயிர்கள் பல பிறவிகளில் விடாது உடம்போடு காணப்பட்டு வருகின்றனவென்றும், அவ்வாறு உயிர்கள் பல பிறவிகள் எடுத்து அப்பிறவிகள்தோறும் உண்டு வாழ்வது மழையினாலேயே யென்றும் கூறியதாயிற்று. இதனையே நமது ஆசிரியர் தமது திருக்குறளில்

"வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி." * என்றும்

* அரசியல் பொருட்பால்—செங்கோன்

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ளளிக்கு மளி."

என்றும் கூறியுள்ளது இங்கு உய்த்து உணரத்தக்கது. அன்றியும் அமிழ்தத்தை யுண்ணும் தேவர்கள் சாவாதவர்களென்றும், அதனால் அவர்கள் அமரர்களென்று அழைக்கப்படுகிறார்களென்றும் நூல்கள் கூறுகின்றனவாதலின், உலகத்து உயிர்களையெல்லாம் நிலைத்து நிற்கச் செய்யும் மழையினை அமிழ்தமென்றார்.

இதில், வான்சிறப்பு என்பதில் வான் என்பது ஆகாயமென்னும் ஓரிடமாகவிருக்கவும், அவ்விடத்துத் தோன்றுகின்ற மேகத்தையும், அதனாலாகிய மழையினையும் இருமடியாகுபெயராய் 'வான்' என்று கூறி, அது இடையறாது பெய்யும் நலம் நோக்கிச் 'சிறப்பு' என்றுங் கூறினர். ஆசிரியர் மழையினைச் சாவா நிலையினையுண்டுபண்ணுகின்ற அமிர்தத்தோடு ஒப்புக் கூறியது உலகத்திலுள்ள உயிர்கள் நிலைபெறுவதற்குக் கருவியாகவிருப்பதேயாம். இக்கருத்துப்பற்றியே நைடதக்காரரும்

"கருவிமாமழை கலைமகள் உருவென விளங்கி
இருவிசும்பிடைப் பரந்துசென்று அங்கின மணிகொழிக்கும்
பரவை வெண்திரை மேய்ந்து உயர் பனிவரையுயிர்த்த
உருவவோடரித் தடங்கணாள் உருக்கொடு மீண்ட" என்றும்,

கம்பர் தமது ராமாயணம் ஆற்றுப் படலத்துள்

நீறணிந்த கடவுள் நிறத்தவான்
ஆறணிந்து சென்றார் கலிமேய்ந்தகிற்
சேறணிந்த முலைத் திருமங்கை தன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே.

புள்ளி மால் வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி யுள்ள வெல்லாம் உவந்து ஈயும் அவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே.

---

* காமத்துப்பால்.

என்றனர். இதைக்கேட்ட மாணாக்கர் "ஆனால் உயிர்கள் உடலோடு உள்ளவளவு நிலைத்து நிற்கச்செய்வதேயன்றி, அமுதம்போன்று சாவா நிலைமையை இம்மழை உண்டுபண்ணவில்லையே? ஆசிரியர் கூறிய உவமை எவ்விதம் பொருந்தும்?" என்று ஐயுறலும், நல்லாசிரியர், ஐயுற்ற மாணவரை நோக்கி "நீங்கள் ஐயுறல் வேண்டாம். இறவா நிலையுடையர் அமரரென்னும் காரணப் பெயரையுடையாராயினும், அவ்வமரர்களும் அவர்க்கென விதித்த ஆண்டுகள் நீங்கியவுடன் அவனி* யில் வந்து பிறப்பர் என்பதே நூல் வல்லவர் துணிபாகும். ஆதலால் இவ்வித மங்கலத் தன்மையுடைய பெயரைப் பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்திற்கு வைத்தது அதன் குணமிகுதியை நோக்கியே யாம்" என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "வானத்திலுள்ளார் உணவாகிய அமிழ்தமும், பூவுலகத்துள்ளார் உணவினையுண்டு பண்ணும் மழையும், இரண்டும் ஒன்றற்கொன்று பொருந்திய குணமுடையனவோ? அன்றி, உயர்வு தாழ்வு உடையனவோ?" என்று கேட்டலும், ஆசிரியர் "அவ்வானத்துள்ளார் உணவாகிய அமிழ்தம்தான் தன்னை யுண்பார்க்கு வுணவாக மாத்திரம் நிற்குமேயன்றி வேறு பல உணவுகளை யுண்டாக்குவதற்கு இயலாது. ஆனால், இவ்வுலகத்தார் உய்வதற்கு உறுதியைப் பயக்கும் மழையானது உலகத்துள்ள ஒவ்வொரு உயிர்க்கும் ஏற்றவாகிய பல உணவுகளை யுண்டாக்கித் தருவதோடு, தானும், உண்டாகிய அவ்வுணவுகளை உண்பார்க்குத் துணையாக நின்று உண்ணச் செய்கின்றது. ஆதலால், அவ்வான் அமிழ்தத்திலும் இவ்வுலக அமிழ்தமே சிறந்ததென்று அறிவித்தற்பொருட்டே இரண்டாவது திருக்குறள் எழுந்தது" என்றனர்.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(பரி.) இ-ள். துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி=உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி,—துப்பார்க்குத் துப்பு ஆயதூஉம் மழை= அவற்றை யுண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம மழை. எ-று.

* அவனி=உலகம்.

தானு முணவாதலாவது, தண்ணீரா யுண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும், நீர் வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கி வருதலுடையவாயின வென்பதாம். (உ)

விளக்கம்:—இத்திருக்குறளைத் 'துப்பார்க்கு' என்று மக்கள் மேல் வைத்துக் கூறினாராயினும் அக்கூற்று ஏனைய உயிர்களுக்கும் பொருந்துவதாயிற்று. இவ்விதம் உயிர்களுடைய பெரும் பசியையும், நீர் உண்ணும் விருப்பத்தையும் மழை நீக்குகின்றமையால் அவ்வுயிர்கள் பலபிறவிகளோடு வழங்கி வருவதாயின என்றறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "என்னை? இம்மழையில்லாவிடின் என்? பெரியதோர் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்துள்ள உயிர்கள் அக்கடல் நீரைக்கொண்டு உய்தலாகாவோ?" என்று கேட்டலும், "கடலாற் பயனில்லை. மழையொன்றே பசியை நீக்கி உயிர்களை நிலை நிறுத்தும் என்று அறிவித்தற் பொருட்டே மூன்றாவது திருக்குறளைத் திருவாய் மலர்ந்தனர்" என்று ஆசிரியர் கூறினர்.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(பரி.) இ-ள். விண் இன்று பொய்ப்பின்=மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின்,—விரி நீர் வியன் உலகத்துள்=கடலாற் சூழப்பட்ட அகன்றவுலகத்தின் கண்,—நின்று உடற்றும் பசி=நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி. எ-று.

கடலுடைத்தாயினும் அதனாற் பயனில்லை யென்பார், 'விரிநீர் வியனுலகத்து' என்றார். உணவின்மையின், பசியான் உயிர்கள் இறக்குமென்பதாம்.

விளக்கம்:—இத்திருக்குறளில் மழை நீங்கலாக வேறு எவ்வித வருவாயும் உலகத்து உயிர்களது பசியை நீக்காது என்றும், பசியால் உயிர்கள் இறந்துவிடுமென்றும் உணர்ந்தோம். பசியின் கொடுமை இதுவென

'மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்"

என்னும் நல்வழிச் செய்யுளே நமக்கு விளக்கிக் காட்டுகின்றது என்று ஆசிரியர் கூறலும், மாணாக்கர், "மழையில்லாவிடின் எவ்வாறு பசி யுண்டாகும்? உலகத்துப் பொருள்கள் எவ்வாறு இல்லாமற் போம்?" என்று வினவினர். ஆசிரியர், "மழையில்லாவிடில் உணவின்மை யுண்டாகும். உணவில்லாத காலத்துப் பசியால் உயிர்கள் இறக்கும். உணவு உண்டாதற்குக் காரணமாகிய செயல்கள் நடவா? என்பதை யெடுத்துக்காட்டவே எல்லாத் தொழில்களிலும் முதலாகிய உழவுத் தொழிலைத் தெரிவிக்கும் நான்காவது திருக்குறளைத் தெய்வப்புலவர் அருள் செய்தனர்" என்றனர்.

14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங் குன்றிக்கால்.

(பரி.) இ—ள். உழவர் ஏரின் உழார்=உழவர் ஏரானுழுதலைச்செய்யார்,—புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால்=மழை யென்னும் வருவாய் தன் பயன் குன்றின். எ—று.

குன்றியக்காலென்பது குறைந்து நின்றது. உணவின்மைக்குக்காரணங் கூறியவாறு. (௪)

விளக்கம்:—இத்திருக்குறளில் மழையில்லாவிடின் உழவர் தம் ஏரால் உழுதலைச் செய்து உணவினை உண்டுபண்ணுதல் ஆகாதென்றறிந்தோம். தொழில்களெல்லாவற்றுள்ளும் முதன்மை பெற்றது உழவு என்றும், அவ்வுழவினைச் செய்பவர் உழவர் என்னுங் காரணப்பெயர் பெற்றனரென்றும், இவ்வுழவர்க்குத் துணையாய் நிற்பது மழையேயன்றி வேறன்று என்பதும் அறிந்தோம். இவ்வுழவர் தம் ஏரால் உழுதற்றொழிலைச் செய்யாவிடின் உலகம் ஆளும் அரசரும் தம் தொழிலாகிய அரசாட்சியைச் செய்தலாகாது. இதனை "உழவு" என்று பின்வரும் 104-வது அதிகாரத்தில் உங்களுக்கு விளக்கிக் காட்டுவேன். ஆயினும், இவ்வுழவரைப்

பற்றி மேலோர் கூறிய சில செய்யுள்களை உங்களுக்கு முதலில் குறிப்பிக்கின்றேன்.

"இமயமலை அரையன் மகள் தழுவக் கச்சி
ஏகம்பர் திருமேனி குழைந்த ஞான்று
சமயமவை ஆறினுக்குந் தலைவிக்கீசர்
தந்தபடி எட்டுழக்கு ஈராழி நெல்லும்
உமை திருச்சூடகக் கையால் கொடுக்க வாங்கி
உழவு தொழிலால் பெருக்கி உலகமெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண்
தலைவர்பெரும் புகழுலகில் தழைத்ததன்றே."

"விளைகழனி பூலோக முழுதுமேரி
விரிதிரை நீர்க்கடல் வருணன் கம்பு கட்டி
கிளர் கலப்பை தருசுமையாள் சுவேதராமன்
கிடாமறலி வசந்தீசன் வசந்தான் என்றிங்கு
அளவறிந்து ஆண்டாண்டுதோறும் விதை தப்பாமல்
அளக்குமவள் கச்சியறம் வளர்த்த மாதா
ஒளிபெருகு கொழுமிகுதி யெறும்பீறுன
உயிரனைத்துந் தேவரும் உண்டு உவப்பரன்றே."

"எறிதரு மரியின் சும்மை எடுத்து வான் இட்ட போர்கள்
குறிகளும் போற்றிக் கொள்வார் கொன்ற நெல் குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்துண மனையின் உய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி நிரைத்து மண் ணெளிய வூர்வார்"†

என்று கூறியுள்ளமையால் உலகுக்கு உழவும், உழவிற்கு மழையுந் தான் ஏதுக்களென்று அறிந்தோம். அன்றியும், இம்மழையானது உலகத்து வாழ்வாரை வளரச் செய்வதும் கெடச்செய்வதும் ஆகிய இரண்டிற்குங் காரணமாகவுள்ளது என்று அறிவிக்கவே நம் தெய்வப் புலவர் ஐந்தாவது திருக்குறளை அருள் செய்கின்றனர்.

* சேக்கிழார் புராணம்.

† இராமாயணம்—நாட்டுப்படலம்.

**15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.**

(பரி.) இ-ள். கெடுப்பதூஉம்=பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்,—கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம்=அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற் போல எடுப்பதூஉம்,—எல்லாம் மழை=இவையெல்லாம் வல்லது மழை. எ-று.

மற்று வினை மாற்றின்கண் வந்தது. ஆங்கென்பது மறுதலைத் தொழி லுவமத்தின்கண் வந்த உவமச்சொல். கேடுமாக்கமும் எய்துதற்குரியார் மக்களாதலின், கெட்டார்க்கென்றார். எல்லாமென்றது அம்மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கடாம் பலவாதல் நோக்கி. வல்ல தென்பது அவாய்நிலையான்வந்தது. மழையினதாற்றல்கூறியவாறு. (கு)

விளக்கம்:—இத்திருக்குறளில் உயிர்கள் கெடுதற்கும், அவை மேன்மேல் உயர்ந்து பலன் எய்துதற்கும் மழையே காரணம் என்றமையால், மழையானது உலகத்துப் பெய்யாது உயிர்களைக் கெடுக்கவும், கெட்ட அவ்வுயிர்கள் மகிழ்வெய்தும் வண்ணம் பெய்து அவ்வுயிர்களை நிலை நிறுத்தவும் கூடுமென்றுங் கண்டோம். அன்றியும், உரையாசிரியர் 'வல்லதென்பது அவாய் நிலையான்வந்தது' என்று எடுத்துக் காட்டினர். அதாவது "எல்லாம் மழை" என்ற சொற்களுக்கு 'இவையெல்லாம் மழை' என்று எழுத வேண்டியிருக்க, 'இவையெல்லாம் வல்லது மழை' என்று 'வல்லது' என்னும் ஒரு சொல் வரவழைத்து எழுதினமையால் அவாய்நிலை என்றனர். முன்னரே கிடந்த ஒரு சொல் அதனோடு இன்றியமையாத மற்றோர் சொல்லினை அவாவி நிற்குமாயின், அதனை அவாய்நிலை என்கின்றனர். இவ்வவாய்நிலையினை வடநூலார் 'அத்தியாகாரம்' என்பர் என்று ஆசிரியர் கூறுதலும், மாணாக்கர், "தேவரீர் இதுகாறுங் கூறிவந்ததில் 'கெட்டார்க்கு' என்று கூறியதால் கேட்டினையும் வளர்ச்சியினையும் அடைதற்குரிய மக்களுக்குத்தான் மழை வேண்டும் போலும்; அவர் நீங்கலாகிய ஏனைய உயிர்கள் மழையில்லாவிடினும் துன்புறாது பிழைப்பனபோலும்" என்று வினவுதலும், "மக்காள்! மக்கள் மாத்திரமல்ல ; ஏனைய வுயிர்களும் மழையில்லாவிடின்

பிழைத்தற்கு இடனிராது என்பதை அறிவிப்பதற்கே ஆறுவது திருக்குறள் எழுந்தது" என்று ஆசிரியர் கூறினர்.

16. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(பரி.) இ-ள். விசும்பின் துளி வீழின் அல்லால்=மேகத்திற் றுளிவீழிற் காண்பதல்லது*—மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது=வீழாதாயின், அப்பொழுதே பசும் புல்லினது தலையையுங் காண்டல் அரிது.

விசும்பு ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம். (௬)

விளக்கம்:—முன்னர் வான் என்பது மழைக்கு ஆகு பெயராய் வந்ததுபோல் ஈண்டு விசும்பு என்பது மேகத்திற்கு ஆகு பெயராய் வந்தது.

மழையில்லாவிடின் ஓரறிவுயிராயுள்ள புல்லும் நிலத்தில் முளையா தென்பதாம். ஆகவே, முன்னர்க் கூறியபடி புல்முதலியன கொண்டு பிழைக்கும் அஃறிணையாகிய மிருகங்களையும் பசி வருத்து மென்றும், அவைகள் உய்வதற்கு ஏது வேறொன்று மில்லை யென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "நிலத்தில் உள்ள அஃறிணை உயர்திணைகளாகிய உயிர்கள் பசியால் வருந்தி இறந்துபடும் என்பது அறிந்தோம். ஆனால், இவ்வுலகத்தைச் சுற்றியுள்ள கடல்களில் உள்ள உயிர்களுக்கும் மழை வேண்டுமோ? அம்மழைக்கும் கடலன்றோ காரணம்? அதை அறிதற்கு ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர், "இவ்வையம் நீங்கும் வண்ணம் நம் தெய்வப்புலவர் ஏழாவது திருக்குறளை யெடுத்து ஓதினர்" என்றனர்.

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(பரி.) இ-ள். நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்=அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும்,—எழிலி தான் தடிந்து நல்காதாகி விடின்=மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின். எ-று.

---

* காண்பதல்லது=(புல்லைக்) காண்பதல்லது.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணிமுதலாயின படாமையுமாம். ஈண்டுக்குறைத்தலென்றது முகத்தலை; அது "கடல் குறை படுத்த நீர் கல் குறைபட வெறிந்து"* என்பதனானும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டுமென்பதாம். (இவை ஏழுபாட்டானும் உலக நடத்தற்கேதுவாதல்கூறப்பட்டது)()

விளக்கம்:—மேற்கூறிய வண்ணம் மழையில்லாவிடின் கடலுள் தோன்றும் நீர் வாழ்வன பிறவாமையும், முத்து முதலாகிய மணிகள் உண்டாகாமையும் நேரிடும் என்று அறிந்தோம். அதாவது, மேகமானது கடலிடத்தே சென்று நீரினையுண்டு அக்கடலிடத்தே பெய்யாவிடில், கடலில் தோன்றும் உயிர்உற்றனவும், உயிர் அற்றனவுமாகிய பொருள்கள் உண்டாகா. ஆகையால், மழைக்கு முதலாகிய அளவுபடாத கடலுக்கும் மழை வேண்டுமென்பது பெற்றும்.

மேற்கூறிய ஏழுதிருக்குறள்களாலும் மழையில்லாவிடில் உலகம் நடத்தற்கு ஏதுவில்லை யென்பது அறியப்படுகிறது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "என்னை? உலகத்து மக்கட்கும், ஏனைய உயிர்கட்கும் உண்டாக வேண்டிய நன்மைகள் உண்டாகாவிடின், தேவபூசை முதலியவைகள் நடக்குமோ? அல்லது அவையும் இல்லாமற்போமோ? அன்பு கூர்ந்து உரைத்தல் வேண்டும்" என்று வினவலும், ஆசிரியர், "இது கருதியன்றோ நம் தெய்வப்புலவர் எட்டாவது திருக்குறளை யெடுத்து இயம்பினர்" என்றனர்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(பரி.) இ-ள். வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது =தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது,—வானம் வறக்கு மேல்=மழை பெய்யாதாயின். எ-று.

நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்றாராகலின், செல்லாதென்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்திற்றாழ்வுதீரச் செய்வது நைமித்திகமாதலின், அதனை முற்கூறினார். (அ)

* பரிபாடல்,—20.

விளக்கம்:—இத்திருக்குறளால் தேவர்கள் விஷயமாக இவ்வுலகத்து மக்களால் கொண்டாடப்படும் திருவிழாவும், நித்தியபூசையும் மழை பெய்யாவிடின் நடவாவென்று கண்டோம். அன்றியும், நித்தியபூசையில், பூசை செய்கின்றவர்களாலும், ஏனையோர்களாலும் நடத்தப்படும் கிரியைகள் தவறுபடுமாகில் அத்தவறு நீங்குவதற்கு நடத்துவது திருவிழா என்றும் தெரிந்து கொண்டோம். ஏனெனில்? மிகப் பெரியதோர் புண்ணியத்தைச் செய்து முப்போதுந் திருமேனி தீண்டுவ தாகிய தொழிலைப் பெற்றிருப்பவராகிய தேவபூசை செய்கின்ற குலத்தினரும், தம் நிலையை அறியாது பொருளாசையாலும், ஏனைய கூடா வொழுக்கத்தாலும் தவறி விடுவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோமாதலால், பிறர் அறியாது அவர்கள் செய்கின்ற குறைகளை நீக்கும் வண்ணமே விழாக் கொண்டாடுவதாயிற்றென வறிந்தோம். நித்திய பூசையில் தவறுவதையும் நைமித்திகமாகிய விழாக்களால் நீக்குகின்றோமாதலால், அச்சிறப்பு நோக்கிப் பூசனைக்கு முன் விழவினைக் கூற வேண்டுவார் 'சிறப்பொடு' என முதலிற் கூறினர். இவ்விதம் உலகத்து உயிர்கள் யாவும் உய்வதற்காக நியமித்திருக்கும் கோயில்களிலும் பூசகர்கள் தாழ்வுபடச் செய்வது உண்டோவென்று மாணுக்கர் ஐயுற்று நிற்றலும், ஆசிரியர் புன் முறுவல் செய்தாராய், "என்னை, என்னை! ஏன் ஐயுறுகின்றீர்? இது புதியதன்று. பண்டைக் காலந்தொடங்கி இவ்விதமே கோயில் பூசகர்கள் நடத்துகின்றார்கள் என்பதை அறிவிக்கவே நம் இரட்டைப் புலவர்களுக்குச் சிவபெருமான் திருவருள் செய்ததுபோல் அவர்கள் பின்வரும் செய்யுளைக் கூறியிருக்கின்றனர்.

" தேங்குபுகழ் ஆங்கூர் சிவனே அல்லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ? —ஆங்காணும்
கூறுசங்கு டோல்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்."*

இது கேட்ட மாணுக்கர் மிக்கதோர் வியப்புற்றாராய் இவ்விதமும் உலகத்தியல்பு உள்ளதோ என்று எண்ணி, ஆசிரியரை

* தனிப்பாடற்றிரட்டு.

நோக்கி, "ஓ! எம் பெரியோய்! தேவ பூசையும் நடவா தென்றறிந் தோம். ஆனால், உலகத்து இல்லறம், துறவறம் என்ற இரண்டு அறங் களையும் மேற்கொண்ட மக்கள் செய்கின்ற தானமும், தவமும் மழை பெய்யாவிடின் உண்டாகாவோ? அடியேங்கட்குக் கூறல் வேண் டும்" என்னலும், ஆசிரியர், "இது கருதியே ஒன்பதாவது திருக் குறளைத் தெய்வப்புலவர் உலகோர் உய்ய அருள் செய்தனர்" என்றனர்.

19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(பரி.) இ-ள். வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா = அகன்ற உலகின்கண் தானமுந் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா,—வானம் வழங்கா தெனின் = மழை பெய்யாதாயின். எ-று.

தானமாவது:—அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகை யோடுங் கொடுத்தல். தவமாவது:—மனம் பொறிவழி போகாது நிற்றற்பொரு ட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன. (கூ)

விளக்கம்:—தானமாவது, தரும வழியால் ஒருவன் தேடிய பொருள்களைத் தானம் வாங்குவதற்கு யோக்கியமாகவுள்ள மக் கட்கே கொடுப்பது என்பது பெற்றாம். அவ்விதம் கொடுக்கு மிடத்துக் கொடுக்க இயன்றான் மன மகிழ்ச்சியோடு கொடுத்தல் வேண்டும் என்பதும் பெற்றோம். தவமென்பது ஐம்புலன் அடக்கி, உண்டி சுருக்கி, விரதங்களில் நிலைத்தல் என்பதும் அறிந்தோம். ஈதல்லாது, தீய வழியில் வந்த பொருள்களைத் தீநெறியின்கண் செல்வார்க்குக்கொடுப்பது தானமாகாதென்றும், மனத்தை அடக் காது புலன்களைச் செல்வழி விட்டு, உண்டி நிறைப்பி, கூடா வொழுக்கம் பூண்டு நிற்பது தவமாகா தென்றும் இதனால் அறிந் தோம் என்னலும், மாணாக்கர் ஆசிரியரை நோக்கி, "மேற்கூறிய ஒன்பது திருக்குறள்களால் உலகமும், அவ்வுலகத்து உயிர்களும் மழையில்லாவிடின் இயலாவென அறிந்தோம். இனி, அம்மழை யில்லாவிடின் வறியார்க்கு மாத்திரமோ? அல்லது மேலாய தகுதி

யுடைய பலர்க்கோ? யாருக்கு உலகியலமையாது? என்பதைச் சிறிது.விளக்கல் வேண்டும்" என்று கேட்டலும், "இது விளக்கும் பொருட்டே பத்தாவது திருக்குறள் எழுந்தது" என்றார் ஆசிரியர்.

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(பரி.) இ-ள். யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின்= எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரை யின்றி உலகியல் அமையாதாயின்,— ஒழுக்கு வான் இன்று அமையாது=அந்நீர் இடையறு தொழுகும் ஒழுக்கும் வானையின்றி யமையாது. எ-று.

பொருளின்பங்களை உலகியலென்றார், அவை இம்மைக்கண்ணவாக லின். இடையறு தொழுகுதல்=எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின்றமையாதுலகென்பது எல்லாரானுந் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்றமையாமை தெளியப்படு மென்பார், 'நீரின்றமையா துலகெனின்' என்றார். இதனை 'நீரை யின்றியமையாது உலகாயின், எத் திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாது' என உரைப்பாரு முளர். இவை மூன்று பாட்டானும் அறம் பொருளின்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது. (ய)

விளக்கம்:—இவ்விதம் அறம், பொருள், இன்பங்கள் நடப்ப தற்கு மழை யொன்றே காரண மென்பதும், அது கடவுள் வாழ்த் துக்குப் பிறகு எந்நூலாசிரியரும் கூறுது இருத்தல் முடியாது என்பதும் அறிய, இளங்கோவடிகள், தாம் கூறிய சிலப் பதிகாரத் தில் திங்களையும் ஞாயிற்றையும் துதித்த பிறகு, மழையைத் துதிப் பான் கருதி,

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி*யுலகிற் கவனளி†போல்
மேனின்று தான் சுரத்தலான்" என்று கூறினர்.

அன்றியும், திருத்தக்கதேவர் செய்த சீவகசிந்தாமணியுள்ளும் மழையினைப் பின்வருமாறு வருணித்துள்ளார்.

"இலங்கல் ஆழியினன் களிற்று ஈட்டம்போல்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை

* நாமநீர்வேலி=அச்சத்தைத் தருகின்ற சமூத்திரம்.
† அவனளி=அவனுடைய கிருபை.

பொலங்கொள் கொன்றையினன் சடைபோல் மின்னி
விலங்கல்* சேர்ந்து விண்ணேறி விட்டார்த்தவே."

"தேனிரைத்து உயர் மொய்வரைச் சென்னியின்
மேனிரைத்து விசும்புற வெள்ளி வெண்
கோனிரைத்தன போல் கொழுந்தாரைகள்
வானிரைத்து மணந்து சொரிந்தவே."

ஆதலால், நீரில்லாமல் உலகியல் நடத்தலும், உயிர்கள் பிழைத்தலு மில்லை என்பது அறிந்தோம். அன்றியும், கம்பர், தமது இராமாயணத்தில் திருவவதாரப் படலத்துள், ரோமபதன் என்பான் தன்னாட்டில் நெடுங்காலம் மழை பெய்யாது உயிர்கள் வருந்தியதை நோக்கித் தானங்களைச் செய்தும் மழை பெய்யாதிருக்கவும், பின்னர் கலைக்கோட்டு முனிவர் வருவராயின் மழை பெய்யும் என்று நூல் வல்லவர் கூறலும், அம்முனிவரன் மக்களையெல்லாம் மிருகங்களாக மதித்தவனாதலால் அத்தகையானை அழைத்துவருவது எவ்விதம் என்று அரசன் மயங்கிப் பின்னர் இரண்டு பெண்களைக் கொண்டு அம்முனிவரனை வஞ்சகமாகத் தன் நாட்டிற்குக் கொண்டுவந்தானென்றும், உடனே மழை பெய்து உலகம் செழித்தது என்றும் கூறும் பின்வரும் செய்யுட்களால் அறியலாம்.

"ஓத நெடுங் கடலாடை யுலகினில்வாழ்
மனிதர் விலங்கெனவே யுன்னும்
கோதில்குணத் தருந்தவனைக் கொணரும்வகை
யாவதெனக் குணிக்கும்வேலை
சோதிநுதற் கருநெடுங்கண் துவர் இதழ்வாய்த்
தாளநகைத் துணைமென்கொங்கை
மாதரெழுந் தியாமேகி யருந்தவனைக்
கொணர்து மென வணக்கஞ் செய்தார்."

"வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகிவான்மிசை
சளசள வெனமழைத் தாரைகான்றன
குளனொடு நதிகள் தம் குறைகள் தீரவே."

இனி, அம்மழை பெய்தலால் நடத்தக் கூடிய அறம், பொருள், இன்பங்கள் இன்னவென்று உலகத்திலுள்ளவர்களுக்கு வகுத்துக் காட்ட வல்லவர்கள் உண்மைத் துறவிகளாதலால், அத்துறவிகளின் பெருமையை எடுத்துப் பேசுவோம்.

---

* விலங்கல் = மலை.

## 3. அதிகாரம்.

## நீத்தார் பெருமை

(பரி.) அஃதாவது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராக லின், இது வான் சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—நீத்தார் பெருமையாவது அகப்பற்று புறப்பற்று கிய, உடலில் உள்ள பற்றும், பொருளில் உள்ளபற்றும் அற்று நிற்கின்ற முற்றத்துறந்த முனிவரது பெருமையாம். அவர் சத்துவ குணமுடையாராதலால் உலகிற்கு உள்ளவற்றை உள்ளவிதமே மயங்காது உரைப்பவராவர். ஆகையால், அவ்வித தகுதியுடையார் பெருமை வான் சிறப்பிற்குப்பின் வைக்கப்பட்டது.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(பரி.) இ-ள். ஒழுக்கத்து நீத்தார் பெருமை=தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை,—விழுப்பத்து வேண்டும் பனு வற்றுணிவு=விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு. எ-று.

தமக்கு உரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது:— தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவா தொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமையின்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அவை தோன்ற வீட்டின்கணாசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிக ளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்து விடுதலெனக் கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறிய வதனான், ஒன்றை யொன்றொவ்வாத சமய நூல்களெல்லாவற்றிற்கும்

இஃது ஒத்த துணிவென்பது பெற்றும். செய்தாரது துணிவு பனுவன் மேலேற்றப்பட்டது. (க)

விளக்கம்:—நீத்தார் பெருமையை அறிவிக்க வந்த இத் திருக்குறளில் உலகத்து மக்கள் எய்த வேண்டிய உயர்ந்த பொருள் கள் பலவுள்ளும் இப்பெருமையே உயர்ந்த பொருள் என்று தாம் கூறுவதுபோல் தெய்வப்புலவர் கூறாது பண்டைய நூல்வல்லவரே கூறுகின்றாரென்றும், அது எல்லாச் சமய நூல்களினும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் கூறினர். இவ்விதம் 'பனுவல் துணிபு' என்று கூறியது, நூலியற்றிய பல சமயத்தவர் கொள்கை யென்று அறிவுறுத்துதற்கே. ஆகையால், எச்சமயத்தோரும் துறவறத்தை மேலாகக் கொண்டு ஒழுருகின்றனர் என்பதும் பெற்றேம். இவ்வித ஒப்பு உயர்வு அற்ற துறவறத்தினையும், அதற்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தாலல்லது அது பெருமைப்படாது என்பதும் அறிந்தோம். இவ்வொழுக்கம் ஈதெனப் பரிமேலழகர், தமது விரிவுரையுள் மிகுதியும் விரித் துரைத்தாராதலால் அதனை மறுபடியும் ஈண்டுக் கூறாது, வரு கின்ற விடங்கள் தோறும் கூறுவேன் என்னனும், அது கேட்ட மாணக்கர், "அவ்வித பெருமையுடைய துறந்தார் இலக்கணம யாதென்றும், அவர் பெருமை எவ்வித அளவினையுடைய தென் றும் அறிய மிகுதியும் ஆசைப்படுகின்றேம்" என்றனர். ஆசிரி யர் இரண்டாவது திருக்குறளைத் தொடங்கினர்.

## 22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(பரி.) இ-ள். துறந்தார் பெருமை துணைக் கூறின்=இருவகைப் பற் றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணுற் கூறி யறியலுறின், அளவு படாமையான்—வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று=இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணைய ரென அறியலுற்றற்போலும். எ-று.

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் கொண் டெனத் திரிந்து நின்றது. (உ)

விளக்கம்:—துறந்தாராவார் எவரென நாம் அறிய வேண் டுமாயின், தாமல்லாத உடம்பினை யாமென்றும், தமக்கு உரியன

வல்லாப் பொருள்களை எம்முடைய வென்றும் மயக்கத்தால் மயங்கி நின்று உணரும் மற்றைய மக்களைப் போலாது, பொருள்களெல்லாம் நிலையா வென்னும் அறிவுடையாராய், அப்பொருள்களில் ஆசைவிட்டவர் எவரோ அவரே துறந்தோராவர். அவர் பெருமை எண்ணுக் கடங்காத தென்றும், அதற்கு உவமை கூறவேண்டுமானால் உலகந் தோன்றிய காலம் முதல் இதுவரையும் இவ்வுலகத்தில் பிறந்து இறந்தவர்களை ஒன்று, இரண்டென வெண்ணி இவ்வளவென்று கணக்கிட்டறிய ஆசையுற்றால், அது எவ்விதம் யார்க்கும் முடியாததோ, அதுபோல் இதுவும் முடியாதென்பதாம். ஆதலால், துறந்தார் பெருமையே ஒப்பு உயர்வு அற்றது என்று அறிந்தோம். இனி, இவ்விதம் பொருள்களில் ஆசையற்று நிற்கும் இப்பெருமை யொன்றனையே விரும்பித் துறக்கின்றனரோ? அன்றி, அவர் இன்னும் ஏது கருதித் துறக்கின்றனர்? என்னும் வினாவிற்கு விடை தருவதுபோல் நமது தெய்வப்புலவர் மூன்றாவது திருக்குறளைத் திருவருள் செய்கின்றனர் என்று ஆசிரியர் கூறினர்.

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(பரி.) இ-ள். இருமை வகை தெரிந்து=பிறப்பு வீடென்னும் இரண்டனது துன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து—ஈண்டு அறம் பூண்டார் பெருமை=அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே—உலகு பிறங்கிற்று=உலகின்கணுயர்ந்தது. எ-று.

"தெரி மாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல இருமை யென்றது ஈண்டெண்ணின்கணின்றது. பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் றொக்கது; இதனால் திகிரியுருட்டி உலக முழுதாண்ட வரசர் முதலாயினோர் பெருமை பிரிக்கப்பட்டது. (இவை மூன்று பாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கதென்பது கூறப்பட்டது.)

விளக்கம்:—இத்திருக்குறள், உலக முழுவதும் செங்கோல் செலுத்தி அரசாண்ட மன்னர் மன்னராயினோர் பெருமையினும், பிறப்பினது துன்பத்தினையும், வீட்டினது இன்பத்தினையும் உணர்ந்து, பிறப்பு வாராவண்ணம் பயன் தராத முயற்சிகளை யெல்லாங் கைவிட்டு வீட்டினையடையப்பயன்தரு முயற்சிகளைச்செய்யும் துறந்தா

ரது பெருமையே அழியாப்பெருமையென்று கூறியதாயிற்று என்றார் ஆசிரியர். "அவ்விதம் வீட்டினை யடைதற்கு நீத்தாராகிய முனிவர்செய்யும் முயற்சி எதுவென்றறிய ஆவலுறுகின்றோம்" என்று மாணாக்கர் கேட்டலும், ஆசிரியர் நான்காவது திருக்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

## 24. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

(பரி.) இ-ள். உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் =திண்மை யென்னுந் தோட்டியால்* பொறிகளாகிய யானையைந்தனையும் தத்தம் புலன்கண்மேற் செல்லாமற்காப்பான்—வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து=எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம். எ-று.

இஃதேகதேசவுருவகம். திண்மை ஈண்டறிவின் மேற்று. அந்நிலத்திற் சென்று முளைத்தலின், வித்தென்றார். ஈண்டுப் பிறந்திறந்துவரும் மகனல்லனென்பதாம். (௪)

விளக்கம்:—இத்திருக்குறளால் எவனொருவன் தன் புலன்களை அடக்கும் உபாயம் என்னும் மனவுறுதியைக் கொண்டானோ அவனே வீட்டை அடையவல்லவனென்றும், இதனினும் மேற்பட்ட உபாயம் ஒன்று உலகத்து இல்லை யென்றும் முடிந்ததாயிற்று. இதையே நமது பட்டினத்தடிகள், தமது திருவேகம்பமாலையினுள்

"அறந்தான் இயற்றும் அவனிலுங் கோடி அதிகம்இல்லந்
துறந்தான் அவனிற் சதகோடி உள்ளத்துறவுடையோன்
மறந்தான் அறக்கற்று அறிவோடிருந்து இருவாதனையற்று
இறந்தான் பெருமையை யென் சொல்லுவேன்கச்சியேகம்பனே"

என்று திருவருள் செய்தனர். இதைக் கேட்ட மாணாக்கர், "ஈதென்னை? புலன்களை அடக்கின ஒருவன்தானோ வீட்டை அடையவல்லவன்? அன்றியும், அப்புலன்களை அடக்குவது அத்துணை வலிமையுடையதோ? அதையாவரும் அடக்குதல் கூடாதோ?"

* தோட்டி=அங்குசம் (யானைப்பாகனிடத்திருப்பது.)

என்று ஐயுறலும், ஆசிரியர் "நீங்களேன் ஐயுறுகின்றீர்?" என்று ஐந்தாவது திருக்குறளை எடுத்தோதுவாராயினர்.

25. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(பரி.) இ-ள். ஐந்து அவித்தான் ஆற்றல்=புலன்களிற் செல்கின்ற அவாவைந்தனையும் அடக்கினானது வலிக்கு—அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி=அகன்ற வானத்துள்ளாரிறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று. எ-று.

ஐந்துமென்னும் முற்றும்மையும், ஆற்றற்கென்னும் நான்கனுருபும் செய்யுள் விகாரத்தாற்றொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்திநின்று அவித்தவனதாற்றல் உணர்த்தினானாகலின், 'இந்திரனே சாலுங்கரி' யென்றார். (ரு)

விளக்கம்:—நூறு யாகங்களைச் செய்து 'சதமகன்' என்னும் பேருடையனாய், இந்திர பட்டத்தை யடைந்து, வச்சிரப்படை யென்னும் ஆயுதம் ஒன்றினையுந்தாங்கியவலிமை யுடையவனாக இந்திரன் இருந்தும், ஓர் துணையுமற்று காயிலைதின்று கானிலுறைந்த கௌதமனாகிய ஓர் முனிவனிட்ட சாபத்தால் ஓர் குறிக்கு ஆயிரங் குறிகளைப் பெற்று, அதனால் ஆயிரங் கண்ணனென்னும் பெயரை அழியாப் பெயராக அடைந்து நிற்கின்றானென்று நூல்கள் உணர்த்துகின்றன. ஆதலால், ஐந்து புலன்களிற் செல்கின்ற ஐந்து ஆசையினையும் அறுத்தார் வலிமையே மிக்கதோர் வலிமையாயிற்றென்றும், அதுவே வீட்டை யடைதற்கு உபாயமென்றும் அறிந்தோம். இதனையே பட்டினத்தடிகளும்

"கடலான காமத்தே காழ்வர் துன்பம்
அடலா முபாய மறியார்—உடலாம்
முழுமலத்தை யோர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழாதார்."

என்றருள் செய்திருக்கின்றனர். அன்றியும்,

"பொய்ப்புலன்களைந்து நோய் புல்லியர் பாலன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பின்
சுழற்றுங் கொல்கற்றூணைச் சூறுவளிபோய்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு" என்று நன்னெறிச் செய்யு

ளும் நிலைநாட்டும். ஆயின், நவீன நூலாராய்ச்சியுடையோர், 'பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்எழுதிய இவ்வுரையினுள் காட்டப்படும் கௌதம சரித்திரம் அத்துணைப் பொருத்தமன்று. ஏனெனில், கௌதமன் மனைவியோடு காட்டிலிருந்த மூன்றாவது ஆச்சிரமியாகிய வானப்பிரத்தனாதலால் அவனை ஐந்தவித்தான் என்பது ஆசங்கைக் கிடமாகின்றது. ஓர்கால்இத்திருக்குறளுக்கு நகுடனைச்சபித்த அகத்தியன் கதையே கூறின் பொருந்தும்' என்கின்றனர். அவ்வகத்திய னும் உலோபாமுத்திரை யென்னும்மனைவியோடிருந்தனன் என்று புராணகதைகள் புகல்கின்றன. அன்றியும்,இந்நகுடனது கதையைப் பெரியாரைப் பிழையாமை யென்னும் 90 வது அதிகாரத்தினுள் ஒன்பதாவது திருக்குறளாகிய,

"ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்" என்னும் திருக்குறளிற்கு

உதாரணமாக எடுத்திருப்பதால், நீத்தார் பெருமையினுள் வந்ததாகிய இவ்வைந்தவித்தான் என்பதற்குக் கௌதமனை இலக் காக்கினார் என்பது பொருந்து மென்று எண்ணுகின்றேன் என்று ஆசிரியர் கூறுதலும், மாணாக்கர், "இதுகாறும்நாங்கள் கேட்ட நீத் தார் பெருமையினால் அவரினும் வலியர் யாருமில்லை என்பதை அறிந்தோம். ஆயின், அவரினும் பெரியோர் யாவரேனும் உளரோ என்றறிய வாசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் ஆறாவது திருக்குறளை எடுத்தோதினர்.

## 26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
## செயற்கரிய செய்கலா தார்.

(பரி.) இ-ள். செயற்கரிய செய்வார் பெரியர்=ஒத்த பிறப்பினராய மக் களுள் செய்தற் கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரி யர்:—செயற்கரிய செய்கலாதார் சிறியர்=அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர். எ—று.

செயற்கெளியவாவன:— மனம் வேண்டியவாறே அதனைப்பொறிவழி களால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன:—இயமம் நியமம் முதலாய யெண்வகையோக வுறுப் புக்கள். நீரிற்பலகான் மூழ்கல் * முதலாய நாலிருவழக்கிற்றாபதபக்கமென்

* வெண்பாமாலை—வாகைப்படலம்—14.

பாருமுளர். அவைநியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமையறிக. (சு)

விளக்கம்:—இத்திருக்குறளால் புலன்களை அவை செல்லும் வழியே விடாது நின்றவர் பெரியரென்றும், அது செய்யாது சென்ற வழியே விட்டவர் சிறியரென்றும்அறிந்தோம்.இதனைநம் பட்டினத்தடிகள், தமது "திருவிடைமருதூர் மும்மணிக்கோவை" யினுள்,

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ
அதனால்,
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வை செய்து
அன்பெனும் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்தாங்கு ஐயமில்
பத்தித்தனி வித்திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர் நின்று
தடுக்குநர்க்கு அடங்காது இடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக்கஞ்சி உட்சென்று
சாந்த வேலிகோலி வாய்ந்த பின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட வருகாக்
காமக்குரோதக் களையறக்களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம் மயிர்ப்புளக முகிழ்த்திட்டு அம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடி மலர் மலர்ந்து
புண்ணிய
அஞ்செழுத்தருங்காய்த் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ணொரு மூன்றுந்
தோளிரு நான்குஞ் சுடர்முகம் ஐந்தும்
பவள நிறம் பெற்றுத் தவள நீறு பூசி
அறுசுவையதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்

சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்மனோர்கள் இனிதினிது அருந்திச்
செம்மாந்திருப்பச்சிலர் இதின் வாராது
மன மெனும் புனத்தை வறும் பாழாக்கிக்
காமக்காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
விச்சை வித்துதிர்த்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்இறை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப்பல்காய் தூக்கிப்பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பிற்கழியும் இயற்கையோர் உடைத்தே"

என்று பெரியார் இவரென்றும், சிறியார்இவரென்றும் அழகுபெற அமைத்துள்ளனர். இவ்வினைக் குறளாசிரியப்பா மிகுதியும் சிறந்து நிற்றலின் இதனைச் சிறிது விளக்கிக் காட்டுவோம். அதாவது, புலன்களை யடக்குவது பெரியார் தன்மை யென்று திருக்குறளில் கூறியவண்ணம், பட்டினத்தடிகளும், ஒருவன் தான் செய்ய வேண்டிய முயற்சிகளானும் அடையக்கூடாத பேறுகள் இவ் வுலகத்துண்டோ? அவ்வித முயற்சிகளைச் செய்யாது காலத்தைப் போக்குவதால் உண்டாகாத துன்பங்கள் உண்டோ? ஆகையால், இதனையறிந்த மக்களில் எம்மனோர், மனமாகிய காட்டில் வஞ்சகம் என்னும் மரத்தினை வேரறும்படித் தோண்டிப் பிறகு நிலத்தினை முளை முளைத்தற்குரிய பதமாக்கி, அன்பு என்னும் பாத்தியினைக் கோலி, முதல் முதலாக அப்பாத்தியினுள் உண்மை யென்கின்ற எருவினை நிறையப் பெய்து, பிறகு அந்நிலத்தில் சிறிதுங் குற்றமில்லாத பத்தி யென்னும் ஒப்புயர்வற்ற விதையினை விதைத்துத் தினந்

தோறும் ஆசையென்கின்ற தெளிந்த நீரை அந்நிலத்திற் பாய்ச்சி, எதிரே நின்று உள்புகாவண்ணம் தடுப்போர்க்கும் சிறிதும் அடங்காது மிகத் துன்பத்தைச் செய்கின்ற புலன்களாகிய ஐந்து பட்டி மாடுகளுக்குப் பயந்து அப்புனத்துள் சென்று சாந்த மென்னும் வேலியிட்டு நிற்றலும், ஞானமாகிய பெரிய முளை யொன்று சிறிதுங் கெடாதுமுளைத்து அம்முளையினின்றும்அருளென்கின்ற பசிய தளிர்களுண்டாக, அத்தளிர்கள் கெடாவண்ணம் காமக்குரோத மென்கின்ற பூண்டுகளை வேருடன் பிடுங்கிப் போக்கிச் செம்மைப் படுத்துதலும் நன்முக வளர்ந்து, தேகத்திலுள்ள மயிர்க்கால்களாகியமுகிழ்கள் முகிழ்த்து, அம்மென்னும் ஆனந்த ஒலியுடைய கண்ணீராகிய அரும்புவிட்டு, மணமுள்ள மலர்பூத்து, புண்ணிய உருவினைக்கொண்ட பஞ்சாக்கரமாகிய அரிய காய் உண்டாகி, விஷங் கலந்த கண்டமும், மூன்று கண்களும், எண் தோள்களும், ஐந்து திரு முகங்களும், பவளநிறத்தோடுகூடி வெண்மையாகிய விபூதியினைப் பூசிக் கைப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவையினும் மிக்க இனிமையுடையதாகிக் கண்ணால் காணினும், காதால் கேட்கினும், மனத்தால் நினைக்கினும் மிக மகிழ்ச்சியை யுண்டுபண்ணும் மிகவுயர்ந்த மருத மாணிக்க மென்னும் அரிய கனி பையப்பையப் பழுத்துக் கையின்கண் எளிதாகவருதலும், அக்கனியினை இன்புற உண்டு மகிழ்ந்து இருக்கின்றனர். இதை யறியாத சிலர், இவ்வுழைப்பாகிய முயற்சியைச் செய்யாது மனமாகிய புனத்தினைப் பயனற்ற பாழ் நிலமாக்கிக் காமமென்னுங் காடுமூடச்செய்து, தீமையே செய்யும் பஞ்சேந்திரியங்களாகிய வேடர்கள் தம்மைச்செல்லும் வழி செல்லவொட்டாது மறித்து இழுக்க, அதனால் தாம் விரும்பிய சிற்றின்பமாகிய கானல் நீர் கைக்கு எட்டாது ஓடச் சிறிதுங் கல்லாதவுணர்வு என்னும் மானனது அவ்வெட்டாத கானல்நீர் போன்ற காமத்தின் வழியேசென்று, ஆசையென்கின்ற விதையினையிட்டு, நான் என்கின்ற நச்சுமாமரத்தினை மிகுதியும் முளைக்கச்செய்து, அம்மரத்திற்குப் பொய்யென்கின்றபெருங்கிளைகளைஉண்டாக்கிப் பாவம் என்கின்ற பலதழைகளை விரித்துக்கொடுமையென்னும் அரும்புகளை அரும்பச் செய்து அவ்வரும்புகள்தோறும் தீமையென்னும் மலர்

மலர்த்தித் துன்பமென்கிற பலகாய்கள் நிறைத்து, இறத்தல் என்னும் கனிபழுக்கச் செய்வதால், தமக்கும் பிறர்க்கும் உதவாராய், இமை கொட்டு மளவில் இறந்துபடுகின்ற இயற்கைக்குணமுடையராயிருக்கின்றனர் என்பதாயிற்று. ஆதலால், நாம் உணர வேண்டுவது, மக்களில் ஒத்தபிறப்பினராயிருந்தும் மிக வரிய செயலாகிய புலன்களை அடக்கியவர் பெருமைக் கெல்லாங் காரணராகிய பெரியர் என்றும், காமக்கடலில் வீழ்ந்து அழிகின்ற மாக்கள் சிறுமைக் கெல்லாங் காரணராகிய சிறியர் என்றும் உணர்ந்தோம். ஆதலால், இத்திருக்குறள் யோகப் பயிற்சியை யுணர்த்திய தென்றனர். இதைச்செவியுற்றமாணாக்கர், "ஐய! தேவரீர் உணர்த்தியபடி மேல் மூன்று திருக்குறள்களால் துறந்தார் பெருமைக்கு ஏது ஐந்தவித்தலும், யோகப்பயிற்சியுமென்றுணர்ந்தோம். இனி, உலகோர் சில பெரியரைத் தத்துவஞானி என்கின்றனர். அவர் யாரென விளக்கல் வேண்டும்" என்றனர். ஆசிரியர் ஏழாவது திருக்குறளை இயம்பலாயினர்.

**27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

(பரி.) இ-ள். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை= சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமு மென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகளைந்தனது கூறுபாட்டையும்,—தெரிவான் கட்டே உலகு= ஆராய்வானறிவின்கண்ணதே உலகம். எ-று.

அவற்றின் கூறுபாடாவன:—பூதங்கட்கு முதலாகிய அவைதாமைந்தும், அவற்றின்கட்டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்களைந்தும் கன்மேந்திரியங்களைந்துமாக இருபதுமாம். வகைதெரிவான்கட்டென உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற்கருவியாகிய மான் அகங்காரமனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவ மிருபத்தைந்தனையுந் தெரிதலாவது:—மூலப்பகுதி ஒன்றிற்றோன்றியதன்மையிற்*பகுதியேயாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றியமானும், †அதன்கட்டோன்றிய

* தோன்றியதன்மை=தோன்றியது+அன்மை.

† மான்=புத்தி. (மகத்தத்துவம்).

அகங்காரமும், அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகியவழும், தத் தமக்கு முதலாயதனைநோக்க விகுதியாதலும் தங்கட்டோன்று வனவற்றை நோக்கப் பகுதியாதலுமுடைய வெனவும், அவற்றின்கட்டோன்றியமன மும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும், பூதங்களுமாகிய பதி னறும் தங்கட்டோன்றுவனவின்மையின் விகுதியே யாவதல்லது பகுதி யாகாவெனவும், புருடன்தானென்றிற்றேன்றுமையானுந்தங்கட்டோன்று வன வின்மையானும் இரண்டுமல்லனெனவும், சாங்கியநூலுளோதிய வாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்து மல்லது உலகெனப் பிறி தொன்றில்லை யென உலகின துண்மையறிதலின், அவனறிவின் கண்ண தாயிற்று. (இவை நான்குபாட்டானும் பெருமைக்கேது ஐந்தவித்தலும், யோகப் பயிற்சியும், தத்துவவுணர்வு மென்பது கூறப்பட்டது.) (எ)

விளக்கம்:-இத்திருக்குறளால் நீங்கள் வினவியதத்துவ ஞானம் முற்றுமறிதல் கூடும். அதாவது, உலகமானது ஐம்பெரும் பூதங் களால் அமைக்கப்பட்டுள்ளதென்றும், அவ்வைம்பெரும் பூதங்கள் தோறும் இறைவன் நிறைந்து உள்ளான் என்றும், அப்பூதங்களின் தன்மையை உணர்ந்தோர் உலகியலை அறிவதுடன் உலகிற்குத் தலை வணங்கிய முழுமுதலையுமுணர்தல் கூடும் என்றும் அறிவிப்பதாயிற்று. இவ்விதம் பூதங்கள் தோறும் அவன் தன்மையுள்ளது என்பதை அறிய நம் மணிவாசகப் பெருந்தகையார், தமது திருவாசகத் திரு வண்டப் பகுதியினுள்,

“ வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம்புரையுங் கிழவோ னாடொறும்
அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல் திகழ்
நீரில் இன் சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மைவைத்தோன் என்றென்று
எனைப்பலகோடி யெனைப் பலபிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன்.....

என்று எடுத்துக் காட்டினர்.

இனி, இத்தத்துவஞானமானது பஞ்ச பூதங்களுக்கும் முதலாகிய பஞ்சதன்மாத்திரைகளை யறிதலால் உணர்தல் கூடும் என்பதும் பெற்றும்என்றனர். இதுகேட்டமாணுக்கர், "இவ்விதபெருமையினை யுடையார் பெருமையை அறிவதற்கு ஏதேனும் உலகத்து ஆகம அளவைகள் உண்டோ?" என்று வினவினர். ஆசிரியர் எட்டாவது திருக்குறளினை இயம்பலாயினர்.

## 28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.

(பரி.) இ-ள். நிறை மொழி மாந்தர் பெருமை = நிறைந்த மொழியினை யுடைய துறந்தாரது பெருமையை,—நிலத்து மறை மொழி காட்டிவிடும் = நில உலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண் கூடாகக் காட்டும், எ-று.

நிறை மொழி யென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ் வப்பயன்களைப் பயந்தே விடும் மொழி. காட்டுதல் பயனுணர்த்துதல்.

விளக்கம்:—மக்காள்! நீங்கள் அறிய விரும்பிய ஆகம அளவை யொன்றே நிறைந்த மொழியை யுடையாராய அப்பெரியோரது பெருமையை யுணர்த்துவது? அவர்கள் மந்திரங்களாகச் சொல்லிய சொற்களில் உண்டாகும் பெரியதோர் பயனைக் காட்சியளவையாகவே உங்களுக்குக் காட்டுதல் கூடும் என்றனர். மாணுக்கர், "பெரியோய்! யாவர் கூறும் சொற்களும் ஓசையளவாக வொத்திருக்கவும், இவரது சொல்லை நிறைமொழி என்றும், மனத்தில் நினைப்பதைக் கைகூடச் செய்யும் மந்திரங்களாகிய மறைமொழி யென்றும் எடுத்துரைத்தீர். இதை விளக்கல் வேண்டும்" என்று கேட்டனர். ஆசிரியர், "நிறைமொழி என்றது மேற் கூறிய பெருமையையுடைய முனிவனொருவன், தனக்கு உற்றாரிடத்து அருள் மிகுதியால் ஏதேனும் கூறுவானுயின், அவ்வுற்றாருக்கு அவ்வுண்மைப்பயன் உடனே உண்டாய் விடுவதும், தனக்குத் தீங்கு செய்தாரிடத்தீ உண்டாகுங் கோபத்தால் ஏதேனுங் கோபித்துக் கூறுவானுயின், அதற்கு உரிய பயன் அக்கோபிக்கப்பட்டவர் அடைந்து விடுவதும் ஆம்; அவ்வித வன்மையோடு கூடிய முனிவனல்லாத

ஏனைய மக்கள் மொழிக்கு அவ்வித செயலில்லாமையால் அது நிறை மொழியாகாது'' என்று கூறினர். இனி, மறைமொழியென்பது ஒருவன் ஏதேனும் ஓர் பயனை விரும்பி ஒரு சொல்லினைச் சொல்லுதலும், சொல்லிய அச்சொல் விரும்பிய அப்பயனையே தருவதுமாம். அன்றியும், அப்பயன் அச்சொல்லுள் மறைந்து கிடப்பதால், அதனை மறைமொழி யென்றனர். இதனை, இராமாயணத்தில் பாலகாண்டம் தாடகை வதைப்படலத்துள், கம்பர் கூறிய பின்வரும் செய்யுள்களே அறிவிக்கும்:—

“ தீதுறும் அவுணர்கள் தீமை தீர்தர
மோதுறு கடலெலாம் ஒருகை மொண்டிடு
மாதவன் உறைவிடம் அதனின் வந்துநீள்
பாதவம் அனைத்தையும் பறித்து வீசினான்.''

“ விழைவுறு மாதவம் வெஃகினோர்விரும்பு
உழைகலை இரலையை உயிருண்டு ஓங்கிய
வழையொடும் மரனெலா மடிப்ப மாதவன்
தழலெழ விழித்தனன் சாம்பராயினான்.''

“ இடியொடு மடங்கலும் வளியும் ஏங்கிடக்
கடிகெட அமரர்கள் கதிரும் உட்குறத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப அண்டமும்
வெடிபட அதிர்த்தெதிர் விளித்து மண்டவே.''

“ தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி யொழுகவுங்கரித்து
அழிவன செய்தலால் அரக்கராகியே
இழிகென உரைத்தனன் அசனி யெஞ்சவே.''

அதாவது, இயக்கர் குலத்துச் சுவேதுவின் மைந்தராய் வந்து தோன்றியவர், தங்குலத்தியற்கையை விட்டு அரக்கர் செயலினை யேற்கொண்டு, கடலெலா மொருகையால் உண்டவனாகிய அகத்தியன் உறைவிடம் சென்று, அங்குள்ள மரங்களை யெல்லாம் ஒடித்து உயிர்களை யெல்லாம் போக்கிய காலத்து, அக்கொடுஞ் செயல் கண்ட அகத்தியன், கோபக் குறியுடன் விழித்தவுடன் சுவாகு

முதலியவர்கள் சாம்பராய்ப் போயினர் என்பதாம். இதனால், முற்றத்துறந்த முனிவர் நிறைமொழி மாந்தர் என்பதும், அவர்கள் ஓதிய மந்திரம் மனத்தில் நினைத்ததைக் கைகூடச் செய்வது என்பதும் கண்டோம். அன்றியும், நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் ஐந்தெழுத்தினையும் எட்டெழுத்தினையு மோதிச் செய்த அற்புதங்களும் நிறைமொழியினையும் மறைமொழியினையும் விளக்குவதாகும்" என்று ஆசிரியர் கூறுதலும், மாணாக்கர், "முற்றத் துறந்த முழு முனிவர்க்கும் வெகுளி யென்ப தொன்றுண்டோ?" என்று ஐயுற்றனர். ஆசிரியர் ஒன்பதாவது திருக்குறளை அதற்கு விடையாக எடுத்தோதினர்.

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(பரி.) இ-ள். குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி=துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின் கணின்ற முனிவரது வெகுளி,—கணமேயும் காத்தல் அரிது=தானுள்ள வளவு கணமே யாயினும், வெகுளப் பட்டாராற்றடுத்தல் அரிது. எ-று.

சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றாக வுருவகஞ் செய்தார். குணம் சாதி யொருமை. அநாதியாய் வருகின்றவாறுபற்றி ஒரோவழி வெகுளி தோன்றிய பொழுதே யதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் கணமேயு மென்றும், நிறைமொழி மாந்தராகலின் காத்தலரி தென்றுங் கூறினார். (இவையிரண்டு பாட்டானும் அவராணைகூறப்பட்டது.)

விளக்கம்:—ஐயுற்ற மாணவரை நோக்கி மேற்கூறிய திருக்குறளை யெடுத்துக்காட்டி ஊழ்வலியால் முனிவர்தம் வெகுளிக்கு இலக்காக நின்றவர்மீது அம்முனிவர்கட்கும் வெகுளி ஒரு காலத்தே தோன்றுவதாகும். அவ்விதம் தோன்றினும் துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் நற்குணங்களாகிய குன்றுகளின் மீது ஏறி நின்றவராதலால் தோன்றிய வெகுளியை மெய்யுணர்வான் உணர்ந்து, தமக்கு வெகுளிதோன்றும்படி செய்த அவ்வுயிர்கள் செய்தபிழைக்குத் தாம் வருந்தாது, அவ்வுயிர்கள் இனி நிரயத் துன்பத்தை அனுபவிக்குமே என்று பரிவதும் அவாது கடனேயாகும்.

இதை,

"தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றி மற்று
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்." என்னும் ஆன்றோர் மொழியாகிய நாலடியார் செய்யுளே நிலைநிறுத்தும் என்றனர். அதனைக் கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தமக்கு வெகுளியை யுண்டாக்கினோர் மாட்டும் பரிவது சான்றோராகிய முனிவரது கடமை யென்றறிந்தோமாதலால், அப்பெரியோர் எல்லா உயிர்களிடத்தும் நிறைந்த அன்பினையடைந்த பெரியோராயிருத்தல் வேண்டும் போலும்?" என்னலும், ஆசிரியர் பத்தாவது திருக்குறளைப் பகர்வாராயினர்.

30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(பரி.) இ-ள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் = எல்லா உயிர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், — அந்தணர் என்போர் அறவோர் = அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர். எ-று.

பூணுதல் = விரதமாகக் கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத்தினை யுடையாரென ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து. (அவ்வாருணையுடையராயினும் உயிர்கண் மாட்டருளுடையரென்பது இதனாற் கூறப்பட்டது) (ய)

விளக்கம்:—இத்திருக்குறளால் அந்தணர் என்னும் பெயர் துறவறத்தில் நின்ற பெரியோர்க்கேயன்றி ஏனையோர்க்குச் செல்லாது. ஏனெனின், எவ்வுயிரையும் தம்முயிராகப் பார்க்கும் அருளுடையராதலால் அவரே அந்தணரெனப் படுவர் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் துறவிகள் தாம் அந்தணர்; ஏனையோர்க்கு அப்பெயர் பொருந்தாது என்றறிந்தோம். ஆயின், உலகத்து மக்கட்கு வகுத்த சாதிகளில் முதல்வருணத்தோரென்பார் அந்தணரென்று கூறுவது என்? அவர்கள் ஏனைய வருணத்தார் போன்றே உண்பனவுண்டு, உடுப்பனவுடுத்து, பூசுவன பூசி,

துய்ப்பனவாய இன்பம் துய்த்து நின்றும், அவரை எதற்கு அந்தணர் என்று அழைத்தல் வேண்டும்? இதனைச் சிறிது விளக்கல் வேண்டும்" என்று ஆசிரியரை இரந்து கேட்டலும், ஆசிரியர், "மக்காள்! ஈதோர் வியக்கத்தக்க செயலாகக்காணப்படுகிறது. இச் சாதிகுலங்களையெல்லாம் பண்டைக்காலத்து நூலாசிரியர்கள் அவரவர்தொழிலுக்கேற்பவே வகுத்து இருந்தனர். அன்றியும், நிலத்தில் நிகழும் செயலுக்கேற்பவும் சாதிகுலங்களமைக்கப்பட்டன. இதனை

> "காடாகும் முல்லை கழிநெய்தலாகும் கல்லாங்குறிஞ்சி
> நாடாம் மருதம் நடலைவெம்பாலை இந்நாட்டில் தெய்வம்
> கோடார் கரன் வருணன்இந்திரன் குகன் மால் கூறுதுர்க்கை
> மாடாயர் மீன் புல்லர் குன்றவர் கானவர் மள்ளருமே."

என்னும் செய்யுளே உங்களுக்கு விளக்கிக் காட்டும். நம்முடைய மூதாதையராகிய அறிஞர் நிலங்களை ஐந்தாகப் பங்கிட்டு ஐந்திணையென்றும், பாலையொழிந்த நிலங்களை நால் நில மென்றும் கொண்டு, கடலையுங் கடலடுத்த பூமியையும் நெய்தலென வகுத்தும், ஊரையும் ஊரையடுத்த பூமியையும் மருதமென வகுத்தும், காட்டையும் காட்டையடுத்த பூமியையும் முல்லையென வகுத்தும், மலையையும் மலையையடுத்தபூமியையும் குறிஞ்சியென வகுத்தும், மணல்வெளியாகிய வனத்தினைப் பாலையென்று கூறியும் நின்றனர். அன்றியும், இக்கடலடுத்த பூமியில் வசித்தார் மீன் பிடிப்பதைத் தம் தொழிலாகக்கொண்டு நின்றனராதலால் அவர்கள் வலைஞர் வலைச்சியர் என்றழைக்கப்பட்டனர். மருதநிலத்துள்ளார் உழவுத் தொழிலைச் செய்தமையால் உழவர் உழத்தியர் என்றழைக்கப்பட்டனர். முல்லைநிலத்து வசிப்போராய மக்கள் பசுமுதலியவை வளர்த்து உயிர்வாழ்ந்தார்களாதலால் அவர்கள் ஆயர் ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டதோடு, ஐந்துநிலங்களுக்கும் நடுநிலத்திருந்ததால் இடையர், நடுவர், பொதுவர் என்றழைக்கப்பட்டனர். மலை நாட்டு வசித்தாராகிய மக்கள் குறம்கூறிவந்ததாலும், குறிஞ்சிநிலவாசிகளாதலாலும் குறவர் குறத்தியர் என்றழைக்கப்பட்டனர். பின்னர், ஐந்தாவது பயன்படா வெறுநிலமாகிய பாலைநிலத்து வசித்தோர் ஆறு

அலைப்பதென்னும் வேட்டையாடுவதைத் தொழிலாகக்கொண்டு நின்றமையால் வேடுவர் வேடுவச்சியர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் தம் தம் நிலத்துக்கேற்பத் தெய்வங்களையும் வணங்கினர். அத்தெய்வங்களாவன முறையே வருணன், இந்திரன், திருமால், குகன், துர்க்கை என்பனவாகும். இவ்விதம் தொழிலால் ஜாதியும், நிலத்தால் தெய்வங்களும் அமையப்பெற்று நின்றதாகிய இவ்விந்திய நாட்டில் பல ஆயிரவருடங்களுக்குமுன் மனுமுதலியோரால் வருணங்கள் அமைக்கப்பட்டு அந்தணர் முதல் நான்கு பிரிவுகள் ஏற்பட்டு உள்ளன என்றும், அவைகளும் தொழிலுக்கேற்பவே அமைக்கப்பட்டனவென்றும், முதல் வருணத்தார் தம் தொழிலை அறுவிதப்படுத்தி அறுதொழிலோர் என்னும் பெயருடன் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் செயலை மேற்கொண்டிருந்தன ரென்றும், தாம் ஓதுதலாலும் பிறர்க்கு ஓதுவித்தலாலும் தாமே வேட்டலாலும் பிறரை வேட்பித்தலாலும் தம் கையிற் கொடுத்த பொருளைப் பிறர்க்குக் கொடுத்தலாலும் யாவரிடத்தும் வேறுபாடின்றிப் பொருளை ஏற்றுக் கொள்ளலாலும், (யார்க்கும் பொதுவாக நிற்றலால்) எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுகின்ற அந்தணர்க்குரிய அழகிய பெயரைத் தமக்கு அமைத்துக்கொண்டனர் என்றும் நூலாராய்ச்சியோர் கூறுகின்றனர். இச்சாதி குலம் என்னும் தடஞ்சுழியில் தடுமாறாது உண்மை உணர்தலிலேயே நாம் உணர்வைச் செலுத்த வேண்டும்" என்று முடித்தனர்.

பின்னர், மாணுக்கர் ஆசிரியரை நோக்கி, "எந்தாய்! நீவிர் நீத்தார் பெருமை ஆரம்பிக்குங் காலத்து அறமுதல் மூன்று பொருள்களையும் உலகிற்கு உள்ளவாறுணர்த்துகின்றவர் முற்றத்துறந்த முனிவர்தாம் என்று உரைத்தீர். அவர் அவ்வறமுதற் பொருள்களை எவ்வாறு உலகிற்கு உணர்த்தினர்? இதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் நான்காமதிகாரம் ஆரம்பித்தனர்.

## 4. அதிகாரம்.

# அறன் வலியுறுத்தல்.

அஃதாவது அம்முனிவரானுணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் வினைப் பொருளு மின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு—மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல"* என்றார் பிறரும்.

விளக்கம்:—நீங்கள் வினவிய வண்ணம் அம்முனிவர்கள் அறம் முதல் மூன்றாகச் சொல்லிய பொருள்கள் மூன்றினுள்ளும் முதலாகச் சொல்லப்பட்ட அறமானது இம்மை மறுமை வீடு ஆகிய மூன்றனையுந்தரும் தகுதியுடையது. ஆதலால், அதனை முதற்கட் கூறுவான் றொடங்கி அறன் வலியுறுத்தல் என்றாரம்பித்தனர்.

31. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(பரி.) இ-ள். சிறப்பு ஈனும்=வீடு பேற்றையுந் தரும்;—செல்வமும் ஈனும்=துறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்;—உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன்=ஆதலான் உயிர்கட்கு அறத்தின்மிக்க ஆக்கம் யாது? எ-று.

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு சிறப்பெனப்பட்டது. ஆக்கந்தருவதனை ஆக்கமென்றார். ஆக்கம்=மேன்மேலுயர்தல். ஈண்டுயிரென்றது மக்களுயிரை, சிறப்புஞ் செல்வமும் எய்துதற்குரியது அதுவே யாகலின் (இதனால் அறத்தின் மிக்கவுறுதி இல்லையென்பது கூறப்பட்டது) (க)

விளக்கம்:—இத்திருக்குறளில் ஆசிரியர் இம்மைமறுமைகளைத் தரும் செல்வத்தை முதலிற் கூறாது எல்லாவற்றிலும் மேற்பட்டதாகிய சிறப்பினையுடைய வீடுபேற்றினை முதலிற் கூறினர். அன்றியும், 'செல்வமும் ஈனும்' என்றதற்கு 'துறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்' என உரையாசிரியர் விதந்து கூறியதால், அதை விரும்புவார் எவரோ அவர்க்கே அச்செல்வம் வேண்டுமென்பதும்,

* புறநானூறு.—31.

அவற்றை விரும்பாதார்க்கு வீடுபேறு ஒன்றே அமையும் என்பதும் போந்ததாயிற்று. மேலும், உயிர்க்கு 'அறத்தினூங்கு ஆக்க மெவனோ?' வென்றமையால் பொருளும், இன்பமும் நிலையாதனவா யின. ஆகவே, அவை மக்களுயிர்க்கு நிலைக்கும் ஆக்கத்தினையுண்டு பண்ணுவென்றும், அறம் ஒன்றே அதனை மேல் மேல் வளரச்செய் யும் தகுதியுடையதென்றும் கூறியதாயிற்று என்றனர். இது கேட்ட மாணக்கர், "இம்மை மறுமைப் பயன்களைத்தருகின்ற செல் வத்தை ஒருவன் பெற்று அச்செல்வத்தைப் பிறர்க்கு ஈயாது தானே யனுபவிப்பானாயின் அதனால் குற்றம் யாது? அறத்தைச் செய்து மேன்மேல் ஆக்கம் வேண்டாத ஒருவன் தனக்குக் கிடைத்த பொருளையும், அப்பொருளாலாகிய இன்பத்தையும் துய்த்துத் தன்னளவில் இருத்தல் கூடாதோ? அறம் செய்யா விடில் என்னை?" என்னலும், ஆசிரியர் இரண்டாவது திருக்குறளைக் கூறலுற்றனர்.

32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(பரி.) இ-ள். அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை=ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை;—அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை=அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை. எ-று.

'அறத்தினூங்காக்கமுமில்லை' யென மேற்சொல்லியதனையே அனுவ தித்தார்,* அதனாற் கேடுவருதல் கூறுதற்பயனோக்கி (இதனால் அது செய்யா வழிக் கேடுவருதல் கூறப்பட்டது.) (உ)

விளக்கம்:—நீங்கள் வினவியபடியே ஆக்கம் வேண்டாதான் ஒருவன் அறத்தைச்செய்ய வேண்டுவதில்லை, கிடைத்தபொருளில் இன்புற்றிருத்தலேகூடும் என்று எண்ணின், நம்தெய்வப்புலவர் அற த்தைச் செய்வதால் எத்துணை மேலாகிய தகுதி ஒருவனுக்கு உண்

---

* அனுவதித்தல்=முன்னரே கூறிய ஒரு விஷயத்தை, பின்னரும் எடுத்தோதுதல். இது கூறியது கூறலென்னும் குற்றமாகாது. 'தன் குறி வழக்கம் மிக வெடுத்துரைத்தல்' என்பதில் அடங்கும். இங்கு முன்னர் கூறப்பட்டது என்பது 'அறத்தினூஉங்காக்கமெவனோ' என்பதே.

டாகின்றதோ அத்துணையளவே செய்யாமையினால் கேடு உண்டாகும் என்றுஎடுத்துக்காட்டுகின்றனர். ஆதலால்,அக்கேடு அடையா வண்ணமாயினும் அறத்தைச் செய்தே தீரவேண்டும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொருள் படைத்தானொருவன் அறத்தைச் செய்தல்கூடும். அது படையாத வறிஞன் ஒருவன் எவ்வாறு செய்தல் கூடும்?" என்னலும், ஆசிரியர் பின்வரும் திருக்குறளை இயம்புவாராயினர்.

33. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(பரி.) இ-ள். ஒல்லும் வகையான்=தத்தமக்கியலுந் திறத்தான்,— அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்=அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்துமிடத்தா னெல்லாஞ் செய்க. எ-று.

இயலுந்திறமாவது:—இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவுஞ் செய்தல். ஓவாமை=இடைவிடாமை. எய்து மிடமாவன:—மனம், வாக்கு, காயமென்பன. அவற்றாற் செய்யும் அறங்களாவன:-முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலு மெனவிவை. இதனான் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது. (௩)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் கொண்ட ஐயம் அறவே ஒழிந்திருத்தல் கூடும். முன்னர் உரைப்பாயிரத்தினுள் எடுத்துக்காட்டியபடி அறமானது இல்லறம், துறவறம் என இரண்டென்றறிந்தோம். இப்போது அறம் என்று முதலில் பொருள் படக்கூறி, அவ்வறத்தைச் செய்ய எண்ணிய ஒருவன் இல்லறத்தைச் செய்யவெண்ணின் தனக்கு நல்வழியில் கிடைத்த பொருளுக்குத்தக்க வளவாகவும், துறவறத்தைச் செய்ய எண்ணியவொருவன் தனது தேகவன்மைக்குத் தக்கவளவாகவும் செய்தல் வேண்டுமென்றும் கூறியதாக அறிந்தோம். ஆதலால், வறிஞனாக உள்ளான் ஒருவனும் தனக்குக்கிடைத்த பொருளளவால் இல்லறத்தைச் செய்தல் கூடுமென்பதும், துறவறம் மேற்கொண்டான் ஒருவனும் தன்யாக்கைக் கேற்ப விரதத்தை அனுட்டித்தல் கூடு மென்பதும் அறிந்தோம். ஆயின், இவ்வாறு செய்யுங்கால் அதனை ஒருநாட்செய்தும், மற்றோர் நாள்விட்டும் இருத்தல் கூடாதென்பது 'ஓவாதே

என்பதால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறு இரண்டு அறங்களில் ஒன்றைச் செய்பவன் மனம், வாக்கு, காயமாகிய மூன்றினிடத்தும்செய்யலாமென்றும்,அவ்வாறுசெய்யுங்கால்மனத்தாற் செய்வதுநல்லன சிந்தித்தலென்றும்,வாக்கால் செய்வது நல்லன சொல்வதென்றும், காயத்தால் செய்வது நல்லன செய்தல் என்றும் பெற்றோம். ஆதலால், வறியனாகிய ஒரு இல்லறத்தான் ஏனைய உயிர்களைக்காக்க வெண்ணி நல்லன சிந்தித்தலே போதுமென்றும், நல்வசனங்கள் கூறலே பொருந்துமென்றும், பொருள் கொடாவிடினும் காயத்தால் நற்செயல் செய்தலேபோது மென்று மறிந்தோம். அவ்விதமே துறவறத்தை மேற்கொண்டான் ஒருவன் இறைவனைச் சிந்தித்தல் ஒன்றே செய்தல் அவன் யாக்கைக்குக் கூடுமாயின் அது ஒன்றையே செய்தல் அமையுமென்றும், அதனுடன் வாக்கால் கூற அமையுமாயின் இரண்டனையுஞ் செய்யலாமென்றும், நற்செயல்களாகிய விரதங்களைச் செய்ய யாக்கை அமையுமாயின் அம் மூன்றினையுஞ் செய்தல் கூடுமென்பதும் அறிந்தோம் என்றனர். இதுகேட்ட மாணாக்கர், "இவ்வாறு அறத்தின்பயனைமூன்றினாலும் அடையலாம் என ஆசிரியர் புத்திபோதித்தமையை அறிந்தோம். இவ்விதம் எய்து மிடத்தானெல்லாம் செய்வதாயினும் இவற்றுள் மேன்மையுடையதை அறிவித்தல் வேண்டும்" எனக்கேட்டலும், ஆசிரியர் நான்காவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

34. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

(பரி.) இ-ள். மனத்துக்கண் மாசு இலன் ஆதல்=அவ்வாற்றான் அறஞ் செய்வான் தன் மனத்தின்கட்குற்றமுடையனல்லனாக;—அனைத்து அறன்= அவ்வளவே அறமாவது ;—பிற ஆகுல நீர=அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய. எ-று.

குற்றம்=தீயன சிந்தித்தல். பிறரறிதல் வேண்டிச் செய்கின்றன வாகலின், 'ஆகுலநீர'வென்றார்; மனத்து மாசுடையனாயவழி அதன்வழியவாகிய மொழிமெய்களாற் செய்வன பயனில வென்பதூஉம் பெறப்பட்டது. (௪)

விளக்கம்:—மேற்கூறியவழி மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினும் செய்வதற்கு இயலாவிடினும் முதலாவதாகிய மனத்தி

னிடத்தே மாத்திரம் தீயன சிந்தியாது நல்லனவே சிந்தித்தல் வேண்டும். அவ்வொன்றே அறத்தைச் செய்தது ஆகும். அவ்வொன்றினைச் செய்யாது ஏனைய விரண்டாகிய வாக்கால் நல்லன கூறலும், காயத்தால் நல்லன செய்தலும், பிறர் அறியவேண்டிச் செய்வன ஆதலால் ஆரவாரத்தன்மையே யாகுமன்றி அறனுகாது என்பது பெற்ரும். ஏனெனின், நெஞ்சம் காவுடையதாயின் எதன் பொருட்டு அறத்தைச் செய்ய விரும்பினுனே அப்பொருளாகிய இறைவனைக் காணுதற்கியலாது பயனை இழந்து விடுவான். இது கருதியே

" கரவாடும் * வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் † பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே."

என்று நம் திருநாவுக்கரையரும்,

" மெய்விடா நாவுள்ள மெய்யருளிருந்து நீ மெய்யான
மெய்யை யெல்லாம் மெய்யென உணர்த்தினை......"

என்று தாயுமானுரும் கூறினர் என்றனர்.

இதுகேட்ட மாணுக்கர், " இவ்விதம் கூறிய தருமங்களைச் செய்யுங்கால் அவற்றிற்கு இடையூருக வருங்குற்றங்கள் எவை? அவைகளை விளக்கிக் காட்டுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் பின்வருமாறு கூறுவாராயினர்.

35. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொ னன்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(பரி.) இ-ள். அழுக்காறு=பிறராக்கம் பொருமையும்,—அவா=புலன்கண்மேற் செல்கின்ற அவாவும்,—வெகுளி=அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும்,—இன்னுச்சொல்=அதுபற்றிவருங்கடுஞ்சொல்லுமாகிய—நான்கும் இழுக்கா இயன்றது அறம்=இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது. எ-று.

* கரவாடும்=வஞ்சகத்தைச் செய்கின்ற.
† விரவாடும்=கலக்கின்ற.

இதனான் இவற்றோடு விரவியியன்றது அறமெனப் படாதென்பதூ உங்கொள்க. (இவையிரண்டு பாட்டானும் அறத்தினதியல்பு கூறப்பட்டது.)

விளக்கம்:—ஒருவன் தான் செய்யும் அறத்தில் மேற்கூறியகுற்றங்களாகிய நான்கும் ஒரு சிறிதும் கலவாது செய்வானேயாயின், அதுவே அறமென்பதாம். அவ்விதமில்லாது இந்நான்கனுள் ஏதேனுமொன்று கலக்கினும் செய்யும் அறம் இனிதாகமுடிந்து பயன்தாராது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அறம் இதுவென்றும், அது செய்யும்வழி அடையும் நன்மை இதுவென்றும், செய்யாவழிப் படுங்குற்றம் இதுவென்றும், செய்யுங்கால் மனக்குற்ற முதலாகிய குற்றங்கள் இல்லாதிருத்தல் வேண்டுமென்றும் அறிந்தோம். ஆயின், அறத்தைச் செய்வதற்கு வயது முதிர்ந்தவர்களன்றோ உரியராவர்? இன்பம் நுகரவேண்டி மனையாளோடு கூடி இல்வாழ்க்கையை நடத்துகின்ற இளைஞரும் செய்தல் வேண்டுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர், "அதுகருதியன்றோ நம் தெய்வப் புலவர் ஆறுவது திருக்குறளை அருள் செய்தனர்?" என்று பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

36. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(பரி.) இ-ள். அன்று அறிவாம் என்னாது அறம் செய்க=யாம் இது பொழுதிளையமாகலின் இறக்கு ஞான்றுசெய்து மெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க;—அது பொன்றுங்கால் பொன்றாத்துணை=அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்றும் உயிர் போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம். எ-று.

மற்றென்பது அசைநிலை. பொன்றாத் துணையென்றார், செய்த உடம்பழியவும் உயிரோடொன்றி ஏனையுடம்பினுஞ் சேறலின். (இதனான் இவ்வியல்பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையினபொழுதே செய்கவென்பது கூறப்பட்டது.) (௬)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் அறத்தைச் செய்வது இளமையிலேயோ, தருணத்திலேயோ, முதுமையிலேயோ வென்னும் ஐயுறவினை நீக்கிக் கொண்டீர்கள். அன்றியும்,

"மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது—அறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்தக் கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு." என்னும் நாலடியார்

செய்யுளும் இக்கருத்தையே விளக்குகின்றது. ஆதலால், செய்த உடம்பு அழியவும் அழியாத உயிரோடு செய்த அறமானது பொருந்தி இனி யெடுக்கப்போகும் எல்லா உடம்புகளிலேயும் சென்று சேர்ந்து அழியாத்துணையினை யுண்டுபண்ணலால் இவ்வித அறத்தை எக்காலத்தும் வயது முதலியவற்றை நோக்காது செய்தல் வேண்டுமென்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஐய! இவ்விதம் ஒருபிறப்பிற் செய்த அறவினை எவ்வாறு ஏனைய பிறப்புகளை யெடுக்கும் உடம்புகளில் சென்றுசேரும்? நாங்கள் இவ்வுண்மையறிய மிகுதியும் ஆசைப்படுகின்றோம். இதனை நாங்கள் ஆகமவளவையானும் காட்சியளவையானும் அறியும்படி கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

37. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(பரி.) இ-ள். அறத்து ஆறு இது என வேண்டா=அறத்தின் பயன் இதுவென்றுயாம் ஆகம அளவையான் உணர்தல் வேண்டா:—சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை=சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவைதன்னானே உணரப்படும். எ-று.

பயனை ஆறென்றார்; பின்னதாகலின், எனவென்னு மெச்சத்தாற் சொல்லாகிய வாகம வளவையும், பொறுத்தானோ டூர்ந்தா னிடையென்றதனாற் காட்சியளவையும் பெற்றாம். உணரப்படுமென்பது சொல்லெச்சம். (இதனாற் பொன்றுந்துணையாதல் தெளிவிக்கப்பட்டது.) (எ)

விளக்கம்:—ஆகமவளவை மாத்திரமன்று. காட்சியளவையானும் காணுதல் கூடும் என மேற்கூறிய திருக்குறள் அறிவித்ததாயிற்று. பல்லக்கைத் தூக்கிச் செல்லுபவர் அறத்தைச் செய்யாதவரென்றும், பல்லக்கின்மீது செல்பவர் முற்பிறப்புகளில் அறத்தைச் செய்தவரென்றும் கூறாமலே உங்களுக்கு விளங்கும். அன்றியும், இருவினையும் பிறவிகள்தோறும் சென்று ஒரு உயிரையடையும் என்பதை நாலடியாரில் உள்ள

“பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.”

என்னும் செய்யுளும், சிவஞான போதத்துள் திகழ்ந்து நிற்கும்

“உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலில்
உள்ளதா முற்செய்வினையுள்ளடைவே-வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோல்
செய்வன் செயலணையா சென்று” என்னும் செய்யுளும்

அறிவித்ததாயின. ஆதலால், நாம் ஓர் நாளும் தவறாது அறத்தைச் செய்யவேண்டும் என்றதாயிற்று என்றனர். இதுகேட்ட மாணாக்கர், “மேற்கூறிய திருக்குறளின் உவமையால் இம்மைப் பயன் இது வெனவறிந்தோம். ஆயின், மறுமைப்பயன் எதுவாகுமென்று அறிதல் வேண்டும்” என்னலும், ஆசிரியர் எட்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(பரி.) இ-ள். வீழ்நாள்படாமை நன்று ஆற்றின்=செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின்,—அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்=அச்செயல் அவன் யாக்கையோடு கூடு நாள் வரும்வழியை வாராமலடைக்குங் கல்லாம். எ-று.

ஐவகைக் குற்றத்தான்வரும் இருவகை வினையுமுள்ளதுணையும் உயிர் யாக்கையோடுங் கூடிநின்று அவ்வினைகளதிருவகைப் பயனையும் நுகரு மாகலான், அந்நாண் முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. குற்றங்களாந்தா வன:-அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன;இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேச மென்ப. வினையிரண்டாவன:-நல்வினை, தீவினை யென்பன. பயனிரண்டாவன:-இன்பந்துன்பமென்பன. இதனான் அறம் வீடு பயக்கு மென்பது கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் அறம் செய்தவர் அடையும் மறுமைப்பயன் இதுவென்றும், அவ்வாறு செய்யும் அறத்தினை ஓர்

நாளும் தவறாது செய்தல் வேண்டுமென்றும், அவ்விதம் தவறாது செய்வான் ஒருவன் மீண்டும் ஓர் பிறப்பினை யடைதலில்லை யென்பதும் பெற்றோம். ஆதலால், அறத்தினை நாம் விடாது செய்து வீடு பெறுதலே தகுதி யென்பதாயிற்று என்றனர். கேட்டமாணாக்கர், "இவ்விதம் இம்மை, மறுமை, வீடு, என்பனவற்றையறிந்தோம். ஆயின், முன்னர் அறவினை இருவித மென்றும், அவற்றுள் இல்லறத்தைச் செய்யும் ஒருவன் பொருளும் இன்பமும் அடைதற்கு உரியவனென்றும் அருள் செய்தீர். அவ்விதம் இல்லறத்தானொருவன் இன்பத்தையடைய வேண்டுமானால் அதனை எவ்விதம் அடைதல் வேண்டும். அதற்குக்காரணமாயுள்ளது எது?" என்னலும், ஆசிரியர் பின்வருமாறு கூறுவாராயினர்.

## 39. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம் புறத்த புகழு மில.

(பரி.) இ-ள். அறத்தான் வருவதே இன்பம் = இல்லறத்தோடுபொருந்தி வருவதே இன்பமாவது;—மற்ற எல்லாம் புறத்த = அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தினிடத்த,—புகழும் இல = அதுவேயுமன்றிப் புகழுமுடையவல்ல. எ-று.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையானோங்கு நடைய" * என்புழிப்போல. இன்பம் = காமநுகர்ச்சி, அஃதாமாறு காமத்துப் பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்கணத்துளின்பமாய்த் தோன்றுமாயினும் பின்றுன்பமாய் விளைதலின், 'புறத்த' வென்றார். அறத்தோடு வாராதன புகழுமில வெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றாம். (இதனான் அறஞ்செய்வாரே இம்மையின்பமும், புகழும் எய்துவரென்பது கூறப்பட்டது.) (௯)

விளக்கம்:—இத்திருக்குறளால் மேற் கூறிய பொருள் மூன்றனுள் இன்பம் என்னும் காமநுகர்ச்சியை ஒருவன் அடைய விரும்பின், நூல்வழக்கின் வண்ணம் ஓர் கன்னிகையை மணந்து, இன்பம் நுகர்ந்து, இல்லறத்தை நடத்த வேண்டு மென்பது பெற்றாம். 'அறத்தான் வருவதே யின்பம்' என்றமையால் மேற்கூறிய

* புறநானூறு--22.

மனைவியல்லாத பிறன் மனைவியையும், பரத்தையரையும், இழிகுல மகளிரையும் ஒருவன் விரும்பி இன்பத்தைத் துய்ப்பானாயின், அவ் வித ஒழுக்கம் நீதியொடு படாததாய் உலகத்தாரால் பழிக்கப் பட்டு துன்பத்தையே தரும் என்பது அறியக்கிடக்கின்றது என் றனர். இது கேட்ட மாணுக்கர், "இவ்விதம் அறங்களுள் இல்லறத் தைச் செய்வாெனாருவன் இம்மையின்பத்தினையும் புகழினையும் அடைவானென்பது அறிந்தோம். இனி, முடிந்தது முடித்தலாகச் செய்ய வேண்டுவது எது? ஒழியவேண்டுவது எது?" என்று கேட் டனர். ஆசிரியர் பத்தாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

40. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(பரி.) இ-ள். ஒருவற்குச் செயற்பாலது அறனே=ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே;—உயற்பாலது பழியே=ஒழிதற்பான் மையது தீவினையே. எ-று.

ஒருமென்பன விரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப் பட்டது. பழிக்கப்படுவதனைப் பழியென்றார். (இதனாற் செய்வதும் ஒழி வதும் நியமிக்கப்பட்டன) (ய)

விளக்கம் :—இத்திருக்குறளால் இருவினைகளாகிய நல்வினை தீவினை யென்பனவற்றுள் ஒருவன் நல்வினையென்பதையே செய்து தீவினையென்பதை எக்காலத்தும் ஒழித்தல் வேண்டும் என்பதைப் பெறும் என்றனர். "எம்மைய! இதுகாறுந் தாங்கள் கூறிவந்த பாயிரம் நான்கினுள் செய்ய வேண்டுவனவும், ஒழிய வேண்டுவன வும் இவையென அறிந்து கொண்டோம். இனி, உரைப்பாயிரத் தின் இறுதியிற் கூறிய வண்ணம் இல்லறம் ஈதென முதலில் விளக் கல் வேண்டும்" என்று மாணுக்கர் கேட்டனர். ஆசிரியர் கூறு வாராயினர்.

பாயிரம் முற்றிற்று.

# இல்லற வியல்

## 5. அதிகாரம்.

## இல்வாழ்க்கை.

*அஃதாவது இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இந்நிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாதலின், இஃதறன் வலியுறுத் தலின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—இவ்விதம் முதலில் வைத்த நிலையாகிய இல்லறம் என்பது, இல்லற வியலென இருபது அதிகாரங்களால் ஆக்கப்பட்டுள்ளது. அதனுள் மனைவியோடு கூடி வாழ்தலின் சிறப்பினை யுணர்த்தும் அதிகாரத்தினை இல்வாழ்க்கை யென இயம்பினர்.

41. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(பரி.) இ-ள். இல்வாழ்வான் என்பான்=இல்லறத்தோடு கூடிவாழ்வானென்று சொல்லப்படுவான்—இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை=அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம். எ-று.

இல்லென்பது ஆகுபெயர். என்பானெனச் செயப்படுபொருள் வினை முதல் போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவர் ஆசாரியனிடத்தினின் றோதுதலும் விரதங் காத்தலுமாகிய பிரமசரிய வொழுக்கத்தானும், இல்லை விட்டு வனத்தின்கட்டீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யு மொழுக்கத்தானும், முற்றத்துறந்த யோக ஒழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னையிருவரையும் பிறர் மதமேற் கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச் செல்லு மளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறுவாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வவ நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், நல்லாற்றினின்றதுணை' யென்றார்.

**விளக்கம் :**—இம்முதற்றிருக்குறளால் இல்லறத்தைச் செய்வான் ஒருவன் நான்கு ஆச்சிரமங்களில் தான் நீங்கலாக மற்றைய பிரமசாரி, வானப்பிரத்தன், முற்றத்துறந்த முனிவன் என்னும் மூவரையும் அவர்கள் செல்லும் நன்னெறிகளில் செலுத்தி, அவற்றால் அடையும் பயனையடையும் வண்ணம் அவர்கள்பசித்த காலத்து உணவினை உண்பித்தும், நோயால் வருந்திய காலத்து மருந்தினையுதவியும், அவர்கள் இருக்க விரும்பியகாலத்து இருக்கவிடம் உதவியும் அவர்களுக்கு நற்றுணையாக இருக்கின்றான் என்பது பெற்றோம். இவர் இல்லறம் துறவறமென இரண்டே அறம் வகுத்துக் கூறினாராயினும் ஏனைய நீதி நூலார் வகுத்த ஆச்சிரமங்களாகிய பிரமசரியம், வானப்பிரத்தம் ஆகிய இரண்டனையும் உடன் கூறினார் ஆயினர் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இல்லறத்தானென்பவன் மேற்கூறிய மூவரையுமே காப்பாற்றுதல் அமையும் போலும்" என்னலும், ஆசிரியர் இரண்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(பரி.) இ-ள். துறந்தார்க்கும் = களைகணானவரால் துறக்கப் பட்டார்க்கும்,—துவ்வாதவர்க்கும் = நல்கூர்ந்தார்க்கும்,—இறந்தார்க்கும் = ஒருவருமின்றித் தன்பால் வந்திறந்தார்க்கும்,—இல்வாழ்வான் என்பான் துணை = இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் துணை. எ-று.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் துணையென்றார். (இவை யிரண்டு பாட்டானும் இற்கிலை எல்லாவுபகாரத்திற்கு முரித்தாதல் கூறப்பட்டது.) (உ)

விளக்கம்:—இத்திருக்குறளால் மேற்கூறிய மூவர் மாத்திரமன்று ; உணவற்று வருந்துகின்ற தரித்திரர்களுக்கும், ஆதரவின்றித் தன்னிடத்தே வந்து இறந்துபோகின்ற அதிதிகளுக்கும் இல்லறத்தான் துணைவனாகவிருத்தல்வேண்டு மென்பதும் பெற்றோம். அவ்வளவோடல்லாமல், அரசனுக்கு ஆறிலொருகடமை கொடுத்துக் காப்பாற்றுவது என்னும் நீதியின் வண்ணம் தன்னுடைய வருவா

யினை ஆறுகூறாக்கி, அவற்றில் ஒரு கூறை அரசனுக்குக் கொடுத்து, ஒழிந்த ஏனைய ஐந்தினை வேறுவிதமாக உபயோகித்தல் வேண்டும் என அறியப்படுகிறதால், அரசனுக்கும் ஆதரவு ஆகின்றான். இதனைப் பின்வரும் மூன்றாவது திருக்குறளால் நீங்கள் அறிதல்கூடும் என்று ஆசிரியர் மூன்றாவது திருக்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

## 43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங் கைம்புலத்தா றோம்ப றலை.

(பரி.) இ-ள். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற = பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தானென்று சொல்லப்பட்ட— ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை = ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம். எ-று.

பிதிரராவார்:—படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாகலின், தென்புலத்தாரென்றார். தெய்வமென்றது சாதியொருமை. விருந்தென்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேனின்றது; அவர் இருவகையர்; பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் = சுற்றத்தார். எல்லாவறங்களும் தானுளனாய் நின்று செய்ய வேண்டுதலின், தன்னை யோம்பலும் அறனாயிற்று. என்றவென்பது விகாரமாயிற்று. ஆங்கு அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடனாகலின் ஐம்புல மென்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலா னென்பதறிக. (௩)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணமே அரசன் ஒழிந்த ஐவராவார் இவரென்று இத்திருக்குறளால் அறிந்தோம். இதுவரையும் கூறிய திருக்குறள்களால் இல்வாழ்வா னென்பான் எவ்வெவ்வித கடமைகளைச் செய்ய வேண்டுபவனாகின்றான் என்பது அறிந்தோம். ஆயின், முன்னர் முப்பத்து மூன்றாவது திருக்குறளில் அறிவித்தபடி இல்லறத்தினைத் தன் வருவாய்க்குத் தக்கவளவாகச் செய்தல் வேண்டுமென்பது அறிந்திருக்கின்றோமாதலால், பொருளினைச் சம்பாதித்தல் பெரிதும் முக்கியமென்று பெறப்படுகிறது. அவ்விதம் சம்பாதிக்குங்கால் எவ்வித நீதியோடு சம்பாதித்தல்வேண்டும்? சம்பாதித்த பொருளை மேற்கூறிய விதம் செலவழிப்பதால் அடையும்

பயன் எது? என்பதை விளக்கவே அடுத்த திருக்குறள் எழுந்தது என்று ஆசிரியர் நான்காவது திருக்குறளைச் சொல்லத்தொடங்கினர்.

44. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(பரி.) இ-ள். பழி அஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின் = பொருள் செய்யுங்கால் பாவத்தையஞ்சி * யீட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலை ஒருவனில்வாழ்க்கை உடைத்தாயின்,—வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் = அவன் வழி உலகத்தெஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை. எ-று.

பாவத்தான் வந்தபிறன் பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளுடையார்மேலும், பாவந்தன்மேலுமாய் நின்று வழி எஞ்சுமாகலின், 'பழியஞ்சி' யென்றார். வாழ்வானதுடைமை வாழ்க்கை மேலேற்றப்பட்டது. (ச)

விளக்கம்:—பொருளைத்தேடுங்கால் எவ்விதம் தேடல் வேண்டும் என்று கேட்டார்க்கு உலகம்பழிப்பது ஒழிந்து சம்பாதித்தலே தகுதியுடையதென்றும், அவ்வாறு தகுதியுடைய நிலையில் சம்பாதித்த பொருளினைத் தென்புலத்தார் முதல் நால்வர்க்குப் பங்கிட்டுக்கொடுத்து ஒழிந்த ஓர் பாகத்தினைத் தான் உண்ணவேண்டுமென்பதும் பெற்றோம். அவ்விதம் செய்வானாயின் அவனது வாழ்க்கை வழியாக வரப்போகும்; எச்சமென்னும் சந்ததியானது உலகமுள்ளவரையும் உயர்ந்து ஓங்குமென்பதும் பெற்றாம் என ஆசிரியர் கூறுதலைக் கேட்ட மாணக்கர், "இவ்வில்வாழ்க்கையானது பின்வரும் சந்ததியை வளர்ப்பதற்கு இடனாயிற்று என்று அறிந்தோம். ஆனால், அவ்விதம் சந்ததிவளரச்செய்யும் இல்வாழ்க்கையை நடத்துவதற்கு எதுசெய்தல் வேண்டும்?" என்று கேட்டலும், ஆசிரியர் பின்வரும் திருக்குறளைக் கூறுவாராயினர்.

---

* பழியஞ்சி யென்பதனைப் பழியையஞ்சி, பழியினஞ்சி என விரிக்கலாமென்பது "அச்சக்கிளவிக் கைந்து மிரண்டு—மெச்சமிலவே பொருள் வயினான," என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக.

45. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(பரி.) இ-ள். இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின்=ஒருவனில்வாழ்க்கை தன்றுணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையு முடைத்தாயின்,—அது பண்பும் பயனும்=அவ்வுடைமை அதற்குப்பண்பும் பயனுமாம். எ-று.

நிரனிறை.இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றாகாவழி இல்லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று. இவை மூன்று பாட்டானும் இந்நிலையினின்றான் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது. (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால் இல்வாழ்வானென்பான் ஒருவன் தன் மனைவி இடத்துச் செய்யவேண்டும் அன்பினிற் சிறிதுங் குறையாதவனாயும், மேற்கூறிய திருக்குறளின் வண்ணம் தன் வருவாயை யாவர்க்கும் பங்கிட்டுக் கொடுத்துப் பின்தான் உண்ணலாகிய அறத்தினையும் உடையனாயின் அவனுக்குத் தான்கொண்ட இல்வாழ்க்கையின் குணமாயிருக்கின்ற இன்பமும், அவ்வின்பத்தினாலாகிய இம்மைப்பயனும், அவ்வறந்தாலாகிய மறுமைப்பயனும் ஆகிய இரண்டும் கைகூடுமென்பது பெற்றாம். ஆதலால், இல்வாழ்வான் செய்யவேண்டுவதாகிய அறத்தைச்செய்வதற்கு மனைவியும் துணையாய் நிற்றல் வேண்டுமாதலால் அன்பில்லாவிடின் இருவர் மனமும் ஒன்றாகாமற்போம். அவ்விதமாயின் இல்லறமாகிய சகடம் செல்லாது என்பது கருதியே

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய்! நோக்கறுன்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்."*

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், ஒருபொருளைக்காணவேண்டில் இரண்டு கண்களும் ஒரே அளவாகப் பார்ப்பதுபோல் மனைவியும் நாயகனும் ஒருமனதுடன் ஒத்திருந்தாலன்றி, இல்லறத்தைச் செய்து முடித்தல் கூடாதென்பது நன்கு அறிந்துகொள்ளக் கிடக்

* நன்னெறி

கின்றது என்று ஆசிரியர் கூறலும், மாணவர்கள் மிகுதியும் அவா வுற்றவராய், "ஐய! இவ்விதம் காதலனும் காதலியும் ஒத்த அன்போ டிருந்து இல்லறம் கடைபோகுமாறு நடத்திக் காட்டிய சரிதைகளுள் ஒன்றினை எங்களுக்குக் கூறுவதுடன், அதற்குமாறாக அன் பில்லா இல்வாழ்க்கையால் உண்டான கேடுகளைத் தெரிவிக்கும் சில உதாரணங்களையும் அறிவித்தல்வேண்டும்" என்று கேட்டனர். ஆசிரியர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்: "மாணவர்காள்! அன்போடியைந்த இல்வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள நீங்கள் வேறு சரிதைகளை ஆராயவேண்டுவதில்லை. நம் தெய்வப் புலவரது இல்வாழ்க்கைச் சரிதையே இதை நன்கு விளக்கிக்காட்டும்; அது எவ்வாறெனின்? நமது நாயனார்தாம் இல்லறத்து இருந்த காலத்தே, ஒரு பெரியார் அவரிடம் வந்து "இல்லறம் பெரியதோ? துறவறம் பெரியதோ?" என்று வினவினர். அதைக்கேட்ட நம் தெய்வப் புலவர் ஒன்றும் விடைகூறாது வாளாவிருந்தனர். ஆயின், அப்பெரி யார் பதில்கிடைக்கும் வரையில் அவ்விடம்விட்டு நீங்காது அவரோ டிருந்தனர். இஃதிவ்வாறிருக்க, நம் தெய்வப்புலவர் ஒருநாள் தமது மனைவி வாசுகி அம்மையார் கிணற்றில் நீர் முகந்துகொண் டிருக்குங்காலத்தே அழைத்தலும், அவ்வம்மையார் தமது கையி லுள்ள கயிற்றைவிட்டுவிட்டு ஓடோடியும் வந்தனர்; ஆயின், கயிறும் பாத்திரமும் உள்செல்லாது அந்தரத்தில் விட்டவிடத்தேயிருந்தன வென்றும்; மற்றோர்நாள் பட்டப்பகற் பொழுதில் தாம் நெய்து கொண்டிருந்த குழல்ஊசி கையைவிட்டுக் கீழே விழுந்தகாலத்து, அதைத்தேடி எடுக்க விளக்குவேண்டும் என்னலும், அவ்வம்மை யார் யாதொன்றும் கூறாது விளக்கினை ஏந்திவந்தாரென்றும்; வேறோர் நாள் தாம் உண்ணும் பழஞ்சோறு சுடுகின்றது, அதற்கு விசிறிவேண்டும் என்னலும், அதற்குமாறு கூறாது விசிறி கொண்டு விசிறினர் என்றும்; இவ்வற்புதங்களைக்கண்ட அப் பெரியார் "மனைவி தக்கவளாயின் இல்லறம் தக்கது, அன்றேல் துறவறமே தக்கது" என்னும் விடையைத் தாமே தெரிந்து கொண்டு சென்றனர் என்றும் ஓர் கதை கூறப்படுகிறது. அன்றி யும், வாசுகியம்மையார் தமது கடைசி காலத்தில் உயிர் போகாது நாயனாரைப் பார்த்த வண்ணமே இருந்தனரென்றும், அக்குறிப்

யையுணர்ந்த புலவர் பெருமான் "எதுகருதி இவ்வாறிருப்பது?" என்று அம்மையாரை வினவலும், அவ்வம்மையார் தமது நாயகரை நோக்கி "தாங்கள் தினந்தோறும் உண்ணும்போது நத்தங்குடுக் கையில் தண்ணீரும், ஊசியும் சமீபத்தில் வைக்கக் கட்டளையிட்ட படி தவறாது வைத்து வந்தேன்; ஆயின், அதன் காரணம் இது வென இதுகாறும் தெரிந்துகொள்ளவில்லை" என்று கூறினார். நாயனார், 'மங்கையர்க்கரசியே! உண்பதற்குச் சாதத்தை இலையி விடும்போது, அது இலையின்புறத்தே சிதறுமாயின், அதை ஊசி யாற் குத்தித் தண்ணீரால் கழுவுதற்பொருட்டே அவ்விதம் வைக் கச் சொன்னதாகும். ஆயின், ஒரு பருக்கையும் சிந்தா தவண் ணம் இது காறும் சாதம் படைத்து வந்தமையால், அவ்வூசிக்கும் தண்ணீருக்கும் வேலையில்லாமற் போனதுடன், அவைகள் வைக்கப்பட்டதின் காரணத்தையும் இதுவென நீ அறிந்துகொள்ள இடம் இல்லாமல் போயிற்று" என்று சொல்லினர் என்றும், இவ் வித மனைவியின் அன்பினையும் சிறந்த குணத்தினையும் விளக்கிக் காட்டும்படி மனைவியார் இறந்தகாலத்துத் தமது ஆற்றாமையை வெளியிடுவதுபோல் நாயனார்,

"அடிசிற்கினியாளே அன்புடையாளே
படி சொல்தவறாத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கி முன் எழுந்த பேதையே போதியோ
என் தூங்கும் என் கண்ணிரா."

என்று அருள்செய்துள்ளனர் என்று கூறும் கதையே நமக்கு அன் போடு கூடிய இல்வாழ்க்கை இதுவென அறிவிக்கும்.

இவ்விதம் அன்றி, மனவொற்றுமை கூடாத மனைவி ஒருத்தி ஒருவ னுக்கு வாய்ப்பாளாயின், அவன் கொண்ட இல்லறம் சரியாக நடவா தென்றும், அதனால் அவன் நற்பயன்கள் எய்தாது பல தீமைகளையே அநுபவிக்க நேரிடுமென்றும், பல பெரியோர்கள் அநுபவவாயிலா கப் பாடிய பின்வரும் செய்யுட்களே நன்கு விளக்குமென்று ஆசிரி யர் சொல்லப் புகுந்தனர்.

"இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக

ஆடினாள் பாடினாள் ஆடிப்பழ முறத்தால்
சாடினாள் ஓடினான் தான்."

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணுக்க வாய்திறக்கமாட்டாதே—வீணுக்கென்
என்பெலாம் பற்றி எரிகின்றதையையோ
அன்பிலான் இட்ட அமுது."

"சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப்போல் வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டா
செருப்படி தான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்."

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பளேயாமாயிற்
கூறாமற் சந்நியாசங்கொள்."

"ஏசியிடலின் இடாமையே நன்றெதிரிற்
பேசுமனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தினன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று."

இது கேட்ட மாணுக்கர், "இவ்விதம் மனைவியோடு இருந்து இல்லறத்தைச் செய்வது மிக்கதோ? அன்றி, வேறு நிலையில் நிற்பதோ? எது பயனுடையது? எமக்கு அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

46. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(பரி.) இ-ள். இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின்=ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனாயின்,—புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன்=அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது? எ-று.

அறத்தாறென்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையு மென மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு:—இல்லைவிட்டு வனத்துச் செல்லு நிலை. அந்நிலையின் இது பயனுடைத் தென்பார், போய்ப் பெறுவதெவ னென்றார். (சு)

**விளக்கம்:**—உண்மையாகவே ஒருவன் இல்வாழ்க்கைக்குச் சொல்லிய அறத்தின் வழியே நின்று பழியஞ்சி யாவர்க்கும் பகுத்து உண்டு மனைவியின்மீதும் அன்புடையவனாக நிற்பனாயின், வீட்டினை விட்டுக் காட்டிற்சென்று கடுந்தவம் புரிந்து எய்தும் பயனைக்காட்டி லும் மேலாகிய பயனையடையலாம் என்பதாயிற்று. ஆதலால், இல் லறநிலையே சிறந்ததாகும் என்றனர். அதைக்கேட்ட மாணாக்கர், "மூன்றாவது நிலையாகிய வானப்பிரத்தம் என்பதொன்று எதற்கு உள்ளது? ஏன் அந்நிலையில் நிற்றல் கூடாது? அதைக்காட்டிலும் இவ்வில்லறநிலை சிறந்ததோ?" வென்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர்.

47. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(பரி.) இ-ள். இல்வாழ்க்கை இயல்பினான் வாழ்பவன் என்பான்=இல் வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல் லப்படுவான்—முயல்வாருள் எல்லாம் தலை=புலன்களை விட முயல்வாரெல் லாருள்ளும் மிக்கவன். எ-று.

முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்றாநிலையி னின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளுமெனவும், முய லாதுவைத்துப் பயனெய்துதலின் தலையெனவுங் கூறினார். (எ)

**விளக்கம்:**—மேற்கூறிய வானப்பிரத்தமோ பலவிதமாக முய ன்று ஊனையொடுக்கி உறக்கந்துறந்து எய்துகின்ற பயனாதலால் ஊனை ஒடுக்காதும் உறக்கத்தை நீக்காதும் மனைவியோடு இன்பந் துய்த்தும் பிறர்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவியும் வாழும் இவ்வில்லறமே மிகச்சிறந்தது என்று நாம் அறிந்தோம் என்றனர். இது கேட்டமாணாக்கர், "ஆ! என்னை? கானில் வசித்துக் கடுந்தவம் புரியும் தவத்தோரின் நிலையினும் மேலாய நிலை, இல்ல றத்தைச்செய்யும் நிலையோ என்று வியப்புறுகின்றோம்" என்னலும்,

ஆசிரியர், " அவ்விதம் நீங்கள் ஐயுறுவீர்கள் என்றே நம் தெய்வப் புலவர் இதன் அடுத்த திருக்குறளிலும் இதனையே விதந்து கூறினர் ஆவர்" என்று எட்டாவது திருக்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

48. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(பரி.) இ-ள். ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை=தவஞ் செய்வாரையுந் தத்தநெறியின்கணொழுகப்பண்ணித் தானுந் தன்னறத் திற்றவறாத இல்வாழ்க்கை—நோற்பாரின் நோன்மை உடைத்து=அத் தவஞ் செய்வார் நிலையினும் பொறையுடைத்து. எ-று.

பசி முதலிய விடையூறு நீக்கலின், ஆற்றினொழுக்கி யென்றார். நோற்பாரென்பது ஆகுபெயர். நோற்பார் நிலைக்கு அவர்தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலைபோற் பிறரையுற்ற நோயும் பொறுத்தலின்மையின், நோற்பாரி னோன்மை யுடைத்தென்றார். (அ)

விளக்கம்:—தவம் செய்வானொருவன் தன்னையுற்ற பசிப்பிணியொன்றினையே பொறுத்துக்கொள்ளத் தகுதியுடையவனாக விருக்கின்றானே யல்லது இல்வாழ்வான் போன்று தானும் பசியாறவுண்டு ஏனையோர் பசியையும் தீர்க்கும் வலிமையில்லாதவனாதலால் இல்வாழ்வானே வானப்பிரத்தனைக் காட்டிலும் சிறந்தவன் என்றதை வலிந்து கூறியதாயிற்று என்றனர். கேட்ட மாணாக்கர், "மூன்றாவதாகிய வானப்பிரத்தனை இவ்விதம் கூறுவதாயின், முற்றத்துறந்த முனிவரது துறவறம் இவ்வில்வாழ் நிலையின் உயர்ந்ததோ? ஒத்ததோ? இழிந்ததோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

49. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(பரி.) இ-ள். அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே=இருவகையறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே:—அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று=ஏனைத் துறவறமோ வெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று. எ-று.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது; இதனாற் பிரிக்கப்பட்டது துறவற மாகலின், அஃது என்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறன் பழிப்பதென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம், மனத்தையும் பொறி களையும் ஒறுத்தடக்கவல்ல அருமையுடைத்தாய வழியே, அவற்றை யொறுக்க வேண்டாது ஐம்புல வின்பங்களாரத் துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப்படுவதென்றவாறாயிற்று. (இவை நான்குபாட்டானும் இந்நிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.) (௯)

விளக்கம் :—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய வண்ணம் இருவித நிலைகளுள் பலநூல்களாலும் சிறப்பித்துச் சொல்லப்பட்ட அறன் என்பது இல்லறமாகிய இல்வாழ்க்கையே யாகும். மற்றோர் நிலையாகிய துறவறமோவெனில் மற்றவர்களால் பழிக்கப் படாவண் ணம் நடத்த முடியுமாயின் மேற்கூறிய இல்லறத்தோடு ஒருவித ஒப்புடையதாகும்.. 'பிறன்பழிப்பது' என்று ஏன் கூறினர் என்பீராகில்? இல்லறத்து உள்ளான் ஒருவன் தன்னுடைய மனத் தையும் பொறிகளையும் அடக்கியாளும் துன்பத்தை மேற்கொள் ளாமல் ஐம்புலன்களும் இன்பங்கள் முழுவதையும் அனுபவிக்கும் எளிமையுடைய வாழ்க்கையோடு இருத்தலால், அவன் பிறரால் பழிக்கப்படுவதற்கு இடனில்லாமல் நிற்றல்கூடும். ஏனைத் துறவியோ மனத்தையும் ஐம்பொறிகளையும் உரனென்னுந் தோட்டியால் ஒறு த்து அடக்கவேண்டிய வன்மையுடையவனாய் இருத்தல்வேண்டுமாத லால், அவன் எவ்விதமேனும் ஒருகாலத்துத் தவறிவிடுதல்கூடும். அக்காலத்துக் கூடாவொழுக்கத்தனாய் ஆவன். இவ்வொழுக் கத்தை யறிந்த பிறர் அவனைப் பழிப்பதன்றி வேறு ஏன் செய்தல்கூடும்? என்றனர். கேட்ட மாணாக்கர், "ஐய! இவ் விதம் துறவறத்திற் சென்ற மாதவரும் மாதர்மயக்கில் நின்று மாண்பு இழப்பரோ?" என்று வினவலும், ஆசிரியர், "மக்காள்! இது கருதியன்றோ கம்பநாடரும் தமது இராமாயணம், பால காண்டம் பூக்கொய் படலத்துள்,

"ஊனக்கமுள்ளத்துடைய முனிவரால்
காக்கலாவது காமன் கையில்லெனும்
வாக்குமாத்திரமல்லது வல்லியிற்
பூக்கொய்வாள் புருவக்கடை போதுமே."

“ நாறுபூங்குழ னன்னுதல் புன்னைமேல்
ஏறினன் மனத்தும்பர் சென்றேறினுள்
ஊறு ஞானத்துயர்ந்தவ ராயினும்
வீறுசேர்முலை மாதரை வெல்வரோ ?”

என்று மாதவத்தைச் செய்யும் தவசிகளாயினும், நிலையாமை யுணர்ந்து துறவுபூண்டு மெய்யுணர்ந்த ஞானியராயினும் மாதர்மயக் கினின்றும் நீங்குதல் அரிதெனஎடுத்துக் காட்டியுள்ளார். அன்றி யும், குமரகுருபரர் தம் நீதிநெறி விளக்கத்துள்,

“ எவ்வினையரேனும் இணைவிழைச் சொன்றில்லெனில்
தெவ்வும் திசைநோக்கிக் கைதொழூஉம்——அவ்வினை
காத்தலிலரேல் எனைத்துணையராயினும்
தூர்த்தரும் தூர்ப்பாரலர். ”

என்று கூறினர். ஆதலால், இல்லறமே இயற்றுதற்குச் சிறந்ததாகும் என்றனர். அது கேட்டமாணுக்கர், “ இவ்விதம் மிகச் சிறந்த இல் லறத்தை யொருவன் செய்து முடிப்பானுயின், அவன் அடையும் இம்மை மறுமைப்பயன்கள் எவை? ” என்று கேட்டலும், ஆசிரி யர் பின்வருமாறு கூறுவாராயினர்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(பரி.) இ-ள். வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் = இல்லறத்தோடு கூடி வாழுமியல்பினுல் வையத்தின்கண் வாழ்பவன்,—வான் உறையும் தெய் வத்துள் வைக்கப்படும் = வையத்தானே யெனினும் வானின்கணுறையுந் தேவருள் ஒருவனுக வைத்து நன்கு மதிக்கப்படும். எ-று.

பின்றேவனுய் அவ்வறப்பயனுகர்தல் ஒருதலையாகலின், தெய்வத்துள் வைக்கப்படுமென்ருர் (இதனுன் இந்நிலையது மறுமைப் பயன் கூறப்பட்டது.) இம்மைப்பயன் புகழ்; அதனை யிறுதிக்கட் கூறுப. (ய)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய வண்ணம் இல்லறத்தை இவ்வுலகத்தின்கண் இயற்ற வேண்டிய தகுதியின் வண்ணம் ஒருவன் நடத்துவானுயின், அவன் அடையும் பயன் மறு மையில் தேவ உலகமென்றும், இம்மையில் புகழ் என்றும் அறியக்

கிடக்கின்றது என்றனர். அது கேட்டமாணுக்கர், "ஏதோ 'வாழு மியல்பினுல்' என்று கூறினீர். அவ்வாழுமியல்பாவது யாது? அதற்குத் துணையாவதெது? இவைகளை நன்ருக விளக்கல்வேண்டும்" என்று பரிந்து கேட்டனர். ஆசிரியர் 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் ஆருவது அதிகாரத்தைச் சொல்லத்தொடங்கினர்.

## 6. அதிகாரம்.

## வாழ்க்கைத்துணை நலம்.

---

(பரி.) அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

விளக்கம்:—அறத்தான் வருவதே இன்பம் என்றுணர்ந்து இல்லறத்தை நடத்த எண்ணிய ஒருவனுக்குத் துணையாய் நிற்பது மனைவியாதலால் அவ்வித மனைவியைத் துணையென்றும், அம்மனைவி நன்மை யமைந்தவளாக வாய்க்கின் எண்ணிய எண்ணம் முடிந்து இம்மைப் புகழையும் மறுமைத் தேவபதவியையும் அடைதல் கூடுமென்றும், அம்மனைவியின் நலம் இவ்விதம் இருத்தல் வேண்டும் என்றும் போதிக்கவந்தவர், வாழ்க்கைத் துணைநலம் எனத் திருவாய் மலர்ந்தருளுகின்றனர்.

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(பரி.) இ-ள். மனைத்தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள்=மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையை யுடையாள்,—வாழ்க்கைத்துணை=அதற்குத்துணை. எ-று.

நற்குணங்களாவன:—துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், * வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்கு வேண்டும்பொருள்கள் அறிந்துகடைப்பிடித்தலும், அட்டிற்ருெழில் †

---

* அயர்தல்=செய்தல், † அட்டிற்ருெழில்=சமையல் வேலை.

வன்மையும், ஒப்புரவு செய்தலும் * முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது:—முதலையறிந்து அதற்கியைய அழித்தல். (இதனால் இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது) (௧)

விளக்கம்:—முன்னர் நீவிர் வினவிய வாழ்க்கைக்குத்துணையிணையும் அத்துணையினது நன்மையையுங் கூறுவான் தொடங்கிய வாசிரியர், இல்லறத்தான் செய்யவேண்டுவன வாகிய செயல்களுள் மிக முக்கியமாகிய துறந்தாரையாதரித்தலும், விருந்தினரை யுண்பித்தலும், ஏழைகளிடத்து அன்புசெய்தலும் ஆகிய செயல்களைச் செய்வதற்கு வாழ்க்கைத்துணைவியாகிய மனைவி நற்குணமுடையவளாக இருக்கவேண்டும் என்றும், அவ்வித நற்குணமில்லாதவளாக வாய்ப்பின் அவன் அவைகளைச்செய்து முடிக்க முடியாதென்றும் முதலிற் கூறினர். அவ்வளவோடு நில்லாது வாழ்க்கைக்கு வேண்டுவனவாகிய பொருள்களையும் இவையென்றறிந்து காலத்தில் தேடிவைத்தலும், தேடிய பொருள்களை யுண்பதற்குச் சமைக்குங்கால் சுவைபடச் சமைக்கும் வல்லமையும், உலக நடையை யறிந்து உலகத்தோர்க்குத் தானஞ்செய்தலுமாகிய நற்செயல்களும் இருத்தல் வேண்டுமென்றும் கூறினர். அன்றியும், இவ்வித வாழ்க்கைக்கெல்லாம் தன்னை நாயகியாகக் கொண்ட நாயகனது வருவாய்க்குத் தக்க வளவாகப் பொருளைச் செலவழித்து வாழ்ந்தாலன்றி வாழமுடியாதென்றும், அவள் துணை துணையாகாதென்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஈண்டு வருவாய்க்குத் தக்கஅளவுஎன்றமையால் உழுதுண்டோ பணிசெய்தோ நிற்போர் வாழ்க்கைக்குக் கூறவேண்டுமேயன்றி, மிகப் பெரியதோர் செல்வம் படைத்தார்க்கு இந்நிலை வேண்டுவதில்லை என்று தோன்றுகிறது" என்றனர். ஆசிரியர், "அவ்விதமன்று. எவ்விதமேம்பட்ட செல்வந்தனாயினும் மேற்கூறிய நற்குண நற்செய்கையுடைய மனைவியைப்பெறுவிடில் அது தகுதியாகாது என்பதையறிவிக்கவே இரண்டாவது திருக்குறள் எழுந்தது" என்று கூறுவாராயினர்.

52. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(பரி.) இ-ள். மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்=மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவனில்லாளிடத்திலையாயின்,—

---

* ஒப்புரவு செய்தல்=வேளாண்மை செய்தல் அல்லது உலகநடையை யறிந்து செய்தல்.

வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்=அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமை யுடைத்தாயினும் அஃதுடைத்தன்று. எ-று.

இல்லையென்றார், பயன்படாமையின். (உ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் கொண்ட ஐயமானது நீங்கிற்றன்றோ? இல்வாழ்வானது மாட்சியெல்லாம் இல்லாளுடைய மாட்சியினால் தான் அடையவேண்டுமென்பது முடிந்த பொருளாயிற்றென்றனர். கேட்டமாணாக்கர், "வாழ்க்கைத்துணையாகிய மனைவி யொருத்திக்கு இருக்க வேண்டுவனவாகிய நற்குணங்களே அமையுமாயின் போதுமென்று அறிகின்றோம்" என்னலும், அவரை நோக்கி "இது கருதியன்றோ நம் தெய்வப்புலவர் மாட்சிமைப் பட்டமனைவியிருக்கின்ற வீட்டில் யாதொரு பொருளுமில்லாவிடினும் அவ்வீடானது எதினாலும் குறைவுபடுவது ஆகாதென்றும், அவ்வித மாட்சிமையில்லாதவள் இருக்கின்ற வீடு எவ்வித பெருஞ் செல்வமுடையதாயினும் ஒருபொருளுமில்லாத வீடொன்றனையே ஒக்குமென்றும் அடுத்த திருக்குறளில் கூறுகின்றனர் என்று ஆசிரியர் கூறத் தொடங்கினர்.

53. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

(பரி.) இ-ள். இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என்=ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையளாயினக்கால் இல்லாதியாது?—இல்லவள் மாணாக்கடை உள்ளது என்=அவள் அன்னளல்லாக்கால் உள்ளதியாது? எ-று.

மாண்பெனக் குணத்தின் பெயர் குணிமேனின்றது. இவையிரண்டு பாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்லவென்பது கூறப்பட்டது. (௩)

விளக்கம்:—இத்திருக்குறளில் கூறியவண்ணம் மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளே மிகப்பெரியதென்றறிந்தோம். அதுவன்றியும், மனைவாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளிடத்து இருக்கவேண்டிய நிலையொன்று கற்புநிலையாகும். அந்நிலை ஒன்று மாத்திரம் உடைய மனைவியொருத்தியை யொருவன் பெறுவானாயின் அதைக்காட்டிலும் உலகத்து அடையும் பொருள்களுள் மேம்

பட்ட பொருள் ஒன்றுமில்லை என்று நான்காவது திருக்குறளை ஆசிரியர் கூறுவாராயினர்.

54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(பரி.) இ-ள். பெண்ணின் பெருந்தக்க யா உள=ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்களியாவையுள,—கற்பு என்னும் திண்மை உண்டாகப்பெறின்=அவண்மாட்டுக் கற்பென்னுங் கலங்காநிலைமை யுண்டாகப் பெறின்? எ-று.

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின்மையின், யாவுளவென்றார். இதனாற் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

விளக்கம்:—முன்னர் கூறியவண்ணம் பெரியதோர் நிலை கற்புடைய நிலையென்றும், அது எக்காலத்துங் கலங்கா நிலையென்று மறிந்தோம். அவ்வித நிலையுடைய பெண்ணொருத்தியை மனைவியாக வாய்க்கப்பெற்ற ஒருவன், அறம் பொருள் இன்பமாகிய மூன்றையும் அடைவதற்கு வேறு காரணங்கள் வேண்டா என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என்னை? கலங்காநிலை யென்றீர். அது எவ்விதம்? சிறிது விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர், "கலங்காநிலைமையாவது, தன் கற்பு அழியவந்த காலத்துச் சிறிதும் தன் உயிர்போதற்குமஞ்சாது அக்கற்பினைக் கெடுக்கவந்த கொடியவரை யழித்தலேயாம். இதனைத்தமயந்தி காட்டிற்றனியே சென்ற போது இவளழகினைக்கண்டு மயங்கிய வேடனொருவன் இவளைக் கற்பழிக்க எண்ணியதும் அவனைத் தன்னுடைய கோபப்பார்வையினால் எரித்துவிட்டனள் என்பதே போந்த சான்றாகும். இதனைப் பின்வரும் நளவெண்பாச் செய்யுள்களே அறிவிக்கும்" என்றனர்.

"இந்துநுதலி யெழிலோக்கியேதோதன்
சிந்தைகருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றானெடுத்து."

"வேடனழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன்மயில் போலலமரா—ஓடினாள்

தூறெலாமாகச் சுரிகுழல் வேற்கண்ணினீர்
ஆறெலாமாக வழுது."

"தீக்கட்புலி தொடரச் செல்லுஞ் சிறுமான்போல்
ஆக்கைதளர அலமந்து—போக்கற்றுச்
சீறுவிழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய் விழுந்தா னிலத்து."

அதுகேட்ட மாணாக்கர், "கற்புநிலை கலங்காதிருப்பதால் இவ்வித பெரியதோர்தகுதி பெண்ணொருத்திக்கு எங்ஙனம் வாய்க்கும்? நிறைமொழி மாந்தராகிய துறவிகட்கன்றோ சாபமும் அருளும் பொருந்தும். பெண்ணொருத்தியாகிய இவளுக்கு இவ்விதம் நேர்ந்தது தெய்வத்தைவிடாது நினைத்தலால் வந்திருத்தல் வேண்டுமேயன்றி கற்பின் நிலைக்கு இவ்விதம் நேர்ந்ததென்பது அருமையாகவுள்ளது" என்றனர். ஆசிரியர் அவ்வையத்தை நீக்கும் வண்ணம் பின்வரும் திருக்குறளை ஆரம்பித்தனர்.

55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(பரி.) இ-ள். தெய்வம் தொழாள் கொழுநற்றொழுது எழுவாள் பெய் என=பிற தெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயிலெழுவாள் * பெய்யென்று சொல்ல,—மழை பெய்யும்=மழை பெய்யும். எ-று.

---

* கொழுநற்றொழு தெழுவாளென்பது எழுந்து கொழுநற்றொழுவாளென முன்பின்னாகப் பொருள்படு மென்றார் பிரயோக விவேக நூலார். அவர் கூறுவதாவது:—"இனிக் 'கொழுநற்றொழு தெழுவாள்' 'தொழுதெழுவார் வினைவள நீறெழ' என்னுந் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் 'தொழாநின்றெழுவாள்' 'தொழாநின்றெழுவார்' எனத் துணைவினையாயுரைப்பர். எழுதல் துயிலொழிதலாதலின் எழுந்து தொழுவாள் எழுந்து தொழுவார் என முன் பின்னாகப் பொருள் படுதலன்றி, நகுபுவந்தான் ஓடிவந்தான் என்பனபோலத்தொழாநின்று துயிலொழிதல் கூடாதென்க. "வைகறையாமந் துயிலெழுந்து தான் செய்யு—நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்—றந்தையுந் தாயுந் தொழுதெழுக" † என்பது துயிலெழுந்து பின்றந்தையுந் தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்க வெனப் பொருள் பட்டு வருதலானும், அவருரை அசம்பாவிதமென்க." நான்காவது திங்களுப்படலம், 5—ம். பாட்டுரை. † ஆசாரக் கோவை. 5-ம் பாட்டு.

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத்தாகலின், தொழுதெழுவாளென்றார். தொழா நின்றென்பது தொழுதெனத்திரிந்து நின்றது. தெய்வந்தானேவல் செய்யுமென்பதாம். இதனாற் கற்புடையவளதாற்றல் கூறப்பட்டது. (௫)

விளக்கம்:—மக்காள்! நம் தெய்வப்புலவர் திருவருள் செய்த இத்திருக்குறளால் கற்பு நிலையொன்றையே மேற்கொண்டு கணவன் ஒருவனையே தெய்வமாகப் பாவித்து தூக்கத்தினின்று எழுந்த காலத்தேயே தன்னுயகனைத் தொழுகின்ற ஒருத்தி மழை பெய்யென்றால் பெய்யு மென்றும், பொழுது விடியலாகா தென்றால் பொழுது விடியா தென்றும், தெய்வமே முன்னின்று இவளுக்கு ஏவல் செய்யு மென்றும் பெற்றோம். இதனை நளாயினி தனது நாயகனைக் கூடையில் வைத்து நள்ளிருளில்செல்லுங்காலத்துக்கழுவில் ஏறுண்டு நின்ற ஆணிமாண்டவியன் காலில் இவள் சுமந்து சென்றகூடை தாக்கிற்றென்றும், அதனால்கழுவில்நின்றஆணிமாண்டவியன் மிகுதியும் வருந்தி நளாயினியை நோக்கி உன் நாயகனைச் சுமந்து செல்லுகின்ற மகிழ்ச்சியின் மிகுதியால் இவ்விதம் எனக்கு இடையூற்றினை விளைத்தாய். இனி, நாயகனது இன்பத்தை நீயடையாவண்ணம் உன்னுடைய தாலியானது போது விடிவதற்கு முன் பெருக* வேண்டும் என்று சபித்தலும், அது கேட்ட நளாயினி 'போது விடிந்தாலன்றோ என் நாயகனுக்கு இடையூறு வரும்; விடியா விடின் உமது சாபம் என் செய்யும்?' என்னும் கருத்தினையுட்கொண்டு, "போது விடியாமற் போகக் கடவது" என்று எதிர்சாபமிடலும், அதனால் பன்னெடுநாள் போது விடியாமற் போயிற்றென்றும், உயிர்களெல்லாம் அசைவற்று வருந்தினவென்றும், அவ்வருத்தம் ஒழிய முதற்பெருங் கடவுளர் யாவரும் ஒன்று சேர்ந்து நளாயினியிடம் சென்று, போது விடிய வேண்டும் என்று கூறல் வேண்டும் என்று கேட்டலும், எனக்கு நேர்ந்த சாபத்தை இம்முனிவன் நீக்காவிடில் நான் எனது சாபத்தை நீக்குதல் கூடாதென்று நளாயினி மறுத்தாளென்றும், பிறகு தேவர்களதுவேண்டுகோளுக்கிணங்கி ஆணிமாண்டவியன் தன் சாபத்தைத் தவிர்த்தானென்றும், நளாயினி போது விடியச் செய்தாளென்றும் கூறும்

*பெருகுதல்=அறுதல்: இது மங்கல வழக்கு.

கதையே போதிய சான்றாகும் என்றனர். அன்றியும், கோவலன் மனைவியாகிய கண்ணகி, பாண்டியனால் தன்னாயகன் கோவலன் கொலையுண்டான் என்று கேட்டவுடன் பாண்டியனிடம் சென்று, அவனறியாமையாற் செய்த குற்றத்தை பல்லோருமறிய எடுத்துக் காட்டித் தன்கற்பின் நிலையை யறிவிக்க வேண்டித் தன்கொங்கை யொன்றைத்திருகி யெறிந்து நகரம் அடங்கலும் தீப்படச் செய்தாள் என்னுஞ் சிலப்பதிகாரக்கதை யொன்றே மேற்கூறிய திருக்குறளை நன்கு விளக்கும். அன்றியும், கற்புடைய பெண்கள் மனம் மிகத் தூய்மையாதலால் அவர் எண்ணும் எண்ணம் யாவற்றையும் எங்குமுள்ள இறைவன் முடிப்பான் என்பது நூல்வல்லவர் சம்மதம். அவர் மனத்தினும் தூய்மையுடையது வேறொன்றில்லையென்பதைக் கம்பர் தமது இராமாயணத்துள்,

“ திங்கள் நாயகரில் தெய்வம் தவம் பிறிதில வென்றெண்ணும்
மங்கைமார் சிந்தைபோலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கள் நான்மறைக்கும் தேவரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மாலிருந்து மேனாள் செய்தவம் செய்ததன்றே.”

என்னும் செய்யுளே போதும் என்றனர். இவை யெல்லாங் கேட்ட மாணாக்கர், “எந்தாய்! கற்புடைய பெண்ணொருத்திக்கு இருக்க வேண்டிய நற்குண நற்செய்கையும், கலங்கா நிலைமையும், அவற்றின் பொருட்டுத் தெய்வம் ஏவல் செய்யு மென்பதையும் உணர்ந்தோம். ஆயினும், இதுகாறும் பெண் ஒருத்தியினது இலக்கண மிது என்று உணர்ந்தோமில்லை. ஆதலால், அதனை விளக்கல்வேண்டும்” என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

## 56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(பரி.) இ-ள். தற்காத்துத் தற்கொண்டாற் பேணி = கற்பினின்றும் வழுவாமற் றன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி—தகைசான்ற சொற்காத்து = இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற்காத்து—சோர்வு இலாள்பெண் = மேற் சொல்லிய நற்குண நற்செய்கைகளினும்கடைப்பிடியுடையாளே பெண்ணாவாள். எ-று.

தன் மாட்டுப் புகழாவது:—வாழூஉர் கற்பாற்றன்னைப் புகழ்வது. சோர்வு=மறவி (இதனால் தற்புகழ்தற் சிறப்புக் கூறப்பட்டது.) (௬)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் விரும்பிய பெண்ணின் இலக்கணம் இது வெனநன்கு அறிதல்கூடும். இத்திருக்குறளைத் தொகை யிலக்கணமாக அருள்செய்த தெய்வப்புலவர் இனி ஒன் றன்பின் ஒன்றாக வகை கூறுவான் விரும்பி, முதலில் 'தற்காத்து' என்னும் இலக்கணத்துக்கமைந்த ஏழாவது திருக்குறளை வைத்துள் ளனர் என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

57. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(பரி.) இ-ள். மகளிர் சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்=மகளி ரைத்தலைவர் சிறையாற்காக்குங் காவல் என்ன பயனைச் செய்யும்?—நிறை காக்கும் காப்பே தலை=அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவல். எ-று.

சிறை=மதிலும், வாயில்காவலும்முதலாயின. நிறை=நெஞ்சைக் கற்பு நெறியினிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவலில்வழி ஏனைச் சிறைக் காவலாற் பயனில்லையென்பார், 'நிறைகாக்குங் காப்பேதலை' யென்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. (இதனால் தற்காத்தற் சிறப்புக்கூறப்பட் டது.) (௭)

விளக்கம்:—இத்திருக்குறள், மேல் 'தற்காத்து' என்னும் இலக்கணத்தைக் கேட்ட பெரியதோர் தகுதியுடைய வொருவன், கூறிய ஆசிரியரைப் பார்த்து 'என் மனைவியை நான் காத்தலா காதோ? நான் வறிஞனன்றே; மதிற்காவலும் ஆட்காவலும் பெரிது முடையனன்றோ? என்று கேட்டானுக்கு விடையளிப்பது போல், 'அறிஞனே! நீ எவ்வித தகுதியுடையனாயினும் மேம்பாடு டையனாயினும் பெண்ணொருத்தி கற்பு நிலையால் தன்னைத் தான் காத்துக் கொள்ளாவிடின் உன்னுடைய காவல்களெல்லாம் ஒன் றும் பயன்படாமற்போம்' என்றுகூறியதுபோல் நிற்கின்றது என் னலும், மாணக்கர், "தற்காத்துஎன்பதை யறிந்தோம். இனி, 'தற் கொண்டார் பேணி' என்பதை விளக்கல்வேண்டும்" என்றனர். ஆசிரியர் எட்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

58. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(பரி.) இ-ள். பெண்டிர் பெற்றாற் பெறின்=பெண்டிர், தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்,—புத்தேளிர் வாழும் உலகு பெருஞ் சிறப்புப் பெறுவர்=புத்தேளிர் வாழுமுலகின்கண் அவராற் பெருஞ் சிறப்பினைப் பெறுவர். எ-று.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனால், தற்கொண்டாற்பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—'தற்கொண்டாற் பேணி' என்பது மனைவி யொருத்தி தன்னையடைந்த தலைவனை மேற் கூறியவண்ணம் வழிபடுதல் செய்வாளாயின் அவளது நற்செயலால் மறுமை யின்பமானது அவளுக்கு வாய்க்குமாதலால், அவ்வின்பங் கருதி நாயகனை உண்டி முதலியவைகளால் உபசரித்துக் காப்பாற்றுதல் பெண்ணிற்குரிய குணத்தை யடைவதாகுமென்று இதனால் அறிந்தோம் என்றனர். இதுகேட்ட மாணாக்கர், "இதனையறிந்தோம். இனி, 'தகைசான்ற சொற்காத்து' என்றமையால் புகழைக்காத்தல் வேண்டும் என்று கூறியது எற்றிற்கு? மிக மேன்மைதங்கிய இவளது நாயகன் ஒருவன் பொருளாலும், தனது ஒழுக்கத்தாலும் புகழைப்பெற வேண்டியவனாகவிருக்க இவள் ஏன் புகழைக் காத்தல் வேண்டும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(பரி.) இ-ள். புகழ் புரிந்த இல் இலோர்க்கு=புகழை விரும்பிய இல்வாளை யில்லாதார்க்கு—இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை=தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமித நடை இல்லை. எ-று.

புரிந்தவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது. பெருமித முடையானுக்குச் சிங்கவேறு நடையானுவமமாகலின், ஏறுபோலென்றார். இதனால் தகைசான்ற சொற்காவாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

விளக்கம்:—இத்திருக்குறளால் இவள் புகழைக் காவாவிடின் இவளது நாயகனுக்கு எது உண்டாகும் என்பதை யறிந்தீரன்றோ? இல்லறத்தாரொருவன் எவ்வித மேன்மையாகிய அரசர்போகத்தை யடைந்திருந்தாலும், அவனதுநாயகி கற்பிற் சிறவாவிடில் இகழ்ந்து பேசுவதே தமக்குத் தொழிலாகக்கொண்ட தன்னுடைய பகைவர் முன் பெருமிதத்தோடு கூடிய நடைகொண்டு நடப்பதற்கு இயலாது என்பதை யறிதல்வேண்டும். ஏனெனின்?

"உண்டு குணமிங் கொருவற்கெனினும் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும் பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விருங்புங்கனி."

என்றபடி பிறர்குற்றங் கூறுவதே பொருளாகக்கொண்ட பேதையர் சிலர் ஒருவனது நற்குணங்கண்ட விடத்து அதனைப் போற்றாது அவனிடத்து ஏதேனும்சிறிது குற்றமிருக்குமாயின் அதனையே தேடித் தேடி அவன் வருந்தும்படி பழிப்பது இயற்கையாதலால், கற்பில்லாத மனைவியைப் பெற்றான் ஒருவன் பலரால் இகழப்படுவான் என்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெண்ணிலக்கணத்தின் பெரும்பகுதியை நன்குணர்ந்தோம். இனி, 'சோர்வு இலாள்' என்பதற்கு மனைமாட்சி யென்றறிந்தோமாதலால் இதனை முன்னர் ஓர்முறை கூறியிருக்கவும், அறுவது திருக்குறளிலும் மற்றோர்முறை விதந்து கூறியது எதற்கு என்பதையும் சிறிது விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 60. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத னன்கல நன்மக்கட் பேறு.

(பரி.) இ-ள். மங்கலம் என்ப மனை மாட்சி=ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை;—அதன் நன்கலம் (என்ப) நன்மக்கட்பேறு=அவைதமக்கு நல்லவணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை. எ-று.

அறிந்தோரென்பது எஞ்சிநின்றது. மற்று அசைநிலை. இதனால் வாழ்க்கைத்துணைக்கு ஆவதோரணிநலங் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. (ய)

விளக்கம்:—இவ்விதம் மற்றோர் முறை எதற்குக்கூறினர் என்றதை நீங்கள் இத்திருக்குறளால் அறிந்திருத்தல் கூடும். அதாவது:- நற்குண நற்செய்கைகள் மனைவிக்கு இருக்குமாயின் அவளது நாயகனுக்கு மிக்கதோர் நன்மை என்று முன்னரே கூறினராயினும், இனி இல்வாழ்க்கையை நடத்தவும் அவ்வாழ்க்கைத் துணைவியைப் பெறுதலும் வாழ்க்கையின்வழி யென்னும் புதல்வரைப் பெறுவதற்கே யாதலால் அதனை இவ்வதிகாரத்தின் கடையில் வைத்து, மனைவியின் நற்குண நற்செய்கைகளை நன்மையென்றும், அந்நன்மைக்கு நல்ல புதல்வர்களுண்டாயின் நல்ல அணிகலமென்றும் தோற்றுவாய் செய்வதற்கே பின்னர் கூறிஞராயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நல்ல மனைவியும் நாயகனும் இன்புற்றிருத்தலே அமையாதோ? வாழ்க்கைவழி யென்னும் புதல்வரும் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 7. அதிகாரம்

## புதல்வரைப் பெறுதல்.

---

(பரி.) அஃதாவது:-இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படூஉங்கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின், அக்கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகார முறைமை மேலே பெறப்பட்டது.

விளக்கம்:—புதல்வரைப் பெறுதல் எனின் நல்ல ஆண் மக்களைப் பெறுதல் என்று கண்டோம். நல்ல மக்களாவார் நூல்வல்லவர் விதித்த மூன்று கடமைகளுள் முனிவர்க்குச் செய்யவேண்டிய கடமையை முனிவரிடத்தே சென்று இருந்து கேட்கின்ற கேள்வியினால் செய்பவர் என்றும், தேவர்க்குச் செய்யவேண்டிய கடமையை, தேவர்களை நோக்கிச் செய்கின்ற யாகத்தால் செய்பவர் என்றும், தென்புலத்தார்க்குச் செய்யவேண்டியகடனை பிதுர்வேள்வியால் செய்பவர் என்றும் கூறுவதால் ஒருவன் நல்ல பிள்ளைகளைப் பெறுதல்வேண்டும் என்பதுபெற்றோம். ஆயின், பரிமேலழகர் உப

நயனஞ் செய்வதற்குமுன் ஒருபிறப்பும் அதைச் செய்தபிறகு அடைகின்ற மற்றொரு பிறப்பும் ஆகிய இரண்டு பிறப்பினையுடையாராய அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவராலும் மேற்சொல்லிய மூன்று கடமைகளையும் செய்வது என்று குறிப்பித்துள்ளாராதலால், நான்காவதாகிய சூத்திர சாதியிலும், அதற்குப் புறத்தாய பஞ்சம சாதியிலும் தோன்றினோன் இக்கடமைகளுள் ஒன்றும் செய்வதற்கு யோக்கியன் அல்லனென்றும், அவன் இம்மையில் புகழையும் மறுமையில் தேவ உலகத்தையும் அடைதற்குஇல்லை என்றுங்கூறினர். ஆயின், இவ்வுரையாசிரியர் கூறும்வண்ணம் அந்தணத் தன்மையுடையோர் துறவிகளாதலால் எக்குலத்தில் தோன்றினராயினும் எவ்வுயிரையுந் தம்முயிராகப் பார்ப்போர் அந்தணரென்றும், எக்குலத்தவராயினும் அரசினைச்செய்யும் தகுதிவாய்ந்து நிற்பாராயின் அவர் அரசரென்றும், வாணிபம்செய்வதில் வல்லபமுடையர் எவரேனுமவர் வணிகரென்றும் கொள்ளவேண்டியதே யன்றி மேற்குலத்திற் றோன்றியதனாலேயே அவர்கள் இம்மை மறுமைப் பயனை யடைவதற்கு இல்லை என்று கண்டோம். ஆதலால், எக்குலத்திற் பிறந்தாராயினும், அவர் செய்கின்ற தொழிலுக்குத் தக்கவாறு குலத்தினை யடைகின்றாரென்று அமைத்துக் கொள்ளல் வேண்டுமேயன்றி வேறாகக்கொள்ளல் இயலாது. பரிமேலழகர், தம் காலத்திற்குத்தக்க அளவாக இவ்வித குலச்செயல்களைத் தம் உரையினுள் புகுத்தினரேயன்றி வேறு காரணம் ஒன்றும் காண்பதற்கில்லை. என்னை ? எல்லாவுயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் மூன்று குலத்தவர் மாட்டுமே உறுதிபயப்பிப்பானெனின், அவன் இறைவனாகான். மதாசாரியர்களிலும் வைணவ மதத்தவர் கூறும் வண்ணம் திருப்பாணாழ்வாரும், சைவர்கள் கூறுகின்ற நந்தனாரும் நான்கு குலத்தவருள் ஒருவராக இல்லாது ஐந்தாம் வருணத்தவராக இருக்கின்ற "பஞ்சமர்" என்னும் காரணப் பெயரோடு இருப்பதால், ஒருவன் அறிவு, ஒழுக்கம், செயல் முதலியவற்றால் குலமும் மோட்சமும் அடையக்கூடுமே யன்றி, ஒருவன் பிறப்பினாலேயே மோட்சத்தை யடையக்கூடும் என்பது அனுபவம் இல்லாமையேயாகும். இதுநிற்க, இன்னும் சில நூலாராய்ச்சிக்காரர்கள் பரிமேலழகர் " புதல்வரைப் பெறுதல் " என்று தம் மனப்பாங்

கின்படிமகுடத்தைத் திருத்திக்கொண்டனர் என்றும், "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கலன் நன்மக்கட்பேறு" என்று கூறியபடி "மக்கட்பேறு" என்று இருக்கவேண்டியதை "புதல்வரைப் பெறுதல்" என்று திருத்திக்கொண்டனர் என்றும், அன்றியும் உரைஎழுதுகின்ற காலத்து மக்கள் என்பதை பெண்ணொழித்து நின்ற ஆண் மக்களொன்று வலிந்தும் நலிந்தும் உரை கூறுகின்றனர் என்றும் எழுதுகின்றனர். இவ்வாராய்ச்சியை நோக்குமிடத்து நாயனார் தமது முதற்றிருக்குறளில் "அறிவறிந்தமக்கள்" என்று கூறுவதால் அறியவேண்டுவனவற்றை அறிதற்கு உரியமக்கள் ஆண் மக்களேயன்றி பெண்மக்களாகார்கள். ஏனெனின்? "பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே", "பேதைமையென்பது மாதர்க் கணிகலம்" என்றமையால் பேதையர், மடவார் என்னும் காரணப் பெயர்க்கு உரியாராயினரேயன்றி அறிவறிந்த மக்களென்னும் பெயருக்கு உரியவர் ஆகவில்லை. அன்றியும், "எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்பண்புடை மக்கள் பெறின்" என்னும் இரண்டாவது திருக்குறளால், பிறரால் பழிக்கக்கூடாத நல்ல குணங்களை யுடைய புதல்வர்க்குமாத்திரம் தந்தைதாயர் செய்த தீவினை தேயும் பொருட்டு அவர்களை நோக்கிச்செய்யும் தானங்கள் கூடுமேயன்றி, மற்றொருவனுக்கு நாயகியாகச் செல்லும் பெண்மகளுக்கு அது முடியாது. ஏனெனில்? அவள் நாயகனாகிய தெய்வத்தையன்றி வேறு தெய்வத்தைத் தொழுவதற்கும் யோக்கியதை யில்லாது நிற்குங் காலத்து எவ்விதம்தந்தைதாயர் தீவினை தேய்தற்குஅறத்தைச்செய்யும் பண்புடைமக்களுள் சேர்தல்கூடும்? ஆதலால், பண்புடைமக்கள் என்றது ஆண்மக்களையே குறித்ததாயிற்று. மேலும், "தம்பொரு ளென்ப தம்மக்கள்" என்றமையால், அப்புதல்வர் செய்த பொருள் முற்றும் தம்மைநோக்கிச் செய்கின்ற தானதருமங்களால் தம்மிடத்தே வரும் என்று பொருள் தருதலால், பொருள் செய்தலும் நல்வினை செய்தலும் புதல்வர்க்கே யன்றி மற்றோர் இல்லத்திற்குச் செல்கின்ற பெண்மக்களுக்கு ஆகாவென்பதும் அறிந்தோம். ஏழாவது திருக்குறளில் "தந்தை மகற்காற்று நன்றி" என்றமையால் "மகனுக்கு" என்று நன்றாக வெளிப்பட்டிருப்பதால் மக்கள் என்பது ஆண்மக்களுக்கே ஆயிற்று. அன்றியும், எட்டாவது திருக்

குறளில் "தம்மில் தம்மக்கள் அறிவுடைமை" என்பதிலும் கல்வி யறிவோடுகூடிய மக்களது அறிவுடைமை உலகத்துவாழும் உயிர் களுக்கெல்லாம் மிக்க இன்பத்தைத்தரும் என்றமையால், ஈண்டும் மக்கள் என்பது ஆண்மக்களே என்றும், அவரே அவையத்துள் சென்று அவையத்தார் காணும்படி தம் புலமையை நாட்டி அவ்வ வையத்துள்ளார் இனிமைபெறும் வண்ணம் செய்வரென்பதும் பெற்றோம். ஒன்பதாவது திருக்குறளில், "தன் மகனைச் சான் றோன் எனக் கேட்டதாய்" என்றமையால் தாயானவள் தன் மக்க ளுள் "ஆண்மகவினையே" பெறுங்காலத்து மிகுதியும் சந்தோஷிக் கின்றாளென்றும், அம்மகனே சான்றோனெனப் பெயர்பெற்ற காலத்தே அதனைக்கேட்டதாய் மிகச்சிறப்பாகவே சந்தோஷிக்கின் றாளென்றும் கூறியமையால், மேல் மக்களென்றது ஆண்மக்களையே குறித்ததாயிற்று. பின்னர்முடிந்தது முடித்தலாக "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி" என்றமையால் அறிவுஒழுக்கத்தோடுகூடிய இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவத்தைச் செய்தானோ என்று சொல்லுஞ் சொல்லை நாட்டுபவன் கல்வியறிவுடைய மகனென்றும், அது புதல்வன் கடனென்றும் முடிக்கின்றமையால் மக்களென்பது புதல்வர்க்கேயாகி, "புதல்வரைப் பெறுதல்" என்பது பரிமேலழ கர் கொண்ட கொள்கையினையே நிரல்பெறச் செய்யும். அன்றியும், ஏழு, ஒன்பது, பத்து ஆகியமூன்றுதிருக்குறள்களிலும் மகன், மகன், மகன் என்று கண்டமையே பரிமேலழகர், 'என்னுரைசிறந்தது' என்றுகூறி அவைக்களத்துப் பரிமேலிருந்தார் என்பதை வற்புறுத் துகின்றது. ஆதலால், பரிமேலழகர் கண்ட உரை பெரிதும் பொருத்தமுடைத்தென்று தோற்றுகிறதால், காய்தல் உவத்தல் அகற்றி, நடுநிலையாக அவர் அடிச்சுவடுகளைப்பற்றிப் பின் செல் வோமாக என்றனர். இது கேட்ட மாணுக்கர், "மிகமகிழ்ந்தோம். இனி, அவ்வித புதல்வர் பேற்றைக் கூறுதல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(பரி.) இ-ள். பெறுமவற்றுள் = ஒருவன் பெறும்பேறுகளுள் — அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற = அறியவேண்டுவன அறிதற்குரிய மக்க

ளைப்பெறுதலல்லது பிறபேறுகளை—யாம் அறிவது இல்லை=யாம் மதிப்பதில்லை. எ-று.

அறிவதென்பது அறிதலைச் செய்வதென அத்தொழின்மேனின்றது. காரணமாகிய வுரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விடுமாதலான், அத்துணிவுபற்றி அறிந்தவென இறந்தகாலத்தாற் கூறினர். அறிவறிந்த வென்றதனான், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது. இதனாற் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—மக்காள்! நீவிர் முன்னர்கேட்ட வினாவிற்கு விடையாக மேற்கூறிய திருக்குறளின் அவதாரிகையே அமையும். இல்லறத்தா னொருவன் மனைவியை மணந்துகொள்வது சந்ததிவிருத்தியைக் கருதியே யிருத்தல் வேண்டுமென்றும், போக விருத்தியைக் கருதியிருத்தல் கூடாதென்றும், இதற்கு மாறாக எவனேனும் போக விருத்தியை விரும்புவானாயின் விரும்பிய எண்ணமே ரௌரவ நரகத்தில் செலுத்துமென்றும் நூல்வல்லவர்கள் கூறுகின்றாராதலால், மைந்தர்பேறே இல்லறத்தின் பயன் என்றும், அம்மைந்தரும் அறிதலையறிந்து செய்கின்ற மக்களாயின் அவரைக்காட்டிலும் இல்லறத்தானொருவன் அடையும் பேறுகளுள் சிறந்தபேறு இல்லை என்பதும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் பெறும் பேறுகளுள் நன்மக்கள் பேறே சிறந்ததாயின், அப்பேறு இம்மை மறுமைப் பயன்களைத் தருமோ?" என்று கேட்டனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

62. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(பரி.) இ-ள். எழுபிறப்பும் தீயவை தீண்டா=வினை வயத்தாற்பிறக்கும் பிறப்பேழின்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா,—பழிபிறங்காப் பண்பு உடை மக்கட்பெறின்=பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின். எ-று.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனாயினென்றவாறாயிற்று. பிறப்பேழாவன:— "ஊர்வபதினொன்று மொன்பது மானுட—நீர் பறவை நாற்காலோர் பப்பத்துச்—சீரிய—பந்தமாந்தேவர் பதினாலயன் படைத்த—வந்தமில்சீர்த் தாவ

ரநா லேந்து.'' தந்தைதாயர் தீவினை தேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தானதருமங்கட்கு அவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுங் காரணப் பெயர் காரியத்தின் மேனின்றது. (உ)

விளக்கம் :—இத்திருக்குறளால் நீங்கள் கொண்ட ஐயமானது நீங்கியதன்றோ? நன்மக்களைப்பெற்ற வொருவனுக்கு அப்பிள்ளைகள் செய்யும் நல்வினையால் எழுபிறப்பினும் அவனுக்குத் தீவினை நணுகப்பெறாது என்னின், இதனினும் மிக்கதோர் பயன் வேண்டுவதோ? என்னலும், மாணாக்கர், “ அவ்விதமாயின் மறுமைப் பயன் எவ்விதம் வரும்?” என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

63. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(பரி.) இ-ள். தம் மக்கள் தம்பொருள் என்ப=தம்புதல்வரைத் தம் பொருளென்று சொல்லுவர் அறிந்தோர்;—அவர் பொருள் தந்தம் வினையான் வரும்=அப்புதல்வர் செய்தபொருள் தம்மைநோக்கி அவர்செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான். எ-று.

தந்தம் வினையென்புழித் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமை 'முருகனது குறிஞ்சிநிலம்' என்புழிப்போல உரிமைப்பொருட்கண்வந்தது. பொருள்செய்த மக்களைப் பொருளென உபசரித்தார். * (இவையிரண்டு பாட்டானும் நன்மக்களைப் பெற்றார் பெறும் மறுமைப்பயன் கூறப்பட்டது.) (௩)

விளக்கம் :—உலக அறிவினையுடைய பெரியோர் தாம் பயந்த புதல்வரைத் தம்முடைய பொருள்கள் என்று சொல்லுகின்றனர். ஏனெனின்? அப்புதல்வர் தாம் நல்வழியில் சம்பாதித்த பொருளைத் தம்முடைய தாய்தந்தையர் நல்வினை யடையும் வண்ணம் அவரை நோக்கித்தானதருமங்களைச் செய்கின்றனராதலால், இவ்வழிச் செய்கின்றபுதல்வரைப் பெற்ற தாய்தந்தையர்க்கு மறுமைப்பயன் வருவது திண்ணம் என்றனர்.

அதுகேட்ட மாணாக்கர், “ நற்புதல்வரைப் பெற்றதாய் தந்தையர்க்கு மறுமைப்பயன்கிடைப்பது உண்மையென்று அறிந்தோம்.

---

* உபசரித்தல்=ஒன்றின் தன்மையை மற்றொன்றின் மேல் ஏற்றிக் கூறுதல்.

ஆயின், இம்மைப் பயனும் புதல்வரால் கிடைக்கும் என்பதை விளக்கல்வேண்டும்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

64. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(பரி.) இ-ள். அமிழ்தினும் ஆற்ற இனிதே=சுவையான் அமிழ்தத்தினும் மிக இனிமையுடைத்து;—தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்=தம்மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு. எ-று.

சிறுகையான் அளாவலாவது "இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து, நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தல்." * (ச)

விளக்கம்:—இம்மைப்பயன் இதுவென்றும் சொல்லுதல் வேண்டுமோ? தம்மக்கள் சிறுகைகளால் துழாவப்பட்ட அன்னத்தை யமிழ்தினும் மிக இனிமையுடையது என்று உண்கின்ற தாய் தந்தையர்களை நாம் நோக்குங்காலத்து இம்மைப்பயனை யடைந்தோர் என்பது சொல்லாமலே அமையும் என்றனர். அன்றியும், இதுகருதியன்றோ,

"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்
பயக்குறை யில்லை தாம் வாழு நாளே." *

என்று புறநானூற்றிலும், (188-வது செய்யுள்)

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்று
என்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை யிங்கில்லா தவர்."

என்று நளவெண்பாவிலும் கூறப்பட்டிருக்கின்றதென்றனர்.

அதுகேட்ட மாணாக்கர், "இது ஒன்றுதானோ இம்மைப் பயன்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

65. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(பரி.) இ-ள். உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல்=ஒருவன் மெய்க்கு இன்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்;—செவிக்கு இன்பம் அவர் சொற்கேட்டல்=செவிக்கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல். எ-று.

மற்று வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லேயன்றி அவர்கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் 'சொல்' என்றார். தீண்டல், கேட்டல் என்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின் மேல் நின்றன. (௫)

விளக்கம்:—மேற்கூறிய திருக்குறளால் நாவின்சுவை யொன்று மாத்திரமன்று; அம்மக்கள் தேகத்தில் வீழ்ந்து புரளுவதும், தாய் தந்தையர்கள் அவர்களைத் தீண்டிச் சுமப்பதும், அத்தாய் தந்தையர்களது தேகத்துக்கு மிக்கதோர் இன்பம் பயக்குகின்றதென்றும், அம்மக்களது சொற்களைக் கேட்டகாலத்துத் தாய் தந்தையர்களின் செவிகளுக்கு இன்பமுண்டாகின்றதென்றும்அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மக்கள் சொல் கேட்டல் செவிக்கு இன்ப மென்றறிந்தோம். ஆனல், பொதுவாகச் சொல் என்றமையால் அம்மக்கள் பேசும் மழலைச் சொல்லோ? அல்லதுகற்றறிந்து பிறகு பேசும் கருத்துடைய சொல்லோ? எது இனிமை தருவது?" என்று கேட்டனர். "இது கருதியன்றோ நம் தெய்வப் புலவர் இதனைப் பிரித்துக் கூறினர்" என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

66. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(பரி.) இ-ள். குழல் இனிது யாழ் இனிது என்ப=குழலிசையினிது யாழிசை யினிதென்று சொல்லுவர்;—தம்மக்கள் மழலைச்சொற்கேளாதவர்= தம் புதல்வருடைய குதலைச்சொற்களைக் கேளாதவர். எ-று.

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிதென்பரென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச் சொல்லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு. (இவை மூன்றுபாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது.) (௬)

விளக்கம்:—இத்திருக்குறளால் கற்றறிந்த சொல்லைக் காட்டிலும் தம்மக்கள் மழலைச்சொல்லே சிறந்ததென்று தாய்தந்தையர்களால் கொள்ளப்படுகிறதென்று நீங்கள் அறியலாம். காதேயில்லாது கண்ணையே செவியாகவுடைய காரணத்தால் "கட்செவி" என்னும் பேர்பெற்ற பாம்பும் குழலினிசையினையும் யாழினிசையினையும் கேட்ட காலத்துத் தன்னையறியாது மயங்கிப் பாடுவோன் எதிரிற் சென்று அசைவற்றுப் படமெடுத்து நிற்குமாயின், குழல் ஓசையும் யாழோசையும் மிகச்சிறந்தன என்று அறியாதார் ஒருவரும் இலர். அவ்வித தகுதிவாய்ந்த ஓசைகளைத் தம் புதல்வர்களது வாய் நிறம்பாத சொற்களைக் கேளாதவரே விரும்புவார் என்றும், அவ்வித சொற்களைக் கேட்கும் சிறப்புடையோர் தம்மக்கள் மழலைச்சொல்லே மிக்கதோர் இன்பத்தினைச் செவிக்குணர்த்துவது என்று கூறுவர் என்றனர். இது கேட்ட மாணாக்கர், "எந்தாய்! மக்களால் தாய் தந்தையரடையும் இம்மை மறுமைப் பயன்களை யறிந்தோம். அவ்வித பயன்களையடைவதற்குத் தந்தை தன்னுடைய மகனுக்குச் செய்கின்ற நன்மை எது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 67. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
## முந்தி யிருப்பச் செயல்.

(பரி.) இ-ள். தந்தை மகற்கு ஆற்றும் நன்றி = தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது:—அவையத்து முந்தி இருப்பச்செயல் = கற்றோர் அவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல். எ-று.

பொருளுடையனாக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மையாகா வென்பது கருத்து. (இதனால் தந்தைகடன் கூறப்பட்டது.) (எ)

விளக்கம்:—தந்தை இனி தான் அடையப்போகும் இம்மை மறுமைப் பயனுக்குக் காரணமாகவுள்ள மக்களுக்குச் செய்யும் நன்மையாவது, கற்றறிந்தவர்கள் சபையில் யாவரினும் மிகுந்த அறிவுடையனாயிருப்பதற்கு வேண்டிய கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டும்; அதனினும் மிக்கதோர் நன்மையில்லை என்றனர். அது கேட்ட மாணாக்கர், "என்னை? பொருளுடையனாக விருப்பதற்கு

மிக்கதோர் பொருளை யீட்டி வைக்கின்ற செய்கை யொன்றே போதாதோ? எதற்காக இரவும் பகலும் வருந்திக் கற்பதாகிய கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டும்?" என்னலும், ஆசிரியர், "கல்வியறிவில்லாத மக்கட்கு வைக்கும்பொருள் அவர்களுக்கு முற்றும் துன்பத்தையே தருவதாகக் காண்கின்றோமாதலால், கல்வியறிவுடையவனாக ஆக்குதலே சிறந்த நன்மை" யென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கல்வியறிவுடையனாகச் செய்யின் அவனும் அவன் தாய்தந்தையரும் இன்பமடைவதற்கு உரியராவரே யன்றி, ஏனையோரும் பயன் அடைதல் கூடுமோ?" என்று வினவலும், ஆசிரியர் எட்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

68. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(பரி.) இ-ள். தம்மக்கள் அறிவுடைமை=தம்மக்களது அறிவுடைமை—மா நிலத்து மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது=பெரிய நிலத்து மன்னி நின்ற உயிர்கட்கெல்லாம் தம்மினும் இனிதாம். எ-று.

ஈண்டு அறிவென்றது இயல்பாகிய அறிவோடுகூடிய கல்வியறிவினை. மன்னுயிரென்றது ஈண்டு அறிவுடையார் மேல் நின்றது, அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின். இதனால் தந்தையினும் அவையத்தார் உவப்பரென்பது கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் வினவியபடி கல்வியறிவுடையனாகச் செய்த தந்தைக்குமாத்திரமல்லாமல், உலகத்து உயிர்களுக்கெல்லாம் இவனது கல்வி இனிமைதரும் என்று கண்டீர். ஏனெனின்? இவனது கல்வியுடைமையானது மக்கள் அனைவரும் நன்மையடைதற்கு ஏதுவாக நிற்பதால், தந்தை மகனைக் கல்வியறிவுடையனாகச்செய்வதே சிறந்ததென்று அறிந்தோம் என்றனர். அது கேட்டமாணாக்கர், "தந்தையும் அறிவுடை மக்களும் இவனது கல்வியால் இனிமை யடைவர் என்றறிந்தோம். ஆயின், மிகப் பெரிதும் வருந்தி யீன்ற தாய்க்கு இவனது கல்வியால் ஏதேனும் இனிமையுண்டாகுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் ஒன்பதாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(பரி.) இ-ள். ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்=தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிகமகிழும்;—தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்=தன்மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்டதாய். எ-று.

கவானின்கட்கண்ட* பொதுஉவகையினுஞ் சால்புடையனெனக் கேட்ட சிறப்பு உவகை பெரிதாகலின், 'பெரிதுவக்கும்' எனவும், பெண் இயல்பால் தானாக அறியாமையின் 'கேட்டதாய்' எனவுங் கூறினார். அறிவுடையா ரென்பது வருவிக்கப்பட்டது, சான்றோனென்றற்கு உரியர் அவராகலின். தாயுவகைக்கு அளவின்மையின், அஃது இதனாற் பிரித்துக் கூறப்பட்டது. (௯)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஈன்ற தாயானவள் தன் குழந்தையைப் பெற்றஉடனே மகன் என்று பிறர்சொல்லக்கேட்ட போது கொண்ட மகிழ்ச்சியினும் மேலாகிய மகிழ்ச்சியைக் கற்றறிந்த பலரால் தன்மகன் சான்றோனெனக்கேட்டபோது அடைவாள் என்று அறிந்தோம். ஆதலால், தாயானவள் தானே நேரிற்சென்று சபையினிடத்தே கேட்டு மகிழாவிடினும் கேட்டவர்களால் கேட்டுத்தான் முதலில் 'மகன்' என்றடைந்த மகிழ்ச்சியாகிய பொதுவாகிய மகிழ்ச்சியினும், இப்போது சிறப்பாகிய மகிழ்ச்சியை யடைகின்றாளாதலால் மகன் கல்வி தாய்க்கும் இனிமை பயக்கின்றது என்றறிந்தோம். அன்றியும், இக்கருத்துப்பற்றியே நாலடியாரினும்,

"வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகற்கண்டு தாய் மறந்தா அங்கு"

என்று தாய் ஈன்றபொழுதில் ஆண்மகனாக இருக்கக் காணின் தன்னுடைய வருத்தம் எல்லாம் நீங்கி மிகுதியும் மகிழ்வாள் என்று கூறியுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித கல்வியுடையவனுக்கிய தந்தைக்கு மகன் செய்யும்நன்மை இக்கல்வியால் ஏதேனுமுள்ளதோ?" என்று கேட்டலும், ஆசிரியர் பத்தாவது திருக்குறளைப் பகர்வாராயினர்.

---

* கவான்=தொடை.

70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

(பரி.) இ-ள். தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி—கல்வியுடையவனாக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறாவது ;—இவன் தந்தை என் நோற்றான் கொல்எனும் சொல்—தன்னறிவும் ஒழுக்கமுங்கண்டார் இவன் தந்தை இவனைப் பெறுதற்கு என்னதவஞ் செய்தான்கொல்லோ என்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல். எ-று.

சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணந்தோன்ற நின்றது. நிகழ்த்துதல்—அங்ஙனஞ்சொல்ல ஒழுகல். (இதனாற் புதல்வன்கடன் கூறப்பட்டது.) (ய)

விளக்கம் :—உலகத்துத்தோன்றிய அறிவுடையமக்கள் அனைவரும் பெற்றோரை இம்மை மறுமைப் பயன்களை யடையச் செய்விப்பது அருங்கடனாயினும், மகனொருவன் தான் கற்றகல்வியைக் கொண்டு தன் அறிவினையும் ஒழுக்கத்தையும் கற்றதற்குத் தக்க அளவாக நிகழச் செய்வானாயின், அதுவே தந்தைக்கு மகன் செய்யும் நன்மையாகும். ஏனெனின்? பலர் கல்வியைக்கற்று அறிவும் ஒழுக்கமுங் கெட்டுக் கற்றவளவில் நில்லாதிருப்பதால் அவ்விதமில்லாது கற்றவளவேயறிவும் ஒழுக்கமும் காத்துநிற்கின்ற ஒருவனைக் கண்ட அறிவுடையோர் "இவன்தந்தை என்ன தவத்தைச்செய்து இம்மகனைப் பெற்றனனோ?" என்று வியக்கும்படி தந்தைக்கு எக்காலத்துங் கெடாத புகழை நாட்டுகின்றானாதலால், இதனினுமிக்கதோர் உதவி மகன் தந்தைக்குச்செய்வது இல்லையென்பதாயிற்று என்று நற் புதல்வரைப்பெறும் பேற்றினை நல்லாசிரியர் முடித்தனர். அது கேட்டமாணாக்கர், "பெரியோய்! முன்னர் இல்வாழ்க்கையென்னும் அதிகாரத்தில் ஐந்தாவது திருக்குறளில் 'அன்புமறனும் இருந்தால்தான் இல்லறம் பண்பையும் பயனையுங் கொடுக்கும்' என்றுதெரிந்தோம். அவைகளில் இல்வாழ்வானொருவன் மனைவியோடு இருந்து மக்களைப் பெறுவது பயன் என்று அறிந்தோம். ஆயின், அப்பண்பாகிய அன்புடைமை என்பதை அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர், "இதுகருதியன்றோ நம் தெய்வப்புலவர் இதற்கடுத்த அன்புடைமை என்னும் அதிகாரத்தைத் தொடங்கினர்" என்று அடுத்த அதிகாரத்தைச் சொல்லப் புகுந்தனர்.

# 8. அதிகாரம்

## அன்புடைமை

(பரி.) அஃதாவது:—அவ்வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இதுவேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறமினிது நடவாமை "அறவோர்க்களித்தலு மந்தண ரோம்பலுந் —துறவோர்க்கெதிர்தலுந்தொல்லோர்சிறப்பின்-விருந்தெதிர் கோடலு மிழந்தவென்னை" *என்பதனானும், அதனாலருள்பிறத்தல் "அருளென்னுமன்பீன் குழவி" † என்பதனானுமறிக.

விளக்கம்:—அன்புடைமை எனின் ஆசையுடையனாதல் என்பது பொருள். ஆயின், இவ்வாசையுடைமையாவது தனக்குச் சம்பந்தமானவர்களிடத்தே செல்லுமாயின் அன்புடைமையென்று கூறுவதாகும். சம்பந்தமில்லாது எல்லா உயிர்களிடத்தும் செல்லுகின்ற ஆசையுடைமையானது 'அருளுடைமை' ஆகும். இல்லறம், தொடர்புடையவர்களிடத்தே ஆசைசெலுத்தி நடத்தவேண்டுவது ஒன்றாகலின், இவ்வன்புடைமை என்பது இங்குக் கூறுவதுடன், அதினும் வாழ்க்கைத் துணைவியாயிருக்கின்ற மனைவியின்மீது அன்பு வைத்தல் மிகமுக்கியமாதலால் வாழ்க்கைத்துணைநலத்திற்குப் பிறகு வைக்கப்பட்டதாயிற்று.

**71. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்**
**புன்கணீர் பூச றரும்.**

(பரி.) இ-ள். அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ=அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்துவைக்குந் தாழுளதோ?—ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்=தம்மால் அன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாருமறியத் தூற்றும் ஆதலான். எ-று.

---

* சிலப்பதிகாரம்.—கொலைக்களக்காதை. † திருக்குறள்.—757.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கு எய்தாதாயினும் அனுமான அளவையான் வெளிப்படுமென்பதாம். (இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது.) (௪)

விளக்கம்:—மேற்கூறிய அவதாரிகையாலும் திருக்குறளாலும், அன்புடைமை என்பது மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்றம் என்கின்ற தொடர்புடையவர்களிடத்தில் செலுத்துகின்ற ஆசையே என்றும், இவ்வன்புடைமை யிருந்தாலன்றி இல்லறமென்கின்ற வண்டியானது சரியாக நடைபெறுதென்றும், இதனை இல்லறம் சரியாக நடைபெறுவதற்கு ஒருவன் மேற்கொள்ளுவானாயின் பின்னர் தொடர்புடையவர்களிடத்தில் மாத்திரமல்லாமல் பயிற்சியின் முதிர்ச்சியால் எல்லாரிடத்திலேயும் செலுத்துகின்ற ஆசையாகி அதுவே அருளாகமுடியும் என்றும் அறிந்தோம். அன்றியும், மனைவியின்மீது அன்பு இல்லாதவழி இல்லறமானது சரியாகநடவாது என்பதைச் சிலப்பதிகாரத்தில் கூறிய "அறவோர்க்களித்தலும்" என்ற செய்யுளால் இல்லாளுக்கு இருக்கவேண்டிய மனமாட்சியும் இல்லாமற்போம் என்று கருதவேண்டும். மேலும், இவ்வன்பு அருவப்பொருளாயிருத்தல் பற்றி காட்சியளவையாக அறிவதற்கில்லையாயினும், அனுமான அளவையால் அறிதல்கூடுமென்றும், அது அன்புசெலுத்தப்பட்ட ஒருவனுக்கு வந்த துன்பத்தை அன்புசெலுத்தியவன் கண்டகாலத்து அவனை யறியாமலே அவன் கண்கள் நீரைப்பொழிவதாலேயே அறிகின்றோம். இதனை நளன் தன் மக்களையும்மனைவியையும் விட்டு இருதுபன்னனிடத்துச் சாரதியாக விருந்தகாலத்து, நளனைக்காணாத தமயந்தியின் தந்தையாகிய வீமன் அவனைக் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்ச்சியின் பொருட்டு பார்ப்பான் ஒருவனை ஒவ்வோரரசனிடத்துஞ் சென்றுதமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்றுஅறிவித்தல் வேண்டும் என்னலும், அவ்விதமே அப்பார்ப்பான் நளனைச்சாரதியாகக்கொண்ட ருதுபன்னனென்னும் அரசனிடஞ்சென்று தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்று கூறினன். அதுகேட்ட அவ்வரசன் தன்தேர்ச்சாரதியாகிய நளனோடு வீமன் பட்டினமாகிய குண்டினபுரத்தையடைந்து வீமனோடு இருக்கவும், தேர்ச்சாரதியாகிய நளன்தனது தேர்ச்சாலையில் இருந்தனன்.

அவனைக்கண்ட தமயந்தி அவன்நிறம் பாம்பின் கடியால் மாறுபட்டு கறுத்திருந்ததால் அவனை யறியக்கூடாது, அவன் சமைத்த உண வினைப் பாங்கியரால் கேட்டு வாங்கிவரச்செய்து அப்பாகத்தின் தகு தியால் நளனென்றறிந்தாளாயினும், அதனை முற்றும் அறியக் கரு தினவளாய் தன்மக்களை அந்நளனிடத்தே ஏவினள். அம்மக்களைக் கண்டவனாகிய நளன் "மக்காள்! நீவிர்யார் மக்கள்? என் மக்கள் போல்வீர்" என்று தன்னையறியாது மயங்கிக் கூக்குரலிட்டதுடன், அம்மக்களைக் கண்டவுடன் தன்னையறியாது தன் கண்களினின்றும் நீரைப்பெருக்கினான் என்பதை

"கோதை நெடுவேற்குமரனையுந் தங்கையையு
மாதியரசனருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனென்றாள்
வளையாடுங் கையாள்மதித்து."

"மக்களை முன்காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்துவீரப் புயத்தணையா—மக்காணீ
ரென்மக்கள் போல்கின்றீர் யார்மக்களென்றுரைத்தான்
வன்மக்களியானை மன்."

"மன்னனிடத்தார் வாழ்வேந்தன் மக்கள்யா
மன்னைதனைக் கான்விட்டவனேக—விந்நகர்க்கே
வாழ்கின்றோமெங்கள் வளநாடு மற்றொருவ
னாள்கின்றா னென்றா ரழுது."

"ஆங்கவர் சொன்னவுரை கேட்டழிவெய்தி
நீங்காவுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வன்னம்போற் கோங்குமலருந்திருநாட
னுள்ளம்போற் கண்ணீருகுத்து."

என்னும் நளவெண்பாச் செய்யுள்களே உங்களுக்குக் கூறுமாதலால், 'அன்பு' என்பதை யொருவன் தான் பிறர்க்குத் தெரியா வண்ணம் அடக்கமுயன்றாலும், அது அடக்குந் தகுதியுடையதன்று என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித அன்

புடையார் தேடிய பொருள்கள் தொடர்புடையார்க்கோ? அல்லது ஏனையோர்க்கும் பயன்படுவதோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

72. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(பரி.) இ-ள். அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்=அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப்பொருளானுந் தமக்கேயுரியர்;- அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்=அன்புடையார் அவற்றானேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர். எ-று.

ஆன் உருபுகளும், பிரிநிலையேகாரமும் விகாரத்தாற் றொக்கன. என்பு ஆகுபெயர். என்புமுரியராதல் * "தன்னகம் புக்க குறு நடைப் புறவின் தபுதியஞ்சிச்சீரை புக்கோன் †" முதலாயினோர்கட் காண்க. (உ)

விளக்கம்:—மேற்கூறிய திருக்குறளால் அன்புடையார்தேடும் பொருள்கள் எவையேனும் பிறர்க்கேயுரியதாம். அதனை அறுபான் மும்மை நாயன்மார்களிடத்துக் காணுதல்கூடும். மனைவியைத் தம்மிடத்தே வந்த சிவனடியார்க்கு ஈந்த இயற்பகை நாயனாரும், மகளின் கூந்தலை அறுத்துத்தந்த மானக்கஞ்சாற நாயனாரும், மங்கிலியத்தைக் கொண்டு குங்கிலியம் வாங்கிய குங்கிலியக்கலயரும், பகல் விதைத்த செந்நெல்லைப்பாதியிரவிற்கொணர்ந்து சமைத்த இளையான்குடிமாறரும் முதலாகிய நாயன்மார்களே இதற்குச் சான்றாவார்கள். இனித் தாம்தேடிய புறப்பொருளாகிய மண், பெண், பொன் ஆகிய மூன்றனையுமல்லாது அகப்பொருளாகிய உடம்பினையும் அன்பின் மிகுதியால் பிறர்க்கு ஈந்தாரும் உளர். அதனை ஓர் புறாவின் பொருட்டுத் துலையேறிய சிபியினிடத்தும் தேவர்களைக் காக்கும்பொருட்டு இந்திரன் வேண்டுகோளுக்கிணங்கித் தம்முதுகந் தண்டினையே தானமாகத்தந்த ததீசியினிடத்துங் காணுதல்கூடும். ஆதலால், அன்புடையார் எல்லாப்பொருளாலும் பிறர்க்கே யுரியராவர். அன்பில்லாதாரோ எல்லாப் பொருளாலும் தமக்கே யுரியராவர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித பொருள்கள்யாவும் பிறர்க்கே யுரியனவாகச்செய்துவிடுவது மிக்கதோர் அருமையுடைத்

* சீரை=துலாக்கோற்றட்டு. † புறநானூறு—43.

தன்றோ? ஓரன்பின் காரணமாகவோ அகம் புறமாகிய இருவிதப் பொருளையும் தந்துவிடுவது ?" என்னலும், ஆசிரியர், "இருவிதப் பொருள்கள் மாத்திரமல்ல. மக்கட்பிறப்பின் தோற்றமே அன்பினு லாகிய பயனையடைவதற்குக் காரணம். அதனை விளக்குவேன்" என்று மூன்றாவது திருக்குறளைச் சொல்லத்தொடங்கினர்.

73. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(பரி.) இ-ள். ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு=பெறு தற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை,—அன் போடு இயைந்த வழக்கு என்ப=அன்போடு பொருந்துதற்கு வந்த நெறி யின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர். எ-று.

பிறப்பினதருமை பிறந்தவுயிர் மேலேற்றப்பட்டது. இயைந்த வென்பது உபசாரவழக்கு. வழக்கு-ஆகுபெயர். உடம்போடியைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி உள தாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை யென்றாயிற்று. (௩)

விளக்கம்:—இப்பெறுதற்கரிய மானுட யாக்கையைப்பெற்ற உயிர்களுக்கு அவ்வியாக்கை வந்ததன் காரணம் பிறவிகடோறும் அன்பு செய்துவந்த நன்னெறியின் பயனென்றே நூல்வல்லவர்கள் கூறுவார்கள். ஏனெனின்? அன்பு செய்யவேண்டுமாயின் மானுட யாக்கையைப் பெறாவிடின் செய்வதற்கு ஆகாதாதலால், இவ்வு டம்பு பெற்றது அன்பு செய்வதற்கேயாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் அகம் புறமாகிய பொருள்களை யீந்து அன்பு செய்வதற்கே மக்கட்பிறவியடைந்தது என்றீர். இவ்விதம் செய்தா னுக்கு இவ்வுலகத்து அன்பால்வரும் பயன் யாதென்று அருளல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

74. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(பரி.) இ-ள். அன்பு ஆர்வமுடைமை ஈனும்=ஒருவனுக்குத் தொடர் புடையார்மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர் மாட்டும் விருப்ப

முடைமையைத்தரும்;—அது நண்பு என்னும் நாடாச்சிறப்புஈனும்=அவ்வி ருப்பு முடைமைதான் இவற்குப் பகையும் ஏொதுமலுமில்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத்தரும். எ-று.

உடைமை=உடையனுந்தன்மை. யாவரும் நண்பாதல் எல்லாப்பொரு ளும் எய்துதற்கு ஏதுவாகலின், அதனை 'நாடாச்சிறப்பு' என்றார். (ச)

விளக்கம்:—இத்திருக்குறளால் அன்பென்பது தொடர்புடை யவரிடத்தேயே செய்துவரும் ஓர் ஆசையாயினும், அவ்விதம் தொடர்புடையாரிடத்துச் செய்துவந்த அவ்வாசையானது முதிர் ந்த காலத்துத்தொடர்பு இல்லாதாரிடத்தும் சென்று அவரது நட் பினை யடைதற்கு ஏதுவாகும். அந்நட்பின் மிகுதியால் யாரிடத்தும் அன்பு செலுத்தியவனுகிய இவனுக்குப் பகைவரும் அயலாரும் இல் லாதவராகி யாவரும் நட்பினராவர். ஆகவே, வேண்டியபொருள் யாவும் அடைதற்குத் தக்கவனுய் இம்மைப்பயனை யடைந்துவிடு கின்றான் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இம்மைப்பயன் ஒன்றுதானே அன்பினுலடையும பயன்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

(பரி.) இ-ள். அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப=அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந் தோர்,—வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு=இவ்வுலகத்து இல் வாழ்க்கைக்கண் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென் றெய்தும் பேரின்பத்தினை. எ-று.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண்நின்று மனைவியோடும் மக் களோடும் ஒக்கலோடுங் கூடியின்புற்றார் தாம்செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவாராகலின், 'இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு' என்றார். தவத்தால் துன்புற்றெய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டும் இன்புற்று எய்துதல் அன்பானன்றி இல்லையென்பதாம். (ரு)

விளக்கம் :—மேற்கூறியதிருக்குறளால்நீங்கள்கொண்டதோர் ஐயம் அறவே வொழிந்ததாயிற்று. என்னையோவெனின்? இல் வாழ்க்கையிலிருந்து மனைவி மக்கள் சுற்றம் ஆகியதொடர்புடை

யோர்களோடு ஒருவன் செய்த வேள்வித்தொழிலால் இவ்வுலகத்து இன்புற்று புகழினையடைந்து மறுமையில் துறக்கத்திற்சென்று அவ்வின்பத்தையும் அடைகின்றவனாகிறான். பன்னெடுநாள்

"காயிலை யுதிர்ந்தகனி சருகு புனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையில் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடைவைகியும் தோயமதில் மூழ்கியும்
தேகங்கள் என்பெலும்பாய்த்
தெரிய நின்றும் சென்னிமயிர்கள் கூடாக் குருவி
தெற்ற வெயிலூடிருந்தும்
வாயுவையடக்கியும் மனத்தினை யடக்கியும்
மௌனத்திலேயிருந்து
மதிமண்டலத்திலே கனல்செல்ல அமுதுண்டு
வனமூடிருந்தும் அறிஞர்
ஆயுமறை முடிவான அருள் நாடினார் அடிமை
யகிலத்தை நாடல் முறையோ
அண்ட பகிரண்டமும் அடங்க வொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே." *

என்று தாயுமானார் அருள் செய்தபடி எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு துறவிகளடையும் பேரின்பத்தினை எல்லா இன்பங்களையும் அநுபவித்துக்கொண்டு இருக்கின்ற இல்லறவாழ்க்கையுள் செய்கின்ற இவ்வன்பின் காரணம் உண்டுபண்ணுமாயின், இம்மை மறுமை ஆகிய இரண்டு பயன்களையும் இவ்வன்பே யடைவிக்கும் என்பது பெற்றாம் என்றனர். கேட்டவராகிய மாணாக்கர், "அன்பின் பயனால் இருமையும் பெறுவதற்குத்தக்கவராவோமென்றறிந்தோம். ஆயின், இவ்வன்பு அறஞ்செய்வதற்கே உபயோகித்தல் கூடுமன்றி மறம் நிகழ்ந்துழி எவ்வித பயனைத் தரும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

* தாயுமானார் பாடல்.

76. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(பரி.) இ-ள். அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் = அன்பு துணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர் சிலரறியார்;—மறத்திற்கும் அஃதே துணை = வினை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது. எ-று.

ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்துழி அவனை நட்பாகக்கருதி அவன்மேலன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந்துணையாமென்பார், 'மறத்திற்குமஃதேதுணை' என்றார், "துன்பத்திற்கியாரே துணையாவர்*" என்புழிப்போல. இவையைந்துபாட்டானும் அன்பினது சிறப்புக்கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—அன்பென்னும் பெரியதோர் துணை அறம்செய்வதற்கு மாத்திரமே துணையாக நிற்குமென்று சிலர் கூறுவாராவர். அவ்விதம் சொல்வோர் அறிஞராகார். ஏனெனின்? இவ்வன்பே மறம்செய்யாதிருப்பதற்கும் துணையாகும். அது எவ்விதமோவெனின்? ஒருவனிடத்தே மற்றொருவனுக்குப் பகைகாரணமாக உள்ளத்தில் மறம் உண்டாகுமாயின், அதனை நினையாது நெடுங்காலம் யாவரிடத்தும் அன்புசெய்த பெரியதோர் பயிற்சியால் இப்பகைவனிடத்தும் அன்பு செலுத்துவானாயின், முன்பு தன்மனத்திற்றோன்றியகொடுமையானது அடியோடொழிந்துபோம். ஆதலால், அன்பு செய்கின்ற ஒருவனுக்கு மறம் செய்யாதிருப்பதற்கும் அன்பே துணையாகுமென்று அறிந்தோமென்றனர். இதனை தருமராசன் சூதில்தோற்றுத் துரியோதனனால் காட்டுக்குத் துறத்தப்பட்டானாயினும், அக்காட்டினிடத்துத் துரியோதனனை ஓர் கந்தருவன் பிணித்துக்கொண்டு ஆகாயவழியே செல்கின்றான் என அறிந்தவிடத்துத் தன் தம்பியரை யேவி மீட்டுக்கொண்டுவந்தான் என்னும் கதையே மறத்திற்கும் அன்பே துணையென்று நிலைநாட்டும் என்றனர். அதுகேட்டமாணாக்கர், அன்புசெய்தார் அடையும்பயன் யாவும் அறிந்தோம். ஆயின், அன்புசெய்யாதார்க்கு எவ்வித பய

* திருக்குறள்.—1299.

னுண்டாகும் என்பதையுமறிய அவாவுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(பரி.) இ-ள். என்பு இலதனை வெயில்போலக் காயும்=என்பில்லாத உடம்பை வெயில் காய்ந்தாற்போலக்காயும்—அன்பு இலதனை அறம்=அன்பில்லாதவுயிரை அறக்கடவுள். எ-று.

என்பிலது என்றதனால் உடம்பென்பதூஉம், அன்பிலது என்றதனால் உயிரென்பதூஉம் பெற்றாம். வெறுப்பின்றி எங்குமொருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற்சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற்கெடுமென்பதாம். அதனைக்காயுமென வெயிலறங்களின் மேலேற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற் கறங் கூற்றம்*" எனப்பிறருங் கூறினார். (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் அன்பு செய்யாதான் ஒருவன் அடையும் பயன் அறக்கடவுளது கோபம் என்பதுதெரிந்தோம். அவ்விதம் கோபிப்பதும் இவ்விதமென்று உவமை வாயிலாக விளக்க வேண்டி நம் தெய்வப்புலவர், எலும்பில்லாத உடம்பினைப்பெற்ற புழு முதலியவுயிர்கள் தாமே வெயிலில்சென்று எவ்விடத்துமொரு தகுதியாகக் காய்கின்ற சூரியனது கிரணங்களால் தம் உடம்பின் மென்மையினால் எரிக்கப்பட்டு இறந்துபோவதுபோல், அன்பென்னும் நற்குணமில்லாத வொருவனும் எவ்வுயிர்களையும் ஒப்பநோக்கும் அறக்கடவுளின் கோபமென்னுந் தீயினால் அழிந்துபோய் விடுவான் என்று கூறினர் என்றறிந்தோம் என்றனர். அது அறிந்த மாணாக்கர், "ஆயின், அவ்விதம் அன்பு இல்லாத உயிர்வாழ்க்கை உலகத்துப் பயன்படாதோ?" என்னலும்,ஆசிரியர் கூறுவாராயினர்.

நான்மணிக்கடிகை:—

"கல்லாவொருவற்குத் தன் வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்தாற்கு அறங்கூற்றம் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகுவாள்."

78. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(பரி.) இ-ள். அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை=மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்—வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று=வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற் போலும். எ-று.

கூடாதென்பதாம். வன்பால்=வன்னிலம். வற்றலென்பது:—பால்வி ளங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர். (அ)

விளக்கம் :—இத்திருக்குறளால் ஒருவன் மனத்தினிடத்தே சிறிதும் அன்பில்லாது இல்லறத்தைச்செய்து உயிர்வாழ்வோமென்று முயற்சிப்பானாயின், அம்முயற்சியானது சிறிதும் பயன்படாமற் போம் என்றறிந்தோம். அதனை ஆசிரியர், எப்போதும் தளிர்த்தலே பெறுதமரம் ஒன்று விளைவதற்கே யோக்கியமில்லாத நிலத்தினிடத்தே விளைவது என்னின் எவ்விதம் அது சாத்தியமாகாதோ, அவ்விதம் இதுவும் சாத்தியமாகாது என்று அழகுபெற உவமை முகத்தாற் கூறினார் ஆதலால், உலகத்தில் வாழவிரும்பிய வொருவன் அன்பினையே துணைக் காரணமாகப் பெறுதல் வேண்டுமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், “ஒருவன் அன்பில்லாவிடினும் மிக்கதோர் பொருளுடையவனாக விருப்பின் அவன் பயனடைதல் கூடாதோ?” என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

79. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(பரி.) இ-ள். யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு=யாக்கையகத்தின்கண் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்கு - புறத்து உறுப்பெல்லாம் எவன்செய்யும்=ஏனைப்புறத்தின்கண் நின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்னவுதவியைச் செய்யும்? எ-று.

புறத்துறுப்பாவன :—இடனும், பொருளும், ஏவல் செய்வாருமுதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றாற்பயனின்மையின், ‘எவன்செய்யும்’ என்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையிற்

கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்னபயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்பிலாதார்க்கென்றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமையறிக. (௯)

விளக்கம்:—ஒருவனுக்கு புறவுறுப்புக்களாயிருக்கின்ற இடம், பொருள், ஏவல் எல்லாம் எத்துணை இருந்தும் அகத்துறுப்பாகும் அன்புமாத்திர மில்லாவிடின் மேற்கூறிய இடத்தாலும் பொருளாலும் ஏவல் செய்வாராலும் யாதொரு பயனும் அடைவதற்கில்லாமற்போம் என்பது திண்ணமாகும். இக்கருத்துப் பற்றியே நன்னெறியிலும்

> " இல்லானுக் கன்பிங்கிடம் பொரு ளேவல்
> மற்றெல்லா மிருந்தும் அவற்கென் செய்யும்?—நல்லாய்!
> மொழியிலார்க்கேது முதுநூல் தெரியும்
> விழியிலார்க்கேது விளக்கு"

என்று கூறியுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " அறவோய்! அன்பின்பயனும் பயனில்லாமையும் நன்கு அறிந்தோம். ஆயின், அவ்விதவன்பில்லாஉயிர் உலகத்து உள்ள காலத்து எவ்வித தகுதியோடு இருத்தல் கூடும் என்று அறிவித்தல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 80. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
## கென்புதோல் போர்த்த வுடம்பு.

(பரி.) இ-ள். அன்பின் வழியது உயிர்நிலை=அன்புமுதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர்நின்றவுடம்பாவது;—அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல்போர்த்த=அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற்போர்த்தனவாம்; உயிர்நின்றனவாகா. எ-று.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவைநான்குபாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங்கூறப்பட்டது. (ய)

விளக்கம்:—இவ்வதிகாரத்தின்கடைசிதிருக்குறளால் அன்பை முதலாகக்கொண்டு அதன்வழிப்பட்ட உடம்பு ஒன்றே உயிரோடு கூடியஉடம்பு என்றும், அவ்விதம் அல்லாத உடம்புகள் உயிரற்று எலும்பு ஒன்றினைத் தோலால்போர்த்து நிற்கின்ற உடம்

பிற்கே சமானமாகும் என்றும் அறிந்தோம். ஏனெனின்? அன்பில்லாத வொருவன் உலகத்துப்பயனை யடையவில்லையாகையால், மூச்சில்லாது கிடக்கின்ற பிணத்தோடு சமானமாகக் கருதாவிடினும் மூச்சு இயங்குகின்ற பிணமாகக் கருதல்வேண்டும் என்பது பெறப்படுகின்றது என்றனர்.

அதுகேட்ட மாணாக்கர், "அன்புடைமை யென்பது ஈதென அறிந்தோம். ஆயின், இவ்வன்புடைமையின் ஐந்தாவது திருக்குறளில் 'இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடி இன்புற்றார் தாம் செய்த வேள்வித்தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவாராகலின் இன்புற்றாரெய்துஞ் சிறப்பென்றார்' என்ற பரிமேலழகர் உரையை உய்த்துணர்ந்தோம். அவ்வுரையினுள், 'தாம் செய்த வேள்வித்தொழிலால்' என்றுஉள்ளதால், வேள்வியாவதுயாது? இதனை விளக்கல் வேண்டும்" என்றனர். இதுகேட்ட ஆசிரியர், "வேள்வியாவது உலகத்து மக்கள் இயற்றும் ஐம்பெரு வேள்விகளுள் மக்கள் வேள்வியாகிய விருந்தோம்பலே ஏனைய வேள்விகள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததாகும். ஆதலால், நம் தெய்வப்புலவர் இல்லறத்தானுக்குக் கூறிய 'வேள்வி' என்பது விருந்தோம்பலே யாகும். அது கருதியே இதனையடுத்து ஒன்பதாம் அதிகாரமாக 'விருந்தோம்பல்' கூறப்பட்டுள்ளது என்றனர்.

## 9 அதிகாரம்.

## விருந்தோம்பல்

(பரி.) அஃதாவது:—இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனாகாதாரை நினைந்து செய்வனவாகலானும், பின்னையவிரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறாகாத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—இல்வாழ்பவனொருவன் தான் செய்யவேண்டிய தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று சொல்லப்

பட்ட ஐந்திடத்தும் செய்யவேண்டிய அறங்களுள் நடுநின்ற விருந்தே முன்னைய விரண்டற்கும் பின்னைய விரண்டற்கும் முதலாக நிற்றலால் விருந்தோம்பல் மிகச் சிறந்ததென்றும் இது மேற்கூறிய வாழ்க்கைத் துணைவியின்மீது உள்ள அன்பின்மிகுதியாற்றான் நிறைவேறுதல் வேண்டும் என்பதும் பெற்றும்.

81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி.) இ-ள். இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம்=மனைவியோடும் வனத்திற்செல்லாது இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றிவாழுஞ் செய்கையெல்லாம்—விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு= விருந்தினரைப்பேணி அவர்க்கு உபகாரஞ் செய்தற்பொருட்டு. எ-று.

எனவே, வேளாண்மைசெய்யாவழி இல்லின்கண் இருத்தலும் பொருள் செய்தலுங் காரணமாக வருந் துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம். (க)

விளக்கம்:—இத்திருக்குறளால் மேற்கூறிய வண்ணம் மனைவியோடு இல்லறத்திருந்து பழியஞ்சிச் சம்பாதிப்பதெல்லாம் விருந்தினரைப் பாதுகாத்து அவர்க்கு வேண்டுவனவாகிய உபகாரங்களையெல்லாம் செய்வதற்கே யென்பது பெற்றும். அவ்விதமில்லாவிடின் பொருளைத் தேடுங்காலத்து உண்டாகும் துன்பந்தரக்கூடிய செய்கைகளுக்கெல்லாம் யாதொரு பயனுமில்லாமற்போம் என்றறிந்தனம் என்றனர். அது கேட்டமாணுக்கர், “விருந்தினரை ஓம்புதலெனின் தான்உண்ணும் உணவினையளித்தலோ? அல்லது விருந்தினரின் ஏழைமைக்குத் தக்கவளவாக ஏதேனும் ஓர் உணவைச் சமைத்து உண்பிப்பதோ?” என்று கேட்டனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(பரி.) இ-ள். சாவா மருந்து எனினும்=உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும்,—விருந்து புறத்ததாத் தான் உண்டல்=தன்னைநோக்கி

வந்த விருந்து தன் இல்லின்புறத்ததாகத் தானே உண்டல்—வேண்டற் பாற்று. அன்று=விரும்புதல் முறைமையுடைத்தன்று. எ-று.

சாவாமருந்து=சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. 'விருந்தின்றி யே ஒருகால் தானுண்டலைச் சாவாமருந்தென்பார் உளராயினும் அதனை யொழிக' என்றுரைப்பினுமமையும். (இவையிரண்டுபாட்டானும் விருந் தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.) (உ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் கேட்ட ஐயம் நீங்கிய தன்றோ? ஒருவன்தான் உண்ணப்படும் பொருள் சாவா மருந்து என்னும் அமிர்தமாகவே யிருந்தாலும் வந்தவிருந்தினனுக்கு அத னைப்பகுத்துக் கொடுத்தலே விருந்தோம்பு முறைமையே யன்றி, செல்வத்திற்குத் தக்கவளவாக தனக்கோர் உணவும் விருந்தினரின் எளிமைக்குத்தக்கவளவாக அவர்க்கோருணவும்செய்தல் முறைமை யன்று என்று கூறினர். அது கேட்டமாணாக்கர், "இவ்விதம் அமிர் தம் போன்ற உணவினை வருகின்ற விருந்தினருக்கும் இட்டு உண் பது முறைமையெனின், ஒருவனது செல்வமானது விரைவில் அழிந்துபோய் விடுமன்றோ?" என்னலும். ஆசிரியர் கூறுவாராயி னர்.

83. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(பரி.) இ-ள். வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை=தன்னை நோக்கி வந்தவிருந்தை நாடோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை—பரு வந்து பாழ்படுதல் இன்று=நல்குரவான் வருந்திக்கெடுதலில்லை. எ-று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற்பொருள்தொலையாது மேன்மேற் கிளைக்குமென்பதாம். (ங)

விளக்கம்:—இச்செய்யுளால் இல்லறத்தானொருவனை நோக்கி வந்த விருந்தினர் யாவரையும் மேற்கூறிய விதம் உண்பித்துக் காப் பாற்றுவானது இல்வாழ்க்கையானது தரித்திரத்தால் துன்பப் பட்டுக் கெட்டுப்போதலில்லை என்பதறிந்தோம் என்றனர். அது கேட்டமாணாக்கர், "எந்தையே! இது மிகுதியும் வியப்பாகவேவுள் ளது. தன்கையிலுள்ள பொருளை யெல்லாம் ஒருவன் விருந்தி

னர்க்கு வாரிச்செலவழித்து வருவானாயின் அவனுக்குத் தரித்திரம் வாராது என்று கூறுவது இயற்கைக்கு விரோதமாகவுள்ளது" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

84. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(பரி.) இ-ள். செய்யாள் அகன் அமர்ந்து உறையும்=திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும்—முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்=முகமினியனாய்த் தக்கவிருந்தினரைப் பேணுவானது இல்லின்கண். எ-று.

மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி=ஞானவொழுக்கங்களாலுயர்தல். பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறியவாறு. (௪)

விளக்கம்:—நீங்கள் கொண்டதோர் வியப்பு உண்மையறியாத காலத்து வியப்பாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை. இத்திருக்குறளில் நம் தெய்வப்புலவர் திருவருள்செய்த வண்ணம் இவ்விதம் விருந்தினரையுபசரிக்கும் இல்லறத்தான் ஒருவன் நற்செல்வம் நல்வழியில் செலவிடப்படுவதால், அதனைக்காணும் அச்செல்வத்தலைவியாகிய இலக்குமி தன்பொருள் நல்வழியில் செலவழிகின்றதென்றும் அது ஞான வொழுக்கங்களாற் சிறந்த விருந்தினரை ஓம்புகின்றதென்றும் அவ்விடத்திலே மனமகிழ்ந்து வாழ்வாளாதலால், பொருளானது சிறிதுங் குறையாது மேன்மேலும் கிளைக்குமென்பதைப் பெற்றோமென்றனர். கேட்ட மாணாக்கர், "இலக்குமியானவள் வருவதும், மனம் மகிழ்வதும், பொருள் கிளைப்பதும் உண்டென்பதை நாங்கள் எவ்விதமறிதல்கூடும்? அதை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுகின்றனர்.

85. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(பரி.) இ-ள். விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்=முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு—வித்தும் இடல்வேண்டுமோ=வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா. எ-று.

'கொல்' என்பது அசைநிலை. தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது. (௫)

விளக்கம்:—மக்காள்! ஏன் நீவிர் இவ்விதம் ஐயுறுகின்றீர்? உண்மையாகவே ஒருவன் தன்னிடத்தே வந்த விருந்தினரை யுண்பித்து மிகுந்துநின்ற உணவினைத் தான்உண்ணும் முறைமையைக் கைக்கொண்டிருப்பானாயின், அவனுக்குத் தெய்வமே ஏவல்செய்யும் என்பதை யறிதல்வேண்டும். அதனை இத்திருக்குறளால் இவ்விதம் செய்வான் விளைநிலத்திற்கு விதையிடாமல் தானேவிளையும் என்னுங் குறிப்பே அமைந்ததாகவுள்ளது. அன்றியும், அத்தன்மை யுடையானுக்குத் தெய்வமே ஏவல்செய்யும் எனப் பெரிய புராணத்துள் குண்டையூர்க்கிழார் என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு செந்நெல்லரிசியும், பொன்போன்ற பருப்பும், ஏனைய பொருள்களும் தினந்தோறுங் கொடுத்துவந்தனர் என்றும், மழைவளஞ் சுருங்கியதால் குண்டையூர்க்கிழார் தாம் செய்து வந்த பணிக்கு இடையூறுவரும் என்று அஞ்சி இறைவனைத் தியானித்த காலத்து, எங்கும் நிறைந்த கருணாநிதி குண்டையூரில் நெல்மலை நிறைப்பித்துக் குண்டையூர்க்கிழார் அறியும்படிச் செய்தனர் என்றும், அந்நெல்மலைப் பரவையார் மாளிகைவந்து சேர ஆளில்லை யென சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப் பாடின காலத்து இறைவன் பூதகணங்களால் திருவாரூர் முற்றும் நிறையும்படிக் கொண்டு சேர்த்தனர் என்றும் கூறுகின்ற சரித்திரத்தைப் பின் வரும் பெரியபுராணச் செய்யுள்களே உங்களுக்கு விளக்கும்.

"தாளாண்மை யுழவுதொழிற் றன்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனு மேதக்கோர்
வாளார் வெண்மதியணிந்தார் மறையவனாய் வழக்கினில்வென்
றாளாகக் கொண்டவர்தா ளடைந்ததன்பா லொழுகுவார்."

"செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்புந் தீங்கரும்பின்
இன்னல்ல வமுதமுத லெண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்றொண்டர்க் கமுதாக வழுவாமல்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார்."

" ஆனசெய லன்பின்வரு மார்வத்தான் நீடிமகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமன் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப வெடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினுன் மனமயங்கி வருந்துவார்."

" வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற தென்செய்கே னெனநினைந்து
துன்றுபெருங் கவலையினுற் றுயரெய்தி யுண்ணுதே
அன்றிரவு துயில்கொள்ள வங்கணர்வந் தருள்புரிவார்."

" ஆரூரன் றனக்குன்பா னெற்றந்தோ மென்றருளி
நீரூருஞ் சடைமுடியார் நிதிக்கோமான் றனையேவப்
பேரூர்மற் றதனெல்லை யடங்கவுநென் மலைபிறங்கல்
காரூரு நெடுவிசும்புங் காக்கநிறைந் தோங்கியதால்."

" அவ்விரவு புலர்காலை யுணர்ந்தெழுவா ரதுகண்டே
யெவ்வுலகி னென்மலைதா னிதுவென்றே யதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார்."

" நாவலூர் மன்னனுர்க்கு நாயனுரளித்த நெல்லிங்
கியாவரா லெடுக்கலாகு மிச்செயலவர்க்குச் சொல்லப்
போவன்யா னென்று போந்தார் புகுந்தவா றருளிச்செய்து
தேவர்தம் பெருமானேவ நம்பியு மெதிரே சென்றார்."

" குண்டையூர்க் கிழவர் தாமு மெதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனுர் பாதந்தன்னிற் றொழுதுவீழ்ந் தெழுந்துநின்று
பண்டெலா மடியேன்செய்த பணியெனக் கின்றுமுட்ட
அண்டர்தம் பிரானுர்தாமே நென்மலை யளித்தா ரென்று."

" மனிதரா லெடுக்கு மெல்லைத்தன்று நென்மலையி னுேக்கம்
இனியென்னுற் செய்யலாகும் பணியன்றி தென்னக்கேட்டுப்
பனிமதி முடியாரன்றே பரிந்துமக் களித்தார் நெல்லென்
றினியன மொழிந்து தாமுங் குண்டையூ ரெய்தவந்தார்."

"விண்ணினை யளக்கு நெல்லின் வெற்பினை நம்பிநோக்கி
அண்ணலைத் தொழுதுபோற்றி யதிசய மிகவுமெய்தி
யெண்ணில்சீர்ப் பரவையில்லத் திந்நெல்லை யெடுக்கவாளுந்
தண்ணில வணிந்தார் தாமேதரிலன்றி யொண்ணுதென்று."

"ஆளிடவேண்டிக் கொள்வா ரருகு திருப்பதியான
கோளிலியிற் றம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
வாளன கண்மடவாள் வருந்தாமே யெனும்பதிக
மூளவருங் காதலுடன் முன்னெழுது பாடுதலும்."

## தேவாரம்.

பண்: நட்டராகம். 7-ம் திருமுறை

"நீளநினைந்தடியே னுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமான் அவை யட்டித்தரப் பணியே."

"கொல்லைவளம் புறவிற் றிருக் கோளிலி மேயவனை
நல்லவர்தாம் பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட வாட்கள்வேண்டி நினைந்தேத்திய பத்தும் வல்லார்
அல்லல்களைந்துலகி னண்டர் வானுல காள்பவரே."

ஆதலால், மேற்கூறிய மூன்று திருக்குறளின் வண்ணம் ஞான வொழுக்கங்களில் நிறைந்த விருந்தினரைக் காக்கும் இல்லறத்தானுக்குச் செல்வமானது மேலு மேலும் கிளைக்குமென்பதும், அதனால் அவன் இம்மையிலடையும் பயனாகிய புகழை யடைவானென்றுந் தெரிந்து கொண்டோ மென்றனர். கேட்ட மாணாக்கர், "தாங்கள் கூறியவண்ணம் விருந்தோம்புவானுக்கு இம்மைப் பயனுண்டென்றறிந்தோம். இனி, இவ்விருந்தோம்பலால் மறுமைப்பயனு மடைதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(பரி.) இ-ள். செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் = தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான் — வானத்தவர்க்கு நல்விருந்து = மறுபிறப்பில் தேவனாய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம். எ-று.

வருவிருந்தென்பது-இடவழுவமைதி. நல்விருந்து = எய்தாவிருந்து. (இதனான் மறுமைக்கண் எய்தும்பயன் கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய மறுமைப் பயனையும் அறிந்தோம். அதாவது, எவனொருவன் தன்னிடத்தே வந்த விருந்தினனை யுபசரித்து இனி வரப்போகும் விருந்தினரோடு உண்ணலாமெனக் காத்திருப்பானோ அவனைத் தேவஉலகத்திலே யடையக்கூடாத நல்ல விருந்தினன் என்று தேவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றமையால், மறுமைப் பயனானது கைமேல் கிடைத்ததாயிற்று என்றனர். கேட்ட மாணாக்கர், "மறுமைப்பயனு மிதுவெனவறிந்தோம். ஆயின், இல்லறத்தானொருவன் செய்யவேண்டிய பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் ஆகிய வேதமோதல், தீயோம்பல், விருந்தோம்பல், நீர்க்கடனியற்றுதல், பலியையிடுதல் என்கின்றயாகங்களுள் முதன்மையாகக்கூறிய மானுடயாகமாகிய விருந்தோம்பலுள் எவ்வளவு விருந்தினை எவ்வளவுகாலம் உபசரித்தல்வேண்டும் என்பதை யறிவித்தல் வேண்டும" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(பரி.) இ-ள். வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை = விருந்தோம்பலாகிய வேள்வியின்பயன் இன்ன அளவிற்றென்பதோரளவுடைத்தன்று; — விருந்தின் துணைத் துணை = அதற்கு அவ்விருந்தின் தகுதி யளவே அளவு. எ-று.

ஐம்பெருவேள்வியின் ஒன்றாகலின் வேள்வியென்றும், பொருளளவு "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால் — வான்சிறிதாப் போர்த்து

விடும்''*ஆகலின், 'இனைத்துணைத்தென்பதொன்றில்லை' என்றுங் கூறினார். இதனால் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் மாணுடயாகமாகிய விருந்தோம்பலின்பயன் இன்னவளவுடையது என்னும் ஓர் வரையிலை யுடையதன்று. ஆயின், வந்தவிருந்தினர் ஞானவொழுக்கங்களின் அளவிற்குத் தக்கவளவாக விருந்திட்டானொருவனுக்குப் பயன் கிடைக்குமேயன்றி, அவ்விதமல்லாமல் ஞானவொழுக்க மற்ற தகுதியில்லாவிருந்தினர் பன்னூராயிரவர்க்கு விருந்திடினும் விருந்திட்டோன் யாதொருபயனும் அடைதற்கு இல்லை என்பதும் பெற்றோம் என்றனர். அது கேட்டமாணாக்கர், "பெரியோய்! அது எவ்விதம் ஞானவொழுக்கங்களில் சிறந்தார் உண்பராயின் மிக்க பயனையடைவது?" என்னலும், "மக்காள்! இது கருதியன்றோ நாலடியாரில் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்துள்

" உறக்குந் துணையதோ ராலம் வித்தீண்டி
இறப்ப நிழற்பயந்தா அங்கு—அறப்பயனுந்
தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்''.

என்று கூறியுள்ளது. அதாவது, ஒருவன்தான் செய்யும் தருமமானது மிகச்சிறிதாயினும் அதனைத் தக்கவர்க்குச் செய்வானாயின் அத்தருமம் பரந்த ஆகாயமும் அதன் அளவைக் கருதுங் காலத்து மிகச்சிறியது என்னும்படிப் பயன் தந்துவிடும். அது ஆலம் விதை மிகச் சிறியதாயினும் வளர்ந்த காலத்து அரசர் முதலியோரும் இருக்கக்கூடிய பெரியதோர் நிழலை யுண்டுபண்ணுவது போல், என்று கூறியதாயிற்று. இதனைக் கண்ணன், குசேலன் கொண்டு வந்த அவலினை மூன்று கையளவு உண்டதின் பயனாகவே, மிக்க தாரித்திரன் என்னும் காரணப்பெயர் கொண்ட குசேலன் குபேரனைப்போல் செல்வத்தைப் பெற்றான் என்னும் கதையே விளக்கிக்காட்டுவதாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "விருந்தின் பயனும் விருந்தினரின்னாராக விருத்தல் வேண்டுமென்பதனையு மறிந்தோம். இனி, தேடிய பொருளை இவ்விதம் நல்வழியில் செலவிடாது நிற்பவற்கு எவ்விதபயனுண்டாகும் என்பதையுமறியவிரும்புகின்றோம்'' என்னலும், ஆசிரியர் கூறுவாயினர்.

88. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(பரி.) இ-ள். பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் = நிலையாப்பொருளை வருந்திக் காத்துப் பின் அதனையிழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோடு இலமாயினேமென்றிரங்குவர்—விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் = அப்பொருளான் விருந்தினரை ஓம்பி வேள்விப்பயனையெய்தும் பொறியிலாதார். எ-று.

"ஈட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடுந்துன்பம்" ஆகலின், 'பரிந்தோம்பி' என்றார். வேள்வி-ஆகுபெயர். (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் விருந்தினரை யோம்பாத ஒருவன் தான் அடைந்த பொருளை 'இது நிலையாதது' என்றறியாமையால் அதனை மிக வருந்திக்காத்தானாயினும், ஊழ்வலியால் அதனையிழந்து 'யாம் இதுகாறும் காத்தோமாயினும் காத்ததாகியவப்பொருளுக்கும் நமக்கும் யாதோர் சம்பந்தமும் இல்லாமல் போயிற்றே' என்று வருந்துவான் என்றறிந்தோம். பொருளையொருவன் தேடுதலும், தேடிய பொருளைக்காத்தலும், காத்த பொருள் குறைபடுதலும், குறைந்தபொருள் முற்றும் போய்விடுதலும் தேடிய அவனுக்குத் துன்பந்தருமென்பதை நாலடியாரில், ஈயாமை என்னுமதிகாரத்துள் கூறிய

"ஈட்டலுந் துன்பம் மற்றீட்டிய வொண் பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்."

என்னுஞ் செய்யுளே நிலைநாட்டும். அன்றியும், பொருளை நல்வழியில் செலவழியாதார் இழப்பது திண்ண மென்பதை நாலடியாரில், செல்வம் நிலையாமை என்னும் அதிகாரத்துள்,

"உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட!
உய்த்தீட்டுந் தேனீக் கரி."

என்று கூறியுள்ள செய்யுளே பெரியோர் சான்றாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொருள் உள்ளகாலத்து ஒருவன் விருந்தினைச் செய்யாவிடத்து அவன் செல்வத்தால் அவனுக்கேனும் செல்வந்தனுக்குரிய வின்பம் உண்டாதல் கூடுமோ? அன்றி, எவ்வித தகுதியோடு இருப்பன் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(பரி.) இ-ள். உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை = உடைமைக்காலத்து இன்மையாவது விருந்தோம்பலையிகழும் பேதைமை:- மடவார்கண் உண்டு = அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது, பேதையார் மாட்டேயுளதாம். எ-று.

உடைமை = பொருளுடையனுந்தன்மை. பொருளாற்கொள்ளும்பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையைஇன்மையாக உபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலையிகழிற் பொருள் நின்ற வழியும் அதனாற்பயனில்லையென்பதாம். (இவையிரண்டுபாட்டானும் விருந்தோம்பாவழிப் படுங்குற்றங் கூறப்பட்டது.)

விளக்கம்:—இத்திருக்குறளால் மிக்க பொருளுடையானொருவன் தான் இல்லறத்தானாக விருப்பது விருந்தோம்பற்கு என்றறியாது, அவ்விருந்தோம்பலை யிகழ்ந்து பேதைமைக் குணமுடையனாக விருப்பானாயின், அவன் தேடிய பொருளால் அடையவேண்டிய இம்மை மறுமைப் பயன்களை யடைவதற்கில்லாமற் போவதுடன், செல்வமிருந்தகாலத்து அதனைக்கையாளத் தகுதியில்லாமையால் வறிஞன் ஒருவன் தகுதியில் நின்றவனாகின்றான் என்றும் அறிகின்றோம். ஆதலால், விருந்தினைச் செய்யாதவனைச் செல்வமுற்றவனாக வெண்ணப்படுவதற்கில்லை என்றனர். அது கேட்டமாணாக்கர், "விருந்தினரையுபசரிக்கும் விதம் எவ்விதம் என்பதையும் எங்களுக்கறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் பின்வருமாறு கூறுவாராயினர்.

90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(பரி.) இ-ள். அனிச்சம் மோப்பக் குழையும்=அனிச்சப்பூ மோந்துழி யன்றிக்குழையாது ;—விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும்=விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். எ-று.

அனிச்சம்-ஆகுபெயர். சேய்மைக்கண்கண்டுழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றாற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடிநீங்குதலின், தீண்டியவழி யல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனான் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது. (௰)

விளக்கம்:—விருந்தோம்பலின் இறுதிக்குறளாகிய இத்திருக்குறளால் கையால்தொட்டு மூக்கால் மோந்தபின்னே அனிச்சத்தின் பூ வாடும் என்றும், ஆனால் விருந்தினரோ தூரத்தில் வருகின்ற காலத்தேயே இல்வாழ்வான் தன் முகத்தைச்சற்று மாறுபடக் காண்பிப்பனாயின் அது கண்டு தம்முடைய முகமும் மாறுபட்டு, வாடி, வந்தவழியே செல்வர் என்றும், ஆகவே விருந்தினர் மிக மெல்லியரென்றும் பெறுவதாயிற்று. ஆதலால், இல்வாழ்வானொருவன் விருந்தினரைக் காணக்கூடிய தூரத்தில் கண்டகாலத்தேயே முகத்தை யினிமையாகக் காட்டுதல்வேண்டும். இனிய முகங்கண்ட விருந்தினர் மகிழ்வுற்றுச் சமீபத்தில் வந்தகாலத்து இனிய சொற்களைச் சொல்லவேண்டும். அவ்வினிய சொற்களைக்கேட்டவிடத்தே விருந்தினர் உண்ண உடன்படுவாராயின், நன்றாக உணவு முதலியவைகளை யவர்க்கிட்டு உண்டு மகிழச் செய்தல்வேண்டும். இவையே விருந்தினர்க்குச் செய்யுமுபசாரமாகும் என்றனர். கேட்ட மாணாக்கர், "யாவும் நன்குணர்ந்தோம். இனி, நெருங்கிவந்த விருந்தினர் ஒருவருக்கு இனிய சொற்கள் கூறுவது எவ்விதம் என்பதனை யறிவித்தல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 10. அதிகாரம்.

## இனியவைகூறல்.

---

(பரி.) அஃதாவது மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பன வாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். இதுவும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—இனியவை கூறல் எனின் இனிய சொற்களைச் சொல்லுதல் என்று பொருள்படுவதாயினும், அவ்வினிய சொற்கள் ஒருவன் மனத்தினிடத்தே உண்டாகும் மகிழ்ச்சியை வெளிப்படுப் பனவாகிய சொற்களாயின் இனியவாகும். இவ்வித சொற்கள், விருந் தினைச் செய்வார்க்கு இருந்தே ஆகவேண்டுதலின், இவ்வதிகாரம் விருந்தோம்பலென்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டுள் ளது.

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(பரி.) இ-ள். இன்சொல் = இன்சொலாவன: — ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல் = அன்போடு கலந்து வஞ் சனை யிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார்வாயிற் சொற்கள். எ-று.

ஆல்-அசைநிலை. அன்போடு கலத்தல் = அன்புடைமையை வெளிப்படுத் தல். படிறின்மை = வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாஞ் செம்மை யுடைத்தாய்த்தோன்றலின், அறம், ‘செம்பொருள்’ எனப்பட்டது. இலவாஞ் சொல்லென இயையும். வாயென வேண்டாதுகூறினார், தீயசொற்பயிலா வென்பது அறிவித்தற்கு. இதனான் இன்சொற்கு இலக்கணங் கூறப் பட்டது. (க)

விளக்கம்:—நீங்கள் முன்பு வினவிய இன்சொல்லென்பது இது வென இவ்வதிகாரத்தால் அறிதல்கூடும். முதலாவது திருக்குறளி லேயே இன்சொல்லின் இலக்கணம் உலகத்தாரறியவேண்டி இயம் பினராயினர். அதாவது, இன்சொல்லென்பது அன்புநிறைந்து சிறி

தும் பொய்மையில்லாது அறம் இதுவென உணர்ந்த மூதறிஞர் வாயினிடத்தே தோன்றும் சொற்கள் என்றறிந்தோம். அன்பும், வாய்மையும், அறமுமுணர்ந்தார் சொல் இன்சொல் என்றதால், அவ்விதமில்லாதார் கூறும் சொற்கள் ஏதேனும் ஓர் தீமையோடு கூடியிருக்குமாதலால், அதனை இன்சொல்லென ஏற்றுக்கொள்ளலாகாது என்பதும் பெற்றோம். இனி இன்சொல் இதுவென வுணர்ந்த உங்களுக்கு அது கூறுதல் எவ்வித தகுதியுடையது என்பதையும் கூறுவேன் என்று இரண்டாவது திருக்குறளை ஆசிரியர் சொல்லத் தொடங்கினர்.

92. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
இன்சொல னாகப் பெறின்.

(பரி.) இ-ள். அகன் அமர்ந்து ஈதலின் நன்று=நெஞ்சு உவந்து ஒருவற்கு வேண்டியதொரு பொருளைக்கொடுத்தலினும் நன்று—முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின்=கண்டபொழுதே முகமினியனாய் அதனோடு இனியசொல்லையும் உடையனாகப் பெறின். எ-று

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன்வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாகஇன்மையின், அதனினும் அரிதென்னுங் கருத்தான், 'இன்சொலனாகப் பெறின்' என்றார். (உ)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணமே ஒருவன் இனிய சொல்லைச் சொல்லவேண்டுமாயின், அது தன்னிடத்தே யிருப்பதாயினும் கூறுவது அத்துணை எளிதாகாது. அது கருதியே நம் தெய்வப் புலவர், ஒருவன் தன் வயத்தல்லாது வருந்தித்தேடிய பொருளை மனம் விரும்பியும் கொடுத்தல்கூடும்; ஆனால், யாதொரு வருத்தமுமில்லாது எவ்வளவேனும் சொல்லக்கூடிய இனிய சொற்களைச் சொல்லுவது மாத்திரம் இயற்கையாக அமைதல் மிக அருமை என்றெடுத்துக்காட்டினர். ஆதலால், கைப்பொருள் கொடுப்பதினும் இனிய சொல் சொல்லுவது மிகமேலானது என்றுணர்ந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கையிலுள்ள பொருளை யொருவன் கொடுப்பதேயருமையென்றும், அப்பொருள்கொண்டகாலத்தேயே

ஒருவனுக்கு இன்பமுண்டாகுமென்றும் அறிந்திருக்க, ஒருவித பய னுந் தாராத வினிய சொற்களை எவ்விதம் மேன்மையுடையது என்று கூறுதல் அமையும்?" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

93. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம்.

(பரி.) இ-ள். முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி = கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி—அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் = பின் நண்ணியவழி மனத்துடனாகிய இனியசொற்களைச் சொல்லு தலின்கண்ணதே அறம். எ-று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்துநின்ற முதனிலைத் தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்ணதன்று என்ற வாறு. (இவை யிரண்டுபாட்டானும் இன்முகத்தோடு கூடியவின்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கண் சிறந்ததென்பது கூறப்பட்டது.) (ங)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் மேல்வினவிய ஐயம் அறவே யொழிதல்கூடும். அதாவது, தூரத்தே கண்டவிடத்து கண்ட வக்கணமே முகமலர்ச்சியோடு விரும்பியும், இனிமைப் பண்பு நீங்காவண்ணம் பார்த்தும் நிற்பான் ஒருவனிடத்து விருந் தினர் வருவதும், வந்தபிறகு விருந்திடுவோன் இனிய சொற்க ளைக் கூறுவதும், அச்சொற்கு மகிழ்ந்த விடத்து கைப்பொருள் கொண்டு உபசரிப்பதும் வழக்காகும் என்றறிந்தோம். ஆதலால், இன்முகமும் இனியசொல்லும் வந்த விருந்தினனை ஆசையென்னும் பாசத்தால் கட்டித் தன்னிடத்தே கொண்டு வருவதும், அவ்விதமல் லாவிடின் தூரத்தேயே விலக்கி நீக்குவதும் முறையாக உள்ளமை யால் முன்னர் பந்தித்துக்கொள்ளுகின்ற இனிய முகத்தோடு கூடிய வினிய சொற்கள் ஈதலினும் சிறந்தனவாயின என்றனர். அது கேட்ட மாணாக்கர், "விருந்தினைச் செய்வோனாகிய வொரு இல்ல றத்தானுக்கு இன்சொற்கள் மிகமுக்கியமென்றறிந்தோம். ஆயின், இவ்விதம் இனியசொற்களை விருந்தினர் மாட்டுத்தான் கூறல்வேண் டுமோ அன்றி யாவரிடத்துங் கூறல்வேண்டுமோ? அவ்விதம் கூறி னார்க்கு அவ்வின்சொல் எவ்வித பயனைத்தரும் என்பதையும்

அறிய அவாவுகின்றேம். விளக்கல் வேண்டும்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

94. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

(பரி.) இ-ள். யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு = எல்லார் மாட்டும் இன்பத்தைமிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்கு — துன்பு உறூஉம் துவ்வாமை இல்லாகும் = துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம். எ-று.

நாமுதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமையுடைமையின், 'துவ்வாமை' என்றார். யார்மாட்டுமின்புறூஉம் இன்சொலவர்க்குப் பகையும் நொதுமலுமின்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவரென்பது கருத்து. (௪)

விளக்கம்:—இத்திருக்குறளால் இனியவாகிய சொற்களை விருந்தினர்மாட்டு மாத்திரமன்று, நட்பினர்மாட்டு மாத்திரமன்று, நொதுமலர் பகைவர் ஆகிய எவரிடத்தும் கூறல்வேண்டு மென்றும், அவ்விதம் கூறும் இல்வாழ்வானொருவனுக்கு யாவரும் நட்பாகும் பயனை அவ்வின்சொற்கள் பயக்குமென்றும், யாவரும் நட்பாவதால் வறுமையென்பதே யவனுக்குண்டாகாதென்றும், எப்போது வறுமை யென்பதில்லையோ எல்லாச் செல்வத்தையும் பெற்றுச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் செய்து இம்மைப்பயனாகிய புகழையும் அடைவானென்றும் பெற்றும். இதுபோன்றே "அன்புடைமை" என்னு மதிகாரத்துள்

"அன்பீனு மார்வமுடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு." (திருக்குறள்—74.)

என்னும் நான்காவது திருக்குறளிலும் அருள்செய்ததை உங்களுக்கு ஞாபக மூட்டுகின்றேன் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஆயின், இல்வாழ்வானொருவனுக்கு இன்சொல் கூறுதலொன்றே யமையும்போலும்; வேறொன்றும் வேண்டுவ தில்லைபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

95. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(பரி.) இ-ள். ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனாதல்= ஒருவனுக்கணியாவது தன்னால் தாழப்படுவார்கண் தாழ்ச்சியுடையனும் எல்லார் கண்ணும் இனிய சொல்லையுமுடையனாதல்;—பிற அல்ல=இவை யிரண்டுமன்றி மெய்க்கு அணியும் பிற அணிகள் அணியாகா. எ-று.

இன்சொலனாதற்கு இனமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினார். மற்று—அசைநிலை. வேற்றுமையுடைமையால் 'பிற' எனவும், இவைபோலப் பேரழகுசெய்யாமையின் 'அல்ல' எனவுங் கூறினார். இவையிரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது. (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால் இல்வாழ்வானொருவன் இன்சொல் கூறுதலாகிய நற்குணத்தோடு தான் யாரிடத்தே பணிவு உடையனாக இருக்கவேண்டுமோ அவரிடத்துப் பணிந்தும் நடப்பானாயின், அவனுக்கு அப்பணிவுடைமை அவனைவிட்டு நீங்கா மிக விலையுயர்ந்த பெரிய அழகினைச்செய்யும் ஆபரணம்போல் பயன் தரும். ஈதன்றி, உடலைவிட்டுப் பிரிக்கக்கூடிய ஏனைய ஆபரணங்கள் அவ்வளவு அழகினையும் பயனையுந்தாராவென்று அறிந்தோம். ஆதலால், இன்சொல்லோடு "பணிவு உடைமை" எனபதும் இருத்தல் வேண்டுமென்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இன்சொல் கூறுவானுக்கு இம்மைப்பயன் இதுவெனவறிந்தோம். இனி, மறுமைப்பயன் எதுவென அறியவிரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

96. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(பரி.) இ-ள். நல்லவை நாடி இனிய சொலின்=பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களை மனத்தானாராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின்,—அல்லவை தேய அறம் பெருகும்=அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும். எ-று.

தேய்தல்=தன்பகையாகிய அறம் வளர்தலில் தனக்கு நிலையின்றி மெலிதல். "தவத்தின்முன் னில்லாதாம் பாவம்" என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலுங் கடியவாகச்சொல்லின், அறன் ஆகாதென்பதாம். இதனான் மறுமைப்பயன்கூறப்பட்டது. (சு)

**விளக்கம்:**—இத்திருக்குறளால் மறுமைப்பயன் ஈதென் அறிந்தோம் அதாவது, பிறர்க்குப் பொருளால் நன்மை பயக்குஞ் சொற்களை யொருவன் மனத்தால் நன்றாக ஆராய்ந்து இனிமைபட எடுத்துக் கூறுவானாயின், அம்மேன்மையாகிய குணத்தால் அவனுக்குள்ள பாவமானது தேய்ந்து தருமமானது வளரும். தருமம் வளருதலும், தருமத்தின் பயனாகிய மறுமைப்பயன் கைம்மேல் கிடைக்கும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தருமம் வளர்ந்தால், பாவந்தேயும் என்பதை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர், "மக்காள்! இதுகருதியன்றோ நாலடியார் என்னும் நூலில் 'துறவு' என்னும் அதிகாரத்தினுள், விளக்குள்ள இடத்து இருள் நில்லாததுபோல் ஒருவன் தவத்தின்முன்பு பாவம் நில்லாதென்றும், விளக்கிலுள்ள நெய் குறையும்போது இருள் சூழ்வதுபோல் ஒருவன் நல்வினைகுறைந்த விடத்தில் தீவினைவந்து சேருமென்றும் பொருள்படும்

> "விளக்குப்புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்
> தவத்தின் முன்னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
> தேய்விடத்துச் சென்று இருள்பாய்ந்தாங்கு நல்வினை
> தீர்விடத்து நிற்குமாந்தீது."

என்னும் செய்யுள் இதுவிஷயத்தை நன்றாய் விளக்கிக்காட்டியிருக்கிறது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதங் கூறுவதால் இம்மை மறுமையாகிய விரண்டையுந் தருவது இன்சொல்லாயின், உலகத்து இம்மைப்பயனை யடைவதற்கு எதுகாரண மென்றும்? மறுமைப்பயனை அடைவதற்கு எதுகாரணமென்றும்? அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

### 97. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
### பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(பரி.) இ-ள். நயன் ஈன்று நன்றி பயக்கும்=ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையுமுண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும்;—பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச்சொல்=பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பினீங்காதசொல். எ-று.

நீதி—உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டு அதிகாரத்தான் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல்—ஒருசொல் நீர்மைத்து. (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் இம்மை மறுமைப்பயன்களுக்குக் காரணங்கள் முறையே நீதியும் அறமுமென்றும், அந்நீதியையும் அறத்தையும் இவ்வினிய சொற்கள் பயக்கும் என்றும் நீங்களறிதல் கூடும். இதனையே மேல்வரும் திருக்குறளும் எடுத்துக் காட்டுகிறதென்று ஆசிரியர் எட்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

98. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(பரி.) இ-ள். சிறுமையுள் நீங்கிய இன்சொல்=பொருளாற் பிறர்க்கு நோய்செய்யாத இனியசொல்—மறுமையும் இம்மையும் இன்பம் தரும்= ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும். எ-று.

மறுமை யின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்பமாவது:—உலகம் தன்வயத்ததாகலான் நல்லனவெய்தி இன்புறுதல். இவையிரண்டு பாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது. (அ)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணம் இத்திருக்குறளாலும் பிறர்க்கு நோய்செய்யாது இனிமையே பயக்கும் இனியசொற்களைச் சொல்லுதல் ஒருவனுக்கு இம்மையிலேயும் இன்பத்தைத் தந்து மறுமையினும் இன்பம் தருதல் திண்ணமென்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மற்று எதற்காக உலகத்தவர் தீமைபயக்கும் கடுஞ்சொற்களைக் கூறுகின்றனர்? இனிய சொற்களின்பயன் ஈதெனை அறியாமையாலோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

99. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(பரி.) இ-ள். இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்=பிறர்கூறும் இன்சொல் தனக்கின்பம் பயத்தலை அனுபவித்தறிகின்றவன்—வன்சொல்

வழங்குவது எவன்கொல்=அது நிற்கப் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருதி! எ-று.

இனிதென்றது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து. (௯)

விளக்கம்:—ஒருவன் தனக்குப் பிறர்கூறிய இன்சொல்லைக் கேட்டு அவ்வின்சொல் தனக்கு இன்பத்தைத்தருகின்றது என்று அனுபவஞானத்தால் அறிந்திருந்தும், அதைமறந்து தான் அயலவரிடத்துக் கடுஞ்சொற்களைக் கூறி அவர்களுக்குத் துன்பத்தைச் செய்கின்றான் என்று இத்திருக்குறளால் நம்தெய்வப்புலவர் மிகவும் பரிதபித்து எடுத்துக்காட்டுவதால், ஒருவன் தனக்கு நல்வினைவளர வேண்டுமானால் இனிய சொற்களைச் சொல்லுவானென்றும், அவ்விதம் அல்லாவிடின் கடுஞ்சொற்களைக்கூறித் தீவினை வளரச்செய்வானென்றும் பெறுகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதுகாறும் கூறிவந்த சொற்களால் 'இனியவைகூறல்' மிக இன்றியமையாதது என்பதறிந்தோம். ஆயின், இனியசொல்லைச் சொல்லாது இன்னாத சொல்லைச் சொல்லுகின்ற வொருவன் தகுதியை உவமை வாயிலால் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் றுவாராயினர்.

100. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(பரி.) இ-ள். இனிய உளவாக இன்னாத கூறல்=அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல்—கனி இருப்பக் காய் கவர்ந்தற்று=இனிய கனிகளும் தன்கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும். எ-று.

கூறலென்பதனாற் சொற்களென்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற, பண்புகள் உவமைக்கண்ணுஞ்சென்றன. இனியகனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை. இன்னாத காய்களென்றது காஞ்சிரங்காய்* போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லு

* காஞ்சிரங்காய்=எட்டிக்காய்.

தல் முடிவில் தனக்கே இன்னுதென்பதாம். (இவையிரண்டுபாட்டானும் இன்னாத கூறலின் குற்றங் கூறப்பட்டது.) (ய)

விளக்கம்:—இத்திருக்குறளால் இல்வாழ்வானொருவன், உலகத்துத் தான் பயின்ற சொற்களுள் இன்பந்தரக்கூடிய இனியசொற்கள் பலவிருக்கத் துன்பத்தையேதரும் கடுஞ்சொற்களைக் கூறுவது, தன்னுடைய ஊழ்வலியால் தன்கையில் அவ்வையுண்ட நெல்லிக்கனிபோல் இறவா நிலைமையை யுண்டுபண்ணும் பலகனிகளிருந்தும் அவற்றில் ஒன்றையு முண்ணுது, உண்டால் இறக்கச்செய்யும் காஞ்சிரங்காய்போல் உள்ள காய்களையே யுண்பதற்கொக்கும். ஆகவே, இனியசொல் கூறுவான் அறத்தை வளரச்செய்து தனக்கு மிக்கதோர் பயனைத் தேடிக்கொள்வானென்றும், கடுஞ்சொல் கூறுவான் அறத்திற்கு வேறாகிய மறம்வளர்த்துப் பலரையும் பகையாக்கித் தனக்கே முடிவில் இறுதியைத் தேடிக்கொள்வானென்றும் கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "பெரியோய்! இனியவை கூறல் என்பதை யெங்கட்கு இனிதாக வுரைத்தீர். ஆயின், ஏதோ ஒளவையுண்ட நெல்லிக்கனி என்றருள்செய்தீர். ஒளவை யெங்குச் சென்று எவ்வித நெல்லிக்கனியை யுண்டனள்? இச்சரிதையை எங்களுக்கு விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

"காவிரிப்பூம் பட்டினத்தில் பந்தன் என்னும் வணிகர் ஒருவர் இருந்தனர். அவர் வர்த்தகஞ் செய்யவெண்ணிக் கப்பலொன்றில் சரக்குகளையேற்றி நடுக்கடலில் செல்லுங்கால், ஆதிசேடன் இவ்வணிகருடைய வள்ளல்தன்மையை யறிந்து, கடலினுள்ளிடத்தே மறைந்தவண்ணமாக விருந்து தனதுகரங்களில் ஒன்றை நீட்டினன். அதுகண்ட வணிகர் நம்மை யாரோ இரவலர் யாசிக்கின்றனர் எனவெண்ணித் தம்மிடம் இருந்த மிகச் சிறந்த சரக்குகளுள் சிலவற்றை அக்கையில் வைத்தனர். இவ்விதம் வைத்ததும் அக்கரத்தோடு ஒன்றொன்றாக இரண்டு, மூன்று, என்று ஆயிரங் கரங்கள் தோன்றின. வணிகர் தம்மிடத்திருந்த சரக்குகளை ஒவ்வொன்றாக ஒவ்வொரு கரத்திற்கும் இட்டுவந்ததில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது கரங்களுக்குச்சரக்கிருக்கவும் கடைசிகரத்

தில் இட சரக்கில்லாமையால் தாமே அக்கரத்தில் இறங்கினர். அது கண்ட ஆதிசேடன் இவரைத் தனது நகரத்திற்குச் சுமந்துசென்று தன்னுடைய குமரியையும் இவர்க்கு மணஞ் செய்வித்துப் பல நாகரத்தினங்களையும், பொத்திக்கொண்டால் இளமை நீங்காத பொன்வத்திரம் ஒன்றும், உண்டால் நெடுங்காலம் வாழக்கூடிய கருநெல்லிக்கனி யொன்றும் கொடுத்தனுப்பினன். பின்னர், பந்தன் என்னும் வணிகர் தமது நாட்டிற்கு வந்து தாம்கொண்டுவந்த நெல்லிக்கனியில் ஓர் பாதியைத் தமது நாட்டையாளும் அரசர்க்குக் கொடுத்து வாழ்ந்திருந்தனர். இதையறிந்த ஔவையார் பந்தனிடம் சென்று "பந்தன் அந்தாதி" என்னும் ஓர் பிரபந்தத்தைப் பாடிக்கொடுத்து, மிகுந்திருந்த பாதி நெல்லிக்கனியைப் பெற்று, அதை உண்டு நெடுங்காலம் பிழைத்திருந்தனர் என்பதே 'ஔவையுண்ட நெல்லிக்கனி' என்னுஞ் சரிதையாகும்" என்றனர். அது கேட்ட மாணுக்கர், "தாங்கள்கூறிய ஔவையுண்ட நெல்லிக்கனியின் கதையையறிந்தனம். இவ்விதம் இல்வாழ்வானுக்கு இனியவை கூறலால் எல்லா நன்மைகளும் கிடைக்குமென்றீர். இனி, இனியவைகூறி வாழ்தலால் பிறர்செய்யும் நன்மையை அடைகின்ற ஒருவன் அந்நன்றியை எவ்விதம் மதித்தல்வேண்டும் என்பதையும் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் "செய்ந்நன்றியறிதல்" என்னும் பதினொருவது அதிகாரத்தைக் கூறத்தொடங்கினர்.

---

## 11. அதிகாரம்.

## செய்ந்நன்றியறிதல்.

---

(பரி.) அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்ந்நன்றி கோறலே யாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃதினியவைகூறலின் பின் வைக்கப்பட்டது.

**விளக்கம் :**—மனைவியுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்த எண்ணுவான் ஒருவன் விருந்தினரை ஓம்புவது தகுதியாகும்

என்று மேல் அறிவித்த நாயனார், அவ்விருந்தோம்பலைச் செய்வதுடன் இவ்வில்லறத்தான் தனக்குத் தடுக்கக்கூடாத துன்பம் வந்தகாலத்து அதைத் தடுத்து நன்றி செய்தவன் ஒருவனது உபகாரத்தையும் மறத்தல் கூடாது என்று 'செய்ந்நன்றியறிதல்' என்னும் இவ்வதிகாரத்தை விருந்தோம்புவார்க்கு இருந்தே ஆகவேண்டிய 'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்திற்குப்பின் வைத்திருக்கின்றனர்.

101. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(பரி.) இ-ள். செய்யாமல் செய்த உதவிக்கு=தனக்கு முன்னொருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த வுதவிக்கு—வையகமும் வானகமும் ஆற்றல் அரிது=மண்ணுலகும் விண்ணுலகுங் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தலரிது. எ-று.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றாவாயின. 'செய்யாமைச் செய்தவுதவி' யென்று பாடமோதி, 'மறித்து உதவமாட்டாமையுள்ளவிடத்துச் செய்தவுதவி'யென்றுரைப்பாருமுளர். (க)

விளக்கம்:—நீங்கள் முன்னர் வினவிய பிறர்செய்த நன்மையை ஒருவன் எவ்விதம் மதித்தல் வேண்டுமென்பதை நம் தெய்வப்புலவர் "செய்ந்நன்றியறிதல்" என்னும் அதிகாரத்தால் விளக்குவான்வேண்டி முதலில் இத்திருக்குறளால் ஒருவரிடம் ஓர் உதவியுங் கருதாத ஒருவன் அன்புடைமையே காரணமாக ஒருவனுக்கு நன்மை செய்யும் பக்ஷத்தில், நன்மை செய்துகொண்ட அவன் அதை என்றும் மறவாதிருத்தல் வேண்டுமென்றும், அதற்குப் பிரதியாக இப்பூவுலகையும் மேலுலகையும் கொடுத்தாலும் சமானமாகாதென்றும் கூறினராயிற்று. ஆதலால், இல்வாழ்வானென்பவன் இத்தகைய சமானமற்ற செய்ந்நன்றியை மறத்தல் என்னுங் குற்றத்தைச் செய்யாது தன்னைக் காத்துக்கொள்ளுவதே பெரியதோர் நன்மையாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியோய்! எவனேனும் ஒருவன் ஏதேனுமொரு நன்றியைக் கைம்மாறு கருதாது செய்துவிடுவானாயின், அதற்கோ இப்பெரியதோர்

நில உலகமும் தேவர்வாழும் வான் உலகமும் சமானமாகாவென்று கூறுவது? இதை விளக்கல்வேண்டும்" என்றனர். ஆசிரியர் இரண்டாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(பரி.) இ-ள். காலத்தினால் செய்த நன்றி=ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண் ஒருவன் செய்தவுபகாரம்—சிறிது எனினும் ஞாலத்தின் மாணப்பெரிது=தன்னைநோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது. எ-று.

அக்காலம் நோக்குவதல்லது பொருள் நோக்கலாகாதென்பதாம். காலத்தினாலென்பது வேற்றுமை மயக்கம். (உ)

விளக்கம்:—நீங்கள் எதற்காக இவ்விதம் ஐயுறுகின்றீர்? நம் தெய்வப்புலவர் இத்திருக்குறளால் இல்வாழ்வானொருவனுக்கு இறுதியைப் பயக்கக்கூடிய துன்பமெய்துங் காலம் வந்தவிடத்து அதனைப்பார்த்த நற்குணமுடையானொருவன் வலிந்துசெய்த வுபகாரம் மிகச்சிறியதாயினும், செய்த அவ்வுபகாரத்தின் அளவை நோக்காது காலத்தின் அளவையே நோக்கி அதனைச் சீர்தூக்கிப் பார்க்கின் அக்காலத்தின் தகுதியானது இப்பெரியதோர் பூமியினும் மிகப்பெரியது என்று கூறுகின்றாராதலால், அவ்விதம இறப்பைத் தடுக்கச் செய்ததோர் நன்றியை யெதற்கும் உவமை சொல்லுதலாகாது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மிகநன்று, மிக நன்று. இன்னும் அவ்வித செய்ந்நன்றியின் பெரியதோர் தகுதிகளையெல்லாம் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(பரி.) இ-ள். பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்=இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்தவுதவியாகிய ஈரமுடைமையை ஆராயின்—நன்மை கடலிற் பெரிது=அதன் நன்மை கடலினும் பெரிதாம். எ-று.

இவை மூன்றுபாட்டானும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினாற் செய்ததூஉம், பயன்தூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது. (௩)

விளக்கம்:—மேல் திருக்குறளால் செய்ந்நன்றி பூமியினும் பெரிதென்றார். இத்திருக்குறளால் அச்செய்ந்நன்றி கடலினும் பெரிதென்கின்றார். ஆதலால், உவமைக்குள் அடங்காத செய்ந்நன்றியை மறத்தல் கூடாது என்று வற்புறுத்தியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் சிறியதோர் உபகாரத்தை மறவாதிருத்தற்கு அறிவாளர் இவ்வுபகாரத்தினைச் சிறிதாகக் கருதாது மேற்கூறியவண்ணம் மிகப்பெரிதாகவே கருதுவார் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(பரி.) இ-ள். தினைத்துணை நன்றி செயினும்=தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும்,—பனைத்துணையாக்கொள்வர் பயன் தெரிவார்=அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார். எ-று.

தினை, பனை யென்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில வளவை. அக்கருத்தின் பயனாவது அங்ஙனங் கருதுவார்க்குவரும்பயன். (௪)

விளக்கம்:—மக்காள்! நீங்கள் வினாவும் வினாக்கள் மிக ஆழ்ந்த அறிவினை யுடையனவாகவே வுள்ளன. நம் தெய்வப்புலவர் இந் நான்காம் திருக்குறளால் அறிவாளர் செய்ந்நன்றியை யெவ்வளவாக மதிக்கின்றனர் என்பதை உவமைவாயிலாகவே நமக்கு விளக்கிக்காட்டினர். அதாவது, உலகத்து மக்கள் கொள்ளுகின்ற அளவைகளுள் தினையென்கின்ற சிறியதோர் அளவினையும் பனையென்கின்ற பெரியதோர் அளவினையும் எடுத்துக்காட்டித் தினையளவாகச்செய்த நன்றியைப் பனையளவாகக் கொள்ளுவர் செய்ந்நன்றியின் பயன் இது என அறிவார் என்றமையால், அறிவுடையாரே செய்ந்நன்றியின் பயனைமதிக்க வல்லவர் என்பது பெற்றாம் என்றனர். இது கேட்ட மாணாக்கர், "இதனால் அறிவுடையாரே அதன்பயன்

தெனவறிதல்கூடும் என்றும், அல்லாதார் அதனை அறிதல் கூடாதென்றும் அறிந்தோம். இனி, அப்பயன் நன்றி செய்வித்துக் கொண்டவர் அளவில் நிற்பதெனவும் அறிந்து கொள்ளுகின்றோம். அதையும் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 105. உதவி வரைத்தன் றுதவி யுதவி
## செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(பரி.) இ-ள். உதவி உதவிவரைத்து அன்று = கைம்மாறாகவுதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று;—உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து = அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதியளவிற்று. எ-று.

சால்பு எவ்வளவுபெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், 'சால்பின் வரைத்து' என்றார். (இவையிரண்டுபாட்டானும் மூன்று மல்லாத உதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—ஆசிரியர் தெய்வப்புலவர் இச்செய்ந்நன்றியறிதலை எவ்வளவாக அறிவோர் கொள்ளுவர் என்று அளவுபடுத்துக் காட்ட இயலாது என்றும், அச்செய்ந்நன்றியின் அளவு செய்வித்துக் கொண்டவர் சால்பு உடைய பெரியாராயின் அச்சால்பிற்குத் தக்கவளவாக மிகப்பெரியதாகவே கொள்ளப்படும் என்றும் கூறினர். இதுபோன்றே விருந்தோம்பல் என்னும் அதிகாரத்திலும்

> "இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
> றுணைத்துணை வேள்விப் பயன்" (87—திருக்குறள்.)

என்று கூறியிருத்தலை நீங்கள் காணுதல்கூடும். சால்பிலாதார் அவ்விதம் கொள்ளார் என்றவளவிலேயே அப்பெரியோர் தகுதி வாய்ந்த செய்ந்நன்றியின் அளவு கூறி முடித்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் அச்செய்ந்நன்றியின் பயனை மறவாதிருப்பதற்கு அறிகுறியாக ஒருவன் எது செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**106.** மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(பரி.) இ-ள். துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க=துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பைவிடாதொழிக ;—மாசு அற்றார் கேண்மை மறவற்க=அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக. எ-று.

கேண்மை=கேளாந்தன்மை. இம்மைக்குறுதிகூறுவார் மறுமைக்குறுதியும் உடன்கூறினார். (சு)

விளக்கம்:—செய்ந்நன்றிமறவாதுஒருவனிருக்கவேண்டுமாயின், அந்நன்றி செய்தார்மாட்டுக் கொண்டதாகிய நட்பினை இறக்குந் துணையும் மறவாதிருத்தல் ஒன்றே பெரிதும் வேண்டும். அதுவன்றியும், ஞானவொழுக்கங்களால் சிறந்தாரது நட்பினையும் மறவாதிருத்தல்வேண்டும். இவ்விருவித தகுதியே இம்மை மறுமைப்பயன்களைப் பயத்தல் கூடும். இதுமாத்திரமோ? நல்லறிவுடையானொருவன் தனக்கொருவன் செய்த நன்மையினை ஒருபிறவியில் மாத்திரமல்லாது எழு பிறவிகளிலேயும் எண்ணுவான் என்பது போதரவே ஏழாவது திருக்குறள் எழுந்ததென்று ஆசிரியர் கூறுவாராயினர்.

**107.** எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(பரி.) இ-ள். தங்கண் விழுமம்* துடைத்தவர் நட்பு=தங்கணெய்திய துன்பத்தைநீக்கினவருடைய நட்பினை—எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்=எழுமையினையுடைய தம்மெழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர். எ-று.

எழுமையென்றது வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை ; அது வளையாபதியுட்கண்டது. எழுவகைப்பிறப்பு † மேலேயுரைத்தாம். விரைவு தோன்றத் ‘துடைத்தவர்’ என்றார். நினைத்தலாவது துன்பந்துடைத்தலான் அவர்மாட்டு உளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்

---

* தங்கண் விழுமம்=தம்+கண்+விழும்+அம் என்று பிரித்து தம் கண்களினின்றும் விழும் நீர் என்று நயங்கண்டனர் இராமாநுஜ கவிராயர்.

† திருக்குறள்—62.

புடையர்ர்தல். (இவை இரண்டுபாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.) (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நன்மைசெய்தாரது நட்பினை இறக்குந்துணையும் மறவாது இருத்தல் வேண்டும் என்ற உறுதிச் சொற்களைமேன் மேலும் எடுத்துக் காட்டுவான் வேண்டி எழுவகைப் பிறப்பினுள்ளும் நல்லறிவுடையோர் தமக்குச் செய்த நன்றியை மறவாதிருத்தற் பொருட்டு அவரது நட்பினை விடாது நினைப்பர் என்று கூறினர். அவ்விதம் நினைத்தலாவது, நன்றி செய்துகொண்ட ஒருவன் நன்றி செய்தார் மாட்டு நன்றி செய்த காலத்தே வைத்ததாகிய அன்பானது அவன் இருவினைகளைப்போல் அவனுடைய பிறப்புகள் தோறும் தொடர்ந்துசென்று நன்றிசெய்தார் மாட்டு அன்புடையனாய் இருக்கச் செய்தல் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "செய்ந்நன்றி இது என்பதும், அது செய்தாரை மறத்தலாகாது என்பதுமறிந்தோம். ஆயின், நன்மை செய்த அவனே நன்மையல்லாத ஒரு தீமையினையும் செய்து விடுவானாயின், அக்காலத்து நன்மைசெய்துகொண்டானொருவன் என் செய்தல்வேண்டும் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(பரி.) இ-ள். நன்றி மறப்பது நன்று அன்று=ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று;—நன்றல்லது அன்றே மறப்பது நன்று=அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன். எ-று.

இரண்டும் ஒருவனாற்செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு. (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் மேலே கொண்ட ஐயமானது அறவேயொழிந்ததாகும். முன்னர் ஒருவன் நன்மையைச் செய்து பின்னர் நன்மையல்லாத தீமையைச் செய்துவிடுவானாயின், செய்த நன்மையை எழுபிறப்பிலேயும் நினைக்கவேண்டியவனாகிய

இவன் தன்பால் செய்யப்பட்ட தீமையினை அக்கணமேமறவாவிடின் தான் அடையவேண்டிய பயனை அடைதற்கில்லாமல் இழந்துபோவான். ஆதலால், நினைக்கவேண்டியது நன்மையென்றும், மறக்கவேண்டியது தீமையென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நன்மை செய்த ஒருவன் ஏதேனும் மறக்கத்தக்கச் சிறியதோர் தீமையினைச் செய்வானாயின் மறந்துவிடல்கூடும். அவ்வாறல்லாது, பெரியதோர் தீமையைச் செய்வானாயின் அதை எவ்விதம் மறத்தல்கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 109. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
## வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(பரி.) இ-ள். கொன்று அன்ன இன்னா செயினும்—தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர் பின்கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும்,—அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்—அவையெல்லாம் அவர் செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம். எ-று.

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்குமென்பதாம். (இதனான் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது.) (க)

விளக்கம்:—இத்திருக்குறளால் முன்பு நன்மைசெய்த ஒருவன் பிறகு கொன்றுவிடுதற்குத் தகுதியாகிய துன்பந்தரும் தீமையொன்றினைச் செய்தானாயினும், அவன்செய்த நன்மை யொன்றினையே நினைத்தல் வேண்டுமேயன்றி, மிகப் பெரியதோர் துன்பந்தரும் அத்தீமையை மறந்து விடுதலேவேண்டும் என்றறிந்தோம். ஏனெனின்? முன்னர் இவ்வதிகாரம் நான்காவது திருக்குறளில், தினையளவு நன்மையினைப் பனையளவாகக் கொள்ளுவது பயன் தெரிந்த அறிவுடையோர்செயலென்று அறிந்தோமாதலால், அவ்வித தகுதியுடையோர் ஒருவன் செய்த நன்மையினை மறவாது தீமையினையே மறத்தல் வேண்டுமென்று கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "எந்தாய்! அவ்விதம் செய்ந்நன்றியை யொருவன் மறப்பானாயின், அதனால் அவனுக்கு என்னநேரும் என்பதையுமறிய விரும்புகின்றேம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

110. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(பரி.) இ-ள். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்—பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினீங்கும் வாயிலுண்டாம்;—செய்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை—ஒருவன் செய்தநன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை. எ-று.

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது:—ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவினைச்சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். (இதனாற் செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது.) (ய)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவன் எவ்விதமாகிய தருமங்களையெல்லாம் அறவே கெடுத்தாலும் அவனுக்கு நரகத்துன்பத்தினின்றும் நீங்குதற்கு ஓர் பிராயச்சித்த முண்டாகும். ஆயின், பிறர் செய்த நன்றியை மறத்தலென்னுஞ் சிதைத்தலைச் செய்தவொருவனுக்கு நரகத்துன்பத்தினின்றும் நீங்க வழியில்லை என்பதறிந்தோம். ஆதலால், செய்ந்நன்றி கொன்றாற்குப் பெரியதோர் பாவமுண்டாகும் என்பது நன்கு பெறப்படுகின்றது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏனைய நல்ல அறங்களைச்சிதைத்தலாவது எது?" என்னலும், ஆசிரியர், "பசுவின் மடியையறுத்தலும், பெண்கள் கருவைச் சிதைத்தலும், வேதவித்துக்களாகிய பார்ப்பாரைக் கொல்லுதலும், முதலியனவாகும். இதனைப் புறநானூறு, 34-வது செய்யுளில்

" ஆன்முலையறுத்த வறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்குங்
குரவர்த்தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயுமுளவே
நிலம்புடை பெயர்வதாயினு மொருவன்
செய்திகொன்றார்க் குய்தியில் லென்று
அறம்பாடின்றே யாயிழைகணவ"

என்பதனாலும் அறிதல் கூடும் என்றனா. அதுவன்றியும், இதனைத் துரியோதனனிடத்தும் கன்னனிடத்தும் காணுதல்

கூடும். அது எவ்வாறெனின்? குந்தி, கன்னனைத் தன் மகன் என்று கண்ணனால் தெரிந்துகொண்டு அக்கண்ணனுடைய விருப்பத்தின்படி கன்னனிடம் சென்று, தன்னை அவனுடைய தாய் என்று கூறலும், கன்னன், குந்தி ஏதோ ஒரு நன்மை கருதிவந்து தன் தாய் என்று கூறி நிற்கின்றாள் என்று சந்தேகித்தவனாய், 'ஓ எனது அன்னையே! நீ என்னைப் பெறாவிட்டாலும், எனது நண்பனும் உயிர்த்துணைவனுமாகிய துரியோதனனுக்குச் சிற்றன்னையாகவிருப்பதால் எனக்குத் தாயேயானீர். ஆதலால், தங்களுக்கு எது வேண்டுமோ அதைக் கூறுவீர்களாயின் உடனே செய்வேன்' என்றனன். அதுகேட்ட குந்தி மிகுதியும் வருந்திய மனத்தையுடையளாய், 'மகனே! நான் உன்னைப்பெற்ற தாயே; ஐயங்கொள்ளுதல் வேண்டாம்' என்னலும், கன்னன், 'என் தாய், என் தாய் என்றுகூறி என்னுடன் பெட்டியில்வைத்த புடைவையைக் கட்டிக் கட்டித் தம்முடம்பு நில்லாது அழிந்தவர் பலராவர். அவ்விதம், தேவரீர் என்னைச் சூரியனுக்கு மனைவியாகப் பெற்றதுண்டேல், இப்புடைவையையணிந்துகொள்ளுங்கள்' என்று கொடுத்தவுடன், குந்தியும் அப்புடவையைக் கையிற்றாங்கி, 'நான் சூரியனுக்குக் கன்னனைப் பெற்றிருப்பேனேல் என் தேகம் அழியாதிருக்கட்டும். அல்லாவிடில் அழிந்து போகட்டும்' என்று அணிந்துகொள்ளலும், கன்னனைத் தங்கள் மகன் என்று முன்பு ஏமாற்றவந்த பெண்கள்போல் இவள் அழிவு படாமல், இருந்தனள். அதைக்கண்ட கன்னன் இவளே தன் தாய் என அடியற்றமரம்போல் அவளது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். வணங்கின மகனைக் குந்தி வாரியெடுத்துத் தன் மடிமீதிருத்தி உச்சிமோந்து உள்ளங் குளிர்ந்து, என் மகனே! நீ யுத்தகளத்தில் உன் தம்பியருடனிருந்து நீ இட்ட ஏவல்களைச்செய்து அவர்கள் பிழைக்கும்படிச் செய்தல்வேண்டும்' என்றனள். அதுகேட்ட கன்னன் தாயின் திருவடியைப் பற்றினனாய், 'என் தாயே! நான் ஐவர்க்கும் முன் தம்முடைய வயிற்றில் பிறந்தேன் என்பதைத் தாங்கள் இப்போது அறிவித்தீர்கள். இது என்னுடைய தீவினைப் பயனன்றோ? ஆயினும், துரியோதனன் என்னை உயிர்த்துணைவனாகக்கொண்டு, என்னை யாவரும் வணங்க அங்க நாட்டிற்கு அரசனாக்கினான். அன்றியும், என்னெஞ்சில் என்னோடு உண்டான். இவ்வளவுதானோ? நானும் துரியோதனன் மனைவியும் சூதுக்காய் ஆடிக்

கொண்டிருந்தகாலத்துத் துரியன் வருகையைக்கண்ட அவனுடைய மனைவி ஆட்டத்தைவிட்டு எழுந்து செல்லலும், நான் சூதின் களிப்பால் அவள் சேலையைப்பற்றி இழுத்தேன். இழுத்த வலிமையால் அவள் இடையில் கட்டியிருந்த மேகலை அற்றுக் கீழே சிதறின. இவையெல்லாம் பார்த்து அருகணைந்த துரியோதனன், 'அண்ணால் இச்சிறந்த மணிகளைக் கோக்கவேண்டுமோ, பொறுக்கவேண்டுமோ, என்று கேட்டான். அத்தகையானுக்கு யுத்தகளத்தில் புகுந்து என்னுயிரை யிழக்காவிடின் செய்ந்நன்றிகொன்றவன் ஆவேன். வீரலட்சுமியும் என்னுடன் சேராள்' என்று கூறினன் என்பதாம். இச்சரிதத்தைப் பின் வரும் பெருந்தேவனார் பாரதச் செய்யுட்களே அறிவிக்கும்.

"குறைதாழ்ந்த சிந்தையளாய்க் குந்திசென்றெய்த
இறைஞ்சா முடியா னிறைஞ்சச்—சிறந்த
முலைக்கண்கள் பாலரும்ப நின்றாண் முகத்து
மலர்க்கண்க ணீரரும்ப வந்து."

"செம்மையான் மண்ணாண்ட தேர்வேந்தன் மாதேவி
வண்மையுடைக் கருமன் மாதாவே—அம்மே
திருந்திய நின்பொற்பான சேவடிகளென்னை
வருந்திமிக வந்தவா றற்று."

"ஆராதவென்பி னடிகளடியேன் பால்
வாராதீர் வந்தவா றென்கொலோ—சீராரும்
பாண்டவர்களேவலோ பாரளந்தா னேவலோ
ஆண்டகையாய்ப் போந்த தருகு."

"ஒற்றைத்திகிரி யொளியோற்குத் தான் பயந்த
கொற்றக் குமரனிவ னுமாறு—மற்றவடன்
மாலுரைத்த வண்ணமெல்லா மைந்தற்கெடுத்துரைத்தாள்
பாலுரைத்த சொல்லாள் பரிந்து."

"பொய்யுரைத்தே னல்லேன் புவிபுரந்த பாண்டுவின்றன்
செய்ய திருத்தேவி செப்பக்கேள்—ஐவர்
தமக்குத் தாயானாற் றடங்கண்ணாய் மற்றும்
எனக்குத்தாய் வேறுண்டோ வின்று."

“அன்னையென வந்தென்னை யையவர்க்கு முன்றோன்றல்
என்னுமிது மெய்யாக வெண்ணுவரோ—மின்னும்
துடியிடையாய் வேண்டுவது சொல்லிக் கேளென்றான்
படிபுகழு மங்கர்கோன் பார்த்து.”

“என்னுடைய தாய்மா ரெனச்சொல்லி வந்தவர்கள்
தம் மெலும்பு தாங்கினார் தாமில்லை—எம்முடைய
தாயே படாம்போர்க்கின் மற்றென்னைப் பெற்றெடுத்த
தாயோ யெனவுரைத்தான் றான்.”

“இக்கிடந்த மாதரைப்போ னீருமிது போர்த்துத்
தொக்கவுடம் பிழந்து சோராதே—மிக்கதுதான்
வேண்டிக் கொண்டும்முடைய வீடுநடவுமென்றான்
தூண்டித் தேர்வல்லான் றொடர்ந்து.”

“பெற்றவுடம் பன்றாகினென்னுடலைத் தின்னுகென்
றுற்றபடாத்துக் குறவுரைத்து—மற்றதனைச்
சென்றெடுத்துப் போர்த்திருந்தா டேர்வேந்தன் றன்முன்னே
நன்றெடுத்த சொல்லாணயந்து.”

“தன்னுடைய முன்னே படாம்போர்க்கத் தார்வேந்தன்
என்னுடைய மாதா விவளென்ன—நன்னுதலாள்
பொன்னடிமேல் வீழ்ந்தானைப் பொற்றடக்கையாற் றழுவித்
தன்மடிமேல் வைத்தா டளர்ந்து.”

“உனக்கினிய தம்பிமா ரைவரையுமொன்றி
வனக்கரிசூழ் மண்ணாள 'வெண்ணி—உனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன் சுடர்வேலாய் போதென்றாள்
வில்லுலாம் வாணுதலாண் மீண்டு.”

“மண்ணெல்லாங் காத்தளித்து மன்னரெல்லாம் வந்திறைஞ்சக்
கண்ணெல்லாங் காதல் களிகூரப்—பண்ணுலாம்
பொற்றேரிற் போந்தேறிப் போர்வேந்த ரைவரையும்
குற்றேவல் கொள்வாய் குறித்து.”

"ஆவியனையார்க ளவருக்கு முன்றோன்றல்
மேவியனைய வினையேனைப்—பாவியேன்
முன்செய்த தீவினையான் முன்புரையா நின்றுரைத்தீர்
என் செய்வேன் சொல்லீரினி."

"இன்றா னென்னவறியா வென்னை முடிகவித்து
மன்னர் வணங்க வரசியற்றிப்—பின்னையும்
தன்னெச்சி லுண்ணுந் தகைமையான் றானுண்டான்
என்னெச்சி லென்றோ டினிது."

"கொன்னவிலும் தேர்ப்பாகனென்று குலம் பேசி
என்னைப் பலரு மிகழ்ந்துரைப்பப்—பின்னையுந்தான்
என்னெச்சி லென்னோடு முண்டானை யெங்ஙனே
உன்னச் சிழப்பே னுரை."

"மருவார் வண்டாரான் மணிமுடியான் செய்த
அருடா னறியா தாரில்லை—தெருளா
அழிகொடாவாறே யடிகளிற் றார்க்காகின்
பழிகடாஞ் சாலப்பல."

"மதமாமதக்களிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவியுலகறியுமன்றே—உதவிதனை
நன்று செய்தோர் தங்களுக்கு நானிலத்தி னல்லோர்கள்
குன்றுவதோ செய்ந்நன்றி கூறு."

"பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கென்புகுந்த தென்னுமல்—நன்மணியைக்
கோக்கோ பொறுக்கோ வென்றானுக் கென்னுயிரைப்
போக்காதொழிவேனோ புக்கு."

"மைத்தடங்கண் மாதேவி வார்த்துகிலை யான்பிடிப்ப
அற்று விழுந்தவரா மணிகள்—மற்றவற்றைக்
கோக்கேனோ வென்றுரைத்த கொற்றவற்கெ னுருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு."

"உந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர்
இன்றொன்மே லாசை யிலையுமக்—கன்று
வடுவஞ்சிப் போவிட்டீர் மாண்டேனெலின்று
நடவென்பீராரை நயந்து."

"நன்றுகமன்ன னெனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான்—என்றாலும்
ஈண்டவன் செய்த வுதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து."

அதுகேட்டமாணக்கர், "பெரியோய்! செய்ந்நன்றியறிதலின் தகுதியை முற்றுமுணர்ந்தோம். இனி, மறக்கலாகா நன்றியைச் செய்த ஒருவன் நடுநிலையில்லாது ஏதேனும் பிறவுயிர்க்குத் தீங்குசெய்வானாயின் நன்மை செய்துகொண்ட ஒருவன் அவனிடத்துள்ள அன்பின் மிகுதியால் அவனோடு சேர்ந்துகொள்ளல் வேண்டுமோ அன்றி நடுவாக நின்று நீதி கூறல் வேண்டுமோ என்பதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 12. அதிகாரம்.

## நடுவு நிலைமை.

---

(பரி). அஃதாவது பகை நொதுமல் நண்பென்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது, நன்றிசெய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே? அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்கு, செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—இவ்வதிகாரத்தின் அவதாரிகையால் பகைவனென்றும், நட்பினனென்றும், இரண்டுமல்லாத நொதுமலனென்றும் கூறுகின்ற மூன்று தகுதியுடையாரிடத்தும் சிறிதும் அறத்தினின்றும் நீங்காது பொதுவாக நிற்கும் நிலைமையை நடுவுநிலைமையென்றும், அவ்வித நடுவுநிலைமையும் மேற்கூறிய செய்ந்நன்றியிலக்கணத்தை யுணர்ந்துகொண்டு அவ்வழியே நன்றியை மறவாது

நிற்பவன் நன்றிசெய்தவன் பிறவுயிர்களுக்குத் தீங்குசெய்த காலத்து நட்பின்காரணமாக அவன்வழிச்செல்லுதல் கூடுமாயினும், அவ்விதம் செல்லாது அவனிடத்தும் நடுவுநிலையென்பதை முதலாகக்கொண்டு நீதியை நடத்தல் வேண்டுமென்றும், அதற்காகவே இந்நடுவுநிலைமை யென்னும் அதிகாரம் செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது என்றும் அறிகின்றோமாதலால், ஒருவன் எக்காலத்தும் நடுவுநிலையோடிருந்தலே உலகத்துச் செய்யும் அறங்கள் எல்லாவற்றிலும் முதன்மையாகும். அதனை இம்முதல் திருக்குறளால் அறிதல் கூடும் என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

111. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(பரி.) இ-ள். தகுதி என ஒன்றே நன்று—நடுவுநிலைமை யென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று—பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின்—பகை நொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன்முறைமையை விடாதொழுகப் பெறின். எ-று.

தகுதியுடையதனைத் தகுதியென்றார். "ஊராளேர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதியானென் புழி ஆனுருபு தோறுமென்பதன் பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத்தருமைதோன்ற நின்றது. (இதனன் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.) (க)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவன் யாரிடத்தும் நடுவுநிலைமையை நாட்டுவானனால், உலகத்துச் சொல்லும் பல அறங்களுள்ளும் 'நடுவுநிலைமை' யென்னுமோர் அறத்தையே செய்தல் போதும்; வேறு அறங்களைச் செய்யவேண்டாம் என்று நடுவுநிலைமையினது சிறப்புக் கூறப்பட்டதுஎன்றனர். அது கேட்ட மாணக்(கன்) "இல்வாழ்வானொருவன் இவ்விதம் நடுவுநிலைமை யென்பதை மேற்கொண்டு நிற்பானாயின், அவனுக்கு இன்றியமையாத செல்வம் எவ்விதம் வளரும்? அவன் அறவழிநின்று கொடுத்தலால் தன் கையிலுள்ள பொருள்களைச் சில நாட்களில் அழிவு செய்தலே கூடும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

112. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(பரி.) இ-ள். செப்பம் உடையவன் ஆக்கம்=நடுவுநிலைமையை யுடைய வனது செல்வம்—சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து=பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலை யுடைத்து. எ-று.

விகாரத்தாற்றொக்க எச்சவும்மையான் இறக்குந் துணையும் அவன் றனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றாம். அறத்தோடுவருதலின், அன்ன தாயிற்று. தானிறந்தழி எஞ்சி நிற்பதாகலின், 'எச்சம்' என்றார். (உ)

விளக்கம் :—நடுவுநிலைமையுடையவனது செல்வம் வளராது சிதையும் என்று ஐயுறற்பீர். இத்திருக்குறளால் நீங்கள் கொண்ட தோர் ஐயத்தை யறவே யொழித்தல்கூடும். ஏனெனின்? நடுவுநிலை யுடையானொருவன் செல்வமானது அவன் வாழ்நாளெல்லாம் அவ னுக்குத் துணையாக உதவி அவன் மக்கட்கும் அழியாத்துணையாக இருக்குமென்று கூறுகின்ற இத்திருக்குறளின் புத்திபோதிப் பே சாலவும் தகுதியுடையதாயது என்றனர். அதுகேட்ட மாணாக் கர், "தேவரீர் இவ்விதங் கூறுவதால் நடுவுநிலை நீங்கித் தேடும் பொரு ளானது நன்மையைத் தாராதுபோலும்? எத்துணையோ பெயர் நடுவுநிலை நீங்கிப்பொருள் சம்பாதித்துப் பலரோ போற்றும் வண் ணம் உயிர் வாழ்கின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர்.

113. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(பரி.) இ-ள். நன்றே தரினும்=தீங்கன்றி நன்மையே பயந்ததாயி னும்,—நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்=நடுவுநிற்றலை யொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழிய விடுக. எ-று.

நன்மை பயவாமையின், 'நன்றேதரினும்' என்றார். இகத்தலாமென் பது இகந்தெனத் திரிந்துநின்றது. (இவையிரண்டுபாட்டானும் முறையே நடுவு நிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச்செல்வம் தீமை பயத்தலுங் கூறப்பட்டன. (௩)

விளக்கம் :—நீங்கள் கூறிய வண்ணம் நடுவுநிலையினின்று நீங்கி வந்த செல்வமானது எக்காலத்தும் நன்மை செய்யாது தீமையையே பயக்கும் என்றும், அவ்வித செல்வத்தைச் சிறிதும் விரும்பிக்கொள்ளாது தம் கைக்கு வந்த அன்றையத்தினமே யதனைத் தொலைத்து விடல்வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. ஆதலால், நடுவுநிலையோடுள்ளவன் பொருளே மேன் மேலும் வளரும் என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நடுவுநிலையுடையவன் பொருள் வளரும் என்றீர். ஒருவன் நடுவுநிலையுடையான் என்றும், அல்லன் என்றும் நாங்கள் எவ்விதம் அறிந்து கொள்ளுதல்கூடும் என்பதையும் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்,

114. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(பரி). இ-ள். தக்கார் தகவிலர் என்பது = இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமையிலரென்னும் விசேடம்—அவரவர் எச்சத்தால் காணப்படும் = அவரவருடைய நன்மக்களது உண்மையாலும் இன்மையாலும் அறியப்படும். எ-று.

தக்கார்க்கெச்சமுண்டாதலும் தகவிலார்க்கில்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின (இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.) (௪)

விளக்கம் :—எவன் நடுவுநிலையுடையான், நடுவுநிலையுடையானல்லன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமாயின், எவனொருவனுக்கு எழு பிறப்பிலும் பழியுண்டாகாத நன்மைகளைச் செய்யும் நல்லபிள்ளைகள் உண்டாதல்கூடுமோ அவனே நடுவுநிலையுடையானென்றும், பழியினை உண்டுபண்ணும் தீமைகளைச்செய்யும் பிள்ளைகள் எவனுக்குப் பிறக்கின்றனவோ அவன் நடுவுநிலையினின்றும் நீங்கியவன் என்றும் கூறும் இத்திருக்குறளாலேயே நீங்கள் மேல் வினவிய ஐயம் ஒழியலாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நடுவுநிலை நடுவுநிலை என்று கூறுகின்ற சிலரை நாம் பார்க்கின்ற காலத்து, அவர்கள் வறுமையென்னும் பிணியால் பீடிக்கப்

பட்டு வருந்துகின்றனராக உள்ளார். இவ்வித வறிஞரை உலகோர் மதிப்பரோ ?" என்று வினவலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(பரி). இ-ள். கேடும் பெருக்கமும் இல் அல்ல = தீவினையாற்கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன ;— நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி = அவ்வாற்றையறிந்து அவை காரணமாக மனத்தின்கட்கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது. எ-று.

அவை காரணமாகக் கோடுதலாவது:—அவை இப்பொழுது வருவன வாகக் கருதிக் கேடுவாராமையைக்குறித்தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒருதலைக்கணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுத லன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல். சால்பினை யழகுசெய்தலின், 'சான்றோர்க்கணி' என்றார். (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவனுக்குச் செல்வம் வருவதும் வறுமை வருவதும் அவனது முயற்சியினாலும் நடுவுநிலை தவறுவதனாலுமன்று. முன்னரே அவனது இருவினைகளுக்குத் தக்கவளவாகக் கருவினுள் அமைந்து கிடக்கின்றன. ஆதலால், அவ்வினைகளை யறிந்து நடுவுநிலைதவறாது நன்மக்களைப் பெற்றும், நற்செல்வத்தைத் தேடியும் நிற்பதே ஒருவனுக்கு மிக அழகினைச் செய்யும் பெரியதோர் அணியாகும். அவ்விததகுதியுடைய வொருவனை உலகம் 'சால்புடையான்,' 'சான்றோன்' என அழைத்துப் போற்றுதல் செய்யுமேயன்றி வறிஞன் என்று ஒதுக்காது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியோய் ! அவ்விதம் நடுவுநிலை தவறிப் பிறர்க்குத்தீங்குசெய்ய அறமல்லாத மறத்தைச்செய்ய ஒருவன் எண்ணுவானாயின், அவனது தகுதி எதுவாகும் என்பதையும் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

116. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின்.

(பரி). இ-ள். தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் = ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலையொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்கு

மாயின்,—யான் கெடுவல் என்பது அறிக=அந்நினைவை யான் கெடக் கடவேனென்றுணரும் உற்பாதமாக * அறிக. எ-று.

நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின், 'செயின்' என்றார். (சு)

விளக்கம்:—நீங்கள் வினவியவண்ணம் ஒருவன் அறநெறி நீந்து பாவத்திற்கு ஏதுவாகிய நடுவுநிலைமையல்லாத காரியத்தைச் செய்ய ஒருமுறை நினைத்து விடுவானாயின், அந்நினைப்புத் தோன்றியதின்பயன் அவன் கெட்டுப்போதற்கு எண்ணியதாகிய முன்தோற்றம் என்று அறிதல்வேண்டுமேயன்றி வேறில்லை. ஆதலால், ஒருவன் உலகத்து வாழவேண்டிய அளவில் வாழவேண்டுமானால், நடுவுநிலை தவறுதலை நினைத்தலுங் கூடாதென்பதை இதனால் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் நடுவுநிலை தவறாது வாழ்வார் பலர் இவ்வையத்து வறிஞர்களாகவே இருக்கின்றனரே யன்றிப் பொருளுடையாராக வாழ்வது கண்டிலோம்; இவ்வித வறுமையை உலகத்தார் எவ்விதங் கருதுவர்? உலகம் பொருள்வழியன்றோ நிற்கின்றது? பொருளுடையார் மாட்டுச் செலுத்தும் பெருமதிப்பு இவ்வறியாருக்கு உண்டாதல் கூடுமோ?" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

117. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

(பரி). இ-ள். நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு=நடுவாகநின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை—கெடுவாகவையாது உலகம்=வறுமையென்று கருதார் உயர்ந்தோர். எ-று.

கெடு என்பது முதனிலைத் தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். (இவை மூன்றுபாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாராவென்பதூஉம், கோடுதல் கேட்டிற் கேதுவாமென்பதூஉம், கோடாதவன்தாழ்வு கேடன்றென்பதூஉம் கூறப்பட்டன.) (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் மேல் வினவிய வினாவிற்கு விடையிறுத்ததாகவே முடியும். என்னை? ஒருவன் நடுவுநிலை

* உற்பாதம்=பின்வருவனவற்றை அறிகுறியால் முன்னே தெரிவிப்பது.

நில்லாது பொருள்கொண்டு இந்திரன்போல் எவ்வித பெருக்கத்தோடு வாழ்ந்தாராயினும், அவனது அறனல்லாத செய்கையையுணர்ந்த உலகோர் அவனை இழித்துக் கூறுவரே யன்றிப் பழியஞ்சிச் சம்பாதித்த சிறு பொருளுடையான் ஒருவனைப் புகழ்வதுபோல் புகழவே மாட்டார்கள். ஆதலால், நடுவுநிலைமை என்னும் அறத்தின் வழி நின்று தன் ஊழ்வலிக்குத் தக்க வளவாகக் கிடைத்த பொருளை முதலாகக்கொண்டு வாழ்கின்ற ஒருவனை உலகோர் வறிஞன் என்று கொள்ளாது தேவபோக முதலாகிய செல்வங்களை யடையும் மறுமைப்பயனுக் குரியானென்றும், இம்மையில் இல்லறத்தானொருவன் அடையக்கூடிய புகழிற் குரிய செல்வனென்றுமே எண்ணுவர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் ஒருவன் உலகத்து, பொருளைத் தேடுங் காலத்து நடுவுநிலையொடு நின்று பொருள் தேடவேண்டும் என்றும் அதுவே இருமையையுந் தருவது என்றுமறிந்தோம். இனி, இருவர் மாறுபட்ட காலத்து நடுவுநின்று நியாயம் கூறுகின்ற அவைக்களத்தோர் முதலியோர் நிலை இதுவென இதுவரையும் அறியவில்லை. அவ்வவைக்களத்தோர் எவ்வித தகுதியுடையோராய் இருத்தல் வேண்டுமென்பதைப் பற்றியும் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்
[தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(பரி.) இ-ள். சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்=முன்னேதான் சமனாகநின்று பின் தன்கண்வைத்தபாரத்தை வரையறுக்குந்துலாம்போல—அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி=இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம். எ-று

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும், கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தடைவிடைகளாற் * கேட்டவற்றை ஊழான் ‡ உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற்கோடாமையாவது அவ்வுள்ள

* தடை=வினு. தொடை யென்பதும் பாடம் ‡ ஊழ்=முறைமை.

வாற்றை மறையாது பகை நொதுமல் நட்பென்னும் மூன்றுதிறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களானமைதல் இருவழியும் ஏற்பன கொள்க. (அ)

விளக்கம் :—மக்காள்! நீங்கள் வினவும் வினாக்கள் மனத்திற்கு மிக மகிழ்வைத் தருகின்றன. என்னை? நம் தெய்வப்புலவர் உலகத்து மக்கள் உய்யும் வண்ணம் யாவும் சீர்பெறத் தெரிவித்துள்ளனராதலால், இவ்வவைக்களத்தோர் செயல் இவ்விதம் இருத்தல் வேண்டுமென்று பசுமரத்தில் ஆணியறைந்ததுபோல், துலாக்கோலொன்று தன்னிடத்தில் இட்ட பொருளை கொள்வோருக்கும் விற்போருக்கும் யாதொரு ஐயமும் நட்டமும் உண்டாகா வண்ணம் வரையறுத்து நடுவாக நின்று சீர்தூக்கிக் காண்பிப்பது போல், அவைக்களத்தாரும் துலாக்கோல் போல் நின்று இருபக்கத்தும் நன்றாக வினவி எதுகாரணத்தாலும் எத்துணைச் சிறிதும் ஒரு பக்கத்தும் சாயாது நடுவாக நிற்றல்வேண்டும் என்று யாவரும் அறிந்துள்ள துலாக் கோலை உவமை கூறினர். இதுகருதியே திருவிளையாடற் புராணத்துள்ளும், மாமனாக வந்து வழக்குரைத்த படலத்துள், மாமனாக வெழுந்தருளிய இறைவன் அவையோரை நோக்கி 'நீங்கள் சிறிதும் நடுவுநிலை தவறுதலாகாது. செங்கோலோச்சும் நீதியோடுகூடிய அரசன் தனது செங்கோலைத் துலாக்கோலாகக்கொண்டு, நுட்பமாகிய அறநூல்களை அதற்கு நூலாகப்பூட்டி, கருமமென்னுந் தட்டுக்களை துலைத்தட்டுகளாக வகுத்து, தனது நாவினையே இத்துலாக் கோலுக்கு நாவென்னும் முள்நுனியாக நிறுத்தி நீதி இது, அநீதி இது எனச் சீர்தூக்குவது முறையாகும் அதுபோல் என் வழக்கினையும் என்னாதிகளது வழக்கினையும் நீங்கள் சீர்தூக்கிப்பார்த்து உண்மையுரையுங்கள்!' என்று பன்முறை கூறினர் என்று அடியில் காட்டியுள்ள செய்யுளே உங்களுக்கு விளக்கும் என்றனர்.

"ஆவலித்தழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல் கட்டியதருமத் தட்டில்
நாவெனுந் துலைநாவிட்டெடம் வழக்கையு நமராய்வந்த
மேவலர் வழக்குந்தூக்கித் தெரிகெனவிதந்து சொன்னார்."

இதுகேட்ட மாணாக்கர், "எந்தாய்! இத்திருக்குறளோ எங்களை மகிழச்செய்கின்றது. ஆயின், சிலர் வாக்கால் ஒன்றுகூறி மனத்துள் ஒன்று எண்ணி நிற்பாராயின் அது நடுவுநிலையாகுமோ? பகைவனொருவன் பிறனோடு வாதிட்டு தன்முன் நீதி உணரவேண்டி வருவானாயின், நடுநிலை கூறுவோன் தன் பகைவனென்று மனத்தில் எண்ணாது நிற்றல்கூடுமோ? அவன் மனத்தில் எண்ணுவானாயின் நடுவுநிலையுண்டாகுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 119. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
## உட்கோட்ட மின்மை பெறின்.

(பரி.) இ-ள். செப்பம் சொற்கோட்டம் இல்லது=நடுவுநிலைமையாவது சொல்லின்கட்கோடுதலில்லாததாம்,—உட்கோட்டம் இன்மை ஒருதலையாப்பெறின்=அஃதன்னதாவது மனத்தின்கட்கோட்டமின்மையைத் திண்ணிதாகப்பெறின். எ-று.

சொல்=ஊழான் அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவு நிலைமையாமெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவு நிலைமையன்றென்பது பெறப்பட்டது. (௯)

விளக்கம்:—நடுநிலை நிற்கின்றானென்னும் புகழுடன் ஒருவன் வாழவேண்டுமாயின், இவன் நட்பினன் இவன் பகைவன் இவன் நட்பும் பகையுமில்லாத நடுவன் என்னும் கொதுமலன் என்று எண்ணுதலுங்கூடுமோ? அவ்விதம் ஒருவழியும் மனத்தைச்செலுத்தாது எவ்வுயிரும் தன்னுயிரென்றே யெண்ணுகின்ற அன்பின்மிகுதியாகிய அருளையுடையவனே நடுவுநிலையுடையவனாவான். அவ்வித அருமையிலும் அருமையாகிய கோணுதலில்லாத மனவன்மையைப் பெற்றவனொருவனே நீதி கூறுவானாவான். அவன் வாக்கின்கண் நிகழும் சொற்களோ சிறிதுங் கோணுதலில்லாத செப்பமுடைய சொற்களாகும். அதுவே, தகுதியுள் தகுதியாகும். அது கருதியே நம் தெய்வப் புலவரும் இவ்வதிகாரம் முதற்றிருக்குறளில் நடுவுநிலைமையைத் "தகுதி" என்று போற்றியழைத்தனர். ஆதலால், மனம் எவ்வழி அவ்வழிவாக்கு என்றறிதல் வேண்டும் இதனை நூற்றுவராகிய துரியோதனாதியருள், துர்ச்சாதனன் துரௌபதையின் துகிலை உரிந்த காலத்தே அஞ்சாது நடுவுநிலை பேசிய "விகர்ணன்" என்பவனிடத்தே காணுதல்கூடும். என்னலும், மாணாக்கர்,

“உரைவோய்! அவையத்தார் செயலும், தகுதியும் இவையென உணர்ந்தோம். இனி, துலாக்கோலினையுவமைகூறிய வளவாகவே துலாக்கோலைக் கைக்கொண்டு உலகந்தோன்றிய காலமுதல் உயிர் வாழுகின்ற வாணிகத்தொழிலைச் செய்வோர்க்கு இவ்வித தகுதியுள்ளதோ என்று அறிய மிகுதியும் ஆசைப்படுகின்றோம்” என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

### 120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவுந் தமபோற் செயின்.

(பரி.) இ-ள். பிறவும் தமபோல் பேணிச் செயின்=பிறர்பொருளையுந் தம பொருள்போலப் பேணிச் செய்யின்,—வாணிகம் செயவார்க்கு வாணிகம்—வாணிகஞ்செய்வார்க்கு நன்றாய வாணிகமாம். எ-று.

பிறவுந்தமபோற்செய்தலாவது :—கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். (இப்பாட்டு மூன்றனுள், முன்னையவிரண்டும் அவையத்தாரை நோக்கின, ஏனையது வாணிகரை நோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறாகச் சிறந்தமையின்.) (ய)

விளக்கம் :—இவ்வதிகாரத்தின் இவ்விறுதித் திருக்குறள் வாணிகஞ் செய்வாரையே நோக்கிக் கூறிய திருக்குறளாதலால், நீங்கள் கொண்ட பெரியதோர் ஐயம மிகுதியும் நீங்கிற்றென்று நான் எண்ணுகின்றேன். என்னை? வாணிகம் செய்வார் தம் தொழிலாகிய வாணிகம் நன்றாக வாய்க்கப்பெற்று உலகத்துப் பொருள் கொண்டு பன்னெடுநாள் வாழவேண்டுமாயின், தாம பிறரிடத்து வாங்கும் பொருளுக்குச் சரியாகக் குறைவில்லாமலும் தீயபொருளல்லாமலும் உள்ள பொருளையே கொடுத்தல்வேண்டும். அதுவன்றி, மிகைபடப்பொருள் கொண்டு குறைபடப்பொருள் நிறுத்துக்கொடுத்தலும், நற்பொருள் காட்டித் தீப்பொருள் கொடுத்தலும் ஆகிய நடுவுநிலையற்ற காரியத்தைச்செய்வாராயின் அவர் வாணிகம் அறக்கடவுளால் முறியப்பெற்றுச் சூரியன் முன்பனிபோல் ஒழிந்துபோவதே திண்ணம். அன்றியும், அவர் செய்த வாணிகம் மாத்திரமல்லாமல் அவர்க்கு முன்னிருந்த பொருளும் ஒன்றுமில்லாமல் ஒழிந்துபோம். ஆதலால், செப்பமுடையவனுடைய ஆக்கமானது அவனுக்கும் உதவி அவன் மக்கட்கும் உதவுவதுபோல், செப்ப

மில்லாத இவ்வாணிகர்க்கு உதவுதலில்லையாகும். இது கருதியன்றோ மாமனாக வந்த இறைவன்,

> " நட்பிடை வஞ்சஞ்செய்து நம்பினோர்க் கூன்மாறுட்டத்
> துட்படக்கவர்ந்து மேற்றோர்க்கிம்மியு முதவாராயும்
> வட்டியின் மிதப்பக்கூறி வாங்கியுஞ் சிலர்போலீட்டப்
> பட்டதோ வறத்தாறிட்டு நம்பொருள்படுமோ வென்று."

என்று நற்பொருளன்றித் தீப்பொருள் நில்லாது என்று உறுதிகூறினர். ஆதலால், நடுவுநிலையொன்றே எல்லா அறங்களினும் மிகச்சிறந்ததென்றும், அவ்வறம் ஒன்றே எல்லாப்பயனையுந் தருவதென்றும் முதற்றிருக்குறளில் "தகுதியென ஒன்றே நன்று" என்று பிரிநிலை யேகாரங் கொடுத்துக் கூறினர். ஆதலால், இவ்வறத்தை முதலாகக்கொண்டு இனிச்சொல்லும் அறங்களையுஞ் சீர்தூக்கிப் பார்ப்போமாக என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 13. அதிகாரம்.

## அடக்கமுடைமை.

---

(பரி.) அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கட்செல்லாது அடங்குதலுடையனாதல். அஃது எதிலார்குற்றம்போல் தன் குற்றமுங் காணும் நடுவு நிலைமையுடையார்க்கு ஆதலின், இது நடுவு நிலைமையின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:--அதாவது, மேற்கூறிய இல்வாழ்வான் அடங்குதலுடையனாய் இருத்தல். இதுகாறும் நம் தெய்வப்புலவர் இல்வாழ்க்கை முதல் நடுவு நிலைமை யீறாக இல்லறத்திற்கு இன்றியமையாச்செயல்களைக்கூறி அவ்விதம் நடந்தாலொருவன் இம்மை மறுமைப் பயன்களையடையும் வண்ணம் பலவித அறங்களினுட்படுத்தி மனமொழி மெய்களுக்கு உரியனவாகிய செயல்களைச்செய்ய விதிமுகமாக எடுத்துக்கொண்ட அதிகாரங்களுள் முதலாக இவ்வடக்கமுடைமையைக் கூறுவாராயினர். இவ்விதம்கூறிய அடக்க

முடைமை அயலார் குற்றத்தைத் தாம் காணுமாறுபோல் தம்முடைய குற்றத்தையும் காணுந் தகுதியையுடைய நல்லறிவுடையார்க்கே கூடுமாதலால் நடுவுநிலைமையென்னும் அதிகாரத்தின் பின்னர் இவ்வதிகாரத்தை வைத்தனர். இனி, இவ்வதிகாரத்தின் முதற் குறளில் எடுத்துக்காட்டும் பயனை இயம்புவன் என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

121. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(பரி.) இ-ள். அடக்கம் அமரருள் உய்க்கும்—ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்து உய்க்கும்;—அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும்—அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட்செலுத்தும். எ-று.

இருளென்பது ஓர் நரகவிசேடம்.* "எல்லாம்-பொருளிற் பிறந்து விடும்" என்றாற்போல உய்த்துவிடுமென்பது ஒருசொல்லாய் நின்றது. (க)

விளக்கம்:—அறங்கூற வந்த நாயனார் இல்லறத்தின் பயனாகிய இம்மை மறுமை இரண்டனுள் மேலாய மறுமைப்பயன் ஒன்று இவ்வறத்தால் கிடைப்பது திண்ணமாகலின், இம்மைப்பயன் முன்னரே கிடைத்துவிட்டது என்னும் பொருள்பட மறுமையைக் கூறுவாராய், ஒருவன் அடக்கம் என்கின்ற மெய்,மொழி,மனங்கள் அடங்குவனவாகிய அறம் ஒன்றினைச் செய்து முடிப்பானாயின், அப் பெரியதோர் அறமானது இம்மைப்பயனைத் தருவதுடன் மறுமைப் பயனாகிய தேவர் உலகத்தையுங் கொடுக்கும். அடக்கமில்லாகிய வொருவனுக்குத் தான் ஓர் கணமும் தங்கமுடியாததும் பாவத்தின் பயனுமாகிய இருள் என்னும் ஓர் விசேட நரகமானது கிடைக்கும். இருளென்னும் சொல்லைக் கடவுள்வாழ்த்தில் "இருள்சேர் இருவினை" என்று எடுத்துக்காட்டிய காலத்தே 'இருள்' என்னுஞ் சொல்லுக்கு மயக்கமென்றும் அவிச்சை யென்றும் பொருள் கூறினர். ஈண்டு அச்சொல்லிற்கு ஓர் நரகவிசேடமென்றுங் கூறினர். ஆதலால், நாம் இப்பொருள் நயங்களை உய்த்துணர்தல்வேண்டும்.

---

*விசேடம்=வேறுபாடு.

அன்றியும், "உய்த்துவிடும்" என்னும் சொல்லிற்கு செலுத்தும், என்னும் பொருள்படக் கூறியது நான்மணிக்கடிகையிலும்

"கல்லிற்பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற்பிறக்கும் உயர்மதம்—மெல்ல
வருளில் பிறக்கும் அறநெறியெல்லாம்
பொருளிற் பிறந்துவிடும்."

என்னும் செய்யுளில் உள்ள ஈற்றுச் சொற்களாகிய "பிறந்துவிடும்" என்பனவற்றை எடுத்துக் காட்டியதையும் உய்த்துணர்தல் வேண்டும் என்றனர். அதுகேட்ட மாணுக்கர் மிகமகிழ்ந்தாராய், "அடக்கமுடைமை என்பது தேவ உலகத்தைத் தந்துவிடும் என்றீர். நாங்கள் செல்வங்களைக்கொண்டு அதனினும் சிறந்ததாகிய ஈதலைச்செய்து, புகழைப்பெற்றுத் தேவ வுலகத்தையும் பெறுதலாகாதோ? செல்வம் ஒன்றுதானே அறத்திற்கும் இன்பத்திற்குங் காரணம்?" என்று கூறலும், ஆசிரியர் இரண்டாவது திருக்குறளைச் சொல்லத் தொடங்கினர்.

122. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனி னூங் கில்லை யுயிர்க்கு.

(பரி.) இ-ள். உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை=உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை;—அடக்கத்தைப் பொருளாக் காக்க= ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க. எ-று.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேல் நின்றது, அறிந்து அடங்கிப்பயன்கொள்வது அதுவேயாகலின். (உ)

விளக்கம் :—நீங்கள் மேற்கூறிய வண்ணம் எச்செல்வமாயினும் இவ்வடக்கமென்னுஞ் செல்வத்தைப்போல் மக்கள் உயிர்கட்கு உறுதிதராது. இது பொருளுடையார் அல்லார்க்கும், மிக்கதோர் பயன்தரும் செல்வமாகும். ஆதலால், நீங்கள் அடக்கம் என்னும் இவ்வறத்தை எக்காலத்தும் அழியாத உறுதிப் பொருளென்றெண்ணி அது கெடாமல் காத்தல்வேண்டும் என்னலும், கேட்ட

மாணாக்கர், "இவ்விதம் மறுமைப்பயன் கூறினாராகிய முனிவர் இம்மைப்பயனைக் குறித்து ஏதேனுங் கூறினரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

123. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(பரி.) இ-ள். அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின்=அடங்குதலே நமக்கு அறிவாவதென்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கப் பெறின்;—செறிவு அறிந்து சீர்மை பயக்கும்=அவ்வடக்கம் நல்லோரான றியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும். எ-று.

இல்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெய்ம்முதன் மூன்றும் தன் வயத்தவாதல். (௩)

விளக்கம்:—இம்மைப்பயன் கூறுவான்பொருட்டே இத்திருக்குறள் எழுந்ததாகும். அது என்னையோவெனின்? நூலறிவும் உலகவறிவும் பெற்ற ஒருவன் தான் அடங்கி நடப்பதே தனக்குச் சிறந்த நெறி என்றறிந்து அடங்கி நடப்பானாயின், அவ்வித அடக்கத்தைக் கண்ட சான்றோர் இவன் சால்புடையன் என எண்ணி மதிப்பர். அம்மதிப்பானது பெரியதோர் சிறப்பினைத் தருவதாகும் என்னலும், மாணாக்கர், "அடங்குவது, அடங்குவது என்பதியாது? அடங்கினனது பெருமை எத்துணைப் பெரியது?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(பரி.) இ-ள். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்=இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி—மலையினும் மாணப்பெரிது=மலையினுயர்ச்சியினும் மிகப் பெரிது. எ-று.

---

நெறியானே என்பது நெறியில் எனும் ஏழாவதன்பொருண்மைக்கண் வந்தது. ஒருவன் என்பது இல்லறத்தானைச் சுட்டியது.

தோற்றம், ஆகுபெயராய் உயர்ச்சியை யுணர்த்தி நின்றது. மலை—ஈண்டு உயர்ச்சியை யுணர்த்தினமையின் ஆகுபெயர்.

திரியாதடங்குதல்=பொறிகளாற் புலன்களை நுகராநின்றே அடங்குதல். மலை—ஆகுபெயர். (௪)

விளக்கம் :—இத்திருக்குறள் அடங்குவது இவ்விதமென்வும், அடங்கினது பெருமை இத்துணைச் சிறப்புடையதெனவும் எடுத்துக் காட்டுகின்றது. அதாவது இல்வாழ்வானாயுள்ள ஒருவன் தனக்குக் கூறிய வாழ்க்கைத் துணைவியோடு வாழ்ந்து, (புலன்களை யடக்கித் திரிவேம் என்னும் பொய்த்தவர்போல் நில்லாது) ஐம்பொறிகளால் புலன்களை ஆரத் துய்த்துநிற்பதே அடக்கமுடைமையாகும். அவ்வித அடக்கமுடையவன் உயர்வானது எல்லாராலும் காணக்கூடிய பெரியதோர் தோற்றமுடைய மலையைக் காட்டிலும் மிகப்பெரியதாய்க் காணப்படும். அன்றியும், அவனது மெய், மொழி, மன அடக்கமானது எல்லோராலும் அறியப்பட்டு புகழ் என்னும் பெரியதோர் உயர்ச்சியை உண்டாக்கும் என்றனர். கேட்ட மாணுக்கர், “இவ்வடக்கம் செல்வர்க்கும் வேண்டுமோ?” என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

125. எல்லார்க்கு நன்றாம் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(பரி) இ-ள். பணிதல் எல்லார்க்கும் நன்றாம்=பெருமிதமின்றி யடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும்—அவருள்ளும் செல்வர்க்கே செல்வந்தகைத்து=அவ்வெல்லாருள்ளுஞ் செல்வமுடையார்க்கே வேறொரு செல்வமாஞ் சிறப்பினையுடைத்து. எ-று.

பெருமிதத்தினைச்செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்புமுடையார் அஃதின்றி அமைதும்மானே அடங்கியவழி அவ்வடக்கஞ் சிறந்து காட்டாதாகலின், ‘செல்வர்க்கே செல்வந்தகைத்து’ என்றார். செல்வத்தகைத்தென்பது மெலிந்துநின்றது. பொதுவென்பாரையு முடம்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு. (இவையைந்துபாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.) (௫)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய வினாவிற்கு விடை ஒருங்கே தரப்பட்டது. அடக்கம் என்பது பெருமிதமில்லாது அடங்கிடப்பது என்றாம், அதுவறிஞர், செல்வர் முதலிய

யாவர்க்கும் சமமாகவே யிருத்தல் வேண்டுமென்றும், ஆயின் செல்வர்க்கே அது சிறப்பாக விருக்கவேண்டு மென்றும் எடுத்துக் காட்டியதாயிற்று. ஏனெனின்? கல்வியாளரும் நற்குடிப் பிறப்புடையவரும் அக்கல்வியினாலும் நற்குடிப் பிறப்பினாலும் கருவங்கொள்ளுவது இயல்பேயாயினும், அக்கல்வியினாலேயும் நற்குடிப்பிறப்பினாலேயும் தமக்கு உண்டாகிய கருவத்தைத் தாமே யடக்கிக்கொள்ளுவராதலால், அவ்வடக்கம் அத்துணைச் சிறந்ததாகாது. ஆயின், அவ்விரண்டுமில்லாது மாறாத கருவத்தை யுண்டுபண்ணும் செல்வம் ஒன்றைப்பெற்றவன் தன்னுடைய கருவத்தை மாறும்படிச்செய்து அடங்குவானாயின், அவன் அவ்வடக்கத்தால் மற்றொரு செல்வங் கிடைத்ததுபோன்ற சிறப்பினை யுடையவனாவன் என்றெடுத்துக் காட்டியதாகும். செல்வமுள்ளார் அடங்கியிருப்பது அருமையென்றும், அவ்விதம் அடங்குவாராயின் மிக்கதோர் தகுதியை உடையரென்றுங்கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அடக்கம் யார்க்கும் பொதுவென்றும், ஆயின் செல்வந்தர்க்குச் சிறப்புடையதென்றும், அதுவேயுயிர்க்கு வுறுதிபயப்பதென்றும் அறிந்தோம். இனி அவ்விதம் மெய் மொழி, மனம் அடங்குவது எவ்விதமென்று ஒவ்வொன்றாக விளக்கிக் காட்டல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

126. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(பரி.) இ-ள். ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் = ஆமைபோல ஒருவன் ஒருபிறப்பின்கண் ஐம்பொறிகளையுமடக்கவல்லனாயின்,—எழுமையும் ஏமாப்பு உடைத்து = அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் அரணாதலையுடைத்து. எ-று.

ஆமை ஐந்து உறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமலடக்கவேண்டுமென்பார், 'ஆமைபோல்' என்றார். ஒருமைக்கட்செய்தவினையின்பயன் எழுமையுந்தொடருமென்பது இதனால் அறிக. (இதனால் மெய்யடக்கங் கூறப்பட்டது.) (அ)

ஒருமை, எழுமை என்பன அளவையாகு பெயர்களாய் இம்மை மறுமைகளை யுணர்த்தின. ஐந்து தொகைக் குறிப்புப் பெயர். ஆமை என்பது அதன் காரியத்தை யுணர்த்தினின்ற தொழிலுவமம்.

விளக்கம்:—இவ்வாசிரியர் இதுகாறும் மன, மொழி, மெய், என்று கூறுவது வழக்காக விருப்பினும் இப்போது அறங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறவந்தவர் அடக்கமுடைமை யென்னும் இவ்வதிகாரத்தில் மெய், மொழி, மனம் என மாற்றிக்கொண்டு முதலில் மெய்யடக்கங் கூறுவாராயினர். அது என்னையோவெனின் ? இல்வாழ்வானொருவன் "நிலையிற்றிரியாது" என்று நான்காவது திருக்குறளிற் கூறியபடி தன்மனைவியினிடத்தே இன்பந்துய்த்தல்வேண்டுமேயன்றி பிறர்மனை விழைதலும், பரத்தையர்ப்புணர்தலும், இழிகுல மகளிரைச் சேர்தலும், பெண்வழிச் செல்லலும் ஆகிய குற்றங்களுள் செல்லாது ஆமையொன்று தன் ஐந்து உறுப்புக்களையும் துன்பமடையாவண்ணம் அடக்கிக்கொள்வதுபோல் இல்வாழ்வானாகிய இவனும் தன் ஐம்பொறிகளையடக்க வல்லானாயின் அவ்வடங்குதலாகிய பெரிய தகுதியானது அப்பிறப்பில் மாத்திரம் அல்லாமல் இனியெடுக்கும் ஏழு பிறப்பின்கண்ணும் அவனுக்குத் துன்பம் வாராவண்ணமாகக் காக்கும் அரணாக விருக்கும் என்று அருளினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "முன்னர் நடுவுநிலை கூறிய காலத்தேயே தகுதி யெல்லாவற்றுள்ளும் மேலாய தகுதி நடுவுநிலைமை யென்றனர். பின்னர் செம்மையாவற்றுள்ளும் செம்மையாகிய நடுவுநிலைமையைச் செப்பமென்றனர். இவ்வாறு கூறிய இவர், இனி அத்தகுதியுஞ் செப்பமும் அடக்கமுடைமையே யென்றறிவிக்கவேண்டி, அவ்வடக்கமுடைமையானது, மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கண் செல்லாது நிற்றலென்றுங் கூறினர். அவ்விதம் தீநெறி செல்லாதிருத்தற்கு மெய்யை முதலில் எடுத்துக்கொண்டு அது அடங்குமாயின் யாவும் அடங்கும் என்னுங் குறிப்புத்தோன்ற மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐம்பொறிகளிடத்தும் செல்லும் ஆசையைச் செல்லவொட்டாமல் அடக்குதலே மெய்யடக்கம் என்றும், அவ்விதம் அடக்கிக்கொள்வது எவ்விதமெனக் கேட்போர் ஐயுறுவண்ணம் உவமை வாயிலாக விளக்கிக் காட்டுவான்வேண்டி, கால்கள் நான்கும் தலையொன்றுமாகிய ஐந்துறுப்புமுடைய ஆமையொன்று தன்னைப்பார்க்கும் மக்கள் தன்னை யிடர்ப்படுத்தாதவிதம் தன் உறுப்புக்களை யடக்கிக்கொள்வதுபோல மெய்யடக்கம் வேண்டும் என்று உவமை கூறினர். இவ்விதம் காட்சியளவையாக

உவமை கூறுவதுடன் செயலளவாகவும் உவமை கூறியது விந்தையினும் விந்தையாகும். அன்றியும், ஆமையொன்று தான் சலிக்கின்ற காலத்துத் தன் உறுப்புக்களை வெளிக்காட்டுவதுபோல், இல்வாழ்வானொருவனும் தன் மனைவியிடத்தே போகந் துய்க்குங் காலத்து ஐந்தவாவினையும் அவளிடத்தே செலுத்தல் கூடுமென்னும் தொழிலளவாகவும் உவமை கூறியதாகவு மறிந்தோம். ஆதலால், தேவரீர் கூறிய மெய்யடக்கத்தை நன்றாகத் தெரிந்துகொண்டோம். இனி நாவடக்கமென்பதையும் அறிய விரும்புகின்றோம்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

## 127. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
## சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(பரி.) இ-ள். யா காவாராயினும் நா காக்க = தம்மாற் காக்கப்படுவன வெல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும் நா வொன்றனையுங்காக்க;— காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டுச் சோகாப்பர் = அதனைக் காவாராயிற் சொற்குற்றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவர். எ-று.

யாவென்பது அஃறிணைப்பன்மை வினாப்பெயர். அஃதீண்டு எஞ்சாமை யுணரநின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. சொற்குற்றம் = சொல்லின் கட்டோன்றுங் குற்றம். அல்லாப்பர், செம்மாப்பர் என்பன போலச் சோகாப்பரென்பது ஒருசொல். (எ)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் நாவடக்கமென்பது எதுவென்றும், அவ்வாறு அந்நாவடக்கத்தைக் கொள்ளாவிடில் அதன் பயன் எதுவாகுமென்றும் அறிந்தீராவீர். என்னையோவெனின்? இல்வாழ்வானொருவன் தான் காக்கவேண்டிய எல்லாவற்றையும் காக்க முடியாமற் போனாலும், தன் நாவொன்றினையாவது காத்துக்கொள்ளல்வேண்டும். அதனைக்காவாதுபலரிடத்தும் பேசப்புகுவானாயின் நல்லோர்களால் இவன் பேசுஞ் சொற்களிலுள்ள குற்றங்கள் காணப்பட்டு 'பதர்' என மதிக்கப்படுவான். அது காரணமாகப் பலராலும் பழிக்கப்படும் துன்பத்தை யடைவான் என்பதேயாகும். இது "மணலுள் முழுகி மறைந்துகிடக்கும் நுணலுந் தன்

நா என்னும் இடத்தின் பெயர் சொல்லையுணர்த்தி நின்றது.

வாயாற்கெடும்'' * என்னும் உவமைக்கு இலக்காக முடியும். ஆதலால்; நாவடக்கம் மிகச் சிறந்ததும் மிக்கதோர் பயன் தருவதும் என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இத்திருக்குறளால் சொற்சோர்வு உடையவன் துன்பம் அடைவான் என்று கண்டோம். ஆயின் சொற்சோர்வு படாது 'வல்லவனுடைய பம்பரம்' என்பதுபோல் பிறர்க்குத் தீங்கு பயக்கும் தீய சொற்களை யொருவன் சொல்லும் தாமுடையனுய் இருப்பனுயின், அவனை என்னென்று கூறுவது?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

128. ஒன்ருனுந் தீச்சொற் பொருட் பயனுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

(பரி.) இ-ள். தீச்சொற்பொருட்பயன் ஒன்ருனும் உண்டாயின் = தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந்துன்பமொன்ருயினும் ஒருவன்பக்கலுண்டாவதாயின்,—நன்று ஆகாதாகிவிடும் = அவனுக்குப் பிற அறங்களானுண்டான நன்மை தீதாய்விடும். எ-று.

தீயசொல்லாவன:—தீங்குபயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல்லென்பன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்ருயினுந் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டாவதாயினென்றுரைப்பாருமுளர். (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவன் கூறுகின்ற தீயவாகிய சொற்களின் பொருள்களால் வனையோர்க்குத் துன்பம் வருமாதலால் அவன் எத்துணை அறங்களைச் செய்தானுயினும், அவ்வறங்களால் உண்டாகிய நன்மைகளெல்லாம் தீமைகளாகவே மாறிவிடும். தீச்சொற்களென்பன பொய் பேசுதலும், கோள் சொல்லுதலும், இனிமையல்லாத சொற்களைச் சொல்லுதலும் என்று கூறி நின்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் ஒருவன் கூறிய தீயசொல்லால் வரும்பயனுகிய துன்பத்துக்கு இலக்காக நின்றவன் தன்னுடைய பொறுமையால் அதைமறந்து விடுதலாகாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

* பழமொழி.

129. தீயினாற் சுட்ட*பு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.†

(பரி.) இ-ள். தீயினால் சுட்ட புண் உள் ஆறும் = ஒருவனையொருவன் தீயினாற்சுட்டபுண் மெய்க்கட்கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே ஆறும்;—நாவினால் சுட்டவடு ஆறாது = அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவினாற் சுட்டவடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது. எ-று.

ஆறிப்போதலால் தீயினாற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாதுகிடத்தலால் நாவினாற்சுட்டதனை வடுவென்றுங்கூறினார். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறாமையாற்றீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது குறிப்பான்வந்த வேற்றுமையலங்காரம். (இவைமூன்று பாட்டானும் மொழியடக்கங் கூறப்பட்டது.) (௯)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவன் தன் நாவினால் மற்றொருவனைக் கூறியவசையை "வடு" வென்றும், அது ஆறாதது என்றும், இவ்வசையானது ஆறிப்போகின்ற தீயினால் சுட்டபுண்ணைக் காட்டிலும் கொடியதென்றும் எடுத்துக் காட்டியதாயிற்று. என்னையோவெனின்? ஒருவனைத் தீயினாற்சுட்ட புண்ணானது அவன் தேகத்தின் கண்ணே கிடப்பினும், அவனது மனத்தின் கண்ணே சுட்டதால் உண்டாகிய துன்பம் அப்பொழுதே நீங்கி விடுகின்றது. ஆனால், நாவினால் சுட்டவசையோ, சுடப்பட்டவன் மனத்தில் அவன் இறக்கும்வரையும் நீங்காமல் நிலைபெற்று உள்ளது. மனத்தில் ஆறிப்போவதைப் புண்ணென்றும், மனத்தில் ஆறாததை வடு என்றும் வேறுபடுத்திக் காண்பித்தனர். இதனை உரையாசிரியர் வேற்றுமை யலங்காரம் என்றனர். ஏனெனின் கூற்றினுங் குறிப்பினும் ஒப்புடை யிருபொருள் வேற்றுமைப்படவரின் வேற்றுமையதுவே என்பதனால். ஆதலால், நீங்கள் மேற்கூறிய மூன்று செய்யுள்களாலும் வாக்கடக்கம் என்பது இது என்று அறிந்தீர்கள். இனி, மன அடக்கத்தையும் கூறுகின்றேனென்று கடைசி திருக்குறளைச் சொல்லத் தொடங்கினார்.

---

* சுட்டபுண் என்பதில் பெயரெஞ்சுகிளவி காரணப்பொருட்டு. †வடு என்பது அடையாளம். வெவ்வுரை மனத்தைச் சுடுதலை யொத்ததொழில் செய்தலால் ஒத்தல்.

130. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
*யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(பரி.) இ-ள். கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி = மனத்தின்கண் வெகுளிதோற்றாமற் காத்துக் கல்வியுடையனாயடங்குதலை வல்லவனது செவ்வியை — அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து = அறக்கடவுள் பாரா நிற்கும் அவனையடையும் நெறியின்கட் சென்று. எ-று.

அடங்குதல் = மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி = தன் குறைகூறுதற்கு ஏற்ற மன மொழி முகங்கள் இனியனாங் காலம். இப்பெற்றியானை அறந் தானே சென்றடையுமென்பதாம். (இதனான் மன வடக்கங் கூறப்பட்டது.) (ம)

விளக்கம்:—இத்திருக்குறளால் மனவடக்கங் கூறவந்த ஆசிரியர், கல்வியுடையனாய வொருவன் தன் கல்வியால் பெருமிதமடையாது, கல்வியில்லா ஒருவன் தன்னைப் பழித்தகாலத்தும் வெகுளி தோன்றாது தன் மனத்தை அடக்கிக் கொள்ளுவானாயின், அவ்வித பெரியதோர் வல்லமையுடைய இல்வாழ்வானிடம் செல்லு நெறியினை அறக்கடவுள் பார்க்கும் என்பதாம். இவ்வாறு கூறுதலால் மன அடக்கமுடைய வொருவனை அறக்கடவுள் இவனே நாம் இருப்பதற்குத் தக்க இடனானவன் என்று எண்ணி அவனைவலிந்து சென்றடையும் என்பது பெற்றோம். ஆதலால், இவ்வடக்கமுடைமை என்பது, ஒருவன் அறத்தைப் பெறுதற்கு வழியென்றறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மெய், மொழி, மனம் அடங்கல் அறத்தையடைவதற்கு வழியெனவறிந்தோம். இனிக்கூறும் அறத்தின் பகுதியையும் அறியவிரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

* அறம்—அறக்கடவுளையுணர்த்தி ஆகு பெயராய் நின்றது.

## 14. அதிகாரம்.

## ஒழுக்கமுடைமை. 4

---

(பரி) அஃதாவது தத்தம் வருணத்திற்கும்* நிலை† க்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல். இது,மெய்ம்முதலிய அடங்கினார்க்கல்லதுமுடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது உலகத்தோடு ஒட்ட ஒழுகுகின்ற தன்மையுடையராதல். ஒருவன் எவ்வித பெரியதோர் தகுதியுடையனாயினும் தனது குடிமைக்குத்தக்க அளவாக நின்று ஒழுக வேண்டுமாதலால் இவ்வுரை யாசிரியர் "தத்தம் வருணத்திற்கும் நிலைக்கு மோதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்" என்று வலிந்துகூறினர். அவ்விதம் வருணத்திற்கும் நிலைக்கும் சொல்லப்பட்ட ஒழுக்கத்தினையுடையராய் இருத்தல் வேண்டுமாயின், மேல் அதிகாரத்தில் கூறிய மூன்று அடக்கமு முடையார்க்கே முடியுமாதலால் அவ்வடக்கமுடைமை என்னும் அறத்தின்பின் இவ்வொழுக்கமுடைமை யென்னும் அதிகாரத்தினை வைத்தனர் என்னலும், "ஒழுக்கமென்ப தொன்றுள்ளதோ? அதுயாவர்க்கும் உரியதோ? அது தவறாது காக்கவேண்டுவதோ? என்பனவாகிய விஷயங்களை யறிய அவாவுகின்றோம்" என்று மாணாக்கர் கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

131. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(பரி) இ-ள். ஒழுக்கம் விழுப்பம் தரலான்=ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலான்,—ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்=அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும். எ-று.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின், பொதுப்படக்கூறினார். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்

---

* வருணம்=பிறப்பால் வந்தசாதி. † நிலை=ஆச்சிரமம்.

பந்தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றும். உயிர் எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல் விழுப்பந்தாராமையின், 'உயிரினுமோம்பப் படும்' என்றார். (க)

விளக்கம் :—இத்திருக்குறளால் மேல் அவதாரிகையிற் கூறிய வண்ணம் உலகத்தோடு பொருந்த வொழுகுதல் ஒழுக்கமென்றும், அவ்வொழுக்கத்தைக் கைக்கொண்டார் உயர்ந்தவராயினும் இழிந்தவராயினும் மிக்கதோர் சிறப்பினை அவ்வொழுக்கத்தின் காரணமாக அடைவார்கள் என்றும், அவ்விதம் யார்க்கும் சிறப்பினைத்தரும் ஒழுக்கம் என்னும் அறத்தினை இல்வாழ்வானொருவன் எல்லாவற்றிலும் உயர்ந்த தன் உயிரைக்காட்டினும் மேலாகிய பொருளென்று பாதுகாத்தல் வேண்டும் என்றும் அறிந்தோம். எனெனின்? ஒருவனுக்கு உயிரானது எல்லாப் பொருளினும் சிறப்புடையதாயினும், ஒழுக்கத்தைப்போல் அத்துணைச் சிறப்பினைத் தாராமையால், உயிரினும் ஓம்ப வேண்டியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணக்கர், " அந்தோ! உயிர்தான் மிகச்சிறந்ததென்றெண்ணியிருந்தோம். உயிரினும் ஒழுக்கம் சிறந்ததென்பதற்குக் காரணம் அறியவிரும்புகின்றோம் " என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

132. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(பரி) இ-ள். ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க—ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமற்பேணி வருந்தியுங்காக்க;—தெரிந்து ஓம்பித்தேரினும் துணை அஃதே—அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமேயாகலான். எ-று.

பரிந்தும் என்னும் உம்மை விகாரத்தால்தொக்கது. (இவையிரண்டு பாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.) (உ)

விளக்கம் :—இத்திருக்குறளால் மேல் உயிரினும் ஒழுக்கம் சிறந்தது என்றுகூறிய துணையானே அவ்வொழுக்கத்தைக் காக்க வேண்டுமாயின், மனமொழி மெய்களையடக்கி அம்மூன்றில் ஏதேனும் தீநெறிச்சென்று ஒழுக்கங் கெடாவண்ணம் பாதுகாத்தலும்

வேண்டும். ஏனெனின்? இல்வாழ்வானொருவன் செய்யவேண்டிய அறங்கள் பலவற்றுள்ளும் எவ்வறஞ்சிறந்து இம்மை மறுமையாகிய இருமைக்குந் துணையாயிருப்பது என்று நூல்கள் பலவற்றையு மாராய்ந்து நுணுகிச் செல்லினும், இவ்வொழுக்கமென்னும் அறமொன்றே யாவற்றினும் மேம்பட்டு விளங்குகின்றதாதலால், அவ்வித ஒழுக்கத்தைப் பாதுகாத்தலில் உயிரினுமதிகமாகப் பாதுகாத்தல் வேண்டுமென்று மேற்கூறியதையே வலியுறுத்தியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் நற்குடியின்கண் தோன்றிய பிறகு அவன் ஏது செய்யினும் அக்குலத்தவனுகவே ஏற்றுக்கொள்ளப்படுவதை நாம் இன்னுங் கண்கூடாகவே காண்கின்றோம். அன்றியும், உயர்குடியிற்றோன்றியவன் ஒருவன் அவன் குடிக்கேலாத கூடாவொழுக்கங்களைச்செய்யினும், அவன் குலத்தார் அவனை நன்குமதிப்பதும் அவன் ஏனைய குலத்தாரை இழித்துப் பேசுவதும் பெரிதுங் காண்கின்றோம். ஆதலால், இழிந்த குலத்தார்க்கே ஒழுக்கம் வேண்டுமென்றும், உயர்ந்த குலத்தார்க்கு அவ்வித வரைவு வேண்டுவது இல்லை என்றும் தோன்றுகின்றது" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

133. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(பரி) இ-ள். ஒழுக்கமுடைமை குடிமை = எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்;—இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் = அவ்வொழுக்கத்தில் தவறுதல் அவ்வருணத்திற் றாழ்ந்த வருணமாய்விடும். எ-று.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர் குலத்தராவராகலின் 'குடிமையாம்' என்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின், 'இழிந்த பிறப்பாய் விடும்' என்றுங் கூறினர். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப் படுங்குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்விரைவு பற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனாக ஓதப்பட்டன. (௩)

விளக்கம்:—இத்திருக்குறளால் எக்குடித்தோற்றினும் யாவராக விரும்பினும் அதில் சிறப்பில்லை என்றும், ஒருவன் எக்குடித் தோற்றத்தவனாயினும் அக்குடிக்குச் சொல்லிய பண்டையோர் நூலிலுள்ள ஒழுக்கத்தைத் தவறாது அவன் செய்தல்வேண்டும் என்றும், அவ்விதம் செய்யானாயின் அவன் அக்குலத்திற்றோன்றியவனாக நினைக்கப்படாது எந்த வொழுக்கத்தில் நிலைக்கின்றானோ அதற்குத் தகுந்த குலத்தவனாகவேமதிக்கப்படுவான்என்றும்காண்கின்றோமாகையால், தோன்றிய குலத்தினாலேயே ஒருவன் இம்மைமறுமைகளின் சிறப்புக்களை அடைதல் இல்லை என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் உயர்குலத்தவனாகத்தோன்றி ஓதல் முதலிய அறுதொழிலையுஞ் செய்து ஒழுக்கத்திற்சிறிது குன்றுவானாயின் அவனை என்னென்று கூறுவது? ஒருவன் உயர் குலத்தானாகத் தோன்றி வேதமோது தலைமறந்து ஒழுக்கத்தில் பெரிதும் தகுந்தவனாகக் காணப்படுவானாயின் அவனை என்னென்றெண்ணுவது? அன்புகூர்ந்து விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

134. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(பரி.) இ-ள். ஒத்து* மறப்பினும் கொளலாகும்=கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணங்கெடாமையிற் பின்னும் அஃது ஓதிக்கொளலாம்;—பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்=அந்தணனது உயர்ந்தவருணம் தன்னொழுக்கங் குன்றக்கெடும். எ-று.

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான், 'மறப்பினும்' என்றார். சிறப்புடைவருணத்திற்கு † மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும். (௪)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் கொண்ட ஐயமானது அறவே ஒழிந்ததாகும். அதாவது, ஒருவன்தான் பிறந்த பார்ப்பன குலத்துக்கேற்பத் தான் கற்ற வேதத்தினை மறந்து விடுவானாயினும் அம்மறப்பினால் அவன் குலங்கெடவில்லை யென்றும், ஆனால் அவ்வுயர் குலத்தவன் தன் குலத்திற்குச் சொல்லிய ஒழுக்கத்தில் ஒரு

* ஓதியுணரப்படுவ தாகலின் வேதம் ஒத்தெனப்பட்டது. † சிறப்புடை வருணமென்றது பார்ப்பன வருணத்தை.

சிறிது தவறிவிடுவானாயின் அவன் இறக்குந்துணையும் அவன் பிறந்தகுலத்தாலாகிய பெருமையினை யிழக்கின்றான் என்றும் கண்டோம். எனெனின்? அவன் கற்ற வேதத்தை மறத்தலே இல்லை. ஒருகால் மறப்பானாயினும், அதை மற்றொருமுறை ஓதிக்கொள்ளல் கூடும். ஆனால், ஒழுக்கத்திற் குன்றிய அவ்வுயர் குலத்தான் ஒரு முறை தவறுவானாயின் மீண்டும் அதைத் தீர்த்துக் கொள்ளலாகாது. ஆதலால், ஒருமுறை கெடின் மறுபடியும் வாராததும் உயிர்க்குத் துணையா யுள்ளதுமாகிய ஒழுக்கமொன்றே உயர்ந்தகுலமென்றும் இழிந்தகுலமென்றும் வரையறுத்துக் காட்டும் என்னலும், "ஒருவன் உயர்ந்த குடியிலிருந்து தாழ்ந்த ஒழுக்கத்தைச் செய்யின், அவன் இழிகுலத்தவனாவன் என்று அறிந்தோம். இழிந்த குலத்தானொருவன் உயர்ந்த குலத்தவன் ஒழுக்கத்தைச் செய்வானாயின் அவன் யாவனாகக் கருதப்படுவான்?" என்று மாணாக்கர் கேட்டலும், ஆசிரியர், "மேற்றிருக்குறளில் கூறிய விசேடவுரையில் 'இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்தாராவராகலின் குடிமையாம்' என்று கூறினமையால், இழிந்தகுலத்தவன் ஒழுக்கமுடையனாக விருப்பானாயின் அவ்வொழுக்கத்தால் உயர்ந்த குலத்தினனாகவே மதிக்கப்படுவான் என்றது போந்த பொருளாயிற்று. இனி, அடுத்த திருக்குறளில் இதனை விளக்கிக்காட்டுவேன்" என்று ஆசிரியர் ஐந்தாவது திருக்குறளைக் கூறுவாராயினர்.

135 அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(பரி) இ-ள். அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று=அழுக்காறுடையான்மாட்டு ஆக்கமில்லாதாற்போல — ஒழுக்கம் இலான்கண் உயர்வு* இல்லை=ஒழுக்கமில்லாதவன்மாட்டும் உயர்ச்சியில்லை. எ-று.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென்பது பெற்றாம்; என்னை? 'கொடுப்பதழுக்கறுப்பான் சுற்ற' மும் நல்கூர்தலின். உயர்வு=உயர்குலமாதல். (டு)

* உயர்வு—ஈண்டு ஆகுபெயராய்க் குலத்தை யுணர்த்தியது.

விளக்கம்:—ஒழுக்க மில்லாதவனுக்கு உயர்வு இல்லை என்று மேல்கூறியதோடு நில்லாது, அவனுக்குமாத்திரந்தானே வுயர்வு இல்லை ? அவனோடு சேர்கின்ற சுற்றத்தவர் முதலியோர் யாவருக்குமே உயர்வில்லாமற்போம் என்று இத்திருக்குறளால் கூறியதாயிற்று. அது எதுபோலெனின் ?

“கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.” (திருக்குறள் —166.)

என்று நம் தெய்வப்புலவர் அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில் கூறியபடி பொறாமை உடையான் ஒருவனிடத்தே பொருள் முதலியவை நில்லாது போதலுடன் அவனுடைய சுற்றத்தார்க்கும் அவனது பொறாமை யென்கின்ற பாவத்தினால் உண்ணச் சோறும் உடுக்கவுடையும் இல்லாமல் கெட்டுப்போவதுபோல், ஒழுக்கமில்லானுக்கு உயர்வுஇல்லாமற்போம்என்று அழுக்காறுடையானை ஒழுக்கமில்லானுக்கு உவமை கூறினர். ஆதலால், தான் கெடுவது மாத்திரமல்லாமல் தன் குலத்தாரையுங் கெடுக்கும் ஒழுக்கமில்லாதவற்றை எக்குலத்தவரும் செய்யாதிருத்தலே சிறந்த அறமென்று கண்டோம் என்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், “ஒழுக்கத்தில் நிற்பதுமிகுதியும் அருமையென்றும், அது ஏதேனும் இடுக்கண் வருங் காலத்துத் தவறும்படிச் செய்யும் என்றும் பல்லோர் கூற நாங்கள் கேட்டிருக்கின்றோம். ஆதலால், அவ்விதம் வருந்திச் செய்யவேண்டிய ஒழுக்கத்தை யாவரும் செய்தல் கூடுமோ?” என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

136. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து

(பரி) இ-ள். ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்=செய்தற்கருமை நோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார்;—இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு* அறிந்து=அவ்விழுக்கத்தால் தமக்கு இழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றை அறிந்து. எ-று.

---

* படுபாக்கு என்பதில் பாக்குப் புடைபெயர்ச்சி விகுதி.

ஒழுக்கத்திற்சுருக்கம் அதனை யுடையார்மேலேற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, 'உரவோர்' என்றார். (ரு)

விளக்கம் :—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய வினவிற்கு விடை தந்ததாயிற்று. என்னை? மனவலியுடையாராய மேலோர் தமக்கு எவ்வித இடையூறு வரினும் அவ்விடையூற்றிற்குச் சிறிது மஞ்சாது தம் குல நலத்தைக் காப்பாற்ற முயலுவர். ஏனெனின்? அவ்விதங் காக்காவிடின், காவாத குறைவினால் தாம் முன் செய்துள்ள நல்வினைப் பயனால் எய்திய அரிய நற்குலத்தை யிழந்து தாழ்ந்த குலத்தவராக எண்ணப் படுவர். ஆதலால் அதற்குப் பெரிதும் அஞ்சித் தமக்கு வரும் இடையூற்றிற்கு அஞ்சாது உயர்வை விரும்பியோர் ஒழுக்கத்தைக் காப்பாரென்றும் அதை விரும்பாதார் காவாரென்றும் பெற்றோம். அதுகேட்ட மாணாக்கர், "ஒழுக்கமுடையார்க்கும் இல்லார்க்கும்வரும் பயன் இவை என்று எடுத்துக் காட்டவேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

137. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

(பரி.) இ-ள். ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்=எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டையெய்துவர்;—இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்= அதனினின்று இழுக்குதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத பழியை யெய்துவர். எ-று.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம அடுக்குமென்று கொள்ளுமாகலின், 'எய்தாப்பழி யெய்துவர்' என்றார். (இவையிரண்டுபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங்குணமும் இல்வழிப் படுங் குற்றமுங் கூறப்பட்டன.) (எ)

விளக்கம் :—இத்திருக்குறளால் ஒழுக்கமுடையவர், யாவரும் போற்றத் தகும் மேம்பாட்டை யடைவர் என்றும், அவ்வொழுக்கத்திற்றவறியோர் தாம் எத்துணைச் சிறப்பினையுடையாராயினும் தமக்குப் பொருந்தாத அடாத பழிகளை அடைவர் என்றும் அறிந்தோம். அதாவது, ஒழுக்கமுடையவர் எவ்வளவு தாழ்ந்தவராயினும்

அவரை உலகம் புகழும் என்றும், ஒழுக்கமற்றவர் எவ்வளவு உயர்ந்தவராயினும் அவ்வொழுக்கக்குறைவு ஒன்றையே கருதி உலகத்தார் தமக்குள்ள வெறுப்பினாலும் பகையினாலும் அவர் செய்யாத பழிகளையும் அவர் செய்ததாகக் கூறுங்காலத்து நடுவுநிலை யுடையோரும் அவருடைய ஒழுக்கக் குறைவின் காரணத்தால் ஒரு காலிருத்தலுங் கூடும் என்று நம்பி அவரை இகழ்வர் என்றும் போந்த பொருளாயிற்று. அதுகேட்ட மாணுக்கர், "புகழும் பழியும் கூறுவதால் ஒழுக்கத்தால் இம்மைப் பயன் கூறியதாயிற்று. இனி, மறுமைக்கும் பயன் உண்டோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

138. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(பரி.) இ-ள். நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும்=ஒருவனுக்கு நல்லவொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்;—தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்=தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும். எ-று.

'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், 'இடும்பைதரும்' என்றதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்றும், ஒன்றுநின்றே ஏனையதை முடிக்குமாகலின். (இதனாற் பின் விளைவு கூறப்பட்டது) (அ)

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒருவனது நல்லொழுக்கமானது அறஞ் செய்வதற்குக் காரணமாய் நின்று இம்மை மறுமைகளில் புகழையும் தேவபோகத்தையும் பயக்கும். தீயொழுக்கமானது அதைச் செய்தானொருவனுக்குப் பாவத்தையுண்டுபண்ணி மேற்கூறியபடி இம்மையில் பழியையும் மறுமையில் நரகத்துன்பத்தையும் உண்டாக்கும். ஆதலால், ஒருவனது நல்லொழுக்கமானது இருமைக்கும் இன்பத்தையுண்டாக்கும் வித்தாயுள்ளதென்றும், ஒருவனது தீயொழுக்கமானது இருமைக்கும் துன்பத்தை விளைக்கும் விதையாகவுள்ளதென்றும் பெற்றேம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவர் ஒழுக்கமுடையார் இவர் ஒழுக்கமில்லார் என்பது ஒருவரைக்கண்ட அளவிலேயே எவ்

விதம் தெரிந்துகொள்வது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 139. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்.

(பரி.) இ-ள். வழுக்கியும் தீய வாயால் சொலல்=மறந்தும் தீயசொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள்—ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லா=ஒழுக்கமுடையவர்க்கு முடியா. எ-று.

தீயசொற்களாவன :—பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்முதலியனவும் வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற்றொழில் பலவாயின. சொலல்—சாதியொருமை. 'சொலல்' எனவே அமைந்திருக்க வாயாலென வேண்டாது கூறினார், நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியமென்ப. (கூ)

விளக்கம் :—மக்காள்! நீங்கள் ஒழுக்கமுடையவன் இவன் என்று ஒருவனை அறிந்துகொள்ள வேண்டுமாயின் அவனது வாக்கின் தொழிலால் அறிந்துகொள்ளுதல்கூடும். அது வண்ணையோவெனின்? அவன் வாக்கினால் மறந்தும் ஒருவனுக்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியவற்றைச் சொல்லான். அன்றியும், தன்னுடைய குலத்திற்குப் பொருந்தாதவார்த்தைகளையும் கூறான். இவை காணின் அவன் ஒழுக்கமுடையான் என்று அறிதல்கூடும். இது கருதியே 'சொலல்' என்று கூறுவதோடு 'வாயாற் சொலல்' என்று கூறினார். ஏனெனின்? ஒழுக்கமுடையவன் வாய் எக்காலத்தும் நல்ல சொற்களையே பழகியதாதலால் மறந்தும் அவ்வித தீய சொல் கூறாது. ஆதலால், ஒருவனை அவன் சொல்லளவாகவே ஒழுக்கமுடையவனென்றும் ஒழுக்கமில்லாதவனென்றும் அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவனது வாக்கால் அறிந்து கொள்ளும் தகுதி இதுவென வறிந்தோம். ஆனால், செய்லான் உண்டாகும் தகுதியையும் அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றோமாதலால், அவ்வொழுக்கமுடையான் செயல் இவ்விதமிருத்தல் வேண்டுமென்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

140. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(பரி.) இ-ள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்=உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார்,—பல கற்றும் அறிவிலாதார்=பலநூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார். எ-று.

உலகத்தோடு* பொருந்த ஒழுகுதலாவது:—உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன வொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையுமடங்க 'உலகத்தோடொட்ட' வென்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அவ்வொழுகுதலைக் 'கல்லாதார் பலகற்றுமறிவிலாதார்' என்றுங்கூறினார். ஒழுகுதலைக் கற்றலாவது:—அடிப்படுதல்.† இவை யிரண்டுபாட்டானும் சொல்லானுஞ் செயலானும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றால் தொகுத்துக் கூறப்பட்டன.) (ம)

விளக்கம்:—இத்திருக்குறளால் நீங்கள் வினவிய ஒழுக்கமுடையான் செயல் இவ்விதமிருத்தல் வேண்டும் என்பதை யறிதல்கூடும். அது என்னையோ வெனின்? ஒருவன் எல்லா நூல்களையும் ஐயம் திரிபு இல்லாமல் கற்றானாயினும், தம்முன்னோராகிய உயர்ந்தோர் பலரும் ஒழுகிய அளவிலேயே ஒழுகுவதுடன் இவன் காலத்தில் அறிஞர் கூடாது என்று ஒழித்தவற்றை ஒழித்தும், இல்லாத ஒன்று வேண்டுமென்று கொண்டகாலத்து அவற்றைக் கொண்டும் நடப்பதே ஒழுக்கமுடையவன் செயல் என்று அறிந்தோம். ஏனெனின்? கல்வியுடையானாய இவன் அக்கல்விக்குப் பயனாகிய அறிவை யடைந்த காலத்து அவ்வறிவின் பயனாகிய உயர்ந்தோர் ஒழுகிய ஒழுக்கத்தைக் கைக்கொள்ள வெண்ணி அதில் தலையிட்டுச் சிறிது சிறிதாகப் பழகி எவ்வித இடையூற்றினும் மனவலி குறையாது நிற்பானாயின், இவன் வருந்திக் கற்ற நூல்களாலாய பயனை யடைந்தவன் ஆவான். அவ்விதபயனடைந்தவன் அறிவுடையோனென்று உயர்ந்தோரால் கருதப்படுவான். இத்தகைய ஒழுக்கமற்றுக் கல்விமாத்திரம் பல கற்று நின்றவன் 'அறிவிலாதவனென்றே கருதப்படுவான் என்பது போதர, 'பல கற்றும் கல்லா

* உலகம் என்பது உயர்ந்தாரை யுணர்த்தி நின்றது. †அடிப்படுதல்=அவர்கள் ஒழுக்கத்தைப் பின்பற்றல்.

ரறிவிலாதார்' என்று விதந்து கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "ஐய! தாங்கள் முன் கூறியவற்றுள் காலத்துக்குத் தக்கவளவாக ஏற்பன கொண்டும் ஏலாதன ஒழித்தும் நிற்றல் வேண்டும் என்று கூறினீர். அவ்வித ஒழுக்கம் ஒருகாலைக் கொருகால் மாறுதலுங் கூடுமோ?" என்னலும், ஆசிரியர், "இது கருதியன்றோ நம் பவணந்தியாருந் தம் நன்னூலில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினுனே" என்று புத்தி போதித்தனர்? ஆதலால், நாம் ஒழுக்கமுடைமையை உயிரென மதித்து வாழ்தல் வேண்டும்" என்று கூறினர். கேட்ட மாணுக்கர் மிக மகிழ்வெய்தி, "மேற்கூறிய வளவாகவே இன்னுமுள்ள அறங்களைக் கூறல்வேண்டும்" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 15. அதிகாரம்

## பிறனில் விழையாமை.

---

அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்க முடையார்மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அஃதாவது, ஒழுக்கமுடையா னொருவன் முன்னர் அடக்கமுடைமையுள் கூறியவளவாகவே மெய்யடக்கங் காத்தல் வேண்டுமாதலால், அக்காத்தலுக்கு ஒருமையுள் ஆமைபோலைந் தடக்கல்வேண்டும். அவ்வைந்தடக்கலாவது :—தன்மனையாளல்லது வேறுமாதரை மனத்தாலும் விரும்பாதிருத்தல். அவ்விதம் வேறு மாதர் என்பதில்; பரத்தையர்ப் புணர்தல், இழிகுல மகளிரைச் சேர்தல், பெண்வழி நிற்றல் என்னும் தீமைகள் மற்றொருவனது மனையாளிடத்தே கொள்ளுகின்ற விருப்பமாகிய மயக்கத்திற்கு இணையாகாவாதலால், அவைகளைப் பொருட்பாலில்கூறி இப்பிறனில் விழையாமையே ஒழுக்கமுடைமை யென்று ஒழுக்கமுடைமைக்குப் பிற்படக் கூறினர்.

141. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை
ஞாலத் தறம்பொருள் கண்டார்க ணில்.

(பரி.) இ-ள். பிறன் பொருளாட் பெட்டு ஒழுகும் பேதைமை=பிற னுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்து ஒழுகுகின்ற அறி யாமை—ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல்=ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டில்லை. எ-று.

பிறன்பொருள்=பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகுபெயர்: செவ்வெண்ணின்தொகை தொக்குநின்றது. இன்பமொன்றையேநோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீயம் * என்று கூறுவராக லின், 'அறம் பொருள் கண்டார்கணில்' என்றார்; எனவே, அப்பேதைமை யுடையார்மாட்டு அறமும் பொருளும்† இல்லையென்பது பெறப்பட்டது.(க)

விளக்கம்:—இத்திருக்குறளால் இப்பூமியின் கண்ணே அற நூலென்றும், பொருள் நூலென்றும், இன்பநூலென்றும் கூறிய மூன்றனுள் இன்பநூலுடையாருட் சிலர் பிறனுக்குச் சொந்தமாகிய உடைமையென்னும் மனைவியை விரும்பி உயிர் வாழ்கின்ற அறிவிலா மையை ஒப்பென்று கொள்ளுவாராயினும், அறநூலும் பொருள் நூலும் உணர்ந்து அவற்றின்பயனறிவார் இத்தீயவொழுக்கத்தினை ஒத்துக்கொள்வதில்லை. ஆதலால், இத்தீயவொழுக்கத்தைச் செய் பவனெவனோ அவன் அறப்பொருளின் பயனையும், பொருட்பொரு ளின் பயனையும் அடைவதில்லை என்று கண்டோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் அறனொழிந்து நின்ற செயலாகிய பிறனில் விழைதலைப் பேதைமையென்று கூறினீர். பேதைமை யுடையானாயினும் இன்பந்துய்த்தற்கு இயல்புடையன் போலும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

142. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(பரி.) இ-ள். அறன்கடை நின்றாருள் எல்லாம்=காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும்—பிறன்கடை நின்றாரின் * பேதை

* பரகீயம்=பிறற்குரியது.

† அறமும், பொருளும் என்பவற்றில் உம்மைகள் தொக்கன.

* இன்—ஒப்புப்பொருளது.

யார் இல்—பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார் போலப் பேதையாரில்லை. எ-று.

அறத்தினீக்கப்பட்டமையின், 'அறன்கடை' என்றார். அறன்கடை† நின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பம் நுகர்வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப், பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், 'பேதையாரில்' என்றார்; எனவே, இன்பமுமில்லையென்பது பெறப்பட்டது. (உ)

விளக்கம் :—'இத்திருக்குறளால் மேற்கூறிய வளவாகவே ஏனைய மகளிரோடுங்கூடி இன்பம் நுகர்வார் அறத்தையும் பொருளையு மிழக்கின்றனரேயன்றி அயலானது மனைவியைவிரும்பி அவன் கடைவாயிலிற் சென்று இரப்பானொருவன்போல் காலங்கருதி நிற்கின்ற பேதை, தனக்குச் சமயம் வாய்த்து பிறன்பொருள் துய்க்கின்றகாலத்து மனத்திற்றோன்றும் அப்பெரியதோர் அச்சத்தால் தான் எவ்வித இன்பத்தை யடையக்கருதிச் சென்றானோ அவ்வித இன்பத்தையு மடையாது வீண்பாவத்தைச் சுமக்கின்றானாதலால், ஏனைய காமுகர் யாவரினும் அறிவிலாதவனாகின்றான் என்பது போந்த பொருளாயிற்று. இது கருதியன்றோ நாலடியாரிலும்,

" புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்குமிடத்தச்சம் தோன்றாமற்—காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்." என்றும்,

" அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்
நிச்ச நினையுங்கால் கோக்கொலையாம்—நிச்சலும்,
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்
நம்பற்க நாணுடையார்."

என்றும் எக்காலத்தும் பிறனில்விழைவானுக்கு அச்சமுண்டென்று கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என்னை?

† அறன்கடை என்பது பாவம்,

இவ்விதம் அறிந்த ஒருவன் காமமயக்கத்தால் அயலான் மனைவியினை ஏன் விரும்புதல் வேண்டும்? அக்காமத்தினை யடக்கிக்கொள்ளுத லாகாதோ?" என்னலும், ஆசிரியர், "மக்காள்!

" ஊனருளெழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகும்—நீருள்
குளிப்பினுங் காமம் சுடுமே குன்றேறி
ஒளிப்பினுங் காமம் சுடும்." *

என்றதால் காமத்தை அடக்குதல் அருமையினும் அருமையேயா கும். அதை முன்னர் நீத்தார் பெருமையினுள் 'ஐந்தவித்தானாற் றல்' சொல்லியதாலேயே நீங்கள் அறிதல் கூடும்" என்றனர். கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தீமை புரிந்து ஒழுகுவாரை உலகம் எவ்விதம் மதிக்கும்? அதனையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(பரி.) இ-ள். தெளிந்தார் இல் * தீமை புரிந்து ஒழுகுவார்—தம்மை ஐயுறாதார் இல்லாள்கண்ணே பாவஞ்செய்தலை விரும்பியொழுகுவார்;— விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற †—உயிருடையரேனும், இறந்தாரே யாவர். எ-று.

அறம்பொருள் இன்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின், 'விளிந்தாரின் வேறல்லர்' என்றும், அவர் தீமைபுரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் 'தெளிந்தாரில்' என்றுங் கூறினர். (௩)

விளக்கம்:—ஒருவன் மற்றொருவனைத் தகுதியுடையானென்று மதித்து அவனிடத்தே சிறிதும் ஐயங்கொள்ளாது ஒழுகுங் காலத்தே, தகுதியுடையானென்று கருதப்பட்ட இவன் அத்தெளிவுடைமை யொன்றையே கடைப்பிடித்து வஞ்சகமற்றானாய் நின்ற

* நாலடியார்.

† "மன்றவென்கிளவி தேற்றஞ் செய்யும்" என்பதனான் ஈண்டு மன்ற வென்னும் இடைச்சொல் நிச்சயப் பொருளுணர்த்தி நின்றது. * இல்— இடவாகு பெயராய் இல்லுடையாளை யுணர்த்தி நின்றது.

அவனது மனைவியை விரும்புவானாயின், இத்தீச்செயலுடையானை உலகத்தார் உயிருடையவனாகக் கருத மாட்டார்களென்றும், இறந்தவனாகவே கருதுவரென்றும், இத்திருக்குறளால் அறிந்தோம். ஏனெனின்? உயிருடையவனாயின் உயிராலடையக்கூடிய அறம், பொருள், இன்பத்தின் பயனை யடைதல்வேண்டும். அவ்விதம் மூன்றையுமடையாமல் பிழைத்துக் கிடக்கின்றானாதலால், இவனை உயிருடையான் என்று உலகத்தார் கருதார்கள் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "தாங்கள் கூறிய ஒழுக்கத்தின் பயனை யறிந்தோம். ஆயின், பிறரால் பழிக்கவும் தண்டிக்கவும் கூடிய நிலையிலுள்ளான் ஒருவனை அச்சமும் இன்பங்கைகூடாமையும் அடைதல் கூடும். எட்டியுஞ் சுட்டியும் காண்பிக்கக்கூடாத பெரியதோர் தகுதியுடையானொருவன் பிறனில் விழையின் அவனுக்குந்தீங்குண்டாதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

144. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணை
தேரான் பிறனில் புகல். [யுந்

(பரி.) இ-ள். எனை*த்துணையராயினும் என்னும்=எத்துணைப்பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும்?—தினை†த்துணையும் தேரான்பிறன் இல் புகல்=காமமயக்கத்தால் தினையளவுந் தம்பிழையை ஓராது பிறனுடைய இல்லின்கட்புகுதல். எ-று.

இந்திரன்போல எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்தல் நோக்கி, 'என்னும்' என்றார். "என்னீ ரறியாதீர் போல இவைகூறி—னின்னீர வல்ல நெடுந்தகாய்" ‡ என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. 'தேரான்பிறன்' என்பதனைத் தம்மை ஐயுறாத பிறனென்றுரைப்பாருமுளர். (௪)

விளக்கம்:—இத்திருக்குறளால் பிறனில் விழைவானொருவன் சிறிதும் தான் செய்கின்ற தவறினை யுணராது காமங்காரணமாக நிற்பானாயின் அவன் எத்துணைப் பெரியதோர் தகுதியுடையனா

* எத்தனை யென்பது எனையென மருவிநின்றது. † தினை—ஈண்டு பொருளின் சிறுமை யுணர்த்தாது கால நுட்பத்தை யுணர்த்திநின்றது. 'எனைத்துணையர்' 'தேரான்' என்பதில் பன்மை யொருமை மயக்கம் இழித்தற் கண்ணது. ‡ கலித்தொகை பாலைக்கலி, 5-ம் பாட்டு.

யிருக்கினும் அவன் அத்தகுதியை யெல்லாமிழந்து சாதல் முதலியவைகளைப் பெறுவானேயன்றி வேறொன்றும் அவனது பெரிய தகுதியால் அடைதற்கு இல்லை என்று கண்டோராதலால், பிழைசெய்வானொருவன் மக்களில் வறிஞனாயினும் தேவரில் பெரியனாயினும் அவனடையும் பயன் ஒன்றாகவேமுடியும். இதனை, சூரியன் தனது ஞாதிகளின் மனைவியை விரும்பி அடைந்ததீங்கால் உய்த்துணர்தல் கூடும். அன்றியும், இராவணன் சீதையின்பொருட்டு உயிரிழந்தான் என்னும் கதையே சான்றாகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தீயொழுக்கமாகிய பிறனில் விழைதலைக் கொள்வானொருவனுக்கு யாவும் இழக்க நேரும் என்பதறிந்தோம். ஆயின், அவனுக்கு இம்மைப்பயன் எது என்று அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

145. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(பரி.) இ-ள். எளிது என இல் இறப்பான்=எய்துதலெளிதென்று கருதிப் பின்விளைவுகருதாது பிறனில்லின்கணிறப்பான்—விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும்=மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்குங் குடிப்பழியினை யெய்தும். எ-று.

இல்லின்கணிறத்தல்=இல்லாள்கண் நெறிகடந்து சேறல். (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால் எல்லாத்தகுதியு முடையானொருவன் தன்னுடைய தகுதியின்மிகுதியால் அயலானது மனைவியைத்தான் அடைதல் தனக்கு மிகுதியும் எளிமையுடையது என்று எண்ணி இத்தீய வொழுக்கத்தைச் செய்வானாயின், அதனால் உலகம் அவனை மாத்திரம் பழிப்பதன்றி அவன் குடியையும் உலகுவுள்ளளவாயில் பழித்துக் கொண்டிருக்கும் என்று கண்டோம். இதனை நாலடியாரில்,

"காணிற் குடிப்பழியாம் கையுறில் கால் குறையும்
மாணின்மை செய்யுங்கால் அச்சமாம் நீணிறையத்

அப்பழி இவனது சந்ததிக்கண் எழுமையினும் நிற்குமென்பார் 'விளியாது நிற்கும்' என்றார்.

துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தால் கூறு"

என்பதாலும் அறிதல்கூடும். ஆதலால், இத்தீய ஒழுக்கத்தினனுக்கு இம்மைப்பயன் பழியேயாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வொழுக்கத்தான் இருமையும் இழந்துவிடுதல் திண்ணமென்பது கண்டோம். ஆயின், உலகத்தார் இவனைப் பகைப்பரோ அல்லது பகையாது விடுவரோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

146. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(பரி.) இ-ள். இல் இறப்பான்கண்=பிறனில்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத்து—பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம்=பகையும் பாவமும் அச்சமுங் குடிப்பழியுமென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம். எ-று.

எனவே, இருமையுமிழத்தல் பெற்றாம். (இவை ஆறுபாட்டானும் பிறனில் விழைவான்கட் குற்றங் கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—மேல் நீங்கள் வினாவிய ஐயத்திற்கு இத்திருக்குறள் மிகப்பெரிதும் விளக்கத்தையுண்டு பண்ணியதாயிற்று. அது என்னையோ வெனின்? எவனொருவன் நீதியென்பதைச் சிறிதும் நினையாது நெறிவிலகி அயலான் மனைவியிடத்துச் செல்கின்றானோ அவனை உலகப்பகையும், நீங்காப்பாவமும், நிறைந்தபயமும், மறையாப்பழியும் எக்காலத்தும் விட்டு நீங்கா என்று கூறுவதால், இம்மை மறுமை ஆகிய இரண்டையும் இழக்க உடன்பட்டவனே குற்றங்களுள் குற்றமாகிய பிறனில் விழைதல் என்னும் தீய ஒழுக்கத்தைச் செய்தல்வேண்டும் என்பது பெற்றாம். இதனை நாலடியாரில்,

"அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்

---

பிறனில் விழைவானிடத்து இம்மைக்கண் பகைமையும், அத்தீய செயலால் மறுமைக்கண்பாவமும், அதனைப் பிறர் அறியின் தண்டிப்பர்என்னும் அச்சமும், உலகப்பழிப்பும் உண்டாதலின் 'நான்கும்இகவா' என்றார். எண் ணும்மைகள் தொக்கன.

நச்சுவார்ச் சேரும் பகை பழி பாவம் என்று
அச்சத் தோடிந்நாற் பொருள்."

ஞ் செய்யுளால் நன்றாக அறிதல்கூடும். மேலும், இதனைக் கீசகன் கதையே திருஷ்டாந்தப் படுத்தி நிற்கும். விராடபுரத் தரசன் மைத்துனனும் சேனைத் தலைவனுமாகிய கீசகன் பீம னைப்போல் சமபல முடையவனாக விருந்தும், பாண்டவரும் துரௌபதையும் அஞ்ஞாதவாசத்தின் பொருட்டு விராட நகரத் தின்கண் தங்கியிருந்த காலத்து, "வண்ணமகள்" என்னும் பெய ருடனிருந்த துரௌபதையைக் கீசகன் அவன் சகோதரியாகிய அரசியின் வீட்டிலிருக்கக்கண்டு மயங்கினன். அவ்விதம் மயக்கங் கொண்ட கீசகன் தன் சகோதரியோடு சதியோசனை புரிந்து துரௌபதையைத் தானிருக்கும் இடம்வரும்படிச்செய்து அவ ளைப் பலவந்தம் செய்தகாலத்து அவள் உடன்படாளாகி ஓடிவந்த னள். நீதியையும் அறனையும் சிறிதும் கருதாது கீசகன் அவளைப்பலர் முன்பு உதைத்தான். இவையெல்லாம் பார்த்திருந்த வீமன் அக் கீசகனை ஊருக்குப் புறம்பேவரும்படிச்செய்து அவனைக்கொன்று விட்டான். ஆகவே, இல்லிறந்தானாகிய கீசகனுக்கு இறுதியே நேர்ந்தது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குற்றங்கள்யாவும் இவை என உணர்ந்தோம். இனி, இல்வாழ்வானொருவன் எவ்வித அறத்தோடு நடத்தல் வேண்டுமென்பதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

147. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனி
பெண்மை நயவா தவன். [யலாள்

(பரி.) இ-ள். அறனியலான் *இல்வாழ்வான் என்பான்† = அறனாகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் — பிறன் இய லாள் பெண்மை நயவாதவன் = பிறனுக்குரிமை பூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன். எ-று.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய்வா னெனப்படுவான் அவனே யென்பதாம். (எ)

* அறன் இயலான் = இல்லற ஒழுக்கமுடையான்.
† என்பான் என்பது = செயப்பாட்டுப்பொருண்மைக்கண்வந்தது.

விளக்கம்:—இல்வாழ்வா னென்பான், அவனுக்குச் சொல்லியுள்ள அறங்களையெல்லாம் பிறகாரணங்களால் செய்வதற்கு இல்லையாயினும் பிறனில் விழையாமை என்னும் இவ்வோர் அறத்தைமாத்திரம் செய்வதற்கு முயன்று மெய்யடக்கத்தைக் கைக்கொள்வானாயின், எல்லா அறங்களையும் செய்வதாலாகிய இம்மை மறுமைப் பயன்களை இஃதொன்றினாலேயே யடைதல் கூடுமென்றும், ஏனைய அறங்களையெல்லாம் செய்தும் இத்தீயொழுக்கமொன்றினை அறவே விடானாயின் செய்த அறங்களின் பயனையெல்லாமிழந்து இத்தீயொழுக்கத் தாலாகிய பாபத்தையே மேற் கொள்ளுகின்றான் என்றும் இத்திருக்குறளால் அறிந்தோ மென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வறத்தினைச் செய்வான் ஒருவனே அறஞ் செய்தான் போலும்? இவ்வறம் செய்வானை "அறனுடையான்" என்று கூறுவதுடன் இன்னும் உலகோரால் எண்ணப்படும் பெருமைகளும் இவனுக்கு ஏதேனும் உளவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

(பரி.) இ-ள். பிறன் மனை *நோக்காத †பேர் ஆண்மை = பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை—சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ‡ ஒழுக்கு = சால்புடையார்க்கு அறனுமாம், நிரம்பியவொழுக்கமுமாம். எ-று.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்றார். 'ஒன்றோ' என்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே யென்பதாம். (அ)

விளக்கம்:—மேல் நீங்கள் வினவியவண்ணம் பிறர்மனை விரும்பாத பேறறிவாளன் ஒருவனுக்கு அச்செயல் அறன் ஒன்றுமாத்திரமன்று; அதுவே ஒழுக்கத்துள் ஒழுக்கமாம். ஏனெனின்? ஏனையோரெல்லாம் தம்மை ஆண்மையுடையேம் என்று கூறத் தமது புறப்பகைவர்களை யடக்கும் ஆண்மை மாத்திரம் உடையாராயிருக்

* மனை—ஆகுபெயர். † நோக்குதல் = மனத்தானோக்குதல் ‡ அகன்ற என்பது ஆன்றவென மருவிநின்றது.

கின்றனரேயன்றி, உட்பகையாகிய தம்முள் எழுகின்ற காமத்தீயை யடக்குவதற்கு யோக்கியராகாது அத்தீயில்வீழ்ந்து இறக்கின்றன ராதலால், அவ்வித அகப்பகையை யடக்குகின்ற ஆண்மையுடைய வரை பேராண்மை யுடையாரென்றும், ஒழுக்கத்துள் ஒழுக்கமுடை யாரென்றும், உலகோர் புகழ்வர் என்று இதனால் கூறியதாயிற்று என்றனர். கேட்ட மாணுக்கர், "இவ்வித பிறனில் விழையாத அறன் ஒன்றினைச் செய்தான் எல்லாநலனும் அடைவான் போலும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

149. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(பரி.) இ-ள். நாம நீர் வைப்பின்=அச்சந் தருங் கடலாற் சூழப் பட்ட உலகத்து—நலக்கு உரியார் யார் எனின்=எல்லாநன்மைகளும் எய்துதற்கு உரியார் யாவரெனின்,—பிறற்கு உரியாள் தோள் தோயா தார்=பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடையதோளைச்சேராதார். எ-று.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றான் அளவிடப்படா மையின், 'நாமநீர்' என்றார். உரிச்சொல்* ஈறு திரிந்து நின்றது. நலத் திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. இருமையினும் நன்மை யெய்துவரென்பதாம். (௯)

விளக்கம்:—மிகப் பெரியதோர் கடலால் சூழப்பட்ட இவ்வுல கத்தில் உள்ள மக்களுள் எல்லா நன்மைகளையும் அடையவல்லவர் அயலானது மனைவியினது தோளைச் சேராதவரென்றும், அதுசெய் யாது பிறர் மனைவிழைபவர் எவ்வித அறஞ்செய்யினும் தீங்கினையே அடைபவர் ஆவார் என்பதும் இத்திருக்குறளால் அறிந்தோமாத லால், பிறனில் விழையாதாரே எல்லாநலத்திற்கும் உரியாரென்பது பெறும் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "மற்று யாதொரு அறமுஞ் செய்யாது இவ்வோரறமே செய்வது போதுமென்று கூறு வது நம் தெய்வப்புலவர் திருவுள்ளமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

*நாம்என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்து நாம எனநின்றது. நலக்கு என் பதில் அத்து, இன் என்னும் சாரியைகள் குறைந்துநின்றன. தோள் எனவே "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்தே" யென்பதனால், ஏனைய உறுப்புக்களும் கொள்க.

150. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(பரி.) இ-ள். அறன் வரையான் அல்ல* செயினும்=ஒருவன் அறத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று=அவனுக்குப் பிறனெல்லைக் கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமை யுண்டாயின், அது நன்று. எ-று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். (இவை நான்குபாட்டானும் பிறனில் விழையாதான்கட் குணங் கூறப்பட்டது.) (ம)

விளக்கம்:—மேல் நீங்கள் வினவியவண்ணம் ஒருவன் அறத்தைமாத்திரம் செய்யாது விடுவதன்று. அறத்திற்குமாறாகிய பல பாவங்களைச் செய்வானாயினும், அவன் பிறன்மனை விரும்பாமை என்னும் இப்பெரியதோர் அறத்தைச் செய்துவிடுவானாயின் இவ்வறத்தின் தகுதியால் செய்த பாவங்களின் பயனெல்லாம் ஒழிந்து இவ்வறத்தின் குணமே மேற்பட்டுத் தோன்றும் என்று இத்திருக்குறளால் முடிந்தது முடித்தலாகக் கூறுகின்றாராதலால் எல்லா அறங்களினும் இப்பிறனில் விழையாமை என்னும் அறமே மிகச் சிறந்ததென்றும், அதனால் வரும் நற்குணங்கள் மிகப்பலவென்றும் கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "இன்னும் உள்ள அறங்களையும் இயம்பல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 16. அதிகாரம்.

## பொறையுடைமை.

அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையராதல். நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

* அல்லவென்னும் எதிர்மறைக்குறிப்புப்பெயர் விலக்கப்பட்டபாவத்தை யுணர்த்திநின்றது.

விளக்கம் :—அதாவது ஒருவன் மற்ருெருவனுக்கு ஏதேனும் ஒரு காரணங் கருதியாயினும் அல்லது அறியாமையாலாயினும் தவறு செய்த காலத்து செய்யப்பட்டவன் தனக்கு விளைத்த தீங்கினுக்குப்பதிலாகச் செய்தவனுக்கு யாதொரு இடையூறும் செய்யாது பொறுத்துக்கொள்ளுதல். இவ்வித தவறுகள் செய்யுங் காலத்து, மேலதிகாரத்திற்கூறிய அளவாகவே விலக்கப்பட்டதாகிய தீநெறியைச் செய்தவனையும் பொறுத்தல் வேண்டும் என்று அறிவித்தற்கு இப்பொறையுடைமை யென்னு மதிகாரம் பிறனில் விழையாமைக்குப்பின் வைக்கப்பட்டுள்ளது என்னலும், மாணுக்கர், "அவ்வித தகுதியில்லாதகாரியங்கள் செய்தாரை எவ்விதம் பொறுத்துக்கொள்ளல்கூடும்? அதை யெங்களுக்கு விளக்கிக்காட்டல் வேண்டும்" என ஆசிரியர் கூறுவாராயினர்.

151. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(பரி.) இ-ள். அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல=தன்னை அகழ்வாரை வீழாமல் தாங்கு நிலம்போல,—தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை=தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம். எ-று.

இகழ்தல்=மிகையாயின செய்தலும், சொல்லுதலும். (க)

விளக்கம்:—இத்திருக்குறளால் பூமியானது, தன்னை வெட்டுந்தோறும் வெட்டுந்தோறும் வெட்டுகின்றவன் தனக்குச் செய்யுங் குற்றத்தையும் நோக்காது வீழ்ந்துவிடாமல்தாங்கியுநிற்பதுபோல், ஒருவன் தன்னை யவமதித்தவனையும் பொறுத்துக்கொள்ளுதலே அறங்களிலெல்லாம் முதன்மையாகிய அறம் என்று உவமையோடு விளக்கிய தாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஒருவன் மற்ருெருவனை எவ்விதம் அவமதித்தல்கூடும்? அவமதிப்பாவது யாது?" என்னலும், ஆசிரியர், "அவமதிப்பாவது நியாயமில்லாத விஷயங்களைச் செய்தலும் சொல்லுதலும்" என்றனர். கேட்ட மாணுக்கர், "அதை எவ்விதம் பொறுக்துக் கொள்ளல்கூடும்?

உவமை தொழிலின் கண்வந்த தொழிலுவமை. தாங்குதல், குழியில் வீழாமற் காத்தல். நிலம் நிற்றலையுடையது எனும் பொருளில் தொழிலடியாகப் பிறந்த பெயர். தலை பண்பு, தலைமையாய் அறத்தினையுணர்த்தியது.

பொறுத்துக் கொள்ளினும் மனம் மறக்காதன்றோ? மறவாத காலத்துப்பொறுமை கொள்வது அருமையன்றோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

152. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(பரி.) இ-ள். என்றும் இறப்பினைப்* பொறுத்தல்†=பொறை நன்றாகலால், தாம் ஒறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க;—அதனை மறத்தல் அதனினும் நன்று=அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று. எ-று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை 'அதனினும் நன்று' என்றார். (உ)

விளக்கம்:—இத்திருக்குறளால் மேல் கூறிய வளவாகவே தம்மை யவமதிப்பாரைப் பொறுத்துக்கொள்ளுதல் தகுதியென்றும், தாம் தமக்கு மிகைசெய்தாரைத் துன்புறுத்துவதற்கு இடம் பொருள் ஏவல் ஒத்திருப்பினும் அவரைத் துன்புறுத்தாது பொறுத்துக்கொள்ளல் வேண்டுமென்றும், அவ்வாறு பொறுத்துக்கொள்ளுதற்கு உபாயம் தமக்குச் செய்த அவமதிப்பை மனத்திற் கொள்ளாது அப்பொழுதே மறந்து விடுதல் என்றும் கூறியுள்ளதால், மேல் எவ்வாறு பொறுத்துக்கொள்ளுதல், நினைவில் உள்ள வரையில் மறத்தலாகாதே என்னும் ஐயத்தை, இது நீக்கியதாயிற்றென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "கூறிய அறம் அத்துணை யெளிதோ? மிக வன்மையுடையதன்றோ?" என்று கேட்டலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

153. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(பரி.) இ-ள். இன்மையுள் இன்மை விருந்து ஒரால்=ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரையேற்றுக்கொள்ளாது நீக்குதல்;—வன்மையுள் வன்மை மடவார்ப்பொறை=அதுபோல வன்மை

---

*இறப்பு=அளவு கடத்தல். †பொறுத்தல் என்பதில் அல்வியங் கோட் பொருட்டு.

யுள்வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தாரைப்பொறுத்தல். எ-று.

இஃது எடுத்துக்காட்டுவமை. * அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமையாகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மையாகாதே வன்மையாமென்பது கருத்து. (௩)

விளக்கம் :—இத்திருக்குறளால் ஒருவன் எவ்வளவு செல்வனுயினும் தன் இல்லத்திற்கு வந்த விருந்தினனை ஏற்றுக்கொள்ளாது விடுவனுயின் அவனைச்செல்வனென்று மதியாது தரித்திரனுள் தரித்திரனுக மதிப்பதுபோல், ஒருவனுக்கு வல்லமையுள் வல்லமையாவது, அறிவிலாது ஒருவன் தனக்குச் செய்த அவமதிப்பைப் பொறுத்துக்கொள்ளுதலே என்று அறிகின்றோமாதலால் இப் பொறையுடைமை யானது அறிவுடையோர்க்கு முடியுமேயன்றி ஏனையோர்க்கு ஆகாது என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மிக அறிவுடைய ஒருவன் ஏதோ சிறிது கோபத்தால் தனக்கு மிகை செய்தவனிடத்தே பொறுமையைக் காட்டாவிடில் அதனுல் அவன் அறிவுடையனென்று மதிக்கப்படுவனே? அல்லனே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறை
போற்றி யொழுகப் படும். [யுடைமை

(பரி.) இ-ள். நிறையுடைமை நீங்காமை வேண்டின்=ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனுயின்,—பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்=அவனுற் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும். எ-று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லையென்பதாயிற்று. (இவை நான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.) (௪)

விளக்கம் :—மேல் கொண்ட ஐயத்தினை இத்திருக்குறள் மிகுதியும் நீக்கிற்று. என்னையோ வெனின்? ஒருவன் தன்னைச் சால்

---

ஒருவல் என்பது ஓரால் என மருவிநின்றது *எடுத்துக் காட்டுவமை. முதற் குறளுரையில் எடுத்து விளக்கினும் ஆண்டுக்காண்க. இத்திருக்குறள் பொறையுடைமையினின்று விருந்தோம்பலை நோக்கலின் தவளைப் பாய்த்தாம்.

நிறை ஈண்டு எல்லா நற்குணங்களின் நிறைவை யுணர்த்தியது. "தாரித்தரித்தல்" தகுதியென்றுர் பிறரும்.

புடையவனென்று பிறர் மதிக்கவேண்டும் என்று எண்ணுவானு யின், அதன் பொருட்டே பொறுத்துக்கொள்ளுதல் என்னும் இப் பெரியதோர் அறத்தைச் செய்து ஒழுகல்வேண்டும். அவ்வாறு பொறையில்லாவிடின் எத்துணைச் சால்பு ஒருவனிடத்தே யிருந்த தாயினும் இல்லாததாகவே பிறரால் மதிக்கப்படுவான் என்று கூறி னர். அதுகேட்ட மாணுக்கர், "அவ்விதம் பொறுத்துக்கொண்ட சால்புடையோரை உலகோர் எவ்விதம் கொள்வர்; பொறுதாரை எவ்விதம் எண்ணுவர் என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

155. ஒறுத்தாரை யொன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(பரி.) இ-ள். ஒறுத்தாரை ஒன்ருக* வையார்=பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொருது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக்கொள்ளார்;—பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப் பர்=அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர். எ-று.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனேடொத்தலின், 'ஒன்ருக வையார்' என்ருர். பொதிந்துவைத்தல்=சால்புடைமைபற்றி இடை விடாது நினைத்தல். (ரு)

விளக்கம்:—இத்திருக்குறள், ஒருவன் தனக்குப் பிறன் செய்த தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் தனக்குத் தீங்கு செய்த அவனுக்குத் தானும் தீங்கு செய்வானுயின், அவன் எவ்வளவு பெரியனுயினும் பொறுமை என்னும் அறத்தினை யுணர்ந்த அறி வுடைப் பெரியோர் அவனையொரு பொருளாக மனத்தில் எண்ண மாட்டார்கள் என்றும்; ஆயின், அவ் வறிவுடைப் பெரியோர்கள், பொறுத்துக் கொள்பவரைத் தமக்குக்கிடைத்த பொற்குவியல் ஒன்றை எவ்விதங் காப்பாற்ற எண்ணுவரோ அதுபோல் மேலாக மதித்து இடைவிடாது அப்பொறுமையுடையவரை நினைத்துக் கொண்டேயிருப்பார் என்றும் கூறியதாயிற்று என்றனர். அது

*ஒன்று, ஆகுபெயராய்ப் பொருளையுணர்த்தி நின்றது. பொன் எல்லா ராலும் போற்றப்படுதலின் உவமையாக்கப்பட்டது. "ஆய்ந்த வறிவினரல் லாதார் புல்லுரைக்குக் காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" என் ருர் பிறரும்.

கேட்ட மாணுக்கர், "இவ்விதபொறையுடைமையால் பொறையுடையார்க்கு நல்லவரால் மதிக்கப்படும் மதிப்பொன்றுதான் கிடைத்தல் கூடுமோ? அன்றியும் இன்னும் ஏதேனும் கிடைத்தல்கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

156. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்
பொன்றுந் துணையும் புகழ். [குப்

(பரி.) இ-ள். ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்=தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளையின்பமே;—பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்=அதனைப் பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம். எ-று.

ஒருநாளையின்பம்=அந்நாளொன்றினும் கருதியது முடித்தே மெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகியஉலகம் பொன்றப்புகழும் பொன்று மாகலின், ஏற்புடை உலகமென்னுஞ் சொல் வருவித்துரைக்கப் பட்டது. (சு)

விளக்கம்:—இத்திருக்குறளால் தமக்குத் தீங்கு செய்தவனுக்குப் பிரதியாகத் தாமும் தீங்கு செய்து ஒழியின் செய்தவர்க்கு உண்டாகும் இன்பம் ஒருநாளை ஆகும். தீங்கு செய்யாது பொறுத்துக்கொள்வோர்க்கோ இந்தஉலகம் அழியும்வரையும் புகழ்நீங்காது நிலைக்கும். அன்றியும், அவ்வொருநாளை யின்பமும் நாம் எண்ணியது முடித்தோம் என்று கருவித்து நிற்கும் பொய்யாகிய இன்பமேயன்றி உண்மையாகிய இன்பமாகாது.

"கறுத்தாற்றித் தம்மைக்கடிய செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்—ஒறுத்தாற்றின்
வானேங்குமால்வரை வெற்ப பயனின்றே
தானேன்றிடவருஞ் சால்பு"

என்றார். பிறரும் அதுகேட்ட மாணுக்கர், "ஏதேனும் சிறியதோர் தவறினை ஒருவன் செய்தானுயின் பொறுத்துக்கொள்ளுதல் கூடும். பொறுக்கக்கூடாத கொடியதாகிய தவறு ஒன்றினை ஒருவன் செய்தானுயின் அப்போதும் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

157. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(பரி.) இ-ள். திறன் அல்ல தன் பிறர் செய்யினும் = செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட் பிறர் செய்தாராயினும், — நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று = அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று; எ-று.

உம்மை = சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை — யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்" என்று பரிதல். (எ)

விளக்கம்:— இத்திருக்குறள் செய்யக் கூடாததாகிய பிறர் மனை நயத்தல் முதலிய கொடிய காரியத்தை யொருவன் செய்தானாயினும் அதற்காக வருந்தித் தானும் செய்தவனுக்குத் தருமமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தலே மிக நன்று. ஏனெனின்?

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றி மற்று
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் — உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉம் சான்றோர் கடன்"

என்று மேலோர் கூறிய அளவே தீங்குசெய்யப்பட்டார்; தீங்கு செய்த உயிரை நோக்கி யாதொரு துன்பம் செய்யாது பொறுத்துக்கொள்ளுதலுடன், அவ்வுயிர் இவ்வித தீங்கினை நமக்குச் செய்ததே, அத்தீவினையின் பயனால் மறுமையில் எரிவாய் நரகம் என்னும் நரகத்தினுள் வீழ்ந்து துன்புறுமே என்று வருந்துவார்கள் என்றமையால், கொடியதோர் தீங்கினைச் செய்தாரையும் பொறுத்துக்கொள்ளலே தகுதியுடையதாயிற்று என்று கூறினர். கேட்ட மாணாக்கர், இவ்விதம் ஒன்றுஞ் செய்யாது நிற்பது தோல்வியாகாதோ? என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

(பரி.) இ-ள். மிகுதியான் மிக்கவை செய்தாரை = மனச்செருக்கால்

"பேறுரற் றிறன்வேறு கூறிற்பொறையும்" என்றார் பிறரும். மிகுதி வரம்புகடந்த செயல். தகுதியீண்டு பொறுமையுணர்த்தி நின்றது.

தங்கண் தீயவற்றைச் செய்தாரை,—தாம் தம்தகுதியான் வென்றுவிடல்= தாம் தம்முடைய பொறையான் வென்று விடுக; எ-று.

தாமும் அவர்கண் தீயவற்றைச்செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்கவென்பதாம். (இவைநான்குபாட்டானும் பிறர்செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.) (அ)

விளக்கம் :—இத்திருக்குறளால் ஒருவன் தன்னுடைய மனத்தில் தோன்றும் கர்வத்தினால் தனக்குத் தீங்கு செய்தானாயினும் தான், அதற்குப் பதிலாகத் தீங்கு செய்து நிற்பதால் தோல்வியாகுமென்றும் பொறுத்துக்கொள்வானாயின், அது வெற்றியாகுமென்றும் அறிகின்றோமாதலால், பிறர்செய்ததீங்கினை பொறுத்துக் கொள்ளல் வெற்றியேயாகுமன்றி தோல்வியாகாது. இதனை, தருமபுத்திரன் தன் ஞாதியாகிய துரியோதனன் தன்னை வஞ்சகமாக அழைத்துச் சூதாடச் செய்து திரௌபதையையும் சபையில் இழுத்து மானபங்கம் செய்த காலத்தும் தான் பொறுத்தது மாத்திரமல்லாமல் தன் தம்பியரையும் பொறுமையுடனிருக்கச் செய்து கடைசியில் யுத்தத்தில் யாவரையுந் தோல்வியடையச் செய்து என்றும் அழியாப் புகழையடைந்திருப்பதே போதிய சான்றாகும், என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித ஒழுக்கம், துறந்தார்க்கும் உண்டாகுமோ என்று நாங்கள் ஐயுறுகின்றோம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

159. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

(பரி.) இ-ள். துறந்தாரின் தூய்மை உடையர்=இல்வாழ்க்கைக்கணின்றேயும் துறந்தார்ப்போலத்தூய்மையுடையார்,—இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற்பவர்=நெறியைக்கடந்தார்வாய் இன்னாதசொல்லைப் பொறுப்பவர்.

தூய்மை மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினர், தீயசொற்கள்பயின்றதெனத் தாம்வேண்டியதனிழிவு முடித்தற்கு. (கூ)

---

"வைததனை யின்சொல்லாக் கொள்வானும்—மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்" என்றார் பிறரும். இன் ஒப்புப் பொருள்து.

விளக்கம் :—இத்திருக்குறளால் துறந்தார்க்கே யுரியதாய தவம் முதலாகிய தூய்மையாவும் இல்வாழ்வானாக நின்றும், நெறி கடந்து தம்முடைய தீயவாயால் கொடிய சொற்களைச் சொல்லு கின்றவரைப் பொறுத்துக் கொள்வாராயின், அவ்வித பொறுமை யுடையோர் மேற் கூறிய துறவிகட்கே சமானமாவார் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொறுத்துக் கொள்ளுகின்றவர் துறவிகள்போல தூய்மையுடையவர்கள்போ லும்!" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

(பரி.) இ-ள். உண்ணாது நோற்பார் பெரியர் = விரதங்களான் ஊணைத் தவிர்ந்து உற்றநோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர் ;—பிறர்சொல் லும் இன்னாச்சொல் நோற்பாரிற் பின் = அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னாதசொல்லைப் பொறுப்பாரிற்பின் ; எ-று.

பிறர் = அறிவிலாதார். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற் றொடு நின்றே நோற்றலின், 'இன்னாச்சொனோற்பாரிற் பின்' என்றார். (இவையிரண்டு பாட்டானும் பிறர் மிகைக்கச் சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.) (கo)

விளக்கம் :—மேல் திருக்குறளால் துறவிகளும் பொறையுடைய இல்வாழ்வாரும் ஒன்றெனமதித்தல்வேண்டும் என்று நாம் எண்ணு வண்ணம் இத்திருக்குறளால் அத்துறவிகளினும் பிறர் சொல்லும் தீயசொற்களைப் பொறுக்கின்ற இல்வாழ்வாரேபெரியர் என்று அறி ந்தோம். அது என்னையோவெனின்? துறவிகள் இருவகைப்பற்றினை யும் விட்டு, தாம் நன்மையடையும் வண்ணம் விரதமாகிய தவம் செய்தலைப் பூண்டிருக்கின்றனர். ஆயின், இல்வாழ்வானோ தென் புலத்தார் முதலிய பலர்க்குச் செய்யவேண்டிய கடைமைகளைச் செய்து, தாமும் உண்டு வாழ்கின்ற காலத்தே பிறரால் பழிக்கப் படின் பழித்த அவர்க்கு யாதொரு தீங்குஞ்செய்யாது நிற்பாராயின், அது பெரியதோர் தூய்மையேயாதலால், இப்பொறையுடைய இல் வாழ்வாரே அத்துறவிகளினும் மிகப் பெரியர் என்று கூறினர்.

அதுகேட்ட மாணுக்கர், "ஐய! பொறையுடைமையின் பயன் ஈதென அறிந்தோம். இன்னும் ஏனைய அறங்களையும் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 17. அதிகாரம்

## அழுக்காறாமை.

---

இதனுள் அழுக்காறென்பது ஒரு சொல். அதற்குப்பொருள் மேலே யுரைத்தாம். அச்சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள் பட எதிர்மறை ஆகாரமும் மகர ஐகாரவிகுதியும்பெற்று அழுக்காறாமையென நின்றது. இப்பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின் இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—இனி, மேற்கூறிய அழுக்காறாமையாவது பிறரது செல்வங்கண்ட விடத்தே அதற்குப் பொறாமைப்படாது இருத்தல்வேண்டு மென்பதேயாம். இப்பொறாமையானது பொறுமையுடைமைக்கு மாறாக உள்ளதால் அப்பொறாமையினை விலக்கும் வண்ணம் பொறையுடைமை யென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டு உள்ளது என்னலும், மாணுக்கர், "பிறர் செல்வங்கண்டவிடத்தே பொறாமைப்படுவதால் என்ன குற்றம் உள்ளது? பொறாமைப் படாதிருப்பதுவும் ஓர் அறமாகுமோ?" என்று கேட்டனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

---

(அழுக்காறு என்பது ஒரு சொல்லின் தன்மைத்து. பொருள் பொறாமை. இச்சொல்லீற்றினின்ற அறு எனுமுதனிலை ஆறு எனத்திரிந்து அழுக்கு என்னும் பெயருடனியைந்து அதனை வினையாக்கி முதனிலை திரிந்த தொழிற் பெயராக நின்றது. இது விதிச்சொலாயினும் மறைப்பொருள் படநின்றது. இவ்வழுக்காறு எனும் சொல்லுடன் எதிர்மறை ஆகாரமும் தொழிற்பெயர் விகுதியும் புணர்ந்து எதிர்மறைத் தொழிற்பெயராய் உடன்பாட்டுப்பொருள்பட பொறைக்கு மறுதலையாய் நின்றது. இதனை "விதிச்சொன் மறைப்பொருளாகி வருகவும், மறைச்சொல் விதிப்பொருளாகி வருகவும், விதிச்சொலின் முதனிலை மறைப்பொருள் பெறுகவும், மறைச்சொலின் முதனிலை விதிப்பொருள் பெறுகவும், உளவென மொழிகுவரொரு புடையோரே" எனும் இலக்கணக் கொத்தின் சூத்திரத்தாலறிக.)

161. ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
அழுக்கா றிலாத வியல்பு.

(பரி.) இ-ள். ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு = ஒருவன் தன்நெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினை,—ஒழுக்காறாக்கொள்க = தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கொள்க. எ-று.

இயல்பு = அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மை பயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினும் ஓம்புக என்பதாம். (க)

விளக்கம் :—பொறாமைப்படுதல் என்னும் குற்றத்தினின்று நீங்குகின்ற தகுதியை, நூல் வல்லவர்கள், தனக்குச் சொல்லிய ஒழுக்கநெறியென்று ஒருவன் கொள்ளுதல்வேண்டும். ஏனெனின்? ஒழுக்க நெறியினை உயிரைக்காட்டிலும் அதிகமாகக்காத்தல் வேண்டும் என்று "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று ஒழுக்க முடைமை என்னும் அதிகாரத்தினுள் முதற்றிருக்குறளில் கூறினாராதலால், பொறாமையில்லாமையை அவ்விதமே ஒழுக்கத்தைப் போல் காத்துக்கொள்ளுதல் வேண்டுமென்று இத்திருக்குறளால் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொறாமை யுடைமையென்பது குற்றமென்றறிந்தோம். நட்பினர் மாட்டும் நொதுமலர் மாட்டும் பொறாமையென்பது கொள்ளாது இருத்தல் கூடும். ஆயின், பகைவர் மாட்டும் கொள்ளாதிருத்தல் கூடுமோ?" என்று வினவலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

162. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

(பரி.) இ-ள். யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் = யாவர் மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின்,—விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை = மற்றவன் பெறுஞ் சீரிய பேறுகளுள் அப்பேற்றினை யொப்பதில்லை. எ-று.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், 'யார்மாட்டும்' என்றார். அன்மை = வேறுதல். (இவையிரண்டுபாட்டானும் அழுக்காறின் மையது குணங் கூறப்பட்டது.)

விளக்கம் :—யாவர் மாட்டும் ஒருவன் பொருமையில்லாது இருப்பானுயின் அவ்விதம் இருப்பவன் அடையக்கூடிய சிறந்த பேறுகளுள், அப்பொருமையில்லை யென்பதால் வரும் பேற்றினுக்குச் சமானமாகிய பேறு ஒன்றுமில்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், பொருமையினைப் பகைவரிடத்தும் கொள்ளுதலாகாது என்பதை யறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பொருமையிருக்குமாயின் அதனுல் வரும் கேடு எதுவென அறிவிக்கவேண்டும்." என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

163. அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்க றுப் பான்.

(பரி.) இ-ள். அறன் ஆக்கம்வேண்டாதான் என்பான்=மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான்,—பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான்=பிறன் செல்வங் கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்கறுத்தலெனினும் அழுக்காறெனினுமொக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாம் என்பதாம். (௩)

விளக்கம் :—ஒருவன் அயலானது செல்வத்தைப் பார்த்தவிடத்தே அதற்கு மகிழாது பொருமைப்படுவானுயின், அவன் மறுமைக்குவேண்டிய அறத்தினையும் இம்மைக்குவேண்டிய செல்வத்தினையும் இழந்து விடுவான்; என்று இத்திருக்குறள் கூறுவதால், பொருமைப்படுபவனுக்கு இருமையையும் இழக்கும் பயன் உண்டாகுமென்று கண்டோம் என்றனர். கேட்ட மாணுக்கர், "இருமையையு மிழத்தலென்ருல் யாது? அழுக்காற்ருல் ஒருவன் மற்றவனுக்கு எவ்விதம் தீங்கு செய்தல்கூடும் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

164. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(பரி.) இ-ள். அழுக்காற்றின் அல்லவை செய்யார்=அழுக்காறு ஏது

அழுக்காறு என்பதில் இன் ஏதுப்பொருளது. படுபாக்கு என்பதில் பூாக்குப் புடை பெயர்ச்சிவிகுதி.

வாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்;—அழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து=அத்நெறியால் தமக்கு இருமையினுந் துன்பம் வருதலை யறிந்து. எ-று.

அறனல்லவையாவன:—செல்வம் கல்வி முதலியனவுடையார்கண் தீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம். (௪)

விளக்கம்:—இத்திருக்குறள், அறிவுடை ஒருவன் பொறாமை காரணமாக, செல்வம், கல்வி முதலியன வுடையார் கண் தீங்கு நினைத்தலும், தீங்கு சொல்லுதலும், தீங்கு செய்தலும் ஆகிய தீயவைகளைச் செய்யானென்றும், அவ்விதம் செய்வானாயின் இம்மைக்கு உரிய பயனைத் தரும் பொருளையிழந்து அதனால் அடைகின்ற துன்பத்தையும், மறுமைக்கு உரிய அறத்தின் பயனாகிய இன்பத்தையிழந்து அதனால் வரும் துன்பத்தையும் யடைதல் திண்ணமாதலால், ஒருவன் பொறாமைப்படுவானாயின் இருமைப் பயன்களையும் இழந்து துன்பத்தையடைவானென்றும் பொறாமைப்படுதற்கு உரிய பொருள், கல்வி உடையார் கண் தீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பொறாமையொன்றோ இவ்வித தீங்கினையிழைப்பது? அதற்கு அத்துணை வன்மையுமுண்டோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

165. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(பரி.) இ-ள். ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது=அழுக்காறு பகைவரை யொழிந்துங் கேடுபயப்பதொன்றாகலின்,—அழுக்காறு உடையார்க்கு அது சாலும்=அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபயத்தற்கு அதுதானே அமையும். எ-று.

அதுவேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தால் தொக்கது. (௫)

விளக்கம்:—நீங்கள் மேல் திருக்குறளைக் கேட்ட காலத்துப் பொறாமைப் படுபவன் அடையும் துன்பங்கள் இவ்வளவோ? பொறாமைக்கு இவ்வளவு வன்மையும் உண்டோ என்று சந்தேகித்தீர். இத்திருக்குறள், பொறாமைப்படுகின்ற ஒருவனுக்கு பகை

வரோ வேண்டுவதில்லை என்றும், அவன் கெடுதற்கு அப்பொறாமை யொன்றேபோதும் என்றும்கூறியிருப்பதால்,பொறாமைப்படுபவன் தனக்கு ஒருவரும் கேடு செய்யாமலே தனக்குத் தானே கேட்டினைச் செய்துகொள்வான் என்று போந்த பொருளாயிற்று. ஆதலால், பொறாமையினுடைய வல்லமை இது என்று இப்போது நீங்கள் அறிந்துகொள்ளுதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் பொறாமைப் படுவான் ஒருவன் தான் கெடுவதுடன் தன் உறவினர்க்கு யாதோர் கெடுதியையும் தேடாது ஒழிந்து விடுவனோ? அல்லது ஒழுக்கமில்லாதவன் தன் குலத்திற்கும் இழிவினைத் தேடுவதுபோல் கேட்டினைத் தேடுவானோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(பரி.) இ-ள். கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்=ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச்செய்வானது சுற்றம்,—உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்=உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதுமின்றிக் கெடும்.

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறாமைசெய்தல் சுற்றங்கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறாமை தன்பேறின்மையன்றித் தன் சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்குமென்பதாம். (சு)

விளக்கம்:—நீங்கள் மேல் திருக்குறளில் வினவிய வினாவானது மிக மகிழ்ச்சியைத் தருகின்றது. நம் தெய்வப் புலவர் ஒழுக்கமுடைமையென்னு மதிகாரத்தும் ஐந்தாவது திருக்குறளில், ஒழுக்க மில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்வு இல்லை என்பதை யறிவித்தற்கு

"அழுக்கா றுடையான் கண் ஆக்கம் போன் றில்லை
ஒழுக்கமிலான் கணுயர்வு"

என்று அவ்விடத்தேயே அழுக்காற்றினை வலிந்தமைழத்து உவமை கூறினராதலால் இத்திருக்குறளில், பொறாமையுடைய

ஒருவன், தான் ஒருவருக்கு யாதொன்றும் கொடாதிருந்தும் பிறர் கொடுப்பதைப் பார்த்து மனம் சகியாது பொறாமைப் படுவானாயின் அவ்வித பொறாமை யுடையவன் உறவினர் உடுக்க உடையும் உண்ண உண்டியும் இல்லாது கெட்டுப் போவார் என்று அறிகின்றோம் அன்றியும், இப்பொறாமையுடைய ஒருவனது செயலால் தன் சுற்றத்தின் பேறுகளும் கெட்டுப்போம் என்பதை அறிவதுடன், இவனைச் சேர்ந்த பாபத்தால், சுற்றத்தவர்க்குச் செல்வமில்லாது தீங்கு நேருமெனின், பொறாமை கொண்ட இவனுக்கு எவ்வித தீங்கு நேரிடும் என்று அளந்து சொல்வதற்கு இல்லை யென்பதும் ஆயிற்று * என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் பொறாமைப் படுவானாயின் ஏன் செல்வத்தை யிழக்கின்றான்? அதற்குக் காரணம் என்னை?" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

## 167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ டவ்வையைக் காட்டி விடும்.

(பரி.) இ-ள். அழுக்காறு உடையானை = பிறராக்கங்கண்டவழிப்

---

உடுப்பது, உண்பது எனும் காரியங்கள் காரணங்கள் உணர்த்தி நின்றன. நைமித்திக நியாயத்தால் அவன் கெடுதல் கூறாமலே அமைந்தது, அளபெடைகள் இன்னிசைப் பொருளன.

* இதனை மாவலிபால் ஏற்கச் சென்ற வாமனன் தான் தானம் வாங்குங் காலத்துத் தடுத்த வெள்ளியை நோக்கி மாவலி கூறிய

"அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞருமல்லர்,
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று,
தடுப்பவரே பகை தம்மையுமன்னர்,
கெடுப்பவரான்னதோர் கேடிலை யென்றான்"

எனும் இராமாயணச்செய்யுளாலறிக அன்றியும்.

"எடுத்தொருவருக்கொருவரீவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகிதோதகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோய் நினது சுற்ற
உடுப்பது வுமுண்பது வுமின்றி விடுகின்றாய்"

எனும் கம்பராமாயண வெள்ளிப்பாடலாலும் அறிதல்கூடும்.

பொறாமை யுடையானை,—செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டி விடும்=திருமகள் தானும்பொறாது தன்தவ்வைக்குக் காட்டி நீங்கும். எ-று

தவ்வை=மூத்தவள். தவ்வையைக் காட்டியென்பது "அறிவுடையந் தணனவளைக்காட் டென்றனே" என்பதுபோல உருபு மயக்கம். மனத்தைக்கோட்டுவித்து அழுக்காறுடையனுயினனை என்றுரைப்பாருமுளர். (எ)

விளக்கம் :—இத்திருக்குறள் உங்கள் ஐயத்தை அறவே ஒழித்ததாகும். அது எவ்விதமோ வெனின் பொறாமை கொண்ட ஒருவன் தகுதியை யவனிடத்தே யிருந்த செல்வத் தலைவியாகிய திருமகள், இவன் அறத்திற்கு மாறாகிய பொறாமையைச் செய்கின்றான். அவ்வித பாபத்திற்கு இடமாகிய இவனிருக்கும் இல்லத்தில் நாமிருத்தல் கூடாது என்று கோபமுடையவளாய், தான் நீங்குவதுடன் தனக்கு மூத்தவளாயிருக்கின்ற வறுமைக்குக் காரணமாகிய மூதேவியை அவ்விடத்தே நிறுத்தித் தான் போய் விடுவாள் என்று அறிந்தோமாதலால், ஒருவன் பொறாமை கொண்ட காலத்தே செல்வம் ஒழிந்து வறுமையடைய நேருகின்றது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் பொறாமைப் படுவானாயின் இம்மை, மறுமையாகியஇரண்டு பயன்களையும் இழப்பானென்று மேற் கூறினீர். இம்மையின்பத்தின் பயனையடைதற்கு முதலாகிய செல்வத்தை இழந்துவிடுவதால் இம்மை யின்பம் இழப்பது இதுவென அறிந்தோம். ஆயின், மறுமை யின்பத்தை எவ்விதம் பொறாமை யென்னும் தீத் தீச் செயல் இழக்கச்செய்யும்? என்பதையும் அறிவித்தல் வேண்டும்." என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

168\. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(பரி.) இ-ள். அழுக்காறு என ஒருபாவி=அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாதபாவி,—திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்=தன்னை யுடையானை இம்மைக்கண் செல்வத்தைக்கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். எ-று.

பண்பிற்குப் பண்பியில்லையேனும், தன்னையாக்கினனை இருமையுங் கெடுத்தற்கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் 'பாவி' என்றார், கொடியா

னைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவை ஆறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—இத்திருக்குறள், பொறாமை என்று சொல்லுகின்ற ஒப்பில்லாத பாபியானவன், ஒருவனுக்கு மேற் கூறியபடி இம்மையில் உள்ள செல்வத்தைக் கெடுப்பதுடன் மறுமையிலேயும் நரகத்தில் செலுத்தி விடுவான் என்று கூறுவதால், ஒருவனுக்குப் பொறாமையானது மறுமைப் பயனைக் கெடுப்பதுடன் நரகத்திலேயும் வீழ்த்தும் என்று கண்டோ மென்றனர். அது கேட்ட மாணாக்கர், "பொறாமையுடையா னொருவன் செல்வத்தோடிருப்பதில்லையோ? பொறாமையற்ற ஒருவன் கேட்டினை யடைவதில்லையோ? இவ்வுலக உண்மையை விளக்கல் வேண்டும்" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

169. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(பரி.) இ-ள். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் —கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும். எனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும். எ-று.

கோட்டம், ஈண்டு அழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராயப்படுதலின், 'நினைக்கப்படும்' என்றார். "இம்மைச்செய்தன யானறி நல்வினை—யும்மைப்பயன்கொ லொருதனி யுழந்தித்—திருத்தகுமாமணிக் கொழுந்துடன் போந்தது" என நினைக்கப்பட்டவாறு அறிக. (௯)

விளக்கம்:—இத்திருக்குறள், பொறாமை யுடைய ஒருவன் செல்வமுடையவனும் பொறாமையற்ற ஒருவன் கேட்டினை யடைபவனும் ஒருவேளை நேருமாயின், அவை முரண்படத் தோன்றுவதால் உலகத்தோர் இவ்வித மாறுபாட்டிற்கு ஏதோ பழவினை காரணமாக இருத்தல் வேண்டுமேயன்றி வேறொன்று மன்று என ஆராய்ந்து நிற்பார்கள் என்று கூறுவதாக அறிகின்றோம். இதனைச்

சிலப்பதிகாரத்துள் அடைக்கலக் காதையினுள் கோவலனைச் சந்தித்த பார்ப்பனன் ஒருவன் கோவலனை நோக்கி, கோவலனே!

"மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று
தாமின்பு றூஉந் தகைமொழி கேட்டாங்
கிடையிருள் யாமத்தெறி திரைப் பெருங்கட
லுடைக் கலப்பட்ட வெங்கோன் முன்னாட்
புண்ணியதானம் புரிந்தோ னாகலி
னண்ணுவழி யின்று நாள்சில நீந்த
விந்திர னேவலி னீங்கு வாழ்வேன்
வந்தேனஞ்சன் மணிமேகலையா
வுன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்பநீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந்தீர்த்த
வெங்குல தெய்வப் பெயரீங்கிடுகென
வணிமேகலையா ராயிரங் கணிகையர்
மணிமேகலையென வாழ்த்தியஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன்மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம்பாயோன்
றானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
றளர்ந்த நடையிற் றண்டு காலூன்றி
வளைந்தயாக்கை மறையோன் றன்னைப்
பாகுகழித் தியாங்கணும் பறைபடவருஉம்
வேகயானை வெம்மையிற் கைக்கொள
வொய்யெனத் தெழித்தாங் குயர் பிறப்பாளனைக்
கையகத் தொழிந்ததன் கைய கம்புக்குப்
பொய்ப்பொரு முடங்குகை வெண்கோட்ட டங்கி
மையிருங்குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணைமறவ.

பிள்ளை நகுலம் பெரும்பிறிதாக
வெள்ளிய மனையோ ளிணைந்து பின்செல்ல
வடதிசைப் பெயருமா மறையாளன்
கடவதன்று நின்கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாடமறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மினோவெனு
மருமறை யாட்டியை யணுகக்கூஉ
யாது நீயுற்றவிடர் தென்னென
மாதர் தானுற்ற வான்றுயர் செப்பி
யிப்பொருளெழுதிய விதழிது வாங்கிக்
கைப் பொருடந்தென் கடுந்துயர்களைகென
வஞ்சலுன்ற னருந்துயர்களைகே
னெஞ்சுறுதுயர நீங்குக வென்றாங்
கோத்துடையந் தணருரைநூற் கிடக்கையிற்
றீத்திரம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவடன்றுயர் நீக்கிக்
கானம்போன கணவனைக்கூட்டி
யொல்காச் செல்வத் துறு பொருள் கொடுத்து
நல்வழிப்படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியா னொருவ
னறியாக்கரி பொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப்படலும்
பட்டோன்றவ்வை படுதுயர்கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென்றெய்தி
யென்னுயிர் கொண்டிவ னுயிர் தாவென
நன்னெடும் பூதநல் காதாகி
நரகனுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதியிழக்கும் பண்பீங்கில்லை

யொழிக நின்கருத்தெனா வுயிர் முன்புடைப்ப
வழிதருமுள்ளத் தவனொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த வில்லோர் செம்ம
லிம்மைச் செய்தனயானறி நல்வினை
யும்மைப்பயன் கொலொரு தனியுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோபால நீயெனவினவ."

இதன் பொருள் :—வயது முதிர்ந்த கணிகையர்கள் மாதவி பெற்றெடுத்த மகளுக்குப் பெயரிடுவோமென்று கூறியதைக் கேட்டபொழுது, முன்னாளிலே கடலிடத்து நள்ளிருளில் தன் மரக் கலம் உடையவும், அதன் தலைவன் முற்பிறப்பில் புண்ணியத்தை யும் தானத்தையும் செய்தோனாகலின், அவன், தன்னை ஓர் இடை யூறும் அணுகாது அக்கடலிடத்தே சில நாள் நீந்திநிற்கவும், அப் போது ஓர் தெய்வந் தோன்றி இத்தீவில் உள்ளாரை அரக்கர் துன் புறுத்தா வண்ணம் இந்திரன் ஏவலால் பாதுகாத்துக்கொண்டிருக் கின்ற யான் உனது துயரைக்கண்டு அதனை யொழிக்கும் வண் ணம் இங்கு வந்தேன். இனி நீ அஞ்சவேண்டுவதில்லை. என் பெயர் மணி மேகலையாகும். அதுவன்றியும், நீ முற்பிறப்பிற் செய்த தான மிகுதியால் வரும் புண்ணியமும் நின்னை நீங்காது. ஆதலால், இனி, துன்பத்தினின்றும் நீங்கி இக்கடலினின்று ஏறுவாயாக எனக் கூறித் தன் விஞ்சையால் ஓர் திடலிற் கொண்டுபோய்ச் சேர்த்துத் துன்பத்தைத் தீர்த்த என் குலதெய்வத்தினுடைய பெயரை நீங்கள் இக்குழந்தைக்கு இடுமின் என்று நீ சொல்லு தலும், அவ்விதமே அனேகங் கணிகையர் கூடி மணிமேகலை என்று பெயர் கூறி அரசனையும் நகரையும் வாழ்த்த, அந்நாளிலே நிறைந்த அழகினையுடைய மடந்தையாகிய மாதவி யுடனே செம்பொன்னா கிய மழையினை உன் சிவந்த கையால் நீ பொழிந்தாய், அங்ஙனம் நீ பொழிதலும், மறையோன் ஒருவன் தன் மூப்பால் யாக்கை யுலைந்து நடைதளர்ந்து தான் பிடித்த தண்டினையே துணைக்குக்

காலாக ஊன்றிக் கூனிய தேகமுடையனுய்த் தானம் வாங்குவதற்கு உன்னை மதித்து வந்தனன். அக்காலத்து பாகர் சொல்வழி நில்லாது மதவேகத்தைக்கொண்டு ஓடிவருகின்ற யானையொன்று கோபத்தோடு தன் துதிக்கையில் அப்பார்ப்பனனைப் பற்றிக்கொள்ளுதலும், அதனைக்கண்ட நீ அவ் யானையை அம்மறையோனை நெருங்காது ஒழியக்கடவாய் என மிகப் பயமுறுத்தி ஓடிச் சென்று உன் கையினுல் யானையின் துதிக்கையிலிருந்த அந்தணனை நீக்கி அதன் கையினிடத்தே நீ யகப்பட்டுக்கொள்ள அவ் யானையானது தன் துதிக்கைபால் உன்னை வளைக்கவும் அதன் கையினின்றும் நீங்கி அதின்கொம்பின்மீது ஏறித் தலைமீதிருந்த ஓர்விஞ்சையனைப்போல அதன் பிடரின் மீது இருந்துகொண்டு மிக்க கோபத்தோடு நின்ற யானையினது மதத்தை யடக்கிய கிருபாவீரனுவாய். அன்றியும், பார்ப்பனி ஒருத்தி வளர்த்த கீரியொன்று தன் பிள்ளையைக் காத்திருக்கவும் அப்பிள்ளையினிடம் ஒரு பாம்பணுகக் கீரியானது அப் பாம்பினைக் கவ்வித் துணித்து அவ்விரத்தவாயோடு எதிர் வர உண்மையறியாத பார்ப்பினிதன்பிள்ளையைக்கடித்ததென்றெண்ணி தன் கையிலுள்ள மணையொன்றினுல் புடைத்தலும், அது மரித்தலால் அப்பாபம் நீங்குதற்கு அவள் கொழுநன் வடதிசை நோக்கிக் கங்கையாடச் சென்முன். அவ்விதம் செல்லுகின்ற கொழுநன்பின் மனைவி செல்லுதலும் அதனைப்பொறுது இகழ்ந்து, ஓ பெண்ணே! இவ்வித ஒழுக்கத்தையுடைய உன்னோடு இல்லறத்திலிருந்து வாழும் வாழ்க்கை நன்னுலாகாததாகும். ஆதலால், வடமொழி வாசக மெழுதிய இவ்வேட்டினைப் படித்துப் பொருளறியும் மனிதரிடத்தே இதனை நீ கொடுக்கக் கடவாய் என்றுகூறிக் கொழுநன் போகவும், கீரியைக் கொன்றதால் நாயகனைப்பிரிந்த அந்நாயகியும் பல தெருக்களிலும் மாட கூடங்களிலும் சென்று அவ்வேட்டினைக் காட்டி 'என்னிடர் தீர்மின்' என்று கூறினள். அதுகேட்டமாந்தர் எவரும் தீராது ஒழியவும், நீ அவளைக்கூவி அவள் வாய்ச்சொற் கேட்டு 'அஞ்சுதல் வேண்டாம். உனக்குற்ற துன்பத்தையானே ஒழிப்பேன். நீ இனித் துயரடைதல் வேண்டாம்' என்று கூறி அக்கணமே நூல்வல்லவர் கூறியவண்ணம் கீரியைக்கொன்றபாவம் நீங்குதற்கு வேண்டிய தானங்களையும் செய்து அப்பார்ப்பனியின்

கணவனையும் கூட்டிவரச்செய்து அவளோடு இல்லறத்தை நடத்த வேண்டிய பொருள்களையுங் கொடுத்து உதவிய தொலையாத செல்வமுடையவனாவாய். இதுவன்றியும், பத்தினிப் பெண்ணொருத்தி பொய்ப்பழி யடையும் வண்ணம் அறிவில்லாதான் ஒருவன் அப்பெண்ணின் கணவனுக்கு பொய்சாக்ஷி கூறியதால் இவ்விதம் பொய்ச்சாட்சி கூறுவோர், தவவேடத்து மறைந்து அவ்வேடத்துக்கு மாறாகிய கூடாவொழுக்க முடையோர், தம் கணவரை ஏமாற்றி அயல்நாயகரை விரும்பும் பொய் ஒழுக்கமுடையபெண்டிர், தமக்கு எல்லா நலமும் செய்த அரசரைத் தாழ்த்தும் அமைச்சர், தமது மனைவியரைவிட்டுப் பிறர் மனைவியரை விரும்பும் காமுகர்கள், கொடை கொள்ளுங்காலத்துக் கொடுத்த கொடையைக் கொண்டு பழி தூற்றுவோர் ஆகிய இவ்வறுவரையும் புடைத்து உண்ணும் சதுக்கப் பூதத்தினுடைய கரிய பாசத்தினிடத்தே அப்பொய்ச் சான்று கூறியோன் அகப்படவும் அகப்பட்டவன் தாய், பூதத்தின் கையிலுள்ள தன் மகனது ஆபத்தைக்கண்டு மிகுதியும் துயரத்தை யடையவும் அதனைக் கண்ட நீ அப்பொய்ச் சான்று கூறியோன் அகப்பட்டிருந்த பாசத்தினுள்ளே விரைவாகச் சென்று புகுந்து, "ஓ பூதநாதனே! உனக்கு உணவாக என் உயிரைக் கைக்கொண்டு இவன் உயிரை இவன் தாய்பொருட்டுத் தருதல்வேண்டும்" என்று நீ மிக இரந்து கேட்டனை. அப்பூதமானது உன்னை நோக்கி நீ இவ்விதம் எண்ணுதலாகாது. பொய்ச்சான்று கூறிய இக் கீழ் மகனுடைய உயிர்க்கு மேலாகிய தகுதியையுடைய உன்னுடைய நல்லுயிரை நான் கொள்ளுவேனாயின் அதனால் நான் அடைய இருக்கும் மேலான கதியை யிழந்துவிடல்வேண்டும். அது என்பாலில்லை. ஆதலால், நீ கொண்ட எண்ணத்தை விட்டு விடக்கடவாய் என்று கூறி உன் முன்பே அப்பூதமானது அப்பொய்ச்சான்று கூறியவனை புடைத்து உண்டது. அதைக்கண்ட நீ அவன் தாய்க்கும் அவனோடு தொடர்புடைய யாவர்க்கும் உன் சுற்றத்தவர்போல் பரிந்து அன்புடன் அவர்கள் பசியாகிய பிணியைத் தீர்த்துப் பல்லாண்டுகள் பாதுகாத்த இல்லறத் தலைவனாவாய். ஆதலால்; இவ்வித தகுதியை யுடையவனாகிய உன்னை யான்கண்ட அளவில் இப்பிறப்பில் யாதொரு தீவினையுஞ் செய்யாது நல்வினையே செய்தவ

ணாக விருக்கின்றாய். அவ்வித மிருக்கவும் மாணிக்கக் கொழுந்து போன்ற உன் மனைவியாகிய கண்ணகியுடன் உன் நாட்டினைவிட்டு வேறு நாட்டை யடைந்து ஓர்வித துணையுமின்றித் தனித்து இருத்தல் முன்செய்த தீவினைப் பயன்தானோ? என்று கேட்டனன் (என்பது பொருள்). என்றிருத்தலால், அழுக்காறு இல்லாதார்க்கு செல்வம உண்டாதலும் அது உடையார்க்கு செல்வம் இல்லாமற் போதலும் ஒருதலை யென்று துணிந்தோம். இதை ஐயந்திரிபு அற நாம் அறிவதற்கே பத்தாவது திருக்குறள் எழுந்தது என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

170. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(பரி.) இ-ள். அழுக்கற்று அகன்றாரும் இல்லை — அழுக்காற்றைச் செய்து பெரியராயினாருமில்லை — அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் — அச்செயலிலாதார் பெருக்கத்தினீங்கினாருமில்லை. எ-று.

(இவையிரண்டு பாட்டானும் கேடும் ஆக்கமும் வருதற்கு ஏது ஒருங்கு கூறப்பட்டது.) (ம)

விளக்கம் :—மேற்கூறிய வண்ணமே இத்திருக்குறளால் பொறாமை கொண்ட மனமுடையான் ஒருவன் உலகத்து இம்மை மறுமைப் பயன்களாகிய புகழினையும் புண்ணியத்தையும் அடைதல் இல்லை யென்றும், அப்பொறாமை யில்லாத புனிதன் ஒருவன் அவ்விரண்டு பயனையும் அடைவது திண்ணமென்றும் முடிந்தது முடித்தலாகக் கூறியதை நாம் அறிந்தோமென்றனர். அன்றியும், முன்னர் அடக்கமுடைமையுள் கூறிய மூன்று அடக்கங்களுள் மெய்யடக்க மென்பதை,

"ஒருமை யுளாமை போலைந் தடக்கலாற்றின்
எழுமையுமே மாப்புடைத்து"

என்னுந் திருக்குறளின்படி பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தால் கண்டோம். பின்னர் மன அடக்கத்தைக்

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து"

என்ற திருக்குறளின்படி பொறையுடைமை என்னும் அதிகாரத்தி னுள் கோபத்தை யடக்குதல் என்பதனையும், அழுக்காறாமை யென்னு மிவ்வதிகாரத்துள் பிறன் பொருளைக்கண்டு பொறாமைப் படுதலின் மையும் அறிந்தோம். இனி, அம்மனத்தால் வரும குற்றமாகிய பிறர் பொருளை வெளவுந் தீங்கினையும் அடக்கவேண்டும் என்று கூறுவார், அடுத்த அதிகாரத்தினுள் வெஃகாமை என்று ஆரம்பித்த னர் என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 18. அதிகாரம்

## வெஃகாமை

---

அஃதாவது பிறர்க்கு உரிய பொருளை வெளவக் கருதாமை, பிற ருடைமை கண்டவழிப் பொறாமையேயன்றி அதனைத் தான் வெளவக் கருதுதலுங் குற்றமென்றற்கு, இஃது அழுக்காறாமையின்பின் வைக்கப் பட்டது.

விளக்கம் :—அதாவது, பிறர்க்கு உரிய பொருளைக் கண்ட விடத்தில் அதனை யபகரிக்க எண்ணுமை. பிறன் பொருள் கண்ட விடத்தே பொறாமைப் படுவதுடன் அதனை யபகரிக்கவும் எண்ணங் கொள்வது தீங்கினுள் தீங்காகும். என்று அறிவித்தற்கு அவ்வெண் ணுதலுக்கு முற்றும இடந்தரும் பொறாமை யென்பதற்குப் பிறகு இது வைக்கப்பட்டது.

171. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(பரி.) இ-ள். நடுவு இன்றி நன்பொருள் வெஃகின்=பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன்ன்றென்னும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொ ருளை ஒருவன் வெஃகுமாயின்—குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்= அவ் வெஃகுதல் அவன்குடியைக் கெடச்செய்து, பல குற்றங்களையும் அப் பொழுதே அவனுக்குக் கொடுக்கும். எ-று.

குடியை வளரச்செய்து பல நன்மையும் பயக்கும் இயல்புபற்றி, வெஃகி னென்பார், 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்ற என்பது பொன்றி யெனத் திரிந்து நின்றது. செய்து என்பது சொல்லெச்சம். (க)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணமே இத்திருக்குறளால் பிறர்க்குரிய பொருளை நாம் அபகரிப்போமாயின் நமக்கு அது தருமமாகாது என்னும் நடுவுநிலைமை யென்பது சிறிதுமில்லாது பிறர் பொருளை அபகரிக்க ஒருவன் எண்ணுவானாயின் அவ்விதமெண்ணிய அவனது எண்ணம் குடியைக் கெடச்செய்து இன்னும் பலவாகிய குற்றங்களையும் எண்ணிய அப்பொழுதே கொடுத்துவிடும் என்பது அறிந்தோம். "குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையுந் தரும்" என்றதால், அவனுடைய குடிக்கு உண்டாகிய புகழினையுங் கெடுத்துக் குடியிலுள்ளார் பலரும் அழியக்கூடிய தீங்கினையும் உண்டு பண்ணும் என்பது போந்த பொருளாயிற்று. அன்றியும் "நன்பொருள்" என்றதால் உலகத்துப், பொருள் ஒன்றே, அறத்தையும் இன்பத்தையும் உண்டு பண்ணுவதென்றும், ஒருவன், தனக்கு அறம்பெறவும் இன்பமுறவும் குடி வளரவும் புகழ் உறவும் அதுவே துணைக் காரணமெனவுங் கூறியதாயிற்று. அதுகேட்ட மாணாக்கர், "அயலவன் பொருளை அபகரிக்கக் கருதுவது நடுவு நிலையில்லார்க்கே உண்டாவது என்பது இத்திருக்குறளால் கண்டோம். ஆயின் நடுவு நிலைமையுடையவர் அவ்விதம் செய்தலில்லையோ? அவர்கள் ஏது கருதி அயலவர் பொருளை யபகரிக்கக் கருதார்?" என்று கேட்டலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(பரி.) இ-ள். படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்=பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதற்கும், பழியின் கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார் :—நடுவு அன்மை நாணுபவர்=நடுவு நிலைமையன்மையை அஞ்சுபவர். எ-று.

நடுவு=ஒருவன் பொருட்குப் பிறன் உரியனல்லனென்னும் நடுவு.

விளக்கம்:—இத்திருக்குறளால், நடுவு நிலைமை என்பது ஈதென்றறிந்து அதற்கு மாறாகிய தீமைகளைச் செய்வதற்கு அஞ்சி

வுடையோராய அவர் அஞ்சுவரென்றும், ஏனெனில், அவ்விதம் அபகரிக்கும் தீமையைச் செய்வதால் பெரியதோர் பழிபடுவதாகிய செயல்களைச் செய்தல் வேண்டுமென்றும், அதனால் வரும்பயன் மிகச்சிறியதே யென்றும், சிறியதோர் பயன்பற்றிப் பெரியதோர் பழியின்கண்ணே செல்வது ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவனல்லன் என்னும் நடுவு நிலைமையை யுணர்ந்தார்க்கு உணர்வாகாது என்றும், வெஃகுதலைச் செய்யமாட்டார் என்று அறிந்தோம், என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என்னை? அயலவர் பொருள் கொள்வதால் சிறுபயனே வரும் என்றீர். தன் பொருளாயின் பெரியதோர் பயனும் பிறன் பொருளாயின் சிறியதோர் பயனும் எவ்வாறு அடைதல்கூடும்? எவர் பொருளேனும் பயன் தருவதில் ஒன்றுதானே? இதனை விளக்கல் வேண்டும்" என்று கேட்டலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

173. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(பரி.) இ-ள். சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்—பிறர்பால் வெளவிய பொருளால் தாமெய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார்;—மற்றின்பம்* வேண்டுபவர்—அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர். எ-று.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியுமென்பார், 'சிற்றின்பம்' என்றார். மற்றையின்பமென்பது மற்றின்பமென நின்றது. (௩)

விளக்கம்:—நீங்கள் கொண்டதாகிய ஐயத்தை இத்திருக்குறளானது நன்றாகவே நீக்கிவிட்டது. அது என்னையோ வெனின்,

* உலக இன்பம் செல்வம், மண், பெண் முதலியவைகளால் வருவது, அது கருங்கொண்மூஉ வாய்திறந்த மின்னுப் போறறேன்றிக் கெடுதலின் அதனைச் சிற்றின்பம் என்றார். ஏனைய சுவர்க்காதி போகங்களால் வரும் இன்பங்களுஞ் சின்னாள் அநுபவிக்கப் புண்ணியந் தீர்ந்தவாறே கெட்டு ஆக்கை பெற்று மீண்டு பிறப்பிற்கு ஏதுவாய் நிற்றலின் அதுவும் சிற்றின்பமேயாம் ஆதலின் எக்காலத்தும் இறப்புப் பிறப்புக்களாலாய துன்ப நீங்கி அநுபவிக்குமின்பமே யின்பமென்பார் மற்றின்பம் என்றார்.

ஒருவன் பிறனிடத்தே அபகரிக்கின்ற பொருள் பாவவழியாக வருதலால், அப்பொருளானது நெடும் பொழுது நில்லாது அடைந்த அப்பொழுதே வெகுசிறியதோர் இன்பத்தைத்தந்து அதற்கீடாக மிகப் பெரியதோர் பழிபாவங்களை யுண்டாக்கித் தானும் அழிந்து போய்விடும் என்று அறிந்தோம். அன்றியும், நடுவு நிலைமையுள்ளும்

"செப்பமுடையவனாக்கம் சிதைவின்றி எச்சத்திற்கேமாப்புடைத்து"

என்று நடுவு நிலைமையுடையானது செல்வமானது அவனுக்கும் உதவி அவன் சந்ததியாருக்கும் உதவுமென்றும் அவ்விதமில்லாதார் செல்வமானது அழிந்துபோவதுடன் நன்மக்கட் பேறும் இல்லாமற்போம் என்றும் கூறியிருப்பதால், அறத்தால் வருகின்ற நிலையாகிய இன்பத்தை விரும்புகின்ற நடுநிலையுடையோர், அழிந்து போகின்ற பிறன் பொருள் வெஃகும் காரியத்தைச் செய்யமாட்டார் என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நடுநிலை யுடையார்க்கு இவ்வித அறிவு தோன்றுவது எவ்வுபாயத்தால் என்று அறிய விரும்புகின்றோ" மென்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(பரி.) இ-ள். இலம் என்று வெஃகுதல் செய்யார்=யாம் வறியமென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார்;—புலம் வென்ற புன்மையில் காட்சியவர்=ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார். எ-று.

வெல்லுதல்=பாவநெறிக்கட்செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலும் இல்லையாயிற்று. புன்மையில் காட்சி=பொருள்களைத் திரிபின்றி யுணர்தல். (௪)

புலம் அறிவு, அவை மெய் வாய் கண் மூக்குச்செவி ஆகிய உறுப்புக்களைத் தொழிற்படுத்தும் உணர்ச்சிகளாம். வெல்லுதல் அவை சென்ற வழி விடாது நன்னெறிக்கணிறுத்தல். இது செயற்கரிய செயலாதலின் இச்செயலில் நின்றோர் வென்றோர் எனப்பட்டனர், புன்மையில் காட்சி பொருள்களின் உண்மையறியும் ஞானம்,

விளக்கம்:—நீங்கள் மேல் வினவிய நடுநிலையுடையார் பிறன் பொருளை யபகரிக்கக் கருதா திருப்பதற்கு வேறோர் உபாயமும் அவர்க்கு வேண்டுவதில்லை. ஏனெனின், அந்நடு நிலை யுடையார் இல்லறத்தாரே யாயினும் ஐம்புலன் வென்ற குற்றமில்லாத அறிவினை யுடையாராவர். அது எவ்வாறேனெனின்,

" நிலையிற்றிரியாது அடங்கி யான்தோற்றம்
மலையினும் மாணப்பெரிது "

என்றபடி தமக்குள்ள மனைவியரோடு ஐம்புலன்கள் ஆர்த்துய்த்துப் பழியஞ்சிப் பொருளைச் சம்பாதித்து, தெய்வம், தென் புலத்தார், விருந்து, ஒக்கல் என்பார்க்குப் பங்கிட்டு மிகுந்ததைத் தம்பகுதியாக உண்ணுகின்ற இயற்கையுடைய அறிவுடையோராதலால் பிறன் பொருளை யபகரிக்க வேண்டிய கருதியும் அவர்க்கில்லை. பிறன் பொருள் வேண்டாத காலத்து அதனை யபகரிக்க அவர்களுக்கு மனம் எழுதலுமில்லை. மனம் எழாத காலத்து அவர்க்குப் பல நெறியின்கண் செல்லும் இயல்பும் இல்லை. தம் பொருள் கொண்டு பிழைக்கின்ற இவர்க்கு வறுமையுமில்லை. ஆதலால், இவ்வித கருதியுடையார் பிறன் பொருளை யபகரித்தல்என்னும்வெஃகுதல் என்பதற்கு உடன்படுவதில்லையாயிற்று என்றனர். இது கேட்ட மாணாக்கர், " அவ்விதம் மேற்கூறிய புலம்வென்ற குற்றமில்லாத அறிவினையுடையோர் ஒருகாலத்தும் வெஃகுதலைச் செய்தவில்லையோ என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

175. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(பரி.) இ-ள். அஃகி அகன்ற அறிவு * என்னும்=நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்னபயத்ததாம்?—வெஃகி யார்மாட்டும்

* அறிவு நுண்ணிதாய் மாட்சிமைப்பட்ட நூல்களில் பழகி மடநீங்க அகன்ற அறிவு என்பார் அஃகியகன்ற அறிவு என்றார். அறிவொடுபடாச் செயல்கள் பயனற்ற விபரீதச் செயல்கள். அவை ஒருபயனுந் தாாவென்பார் என்னும் என்றார். அஃகியகன்ற வென்பது முரண்தொடை. வெறிய என்பது ஆகுபெயராய்ச் செயல்களை யுணர்த்தி நின்றது. இத்திருக்குறள் வெஃகா அறிவினது பயனை யுணர்த்தி நின்றது.

வெறிய செயின் = பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வாராயின். எ-று.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின், 'அறிவென்னும்' என்றார். (ரு)

விளக்கம்:—இத்திருக்குறளால், நீங்கள் அறிவுடையார் அயலவர் பொருளை அபகரிக்கக் கருதார்கள் என்பதை யறிதல் கூடும். ஏனெனின், மிகநுண்ணிதாய் கற்கவேண்டிய எல்லா நூல்களினும் சென்று கற்றதர்கிய தம் அறிவின் நிலையாத இன்பத்தைத் தரும் நில்லாப் பொருளை விரும்பித் தகுதியுடைய பெரியோரிடத்தும், தகுதியில்லாத இழிந்தோரிடத்தும் இழிந்தனவும் கடியனவும் ஆகிய செயல்களைச் செய்யப் புகுவாராயின், அவர் அறிவினுக்குப் பயன் யாதொன்றுமில்லாது அறியாமையையே விளக்குமாதலால், அவ்வித தகுதியற்ற காரியத்தை யறிவுடையோர் எக்காலத்தும் மறந்தும் செய்யார் என்பது பொருளாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இல்லறத்தான் ஒருவன் இவ்விதம் இருமையும் பயக்கும் பொருளில் பற்றற்று நிற்பது மிகுதியும் பெரியதோர் செயலேயாகும், அவ்விதம் அவன் செய்யாவிடின் அதனால் அவ்வில்லறத்தானுக்கு எவ்வித கெடுதிநேரும் என்பதையும் அறிய விரும்புகின்றோம்" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

176. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்
பொல்லாத சூழக் கெடும். [வெஃகிப்

(பரி.) இ-ள். அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் = அருளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கணின்றவன் — பொருள் வெஃகிப் பொல்லாத சூழக்கெடும் = பிறர்பொருளை யவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக்கெடும். எ—று.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல் இரண்டறமுஞ் சேர விழத்தல். சூழ்ந்த துணையானே கெடுமெனவே, செய்தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

விளக்கம்:—இத்திருக் குறளால், இல்லறநெறியில் நின்ற ஒருவன் அந்நெறிக்கு உரிய ஒழுக்கத்தில் நின்று துறந்தால் அல்லது துறவறம் ஆகாதென்றும் அவ்வித துறவறத்திற்கு அருளுடைமை என்பது பெரியதோர் துணையாகுமென்றும், அவ்வருளுடைமையானது இல்லறத்து ஒழுகுகின்ற காலத்து மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்றம் என்னும் தொடர்புடை யாரிடத்துச் செலுத்திய ஆசையென்னும் அன்பின் முதிர்ச்சியேயாகுமென்றும், ஏனெனின் அவ்வன்பு

"அன்பீனு மார்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச்சிறப்பு"

என்றபடி, யாரிடத்தும் சென்று இனிமையை யுண்டாக்க வேண்டுதலால், அவ்வித இல்லறத்தின் பயனை முற்றும் அடைந்து பின் பிறப்பினை நீக்குவதற்குத் துறவறத்தை யடைய விரும்புபவர், இவ்விதம் பிறர் பொருளை யபகரிக்க வெண்ணுதல் என்னுந் தீத்தொழிலை மனத்தில் பண்ணுவாராயினும் அவர்க்கு இரண்டு அறங்களும் ஒரு சேரக்கெடும் என்றுமறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "பிறன் பொருளை அபகரித்தலால் வருகின்ற பயன் சிறிது இன்பந்தரும் என்று முன்னர் கூறினீர். அச்சிற்றின்பத்தை யாயினும் அறிவற்றோர் தாம் அப்பொருளை யனுபவிக்குங்கால் அனுபவிப்பரோ என்னலும்" ஆசிரியர் கூறுவாராயினர்.

177. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(பரி.) இ-ள். வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க—பிறர்பொருளை அவாவிக்கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக;—விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம்—பின்னனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான். எ-று.

---

விளைதல் எனும் தொழிலாகுபெயர் அக்காலத்து அனுபவிக்கும் வகைமை யுணர்த்திநின்றது. மடங்கிப் பசிப்பினு மாண்புடையாளர், தொடங்கிப் பிறருடைமை மேவார்—குடம்பை, மடலொடு புட்கலாமால் கடற்சேர்ப்ப, கடலொடு காட்டொட்டலில்.

விளையென்பது முதனிலைத்தொழிற்பெயர். இவை எழுபாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது. (எ)

விளக்கம் :—இத்திருக்குறளால் பிறன் பொருளை வெளவுதலால் சிறியதோர் இன்பமும் அனுபவிக்குங் காலத்து அடைதலில்லை என்று அறிகின்றோம். ஏனெனின்? பிறன் பொருளை விரும்பி அபகரித்து அதனாலாகின்ற பயனை யொருவன் அடைய விரும்புங் காலத்து, அபகரித்தானுக்குப் பலவித துன்பங்களைச் செய்ய முயலும்படி பொருளுக்கு உடையவனையும் நீதியாளரையும் அறக்கடவுள் தூண்டுமாதலால், அவ்வெஃகிய செல்வமானது அபகரித்தானாகிய இவனுக்கும் உதவாமற்போம் என்பது அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் சுருங்கிய செல்வமுடையனாய்த் தன் செல்வம் பெருக வேண்டுமென்றெண்ணி அயலவர் பொருளையும் சேர்த்துக் கொள்ளுவானாயின், தொகையிற்பெருகி அதனாலே மேலான தகுதியை யடைவானே யன்றித் தனக்கு இயல்பாகவுள்ள சிறியதோர் செல்வத்தால் அவன் எவ்விதம் மேலாகிய தகுதியை யடைவது ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

178. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(பரி.) இ-ள். செல்வத்திற்கு அஃகாமை யாதெனின்=சுருங்கன்மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவன் ஆராயின்,—பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை=அது பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம். எ-று.

அஃகாமை—ஆகுபெயர். வெஃகாதான் செல்வம் அஃகாது என்பதாயிற்று.

விளக்கம் :—இத்திருக்குறளால் எக்காலத்தும் சுருங்கி விடுவதாகிய இயற்கையையுடைய செல்வத்தினைச் சுருங்காது வைத்துக் கொள்ளவேண்டுமாயின், அதற்குக் காரணமாக இருப்பது அயலவன் பொருளைத் தான் அபகரிக்கக் கருதாமையே யாகும். ஆதலால், அயலவர் பொருளை யபகரிக்கக் கருதுவதால் தனக்கு உள்ள செல்வத்தையும் போக்கி வறுமை யடைதற்கே காரண

மாகின்றது என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஈதென்னை? ஒரு பொருளோடு மற்றொரு பொருள் சேருமாயின், தொகையிற் பெருகுவதேயன்றி உள்ள பொருளும் எவ்வாறு இல்லாமற்போம்?" என்று ஐயுறலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

179. அறனறிந் தெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

(பரி.) இ-ள். அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்=இஃது அறனென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை—திரு திறன் அறிந்து ஆங்கே சேரும்=திருமகள் தானடைதற்காங் கூற்றினையறிந்து அக்கூற்றானே சென்றடையும். எ-று.

அடைதற்காங்கூறு:—காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. (இவையிரண்டுபாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது.) (கூ)

விளக்கம்:—இத்திருக்குறளால் பிறர் பொருளை விரும்பாத அறிவுடைமையே தருமம் ஆகுமென்று அறிந்த நடுநிலையுடையோரைச் செல்வத்துக்குத் தலைவியாகிய திருமகள் அவ்வித அறச்செய்கையுடையோரை எக்காலத்துத் தான்போய்ச்சேர்ந்து அவரிடத்தே இருக்கக்கூடுமென்று அவரது காலத்தையும் இடத்தையும் முகமலர்ச்சி முதலாகிய மகிழ்ச்சியினையும் பார்த்து அவரைப் போய்ச் சேர்ந்து விடுவாள் என்று அறிகின்றோமாதலால், இவ்வெஃகாமை யென்னும் அறத்தை யொருவன் கைக்கொள்ளுவானாயின், அவனது செல்வமானது பல மடங்கு அதிகமாகுமென்றும், அவ்விதங் கொள்ளாதான் இடத்து உள்ள செல்வம் போதற்கு முன்னரே இருந்த திருமகள் விலகி விடுவாளென்றும் கண்டோம். இக்கருத்துப் பற்றியன்றே அடக்கமுடைமையினுள்ளும்,

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து" *

என்று மன அடக்கத்தைக் கூறவந்தவர், மன அடக்கமுடையவன்

"முன்னிய பல்பொருள்வெஃகுஞ் சிறுமை" யென்றார் பிறரும்.

* திருக்குறள்—130.

செவ்வியை அறக்கடவுள் பார்ப்பான் என்று ஆண்டும் கூறிப் போந்தனரென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிறன் பொருளை வெஃகுவதால் ஒருவனுக்கு இருந்த செல்வம் போய்விடுவதுடன் அச் செல்வத்தின் பயனாகிய புகழையும் இழந்து இம்மைப்பயனை இழப்பான் என்று அறிந்தோம். ஆயின், இவ்வித தகுதியுடையானுக்கு இன்னும் ஏதேனும் தீங்கு உளதாமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 180. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
## வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(பரி.) இ-ள். எண்ணாது வெஃகின் இறல் ஈனும் = பின்விளைவது அறியாது ஒருவன் பிறன்பொருளை வெளவக்கருதின் அக்கருத்து அவனுக்கு இறுதியைப் பயக்கும்;—வேண்டாமை யென்னும் செருக்கு விறல் ஈனும் = அப்பொருளை வேண்டாமை யென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும். எ-று.

பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனும்' என்றும், அப்பொருளை வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் 'விறலீனும்' என்றுங் கூறினர். செருக்கு—ஆகுபெயர்.* (இதனால் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.) (௰)

விளக்கம்:—ஒருவன் அயலவன் பொருளை அபகரிக்க எண்ணுவானாயின், அவ்வெண்ணிய வெண்ணமானது அவ்வெண்ணிய அவனுக்கு இறுதியைப் பயந்து விடுமேயன்றி வேறொன்றும் பயவாது. ஆயின், அயலவன் பொருளை வேண்டாமை என்னும் அவ்வெண்ணமாகிய செல்வமானது, பொருள் ஒன்றையே கருதி இராப்பகலாக உலகத்து உழன்று திரியும் கீழ்மக்கள் யாவரையும் வெற்றி கொள்ளக்கூடிய தகுதியை ஒருவனுக்குப் பயக்கும். ஏனெனின்? அயலவர் பொருளை அபகரிக்குங்கால் பொருள் உடையானது பகையினை யடைதலால், அவன் என்றேனும் இறத்தற்கு ஏதுவாமென்றும், அறத்திற்கு மாறாகிய பாவத்தைச் செய்வதால் மறுமைப் பயனையும் இழப்பான் என்றும் இத்திருக்குறளால் அறிந்

* செருக்கு—காரிய வாகுபெயர்.

தோம் என்று கூறினர். அதுகேட்ட மாணக்கர், "பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை என்னும் இம்மூன்றால் மனக்குற்றம் ஈதென்றும், அது அடக்கும் முறை ஈதென்றும், அடக்கினார்க்கு வரும் பயன் ஈதென்றும், அடக்காதார்க்கு வரும் பயனின்மை யீதென்றும் நன்றாகவறிந்தோம். இனி மிகுந்து நின்ற வாக்கடக்கத்தையும் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் புறங்கூறாமை என்னும் அதிகாரத்தைக் கூறுவாராயினர்.

---

## 19. அதிகாரம்.

---

### புறங்கூறாமை.

(பரி.) அஃதாவது காணாதவழிப் பிறரையிகழ்ந்துரையாமை. மொழிக் குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது அழுக்காறாமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:- அதாவது ஒருவனைக்காணாத இடத்தில் அவனை இகழ்ந்து சொல்லாமை. இவ்விதம் இகழ்ந்து சொல்லும் குற்றம் மனக்குற்றத்தை முதலாகக் கொண்டு வருவதால், மேற்கூறியபடி மன அடக்கத்திற்கு உரித்தாகிய அழுக்காறாமை வெஃகாமை என்னும் இவ்விரண்டதிகாரங்களுக்குப் பிறகு இவ்வதிகாரம் வைக்கப் பட்டுள்ளது.

181. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

(பரி.) இ-ள். ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும்=ஒருவன் அற னென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—புறங் கூறான் என்றல் இனிது=பிறனைப் புறங்கூறானென்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று. எ-று.

புறங்கூறாமை அக்குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத்தோன்று மென்பதாம். (இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.) (க)

விளக்கம் :—இத்திருக்குறளால் ஒருவன் தருமம் என்பதை வாயால் சொல்லுவதும் செய்யாது பாவங்களைச்செய்து கொண்டே

யிருப்பானாயினும் பிறனைக்காணாத இடத்தே அவனை இகழ்ந்து சொல்லுதல் ஒன்றினை மாத்திரம் செய்யாதிருப்பானாயின், அவனை உலகத்தார் யாவரும் மிக உயர்வாக மதிப்பர் என்றும், ஆயின் அக் குற்றம் ஒன்றினை மாத்திரம் உடையவனாயின் அவன் செய்யும் ஏனைய அறங்களெல்லாம் பயன்படா என்றும், ஆகவே புறங்கூறாமை என்னும் அறம் அத்துணைப் பெரியதென்று அறிந்தோம் என்றும் கூறினார். அதுகேட்ட மாணாக்கர், "என்னை? ஒருவன் அறம் என்றும் சொல்லாது பாவங்களைச் செய்வானாயினும் புறங் கூறாதிருப்பானாயின் அவன் மிகச் சிறந்தான் என்று கூறினீர். அப்புறங்கூறுதல் அத்துணைத் தீமையுடையதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

182. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(பரி.) இ-ள். அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது—அறனென்பது ஒன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினுந் தீமையுடைத்து—புறன் அழீஇப் பொய்த்து நகை=ஒருவனைக் காணாதவழி இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனொடு பொய்த்து நகுதல். எ-று. (உ.)

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல்=ஒளி * யைக்கோறல்.

"மையேர்தடங்கண் மயிலன்னாய் சாயலே
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளை கடுஞ்சொல் பயனிலசொல் நான்கும்
மறலையின் வாயினவா மற்று"

என்றார் கணிமேதாவியார். அறன் எனவே அல்லவென்பது பாவத்தை யுணர்த்திய குறிப்பு வினைப்பெயர். என்றல் என்பதில் செயப்படுபொருண்மை விகுதி தொக்கு நின்றது.

"தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்குரைத்துப்
போக்குற்ற போழ்தில் புறனழீஇ மேன்மைக்கண்
நோக்கற்றவரைப் பழித்தலென் என்னானும்
மூக்கற்றதற்கில் பழி."

என்றார் மூன்றுறையரையர். அளபெடைகளிரண்டும் சொல்லிசைய. செய்தலின்—இன் உறழ்ச்சிப் பொருளில்வந்தது. * ஒளி=மதிப்பு.

விளக்கம் :---இத்திருக்குறளானது மேல் திருக்குறள் கூறிய தையே அநுவதித்துக் கூறுவதுபோல் ஒருவன் தருமம் என்பதே இல்லை என்று பலவிதமாகப்பலர்க்கு எடுத்துக்கூறி அக்கூறுத லோடு அமையாது அதன்மேலும் பாவங்களைச் செய்தலைக் காட்டி லும், ஒருவனைக்காணாத இடத்தே அவனை இகழ்ந்து சொல்லுதலும் அவனைக் கண்டவிடத்தே அவனோடு பொய்யாகச் சிரித்துப்பேசுத லும் தீமையுடையதாகும் என்று கூறியதாயிற்று. ஆதலால், புறங்கூறுதல் என்னும் இத்தீய பாவமானது எல்லாப்பாவங்களினும் கொடியதாகும் என்றெடுத்துக் கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "என்னை ? எதற்காக ஒருவனைக் கண்டவிடத்துப் பொய்யாகச் சிரித் துப் பேசுதல் வேண்டும்? காணாத விடத்து இகழ்ந்து உரைக்கின்ற துர்க்குண முடையானாகிய இவன் கண்டவிடத்து ஏன் புகழ்கின் றான்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(பரி.) இ-ள். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் = பிறனைக் காணாதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கு இனியனாகப் பொய்த்து ஒருவன் உயிர்வாழ்தலின்,—சாதல் அறம்கூறும் ஆக்கம் தரும் = அது செய் யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும். எ-று.

பின் புறங்கூறிப் பொய்த்தல் ஒழிதலின், 'சாதல் ஆக்கந்தரும்' என் றார். ஆக்கம்* = அஃதொழிந்தார்† மறுமைக்கண் எய்தும்பயன். அறம்‡— ஆகுபெயர். § தருமென்பது இடவழுவமைதி. (௩)

---

*ஆக்கம்–இஃதாகுபெயராய் மறுமைக்கணெய்தும்பயனை யுணர்த்தி நின் றது. † அஃது = புறங்கூறுதல், அஃதொழிந்தார் = புறங்கூறுதலை நீங்கி னோர். ‡ அறம்—அது கூறும் நூலை யுணர்த்தினமையின் குணவாகு பெயர்.

§ "செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும், நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்று, மம் மூவிடத்து முரியவென்ப" என்றும், "அவற்றுட் டருசொல் வருசொலாயி ருகிளவியுந் தன்மை முன்னிலை யாயீரிடத்த" என்றும், "ஏனையிரண்டும் படர்க்கை யிடத்த" என்றும் தொல்காப்பியத்துக் கிளவியாக்கத்தில் கூறிய வண்ணம், தன்மையிடத்திற்குரிய 'தரும்' என்னும்சொல் படர்க்கை யிடத்தைப் பெற்று வழுவமைதி யாயிற்று.

விளக்கம் :—இத்திருக்குறள் ஒருவன் பிறனைக்காணாத இடத்தே இகழ்ந்து சொல்லிக் கண்ட இடத்தே அவனுக்கு இனிமையுடையவன்போல் பொய்யாக நடித்து உயிர் வாழ்தலைக்காட்டிலும், அவ்வித பொய்யொழுக்கத்தைச் செய்யாது இறந்துபோதல் அவனுக்கு அறநெறிகளால் புகழ்ந்து சொல்லும் மறுமைப் பயனைக் கொடுக்கும் என்று கூறுகின்றது. ஆதலால், எதிரே கண்ட காலத்தே ஒருவன் பொய்த்துப் புகழ்வது அவனிடத்தே ஏதேனும் பொருள் பெற்று உயிர் வாழலாம் என்று கருதியதேயாகும் என அறிந்தோம். அவ்வித தகுதியற்ற காரியத்தைச் செய்து உயிர் வாழ்ந்து பாவத்தையும் பழியையும் அடைவதைக் காட்டிலும் உயிர் வாழ எண்ணாது இறந்து விடுவானாயின் பழியும் பாபமும் செய்வதற்கு இல்லாமற்போம். எப்போது பழியும் பாபமும் தேடாது இறக்கின்றானோ புண்ணியத்தை யடைந்தவனாய் மறுமைப்பயனையும் அடைவதற்குத் தக்கவனாகின்றான் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "புறங்கூறுதல் ஆகாது என்றீர். ஒருவன் எதிர் நின்று அவன் பழியைக் கூறுதலாகுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்
முன்னின்று பின்னோக்காச் சொல். [லற்க

(பரி.) இ-ள். கண்* நின்று கண் அறச் சொல்லினும்†=ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னானாயினும்,—முன்‡ இன்று பின்¶ நோக்காச் சொல் சொல்லற்க=அவனெதிரின்றிப் பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக. எ-று.

பின்—ஆகுபெயர். சொல்வான்றொழில் சொல்மேலேற்றப்பட்டது.$ (இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.) (௪)

* கண்—இடப்பொது எனினும், ஈண்டு முன்னிடத்தை யுணர்த்திற்று. † சொல்லினும் என்றமையால் எதிரிலிருந்தும் நல்லோர் தாட்சண்ய மற்றக் கூறார் என்பது பெறப்பட்டது; என்? "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்." ‡ முன் என்பது இடத்தையும், ¶ பின் என்பது காலத்தையும் உணர்த்திய இடைச்சொற்கள். $ சொல்லுவான் தொழில் சொன் மேலேற்றப்பட்டது இலக்கணை வழக்கு.

விளக்கம்:—ஒருவன் எதிரில் நின்று சிறிதும் தாட்சண்யமில்லாமல் அவன் பழிகளையெல்லாம் எடுத்துச் சொல்ல ஒருவன் எண்ணுவானாயின் அவ்வாறு சொல்லுதல் அமையுமென்றும், ஆனால், ஒருவன் எதிரில் இல்லாதபோது அவனை இகழ்ந்து சொல்லுதல் என்னும் புறங்கூறுதலை அவன் செய்யாதிருக்கக் கடவன் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நீங்கள் வினவியபடி எதிரில் நின்று சொல்வது அத்துணைப் பாபமில்லை யென்றும், புறத்துக் கூறுவதே மிகப்பெரியதோர் கொடுமையுடையதென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஐய! இவ்வித புறங்கூறுதல் என்னும் தகுதியற்ற செய்கையானது தகுதியில்லாதாரிடத்து உண்டாவதுமிக்க இயல்பேயாம். ஆயின், எக்காலத்தும் அறத்தையே எண்ணியும் அறத்தையே கூறியும் வருகின்ற சிலர் புறங்கூறுவாராயின், அவர் மனம் குற்றமுடையதா அல்லது குணமுடையதா என்று அறிய விரும்புகின்றோம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

185. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(பரி.) இ-ள். அறம் சொல்லும் நெஞ்சத்தான்* அன்மை=புறஞ்சொல்லுவானொருவன் அறனை நன்றென்று சொல்லினும், அது தன்மனத்தானாய்ச் சொல்லுகின்றான் அல்லனென்பது—புறஞ் சொல்லும் புன்மையால் காணப்படும்=அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும். எ-று.

மனம் தீதாகலின், அச்சொற் கொள்ளப்படா தென்பதாம். (ரு)

விளக்கம்:—நீங்கள் மேல் வினவிய வினாவிற்கு இத்திருக்குறள் போந்த விடையளித்ததாயிற்று. என்னையெனின்? புறஞ்சொல்லும் இழி குணமுடையானொருவன் அறம் செய்தல் மிக நன்றென்று வாக்காற் சொன்னானாயினும், அது அவன் மனத்தோடு பொருந்தச் சொல்லினானல்லன். ஏனெனின்? அவ்விதம் புறம் சொல்

* அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதனை நெஞ்சோடறஞ் சொல்வானென விகுதி பிரித்துக் கூட்டுவர் பிரயோக விவேக நூலாசிரியர்.

லுதற்குக் காரணமாக நிற்பது அவன் மனத்திலுள்ள புன்மையே யாம். ஆதலால், மனத்தூய்மையில்லாது தீமையாகிய புறங்கூறுதலைச் சொல்லுவோனுடைய வாய்ச்சொற்களை ஒருவன் கொள்ளக் கூடாது. ஏனெனின்? புறங்கூற்றுப் பெரியார் யாவராலும் கடியப் பட்டதாகலான் பெரியாரிவை கூறார். அவ்வாறு பெரியார்போல் நடித்துக் கூறினும் புறங் கூறுவான் வாக்கே அதைப் பறையறைந் தாலொப்ப அறிவிக்கும் என்பது போந்த பொருளாயிற்று. பெரி யாரிச்சொல் கூறார் என்பதைப்பின் வரும் ஏலாதிச் செய்யுளாலறிக.

"கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர் பொருண்மேல்
செல்லான் சிறியாரினஞ் சேரான்---சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க்கிவை."

அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் புறங்கூறுவதே தொழிலா கக் கொண்ட தீமையாளரைப் புறங்கூறப்படுவதற்கு இடனாக இருந்தவர்கள் ஏதேனும் செய்வரோ?" என்னலும், ஆசிரியர் கூறு வாராயினர்.

186. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

(பரி.) இ-ள். பிறன் பழி * கூறுவான்=பிறனொருவன் பழியை அவன் புறத்துக் கூறுமவன்---தன்பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும்=தன் பழி பலவற்றுள்ளும் உளையும் திறமுடையவற்றைத் தெரிந்து அவனாற் கூறப்படும். எ-று.

புறத்தென்பது அதிகாரத்தாற்பெற்றாம். இது வருகின்றவற்றிற்கும் ஒக்கும். † திறன்---ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக் கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையும் திறத்தனவாகிய பழி களை நாடி எதிரே கூறுமாகலின், 'திறன்தெரிந்து கூறப்படும்' என்றார்.(சு)

---

இத்திருக்குறளின் உரையில் புறத்து என ஒரு சொல்வருவித் துரைத் தது அதிகாரத்தால் கொள்ளப்பட்டது. * பழி முதனிலைத் தொழிலாகு பெயராய்ப் பழிக்கப்படுஞ் சொற்களை யுணர்த்தி நின்றது. † திறன் வலிமை யுற்ற சொற்களை யுணர்த்தி ஆகு பெயராயிற்று.

விளக்கம் :—இத்திருக்குறள் மற்றொருவன் பழியை எவனேனுமொருவன் எடுத்துச் சொல்லுவானாயின், சொல்லியவனிடத்தே உள்ள குற்றங்களையெல்லாம் ஒவ்வொன்றாக நன்காராய்ந்து அவற்றுள்ளே மிகுதியும் பழிக்கக் கூடியவற்றை பழிக்கப்பட்டான் தன்னைத் தெரிந்து பழித்தவன் புறத்திற் சொல்லாது எதிரில் நின்று அவன் இறந்துபடுகின்ற காலம் வரையில் சொல்லுவான் என்று கூறுகின்றது. ஆதலால், எவனொருவனும் பிறனைப்பழித்துப் புறங்கூறுதலாகாது என்று அறிந்தோம் என்னலும், மாணாக்கர், "இவ்விதம் புறங்கூறுதல் சுற்றத்தவரிடத்தும் செய்வரோ?" என்று கேட்க, ஆசிரியர் கூறுவாராயினர்.

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

(பரி.) இ-ள். பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்=தம்மைவிட்டு நீங்குமாற்றாற் புறங்கூறித் தம்கேளிரையும் பிரியப்பண்ணுவர்—நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர்=கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதார். எ-று.

சிறப்பும்மை * விகாரத்தால் தொக்கது. கேளிரையும் பிரிப்பர் என்ற கருத்தான், அயலாரோடும் என்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல்=தமக்குறுதியென்று அறிதல். "கடியு—மிடந்தேற்றாள் சோர்ந்தனள்கை"† என்புழிப்போலத் தேற்றாமை தன்வினையாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து. (எ)

விளக்கம் :—ஒருவரோடொருவர் கூடிக்களித்து இனிய சொற்களைச் சொல்ல அறியாதவர் எவரும் தம்மைவிட்டு நீங்கும்படிப் புறங்கூறித் தம்முடைய சுற்றத்தவரையும் பிரியச் செய்வர் என்று இத்திருக்குறளால் அறிகின்றோம். ஆதலால், புறங்கூறுபவர்க்கு யாவரும் நட்பினராக இல்லாது பகைவராகவே இருப்ப

பக என்னும் எச்சம் காரணப்பொருட்டு. * கேளிர் என்பதில் உயர்வு சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. † கலித்தொகை, மருதம்—27. தேற்றாதவர் என்பது அறியாதவர் எனப் பொருள் படலால், ஈண்டு பிறவினை தன்வினைப் பொருள்பட நின்றது, இதனைத் "தன்வினை பிறவினை யிவ்விருவினைப் பொது" என்னும் இலக்கணக் கொத்துரையிற் காண்க.

றென்பது கண்டோம் என்னலும், மாணாக்கர், "உறவினர் குற்றத்தை அழுக்காற்றால் எடுத்துத் தூற்றுவது இயல்பாக விருப்பினும், அயலவர் குற்றத்தை எதற்காக எடுத்துத் தூற்றுதல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

188. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(பரி.) இ-ள். துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்=தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றும் இயல்பினையுடையார்—ஏதிலார்மாட்டு என்னைகொல்=அயலார்மாட்டுச்செய்வது யாதுகொல்லோ!

தூற்றுதல்=பலரும் அறியப் பரப்புதல்* அதனிற்கொடியது பிறிதொன்று காணாமையின், 'என்னைகொல்' என்றார். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென் றுரைப்பாரு முளர். (அ)

விளக்கம்:—தம்மோடு மிக நெருங்கிய சுற்றத்தவருடைய குற்றத்தையும் அவர் புறத்து எடுத்துத் தூற்றும் இயற்கைக் குணமுடையார் அயலவரிடத்துக் குற்றங் கண்டு தூற்றாது இருப்பதில்லையென்று இத்திருக்குறள் கூறியதாயிற்று என்றனர். இது கேட்ட மாணாக்கர், "அவ்வித தகுதியுடைய மக்களை உலகம் எவ்விதம் எண்ணும் என்பதைக்கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

189. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(பரி.) இ-ள். புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை=பிறர் நீங்கினவளவுபார்த்து அவர் பழித்துரையை உரைப்பானது உடற்பாரத்தை—வையம் அறன்நோக்கி ஆற்றுங்கொல்=நிலம் இக்கொடியது பொறுத்தலே எனக்கு அறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும். எ-று.

---

* தூற்றுதல்=பலரறியக் கூறுதல்; "தூற்றும் பெண்டிற் கூற்றெனத் தகும்" என்பதாலறிக. இத்திருக்குறள் கைமித்திக நியாயத்தது.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரி தென்னுங் கருத்தால், 'அறனோக்கி யாற்றுங்கொல்' என்றார்* (இவை யைந்து பாட்டானும் புறங்கூறுவார்க்கு எய்துங்குற்றம் கூறப்பட்டது.) (௯)

விளக்கம் :—இத்திருக்குறள் இவ்விதம் பிறனது பழியை அவன் இல்லாத இடத்து எடுத்துத் தூற்றுகின்ற இழிகுண முடைய ஒருவனது உடற்பாரத்தை எல்லாவற்றையும் பொறுக் கும் இயல்பினையுடைய பூமியும் இவ்விதகுற்றமுடைய உயிரினைத் தாங்கி நிற்கும் உடல் பாரத்தைத் தாங்குவதே தனக்குப் பெரிய தோர் அறமாகும் என்று கருதித் தாங்குகின்றது போலும் என்று கூறுவதால், இவ்வித தீமையாளனை தீமை கருதி நிலமுந் தாங்கமாட் டாது என்னில், அவனை உலகோர் எவ்விதம் மதிப்பர் என்பது சொல்லாமலேயமையும். ஆதலால், புறங்கூறுவார் மிகுந்ததோர் குற்றமுடையோர் ஆவார் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித புறங்கூற்றினைச் செய்யாது தப்பித்துக் கொள்வதற்கு யாதோர் உபாயமும் இல்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவா ராயினர்.

190. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(பரி.) இ-ள். ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்—†ஏதி லாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங்காணுமாறுபோலப் புறங் கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின்,—மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ—அவர் நிலைபேறுடைய உயிர்க்கு வருவதொரு துன்ப முண்டோ? எ-று.

---

* "புறநட்டகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை வெளியிட்டு வேறுதல் வேண்டும்" என்றார் பிறரும். இதனால் புறங்கூறுவானை அஃறிணையாய நில மும் தாங்காது எனவே பொறுத்தலியல்பால் பொறுக்கின்ற தென்பது கூறப்பட்டது.

† இதனால் ஏதிலார் குற்றத்தைப்போல் தன் குற்றத்தையும் நடுவுநின் றறிந்தானுக்கு அறமுண்டாம் என்பது கூறப்பட்டது. இவ்வாறே பிறரும் "பிறர் மறையின்கட் செவிடாய்த் திறனறிந்து, ஏதிலாரிற்கட் குருடனாய்த் தீய, புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும், அறங்கூறவேண்டா அவற்கு" என்று நாலடியாரிலும்,

"அறங்கூறு நாவென்ப நாவும் செவியும், புறங்கூற்றுக் கேளாத வென் பர்—பிறன்றாரத், தற்றத்தை நோக்காத கண்ணென்ப யார்மாட்டும், செற் றந்தைத் தீர்த்தா நெஞ்சு." என்றும் கூறியுள்ளதைக் காண்க.

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமை நோக்கிக் 'காண்கிற்பின்' என்றும், கண்டவழியொழிதலிற் பாவமின்றும்; ஆகவே, வரும் பிறவிகளினுந் துன்பமில்லையென்பது நோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' என்றுங் கூறினார். (இதனாற் புறங்கூற்று ஒழிதற்கு உபாயங் கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—நீங்கள் வினவியதாகிய உபாயத்தை இத்திருக்குறளே விளக்குவதாகும். என்னை? புறங்கூறுவதைத் தனக்குப் பொருளாகக் கொள்வான் அயலான் குற்றத்தை ஆராய்ந்து பார்ப்பதுபோலத் தன்னிடத்தே ஏதேனுங் குற்றமுள்ளதோ என்று முதலிலேயே நடுநிலையாக நின்று நோக்குவானாயின், இவனது குற்றம் இவனுக்கு முதலில் காணப்பட்டு இவ்விதமே உலகத்து யாவரும் குற்றமடைவதற்குக் காரணர்கள் ஆகின்றார்கள் என்று உணர்ந்து அயலவரிடத்துக் குற்றங்காணாது, கண்டாலும் புறங்கூறாது, நிற்பன். அன்றியும், புறங்கூறாது ஒழிவதற்கு இதனினும் வேறோர் உபாயம் காண்பதற்கில்லை என்று கூறலும், மாணாக்கர், "வாக்கின் குற்றமாகிய புறங்கூறுதல் இதுவென்றும், அதனால் வரும் பாவம் இதுவென்றும், அது ஒழிதற்கு உபாயம் இதுவென்றும் அறிந்தோம். இனி, வாக்கின் குற்றம் இன்னும் ஏதேனும் உள்ளதோ என்று அறியவும் ஆசைப்படுகின்றோம்" என்றனர். ஆசிரியர் இருபதாவது அதிகாரத்தை இயம்பலாயினர்.

---

## 20. அதிகாரம்.

## பயனில சொல்லாமை.

---

(பரி.) அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல்லெனவாக்கின்கண் நிகழும் பாவம் நான்கனுள், பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாரால் கடியப்படும் ஏனைமூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளை புறங்கூறாமையானும், விலக்கி, நின்ற பயனில் சொல் இதனான் விலக்குகின்றாராகலின், இது புறங்கூறாமையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அறப்பொருள், செல்வப்பொருள், இன்பப் பொருள் ஆகிய மூன்று பொருள்களுள், ஒருபொருளினது பயனை யும் தமக்கும் பிறர்க்கும் உதவாத சொற்களைச் சொல்லாதிருத்தலே பயனில சொல்லாமை என்று அறிந்தோம். அன்றியும், வாக்கில் உண்டாகும் பாவங்கள் நான்கென்ப. அவை பொய் சொல்லு தல், கோள் சொல்லுதல், கடுஞ்சொல் சொல்லுதல், பயனில்லாத சொல்லைச் சொல்லுதல் என்பனவாம். அவற்றுள், முதற்கூறிய பொய் என்பது யான் எனது என்னும் பற்றற்று மனத்துறவினை யடைந்த துறவிகளுக்கே நிச்சயமாக நீக்கக்கூடுமேயன்றி, அத்துற விகளல்லாத இல்லறத்தோரால் அப்பொய்யினைச் சொல்லாதிருக்க முடியாதென்றும், அப்பொய்யொழிந்த மற்றை மூன்று வாக்கின் குற்றங்களையே இல்லறத்தார் ஒழிக்கக்கூடுமென்றும், அம்மூன்ற னுள் குறளையென்னும் கோள் சொல்லுதலை புறங்கூறாமை யென் னும் அதிகாரத்தால் விலக்கி விட்டமையாலும், கடுஞ்சொல்லை இனியவைகூறல் என்னுமதிகாரத்தால் விலக்கியமையாலும், இவை இரண்டும் ஒழிந்துநின்ற பயனில் சொல் என்னும் வாக்கின் குற்றத் தை இவ்வதிகாரத்தால் விலக்குகின்றார் என்பதாயிற்று. இப்பய னில் சொல்லுதல் வாக்கின் குற்றமாகிய புறங்கூறுதலோடு சேர்ந்த தாகையால், அவ்வதிகாரத்தின்பின் இது வைக்கப்பட்டது என்ற னர். அதுகேட்ட மாணக்கர், "பயனில்லாத சொல்லைக்கூறின், அதனால் கேட்பவர்க்கு என்ன தீங்கு உண்டாகும்? யாதொரு தீங்கும் காண்பதற்கில்லை ; ஆதலால், அதனை யொழிக்க வேண்டு மென்பதும் ஓர் நீதிதானோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர். *

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(பரி.) இ-ள். பல்லார் முனியப் பயனில சொல்லுவான்=அறிவுடை யார் பலருங்கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான் —எல்லாரும் எள்ளப்படும்=எல்லாராலும் இகழப்படும். எ-று.

---

இதனைக் "குடிப்பிறந்தார் கூறார் தம்வாயிற் சிதைந்து" என்னும் நாலடியாரால் அறிக.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப்படுதலின் 'எல்லாருமெள்ளப்படும்' என்றார். மூன்றனுருபு விகாரத்தால்தொக்கது.

விளக்கம்:—அறிவில்லாத ஒருவன் அறிவுடையவர் நடுவுள் சென்று ஏதேனும் பயனில்லாத சொற்களைப் பேசுவானாயின், அவைகளைக்கேட்ட அறிவுடையவர், அவனது அறிவில்லாமைக்கு அவனை இகழ்வார்கள் என்றும், அறிவுடையவர்கள் பலர் வெறுத்து இகழ்கின்றதைக் கண்ட அறிவில்லாத மக்களும் அவனை இகழ முயல்வார்கள் என்றும் இத்திருக்குறளால் அறிந்தோம். ஆதலால், பயனில்லாத சொல் பலர்க்கும் வெறுப்பினை யுண்டு பண்ணுமென்றும், அதனைக்கூறியவன் இகழப்படுவானென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்ற ஒருவனுக்கு இகழற்பாடு ஒன்றுதான் உண்டாகுமோ? அன்றியும், அவ்வித இகழற்பாடு எவ்வித தகுதியுடையதாக விருக்கும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

192. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(பரி.) இ-ள். பயன் இல பல்லார்†முன்‡ சொல்லல்*=பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல்—நயன் இல நட்டார்கண் செய்தலின்$ தீது=விருப்பமிலவாகிய செயல்களைத்தன் நட்டார் மாட்டுச் செய்தலினும் தீது. எ-று.

---

*செயலினும் சொல்லுதல் வலிமையுடைத் தென்பார் சொல் என்றார். †பல்லார் என்றது இங்கு அறிவுடையோரை; என்னெனின்?

"நஞ்சுடைமை தானறிந்து நாகங்கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக்கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத்தவர்"

என்று நமது மூதாட்டி அருளிய மூதுரைச்செய்யுளால் அவரேயொருங்கு கூடிவாழ்வோர்;ஏனையோர் அவ்வாறு கூடிவாழார் என்று அறியப்படும்.

‡முன்—ஈண்டு இடங்குறித்து நின்றது. சில என்பது செயலைக்குறித்த குறிப்பு மொழி.$ இன்னுருபு உறழ் பொருளது.

விருப்பமில=வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக இகழற்பாடு பயக்கும் என்பதாம். (உ)

விளக்கம்:—பயனில்லாத சொற்களை ஒருவன் அறிவுடையவரிடத்தே சென்று அவர் முன்பு நின்று சொல்லுதல் எவ்வித தகுதியுடையதாகு மெனின்? ஒருவன் தன் நட்பினரிடத்துச் சென்று அவர்கள் விரும்பாத செயல்களை யெல்லாம் செய்வானாயின் அவர்களுக்கு எவ்வித விருப்பம் அவனிடத்தே தோன்றுமோ அதைக் காட்டிலும் மிகக் கொடுமைபாகவே இருக்கும். அதாவது, அறிவுடையவர் அவனை இகழ்வார்கள் என்று அறிந்தோம். ஆதலால், ஒருவன் எக்காலத்தும் பயனில்லாத வார்த்தைகளைச் சொல்லுதலாகாது என்றனர். மாணாக்கர், "ஒருவன் நீதியாளனாகவிருந்து அறியாமை மிகுதியால் பயனில்லாத சொற்களைச் சொல்லுவானாயின், அவனை எவ்வாறு அறிவுடையோர் பழித்தல் கூடும்?" என்றுகேட்டலும், ஆசிரியர் இயம்பலாயினர்.

193. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(பரி.) இ-ள். பயன் இல பாரித்து உரைக்கும் உரை=பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கும் உரைதானே—நயன் இலன் என்பது சொல்லும்=இவன் நீதியிலன் என்பதனை உரைக்கும். எ-று.

உரையால் இவன் நயனிலனென்பது அறியலாமென்பார், அதனை உரைமேலேற்றி 'உரைசொல்லும்' என்றார்.* (௩)

விளக்கம்:—ஒரு பயனுமில்லாத சொற்களை மிகப்பயன் தரும் சொற்களென்று எண்ணி, அச்சொற்களை எவனொருவன் விரித்து உரைக்கின்றானோ, அச்செயலே சொல்லிய அவனை நீதி

*இதனை "வடுச்சொல் நயமில்லார் வாய்த் தோன்றும் கற்றார் வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச் சொல்—தீய
பரப்புச் சொற்சான்றார் வாய்த் தோன்றாகரப்புச் சொல்
கீழ்கள்வாய்த் தோன்றிவிடும்"

என்னும் நான் மணிக்கடிகையாலறிக.

யில்லாதவன் என்று எடுத்துக்காட்டுமென்று இத்திருக்குறள் கூறுகின்றமையால், நீதியுடையவனாயின் பயனில சொல்லான் என்பது கூறியதாயிற்று என்றனர். கேட்டமாணாக்கர், "இவ்விதம் நீதியில்லாதவன் என்று எண்ணுவதால் அவன் எவ்வித தகுதியுடையவனாய் உலகத்து வாழ்வான்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

194. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
 பண்பில்சொற் பல்லா ரகத்து.

(பரி.) இ-ள். பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து = பயனொடு படாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின், —நயன் சாரா* நன்மையின்† நீக்கும்‡ = அவை அவர்மாட்டு நீதியொடுபடாவாய், அவனை நற்குணங்களினீக்கும். எ-று.

பண்பு = இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயினென்பதும், அவர்மாட்டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன. (ச)

விளக்கம்:—ஒருவன் இனிமைப்பண்பும் மெய்ம்மையும் ஆகிய சொற்குணங்கள் உடையவனாயிருப்பினும், அறிவுடையார் கூடியுள்ள அவையின்கண் சென்று பயன்படாத சொற்களைச் சொல்லுவானாயின், அச்சொற்கள் நீதியோடு சேராதனவாய் நிற்பதோடு அவன் அடைந்திருந்த சொற்குணங்களினின்றும் அவனை நீக்கி விடும் என்று இத்திருக்குறளால் அறிகின்றோமாதலால், ஒருவன் பயனில் சொல்லுவதால் அவனுக்கு உரிய நற்குணங்களும் அவனை விட்டு விலகிப்போய் விடுவதாகும் என்று கூறினர். இதுகேட்ட மாணாக்கர், "என்னை? இனிமைப்பண்பு முதலாகிய நற்குண

---

இதனை "புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின்றுணர் கிற்பார்
வன்சொல் வழியரா வாழ்தலு முண்டாமோ
புன்சொல் விடர்ப்படுப்ப தல்லா லொருவனை
இன்சொல் விடர்ப்படுப்ப தில்." என்னும் பழமொழியாலறிக.

*நன்மை—பண்பாகு பெயராய்ச்சொற்களை யுணர்த்தியது.‡ சொல்லுவான் வினை† நீக்குமெனச் சொல் மேலேற்றப்பட்டது.

முடையார் பயனில் சொல்லுவதினாலேயே எவ்விதம் இகழப்படுவர் ?'' என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(பரி.) இ-ள். பயன் இல நீர்மையுடையார் சொலின்=பயனிலவாகிய சொற்களை இனியநீர்மையுடையார் சொல்லுவாராயின்,—சீர்மை சிறப்பொடு† நீங்கும்=அவரது விழுப்பமும் அதனால்வரும் நன்கு மதிக்கற்பாடும் உடனே நீங்கும். எ-று.

நீர்மை*=நீரின்தன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று. (ரு)

விளக்கம்:— ஒருவன் இனிமைப்பண்பு உடைய சொற்களைச் சொல்லுகின்றவனாயின், மறந்தும் பயனில்லாத சொற்களைச் சொல்ல மாட்டானென்றும், அவ்விதம் சொல்லுவானாயின் கேட்ட அறிவுடையோர் இவன் நற்குண முடையனாயின் இவ்விதம் பழிக்கக்கூடிய பயனற்ற சொற்களைச் சொல்லமாட்டான் என்று இகழ்வார் என்றமையால் இனிய நீர்மையுடையானொருவன் பயனில்லாத சொற்களைச் சொல்ல மாட்டானென்றும், ஒருவேளை தவறிச் சொல்லுவானாயின் இதற்கு முன்னர் அவனுக்கு இருந்த பெருமையும் நன்மதிப்பும் அவனை விட்டு நீங்கி விடும் என்றும் இத்திருக்குறளால் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "அவ்விதம் பயனில்லாத சொல்லைச் சொல்லுபவனை உலகம் எவ்விதம் மதிக்கும்?'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

196. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(பரி.) இ-ள். பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்=பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க ;—மக்கட்பதடி எனல்=மக்களுட் பதரென்று சொல்லுக. எ-று.

---

இதனை "நாவன்றோ நட்பறுக்குங் கூற்றம்'' என்பதாலறிக.† ஒடு எண்ணின்கண் வந்தது. * நீர்மை=மனத்திட்பம்.

அல் விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், * 'மக்கட்பதடி' என்றார். (இவை ஆறுபாட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—பயனில்லாத சொற்களை ஒருவன் விரும்பி பன்முறை சொல்லத் தொடங்குவனாயின், அவ்விதம் சொல்பவனை மகனென்று சொல்லுதல் கூடாது என்றும், மக்களுள்ளே இவன் பதர்போல்பவனாய் இருக்கின்றானாதலால் இவனை மக்களிலே பதரென்று சொல்லவேண்டும் என்றும் அறிந்தோம். இவ்வுவமையால், நெல்லோடு தோன்றிய பதரானது அரிசியாகிய உள்ளீடு இல்லாமையால் எவ்வாறு பதரென்று அழைக்கப்படுகின்றதோ அது போல், மக்களுள்ளே ஒத்த உருவினனாயிருந்தும் உள்ளீடாகிய அறிவு இல்லாமையால் பயனில் சொற்களைச் சொல்லுகின்ற இவனை மக்களில் பதரென்று உலகம் மதிக்கும் என்பது இத்திருக்குறளால் கூறியதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் பயனில்லாத சொற்களைச் சொல்லுபவனை உலகம் இழித்துக் கூறும் என்றீர். ஆயின், இம்மைப் பயனைப் பயப்பதாகிய நீதி யொன்றுங் கூறாத பலரைக்காட்டிலும் இப்பயனில்சொல் சொல்லுகின்றவர்கள் தாழ்ந்தவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

197. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(பரி.) இ-ள். நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக—நீதியொடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்;—பயன் இல சொல்லாமை நன்று—அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், அது நன்று. எ-று.

சொல்லினுமெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீயவென்பதாம். (எ)

* உள்ளீடு—உள்ளிடுதல்; அதாவது உள்ளிருக்க வேண்டிய பயன். இது கூட்டிப் பிரித்தல்.

விளக்கம்:—நீங்கள் வினவியதற்கு விடையாகவே இத்திருக்குறள், ஒருவன் பயனில்லாத விஷயத்தைச் சொல்லுவதைக் காட்டிலும் நீதியோடு சேராத சொற்களைச் சொல்லுவது, அத்துணைத் தீமையுடையது அல்லவென்றும், சான்றோராயுள்ளவர்கள் நீதியோடு சாராத சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்றும், அவ்விதம் சொன்னாராயினும் அதனால் உண்டாகும் தீமை பயனில் சொல்லுவதால் உண்டாவதைவிட அத்துணை அதிகமல்லவென்றும் கூறியதாயிற்று. ஆதலால், சான்றோராயுள்ளவர் பயனில் சொல் சொல்லாரென்பது பொருளாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சான்றோராயுள்ளவர் பயனில்சொல் சொல்லாதிருப்பதற்கு என்ன காரணம்?" என்று வினவலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

198. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(பரி.) இ-ள். அரும்பயன் ஆயும் அறிவினார்*—அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார்†—பெரும்பயன்‡ இல்லாத சொல் சொல்லார்—மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார். எ-று.

அறிதற்கரிய பயன்களாவன:—வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாத எனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன. (அ)

விளக்கம்:—சான்றோராயுள்ளவர் எக்காலத்தும் பிறரால் அறிதற்கு அரிய பயன்களாகிய வீடுபேற்றினையும் மேற்கதிச் செலவு முதலியவற்றினையும் ஆராய்வதே தமக்கு உயிர்வாழ்க்கையாக உடையவர் ஆதலால், அவ்வித தகுதி யுடையார் சிறுபயனுடைய சொற்களைத் தமக்கும் பிறர்க்கும் யாதொரு பயனும் தருவதல்லவென்று எண்ணிச் சொல்லாது இருப்பார் என்று இத்திருக்

* அரும்பயன் ஆயும் அறிவினார்' எனவே இத்தகையாராய்ச்சி யுடையார் ஞானம்பெற இச்சையுடைய உண்மைநிலையுடையார் என்பதும், †'பெரும்பயன்' எனவே அஃது துறக்கவின்பமாகிய பெருநிலையைத் தரும் ஆராய்ச்சி யென்பதும் பெறப்பட்டன.

குறள் கூறியதாயிற்று. ஆதலால், சான்றோருடைய அறிவு பயனில் சொல்லுவார் அறிவைக் காட்டிலும் மிக்கது என்றும், அவ்வறிவு அவர்க்குப் பயன் தரும் சொற்களையே ஆராய இடந்தருகின்ற தென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதபோறிவுடையோர் தம்மை மறந்தும் ஒரு காலத்தும் பயனில் சொல் கூறுதல் இல்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

199. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

(பரி.) இ-ள். பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்=பயனி னீங்கிய சொற்களை மறந்துஞ் சொல்லார்—மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர்=மயக்கத்தினீங்கிய தூய அறிவினையுடையார். எ-று.

தூயவறிவு=மெய்யறிவு. மருடீர்ந்தவென்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புப்பெயர்கொண்டது. இவை மூன்றுபாட்டானும் பயனில சொல்லாமையின் குணங் கூறப்பட்டது.) (கூ)

விளக்கம்:—மக்காள்! நீங்கள் மேல் கொண்டதாகிய ஐயத்தை அறவே இத்திருக்குறள் ஒழித்தது அன்றோ? மயக்கத்தை யுண்டு பண்ணும் தமோகுணத்தின் நீங்கிய நல்லறிவினை யுடையார், எக்காலத்தும் வீடுபேற்றினையடையும் சொற்களையே எண்ணியும் சொல்லியும் நிற்கும் மனமும் வாக்கும் உடையராதலால், பழக்கமின்மையின் காரணத்தால் அவர்கள் மறந்தும் பயனில் சொற்களை மனத்தால் எண்ணவும் மாட்டார்கள் வாக்கால் பேசவும் மாட்டார்கள் என்பதே முடிந்த பொருளாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஐய! நாங்கள் வாக்கின் குற்றம் ஒழிவதற்குச் செய்ய வேண்டிய செயல் இதுவென்று முடிவாகக்கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் இயம்பலாயினர்.

உம்மை—சிறப்பின் கண்ணது. 'மாசறு காட்சியவர்' என்றதனானே பொருள் என்பது உண்மைப் பொருள் என்பது போதரும். மருளாவன:—காமம், வெகுளி, மயக்கம்.

200. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(பரி.) இ-ள். சொல்லின் பயனுடைய சொல்லுக=சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக;—சொல்லின் பயனிலாச்சொல் சொல்லற்க=சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக. எ-று.

சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின் வருநிலையென்னும் அணிநோக்கி வந்தது. "வைகலும் வைகல் வரக்கண்டும்" * என்பதுபோல, (இதனாற் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.)

விளக்கம் :—நீங்கள் வினவிய வினவிற்கு விடையளிப்பது போன்றே நம் தெய்வப்புலவர் இத்திருக்குறளைக் கூறுகின்றனர் என்பதில் ஐயமில்லை. என்னையோ வெனின்? ஒருவன் உலகத்து இம்மை மறுமைப்பயன்களை யடையவேண்டுமாயின், அதற்கு வேண்டுவனவாகிய சொற்களையே ஆராய்ந்து எக்காலத்தும் சொல்லுதல் வேண்டுமென்பதும், அவற்றிற்குமாறாகிய பழியையும் பாவத்தையும் தரும் பயனில்லாதசொற்களைச் சொல்லாதிருத்தல் வேண்டுமென்பதும் அறுதியிட்டுக் கூறியதாயிற்று. ஆதலால், நாம் வாக்கின் குற்றத்தை யொழித்தல் வேண்டுமாயின், இப்பயனில சொல்லாமையென்னும் அறத்தை உறுதியாகப்பற்றுதல் வேண்டும் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பயனில்சொல் இது வென்றும், அது சொல்லுவதால் வரும் தீமை இதுவென்றும், சொல்லாதிருப்பதால் வரும் நலம் இதுவென்றும் நன்றாக அறிந்து கொண்டோம். இவ்வண்ணமே மெய்யினிடத்தே உண்டாகும் தீச்செயல்கள் எவையேனும் உண்டாயின், அவற்றினையும் அறிவித்தலோடு

---

இது செய்க, இதுசெய்யா தொழிக என விதித்தலின், இத்திருக்குறள் விதித்தற் பொருளது.

* "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ் நாள் மேல் வைகுதல்
வைகலை வைத்துணராதார்"—நாலடியார், அறன் வலியுறுத்தல்.

அவற்றைத் தவிற்றற்கு என் செய்வது என்பதையும் கூறுதல் வேண்டும்'' என்றனர். ஆசிரியர் தீவினையச்சம் என்னும் இருபத்தோராவது அதிகாரத்தைக் கூறத்தொடங்கினர்.

## 21. அதிகாரம்.

## தீவினையச்சம்.

(பரி.) அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனான் மெய்யின்கண் நிகழும் பாவங்களெல்லாம் தொகுத்து விலக்குகின்றாராக லின், இதுபயனில சொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :--தீவினையச்சம் எனின் பாவங்களைச் செய்தற்குப் பயப்படுதல் என்பது பொருள். மேலே, வாக்கில் நிகழும் குற்றங்களை விளக்கிக்காட்டினாராதலால், இப்போது காயத்தால் நிகழும் பாவங்களையெல்லாம் ஒன்றாகத்தொகுத்து இவ்வதிகாரத்தால் விலக்குகின்றனர். அது கருதியே இவ்வதிகாரம் பயனில் சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது என்னலும், மாணாக்கர், "ஐய! தீவினைக்கு அஞ்சாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்களே? அவ்வாறிருக்க தீவினையச்சம் என்று கூறுவது எற்றிற்கு?'' என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

201. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(பரி.) இ-ள். தீவினையென்னும் செருக்கு=தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை—தீவினையார் அஞ்சார்=முன்செய்த தீவினையுடையார் அஞ்சார்,—விழுமியார் அஞ்சுவர்=அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர். எ-று.

தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையான் 'அஞ்சுவர்' என்றுங் கூறினர்.

விளக்கம்:— தீவினை யென்று சொல்லுகின்ற அறிவின் மயக்கமாகிய காரியத்தைப் பிறவிகள் தோறும் செய்து வந்த தீவினையுடையவரே அஞ்சாது அதைச் செய்வர் என்றும், ஆயின், தீவினை செய்யாது நல்வினையே செய்து தோன்றிய பெரியோர் அத்தீவினையைச் செய்வதற்கு அஞ்சுவார்களென்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. ஆதலால், முதலில் நாம் இத்திருக்குறளால் அறிந்துகொள்ள வேண்டுவது, பாபம் என்னும் காரியத்துக்கு உடன்படுபவரும் உடன்படுதலோடு அதனைச் சிறிதும் அஞ்சாது செய்வதும் உடையார் முற்பிறவிகளிலே தீவினை வயத்தராய்ப் பாபங்களைச் செய்து கைவந்தவர்களென்றும், தீவினை செய்யாதவர்கள் நல்வினையே மேற்கொண்டு தொன்று தொட்டு செய்து வந்தவர் என்றும் அறிவதுடன், தீவினை வயத்தராகிய தீவினையுடையார்க்கு எத்துணை அறங்களைக்கூறினும் அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது என்றும் இதனால் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணக்கர், "உலகத்து மக்கள் எதற்காகத் தீவினையைச் செய்கின்றார்? அவர்கள் அதற்கு ஏன் பயப்படவேண்டும்?" என்று வினவுதலும், ஆசிரியர் விடையளிப்பாராயினர்.

202. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(பரி.) இ-ள். தீயவை தீய பயத்தலால்=தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான்,— தீயவை தீயினும் அஞ்சப்படும்=அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும். எ-று.

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கின்மையின், தீயினுமஞ்சப்படுவதாயிற்று. (உ)

விளக்கம்:— ஒருவன் தனக்கு இன்பம் உண்டுபண்ணுதலை விரும்பிச் செய்கின்ற தீவினைகள் அப்போது இன்பம்போலக் காணப்படினும் பின்னர் அவனுக்குண்டாக்கிய இன்பத்தையொழித்துத் துன்பத்தையே மிகுதியும் பயக்குமென்றும், ஆத

லால் அவ்வித தீவினையைச் செய்பவன், செய்த தீவினைக்கு நெருப்பைக்காட்டிலும் அதிகமாகப் பயப்படல் வேண்டுமென்றும் இத் திருக்குறள் கூறுகின்றது. எனெனில்? ஒருவன் நெருங்கிய காலத்தில் மாத்திரமே தீயானது அணுகிய அவனைச் சுடுமேயன்றி, ஒருவன் செய்த தீவினையைப்போல் மற்றொரு காலத்தும் மற்றொரு தேசத்தும் மற்றோர் உடம்பிலும் சென்று சுடுந்தன்மைதீயினுக்கு இல்லாமையால், தீயைக்காட்டிலும் மிகுதியும் அஞ்சவேண்டுவதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அது எவ்விதம் மற்றோர் காலத்தும், மற்றோர் தேசத்தும், மற்றோர் உடம்பிலும் சென்று சுடும்? இதனை உவமையால் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறத்தொடங்கினார்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு."

என்று நாலடியாரில் பழவினை என்னும் அதிகாரத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பல பசுக்கள் நிறைந்த கூட்டத்தினுள் ஓர் புனிற்றிளங் கன்றை ஒருவன் விடுவானாயின், அக்கன்றானது தன் தாயினையே நாடிச்சென்று பற்றிக்கொள்வதுபோல், ஒருவன் செய்த பாபமும் அவனோடு சென்று மற்றோர் காலத்தும் மற்றோர் தேயத்தும் மற்றொருடம்பினும் பிடித்துக்கொள்ளும் என்பது ஆயிற்று. அன்றியும் இக்கருத்துப்பற்றியன்றோ சைவசித்தாந்த ஆசிரியராகிய மெய்கண்டாரும் தாமருளிய சிவஞான போதத்துள்,

"உள்ளதேதோற்ற உயிரணையும் அவ்வுடலில்
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்
செய்வன் செயலணையா சென்று"

என்று உடலினுள் முற்செய்வினை பிரியாது இருப்பதால் ஒருவன் செய்த நல்வினை தீவினைக்கு எற்றவளவாகவே உடலும் தோன்றும்

என்று கூறியுள்ளதால், தீயவை மற்றோர் காலத்தும் மற்றோர் தேயத்தும், மற்றோருடம்பினும் சென்று சுடும் என்பது நன்கு திண்ணமாகும். இதுகேட்ட மாணாக்கர், "தீவினை ஒன்றை ஒருவன் தனது நட்பினர்க்கோ நொதுமலர்க்கோ செய்யாது இருப்பது கூடும். ஆயினும், பகைவர்மாட்டு எவ்விதம் செய்யாதிருத்தல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறத்தொடங்கினர்.

## 203. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
## செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(பரி.) இ-ள். அறிவினுள் எல்லாம் தலை என்ப—தமக்குறுதி நாடும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர் —செறுவார்க்கும் தீயசெய்யா விடல்—தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதலை. எ-று.

விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விடுதல்' என்றும், செயத்தக்குழியுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதெனவுய்த்துணர்தலின் அதனை 'அறிவினுளெல்லாந்தலை' என்றுங் கூறினார். செய்யாதென்பது கடைக்குறைந்து நின்றது. (இவை மூன்றுபாட்டானும் தீவினைக்கஞ்ச வேண்டுமென்பது கூறப்பட்டது.) (௩)

விளக்கம்:—பகைவர்க்கும் தீவினைகளைச் செய்யாதிருத்தலே ஒருவனுக்கு அறிவுகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையாகிய அறிவென்றும், அவ்வறிவே இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றினையும் நாடும் உறுதிப்பொருளென்றும் இத்திருக்குறள் கூறுகின்றதாதலால், ஒருவன் தனக்குத் தீங்கு செய்தவழியும் தீங்கு செய்யப்பட்டவன், அவனுக்குத் தீங்கு செய்யாதிருப்பனாயின், செய்யாமையென்னும் பேரறிவாகிய அப்பெரிய அறத்தால் அவனுக்குயாதொரு துன்பமும் நிகழாது என்று அறிந்தோமாதலால், பகைவர்க்கும் தீயவினைகளைச்செய்யாது விடுதலே அறமாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தனக்குத் தீங்கு செய்த பகைவனுக்குத் தான் தீங்கு செய்யின் எவ்விதம் ஒருவன் துன்பத்தை யுடைதல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(பரி.) இ-ள். பிறன்கேடு மறந்தும் சூழற்க=ஒருவன் பிறனுக்குக் கேடுபயக்கும் வினையை மறந்தும் எண்ணாதொழிக ;—சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும்=எண்ணுவனாயின், தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும். எ-று.

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானும் உடன்சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவுளெண்ணுதலாவது:—அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலுமாகா தென்பதாம். (௪)

விளக்கம் :—ஒருவன் பகை நொதுமல் நட்பு என்பது பாராது ஒருவனுக்குக் கேட்டினைத் தரும் தீவினையை மறந்தும் செய்தல் மாத்திரமன்றி எண்ணுதலும் கூடாது என்றும், அவ்விதம் எண்ணுவானாயின் அறத்திற்கு அதிபதியாகிய கடவுள் எண்ணிய இவனுக்குக் கேட்டினைத் தரும் தீவினையுண்டாக எண்ணுவானென்றும் இத்திருக்குறளால்கூறியதாயிற்று ஏனெனின்? எப்போது ஒருவன் பிறனுக்குக் கேடுசெய்ய எண்ணுகின்றானோ அப்போதே அவன் எண்ணிய எண்ணத்தை எங்கும் நிறைந்த கடவுள் அறிந்து இனி இவனிடத்து நாம் இருத்தலாகாது நாம் நீங்கி விடுதல் வேண்டும் என்று நினைத்து அவனை விட்டு நீங்கி விடுவானென்றும், அவன் நீங்கியவுடன் பாபத்துக்குத் தலைவனாகிய மறக்கடவுள் அவனைச் சாரும் என்றும், அதனால் அவனுக்கு எல்லாக்கேடும் உண்டாகுமென்றும் அறிந்தோம். ஆதலால், தீவினை யென்பதை ஒருவன் மற்றொருவனுக்குச்செய்ய எண்ணுதலுமாகாது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதமெல்லாம் அறம் என்றும் மறம் என்றும் எண்ணி ஒருவன் உலகத்து உயிர் வாழ வேண்டுமாயின் அவன் அறிஞனாகவே வாழவேண்டுமேயன்றி வேறொன்றுமாகாது. அன்றியும், செல்வந்தர்க்கே இவ்வுபதேசம்பலிக்குமே யன்றி வறிஞர்க்குப் பயனில்லை என்று அறிகின்றோம்" என்றனர். ஆசிரியர் அறிவுறுத்தலாயினர்.

205. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(பரி.) இ-ள். இலன் என்று தீயவை செய்யற்க = யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக;—செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் = செய்வனாயின், பெயர்த்தும் வறியனாம். எ-று.

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனாமென்பதாம். அன்விகுதி முன் தனித்தன்மையினும், பின் படர்க்கை யொருமையினும் வந்தது. தனித்தன்மை "உளனா வென்னுயிரையுண்டு" * என்பதனானுமறிக. மற்று—அசைநிலை. இலமென்று பாடமோதுவாருமுளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க, செய்யின் அப்பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனாமென்றுரைப்பாருமுளர். (ரு)

விளக்கம்:—ஒருவன் வறிஞனாயினும் தான் வறியனென்று எண்ணி அவ்வறுமை தீரும் வண்ணம் அயலவர்க்கு யாதொரு தீங்கினையும் செய்யாதிருத்தல் வேண்டுமென்றும், அவ்விதம் செய்வானாயின் இப்பிறவியில் வறுமை நோய் அடைந்தது மாத்திரமல்லாமல் இனி வருகின்ற பிறவிகள் தோறும் வறுமையையடைந்து துன்பத்தையுறுவன் என்று இத்திருக்குறளால் அறிகின்றோமாதலால், வறிஞனும் தீங்கு செய்வதால் செல்வமடைதற்கு இல்லையென்று ஆசிரியர் கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "அது எவ்விதம்? தீங்கு செய்வதால் எவ்விதம் ஒருவன் வறிஞனாவான்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறலாயினர்.

206. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

(பரி.) இ-ள். நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் = துன்பஞ் செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன்—தீப்பால தான் பிறர்கண் செய்யற்க = தீமைக் கூற்றவாகிய வினைகளைத்தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ-று.

செய்யின், அப்பாவங்களடுதல் ஒருதலையென்பதாம். (சு)

---

* கலித்தொகை, குறிஞ்சி—22.

விளக்கம்:—ஒருவன் மற்றொருவனுக்குத் துன்பஞ் செய்வானாயின் செய்த துன்பத்திற்கு உரியவாகிய பாவங்கள் செய்த அவனை அவன் பின் தொடர்ந்து வருத்துவது உண்மை யென்றும், அவ்வருத்துதலை விரும்பாதவன் எவருக்கும் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுவதால், தீங்கு செய்தவனுக்குத் தீங்கினுக்குத் தக்க பாவம் உண்டென்றும், அப்பாவமானது பிறவிகள் தோறும் சென்று அவனைத் துன்புறுத்தலோடு வறியனாகவும் செய்யும் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஒரு பிறப்பிற்செய்த தீவினையானது எவ்விதமாகப் பிறவிகள் தோறும் செல்லும்? இதனை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

207. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(பரி.) இ-ள். எனைப்பகை உற்றாரும் உய்வர்=எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனையொருவாற்றால் தப்புவர்;—வினைப்பகை வீயாது பின்சென்று அடும்=அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும். எ-று.

"வீயா—துடம்பொடு நின்ற வுயிருமில்லை." * என்புழியும், வீயாமை நீங்காமைக்கண் வந்தது. (எ)

விளக்கம்:—ஒருவன் தான் உலகத்து வாழுங்காலத்து மிகப் பெரியதோர் தகுதியுடையாரிடத்துப் பகைத்துக் கொள்ளுவானாயினும் அப்பகையினின்றும் அவன் தப்பித்துக் கொள்ளல் கூடும். ஆனால், தீவினையாகிய பகைவனிடத்து ஒருவன் சிக்கிக் கொள்ளுவானாயின், அத்தீவினையினின்றும் நீங்கித் தப்பித்துக் கொள்ளுதல்கூடாததாகும். ஏனெனில்? தீவினை செய்தவன் எங்கு எங்குச்செல்கின்றானோ அங்கெல்லாம் சென்று சென்று தீவினையாகிய பகைவன் கொல்லுவான். ஆதலால், 'பின்சென்றடும்' என்றமையாலும், 'பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறி

---

* புறநானூறு—363.

தோர் உடம்பினும் சென்று தீவினைசுடும்' என்று இரண்டாவது திருக்குறளால் தெரிந்து கொண்டமையாலும், தீவினை செய்தான் பிறவிகள் தோறும் துன்பம் அடைதல் திண்ணமென்று அறிந்தோம் என்றனர். "அது எவ்விதம். ஒரு உவமை வாயிலால் விளக்கல்வேண்டும்?" என்றுமாணாக்கர் கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

208. தீயவை
வீயா தடியுறைந் தற்று.

(பரி.) இ-ள். தீயவை செய்தார் கெடுதல்—பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தெனின்,—நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று—ஒருவனிழல் நெடிதாகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைத்து. எ-று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனாகாது உயிரைப் பற்றி நின்று அது வந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனாற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்த நிழறன்னை வீய்ந்தற்றென்னாது வீயாதடியுறைந்தற்றென்ற பாடமே கரியாயிற்று. மேல் 'வீயாது பின் சென்றடும்' என்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினார். (அ)

விளக்கம் :—பிறனொருவனுக்குத் தீவினை செய்தான் கெட்டுப் போவான் என்பதை உவமைவாயிலாக விளக்க வந்த ஆசிரியர், ஒருவன் எவ்வளவு நெடுந்தூரம் சென்றாலும் அவனுடையநிழல் அவனை விடாது சென்று அவன் பாதத்திலேயே நிற்பதுபோல், செய்த தீவினையானது செய்தவனைப்பற்றும் என்று அறிகின்றோம். ஆதலால், தீவினை பிறவிகள் தோறும் சென்று துன்புறுத்தும் என்பது உண்மையாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியதோர் தீவினைகளைச் செய்தார் ஒருவேளை தீங்கினையடைதல்கூடும். சிறிதளவாகத் தீங்கினைச் செய்பவருக்கும் தீங்கு உண்டாமோ?" என்னலும், ஆசிரியர் கூறுகின்றனர்.

**209. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.**

(பரி.) இ-ள். தன்னைத்தான் காதலன் ஆயின்=ஒருவன், தன்னைத்தான் காதல் செய்தலுடையனாயின்,—தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க=தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறியதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ-று.

நல்வினை தீவினையெனவினைப்பகுதி இரண்டாகலின், 'தீவினைப்பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம்பயத்தல் விளக்கினாராகலின், 'தன்னைத்தான் காதலனாயின்' என்றார். (இவையாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய்யின் தாங்கெடுவரென்பது கூறப்பட்டது.)

விளக்கம் :—ஒருவன் தன் உயிர்க்கு யாதொரு தீங்கும் வாராதிருத்தல்வேண்டும் என்று விரும்புவானாயின், விரும்புகின்ற அவன் மற்றவர்க்கு எவ்வளவு சிறிய அளவினையுடைய தீயவினையினையும் செய்தலாகாது என்று இத்திருக்குறள் புத்திபோதிப்பதால், சிறியதோர் தீவினையை ஒருவன் அயலவருக்குச் செய்தானாயினும் அவ்வளவிற்கு உரிய பாபமானது அவனிடத்தே நெருங்கி அவனைத் துன்புறுத்தும் என்று கண்டோம். ஆதலால், நாம் ஒருவர்க்கும் சிறியதோர் தீங்கினையும் செய்யாதிருத்தல் வேண்டும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாம் தீங்கு செய்யாதிருப்போமாயின், நமக்கு யாதொரு கேடும் நேராதிருத்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**210. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.**

(பரி.) இ-ள். மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின்=ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட்சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின்,—அருங்கேடன் என்பது அறிக=அவனை அரிதாகிய கேட்டையுடையனென்பதறிக. எ-று.

அருமை=இன்மை. அருங்கேடனென்பதனை † "சென்றுசேர் கல்லாப்புள்ளா புள்ளிலென்றாழ் வியன்குளம்" * என்பதுபோலக் கொள்க. ஓடி

†அருங்கேடன் என்பதனைக் கேடரியன் என விகுதிபிரித்துக் கூட்டுவர் பிரயோக விவேக நூலார்.

* அகநானூறு—42.

யென்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் செய்த லோடு முடிந்தது. (இதனால் தீவினைசெய்யாதவன் கேடிலனென்பது கூறப் பட்டது.) (௧0)

விளக்கம் :—ஒருவன் நல்வழியில் சிறிதும் நடவாது தீயவழி யிற் செல்லுபவனாயினும் பிறர்க்கு மாத்திரம் தீவினையொன்றினை யும் செய்யாதிருப்பானாயின், அவனுக்கு யாதொரு கேடுமில்லை என்று இத்திருக்குறளால் அறிந்தோமாதலால், தீவழியிற் செல வதைக் காட்டிலும் பிறர்க்குத் தீங்கு செய்வது மிக்கதோர் கெடுதி யென்றும், தீவழியும் செல்லாது நல்வழியிற் செல்கின்ற ஒருவன் பிறர்க்குச் சிறிதும் தீங்குசெய்யாதிருப்பானாயின், அளவிடக்கூடாத இம்மை மறுமைப் பயன்களை அவன் அடையலாமென்றும் நாம் இவ்வதிகாரத்தால் கண்டோம். ஆதலால், மக்காள்! நம் தெய்வப் புலவர் நாம் உய்யும் வண்ணம் போதித்த இந்நூலில் மனம் மொழி மெய்களால் இல்லறத்தான் ஒருவன் செய்யவேண்டுவன இவை என்றும் தவிரவேண்டுவன இவை என்றும் இவ்வதிகாரத் தோடு முடித்துக்காட்டினர். இனி, அவ்வில்லறத்தான் அடைய வேண்டிய இம்மைப்பயனாகிய புகழை அடைவதற்கு அவன் செய்ய வேண்டியதாகிய கடமையைக் கூறலாயினர் என்றனர். மாணாக்கர், "அதையும் விளக்கல்வேண்டும்" என்றிரந்து கேட்ட லும், ஆசிரியர் ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தைச் சொல்லு வாராயினர்.

---

## 22. அதிகாரம்.

## ஒப்புரவறிதல். 5

---

(பரி.) அஃதாவது உலகநடையினையறிந்துசெய்தல். உலகநடைவேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத் தாகலின், 'ஒப்புரவறிதல்' என்றார். மேல் மனமொழிமெய்களால் தவிரத் தகுவன கூறினார், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறு கின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது ஒருவன் உலகநடை இது என்று அறிந்து செய்தல் எதுவோ அது ஒப்புரவறிதலாம். ஏனெனின்? உலகநடையென்பது நூல்களில் சொல்லப்படாது தனக்குத்தானே அறிந்து செய்கின்ற தகுதியுடையதாகலின், அதனை 'ஒத்ததையறிதல்' என்னும் பொருள்படும்படி 'ஒப்புரவறிதல்' என்றார். இதுவரையும் மனம் மொழி மெய்களால் ஒழிக்கத் தக்கனவற்றைக்கூறிய ஆசிரியர், செய்யத்தகுவனவற்றுள்ளும் சொல்லிய பகுதிகள் நீங்கலாக நின்ற அறத்தினையும் சொல்லத் தொடங்கி இவ்வொப்புரவறிதலைச் சொல்லுதலால், இது தீவினையச்சம் என்னும் அதிகாரத்திற்குப் பின்னர் வைக்கப்பட்டது.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(பரி.) இ-ள். மாரிமாட்டு உலகு என்† ஆற்றும்=தமக்கு நீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்னகைம்மாறு செய்யாநின்றன?—கடப்பாடு கைம்மாறு* வேண்டா=ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல. எ-று.

என்னாற்றுமென்ற வினா யாதுமாற்றாவென்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மையவல்லவென்பது கடப்பாடென்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேலேற்றினார். (க)

விளக்கம்:—உலகத்து உயிர்கள் தமக்கு ஜலத்தையுதவுகின்ற மேகங்களிடத்து என்ன பிரதியுபகாரத்தைச் செய்கின்றன? ஒன்றுமில்லை. அதுபோல் அம்மேகங்களை யொத்தவர்கள் தமக்கு ஒருவரும் பிரதியுபகாரம் செய்ய வேண்டுமென்பதைச் சிறிதும் எண்ணாது பலர்க்கும் உதவி செய்வர் என்று இத்திருக்குறளால் அறிந்தமையால், ஒப்புரவறிதலென்பது பிரதியுபகாரங் கருதாது செய்கின்ற உபகாரங்கள் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட

* கைம்மாறு—இச்சொல் ஒன்று கொடுத்து மற்றொன்று பெறுதல் என்னும் பொருளதாகிய முதனிலைத் தொழிலாகுபெயர். † என் என்னும் வினாவினைப்பெயர் ஈண்டு உபகாரத்தைச் சுட்டியது.

மாணுக்கர், "என்னே? ஒருவன் வருந்தித் தேடிய பொருளை ஒருபகாரமுங் கருதாது கொடுத்து விடுவது கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுகின்றனர்.

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி.) இ-ள். தக்கார்க்கு=தகுதியுடையார்க்காயின்,—தாள் ஆற்றித் தந்த பொருளெல்லாம்=முயறலைச் செய்து ஈட்டிய பொருள்முழுதும்—வேளாண்மை செய்தற்பொருட்டு*=ஒப்புரவு செய்தற்பயத்தவாம். எ-று.

பிறர்க்குதவாதார் போலத் தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத்தற்பொருட்டும் அன்றென்பதாயிற்று. (உ)

விளக்கம்:—தகுதியுடையவர் தாம் வருந்தித் தேடிய பொருள் முழுவதும் ஒப்புரவு செய்வதற்கே அன்றி வேறொன்றற்கு அன்றென்றும், பிறர்க்கு உதவார் போலத்தாமே உண்ணும் பொருட்டன்றென்றும், அல்லது சேர்த்து வைத்தல் பொருட்டன்றென்றும் இத்திருக்குறள் கூறுகின்றமையால், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் உண்மை யறிந்தோரெல்லாம் தாம் தேடிய பொருளைத் தாமும் உண்டு பிறர்க்கும் உதவி நிற்பார்கள் என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஒப்புரவு என்பது அத்துணைப் பெரியதோர் நன்மையுடையதோ? அதைக் காட்டிலும் நன்மையான செயல்கள் வேறொன்றும் இல்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

213. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(பரி.) இ-ள். புத்தேளுலகத்தும் ஈண்டும்†=தேவருலகத்தும் இவ்வுலகத்தும்,—ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது=ஒப்புரவுபோல நல்லன பிற செயல்களைப் பெறுதலரிது. எ-று.

---

* பொருட்டு—பொருளது என்னும் பொருளுள்ள குறிப்புமுற்று.

† ஈண்டு என்பது ஆகு பெயராய் இவ்வுலகத்தை யுணர்த்தி நின்றது.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின், புத்தேளுலகத்தரிதாயிற்று ; யாவர்க்குமொப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத்தரிதாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரண மரிதென்றுரைப்பாரு முளர். , இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.) (௩)

விளக்கம் :—இவ்வொப்புரவைப்போல் இவ்வுலகத்துமாத்திர மன்று தேவர் உலகத்தும் நல்ல செயல்கள் இல்லையாகுமென்றும், இதற்கு இதுவே சமான மென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின் ? தேவர் உலகத்தோ வறிஞர் என்றும் செல்வரென்றும் கூறுகின்ற வேறுபாடு இல்லாது யாவரும் ஒரு தன்மையராக வாழுகின்றாராதலால், அவ்விடத்துப் பிச்சை ஏற்பாருமில்லை பிச்சை யீவாருமில்லை. ஆகையால், தேவர் உலகத்தும் இவ்வொப்புரவைப் போல் நன்மை யுடையது இல்லையாயிற்று. இவ்வுலகத்தோ?எவருக்கும் ஒப்பாக உள்ள நன்மை இவ்வொப்புரவினும் வேறு நன்மையில்லையாதலால், இதுவே சிறந்ததாயிற்று என்று கூறினர். "ஆயின், இவ்வொப்புரவைச் செய்பவன் தான் சிறந்தவன் ஆவான்; ஏனையோர் சிறந்தவர் அல்லர் என்று கூறல் அமையுமோ?" என்று மாணாக்கர் வினவலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

214. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(பரி.) இ-ள். உயிர்வாழ்வான் ஒத்தது* அறிவான்—உயிரோடு கூடி வாழ்வானாவான் உலகநடையினை யறிந்து செய்வான்;—மற்றையான் † செத்தாருள் ‡ வைக்கப்படும்—அஃதறிந்து செய்யாதவன், உயிருடையனேயாயினும், செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும். எ-று.

உயிரின் அறிவுஞ்செயலுங் காணாமையின், 'செத்தாருள் வைக்கப் படும்' என்றார். ( இதனால் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறன் உடைத்தன்றென்பது கூறப்பட்டது. ) (௪)

---

*ஒத்தது — ஈண்டு உலக வொழுக்கத்தை யுணர்த்தி நின்றது. †மற்றையான் என்பது அஃதறியான் என்னு மறைப்பொருள் குறித்து நின்றது. ‡செத்தாருள் என்பதில் ஏழாவதனுருபு கூட்டிப் பிரித்தற்கண் வந்தது.

**விளக்கம்:**—எவனொருவன் உலக நடையினை யறிந்து ஒப்புரவாகிய இவ்வறத்தினைச் செய்கின்றானோ அவனே உயிரோடு கூடி வாழ்கின்ற உடலுடையான் என்றும், அவ்வறத்தினைச் செய்யாதவன் உயிரோடு கூடி இருப்பவனாயினும் செத்தவர்களுள்ளே ஒருவனாகவே எண்ணப்படுவான் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? ஒப்புரவை யறிந்து செய்கின்றவன் உயிருக்கு உரிய அறிவும் செயலும் கூடியிருப்பதால் அவ்விதம் செய்கின்றானென்றும், ஒப்புரவு அறியாதான் அவ்வுயிரினது அறிவும் செயலும் இல்லாதவனாகவே காணப்படுகின்றானாதலால், உயிரின் அறிவும் செயலும் ஒழிந்த பிணத்திற்குச் சமானமாக வாழ்கின்றானென்பதாம். ஆதலால், ஒப்புரவைச் செய்கின்றவன் செய்யாதவர்கள் யாவரினும் மிகமேலானவனென்றும், அவனே சிறந்த மக்கட் பேற்றை யடைபவன் என்றும், ஒப்புரவைச் செய்யாதவன் அடையவேண்டிய பயனையடையாததோடு தீராததாயிருக்கின்ற குற்றத்தையும் செய்து கொள்ளுகின்றவன் ஆகின்றான் என்றும் கூறினார் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஆயின், உலக நடையினை அறிந்து செய்கின்ற ஒருவனது செல்வம் யாவர்க்கும் பயன்படுமோ, அன்றிச் சிலர்க்குத்தான் பயன் படுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(பரி.) இ-ள். உலகு† அவாம் பேரறிவாளன் திரு=உலகநடையை விரும்பிச் செய்யும் பெரியவறிவினையுடையவனது செல்வம்—ஊருணி * நீர் நிறைந்தற்று=ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந்தாற் போலும். எ-று.

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுமென்பதாம். (ரு)

---

* ஊருணி என்பதில் இகரம் செயப்படுபொருட்கண் வந்தது. நீர் பல இடங்களில் இருப்பினும் பலரால் கொள்ளப் படுதல் நோக்கிச் சிறப்பாக ஊருணிஎன்றார். †உலகு என்பது ஒப்புரவை யுணர்த்தி நின்றது.

விளக்கம்:—உலக நடையொன்றினையே பெரிதெனவெண்ணி அதனையே விரும்பிச்செய்து உயிர்வாழ்கின்ற மிகப்பெரிய அறிவினையுடைய ஒருவனுடைய பெருஞ்செல்வமானது, ஊரில் உள்ளார் யாவரும் சென்று முகந்து உண்ணுகின்ற குளம் ஒன்றில் ஜலம் நிறைந்தால் அக்குளம் எவ்விதம் யார்க்கும் பொதுவாக உதவுமோ அதுபோல் உதவும் என்று இத்திருக்குறள் அறிவிப்பதால், பேரறிவாளனது பெரிய செல்வமும் ஒப்புரவு என்னும் இப்பெரிய தருமத்தினால், குளத்திலுள்ள ஜலம் கெட்டுப் போகாமல் நெடுங்காலமிருந்து உதவுவதுபோல், கெடாது நெடுங்காலமிருந்து உதவுமென்று கண்டோம். ஆதலால், ஒப்புரவு அறிந்து செய்தலால் ஒருவனுடைய செல்வம் யார்க்கும் உதவுவதுடன் நெடுங்காலம் கெடாது நின்று தனக்கும் பிறர்க்கும் உதவுவதாகும் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்வுவமை மிகநன்று! மிக நன்று! இன்னும் ஏதேனும் இவ்வொப்புரவிற்கு உவமையுள்ளதாயின் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**216.** பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(பரி.) இ-ள். செல்வம் நயனுடையான்கண் படின்=செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின்,—பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று =அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும். எ-று.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்குமென்பதாம். (சு)

விளக்கம்:-பயன் தரக்கூடியமரம் ஒன்று ஊர் நடுவில் பழுத்து நிற்குமாயின் அது ஊரார்க்கு எவ்விதம் உபயோகப்படுமோ அதுபோல், சிறந்ததாகிய இவ்வறத்தைச் செய்பவனிடத்தே செல்வம் உண்டாகுமாயின் அச்செல்வம் பலர்க்கும் உபயோகப்படும் என்று இத்திருக்குறள் கூறியதாயிற்று. பயன்மரம்என்றமையால் பயன்தராத மரங்கள் ஊர்நடுவே பழுத்திருக்கினும் அதுஉலகத்தாருக்குப் பயன் படாது போலுதுபோல், ஒப்புரவு இல்லாதவனி

டத்தேசெல்வம்உண்டாகுமாயின் அதுஉலகத்துக்குப்பயன்படாது போம் என்பதும் கூறியதாயிற்று. அன்றியும், 'உள்ளூர்ப்பழுத்தற்றால்' என்றமையால் வருந்திச் சென்று பலமுறை கேட்டும் கொடாதலோபியர்கள்போல் அல்லாமல் சென்ற அளவே பொருள் கொடுக்கும் முதல் வள்ளல் என்பதும் ஆயிற்று. ஆதலால், எல்லார்க்கும் எளிதில் பயன் கொடுக்கும் ஒப்புரவுடையானது செல்வமென்றே கண்டோம் என்றனர். * அன்றியும், இதனையே மற்றோர் உவமையால் விளக்கியமையும் எடுத்துக் காட்டுவேன் என்று ஆசிரியர் இயம்பலாயினர்.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(பரி.) இ-ள். செல்வம் பெருந்தகையான்கண் படின் = செல்வம் ஒப்புரவு செய்யும் பெரியதகைமையையுடையான்கண்ணே படுமாயின்,— மருந்தாகித் தப்பா மரத்தற்று = அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை யொக்கும். எ-று.

தப்புதலாவது:—கோடற்கரிய இடங்களினின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது† எல்லார் வருத்தமுந் தீர்க்குமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—ஒப்புரவு என்னும் அறத்தினைப் பெரியதென்று எண்ணிச்செய்யும் பெரியதோர் தகுதியுடையான் ஒருவனிடத்தே செல்வம் வந்து சேருமாயின், அது வேர் முதல் தலைவரையில் உள்ள எல்லா உறுப்புகளும் உலகத்துள்ள நோய்களுக்கு மருந்தாகி

---

*இக்கருத்து நோக்கியே நாலடியாரினும்,

"நடுவூருள் வேதிகைச் சுற்றுக் கோட்டக்க
படுபனையன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடி கொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டு ளேற்றுப்பனை" என்று கூறப்பட்டது.

† தன் குறை நோக்காது என்பது அகழ்வாரைத் தாங்கு நிலம் போல், நாறிவுயிராய தன்னைப் பிறர் வருத்தினும் வருந்தாது உபகரித்து நிற்றல்.

நிற்கும் மரம் ஒன்றினையே ஒத்திருக்கும் என்று இத்திருக்குறள் கூறியதாயிற்று. இவ்வுவமையால் நல்லதோர் மருந்தாகி நிற்கும் மரமாக விருந்தாலும், அது கிடைத்தற்கரிய இடங்களில் வளர்ந்திருக்குமாயின், அது கொள்ளுதற்கு இல்லாமல் போவதுபோல், செல்வமானது கொடுக்கின்ற குணம் இல்லாதவனிடத்து உண்டாயின் பயனில்லை என்றும், செல்வம் ஒருவனுக்கிருந்தும் அது கொடாது மறைத்து நிற்கின்றவனிடத்து பயன் தாராதென்றும், ஒரு காலத்துப் பயன்பட்டும் மற்றொருகாலத்துப் பயன் தாராததுமாகிய வேறுபாடுடைய மரமாயிருக்குமாயின், அது முற்றும் பயன் படாதவாறுபோல் தன்னைப் புகழ்ந்து பேசுகின்றவர்களுக்குக் கொடுத்தும் ஏனையோர்க்குக் கொடாதும் நிற்கும் அறிவினையுடையோரிடத்து செல்வம் உண்டாகுமாயின், அது பயன்படாதென்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களால் ஒப்புரவுடையானொருவனை ஊருணி என்றும், பயன்மரம் என்றும், மருந்து என்றும் உவமித்த உவமைகளைக் கண்டு மிகுதியும் மகிழ்வுற்றோம். உலகத்திற்கு மிகுதியும் இன்றியமையாததாகிய நீரினை முதலிற் கூறியும், யாவர்க்கும் பயன்படும் பழந்தரும் மரத்தை இரண்டாவதாகக் கூறியும், உயிர்கள்நோயினைத் தீர்க்கும் மருந்தினை மூன்றாவதாகக் கூறியும் நிற்பதால் ஒப்புரவுடையானது செல்வம் உலகத்திலுள்ள உயிர்களுக்கு உயிர்போல் உள்ளது, என்று கண்டோம். ஆயின், இவ்விதம் செல்வம்உள்ள காலத்தே ஒப்புரவு செய்யும் குணமுடையானுக்கும் ஊழ்வலியால் செல்வம் ஒழிந்து விடுமாயின், மேற்கூறிய நற்குணமுடைய தகுதியுடையான் ஒப்புரவினைச் செய்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

218. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(பரி.) இ-ள். இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்=செல்வஞ் சுருங்கியகாலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்=கடன் அறி காட்சியவர்=தாஞ்செய்யத் தகுவனவற்றையறிந்த இயற்கையறிவுடையார். எ-று.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம். (அ)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள் கொண்டதோர் ஐயத்தைத் தீர்ப்பதற்கே எழுந்ததாகும். என்னையோவெனின்? ஒப்புரவு என்பதே தாம் செய்யக்கூடும் அறங்களில் மிகத் தகுந்தது என்னும் மேலாகிய இயற்கையறிவுடையவர், தமக்கு ஊழ் வலியால் செல்வம் சுருங்கிய காலத்தும், அவ்வொப்புரவென்னும் அறம் ஒன்றினை மாத்திரம் கைவிட மாட்டார்கள். இதனைப் பெரிய புராணம் இளையான்குடிமாறர் முதலியோர் சரித்திரங்களால் அறிதல் கூடும் என்றனர். அது கேட்டமாணாக்கர், "ஒப்புரவுடையான் ஒருவன் தன்னுடைய செல்வம் சுருங்கிய காலத்துத் தனக்கு உண்டாகும் துன்பத்தைக் குறித்து வருந்துவனோ வருந்த மாட்டானோ? அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்'

219. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(பரி.) இ-ள். நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல்=ஒப்புரவுசெய்தலை யுடையான் நல்கூர்ந்தானாதலாவது—செயும் நீர செய்யாது அமைகலா ஆறு=தவிராது செய்யு நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற இயல்பாம். எ-று.

தான் நுகர்வன நுகரப்பெறாமையன்றென்பதாம்.(இவையிரண்டுபாட்டானும் வறுமையான் ஒப்புரவொழிதற்பாற்றன்றென்பது கூறப்பட்டது.)

விளக்கம்:—ஒப்புரவுடையான் ஒருவன் வறுமை என்பதை எண்ணி வருந்த நேருமாயின், அது தான் உண்பன உண்டு உடுப்பன உடுத்துப் பூசுவன பூசுதற்கு இல்லையே என்னும் வருத்தமாக இராதென்றும், ஆனால், இதற்கு முன்னர் தன்னிடத்தே வந்த வறிஞர்கட்குச் செய்த தகுதியளவாக இப்போது செய்வதற்கு இல்லையே என்று வருந்தும் வருத்தமாகவே இருக்கும் என்றும் இத்திருக்குறளால் அறியலாயிற்று. இதனை "இளையான்குடிமாறநாயனார்" மனைவியார் தம் நாயகர் கொணர்ந்த நெல்லினைப் பாதி இரவில் அரிசியாக்கிச் சமைத்தும் குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர்களை நாயகர் கொணர்ந்துதர, அவற்றைப் பல கறிகளாகத்

கைவன்மையால் செய்து, முடிந்தவுடன், தாம் இதற்கு முன் செல்வம் உள்ளகாலத்து வந்த அடியவர்கட்குச் செய்த அளவாக இப்போது இச்சிவனடியவற்குச் செய்வதற்கு இல்லையே என்று வருந்தினரேயன்றி, தாமாவது தம் நாயகராவது உணவின்மையால் வருந்துவதைச் சிறிதும் எண்ணிணரில்லை என்பதனாலேயே அறிதல் கூடும். இதை யறிவிப்பதற்குப் பின்வரும் திருவிருத்தம் ஒன்றே போதும்.

"மனைவியார் கொழுநர் தந்தமனமகிழ்கறிகளாய்ந்து
புனலிடைக் கழுவித்தக்க புனித பாத்திரத்துக் கைம்மை
வினையினில் வேறுவேறு கறியமுதாக்கிப் பண்டை
நினைவினுற் குறையை நேர்ந்து திருவமுதமைத்து நின்று"

என்னும் பெரிய புராணச் செய்யுளைக் காண்க என்றனர். அது கேட்ட மாணுக்கர், "ஒருவன், ஒப்புரவு ஒப்புரவு என்று தன் கையிற் கிடைத்த பொருள்யாவும் கொடுத்து விடுவானாயின், அவனுக்கு வறுமையன்றி வேறு எதுதான் உண்டாகும்? ஆதலால், பொருட்கேடு வருகின்ற ஒப்புரவென்பதனைச் செய்தல் தகுதியுடையதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**220. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.**

(பரி.) இ-ள். ஒப்புரவினல் கேடுவரும் எனின்=ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்,—அஃது ஒருவன் விற்றுக் கோட்டக்கது உடைத்து=அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளுந் தகுதியையுடைத்து. எ-று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே, இஃதாயின் அதுவுஞ் செய்யப்படுமென்றது, புகழ்பயத்தல்நோக்கி. (இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடு அன்றென்பது கூறப்பட்டது.) (ம)

விளக்கம்:—ஒப்புரவு செய்வான் ஒருவனுக்குப் பொருள் சுருங்குமென்று எவரேனும் உலகத்துச் சொல்லுவாராயின், அவ்வித பொருட் கேட்டினை ஒருவன் தன்னை விற்றாயினும் வாங்குதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது ஏனெனின்? தன்னை விற்று வாங்கக்கூடிய பொருள் ஒன்று உலகத்து இல்லையே

யாயினும் இவ்வொப்புரவின் பொருட்டுத் தன்னை விற்கும் செய்கையையும் செய்தல்கூடும் என்று அறிவித்ததாயிற்று. அது எதற்கோவெனின்? ஒப்புரவின் பொருட்டு ஒருவன் தன்னுடைய செல்வத்தை யெல்லாம் கொடுத்துக் கெட்டுப்போவது கெடுதியாக ஆகாது என்றும், அந்நில்லாச்செல்வமானது கெடுமாயினும் நிலையாய கெடாதபுகழை அடைகின்றான் என்றும் ஆசிரியர் கூறலும், மாணாக்கர், "ஒப்புரவுடைமை என்னும் இவ்வறத்தினைச் செய்பவர் இம்மைப் பயனையடைவார் என்று அவதாரிகையினுள் கூறியதால் அறிந்தோம். இனி, மறுமைப்பயனை யடைவதற்கு என்செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 23. அதிகாரம்

### ஈகை.

---

(பரி.) அஃதாவது வறியரா யேற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது மறுமை நோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது வறுமையுற்றவர்கள் வந்து கேட்பாராயின், அவர்க்கு இல்லை என்னாது கொடுத்தல் என்பதாம். இது மேல் நீங்கள் வினவியபடி மறுமைப்பயனைத் தருவதாகும். அது கருதியே, இம்மைப்பயனைத் தரும் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்திற்குப்பின் இது வைக்கப்பட்டது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "வறியவர்க்குக் கொடுப்பதுதான் ஈகையோ? எல்லோர்க்குங் கொடுப்பது ஈகையல்லவோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

221. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(பரி.) இ-ள். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை=ஒருபொருளுமில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக்கொடுத்தலாவது,—மற்றெல்லாம் * குறியெதிர்ப்பை நீரது உடைத்து=அஃதொழிந்த எல்லாக்கொடையுங் குறியெதிர்ப்பைக்கொடுக்கு நீர்மையையுடைத்து. எ-று.

ஒழிந்த கொடைகளாவன:—வறியரல்லாதார்க்கு ஒருபயனோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது:—அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கிய வாறே எதிர் கொடுப்பது. நீரது என்புழி அதுவென்பது பகுதிப்பொருள் விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து' என்றார். (இதனான் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது.) (க)

விளக்கம்:—ஒரு பொருளுமில்லாத வறியவர்களுக்கு அவர்கள் விரும்பிய பொருள் ஒன்றினைக்கொடுப்பதே ஈகை யெனப்படுவது; மற்றைய தருமங்களெல்லாம் ஒருபயன் நோக்கிக் கொடுப்பனவாக முடியுமேயன்றி ஈகையாகாது என்று இத்திருக்குறள் கூறுவதால், தாங்குவார் இல்லாது இருக்கின்ற ஏழைகட்குக் கொடுப்பது பிரதியுபகாரங்கருதாது கொடுப்பது என்றும், அது ஒழிந்தமற்றைக்கொடைகளெல்லாம் கொடுத்தஅவனுக்குமறுபடியும் கொடுத்த அளவாகவே வந்து சேருகின்றன வாதலால், அவைஎல்லாம் ஈகையாகாவென்றும், ஈகையது இலக்கணத்தையே கூறிநின்றமையால், நீங்கள் கொண்ட ஐயமானது அறவே இத்திருக்குறளால் ஒழிந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஈகை என்பதையுணர்ந்தோம். ஆயின் ஈதல், ஏற்றல் என்று இரண்டு உள்ளனவே; ஆதலால் ஒருபுறத்து ஈந்தும், மற்றொரு புறத்து ஏற்றும் நிற்கலாமோ என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

222. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(பரி.) இ-ள். கொளல் நல்லாறு எனினும் தீது=ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லநெறியென்பார் உளராயினும் அது தீது;—மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று=ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று. எ-று.

எனினு மென்பது இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கி நின்றது. பிரிநிலை ஏகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றாம். நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினார். (உ)

விளக்கம்.—யாரேனும் மக்கள் இந்நில உலகத்துப் பிச்சையேற்றல் வீட்டுலகத்துச் செலுத்தும் நல்லவழி என்று சொல்ல முயன்றாலும், அவ்வாறு செய்தல் நன்மைக்கு மாறாகிய தீதேயாம்

கும் என்றும், அன்றியும், யாரேனும் இவ்வுலகத்து வறியவர்க்குக் கொடுத்தல் வீட்டினை யொழிக்கும் வழியாகும் எனினும் கொடுத்தலே நல்லதாகும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், கொடுப்பவர் வீட்டுலக மடைவதில்லை என்றும், ஏற்பவர் வீட்டுலகத்தை யடைவார் என்றும் சொல்லுபவர் இந்நில உலகத்து எவரும் இல்லை என்பது அறிந்தாம். இவ்விதங் கூறுவதால், ஒருவன் தனக்கு உள்ளபொருளளவிற்கு ஏற்ப வறிஞர்க்குக் கொடுத்தலாகிய ஈதலைச் செய்தல் வேண்டுமேயன்றி மிக இழிந்ததாகிய ஏற்றல் என்னும் இழிந்த செய்கையைச் செய்தலாகாது என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் மக்கள்யாவரும் செய்தல் கூடுமோ? சிலரே செய்தல்கூடுமோ? அதனையும் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

223. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(பரி.) இ-ள். இலன் என்னும் எவ்வம் உரையாமை=யான் வறியனென்று இரப்பான் சொல்லுமிளிவரவைத்தான் பிறர்கட்சொல்லாமையும் ஈதல்=அதனைத் தன்கட்சொன்னார்க்கு மாற்றுது ஈதலும்,—உள குலனுடையான் கண்ணே=இவையிரண்டுமுளவாவன குடிப்பிறந்தான் கண்ணேயா-று.

மேல் தீதென்றது ஒழிதற்கும், நன்றென்றது செய்தற்குமுரியவனை உணர்த்தியவாறு. இனி, 'இலனென்னுமெவ்வமுரையாமை யீதல்' என்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலெனவும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார்சொல்லும் இளிவரவைச்சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மை பற்றிவந்த பன்மையாக வுரைப்பர். (௩)

விளக்கம்:—நற்குலத்துத் தோன்றியவன், யான் ஏழையென்று யாசிப்பவன் சொல்லுகின்ற இழிவாகிய சொல்லினைத்தான் அயலாரிடத்துச் சொல்லாதவனும், அவ்விழிவாகிய வார்த்தையைத் தன்னிடத்தே சொன்ன ஏழைகளுக்குச் சிறிதும் மறுக்காது கொடுப்

பாகுகவும் உள்ளவன் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இல்லறத்தான் ஒருவன் யாசிப்பது கூடாதென்றும், தன்னிடத்தே வந்த யாசகர்க்குத் தன் அளவிற்குத் தக்கபடி கொடுத்தல்வேண்டும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்வாறு ஈகையைச் செய்வான் ஒருவன் தன்னிடத்து•வந்தவர்க்கு ஏதேனும் ஒன்றைக்கொடுத்து அனுப்பிவிடுவானே? அல்லது, பிச்சைக்குவந்த வறிஞர் விரும்பிய ஒன்றினையே கொடுத்து மகிழ்வையடைவானே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 224. இன்னு திரக்கப் படுத லிரந்தவ
## ரின்முகங் காணு மளவு.

(பரி.) இ-ள். இரக்கப்படுதல் இன்னுது = இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று,-இரந்தவர் இன்முகம் காணும் அளவு = ஒருபொருளையிரந்தவர் அதுபெற்றதனுல் இனிதாகிய அவர் முகங்காணுமளவும். (எ-று.)

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல் = இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை 'இன்னுது' என்றது "எல்லா—மிரப்பார்க்கொன்றீயாமை"* கூடுங்கொல்லோ வென்னும் அச்சம் நோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது. (௪)

விளக்கம் :—மேல் திருக்குறளில் கூறியவண்ணம் யாசித்தல் இழிவென்று நாம் அறிந்தது மாத்திரமல்லாமல், இரப்பவர்க்குக் கொடுப்பேனென்று இருத்தலும் நன்றன்று.ஏனெனில்? இரப்பார்க்குக் கொடுப்பேன் என்று இருக்கின்ற ஒருவன், தன்னிடத்தே வந்தயாசகன்,தான் கொடுப்பதைக்கொண்டு மகிழ்ச்சி யடைவானே அல்லனே என்று ஐயுறுதலும், ஐயுற்ற அவன், பின்னர் வந்த யாசகனுக்குக்கொடுத்த பொருள் இனிமையைத் தாராதாயின், வாங்கியவன் முகம் இனியதாகாதென்றும், அவ்வாறு ஆகாதிருக்குங்

* "கல்லாமையச்சம் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை வுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம்
இரப்பார்க் கொன்றீயாமை யச்சம் மரத்தாரிம்
மாணுக்குடிப் பிறந்தார்." நாலடியார், குடிப்பிறப்பு

கால் கொடுத்தானுக்கு இன்பத்தைப்பயக்காது துன்பத்தைப் பயக்குமாதலால் வறிஞர்க்குக் கொடுப்பேனென்று இருக்கின்ற ஒருவன் தன் உடல் பொருள் ஆவிமூன்றும் கொடுத்தற்கே உரியவனாக இருத்தல்வேண்டும் என்றும் பெற்றோம். இதனை மனைவியையே ஈந்த இயற்பகை நாயனாரிடத்துக் காணுதல்கூடும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் உடல் பொருள் ஆவிமூன்றும்தந்து இம்மைப் புகழையும் மறுமைப் போகத்தையும் அடைவதைக்காட்டிலும், தவம்செய்து நிற்போமாயின் மறுமைப்பதவியை யெளிதின் அடைந்து விடுதல் கூடாதோ? எதற்காக இல்லறத்தானொருவன் தான் தேடிய பொருளைக்கொடுத்து இம்மை மறுமைப்பயனை அடைதல்வேண்டும்?" என்று கூறுதலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

225. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(பரி.) இ-ள். ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்=தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்:—அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின்=அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையான் ஒழிப்பாரது வலிக்குப்பின். எ-று.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதாராற்றலின் தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பாராற்றல் நன்றென்பதாம். (ரு)

விளக்கம் :—நீங்கள் மேல்வினவிய தவத்தாரது செயலையும் அவரடையும் மறுமைப்பயனையும் சீர்தூக்கிப்பார்க்கின், அத்தவத்தவரைக்காட்டிலும் இல்லறத்தான் ஒருவனது வலிமையே மிக்கதோர்வலிமையும் நன்மையுடையதும் ஆக முடியும். ஏனெனின்? இல்லறத்தான் ஒருவன் தான் நல்வழியிற்றேடிய பொருளைத் தானும் உண்டுபசிதீர்ந்து பிறர்க்கும் பங்கிட்டுத்தந்து அவர் பசியையும் ஆற்றக்கூடிய வல்லமையுடையவனாக இருக்கின்றான். ஆனால் தவத்தைச் செய்கின்ற தவசி ஒருவன், தனக்குப் பசிவருமாயின், தன்னுடைய பசி ஒன்றினைப் பொறுத்துக்கொள்ள முடியுமேயன்றி அதனை நீக்கிக் கொள்ளவும் முடியாது. அன்றியும், பிறனொருவன் தன்னிடத்துப் பசித்து வருவானாயின் அதனைத் தீர்ப்பதற்கும் இய

லாதவனாய் இருக்கின்றான். ஆகையால், தானும் பசித்து பிறர் பசியையுந் தீர்க்கமாட்டாத தவத்தவனாயிருப்பதினும், தானும் பசியாது பிறர் பசியையுந்தீர்க்கின்ற இல்லறத்தானது தகுதியே மேலானதாகும் என்று இல்லறத்தானையும் அவனது ஈகையையும் புகழ்ந்து கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தேடிய பொருள் முழுவதும் கொடுப்பதால் இம்மைப் பயன் புகழ் என்று அறிந்தோம். இவ்விதம் புகழை யடைந்த இவன் மற்றோர் பிறவியில் எது அடைவான்? இதனை அறியவும் ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

226. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

(பரி.) இ-ள். அற்றார் அழி பசி தீர்த்தல்=வறியாரது மிக்க பசியை அறனோக்கித் தீர்க்க,—பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அஃது= பொருள் பெற்றானொருவன் அதனைத் தனக்கு உதவவைக்குமிடம் அவ்வற மாகலான். எ-று.

எல்லா நன்மைகளும் அழிய வருதலின், 'அழிபசி' என்றார். அறனோக்கி யென்பது எஞ்சிநின்றது. அற்றாரழிபசி தீர்த்த பொருள் பின்தனக்கே வந்து உதவுமென்பதாம். (சு)

விளக்கம்:—இத்திருக்குறளால் மறுமைப்பயன் ஈதென்று அறிந்தோம். ஒருவன் தன்னிடத்தேவந்த ஏழை ஒருவனது ஆற்றொணாப் பசியைத்தீர்ப்பானாயின், அப்பசிதீர்வதற்குக் காரணமாய் நின்ற பொருளானது கள்வர் முதலியவர்களால் அபகரிக்கப்படாது காப்பாற்றுவதற்குச் சேமமாக வைக்கக்கூடிய ஒரு சேமநிதியாகும் என்று அறிகின்றோம். ஏனெனின்? வறிஞர் பசியைத்தீர்த்த பொருளானது ஒன்றற்குப் பதின்மடங்காகப் பின்வருகின்ற பிறவிகள் தோறும் வந்து உதவுகின்றது. ஆதலால், நாம் வறிஞர்க்குக் கொடுக்கும் பொருள் வீணாகப்போவதில்லை என்று நன்றாய் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "வறிஞர்க்குக் கொடுத்த பொருள் வீணாகப்போகாது எல்லோர் பசியையும்

"பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்றாராதலின் அழிபசி யென்றார்.

தீர்க்கின்றது என்று கூறுகின்ற நீதிகள் மிக இனிமையாகவே காணப்படுகின்றன. ஆயின், இவன் முற்பிறப்பில் வறிஞர்க்குக் கொடுத்தவன்; அதனால் இவ்வித தகுதியோடிருக்கின்றான் என்பதை எவ்வாறு காட்சியளவையாகத் தெரிந்து கொள்ளுதல்கூடும்? அறிய ஆசைப்படுகின்றோம்'' என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(பரி.) இ-ள். பாத்து ஊண் மரீஇயவனை = எஞ்ஞான்றும் பகுத்துண்டல் பயின்றவனை—பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது = பசியென்றுசொல்லப்படுந் தீயநோய் தீண்டுதலில்லை; எ-று.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை அழித்து, அதனால் வருமுடம்புகட்குந் துன்பஞ்செய்தலின், 'தீப்பிணி' எனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானாகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம். (இவை ஆறுபாட்டானும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.) (எ)

விளக்கம்:—மேல் நீங்கள் வினவிய வினாவிற்கு இத்திருக்குறள் நன்றாகப்பதில் கூறியதாகும். என்னையோவெனின்? நீதிநூல்களில் கூறியவண்ணம் ஒருவன் நல்வழியிற் சம்பாதித்த பொருளைப் பங்கிட வேண்டியவர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்து மிகுந்ததை யுண்பானாயின் அவனைப் பசியென்னும் கொடியநோய் தீண்டுவதில்லையாகும் என்றமையால், முற்பிறப்பில் எவனொருவன் பசித்தார்க்கு அன்னமிட்டானோ அவனே இப்பிறப்பில் பசியில்லாது வாழ்கின்றவன் என்று காட்சியளவையாகக் கூறியதாயிற்று. இதனையே, அறன்வலி யுறுத்தலினுள்ளும்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"* என்று கூறிய திருக்குறளாலும் அறிதல்கூடும் என்றனர். கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தாமும் இன்பமனுபவித்து அயலவரும் அடைகின்ற இன்பத்தை என் யாவரும் செய்தலில்லை? அதனை விளக்கல்வேண்டும்'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

* திருக்குறள்—37.

228. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(பரி.) இ-ள். தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்=தா முடைய பொருளை ஈயாதுவைத்துப் பின்னிழந்துபோம் அருளிலாதார்—ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்=வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையாரெய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ! எ-று.

உவக்குமென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வின்பத்தை யெய்துவதல்லது வைத்திழவாரென்பது கருத்து. (அ)

விளக்கம் :—இத்திருக்குறள் தாமும் புசியாது அயலாரையும் புசியாது வைக்கும் இன்பம் ஒன்றினை அறியாத மானுடர் செயலை நோக்கி எழுந்ததாகும். ஏனெனின்? அவர்கள் தாம் வருந்தித் தேடிய பொருளைத் தாமும் அனுபவியாது அயலவர்க்குங் கொடாது பின் அப்பொருளை இழந்துபோகின்ற அருளில்லாதவர்களாகின்றனர். ஆதலால், மேல் வினவியபடி பொருளைப் பிறர்க்குக் கொடாத வன்கணாளருடைய பொருள் கள்வர் முதலியவர்களால் அபகரிக்கப்பட்டு இழந்து போவதற்கு ஏதுவாகுமேயன்றி, அது நல்லார்க்குக் கொடுக்கப்பட்டு அதனால் புகழையும் புண்ணியத்தையும் அடைவதற்கு இல்லாமற்போம் என்பதே திண்ணமாயிற்று. இக்கருத்தையே,

"பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார்—மற்றோர்
இரணங்கொடுத்தால் இடுவர் இடாரே
சரணங் கொடுத்தாலும் தான்." *

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்" †

* நல்வழி. † நல்வழி.

"நம்பனடியவர்க்கு நல்காத்திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்" ‡

என்ற செய்யுள்களால் மேலோர் விளக்கிக் காட்டியுள்ளார் என்று ஆசிரியர் கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கொடாத லோபர்களை உலகோர் எவ்விதம் மதிப்பர்? அறிய ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

229. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(பரி) இ-ள். நிரப்பிய தாமே தமியர் உணல்=பொருட்குறை நிரப்ப வேண்டி வறியார்க்கீயாது தாமே தனித்துண்டல்--இரத்தலின் இன்னாது மன்ற=ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினுமின்னாது ஒருதலையாக. எ-று.

பொருட்குறை நிரப்பலாவது:—ஒரோ எண்களைக்குறித்து அத்துணை யீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல்=பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே, பின் நல்குரவில்லை; தமியருண்டற்குஅவை இரண்டு முளவாமாகலின், 'இரத்தலினின்னாது' என்றார். நிரப்பியவென்பதற்குத் தேடியவுணவுகளை யென்றுரைப்பாருமுளர். (௯)

விளக்கம்:—ஒருவன் தனக்கு உள்ள பொருளை மேலும் மேலும் தான் எண்ணிய அளவு சேர்க்கும் வகைதானே அப்பொருளை மிகப்பெருக்குதலும் வேறொருவருக்கு ஈயாது தானேயுண்டலும் செய்வானாயின், அவன் பிறர் இடத்தே சென்று யாசிக்கின்ற ஏழையினும் ஏழையாக மதிக்கப்பட்டு இம்மைப் புகழை இழப்பதுடன் மறுமைக்கும் தன்னை வறியனாக்கிக் கொள்ளுவான் என்று இத்திருக்குறளில் கூறுகின்றனர். ஆதலால், தரித்திரன் ஒருவன் யாசிக்கச் செய்வதால் இம்மையில் மாத்திரம் பிச்சைக்காரனென் கின்ற இகழ்ச்சியை யடைவானேயன்றி, மறுமையிலும் தரித்திரத்

‡ தனிப்பாடற்றிரட்டு.

த்தை யடைவதற்கில்லை. ஆனால், உலோபியோ மறுமையிலும் தரித்திரத்தை யடைய ஏதுவாகின்றான். இக்கருத்துப் பற்றியே நமது அம்மையாகிய ஔவையும்,

"செய்தீவினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவமென்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்" *

என்று பரிதபித்துக் கூறினர் என்றனர். அதுகேட்ட யாணுக்கர், "ஒருவன் தனக்குரிய பொருளை, பிறர்க்குக்கொடாது தானே யுண்பானாயின் அவனை உலகோர் மதியார் என்று கூறினீர். அவ்விதங் கொடாதவன் பின் வாழ்ந்திருத்தலினும் எது செய்தல் நலம்? கூறல்வேண்டும்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

230. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

(பரி.) இ-ள். சாதலின் இன்னாதது இல்லை=ஒருவற்குச் சாதல்போல இன்னாததொன்றில்லை;—அதூஉம் ஈதல் இயையாக்கடை இனிது=அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கொன்றீதல் முடியாதவழி இனிது. எ-று.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், 'இனிது' என்றார். (இவை மூன்றுபாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது.) (ய)

விளக்கம்:—மக்காள்! கொடாத லோபர்கள் தகுதியைப்பற்றி இக்குறள் கூறுவது மிகுதியும் துன்பந்தரக் கூடியதாக உள்ளது. என்னை? ஒருவன் கொடாதவனா யிருப்பானாயின் அவன் இருப்பதிலும் இறப்பதே சாலவுஞ் சிறந்தது என்கின்றது. இறப்பது மிகுந்ததோர் துன்பமாகிய காரியமாயினும், கொடாமையினால் வருகின்ற துன்பத்தைக் காட்டிலும் அது பெரியதோர் துன்பம் ஆகாது. ஆதலால், அவன் இறந்துபடலாம் என்று கூறியதாயிற்று. இறந்து

* நல்வழி.

படுதல் மிக்கதோர் துன்பமான காரியம், அதைப்போல் வேறொரு துன்பம் உலகத்து இல்லை என்பதை மணிவாசகப்பெருந்தகையார்,

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க் கொன்றைச் சிவனே எம்பெருமானெம்
மானே யுன்னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே"

என்று தமது திருவாசகத்தில் கூறியமையால், எல்லாத் துன்பத்தி லும் சாதற்றுன்பம் மிக்கது என்று கண்டோம். ஆகவே, அதனி னும் மிக்கதோர் துன்பமுடையது லோபத்தன்மை என்று நம் தெய்வப்புலவர் கூறியது புத்தி போதிப்பாயிற்று. ஆதலால், நாம் இல்லறத்தில் இருந்து செய்யவேண்டுவனவற்றையும், தவிர வேண் டுவனவற்றையும் இதுகாறும் அறிந்தோம். இனி, அவ்வில்லறத் தான் அடையவேண்டிய இம்மைப் பயன் இது என்று உங்களுக் குக் கூறுவேன் என்று ஆசிரியர் 'புகழ்' என்னும் அதிகாரத்தைக் கூறத் தொடங்கினர்.

## 24. அதிகாரம்.

## புகழ்.

---

(பரி.) அஃதாவது இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—பாயிரம் நீங்கலாக இல்வாழ்க்கை முதல் ஈகை வரையில் சொல்லப்பட்ட பத்தொன்பது அதிகாரங்களுள்சொல்லிய நீதிகள் யாவும் நடத்திய ஒருவன் இம்மையில் அடையவேண்டியது புகழ் ஒன்றே யாதலால், இவ்வதிகாரம் இல்லறவியலில் கடைசி அதி காரமாக வைக்கப்பட்டுள்ளது. அன்றியும், இப்புகழ் பலவிதமாக வருவதாயினும் ஒருவன் கொடுக்கின்ற கொடையினாலேயே மிக்க

தோர் புகழ் அடைவது இயல்பாதலால், ஈகை என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இதனை வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஈதல் ஒன்றுதான் புகழினைக் கொடுப்பதோ, ஏனைய அறங்கள் புகழினைக் கொடாவோ?" என்னலும், ஆசிரியர் கூறலாயினர்.

231. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(பரி.) இ-ள். ஈதல்=வறியார்க்கீக;—இசைபட வாழ்தல்=அதனாற் புகழுண்டாக வாழ்க;—அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை=அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லையாகலான். எ-று.

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும், "உணவின் பிண்ட முண்டி முதற்று"* ஆகலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக 'ஈதல்' என்றார். உயிர்க்கென்பது, பொதுப்படக் கூறினாரேனும் விலங்குயிர்கட்கு ஏலாமையின், மக்களுயிர்மேல் நின்றது.(க)

விளக்கம்:—'வறியார்க்குக் கொடுங்கள்; அதனால் புகழ்பட வாழுங்கள்; அப்புகழைக் காட்டிலும் மனித உயிர்க்குப் பிரயோஜனம் வேறொன்றுமில்லை' என்று இத்திருக்குறள் கூறியதால், புகழ்பட வாழ்வதற்குக் கல்வியுடைமையும் ஆண்மையுடைமையும் ஆகிய மற்றக் காரணங்களெல்லாம் இருக்குமாயினும் அவை அத்துணைச் சிறந்த புகழினைத் தாராமற் போய்விடுமென்றும், ஈகையொன்றே எக்காலத்தும் மறையாதிருக்கும் புகழினைக் கொடுக்கும் என்றும் இதனால் பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஈகை எவ்வாறு புகழினைத்தரும்? அப்புகழ் எவ்வாறு மறையாதிருக்கும்? அதனை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

232. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்
கொன்றீவார்மே னிற்கும் புகழ்.

(பரி.) இ-ள். உரைப்பார் உரைப்பவை எல்லாம்=உலகத்து ஒன்றுரைப்பா ருரைப்பனவெல்லாம்—இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும்

* புறநானூறு—18.

புகழ்=வறுமையான் இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்கண் நிற்கும் புகழாம். எ-று.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்.* 'அவற்றுள் உரைப்பாருரைப்பவை' என எல்லார்க்கும் உரிய வழக்கினையே யெடுத்தாராயினும், இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாமென்பதூஉம் பெற்றாம். ஈதற்காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மேல் நிற்குமென்று ரைப்பாருமுளர். அது புகழது சிறப்பு நோக்காமையறிக. (௨)

**விளக்கம்:**—எவனொருவன் தன்னிடத்தே வந்து பிச்சை கேட்கின்றானோ அவனுக்குவேண்டியவற்றைக் கொடுக்கின்ற ஒருவன் மீதே புகழ்நிற்கின்றதென்றும், அது பாடுகின்ற வித்துவான்களால் பாட்டினாலும் உரையினாலும் புகழ்ந்து சொல்லப்படுவதால், அப் பாட்டும் உரையும் உலகம் உள்ள வரையும் கெடாது நிற்கின்றனவென்றும், ஏனைய கல்வி ஆண்மை முதலியவைகளால் வருகின்ற புகழ்கள் அவ்விதம் நிற்பதற்குக் காரணமில்லாது போகின்றனவென்றும், ஆதலால், ஈகையைச்செய்தான் புகழ் எக்காலத்தும் இறவாது நிற்கும் என்றும் இத்திருக்குறளால் பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஈகையால் வந்தபுகழ் ஒன்றுதான் நிலைத்து நிற்பதோ? வேறு பொருள்கள் வைத்தலால் அப்புகழ் நிலையாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

233. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

(பரி.) இ-ள். ஒன்றா உயர்ந்த புகழல்லால்=தனக்கு இணையின்றாக வோங்கிய புகழல்லது—உலகத்துப் பொன்றாது நிற்பது ஒன்று இல்= உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்றில்லை. எ-று.

இணையின்றாக வோங்குதலாவது:—கொடுத்தற்கரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைப்பற்றி வருதலால் தன்னோடொப்பதின்றித் தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப் படுவதென்பதாம்.

* பறநானூறு—27.

இனி, ஒன்றுவென்பதற்கு ஒரு வார்த்தையாகச் சொல்லினெனவும், ஒரு தலையாகப் பொன்றாது நிற்பதெனவும் உரைப்பாருமுளர். (இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.)

விளக்கம்:—தனக்கு ஒருவிதத்தாலும் மற்றப்பொருள்களை சமானமில்லாதும் நிலவுலகத்துக் கெடாதும் நிற்பது மிகவோங்கிய புகழேயல்லாமல் வேறொன்றில்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், இப்புகழே ஒருதலையாகக் கெடாது நிற்பது என்று பெறப்பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் புகழ் அடைந்த ஒரு இல்லறத்தானை தேவவுலகத்தவர் மறுமையில் இவன் செல்கின்ற காலத்தே நன்குமதிப்பரோ? அல்லது துறவறத்தை யடைந்து ஞானத்தைப் பெற்றுச் சென்றவர்களாகிய ஞானிகளை நன்குமதிப்பரோ? அன்புகூர்ந்து அருளல்வேண்டும்" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

234. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

(பரி.) இ-ள். நிலவரை நீள் புகழ் ஆற்றின்=ஒருவன் நிலவெல்லைக் கண்ணே பொன்றாது) நிற்கும் புகழைச் செய்யுமாயின்,—புத்தேள் உலகு புலவரைப் போற்றாது=புத்தேளுலகம் (அவனையல்லாது) தன்னையெய்தி நின்ற ஞானிகளைப் பேணாது. எ-று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின், 'புலவரைப் போற்றாது' என்றார். அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல் "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" * எனப் பிறரானுஞ் சொல்லப்பட்டது. (௪)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள்மேல் வினவிய ஐயத்தை முற்றும் தீர்த்ததாகவே முடிந்தது. அது என்னையோவெனின்? ஒருவன் இப்பூமியில் எக்காலத்துங்கெடாது இருக்கும் புகழினை ஈகை யொன்றால் பெறுவானாயின், மறுமைப்பயனை யடைவதற்குச் செல்லுகின்ற உலகமாகிய தேவ உலகம் இவனையே ஏற்

* புறநானூறு—27.

றுப்போற்றுமே யல்லாமல் ஞானிகளைப் போற்றாது என்று கூறிய தாயிற்று. ஆதலால், ஒருபிறப்பிலேயே இம்மைப்பயனாகிய புகழினையும் மறுமைப்பயனாகியதேவ உலகத்தையும் அடைதற்கு உரியவனாக விருக்கின்ற இல்லறத்தானே சிறந்தவனாதலால் அவனைத் தேவ உலகம் மிகுதியும் மதிக்கும் என்றும், புகழினையடையாது தவத்தினால் தேவ உலகத்தை யடைகின்ற மறுமைப்பயன் ஒன்றை மாத்திரம் அடைகின்ற ஞானிகளது தகுதி இல்லறத்தானடையும் புகழிற்குச் சமானமில்லை யென்பதும் பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் இரண்டு பயனையுந் தருகின்ற புகழினை ஏன் யாவரும் அடைதலில்லை? எதற்காகப் பலர் அப்புகழை யடையாது கெடுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

235. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(பரி.) இ-ள். நத்தம் (ஆகும்) கேடும்=புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடும்,—உளது ஆகும் சாக்காடும்=புகழுடம்புளதாகுஞ் சாக்காடும்,—வித்தகர்க்கல்லால் அரிது=சதுரப்பாடுடையார்க் கல்ல தில்லை. எ-று

நந்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதி பெற்று, நத்தமென்றாயிற்று. போலென்பது ஈண்டு உரையசை. ஆகுமென்பதனை முன்னுங்கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங் கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றான் நிலையின எய்துவார் வித்தகராகலின், 'வித்தகர்க்கல்லாலரிது' என்றார். (இவை யிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—ஒருவன் புகழுடம்பிற்கு உதவியாகிய வளர்ச்சியை உண்டாக்குவதால் வருகின்ற பொருட்கேட்டினையும் அப்புகழுடம்பு எக்காலத்தும் இருக்கும்படியான சாக்காட்டினையும் அடைவது வித்தகர்க்கன்றி முடியாதென்றும், அது சதுரப்பாடுடைய சிலர்க்கே கூடுமென்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. ஏனெனில்? ஒருவன்தான் வருந்தித் தேடியபொருளை இது நிலையாதது

என்று உணர்ந்து நிலையுள்ள புகழை அடையவிரும்புவது அவனது அறிவின் மிகுதியால் முடியுமேயன்றி உலகத்து எல்லோர்க்கும் இது எளிதான காரியமன்று. ஏனெனின்? உலகத்து சிலர் நீங்கலாக மக்களில் பலர் தமக்குக் கிடைத்த பொருளைத் தாம் உண்பதிலும் தம்மனைவி மக்கட்குச் சேமித்துவைத்தலிலும் அறிவைச் செலுத்துகின்றாரேயன்றி தேடியபொருளும் அவர்கள் எடுத்த உடலும் ஒரு கணத்தில் மாய்ந்துபோவன அன்றி நிற்பனவல்ல என்று உணர்வது இல்லை. அதை உணர்வார் வெகு அருமையாதலால் அவர்களை வித்தகர் என்றார். ஏனெனின்? நில்லாத பொருளைக் கொடுத்து நிலையாகிய புகழை அவர்கள் தேடிக்கொள்ளுகின்றார்களாதலால். அன்றியும், இவர்கள் புகழுடம்பானது மேலும் மேலும் செல்வத்தையடையவும், பூதவுடம்பானது தரித்திரத்தை யடையவும் செய்துகொள்ளுவது மிகுதியும் சிலர்க்கேயாகும். ஆதலால், அவரே சதுரப்பாடு உடையராயினர் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் புகழ்படாது வாழுகின்றவர்கள் உலகத்து யாதொருபயனையும் அடைவது முடியாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 236. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
## தோன்றலிற் றோன்றாமை நன்று.

(பரி.) இ-ள். தோன்றின் புகழொடு தோன்றுக=மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க;—அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று=அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று. எ-று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின் மக்களாயென்பதூஉம், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தலென்பதூஉம் பெற்றாம். இகழ்வாரின்மையின், 'நன்று' என்றார்.

விளக்கம் :—புகழோடுவாராதவர்கள் மக்களாய்ப் பிறந்திருத்தலினும் மிருகங்களாகப் பிறத்தல் மிகநல்லது என்று இத்திருக்குறளால் கூறுவதால், ஒருவன் மனிதப்பிறப்பை யடைந்தால் புகழோடுவாழவேண்டும் என்றும், அப்புகழ் உடைமையே எனைய

உயிர்களுக்கெல்லாம் பயன்தருமென்றும், அவ்விதமில்லாதார் யர்தொரு பயனும் உலகத்தார்க்குச் செய்வதற்கு இல்லையாதலால் நன்மை செய்யாத விலங்குகளிலும் தாழ்ந்தவராயினர் என்றும் கூறினர். அதுகேட்ட மாணக்கர், "இவ்விதம் புகழற்று நிற்பவர் மிருகங்களிலும் தாழ்வாக மதிக்கப்படுவதால் அவரை உலகம் இகழு மோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 237. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை யிகழ்வாரை நோவ தெவன்.

(பரி.) இ-ள். புகழ் பட வாழாதார்=தமக்குப் புகழுண்டாக வாழ மாட்டாதார்—தம் நோவார்=அதுபற்றிப் பிறரிகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே— தம்மை இகழ் வாரை நோவது எவன்=தம்மை யிகழ்வாரை நோவது என்கருதி! எ-று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின், 'இகழ்வாரை' என்றார். (எ)

விளக்கம்:—புகழுண்டாக வாழ்வதற்கு இல்லாதார் அவ் வில்லாமையை நோக்கி உலகத்தவர் இகழ்ந்த காலத்தில் 'இவ்வித மாகிய இகழ்ச்சியானது நாம் புகழ்பட வாழாமையினால் வந்ததா யிற்று; அல்லாவிடின், இதுவாராது; இவ்விதம் வந்ததற்குக் கார ணம் நாமாகவே இருக்கின்றோம்' என்று தம்மைத்தாமே நொந்து கொள்ளுதலை விட்டுத் தம்மை இகழ்வாரை நொந்துகொள்வது எது கருதியாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், ஒருவன் புகழ்பட வாழவேண்டுமென்றும், அவ்விதம் வாழாவிடின் அவனைப் பிறர் இகழ்வது நிச்சயம் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "அவ்விதம் புகழைப்பெறாவிடின் உலகத்தோர் பழிப்பர் என்று அறிந்தோம். உலகத்தோர் ஏன் இகழ்தல் வேண் டும்? உலகத்தில் ஏதேனும் குற்றஞ் செய்யின் அதற்காகவே இகழ் தல் வேண்டுமேயன்றி, ஒருவன் தனக்குக் கிடைத்த பொருளை அய லார்க்குக் கொடுத்து அதனால் புகழுடையாவிடின் என்ன குற்ற மாகும்? அதற்காக உலகத்தார் ஏன் வைதல்வேண்டும்?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

238. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையெ
மெச்சம் பெறாஅ விடின். [ன்னு

(பரி.) இ-ள். இசை என்னும் எச்சம் பெறாவிடின்=புகழென்னு மெச்சம் பெறலாயிருக்க அது பெறாதொழிவாராயின்,—வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப=வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசையென்று சொல்லுவர் நல்லோர். எ-று.

'எச்சம்' என்றார், செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொருகுற்றம் வேண்டாவென்பது கருத்து. (அ)

விளக்கம் :—செல்வமுடையோர் தாம் இறந்துபட்டும் இறவாது நிற்கின்ற புகழினைப் பெறாவிடின் அவ்வித செல்வமுடையோர் வேறு குற்றஞ் செய்யாமலே வசை பெறுவது நிச்சயம் என்று இத்திருக்குறளால் அறிந்தோம். ஆதலால், நீங்கள் மேல் வினவியபடி உலகத்து ஒருவன் ஒரு குற்றமுஞ் செய்யாது இருந்தும் தேடிய பொருளை நல்வழியில் செலவழித்துப் புகழை அடையாது இருப்பானாயின் அதைக்காட்டிலும் வேறு குற்றம் அவன் செய்ய வேண்டுவது இல்லை என்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கொடாதவன் குற்றமுடையோன் என்பது எவ்விதம் அறிந்து கொள்ளுதல் கூடும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினார்.

239. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(பரி) இ-ள். இசை இலா யாக்கை பொறுத்த நிலம்=புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம்—வசை இலா வண்பயன் குன்றும்=பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும். எ-று.

உயிருண்டாயினும் அதனாற்பயன் கொள்ளாமையின், 'யாக்கை' என்னவும், அந்நிலத்திற்குப் பொறையாகலின், 'பொறுத்த' எனவுங் கூறினா. விளையுள் குன்றுதற்கேது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேனின்றது. (இவை நான்கு பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.) (கூ)

**விளக்கம்:**— எக்காலத்தும் அழியாத புகழை யடையாத ஓர் உடம்பினைச் சுமந்த விளைநிலம் சரியான விளைவினையடையாது என்று இத்திருக்குறள் கூறியதால், எவனொருவன் பொருள் ஈந்து புகழை அடையவில்லையோ அவன் உயிருடையனாக விருந்தும் உயிரில்லாத பிணத்திற்கு ஒப்பனென்றும், அவ்வித பிணத்திற்கு ஒத்த பாவம் பொருந்திய தேகமாகிய சுமையினைச் சுமந்ததால் எல்லாச்சுமையையும் பொறுக்கக் கூடிய பொறுத் தன்மையை யுடைய நிலமும் விளைவில் குன்றிவிடும் என்றும் கொடையுடையவன் ஒருவனே புண்ணியதேகி என்றும், ஏனையோர் பாவமே ஓர் உருக்கொண்ட தேகிகள் என்றும் பெற்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தான் வருந்தித்தேடிய பொருளைப் பிறர்க்குக்கொடாமையினால் பிணம் என்று கூறுவது தகுதி தானோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**240. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

(பரி.) இ-ள். வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்=தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவார்;—இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்=புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார். எ-று.

வசையொழிதலாவது:—இசையென்னு மெச்சம் பெறுதலாயினமையின், இசையொழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல் இசையிலாயாக்கை யென்றதனை விளக்கியவாறு. இதனால் இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" *என மேலே கூறப்பட்டது; படவே, (இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.)

இனி மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும்: அஃதறிந்தடக்கிக் கொள்க; யாம் உரைப்பிற்பெருகும். (ய)

**விளக்கம்:**—தம்மை யாரும் பழியாதும் வசை கூறாதும் வாழ்பவர் எவரோ அவரே உலகத்து உயிர் வாழ்வாராவார் என்றும், அவ்வித புகழையடையாது உலகத்து வாழ்வார் இறந்தவரே ஆவா

---

* திருக்குறள்—50

ரென்றும் இத்திருக்குறள் கூறுவதால், மேல் நீங்கள் "கொடாமையி னால் பிணமென்று கூறுவது தகுதிதானோ?" என்று வினவிய ஐயத் தை இது ஒழித்ததாயிற்று. ஆதலால், எவனொருவன் இல்லறத்தானாக விருக்க எண்ணி, மனைவியோடு வாழ்ந்து, புதல்வரைப்பெற்று, அன் புடையவனாகி, விருந்தோம்பி, இனியவைகூறிச், செய்ந்நன்றி யுணர் ந்து, நடுவுநிலையுடையனாய், அடக்கமுடைமை கொண்டு, ஒழுக்கமே உயிரென மதித்துப், பிறனில் விழையாது, பொறையுடையனாய், அழுக்காறு கொள்ளாது, பிறர் பொருள் விரும்பாது, புறங்கூறாது, பயனில சொல்லாது, தீவினைக்குப் பயந்து, ஒப்புரவறிந்து, ஈகை யைச்செய்து வாழ்கின்றானோ அவனே உலகத்தாரால் மனிதனென மதிக்கப்பெற்றுப் புகழ்கொண்டு வாழ்ந்து மறுமைப்பயனாகிய தேவ போகத்தையும் அடைவான் என்பதை இவ்வில்லறவியலால் நாம் தெரிந்துகொண்டோம். மக்காள்! முன், உரை ஆசிரியர் உரைப் பாயிரத்துள் கூறியபடி இரண்டு அறங்களுள் முதலாவதாகிய இல் லறவியலை முடித்தோம்; இனி இரண்டாவது இயலாகிய துறவற வியலைத் தொடங்குவாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஐய! உம்முடைய பேரன்பால் இல்லறம் இதுவென அறிந்தோம். இனி துறவறத்தையுங் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவா ராயினர்.

இல்லறவியல் முற்றிற்று.

# துறவறவியல்.

(பரி.) இனி, முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது:— மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அது தான் வினைமாசுதீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

## விரதம்.

(பரி.) அவற்றுள் விரதங்களாவன:— இன்னவறஞ் செய்வலெனவும், இன்னபாவம் ஒழிவலெனவும், தம் ஆற்றலுக்கேற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பில வாகலிற் பெருகுமென்றஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

விளக்கம்:—மக்காள்! துறவறமாவது:— மேல் இல்வாழ்க்கை முதல் புகழ் ஈறுகச்சொல்லிய எல்லா இலக்கணங்களும் அமைந்து இல்லறத்தில் ஒருவன் சிறிதும் கெடாது நடந்து, அவ்விதம் நடந்ததால் அறிவுடையவனாகி, 'இவ்வுலகம் நாம் இருக்கும் ஓர் சத்திரத்திற்குச்சமானம்; என்றேனும் இதைவிட்டுப்போதல் வேண்டும்; அவ்வாறு விட்டுப்போயினும் நாம் செய்து வருகின்ற இல்லறம் என்னும் தருமமானது இம்மையில் புகழும், மறுமையில் வானஉலகமுமே கொடுப்பதாக இருக்குமேயன்றி வேறு எவ்விதமும் பிறப்பினை யறுப்பதற்கு உபாயம் ஆகாது என்று பிறப்பிற்கு அஞ்சி மோட்சத்தினை யடையத் துறந்தவனெவனோ அவனுக்கு உரியதாகிய தருமம் எனப்படும். அத்துறவறமானது ஒருவனுக்குக் கைவரவேண்டுமாயின் அவனது அந்தக்கரணங்கள் பரிசுத்தப் படல்வேண்டும். அவ்விதம் பரிசுத்தப்படுதற்கு விரதங்களைக் கொள்ளல்வேண்டும. அவ்விதம் விரதங்களால் அந்தக்கரணங்கள் பரிசுத்தமான இடத்து ஞானம் உதிக்கும். ஆகவே, நம் தெய்

வப் புலவரும் விரதம், ஞானம் என்று இரண்டாகத் துற வறவியலை வகுத்து முதலில் விரதம் என்பதை அருளுடைமை முதல் கொல்லாமை ஈறாக ஒன்பது அதிகாரங்களால் வகுத்து ஊள்ளனர். அவ்விரதம் ஞானம் என்பன இரண்டனுள் முத லில் விரதமானது ஒருவன் 'இன்ன தருமத்தைச் செய்து இன்னபாவத்தை ஒழித்து விடுவேன்' என்று தனக்குள்தான் நிர் மாணித்துத் தன்னுடைய தேகவன்மைக்குத் தக்கவளவாகச் செய்து கொள்வது. அவ்வித விரதம் பலதிறப்பட்டதாக இருக்கின்றதாத லால், அப்பலவகையையும் நாயனார் இங்கு கூறாது அவ்விரதம் முற் றும் அடங்கக் கூடிய சிறப்புடைய சில பகுதியைக் கூறத்தொடங்கி னர். அவ்விரதங் கூறுகின்ற காலத்து முதலாக அருளுடைமை சொல்லப்பட்டிருக்கின்றதென்று ஆசிரியர் கூறலும், கேட்ட மாணாக்கர், "இப்போது நாங்கள் கேட்ட விரதம் என்பது மிகப் பெரியதோர் விடயமாகக் காணப்படுகின்றது. முதலாவதாகிய அருளுடைமை என்பதை எங்களுக்கு விளக்கல்வேண்டும்" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 25. அதிகாரம்.

## அருளுடைமை

---

(பரி.) அஃதாவது:—தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண் மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

விளக்கம்:—மக்காள்! அருளுடைமை என்றால் எல்லா உயிர் கள் மீதும் செல்லுகின்ற கருணை என்பது பொருள். அதாவது, உயிர்கள் மீது செல்லுகின்ற ஆசையையே அன்புடைமை யென் றும் அருளுடைமை யென்றும் கூறுகின்றோம். ஆயினும், அன் பென்பது தனக்குச்சம்பந்தமானவர்கள் ஆகிய மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள் சுற்றம் என்பவர் மீது செல்லுகின்ற ஆசை என்றும், அருள் என்பது அவ்வித சம்பந்தம் ஒன்றுமில்லாமல் உலகத்தில்

உள்ள அசைவன அசையாதனவாகிய எல்லா உயிர்கள் மீதுஞ் செல்லுகின்ற ஆசை யென்றும் பிரித்துக் காட்டப்படும். முன்னர், இல்லறத்தைக் கூறவந்த ஆசிரியர் புதல்வரைப் பெறுதலுக்குப் பிறகு அன்புடைமையைக் கூறியது போல், இத்துறவறத்திற்கு மிகச்சிறந்ததாகிய அருளுடைமை என்பதை முதல் அதிகாரமாக வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " இவ்வருளுடைமையினால் எவ்விதம் துறவறம் கைகூடும், அதை விளக்கல் வேண்டும் " என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

241. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
பூரியார் கண்ணு முள. [செல்வம்

(பரி.) இ-ள். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம்=செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வருஞ் செல்வம்;—பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள=அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார் கண்ணுமுளவாம் ஆகலான். எ-று.

அருளான் வருஞ் செல்வமாவது:—உயிர்களையோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார் கண்ணேயல்லதில்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணுமுளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில வென்பதாம். (க)

விளக்கம்:—மக்காள்! நம் தெய்வப்புலவர் இத்திருக்குறளால் உலகத்துள் செல்வம் என்று கூறுகின்ற செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்த செல்வம் அருட்செல்வமென்றும், அச்செல்வம் நீங்கலாகிய பொருளால் வரும் செல்வங்களெல்லாம் செல்வங்களாக மதிக்கப்படாவென்றும் அருளிச் செய்தனர். ஏனெனில்? பொருளால் வரும் செல்வங்கள் அருளென்பது இன்னதென்று அறியாத நீசர்கண்ணும் உண்டாகுமாதலால், செல்வம் என்பது ஒருவனுக்கு உள்ள பொருள் என்றும், அப்பொருளளவிற்கு ஏற்ப இல்லறத்தை நடத்த வேண்டுமென்றும் அறன் வலியுறுத்தலுள் கூறினாராதலால், அது தெரிந்து அவ்வழிப் பொருட் செல்வத்தை மதித்து அது கொண்டு இல்லறம் நடத்திய ஒருவன், அதனையே பெரி

தென்று எண்ணுது இருக்கவும், அப்பொருள் ஒன்று இல்லறத்தை நடத்துவதற்கு எவ்வளவு துணையாக நின்றதோ அதுபோல் உயிர்களை எல்லாம் ஒன்றெனமதித்து அவ்வுயிர்கள் மீது செலுத்தும் ஆசை என்னும் அருளுடைமை இன்றியமையாத தென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்வருளுடைமை ஒன்றே துறவறத்திற்குத் துணையோ? வேறுதுணையில்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

242. நல்லாற்ரு ணுடி யருளாள்க பல்லாற்ருற்
றேரினு மஃதே துணை.

(பரி.) இ-ள். நல்லாற்ருன் நாடி அருள் ஆள்க = அளவைகளானும் பொருந்து மாற்ருனும் நன்ருன நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்ருராய்ந்து, அருளுடையராக;—பல்லாற்ருல் தேரினும் துணை அஃதே = ஒன்றையொன்ருெவ்வாத சமயநெறிக ளெல்லாவற்ருனும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை. எ-று.

அளவைகளாவன:—பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளானுய்த் துணரும் அனுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென மூன்று. ஒப்புப்பற்றி யுணரும் உவமையும், இங்ஙனமன்ருயின் இது கூடாதென்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாருய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாரு முளர். இவையும் ஒருவாற்ருன் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாருவது:—இதுகூடும் இதுகூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது: இதனை வடநூலார் யுத்தி யென்ப. ஆற்ருனென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்ருெவ்வாமை யாவது:—மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறு கோடல்; அன்னவாயினும் அருள்துணையென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினுமுதவலின், 'துணை' என்ருர். இவை யிரண்டு பாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

விளக்கம்:— காட்சி, அனுமானம், ஆகமம் என்ற மூன்று அளவைகளாலும் இது கூடும் இது கூடாது என்று காணப்படுகின்ற பொருத்தத்தாலும் ஆராய்ந்துபார்க்கின் உயிர்கள் மீது செலுத்துகின்ற அருளைக்காட்டிலும் பெரியதோர் துணை நமக்கு யாதொன்றும் இல்லை என்று உணர்ந்து அருளுடையராக வேண்டு

மென்றும், எல்லாச் சமயவாதிகளும் கூறுகின்ற நூல்கள் எல்லா வற்றையும் ஆராய்ந்து பார்க்கினும் அவ்வருளைக் காட்டிலும் வேறோர் துணை இல்லை என்றும் இத்திருக்குறளால் அறிகின்றோ மாதலால், மேற்கூறிய வண்ணம் துறவறத்தில் நின்ற விரதி ஒருவ னுக்கு உற்றதுணை யாவது அதுவே என்று அறிந்தோம் என்ற னர். அது கேட்ட மாணுக்கர், "அவ்விதம் அருளென்னுந்துணை கொள்வனுயின் கொண்டவனுகிய இவ்விரதிக்கு எதுகிடைக்கும்?" என்றுகேட்டனர். ஆசிரியர் கூறலாயினர்.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

(பரி.) இ-ள். இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்=இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்றுபுகுதல்;—அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை= அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை. எ-று.

இருள்செறிந்த துன்புவுலகமென்றது திணிந்தவிருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஒரிடமாகலின், உலகமெனப்பட்டது. (ரு)

விளக்கம்:—இத்திருக்குறள் அருள்மயமாகிய மனத்தினை யுடையார்க்கு இருள்மயமாகிய துன்ப உலகத்துப்போய்த் துன் பப்படுதல் இல்லை என்று கூறுவதால், நீங்கள் வினவிய வினாவிற்கு விடையாக அருளென்னுந் துணையுடையானொருவன் நரகத்துன் பத்தை யடையான் என்பது பெறப்பட்டது என்றனர். இது கேட்டமாணுக்கர், "அவ்விதம் அருள்கொண்டு நிற்கின்ற விரதியின் உயிருக்கு யாதொரு துன்பமும் வாராது என்றமையால், அவன் உயிர் அஞ்சவேண்டிய காரணம் ஒன்றுமில்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

244. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(பரி.) இ-ள். மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு=நிலைபேறுடைய வுயிர்களைப்பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு—தன் உயிர்

அஞ்சும் வினை இல் என்ப = தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர். எ-று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், 'மன்னுயிர்'* என்றார். அஞ்சுதல் = துன்ப நோக்கி யஞ்சுதல். அன்னவறத்தினோன் கொலைமுதலிய பாவங்கள் செய்யானெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறா யிற்று. (௪)

விளக்கம்:—எக்காலத்தும் அழியாது நித்தமாயிருக்கின்ற உயிர்களை யொருவன் காப்பாற்றி அவ்வுயிரிடத்து அருளுடையனாக இருப்பானாயின், தன்னுடைய உயிர் அஞ்சவேண்டிய தீவினைகள் எவையும் அவனுக்கு உண்டாகாவென்று அறிந்தோர் கூறுவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், அருளுடைய ஒருவன் கொலை முதலிய பாவங்களைச் செய்யமாட்டானென்றும், அவ்விதச் செயலால் மறுமைக்கும் நரகம் புகாது வீட்டினை யடைவதற்கு வழி யாகும் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்டமாணாக்கர், "அருளால் வீடு அடைவது மறுமைப்பயன் என்று அறிந்தோம். ஆயின், அருள்கொண்ட ஒருவனுக்கு இம்மையிலும் இன்பமுண்டா காதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

245. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(பரி.) இ-ள். அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை = அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பமுண்டாகாது;—வளி வழங்கும் மல்லல் மாஞாலம் கரி = அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று. எ-று.

சான்றுவார் தாங்கண்டு தேறிய பொருளைக்காணாதார்க்குத் தேற்றுதற் குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவருங்கண்டறிவாரின்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார் யா வருஞ் சான்றென்பார், 'வளி வழங்கு மல்லன்மா ஞாலங் கரி' என்றார்; எனவே, இம்மைக்கணென்பது பெற்றாம். ஞாலம்—ஆகுபெயர். (இவ் மூன்று பாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில் லாமை கூறப்பட்டது.) (௫)

* இத்திருக்குறளில் நாயனார் மன்னுயிர் என்றதால் ஆன்மாநித்தியன் என்பதும் உயிர்கள் பல என்பதும் கூறினாராயிற்று.

விளக்கம்:—அருளுடையாருக்கு இம்மையினும் துன்பம் உண்டாகாதென்றும் அதற்கு இப்பெரிய பூமியில் உள்ளவரே சாட்சியாவார் என்றும் இத்திருக்குறள் கூறுதலால், ஒருவர் தாம் சாட்சியளவையாகக் கண்டு அக்காணுதலால் உண்மையென அறிந்து, கண்டதாகிய அப்பொருளையே தாம் தம்போல் காணாதார்க்குத் தெளிய உரைப்பார் சான்றோராதலால், அவ்வித சான்றோர் இதுவரையும் உலகத்து அருளுடை எவரும் துன்பம் அடைந்ததாகக் கண்டு கூறியது இல்லை என்றதாயிற்று. இதனால் அருளுடையார்க்கு இம்மையினும் யாதொரு துன்பமும் இல்லை என்பதே துணிவென்பது பெறப்பட்டது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேல் ஐந்து திருக்குறள்களாலும் அருளென்பது எது என்றும், அதுவே உயிர்க்குத்துணை யென்றும், அத்துணை கொண்டு நின்றார் இம்மை மறுமையாகிய இருமையினும் துன்ப மடையாது உயிர்வாழ்வர் என்றும் அறிந்தோம். ஆயின், விரதியாகவந்த ஒருவன் எதன் பொருட்டு இவ்விதம் அருளைக் கொள்ளாது விடுவான்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவார் ஆயினர்.

246. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(பரி.) இ-ள். அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் = உயிர்கண் மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப்படும் கொடுமைகளைச்செய்தொழுகுவாரை—பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் = முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது தாந்துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர். எ-று.

உறுதிப்பொருள் = அறம். துன்புறுதல் = பிறவித்துன்ப* மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறொழுகாரென்பது கருத்து. (சு)

விளக்கம்:—உயிர்கள் இடத்துச் செய்ய வேண்டுவதாகிய அருள் என்பதைச் செய்யாது, விடவேண்டியதாகிய கொடுமைகளையே செய்து உலகத்து உயிர்வாழ்வாரை நல்லோர் 'இவ்விதம்

---

* பிறவித்துன்பம் மூன்றும் மேலே நான்காம் குறள் உரையிற் கூறப்பட்டது. அஃதாவது:—கொலை, காமம், வெகுளி, மயக்கம் என்றுங் கொள்ளலாம்.

இவர் அருளுடைமை கொள்ளாது நிற்றற்குக் காரணம் ஏதொன்றும் இல்லை, மேற்பிறவிகளில் உறுதியைத் தரும் அறம் என்பதை முடியச் செய்யாததனால் இப்பிறவியினும் விரதம் பூண்டு நின்றும் உயிர்களுக்குத் தீங்கு செய்கின்றனர்' என்று கொள்ளுவரென்று இத்திருக்குறள்கூறுவதால், தவநிலையடையவேண்டித் துறவுபூண்ட ஒருவனும் முற்றவம் இல்லாமையால் இவ்விதம் உயிர்களுக்குச் செய்யவேண்டிய அருளுடைமையை மறக்க நேருகின்றது என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் அருள்கொள்ளாத விரதிகள் மீண்டும் பூவுலகத்துவந்து தோன்றித் துன்பங்கள் யாவையும் அடையவேண்டும் போலும்! அவர்களுக்கு வீட்டுலகம் இல்லை என்றே நினைக்கின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

247. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு. *

(பரி.) இ-ள். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை = உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்திடமில்லை;—பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாதியாங்கு = பொருளில்லாதார்க்கு இவ்வுகத்தின்பம் இல்லையாயினாற்போல. எ-று.

அவ்வுலகம், இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத் தின்பங்கட்குப் பொருள் காரணமானாற்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள்காரணமென்பதாயிற்று. (எ)

விளக்கம்:—இவ்வுலகத்து மக்கள் அடையவேண்டிய அறத்தையும் இன்பத்தையும் அடைவதற்குப்பொருள் ஒன்றே எவ்வாறு காரணமாக உள்ளதோ அதுபோல் வீட்டு உலகத்தையடைய விரும்பின் அருள் வேண்டுமென்றும், அவ்விதம் பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகம் இல்லாததுபோல் அருளில்லார்க்கு அவ்வுலகமாகிய வீடும் இல்லை என்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. இக்கருத்தையே நாலடியார்க் காரரும்,

---

* "இல்லாகியாங்கு" என்றும் பாடமுண்டு.

"வடு விலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும்—எய்தும்
நடுவணதெய்தாதா னெய்தும் உலைப்பெய்து
அடுவதுபோலும் துயர்." *

என்றமையால், இவ்வுலகத்துக்குப் பொருளும் அவ்வுலகத்துக்கு அருளும் காரணமென்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஆயின், ஒருகால் பொருள் இல்லாதார் இவ்வுலகத்து இன்பத்தை யடையாது துன்பமுற்றாலும் மற்றோர் காலத்துப் பொருளை அடைவாராயின் அடையவேண்டிய இன்பங்களை யடைவதுபோல், அருளற்றார் ஒருகாலத்து அருளில்லாமையால் இம்மை மறுமைப் பயனை இழப்பாராயினும் மற்றோர் காலத்து அருள்கொண்ட மனமுடையவராயின் அவ்வருளால் ஆகவேண்டிய பெரும்பயனை யடைதல் கூடுமன்றோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

248. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

(பரி.) இ-ள். பொருள் அற்றார் ஒரு கால் பூப்பர்=ஊழான் வறியாராயினர் அது நீங்கிப் பின் ஒரு காலத்துச் செல்வத்தாற்பொலிவர்;—அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது=அவ்வாறன்றி அருளில்லாதார்பாவம் அருமையின் அழிந்தாரே, பின்னொருகாலத்தும் ஆதலில்லை. எ-று.

மற்று—வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாற்றானொப்புமை கூறினாராகலின், அது மறுத்து பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு. (அ)

விளக்கம்:—தாம் முன் செய்த தீவினையின் பயனால் தரித்திரத்தையடைந்த மக்கள் பின் அத்தீவினையின் பயனொழிந்து நல்வினைப்பயன் வந்தகாலத்துச்செல்வத்தை யடைதலுங் கூடுமென்றும், ஆனால், ஒருமுறை அருளிலாமையினால் உயிர்களுக்குத் தீங்குசெய்தவர் அத்தீங்கின் பயனாகிய பாவமானது செய்தஅவரை விட்டு நீங்குவது இல்லையாதலால் அவர்கள் எக்காலத்தும் அருளையடைந்து

* நாலடியார்—பழவினை.

அதனால் ஆகின்ற வீட்டுலகத்தையடைதல் முடியாது என்றும் முடிவாக இத்திருக்குறள் கூறுவதால்,மேல் திருக்குறளில் பொருள் இல்லாமையை ஒருவாறு அருளில்லாமைக்கு ஒப்புமை கூறியதே யன்றி, இவ்வருளில்லாமையானது பொருளில்லாமை போலல்லாது மிகக்கொடியது என்றும் எடுத்துக்காட்டப்பட்டது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஐய! சிலர் அருளிலார்போல் உயிர்கட்குப் பல தீங்குகளைச் செய்கின்றாராயினும் ஏதேனும் ஒரு அறத்தைச் செய்து வருவதை நாங்கள் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆதலால், அருளிலாதவனாயினும் அவன் செய்த அறத்தின் பயன் அவனுக்குக் கிடைக்குமன்றோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

(பரி.) இ-ள். அருளாதான் செய்யும் அறம் தேரின் = உயிர்கண்மாட்டு அருள்செய்யாதவன் செய்யும் அறத்தையாராயின்,—தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று = ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். எ-று.

மெய்ப்பொருள் = மெய்நூலிற் சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளை யுணர்ந்தால் அதனைத் தன் ஞானமின்மையால் தானே யழித்துவிடும், அதுபோல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால்* தானேயழித்துவிடுமென்பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றாம். (இவை நான்கு பாட்டானும் அத்துணை யில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.) (கூ)

விளக்கம்:—ஒருவன் அருள் என்பதே இல்லாமல் ஏதேனும் ஒரு அறத்தைச் செய்வானாயின், அவ்வறமானது எவ்வித தகுதியுடையதாக இருக்குமென்று ஆராயின் ஞானமேயில்லாத ஒருவன் ஊழ்வலியால் ஒருகால்மெய்ப் பொருளையறிந்து கொள்ளுவதுபோலும் என்று இத்திருக்குறள் கூறுவதால், ஞானமில்லாத ஒருவன் நிலைபெற்ற அறிவில்லாமையால் ஏதேனும் நல்லூழால் ஒருகாலத்து

* அருளாமை = அருளில்லாமை.

மெய்ந்நூலிற் சொல்லிய மெய்ப்பொருள் ஒன்றினை உணர்ந்தாலும், தான் நிலைபெற்ற ஞானமில்லாதவனாகையால், உணர்ந்த மெய்ப்பொருளினை அழித்து விடுவான். அதுபோல் அருளில்லாதான் செய்யும் அறமும் முடிவுபெறாது அழிந்துபோகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அவ்விதம் நல்வினை இல்லாதான் ஒருவன் அதன்பயனாக அருளைப்பெறாது நிற்பான் என்று அறிந்தோம். இவ்விதம் நற்றுணையாகிய அருளினையடைதற்கு ஏதேனும் உபாயம் உள்ளதேல் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

250. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(பரி.) இ-ள். வலியார் முன் தன்னை நினைக்க = தன்னின் வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர்முன் தானஞ்சிநிற்குநிலையினை நினைக்க —தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து = அருளில்லாதவன் தன்னி னெளியார்மேல் தான் நலியச் செல்லும்பொழுது. எ-று.

மெலியாரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினாராயினும், ஏனையஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து அதன்மேல் அருளுடையனாமென்பதுகருத்து. (இதனால் அருள் பிறத்தற்கு உபாயங் கூறப்பட்டது.) (ய)

விளக்கம்:—ஒருவன் 'தன்னைக்காட்டிலும் வலிமையுடையவர்கள் தன்னைத்துன்புறுத்த வருகின்ற காலத்துத் தான் எவ்விதம் பயந்து நிற்கின்றான் என்னும் அத்தன்மையினை நினைக்க' என்று இத்திருக்குறள் எடுத்துக்காட்டுவதால், ஒருவன் உண்மையாகவே அருட்டன்மை பிறத்தற்கு உபாயம் அறியவேண்டுமாயின், வலிவற்ற உயிர்களெல்லாம் பலமுடையவர்கள் துன்புறுத்துவதால் வருந்தும் என்றும், அவ்விதம் வருந்தாதிருக்கும் வண்ணம் நாம் யாதொரு உயிர்க்கும் துன்பஞ் செய்யாதிருத்தல் வேண்டும் என்றும் நன்குபுலப்படுகிறது. அவ்வாறு எண்ணுவானாயின் அருள் உண்மையாகவே பிறக்கும் என்றும், அதனினும் உபாயம் வேறு இல்லை என்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உயிர்களைத் துன்புறுத்தாது இருக்கின் அருள் பிறக்கும் என்று அறிந்தோம். அதற்கு முதலாகச்செய்யவேண்டிய செயல்யாது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 26. அதிகாரம்.

# புலான் மறுத்தல்.

(பரி.) அஃதாவது:—ஊனுண்டலையொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னுமுளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனான் வருதலின் அதன் காரியமாதலையும் ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின், அதனை விலக்குதற்கு, இஃதருளுடைமையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது புலால் புசித்தலை நீக்குதல். ஏனெனின்? முன் ஒருமுறைப்புலாலை உண்டதால் இப்பிறவியில் புலாலினை உண்ணத்தூண்டுவதற்குக் காரணமாதலும், இப்போது உண்ண விரும்பினால் கொலைப்பாவத்தை உண்டாக்குவதுடன் பிறவிகள் தோறும் அப்பாவமானது ஊன் உண்டலைச் செய்யத் தூண்டிநிற்பதாலும், அருளின் தோற்றத்தை விரும்பிய மக்கட்கு இது கூடாததாயிற்று. ஆதலால், அவ்வூன் உண்டலை விலக்குவது பெரியதோர் நலம் என்று இது அருளுடைமை என்னும் அதிகாரத்துப் பின் வைக்கப்பட்டது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், ' ஊன் உண்டலால் உயிர்களுக்கு எவ்விதகுணம் உண்டாகும்? அவ்விதம் உண்டாலால், அது எவ்வாறு அருளுடைமையைத்தடுக்கும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(பரி.) இ-ள். தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் =தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரினுடம்பைத் தின்பவன்—எங்ஙனம்ஆளும் அருள்=எவ்வகையான் நடத்தும் அருளினை! எ-று

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளுமருளென்பது ஆளானென்பது பயப்பநின்ற இகழ்ச்சிக்குறிப்பு. (௧)

விளக்கம்:—'ஒருவன் தன் உடம்பானது நன்றாகப்பருத்து வலிமைகொள்ளல் வேண்டும் என்னும் எண்ணத்துடன் மற்றொரு உயிர் இருப்பதற்கு இடமாயிருந்த உடம்பைத் தின்பானாயின், அவ்விதக் கருத்துடையான் உலகத்து ஏனைய உயிர்கள்மீது எவ்வாறு அருளினைச் செலுத்தல்கூடும்?' என்றமையால், ஓர் பயனுமில்லாது கணத்துள் அழிந்துபோய்ப் புதைக்கப்படும் அல்லது எரிக்கப்படும் தன்னுடைய தேகத்தைப் பெருக்கவேண்டி ஏனைய உயிர்களுக்கு இருக்க இடந்தந்த உடல்களை அழிக்கின்ற பாபியாகிய இவன் மிகக் கொடியனாதலால் ஒருக்காலும் அருளை அடையான். இவன் கொண்ட துறவறத்துக்கு முதலாகிய விரதமும் கைகூடாத தோடு இவன் எடுத்தசெயல் ஒரு காலத்தும் நிறைவேறாது. அத்துடன், கடவுள் தண்டனைக்கும் ஆளாவான் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஏன் கடவுள் தண்டிப்பார்? கடவுளுக்கும் புலால் உண்ணலுக்கும் என்னசம்பந்தம்?" என்று கேட்டலும், ஆசிரியர், "கடவுள் இல்லாத இடம் ஒன்றும் இல்லை; அவர் எங்கும் நிறைந்தவர் என்ற உண்மையை நீங்கள் அறிவீர்கள். அவ்விதம் இறைவன் எங்கும் நிறைந்திருப்பதைப் பெரியோர், 'உயிர் இருப்பதற்கு இடம் உடல் என்றும், கடவுள் இருப்பதற்கு இடம் உயிர் என்றும்' கூறுகின்றனர். இதனையே, நம் தாயுமானாரும் "உயிர்க் குயிராய்த் தழைத்ததேது" என்று கடவுளிலக்கணங் கூறினர். ஆதலால், ஓர் உடலினை உண்பதால் அவ்வுடலிலிருந்த உயிர்க்கு மாத்திரம் கொடுமை செய்வதாக இல்லாது அவ்வுயிருக்கு உயிராயிருந்த கடவுளுடைய கோபத்தையும் ஏற்றதாயிற்று. இதுகருதியே நம் திருமூலரும் "எவ்வுயிரும் பராபரன் தன் சன்னிதியதாகும்" என்று கூறுகின்றனர். ஓர்உயிரைக் கொன்றால் அவ்வுடலை அழித்த தென்று கூறாமல் இறைவன் எழுந்தருளியுள்ள பல கோயில்களுள் ஒன்றினை இடித்ததற்கே ஒக்கும் எனப் பெறப்படுவதால், கடவுளுடைய கோபத்தினையும் ஊன் தின்பவன் பெறுகின்றான்" என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "முன் அதிகாரத்தில் பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்து இன்பமில்லாததைப்போல, அருளில்லாதார்க்கு அவ்வுலகத்து இன்பமும் இல்லாததாக முடியும் என்று உவமை வாயிலாக நம் தெய்வப்புலவர் கூறினரென்று அறிவித்தீர். அதுபோல்,

இப்புலால் உண்ணுமைக்கும் ஏதேனும் நம்தெய்வப்புலவர் உவமை கூறுகின்றனரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(பரி.) இ-ள். பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை=பொருளாற் பயன் கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை;—ஆங்கு அருளாட்சி ஊன்தின்பவர்க்கு இல்லை= அதுபோல அருளாற்பயன்கோடல் ஊன்தின் பவர்க்கில்லை. எ-று.

பொருட்பயனிழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயனிழத் தற்கு ஊன்தினல் காரணமென்பதாயிற்று. ஊன்தின்றாராயினும் உயிர் கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கிழுக்கில்லையென்பாரை மறுத்து,அஃதுண்டென்பது இவையிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.(உ)

விளக்கம்:—எவ்விதம் தமக்குக் கிடைத்த பொருளினது பிரயோஜனம் அதனைப் பத்திரமாகப் பாதுகாவாதார்க்கு இல்லாமற்போமோ, அதுபோலவே ஊன் தின்பவர்க்கும் அருளாலாகிய பிரயோஜனம் அடைவதற்கு இல்லாமல் போகும் என்று இத்திருக்குறள்கூறுவதால், பொருளின் பயனை அடைய வேண்டுமானால், எவ்வாறு ஒருவன் தனக்குக்கிடைத்த பொருளைச் சிறிதும்கெடாத வண்ணம் போற்றுகின்றானே, அதுபோல அருள் என்னும் பொருளின் பயனை இழவாதிருக்க வேண்டுவான் புலாலைப் புசியாதிருக்க வேண்டும். அன்றியும், 'ஊனைத்தின்றாலும் உயிர்களுக்கு ஒருதீங்கும் நினையாது பலர் இருக்கின்றார்கள்; அவர்கள் அருளையடைவதில் யாதுந் தடையில்லை' என்பாரையும் இதனால் மறுத்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணக்கர், "நீவிர் இவ்விதம் கூறுவது எங்களுக்கு விளங்கவில்லை. ஏதோர் பழக்க மிகுதியால் ஒருவன் புலாலையுண்டானாயினும், உயிர்கள் என்கின்ற விஷயத்தில் எக்காலத்தும் காருண்யத்தையே மனத்தில் வைத்து ஏன் நன்மையைச் செய்தல் கூடாது ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்

253. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா
ஞுடல்சுவை யுண்டார் மனம். [தொன்று

(பரி.) இ-ள். படை கொண்டார் நெஞ்சம்போல்=கொலைக்கருவி யைத் தங்கையிற்கொண்டவர் மனம் அதனாற் செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறுபோல—ஒன்றன் உடல்சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது=பிறிதோருயிரினுடலைச் சுவைபடவுண் டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது. எ-று.

சுவைபடவுண்டல்=காயங்களான் இனிய சுவைத்தாக்கி யுண்டல். (இதனால் ஊன்தின்றார் மனம் தீங்குநினைத்தல் உவமவளவையாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.) (௩)

விளக்கம் :—கொல்லுகின்ற ஆயுதம் ஒன்றினைத் தம்கையில் வைத்துள்ளவர்களுடைய மனமானது அவ்வாயுதத்தால் செய்யப் படும் கொலைத் தொழிலையே எண்ணுவதல்லாமல் அருள் நிறைந்த தொழிலை எவ்வாற்றானும் எண்ணாததுபோல், பிறிதோர் உயிர் இருந்த உடம்பினைப் பலவிதகாயங்களிட்டுச் சுவைபடச் செய்து உண்டவர்களுடைய மனமானது அவ்வூன் தின்னலைக் கருதுமேயல்லது அருள் என்பதைக்கருதாது என்று இத்திருக்குறளால் கண்டோமாதலால், நீங்கள் மேற்கொண்ட ஐயமானது அறவே ஒழிந்ததாயிற்று. ஏனெனின்? மனம் ஒருவழியும் செயல் ஒருவழியும் இருக்குமாயின் அது உண்மைச் செயலாக முடியாது ; உண்மையாகிய எண்ணமு மாகாது. ஆதலால், உண்மையாகவே ஒருவன் அருளின் 'பயனை யடைய வேண்டுமாயின் ஊன்தின்னாதிருத்தல் வேண்டும் என்று கூறினர். அதுகேட்ட மாணக்கர், "அருளுடைமை என்பதியாது? அது அல்லாதது யாது? அதன் இலக்கணத்தை அருளுடைமை என்னும் அதிகாரத்துள்ளும் தாங்கள்கூறவில்லை. இப்போதேனும் எங்கட்கு அவ்வருள் என்னும் சொல்லின் இலக்கணத்தைத் தெரிவித்தல் வேண்டும்" என்று கேட்டனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

254. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(பரி.) இ-ள். அருள் யாதெனின் கொல்லாமை=அருள் யாதெனின், கொல்லாமை;—அல்லது (யாதெனின்) கோறல்=அருளல்லதியாதெனின்,

கோறல்;—அவ்வூன் தினல் பொருளல்லது—ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின்கை பாவம். எ-று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன்றின்கையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது—கொடுமை. சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்ல தெனப்பட்டது. கோறலென முன்னின்றமையின், 'அவ்வூன்' என்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லதென்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக்கொல்லாமையென்னும் விரதத்தையழித்தலென் றுரைப்பாருமுளர். (௪)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள்வினவிய வினாவிற்குமுற்றும் விடைதருவதாகவே உள்ளது. அது என்னையோவெனின்? அருள் என்பது எது என்று கேட்டால் கொல்லாமை என்றும், அருள் அல்லாதது எது என்றால் கொல்லுதல் என்றும், ஆகையினால், அவ்வருளற்றுக் கொல்லுதலாலாகிய தனக்குக் கிடைக்கும் ஊனினை ஒருவன் தின்னுதல் பாவம் என்றும் கூறுவதால், அருளுடைமைக்கெல்லாம் முதற்காரணம் கொல்லாமையும் கொன்றதாகிய ஊனினைத் தின்னுதிருத்தலும் என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் இவ்விதம் அருள் கருதாது ஊனைத்தின்பானாயின், அவ்வுலக வாழ்க்கை வாராதுபோலும்? ஆயின், இவ்வுலகத்துப் பிறந்து பிறந்து போகங்களை யனுபவித்துக் கொண்டு இருப்பான்போலும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

255. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

(பரி.) இ-ள். உயிர் நிலை ஊன் உண்ணாமை உள்ளது—ஒரு சாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணாமையென்கின்ற அறத்தின்கண்ணது;—உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது—ஆகலான், அந்நிலைகுலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ-று.

உண்ணப்படும் விலங்குகள் அதனாற்றேய்ந்து சிலவாக ஏனைய பல்வாய் வருதலின், 'உண்ணாமையுள்ளதுயிர்நிலை' என்றார். உண்ணினென்பதி

உண்ணவெனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங் காலம் நிரயத்துளழுந்து மென்பதாம். (கொலைப்பாவம் கொன்றார் மேனிற்ற லின் பின்னூனுண்பார்க்குப் பாவமில்லையென்பாரை மறுத்து, அஃதுண் டென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—சில உயிர்கள் இறவாது நிற்றல் ஊனினை உண்ணு தல் கூடாது என்கின்ற அறத்தினால் நிற்பதேயன்றி வேறு அன்று; ஆதலால், அவ்வித அறத்தைச் சிறிதுங்கருதாது அவ்வுயிர் இருந்த நிலையானது கெடும்படி அதனைக்கொன்று அவ்வுடலை ஒரு வன் உண்ணுவானாயின், அவ்விதம் உண்ட அவனை விழுங்கிய நரகம் பின் ஒருமுறை மேலே உமிழ்ந்து விடுவதற்குத் தன் வாயைத்திற வாது என்று இத்திருக்குறள் கூறுகின்றமையால், ஊனுண்ட ஒரு வன் அக்கொடும் பாவத்தால் அளவிலாதகாலம் நரகத் துன்பத்துள் அழுந்துவான் என்று அறிகின்றோம். அன்றியும், கொல்லுகின்ற பாவம் கொன்றவனுக்கு மாத்திரமல்லாமல் உண்பவனுக்கும் உண்டு என்பதை இதனால் அறிகின்றோம் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "உயிரைக் கொல்லுகின்றவன் பாவத்தையடைவது தகுதியேயாகும்; ஆனால், கொன்று விற்கின்றவனிடத்தே ஒருவன் விலை கொடுத்து வாங்கி உண்பதால் உண்ணுகின்ற அவனுக்கு எவ் விதம் நரகத்துன்பம் நேரும்? இதனை விளக்கல்வேண்டும்" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

256. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(பரி.) இ-ள். தினற் பொருட்டு உலகு கொல்லாது எனின்= பேதைமை காரணமாகவல்லது ஊன்றின்கை காரணமாக உலகங் கொல் லாதாயின்—விலைப்பொருட்டு ஊன்தருவார் யாரும் இல்=பொருள் காரணமாக ஊன்விற்பார் யாவரும் இல்லை. எ-று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந் தின்கை முன்னிகழுங் கொலைக்குக் காரணமாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவமில்லை யென்ற வாதியைநோக்கி, அருத்தாபத்தி

யனவையாற் காரணமாதல் சாதித்தலின், (இதனான் மேலது வலியுறுத்தப் பட்டது.) (௬)

விளக்கம் :—உலகத்து உயிர்களைக் கொல்லுகின்ற ஒருவன் தன்னுடைய அறிவின்மையால் கொல்லுவதேயன்றி கொன்ற ஊனினைத்தின்னும் பொருட்டாகக் கொல்வது இல்லையாயின், அவ்வாறு கொன்ற ஊனினைப்பொருள்கருதி விற்பவர் ஒருவரும் இல்லாதிருத்தல்வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுவதால், உலகத்து மக்கள் தின்னும் தகுதியைக்கருதியும் அதை விலைகொடுத்து வாங்குவதைக் கருதியும் கொல்லுந் தொழிலைச் சிலர் மேற்கொண்டு உயிர்களை நீக்கி உடல்களை விற்கின்றனர் என்றும், தின்னும் தொழிலே கொல்லுந் தொழிலுக்குக் காரணமாகி நிற்கின்றதாகையால் கொல்பவரினும் தின்பவரே மிக்க பாவத்திற்குரியவரென்றும், விற்பதை வாங்கித் தின்பதால் பாவம் இல்லை என்று கூறுவது பொருந்தாது என்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "புலாலை யுண்பவன் பின்னர் பாபத்தையடைவதாயினும் உலகவாழ்க்கையில் இம்மைச் சுகத்தையேனும் அடைதல்கூடுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(அ.பி.) இ-ள். புலால் பிறிதொன்றன் புண்=புலாலாவது பிறிதோருடம்பின் புண்;—அது உணர்வார்ப் பெறின் உண்ணாமை வேண்டும்=அது தூய்தன்மை யறிவாரைப் பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும். எ-று.

அஃதென்னல் வேண்டுமோய்தம் விகாரத்தாற்றொக்கது. (அம் மெய்ம்மை யுணராமையின், அதனையுண்கின்றாரென்பதாம். பொருந்துமாற்றானும்* புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப்பட்டது.) (௭)

விளக்கம் :—இத்திருக்குறள், புலால் என்பது மற்றொரு உயிர் கிடந்த உடம்பின் புண்ணாகும்; ஆதலால், அவ்வித புலால் உண்பது மிகுதியும் பரிசுத்தமற்றது என்று அறிவார் உண்டேல் அப்புலாலை யுண்ணாதிருத்தல் வேண்டும் என்பதால், புலால் என்பது கெடுந்

* பொருந்துமாறு=யுத்தி.

தாரம் நாறுகின்ற அற்பமுடையதென்றும், அதை யுண்போரும் அதைச் சமைப்பதற்குமுன் அதனுடைய தீய நாற்றத்தினைப் பொறுத்தல் முடியாது என்றும், ஆதலால் அதை யுண்ணுவது யுத்தியினாலேயும் தேர்ந்து பார்க்கின் அதற்கும் அது குணமுடையது என்று பொருந்தாதாக உள்ளது என்றும் அறிந்தோம். இப் புலால் மிகுந்த தீய நாற்றமுடையது என்பதை

"புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்று தைக்கும் சேயார் முகத்து" †

என்பதனானேயே அறிதல்கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித இழிந்த தகுதியையுடைய ஊனினை யார் உண்கின்றனர்? எதனால் உண்கின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

258. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்

(பரி.) இ-ள். செயிரின் தலைப்பிரிந்த காட்சியார்=மயக்கமாகிய குற்றத்ினீங்கிய அறிவினையுடையார்—உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார்=ஒருயிரினீங்கிவந்த ஊனையுண்ணார். எ-று.

தலைப்பிரிவென்பது ஒரு சொல். பிணமென ஊனின்மெய்ம்மை தாமே யுணர்தலின், 'உண்ணார்' என்றார். (அ)

விளக்கம்:—இத்திருக்குறள், தாமசகுணத்தால் உண்டாகும் மயக்கம் என்னும் குற்றத்தை விட்டு நீங்கிய பேரறிவினையுடையார் ஓர் உயிரோடு கூடியிருந்து அதனினின்றும் விட்டுவந்த ஊன் என்பதை உண்ணமாட்டார்கள் என்றமையால், சத்துவ குணமுடைய பெரியோர் ஊனினைப்பிணம் என்று காட்சி யளவையாகக்கண்டு தெளிந்தவராகையால் அவ்வூனினை யுண்ணமாட்டார்களென்றும், அவ்வித மெய்யறிவினையடையாத மயங்கிய அறிவினையுடைய தாமசகுணத்தவரே உண்ணுவார்கள் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உயிர்க்கொலை புரிந்து பல வேள்விகளைச் செய்கின்றனரே, அவை தகுதியுடையனவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

† நன்னெறி.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(பரி.) இ-ள். அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்=தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும்—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று=ஒரு விலங்கினுயிரைப்போக்கி அது நின்ற ஊனையுண்ணாமை நன்று. எ-று.

அவ்வேள்விகளால் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும்பயனே பெரிதென்பதாம். (கூ)

விளக்கம்:—தீயினிடத்தே நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச்செய்து அடைகின்ற பலனைக்காட்டிலும், ஒரு விலங்கினுடைய உயிரை அது இருந்த உடலை விட்டுப்போக்கி அவ்வுடலை உண்ணாமையால் உண்டாகும் பலன் மிகப் பெரியது ஆகும் என்று இத்திருக்குறளால் அறிந்தோமாதலால், ஊன் ண்ணாதிருத்தல் எல்லாத்தருமங்களிலேயும் மேலானதென்றும், அது இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் தரும் என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மறுமை வீடு ஆகிய இரண்டைப்பற்றியும் கண் கூடாகக் காண்பதற்கு இல்லை. இம்மையில் பயன் இது என்று கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(பரி.) இ-ள். கொல்லான் புலாலை மறுத்தானை=ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப் புலாலையு முண்ணாதவனை—எல்லாவுயிரும் கைகூப்பித் தொழும்=எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும். எ-று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனாற் பயனில்லையாகலின், கொல்லாமையுமுடன் கூறினர். இப்பொருளுடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானுமென அப்பயனது பெருமை கூறியவாறு. (இவை மூன்றுபாட்டானும் ஊனுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.)

விளக்கம் :—எவனேனும் ஒருவன் ஒருயிரையுங் கொல்லாத வனும் கொன்றதால் வந்ததாகிய புலாலை யுண்ணாதவனும் இருப்பனுயின், அவ்வித தகுதியுடையானை இவ்வுலகத்துள்ள உயிர்களெல்லாம் கையைக்குவித்து வணங்கும் என்று இத்திருக்குறள் கூறுவதால், கொல்லுதலும் தின்னுதலும் ஆகிய இரண்டு பாவங்களினின்றும் நீங்கி நிற்பவர்க்கே அதனுல் ஆகிய பயன் கிடைக்குமென்றும், இவ்விரண்டனுள் எதேனும் ஒன்றைச்செய்யினும் மற்றென்றினுல் வரும் பாபமிகுதியால் பயன் சிறிதுமில்லாது துன்பத்தையே யனுபவித்தல் வேண்டுமென்றும் கண்டதுடன், இவ்வித பெரிய அருளினையுடையானுகிய இவனைக்கண்ட உயிர்களெல்லாம், 'இவனுல் நமக்கு யாதொரு இடையூறும் வாராது; அன்றியும் இவனது சத்துவ குணத்தோடு பழகுவோமாயின் நாமும் சத்துவ குணமுடையராய் நிற்போம்' என்று அப்பெரியோனது திருவடியில் வீழ்ந்து கிடக்குமென்றும் அறிகின்றேம். இதனையே நம் தாயுமானுர்,

"கானகமிலங்குபுலி பசுவொடுகுலாவும் நின்
கண்காணமதயானை நீ
கைகாட்டவும் கையால் நெகிடிக்கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே
போனகமமைந்ததென அக்காமதேனு நின்
பொன்னடியில் நின்று சொலுமே
புலிராசர் கவிராசர் தவராசனென்றுனைப்
போற்றிசய போற்றியென்பார்
ஞானகருணுகர முகங்கண்டபோதிலோ
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார் சுகர்வாமதேவர் முதல்
ஞானிகளும் உனை மெச்சுவார்
வானகமும் மண்ணகமும் வந்துனை வணங்கிடுமுன்
மகிமையது சொல்ல வெளிதோ
மந்த்ரகுருவே யோகதந்த்ர குருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே" என அருளினர்

என்று கூறினர். இதுகேட்ட மாணுக்கர், "ஒருவன் நற்கதி யடைய வேண்டுமானுல், புலான் மறுத்தல் பெரிதும் முக்கியமான தென்

றறிந்தோம். விரதத்தின் முதலாகிய அருளைக் கொண்டவன் இன்னும் எது செய்தல் வேண்டும்?" என்று கேட்டலும், ஆசிரியர் அடுத்த அதிகாரத்தைக் கூறத்தொடங்கினர்.

---

## 27. அதிகாரம்.

## தவம்.

---

(பரி.) அஃதாவது:—மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற்றம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்கண்மேல் அருண்முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான் மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது மனத்தை ஐந்துபொறிகளின் வழியே போகவொட்டாமல் நிறுத்திக்கொள்ளும் வண்ணம் பல விரதங்கள் நோற்று உணவைச் சுருக்கிக்கொள்ளுதலும், கோடைகாலத்திலே காய்கின்ற வெயிலில் நிற்றலும், மழைக்காலத்திலே அம்மழையினிடத்தேயும் பனியினிடத்தேயும் நீர்நிலை என்கிற குளங்கள் முதலியவைகளிலேயும் நின்று கொண்டிருத்தலும் ஆகிய நல்ல செயல்களையெல்லாம் கடைப்பிடித்து அச்செயல்களால் தம்முடைய உயிர்க்கு வருகின்ற துன்பங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு ஏனைய உயிர்களையெல்லாம் காப்பாற்றுதல் என்பதாம். இவ்வித தவம் புலால் உண்டல் என்பதை நீக்கி உயிர்களிடத்தே அருள்மயமாக நின்ற காலத்தில் செய்யப்படுவது ஒன்றாகலின், இத்தவம் என்னும் அதிகாரம் புலால்மறுத்தல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஆயின், இத்தவமென்பது மற்ற உயிர்களைக் காப்பாற்றுவதே என்றமையால், அது எவ்விதம் காப்பாற்றுதல் என்பதை விளக்குதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

261. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(பரி.) இ-ள். தவத்திற்கு உரு=தவத்தின் வடிவு—உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே=உண்டிசுருக்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று. எ-று.

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றேயெனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு உரு அற்றென்பது யானையது கோடு கூரிதென்பதனை யானைக்குக் கோடு கூரிதென்றாற்போல ஆறாவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். (இதனால் தவத்தஇலக்கணங் கூறப்பட்டது.) (க)

விளக்கம்:—ஒருவன் தவத்தினது வடிவு யாது என்று ஆராய்ந்து பார்க்கின், தனக்கு உண்டிசுருக்கல் முதலியவற்றால் வருகின்ற துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ளுதலும் தான் மற்று எந்த உயிர்க்கும் யாதொரு துன்பமும் செய்யாதிருத்தலுமே என்று இத்திருக்குறள் கூறுவதால், மேற்கூறியபடி தவஞ்செய்வான் ஒருவன் உயிர்களைக் காப்பாற்றுவதே தவமென்றும், தன்னுயிர்க்கு வருந்துன்பத்தைப் பொருள்படுத்தாது இருப்பதே தவத்தை முடிப்பதற்கு வழியென்றும் கண்டோம் என்றனர். "இவ்விதம் தவத்தைச் செய்து பெரியதோர் பயனை யடைதல் யாவர்க்குங் கூடுமோ? அன்றி, சிலர்க்கே வருமோ?" என்று மாணாக்கர் கேட்டாரும், ஆசிரியர் கூறுவாராயினர்.

262. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(பரி.) இ-ள். தவமும் தவமுடையார்க்கு ஆகும்=பயனேயன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே;—அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம்=ஆகலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனில் முயற்சியாம். எ-று.

பரிசயத்தால் அறிவுமாற்றலுமுடையராய் முடிவுபோக்கலின், 'தவமுடையார்க்காகும்' என்றும், அஃதில்லாதார்க்கு அவையின்மையின் முடிவு போகாமையின், 'அவமாம்' என்றுங் கூறினார்.

**விளக்கம்:**—ஒருவன் தவத்தைச் செய்துபயனை யடைவது ஒருபுற மிருக்கினும், அத்தவமே முடிவுபோக நடத்தற்கு முற்பிறப்பிற்றவஞ்செய்திருத்தல்வேண்டுமென்றும், அல்லாவிடின் அது பயன்தராத முயற்சியாய்ப்போய்விடுமென்றும் இத்திருக்குறள் கூறுவதால், பிறவிகள் தோறும் தவம் என்பதைச் செய்துவந்தவரே அப்பழக்க மிகுதியால் அறிவும் ஆற்றலும் உடையவராகி முடிவு போகும்படி தவத்தைச் செய்தல் கூடுமென்றும், அது இல்லாது இப்பிறப்பில் ஆரம்பிப்பார்க்கு முடிவு போகாது அவமாகி விடுமென்றும் அறிந்துகொண்டோம் என்றனர். கேட்ட மாணாக்கர், "இவ்வித மிருக்குமாயின், இல்லறத்தார் பலர் இல்லறத்தையே விரும்பி நிற்கின்றனரே யன்றி தவத்தைச் செய்ய ஏன் விரும்புவதில்லை?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
 மற்றை யவர்க டவம்.

**(பரி.)** இ-ள். மற்றையவர்கள்—இல்லறத்தையே பற்றி நிற்பார்—துறந்தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார்கொல்—துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளு முதலிலை விரும்பித் தாந்தவஞ்செய்தலை மறந்தார் போலும்! எ-று.

துப்புரவு—அனுபவிக்கப்படுவன. "வேண்டிய வேண்டியாங்கெய்தற்" பயத்ததாகலின், யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலுமெனவே, தானத்திற் றவம் மிக்கதென்பது பெற்றும். (௩)

**விளக்கம்:**—இல்லறத்தைப் பற்றி நிற்கின்ற இல்லறத்தார், துறந்தார்க்குத் தாம் செய்ய வேண்டிய கடமைகளாகிய உண்டி உதவலும் மருந்துதவலும் இருக்கஇடம்உதவலும்ஆகிய உதவிகளைச் செய்து தானத்தை முடிக்கவேண்டும் என்னும் விருப்பமிகுதியால் யாவராலுஞ் செய்யக் கூடிய தவத்தைச் செய்யாது மறந்து நிற்கின்றார்போலும் என்று இத்திருக்குறள் சந்தேகித்து வினவுவதுபோல் கூறுவதால், தானத்திலும் தவம் பெரியது என்றும், ஆயின், அது வினைக்குத்தக்கவளவாக அமையுமே யன்றி

யாவர்க்கும் அமையாது என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "இல்லறத்தான் ஒருவன் இல்லறத்திலிருப் பானுயின், மேற்கூறிய உதவிகளை யெல்லாம் துறந்தார் முதலிய மக்கட்குச் செய்யும் தானத்தின் தகுதியுடையவனுக விருக்கின் ருன். ஆயின், தவம் பூணுகின்ற ஒருவன் யார்க்கு எது செய்தல் முடியும்" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

264. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(பரி.) இ-ள். ஒன்னுர்த் தெறலும்—தம்மறத்திற்குப் பகையாய்அழிவு செய்தாரைக் கெடுத்தலும்—உவந்தாரை ஆக்கலும்—அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும்—எண்ணின் தவத்தான்வரும்—தவஞ் செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம். எ-று.

முற்றத்துறந்தார்க்கு ஒன்னுரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனுன், அவர்க்கு அவை யெண்ணுமை இயல்பென்பது பெற்ரும். ஒன்னுர் பெரியராயினும், உவந்தார் சிறியராயினும், கேடுமாக்கமும் நினைந்ததுணையானேவந்து நிற்கு மெனத் தவஞ் செய்வார் மேலிட்டுத் தவத்தினதாற்றல் கூறியவாறு. (சு)

விளக்கம்:—தவம் செய்பவர் தம் அறத்திற்குப் பகைவராய் நின்று அழிவு செய்வாரைக் கெடுக்கவும், அது நன்கு முடியுமாறு உதவுவாரை உயரச் செய்யவும் ஆகிய இரண்டு கருமங்களையும் நினைத்த அளவிலே அவருடைய தவவலிமையால் முடிப்பர் என்று இத்திருக்குறள் கூறுவதால், தவத்தை மேற்கொண்டவர் தம்முடைய தவ வலிமையால் எதையுஞ் செய்தல் கூடும் என் றறிகின்ரும். இதனைத் தன் யாகத்தையழித்த தாடகையை வதைத்தும், தன்னை வணங்கிய திரிசங்குவை உயரச்செய்தும் நின்ற விசுவாமித்திரனது சரிதையே நமக்குப் போதுமான சாட்சி யாகும் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நீரே தவம் சிறந்த தென்றும், அது பிறவிகள் தோறும் செய்து வந்தவர்களுக்கே பயன் தருமென்றும், அப்பயன் எண்ணிய எண்ணியபடியேமுடி

யும் என்றும் புத்திபோதித்தீர். இவ்விதம் ஒருமுறை தவம் செய்வதற்கு ஆரம்பியாத ஒருவன் எவ்விதம் அதில் பழமை யுடையவனாதல் கூடும்?'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(பரி.) இ-ள். வேண்டிய வேண்டியாங்கு எய்தலால்—முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால்,—செய்தவம் ஈண்டு முயலப்படும்—செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும். எ-று.

ஈண்டென்பதனன் மறுமைக்கணென்பது பெற்றும். மேற்கதி, வீடு பேறுகள், தவத்தானன்றி எய்தப்படாவென்பதாம். (இவைநான்கு பாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—அறிவுடையோர் இப்பிறப்பிணிடத்தே தவம் என்பதை முயற்சிப்பார்களாயின் மறுபிறப்பில் வேண்டிய பயன்களைப் பெறுவது உண்மையென்று அறிவார் ஆதலால், இம்மையிலேயே தவத்தைச் செய்தற்கு முயற்சி செய்வார்கள் என்று இத்திருக்குறள் கூறுவதால், ஒருவன் எதை வேண்டுகின்றனே அவ் வேண்டிய பயன் ஒன்றையே தவத்தால் பெறக்கூடுமென்றும், அதை முற்றவிமில்லாதாரும் முயற்சித்து அடைதல் கூடுமென்றும் அம் முயற்சியால் வீடு பேற்றினை யடையலாமென்றும், ஏனையதானம் முதலியவற்ருல் வீடு பேற்றினை யடைதல் கூடாதென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணக்கர், "வீடு பேற்றினை யடைவது உண்மையாகவே இருக்கினும் இருக்கட்டும். ஆயின், இத்தவமென்பது ஒருவன் தனக்கு வரும் துன்பத்தையெல்லாம் பொறுத்துக்கொள்ளுவதென்றும், ஏனைய உயிர்க்கு யாதொரு தீங்கும் செய்யாதிருப்பதென்றும் அறிகின்றேமாதலால், இனி கிடைக்கப்போகும் வீடு என்னும் ஒரு இன்பத்தின் பொருட்டாக இப்பிறவி முழுவதும் தவத்தினைச் செய்ய முயல்பவர் எவ்விதத்தகுதி கருதிச்செய்கின்றனர்?'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

266. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(பரி.) இ-ள். தங்கருமம் செய்வார் தவம் செய்வார்=தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச்செய்வார்;—மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார்=அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கணுசையாகிய வலையுட் பட்டுத் தமக்குக் கேடுசெய்வார். எ-று.

அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின்வேறாய உடற்கு வருத்தம்வருமென்றொழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், 'தவஞ்செய்வாரைத் தங்கருமஞ்செய்வார்' என்றும், கணத்துளழிவதாய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியுந் துன்புறத்தக்க பாவஞ் செய்து கோடலின், 'அல்லாதாரை அவஞ்செய்வார்' என்றும் கூறினார். மற்று—வினைமாற்றின்கண் வந்தது. (சு)

விளக்கம் :—துறந்து தவத்தைச் செய்கின்றவர் எவரோ அவரே தம்முடைய கருமத்தைச் செய்பவர் என்றும், அவ்விதரல்லாது ஆசை என்னும் வலையில் அகப்பட்டுப் பொருள் இன்பம் என்கின்ற இரண்டினைச் செய்வாராணுல், தமக்குத்தாமே கேட்டினைச் செய்து கொள்ளுவார் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், நிலையற்றதாய் மூவகைத் துன்பமுடையதாய் உயிரோடு சிறிதும் சம்பந்தமில்லாது வேறாகி நிற்கும் உடலுக்கு வருத்தம் வரும் என்று எண்ணித்தவத்தினைச் ~~செய்யாது~~ செய்து விடாமல் நிற்பவர் தவஞ்செய்வாரென்றும், இவரே தம்முடைய கருமத்தைச் செய்வார் என்றும், அவ்வாறின்றி ஒரு கணத்துள் அழிந்து போவதாகிய சிற்றின்பத்தைக் கருதிப்பிறவிகள் தோறும் துன்பத்தை யடையக்கூடிய பாவத்தைச்செய்து கொள்ளுவோர் தவஞ்செய்யாது அவஞ்செய்வாரென்றும் கூறியதாயிற்று. அன்றியும், தவஞ்செய்வான் ஒருவனே ஞானமடைந்து வீட்டினையடைவானுதலால், அவன் அநாதியாகத் துன்பத்தினையே யடைந்துவருகின்றதன்னுயிர்க்கு உறுதி தேடுவோனென்று கூறுதல் வேண்டும் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "தவஞ்செய்வதால் எவ்வாறு ஞானம்பிறக்கும்?" என்று கேட்டலும், ஆசிரியர்கூறுவாராயினர்.

267. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(பரி.) இ-ள். சுடச் சுடரும் பொன்போல் = தீயின்கணிடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னொடு கலந்த குற்றநீங்கி ஒளிமிகுமாறு போல—நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச்சுட ஒளிவிடும் = தவஞ்செய்ய வல்லார்க்கு அதனான் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவநீங்கி ஞானமிகும். எ-று.

சுடச்சுடரும் பொன்போலென்றாராயினும், கருத்து நோக்கி இவ்வா றுரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின் 'ஒளி' என்றார். (எ)

விளக்கம் :—தீயினிடத்தே தயிட்ட பொன்னானது எவ்வளவு அதிகமாகக் காய்ச்சப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக அதனொடு கலந்து இருந்தமாசு நீங்கி ஒளி அதிகரிப்பதுபோல், உடலின் இன் பத்தைக் கருதாது உயிர்க்கு வரும் இன்பத்தையேநோக்கி தவத் தைச்செய்ய உடன்பட்டார்க்கு அத்தவத்தினால் எவ்வளவு தம் தேகத்தைவருத்திக் கொள்ளுகின்றார்களோ அவ்வளவு அதிக மாகவே தம்மொடு கலந்தபாயிருள் நீங்கி ஞான ஒளி அதிகரிக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றதாதலால், தவசிகள் தவத்தைச் செய்வதால் மன இருள் நீங்கி ஞான ஒளியினைக்கொண்டு பொருள் களை உள்ளவாறு உணர்வதற்கு ஏதுவாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் புலன்களை ஒடுக்கி, தேகத்தை ஒறுத்துக் கொள்ளுகின்ற பெரியோரை மற்றைய உயிர்கள் என்னென மதிக் கும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

268. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(பரி.) இ-ள். தன் உயிர் தான் அறப்பெற்றானை = தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை—ஏனைய மன்னுயிரெல்லாம் தொழும் = பெறாதனவாகிய மன்னுயிர்களெல்லாந் தொழும். எ-று.

தனக்குரித்தாதல் = தவமாகிய தன் கருமஞ்செய்தல். அதனினூங்குப் பெறுதற்கரிய தின்மையின், 'பெற்றானை' என்றார். அது பெறாதனவென்

றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யுமுயிர்களை. சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலுமுடைமையின், 'தொழும்' என்றார். (அ)

விளக்கம்:—இத்திருக்குறள், எவனொருவன் தன் உயிரைத் தனக்கு உரியதாகப் புலன்களின்மேல் செல்லாது அடக்கிக் கொள்ளுகின்றானோ, அவ்வித தகுதி யுடையவனை மற்றைய தவஞ் செய்யாத உயிர்களெல்லாம் வணங்கும் என்றதனால், தவஞ் செய்வான் தன்னுடைய கருமத்தைச் செய்பவனும் அத்தவத்தின் முதிர்ச்சியால் சாபத்தினையும் அருளினையும் பொழியக்கூடிய இரண்டு வல்லமையையும் உடையவனும் ஆவான் என்றும், அவனை யெல்லா உயிர்களும் நன்கு மதித்துத் தமக்கு அவ்வித தகுதியில்லாமையைக் கருதியும் தவத்தினாலாகிய இரண்டு வல்லமைகளை யடைவதற்கு ஆற்றல் இல்லாமையை எண்ணியும் அவற்றினை அடைந்த அவனை வழிபட்டு வணங்கவேண்டியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தவஞ்செய்வார்க்கு உலகத்து உள்ள உயிர்களெல்லாம் வணங்கும் தகுதியொன்று கிடைத்தல் கூடும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

269. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

(பரி.) இ-ள். கூற்றம் குதித்தலும் கைகூடும்=கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்—நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு=தவத்தான்வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு. எ-று.

சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடுமென் எச்சவும்மையாக வுரைப்பினுமமையும். ஆற்றல்=சாபவருள்கள். (இவை நான்கு பாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.) (க)

விளக்கம்:—தவத்தைச் செய்வார்க்கு மேற்கூறிய சாபானுக்கிரகங்களாகிய இரண்டு மாத்திரமுமல்ல, காலத்தைக் கூறு செய்வதால் கூற்றன் என்னுங் காரணப் பெயர்கொண்டயமனையும் தம்மி

டத்து வாராவண்ணம் தடுக்குஞ் செயலும் அவர்க்குஉண்டாம் என்று இத்திருக்குறள் கூறுவதால், தவஞ் செய்வார் இறைவன் திருவடியை யடைவது திண்ணமென்றும், அவர்கள் யமனது நகரத்திற்குச் செல்வது இல்லையென்றும் கண்டோம். அன்றியும், இக்கருத்துப்பற்றியே சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"அந்தணாளன் உன்னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயிரதனை
வவ்வினாய்க்கு உன்றன் வன்மைகண்டடியேன்
எந்தைநீ யெனை நமன் தமர் நலியின்
இவன்மற்று என் அடியானென விலக்கும்
சிந்தையால் வந்து உன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே." என்றும்,

திருநாவுக்கரையரும்,

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு விச்சை யுண்டேன்
இருங்கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம் என்மேல்
பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே."

என்றும் அருள் செய்வதால், தவத்தைச் செய்வோர் எமனது பாசத்தைத் தாண்டிச் செல்லவும் கூடுமென்று கண்டோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தவத்தின் பயன் இம்மையில் உயிர்கள் பல வணங்கவும் மறுமையில் இறைவன் திருவடியடையவும் கூடும் என்று அறிந்தோம். ஓர் வேளை தவம் முதிராது மறுபடியும் பிறப்பினை யடைந்தால் அப்பிறவியில் இத்தவத்தின் பலன் ஏதேனுங் கிடைக்குமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்

270. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(பரி.) இ-ள். இலர் பலராகிய காரணம்=உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின்,—நோற்பார் சிலர் நோலாதவர் பலர்=அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பல ராதல். எ-று.

செல்வ நல்குரவென்பன ஈண்டறிவினது உண்மை யின்மைகளையுங் குறித்து நின்றன: என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை-பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்" * என்றாராகலின். நோற்பார் சிலரெனக் காரணங்கூறினமையான், காரியம் வருவித்துரைக்கப் பட்டது. தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமுமில்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.) (ய)

விளக்கம்:—இவ்வுலகத்துச் செல்வந்தர்கள் மிகக்குறைவாகவும் தரித்திரர்கள் மிக அதிகமாகவும் இருப்பதற்குக்காரணம், பிறவிகள் தோறும் தவம் செய்வார்கள் சிலராகவும் தவத்தைச் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதே என்று இத்திருக்குறள் கூறுவதால், தவஞ்செய்வார்க்கு இம்மையின்பத்தை யடைவதற்குப் பொருளுங் கைகூடுமென்றும், செய்யாதார்க்குப் பொருளுங் கைகூடாது தரித்திராக்கும் செயலையும் உண்டாக்கும் என்றும் கண்டோம் என்று கூறினார். அதுகேட்ட மாணாக்கர், "தவத்தைச் செய்யப்புகுவார் பூர்வவேலை மயங்கித்தீநெறிக்கண் செல்லுதலும் உண்டாகுமோ? அவ்விதம் சென்றால், அவ்வித தகுதியை நூலோர் என்னென்று கூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

* "நுண்ணுணர் வின்மைவறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—எண்ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்." நாலடியார்—அறிவின்மை.

## 28. அதிகாரம்.

## கூடாவொழுக்கம்.

(பரி.) அஃதாவது:—தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மையிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—மக்காள்! நீங்கள் வினவிய வினாவானது மிகுதியும் போற்றத்தக்கதாகும். அதாவது, தாம் ஓர் உயிர்க்கும் ஒரு துன்பத்தையும் செய்தல் கூடாதென்றும், தம் உயிர்க்கு எவ்வளவு துன்பம் வந்தபோதிலும் அதைப் பொறுத்துக்கொண்டு தவத்தை முடித்து வீட்டினை யடைய விருப்பங் கொண்டும்வந்தவராகிய தவசிகள், பொருள்கள் எல்லாவற்றையும் விட்டுநிற்கினும், தாம் விட்டதாயிருக்கிற காமஇன்பம் ஒன்றினைமாத்திரம் அறவே விடுவதற்கு மனவலியில்லாமல் துன்புறுகின்றகாலத்தே, அவ்வின்பத்தைப் பிறர் அறியாமல் தவ உருவத்துடன் அனுபவித்தலும்கூடும் என்றும், அவ்விதம் தாம்கொண்ட விரதமாகிய தவத்திற்கு முற்றும் பொருந்தாததாகிய ஒழுக்கத்தைச் செய்பவரைத் தீய ஒழுக்கமுடையார் என்றும்உலகோர்கூறுவதுஉண்மையாதலால்,அத்தீய ஒழுக்கத்தை அறவே நீக்கும்படி தவம் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு கூடாவொழுக்கம் என்னும் இவ்வதிகாரத்தை வைத்துள்ளனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதமும் கூடாவொழுக்கம் என்பது ஒன்று உள்ளதோ? அவ்வித ஒழுக்கத்தை எவ்விதம் இத்தவ உருவத்தினர் செய்கின்றனர் என்பதையும் போதித்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(பரி.) வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்=வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை—பூதங்கள் ஐந்தும்

அகத்தே நகும்=உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்துங் கண்டு தம்முள்ளே நகும். எ-று.

காமம் தன் கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின், 'வஞ்சமனம்' என்றும், அந்நலிவு பொறுக்க மாட்டாதொழுகுங்களவொழுக்கத்தைப் 'படிற்றொழுக்கம்' என்றும், உலகத்துக் களவுடையார் பிறரறியாமற் செய்வனவற்றிற்கு ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்ற வாற்றையுமறிந்து அவனறியாமல் தம்முள்ளே நகுதலின், 'அகத்தே நகும்' என்றும் கூறினார். செய்த குற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து. (க)

விளக்கம்:—வஞ்சகத்தோடு கூடிய மனத்தை யுடையவனும் உள்ள ஒருவன் செய்கின்ற மறைவாகிய தீய ஒழுக்கத்தை உடம்போடு உடம்பாய் அவனோடு நிற்கின்ற ஐம்பூதங்களும் கண்டு உள்ளுக்குள் மெதுவாகச் சிரிக்கும் என்று இத்திருக்குறள் கூறுவதால், தவவேடங்கொண்டான் ஒருவன் மனவலிமை யில்லாமையால் காம இச்சையானது தன்மனத்தினிடத்தே தோன்றி மிகுதியும் விடாது துன்புறுத்தவும் அத்துன்பத்தைச் செய்யும் காமத்தினைத் தான் அடக்கிவிட்டதாகப்பலர்க்குக் கூறி வஞ்சிப்பதற்குவஞ்சமனமுடையவனாகின்றானென்றும்,களவொழுக்கத்தைப் பிறரறியாமல் செய்யப் பொய்யாகிய வேட ஒழுக்கத்தைக் கொள்ளுகின்றானென்றும், இவ்விதம் இவன் மறைந்துசெய்கின்ற தீய ஒழுக்கத்திற்கு எங்கும் உள்ள இறைவன் ஏவலில் நிற்கின்ற ஐம்பெரும்பூதங்கள் சாட்சியாகும் என்றும், இவ்வித தீய ஒழுக்கத்தில் மறைந்து செய்கின்ற விதத்தினைப்பூதங்கள் அறிந்தனவாதலால் இறைவனாணையால்இவன் அடையப்போகும் துன்பங்களையறிந்து அவன் அறியாவண்ணமாக உள்ளுக்குள்ளேயே சிரிக்கும் என்றும் அறியக்கிடக்கின்றன. ஆதலால், ஒருவன் எவ்வளவுதான்மறைவாகக் குற்றங்களைச்செய்தாலும் அக்குற்றங்கள் எவ்விதமேனும் மறைக்கப்படாது வெளிவருமென்றும், அவ்வித தீய ஒழுக்கம் முக்கியமாக தவத்தோர்க்கு முற்றும் கூடாது என்றும் கண்டோம். இது கருதியே நம் குமரகுருபரரும் தம்நீதிநெறிவிளக்கத்தில்,

"வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோமென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்குமுளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு."

என்று புத்திபோதித்தனர் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "சில தவசிகள் மிகச்சுந்தரமாகிய தவவேடமுடையராய் இருக்கின்றனரே? வேடத்தாலேயே அவர்களை உண்மைத் தவசிகள் என்று கொள்ளுவதா? அல்லது வேறு எது கண்டு அவர்களுடைய உண்மையினையும், அஃதின்மையினையும் அறிவது? அருள்கூர்ந்து எங்களுக்கு விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

272. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(பரி.) இ-ள். வான் உயர் தோற்றம் எவன் செய்யும்=ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்?—தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின்=தான் குற்றமென்றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சுதாழுமாயின். எ-று.

வானுயர்தோற்றமென்பது "வான்றோய்குடி"* என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லையென்பதாம். (உ)

விளக்கம்:—ஒருவன் தன் மனத்திற்குக் குற்றமென்று தெரிந்த குற்றத்தையே செய்ய விரும்புவானாயின், அவனுடைய தவவேடமானது அவனுக்கு என்ன பிரயோசனத்தைத் தரும் என்று இத்திருக்குறள் கூறுகின்றமையால், தன்மனமறிந்தகுற்றத்தைச் செய்பவனது பாவமானது என்றும் கழுவப்படாது நிற்கும். ஆகவே, இவன்துவேடத்தால்மற்ற இல்லறத்தவரைவயப்படுத்தற்குக்கூடுமேயன்றி உண்மைச் செயலாகிய தவத்தால் அடையும் பயனை அடைதற்கு இல்லை. ஆதலால், வேடத்தைக்கண்டு மயங்குதல் கூடாது

* நாலடியார்—குடிப்பிறப்பு.

என்று அறிந்தோம் என்றனர். அது கேட்டமாணுக்கர், "வேடத்தால் எவ்விதம் மற்றவரை மருட்டுதல் கூடும்? அதனை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

273. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(பரி.) இ-ள். வலி இல் நிலைமையான் வல்லுருவம்=மனத்தைத் தன் வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன் வழிப்படுதல்—பெற்றம் புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று=பசு காவலர் கடியாமற் புலியின்றோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும். எ-று.

இல்பொருளுவமை. வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோர் மனவழிப் படுதலென்பது பெற்றும். காவலர் கடியாமை புலி புற்றின்றென்பதனானும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன் அன்ன காரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று.* இவ்வாறு தனக்குரியஇல்லாளையுந்துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலுமென்ற உவமையான் அறிக. (௩)

விளக்கம் :—ஒருவன் தன் மனத்தைத் தன் வழிப்படுத்தக் கூடிய வலிமையில்லாதவனாய் இருந்தும் மனத்தை வழிப்படுத்தக் கூடிய வலிமையுடைய தவசிகளது வேடத்தினைத் தான் அடைந்து அவ்வேடத்தின் பெருமையால் தன்னை மறைத்துக்கொள்ளுதல், பசுவொன்று பயிரைக்காக்கும் காவலாளிகள் தன்னை வெருட்டி ஓட்டாவண்ணம் ஒரு புலியினது தோலைத் தன்மீது போர்த்துக் கொண்டு பசிய பயிர் முதலியவைகளை எல்லாம் மேய்ந்து கொண்டிருப்பது போலும் என்று இத்திருக்குறள் கூறுவதால், வேடமாத்திரமாக நிற்கின்ற வஞ்சமனமுடைய கூடாவொழுக்கத்தவர் தாம் விட்ட காமமானது தம்மைத் துன்புறுத்துவதால், பிறர் மனைவி

* அயிராமை=சந்தேகங் கொள்ளாமை.

யிடத்து இன்பந்துய்க்கின்றனர் என்றும் அவ்விதம் துய்க்கும் காலத்துத் தவவேடத்தினால், இவன் தவசியாதலால் இவ்வித தீயகாரியத்தைச் செய்யான் என்று சந்தேகியாத விதமாயும் இவனுக்குத் துன்பஞ் செய்வோமாயின் இவனது சாபத்தினால் நாம் துன்பமடைவோமென்றும் நினைக்கும் வண்ணம் மருட்டுகின்றனாதலால், புலித்தோலைப் போர்த்த பசுவொன்று ஊர் பயிரை மேயுமாயின் பயிர்க்குரியவன் இது புலி யாதலால் புல்லையுண்ணாதென்று நினைக்கவும் இது புலியாதலால் சமீபித்தால் அடித்துவிடும் என்று பயப்படவுங்கூடிய நிலையுண்டாகுமாதலால் அவ்வித உவமையை இத்திருக்குறளுக்கு உவமையாக்கினர் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தவவேடத்தோடு கூடிய இவன் எவ்விதம் அயலார் மகளிரை வசப்படுத்துதல்கூடும்? அதனைச் சிறிதுவிளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

274. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(பரி.) இ-ள். தவம் மறைந்து அல்லவை செய்தல் = அவ்வலியினிலைமையான் தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல்—வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று = வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற்போலும். எ-று.

தவம்—ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது := பிறர்க்குரிய மகளிரைத் தன் வயத்ததாக்குதல். இதுவும்இத்தொழிலுவமையானறிக.(ச)

விளக்கம் :—மனவலியில்லாத நிலைமையோடு தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று கொண்டு பிறர்க்குச் சொந்தமாகிய பெண்களைத் தன் வசமாக்குதல், வேடுவனொருவன் புதரிடத்தே மறைந்து இருந்து பட்சிகளைப் பிடித்துக்கொள்ளுதல்போல் அவமாகிய காரியம் என்று கூறுவதால், தவவேடத்தோடு இருந்து எவ்விதம் 'தீயகாரியத்தைச் செய்வார் என்று வினவிய வினாவிற்குப் பெரிய தோர்விடை இத்திருக்குறள் அளித்ததாயிற்று. அதாவது, வேடுவனொருவன் தான் பட்சிகளைப்பிடிக்கும் வண்ணம் புதரினிடத்தே மறைந்துகொண்டு இருக்குங் காலத்து பேடோடு கூடிய பற

வைகள் இப்புதரினுள்ளார் யாதொரு உயிர்க்கும் யாதொரு தீங்கும் செய்யாத தவசிபோலும், இவரால் நமக்கு யாதொரு தீங்கும் நேராது என்று எண்ணிக்கொண்டு அச்சமற்று, அவை அயர்ந்திருக்கவும், அப்பட்சிகளை நோக்கி அவன் எவ்வாறு வலைவீசிப்பிடித்துக் கொள்ளுகிறானோ அதுபோல் கூடாவொழுக்கமுடைய தவசியொருவன் தன்னைத்தவசி என்று மதிக்கும்படி நடித்துக் காட்டுகின்ற காலத்தே பிறர்க்கு உரியபெண்கள் இவர் ஐம்புலனடக்கிய அருந்தவமுடையார்; இவரான் நமக்கு யாதொரு தீங்கும் நேராது என்று எண்ணி அவ்வில்லத்திலிருக்கச் செய்து வேண்டுவனயாவும் செய்து சந்தேகியாதிருக்குங் காலத்து, வலைவீசிப் பட்சியைப் பிடிப்பதுபோல் தன் கைகளாகிய வலையால் அப்பெண்களைப்பற்றி அவரது கற்பினையழிப்பன் என்பது பொருளாயிற்று என்றனர். அது கேட்ட மாணுக்கர், "இவ்வித வஞ்சகத்தைச்செய்து கூடாவொழுக்க முடையராய் நிற்கின்ற பொய்த்தவசிகளுக்குயாதும் துன்பம் வாராதோ?" என்று கேட்டலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(பரி.) இ-ள். பற்று அற்றேம் என்பார் படிற்றொழுக்கம்=தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்த வொழுக்கம்—எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும்=அப்பொழுது இனிது போலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தேமென்று தாமே யிரங்கும்வகை, அவர்க்குப் பல துன்பங்களையுங் கொடுக்கும். எ-று.

சொல்லளவல்லது பற்றறுமையின், 'பற்றற்றேமென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின் பொருட்டுப் பெரிதாய் நெடுங்கால நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் "அந்தோ வினையேயென்றழுங்கு"* வாராகலின், 'எற்றெற்று' என்றும் கூறினர். (இவையைந்து பாட்டானும் கூடாவொழுக்கத்தி னிழுக்கம் கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—துறவு பூண்டவர் தம்மை மற்றவர் மதிக்கும் பொருட்டு, தாம் இருவித ஆசையினையும் விட்டோம் என்று கூறி கூடா

* சீவகசிந்தாமணி=முத்தியிலம்பகம், 27.

வொழுக்கமாகிய தீய ஒழுக்கத்தைச் செய்து வருவாராயின், அத்தீயொழுக்கமானது அக்காலத்து அவர்க்கு இனிமைதருவதுபோலக் காணுமாயினும், பிறகு 'நாம் என்ன செய்தோம், நாம் என்ன செய்தோம்' என்று அவரே துக்கிக்கும்படி, பலதுன்பங்களையும் அவர்க்கு உண்டாக்கும் என்று இத்திருக்குறள் கூறியமையால், வாக்களவாகப்பற்றற்றேம் என்று கூறி, மனத்தளவால் சிறிதும்பற்று நீங்காது நின்றவர் மிகச்சிறியதாய் மிக விரைவிலே அழிந்துபோவதாகிய ஒரு காம இன்பத்தின் பொருட்டு மிகப் பெரியதாய் வெகுகாலம் அழியாது நிற்கக்கூடிய பாவத்தைச் செய்துகொள்ளுகின்றன ரென்றும், அப்பாவத்தினது விளைவு முதிர்ந்த விடத்தே 'ஐயோ! நாம் பிறரை வஞ்சித்து அவரது மனைவியரை விரும்பிக் கூடாவொழுக்கத்தைச் செய்தமையாலேயே இவ்விதத் துன்பங்களுக்கு ஆளாயினோம் என்று மிகுதியும் இரங்கி, துக்கிக்கும்படியாகிய துன்பங்களையடைவார் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்விதம் கூடாவொழுக்கம் உடையாராய பொய்த்தவசிகள் பலவித துன்பங்களை அனுபவிப்பர் என்பது அறிந்தோம். ஆயின், அறத்தைச்செய்வோராகிய இல்லறவாசிகள் இயல்புடைய மூவர்க்குக்கொடுத்தல்வேண்டும் என்றிருப்பதால், இயல்பில்லாத இப்பொய்த்தவசிகளுக்குக் கொடுத்த கொடையால், கொடுத்தவராகிய இல்லறத்தார்க்கு ஏதேனுந் துன்பமுண்டாகுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

276. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

(பரி.) இ-ள். நெஞ்சின் துறவார் = நெஞ்சாற்பற்றறாதுவைத்து—துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் = பற்றற்றார்போன்று தானஞ் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல—வன்கணார் இல் = வன்கண்மையையுடையார் உலகத்தில்லை. எ-று.

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது:—யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதுமென்று அறியாதீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினு லலறுமுந்நீர்த்—தடங்கட னடுவுட் டீவு பல

வுள வற்றுட் ேறான்றி—யுடம்பொடு முகங்களொவ்வா ருழ்கனி மாந்தி வாழ்வர்—மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்னரேறே" †என் புதனுணறிக. தமக்கு ஆவனசெய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், 'வன் கணாரில்' என்றார். (ரு)

விளக்கம் :—நெஞ்சில் சிறிதும் பற்று நீங்காது துறந்தவர் களைப்போல் வஞ்சித்து வாழ்கின்ற மாக்களைப்போல் வன்கணார் உலகத்து வேறொருவருமில்லை என்று இத்திருக்குறள் கூறுத லால், நாம் இத்தவசிக்கு ஏதேனும்கொடுப்போமாயின் மறுமையில் தேவ உலகத்தையடைதல் கூடும் என்று எண்ணி இத்தீயோரது பொய்யொழுக்கத்தால் வஞ்சிக்கப்பட்டு கொடுத்தவராகிய இல் லறத்தார்கள் மறுபிறப்பில் இழிபிறப்பினை அடைவார்கள் என்று காண்கின்றோம். இவ்விதம் கூடாவொழுக்கத்தையுடைய பொய்த் தவசிகளுக்கு அறியாமையால் கொடுக்கும் தானத்தின் பயன் இழி பிறப்பே என்பதை ஜீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் தானப்பய னில் சொல்லிய செய்யுளைப் பரிமேலழகர் தமது அகல உரையில் எடுத்துக் காட்டியதே நிலைநாட்டும். அதன் முடிந்த கருத் தாவது, புலன்களையடக்குதற்கு வல்லமையில்லாத பொய்த்தவசி களுக்கு இல்லறத்தார் கொடுத்த தானத்தினுடைய பிரயோ ஜனத்தால் ஓசையுடன் முழங்கும் சமுத்திரத்தின் நடுவேயுள்ள பலதீவுகளுள் ஒன்றிற்றோன்றி உடம்பும் முகமும் ஒவ்வாத உறுப் பினராய் அங்கு உள்ள பழங்களை யுண்டுவாழ்வார்கள் என்பதாம். ஆதலால், பொய்த்தவசிகள் தம்முடைய வஞ்சகத்தால் தாம் கெடு வதுமன்றி, தமக்குத் தானங் கொடுத்தவர்களையும் இழிபிறப்பின ராக்குகின்றனர். ஆகவே, இவரினும் வன்கணார்கள் இவ்வுலகத்து இல்லை என்பது நிச்சயமாயிற்று என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்வித தகுதியுடையாரை எவ்வாறு தெரிந்து கொள்ளுவது? அவர்கள் வேடத்தால் செம்மையுடையவராகவே காண்கின்றனர்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**277. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி**
**மூக்கிற் கரியா ருடைத்து.**

(பரி.) இ-ள் குன்றிப்புறம் கண்டு அனையரேனும்=குன்றியின் புறம்

† சீவகசிந்தாமணி—முத்தியிலம்பகம், 244.

போல வேடத்தாற் செம்மையுடையராயினும்,—குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து=அதன் மூக்குப் போல மனமிருண்டிருப்பாரை உடைத்து உலகம். எ-று.

குன்றி—ஆகுபெயர். செம்மை, கருமையென்பன பொருளி*ன்கணி றத்தை விட்டுச் செப்பத்தினும், அறியாமையினுஞ் சென்றனவாயினும், பண்பாலொத்தலின், இவை பண்புவமை: "கூழின் மலிமனம் போன்றிருளாநின்ற கோகிலமே" † என்பதுமது. (எ)

விளக்கம்:—குன்றிமணியானது புறம்முழுவதும் செந்நிறமாகக் காணப்படுவதுபோல் பொய்த்தவத்தவர்கள் தம்முடைய வேடத்தால் மிகச் சிறந்தவராகக்காணினும், அக்குன்றிமணியினது நுனி எவ்வாறு கறுத்து உள்ளதோ அதுபோல் மனம் இருண்டு இருப்பவர்கள் இவ்வுலகத்துப் பலருண்டு என்று இத்திருக்குறள் கூறுவதால், தவசிகளை வேடத்தால் மதியாது அவருடைய மனத்திட்பத்தால் அறிந்துகொள்ளுதல் வேண்டுமென்றும், வேடம் பெரும்பாலும் பொய்யாகவே காணப்படுகிறது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "வேடத்தால் மாத்திரமல்ல, பல தவசிகள் நீராடல் முதலிய செயல்களையும் செய்கின்றனரே. அவரை நாம் எவ்விதம தகுதியுடையார் அல்லார் என்று தெரிந்துகொள்ளுவது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

278. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(பரி.) இ-ள். மாசு மனத்தது ஆக=மாசு தம்மனத்தின் கண்ணதாக—மாண்டார் நீராடி=பிறர்க்குத் தவத்தான் மாட்சிமையுடையராய் நீரின்

---

* பொருள்—உபமேயம்.

† "வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்
சூழுமுகச்சுற்றும் பற்றின வான்றுண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன் சிற்றம்பல மாதரியாக்
கூழின் மலிமனம் போன்றிருளா நின்றகோகிலமே."

திருச்சிற்றம்பலக் கோவையார்—322.

மூழ்கிக்காட்டி—மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்=தாம் அதன்கண்ணே மறைந்துசெல்லும் மாந்தர் உலகத்துப் பலர். எ-று.

மாசு=காம வெகுளி மயக்கங்கள், அவை போதற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர் மறைதற்கிடனாக்கினார். இனி மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையை யுடையாராயென உரைப்பாருமுளர். (இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்கமுடையாரது குற்றமும் அவரை யறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன.) (அ)

விளக்கம்:—மனத்தின்கண்ணே குற்றமுடையாராக விருக்கவும், மற்றவர்க்குத்தாம் தவத்தில் சிறப்புடையோம் என்று பலமுறை நீரில் மூழ்கிக்காட்டி அவ்வித வஞ்சக ஒழுக்கத்துள் மறைந்து நடக்கின்ற மனிதர் பலர் உலகத்து உளர் என்று இத்திருக்குறள் எடுத்துக் காட்டுவதால், காம வெகுளி மயக்கங்கள் தம்முடைய மனத்தைச் சிறிதும்விட்டு நீங்காது இருக்கவும், அக்குற்றங்களைப் போக்குதற்கு நன்னெறியில் நடப்பதைவிட்டுப் பிறர் தம்மைப்பார்த்து, இப்பெரியோர் மிகப்பெரியர் என்று எண்ணுதற்கு ஜலத்தில் மூழ்குகின்றார்கள் என்றும், இவ்விதம் மூழ்கல் முதலிய பொய் யொழுக்கத்தைக் கண்டு மயங்கலாகாது என்றும், அவரது குற்றத்தையும் தன்மையினையும் அறிந்து நீக்கல்வேண்டும் என்றும் இதனால், அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குணனுங் குற்றமும் உருவத்தால் கொள்ளுதல் ஆகாது என்பது அறிந்தோம். அவர் மனத்தினுள்ள தகுதியை நாங்கள் எவ்விதம் அறிந்து கொள்ளுவது?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(பரி.) இ-ள். கணை கொடிது யாழ் கோடு செவ்விது=அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலாற்கொடிது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற்செவ்விது;—ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல்=அவ்வகையே தவஞ்செய்வோரையுங் கொடியர் செவ்வியரென்பது, வடிவாற் கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்துகொள்க. எ-று.

கணைக்குச்செயல் கொலை. யாழுக்குச்செயல்=இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்கவென்பதாம். (இதனான் அவரை யறியுமாறு கூறப்பட்டது.) 3 (க)

விளக்கம்:—எய்கின்ற அம்பானது உருவத்தால் செவ்விதாகக் காணப்படினும் அதனுடைய செய்கையால் மிகக்கொடியதாக உள்ளதென்றும், யாழ் என்னும் இசைக்கருவியானது கோணுதலையுடையதாயினும் செய்கையில் இனிமை தருவதாக உள்ளது என்றும், அவ்வகையே தவஞ்செய்வோர் என்கின்ற தவசிகளையும் இவர் கொடுமையுடையார் இவர் நல்லவர் என்று அவருடைய உருவத்தால் கொள்ளாமல்செயலால் கொள்ளுதல்வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றதால்,நாம் தவசிகளது நன்மை தீமைகளை அவர்கள் செய்யும் செயல்களைக்கொண்டே அறிதல் வேண்டுமேயன்றி உருவத்தால் அழகினரென்றும் அழகற்றவரென்றும் கண்டு போற்றுதலும் இகழ்தலும் செய்தலாகாது என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உலகத்துத் தவசிகளானோர் வேடத்தோடு இருத்தல்வேண்டுமோ? அன்றி வேடமில்லாதும் தவசிகளாய் இருத்தல்கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

280. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(பரி.) இ-ள். மழித்தலும் நீட்டலும் வேண்டா=தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா,— உலகம் பழித்தது ஒழித்துவிடின்=உயர்ந்தோர் தவத்திற்காகாதென்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின். எ-று.

பறித்தலும் * மழித்தலுளடங்கும். மழித்தலென்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர். (இதனாற் கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது.) 4 (ய)

* பறித்தல்=பிடுங்குதல். (சமணர்வழக்கு)

விளக்கம்:—இத்திருக்குறள், உலகத்து உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றமாகச் சொல்லிய கூடாவொழுக்கத்தைத் தொலைத்து விடுவாராயின், அவ்வித தவசிகளுக்குத் தலைமயிரை மழித்துவிடுதலும் வேண்டுவதில்லை, நீண்டதோர் சடையாக வளர்க்கவிடுதலும் வேண்டுவதில்லை என்றதால், கூடாவொழுக்கம் ஒன்று மாத்திரம் இல்லாமல் உலகத்து மக்கள் தம்மைக் காத்துக் கொள்வாராயின் அவர்க்கு யாதொரு வேடமும் வேண்டுவதில்லை: அவர்களது நல்லொழுக்கமே எல்லாச் சிறப்பையுந்தரும் என்று அறிந்தோமென்றனர். அது கேட்டமாணுக்கர், "தவசிகட்கு அருளுடைமை முதலில் வேண்டுவது என்றும், அருளுடைமையாவது புலாலுண்ணாமையென்றும், அவ்விதம் நிற்பார்க்குத் தவம்கைகூடுமென்றும், தவத்தைச்செய்யுங்கால் கூடாவொழுக்கம் இருத்தல்கூடாதென்றும் அறிந்தோம். ஆயின், இத்தவசிகட்கு இன்னும் ஏதேனும் விதிகள் உள்ளனவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 29. அதிகாரம்.

## கள்ளாமை.

(பரி.) அஃதாவது:-பிறருடைமையாயிருப்பதியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடொத்தலின், கள்ளாமையென்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனங்கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோரிழுக்காம்; ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒரு தலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பலைறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மை முதற் கொல்லாமையீறாய நான்கதிகாரத்திற்குமொக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது பிறர்க்கு உரிய எப்பொருளையேனும் அவரை வஞ்சித்துத் தாம் அடைய எண்ணுதிருத்தல். எண்ணுத லும் செய்தலுக்குச் சமானமாதலால் 'கள்ளாமை' என்றார். இக் கள்ளுதல் இல்வாழ்வார்க்காயின் சுற்றத்தவரோடு விளையாட்டிற் கேனும் அவர்களை வஞ்சித்து எடுத்துக்கொள்ளினும் பொருந்தும். ஆயின், துறவறத்தார்க்கோ எடுத்துக் கொள்ளாமலே எடுத்துக் கொள்வதற்கு எண்ணிய இடத்தும் பெரியதவறுகும். எனெனின்? இத்துறவிகள் தம்மனத்தைப் புறத்துச் செல்லவிடாது தம் வழிப் படுத்தித் தம் உயிரையே நோக்கவேண்டியிருக்க அதுவிட்டுப் புறத் தே வந்து உடம்பின்பொருட்டாக, நோக்கக்கூடாதபொருள்களைப் பார்த்தல் மாத்திரமல்லாமல் பார்த்தவாகிய அப்பொருள்களையும் வஞ்சகமாக அபகரித்துக்கொள்ளக்கருதுதல் அத்துறவிகட்கு மிகப் பெரியதோர் அவமானமாகும். ஆகையினல், கூடாவொழுக்கத்துக் குப் பிறகு இக்கள்ளாமை என்னும் அதிகாரத்தைக் கூறுகின்றனர். இவ்விதமே, இதற்குப்பின் வரும் நான்கு அதிகாரங்களைக் கூறுவ தும் காணுதல்கூடும். இதற்குமுன் அதிகாரமாகிய கூடாவொழுக்கம் காமத்தைப்பற்றி வருங்குற்றத்தைக் கூறியதாயிற்று. இவ்வதி காரம் பொருள்பற்றி வருகின்ற குற்றத்தைக் கூறுவதாகவுள் ளது என்றனர். அதுகேட்ட மாணக்கர், "ஐய! இப்போதனைகள் ஒன்றன்பின் ஒன்ருக உவப்பைத்தருவதால், இனிக்கூறவேண்டுவன வற்றைக் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

281. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. [றுங்

(பரி.) இ-ள். எள்ளாமை வேண்டுவான் என்பான்=வீட்டினையிக ழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான்—: எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க=யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக் காக்க. எ-று.

எள்ளாதென்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத்திரி ந்து நின்றது. வீட்டினை யிகழ்தலாவது:—காட்சியே அளவையாவதென் றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற்றோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்

ணே அறிவு மதுவின்கட்களிப்புப்போல வெளிப்பட்டழியு மென்றும், இறந்தவுயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனற் செய்யப்படுவன வென்றுஞ் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல். ஞானத்திற் கேதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின், அதுவுங் களவாமாகலின், 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக் கருதுதலென்பது பெற்றாம். (க)

விளக்கம்:—இவன் வீட்டினை விரும்பியே தவத்தைச் செய்கின்றான் என்று தவம் பண்ணுகின்றவர்களால் ஒருவன் நன்குமதிக்கப்பட வேண்டுமாயின், பிறரை வஞ்சித்து யாதொரு பொருளையும் கொள்ளக்கருதாதவிதம் தன் நெஞ்சினைக்காத்துக்கொள்ளுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுவதால், தவவேடங்கொண்டான் ஒருவன் ஞானத்துக்கு உரியதாகிய மெய்ந்நூற் பொருளையேனும் அதற்குரிய ஆசிரியனை வழிபட்டு அவன் அறிவிக்க அறிந்து கொள்ளுதல் வேண்டுமேயன்றி அந்நூற்பொருளையும் அவ்வாசிரியனை வஞ்சித்து அடைவானாயின் அதுவும் களவின்பால் படும் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஈதென்னை? நெஞ்சால் நினைப்பதும் கூடாததோ? பிறர்பொருளை வஞ்சித்து எடுத்துக் கொள்ளுதலைக் கள்ளுதல் என்று கூறுவதேயன்றி நினைத்தலைக் 'கள்ளுதல்' என்பது எவ்விதம்?" என்னலும், "துறந்தார்க்கு விலக்கப்பட்டதாகிய கள்ளுதலையும் துறவி யொருவன் நினைத்தலும் திருடுதலாம். அதனாலன்றோ அடுத்ததிருக்குறளிலும் அதனைக் கூறலாயினர்?" என்று ஆசிரியர் கூறுவாராயினர்.

282\. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(பரி.) இ-ள். உள்ளத்தால் உள்ளலும் தீதே=குற்றங்களைத் தந்நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்;—பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்=ஆதலால், பிறனொருவன்பொருளை அவன் அறியாவகை வஞ்சித்துக்கொள்வேமென்று கருதற்க. எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினர், அவருள்ளம் ஏனையாருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிவு சிறப்பும்மை. அல்விகுதி வியங்கோளெதிர்மறைக்கண் வந்தது. (இவை யிரண்டு பாட்டானும் இந்நடைக்குக் களவாவது இதுவென்பதூஉம் அது கடியப்படுவதென்பதூஉங் கூறப்பட்டன.) (உ)

விளக்கம்:—துறந்தவர்களுக்குக் குற்றந்தரும் விஷயங்களை மனத்தால் எண்ணுதலும் பாவம் என்றும், ஆசையினால் மற்றொருவன்பொருளை அவன் அறியாத விதமாக வஞ்சித்து எடுத்துக் கொள்ளலாமென்று எண்ணவேண்டுவதில்லை என்றும் இத்திருக்குறள் கட்டளையிட்டுக் கூறுவதால், மற்றவருள்ளம்போலல்லாது துறவிகளுடைய உள்ளமானது மாசடையாத் தூய்மையுடையதென்றும், அத்தூய்மையுடைய மனத்தால் தமக்கு ஆகா என்று விட்டுவந்த பொருள்களில் அவாக்கொள்வதும், அவ்வவாமேலிட்டால் அயலார் பொருளை அபகரிக்க எண்ணுவதும் குற்றமென்றும், அதை விலக்கல்வேண்டும் என்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கள்ளக்கருதுவதும் துறவிகட்குப் பொருந்தாது என்று அறிந்தோம். இவ்விதம் அந்நெறிகடந்து எவனேனும் ஒருவன் பிறன்பொருளை யபகரிப்பானாயின், அப்பொருளால் ஆகிய பயனை அவன் அடைதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

283. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(பரி.) இ-ள். களவினால் ஆகிய ஆக்கம்=களவினாலுளதாகிய பொருள்—ஆவதுபோல அளவிறந்து கெடும்=வளர்வதுபோலத் தோன்றித்தன்னெல்லையைக் கடந்து கெடும். எ-று.

ஆக்கத்திற்கு ஏதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது:— தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தவறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்தென்று பாடமோதி, அவர் பயன்கொள்ளுமளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப்பாருமுளர். (௩)

விளக்கம்:—ஒருவன் களவினால் அபகரித்தபொருள் மிகுதி யும் பெருகுவதுபோல் காணப்பட்டுப் பின் ஒருகணப்பொழுதில் கெட்டுப்போகும் என்றும், அவ்வாறு கெடுவதுடன் கெடுகின்ற காலத்தில் அபகரித்தானுக்குப் பாவத்தையும் பழியையும் நிலைபெற விட்டுவிட்டுப் போவதுமாத்திரம் செய்யாமல், இதற்குமுன் அவன் செய்த தருமங்களையும் உடன்கொண்டுபோய் விடும் என்றும் இத் திருக்குறள் கூறுவதால், களவினால் வந்தபொருள் பாவத்தையும் பழியையும் கொண்டுவந்து விடுவதுடன் முன்செய்த தருமத்தை யும் போக்கிவிடும். இது, 'புதிதாகவந்த வெள்ளம் பழமையாகிய நீரினையும் இழுத்துச்சென்றது' என்னும் முதுமொழிக்கு இணங்க நேருமென்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித பழியையும் பாவத்தையும் கொண்டுவருகின்ற கள வானது ஒருவனுக்கு இம்மையினும் துன்பந்தரும்போலும்!" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

284. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(பரி.) இ-ள். களவின்கண் கன்றிய காதல்=பிறர் பொருளை வஞ்சித் துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை—விளைவின்கண் வீயாவிழுமம் தரும்=அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும் பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும். எ-று.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனாற் பாவமும் பழியும் பயந்தேவிடுதலின், 'வீயாவிழுமந்தரும்' என்றார். (இவை யிரண்டு பாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது.) (௪)

விளக்கம்:—அயலவர்பொருளை அபகரித்துக் கொள்வதிலே யே உள்ள ஆசை அப்பொழுது மிக இனிமை தருவதுபோலக் காணப்பட்டுப் பின்னர் அதன்பயன் விளைகின்ற காலத்திலே நீங் காத துன்பத்தைக் கொடுக்கும் என்று இத்திருக்குறள் கூறுவதால், களவில் பழகிய ஒருவன் அப்பழக்கமிகுதியால் அக்களவினையே செய்ய நேர்ந்து பாவத்தையும் பழியையும் தேடிக்கொள்வனென் றும், அவ்விதம் தேடிய பழியும் பாவமும் அவனுக்கு இம்மை மறு

மை இரண்டிடத்தும் நீங்காத்துன்பத்தை விளைவிக்கும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "என்னை! இவ்விதம் துறவறத்தை விரும்பி அருள்கொண்டு நிற்கவந்த இவர்க்குப் பிறர் பொருள்மீது ஆசையிருக்குமாயின், இவர் எவ்விதம் அருளாட்சி கொள்வர் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

285. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(பரி.) இ-ள். அருள் கருதி அன்பு உடையராதல்=அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன்புடையரா யொழுகுதல்—பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்=பிறர்பொருளை வஞ்சித்துக் கொள்ளக்கருதி அவரது சோர்வு பார்ப்பார் மாட்டு உண்டாகாது. எ-று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்துபோந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வுபார்க்கும் மருட்சியராஞல், அவர்மாட்டு, உயிர்கண்மேலருள் செய்தல் நமக்குறுதி யென்றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுந் தெருட்சி கூடாதென்பதாம். (ரு)

விளக்கம் :—அருளினது மேன்மையைத்தெரிந்து அவ்வருளின்மேல் அன்புடையராய் உள்ளார்கள் என்பது பிறர்பொருளை வஞ்சித்து அடைவதற்கு அப்பொருளுக்குரியாரது மறப்பினைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களிடத்து இல்லையாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பிறர்பொருளை வஞ்சிக்க எண்ணுகின்ற எண்ணம் ஒருவர்க்குத் தோன்றிய காலத்தேயே அவர் அருளுடையார் அல்லர் என்றும், பிற உயிர்களின்மீது அருள்கொண்டு உய்யும் அறிவுடையோர் அல்லர் என்றும் கொள்ளுதல் வேண்டும் என்று நீங்கள்மேல் வினவிய வினாவிற்கு விடைதந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அண்ணால்! இவ்விதம் அருளில்லாத அவர்கள்கற்ற ஞானநூல்கள் எதற்குப் பயன்படும்? அவ்விதம் நூல் வழியே நில்லாதவர் ஒழுக்கம் எதாகும் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

286. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

(பரி.) இ-ள். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார்=உயிர் முதலிய வற்றை யளத்தலாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார்—களவின்கண் கன்றிய காதலவர்=களவின்கண்ணே மிக்க வேட்கையை யுடையார். எ-று.

உயிர் முதலியவற்றை யளத்தலாவது:—காட்சிமுதலாகச் சொல்லப் பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்குற்றவிளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுட் பிறந் திறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்குபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றான் அஃதெய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது:—அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீங்கி நல்லன வற்றின்வழி நிற்றல். (சு)

விளக்கம்:—உயிர் முதலியவற்றை அளப்பதற்கு உரிய காட்சி, அநுமானம், ஆகமம் என்று சொல்லும் மூன்று அளவை களாலேயும் உயிரினது தன்மையையும், அவ்வுயிரினைவிட்டு நீங்காது அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைக ளாலாகிய குற்றங்களையும், அக்குற்றங்களான்வரும் அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்னும் நான்கு பிறவிகளிலும் பிறந்து வருகின்ற தன்மையையும், அவ்விதம் பிறப்பினுள் சென்று பிறவாவண்ணம் அப்பிறப்பிறப்பினைக் கெடுத்தற்குப் பெரிய தோர் உபாயமாகிய யோகஞானங்களையும், அவ்வியோகஞானங் களால் அவ்வுயிர் எய்தும் வீட்டினையும் தெரிந்து உள்ளவாறு அறி வதற்குக் களவினிடத்தே மிக்க ஆசையுடைய துறவிகளென்னும் பெயர்மாத்திரமுடைய போலித் துறவிகளுக்கு முடியாதென்று இத்திருக்குறளால் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "களவினிடத்தே ஆசையுடையார்க்கு அளவைகளால் பயனில்லை என்பதை நன்றாக உணர்ந்தோம். அவ்வளவைகளிடத்தே உண்மை யறிவுடையாராய் உள்ளவரிடத்து இக்களவு என்செய்யும்?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

287. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(பரி.) இ-ள். களவு என்னும் கார் அறிவாண்மை=களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட வறிவினையுடையராதல்—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்=உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கணில்லை. எ-று.

இருள்=மயக்கம். காரியத்தைக் காரணமாக வுபசரித்துக் 'களவென்னுங் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினார். (களவுந்துறவும் இருளுமொளியும் போலத் தம்முண்மாறாகலின், ஒருங்கு நில்லாவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.) (எ)

விளக்கம்:—உயிர் முதலியவற்றை அளத்தலையே தமக்கு உறுதி என்று அதனை அல்லும் பகலும் விரும்பி நிற்பார் இடத்து களவென்று சொல்லுகின்ற மயக்க அறிவானது உண்டாகாதென்று இத்திருக்குறள் கூறுவதால், களவும் துறவும் இருளைப்போலும் ஒளியைப்போலும் ஒன்றற்கொன்று மாறாக உள்ளவைகளென்றும், அவ்வாறு மாறாக உள்ள இவ்விருள்போன்ற களவும் ஒளிபோன்ற துறவும் ஒரே இடத்து இருளும் ஒளியும் தங்கி நில்லாமை போல், ஒருங்கே ஒருவரிடத்து நில்லா என்றும் கண்டோம். ஆதலால் உண்மைத்துறவிகளிடத்தே மிக்க மயக்க அறிவினாலாகிய களவானது ஓர்போதும் நில்லாதென்றும், அவ்விதமே களவுடையாரிடத்து அளவைநூலாலாகிய அறிவு தோன்றாதென்றும் கண்டோம் என்றனர். அதைக்கேட்ட மாணாக்கர், "இப்போது அளவையால் உண்டாவது இது என்றும், களவினால் உண்டாவது இது என்றும் அறிந்தோம். ஆயின், அவ்வளவுடையார் மனம் எவ்விதமிருக்குமென்றும், களவுடையார் மனம் எவ்விதம் ஆகுமென்றும் இவ்விரண்டு தன்மைகளையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(பரி.) இ-ள். அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்=அவ்

வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்றாற்போல நிலைபெறும்—களவு அறிந்தார் நெஞ்சில் கரவு=களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை. எ-று.

உயிர்முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ்சலியாது நிற்குமென்பது இவ்வுவமையாற்பெற்றாம். (களவோடு மாறின்றிநிற்பது இதனாற் கூறப்பட்டது.) (அ)

விளக்கம்:—இத்திருக்குறள், அளவைநூல்களிலேயே எக்காலத்தும் பழகினவர் மனத்தே துறவறமானது நிலைத்து நிற்பது போல, களவையேவிரும்பிப் பழகியவர்மனத்து வஞ்சனை நிலைபெற்று நிற்கும் என்று கூறுவதால், அளவை நூல் அறிந்து அதில் கூறியபடி உலகத்து ஒழுகிவரும் உண்மையாளர்க்குத் துறவறமானது சலித்தலில்லாது நிலையாக நிற்கும் என்றும், அவ்விதமே களவினை அறிந்தார் மனத்து நிலையாக வஞ்சனையேநிற்கும் என்றும் கண்டோம். ஆதலால், இவ்விருவர்மனத்தும் எது நிலைத்து நிற்கும் என்று நீங்கள்கொண்ட ஐயத்தை இத்திருக்குறள் நீக்கியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் களவினையே பழகியவர் இவ்வுலகத்து எவ்விதம் உய்வர்? அவர் உயிரோடு வாழுங் காலத்து எவ்விததன்மையோடு வாழ்வர்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

(பரி.) இ-ள். அளவு அல்ல செய்தாங்கே வீவர்=அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்த பொழுதே கெடுவர்—களவு அல்ல மற்றைய தேற்றாதவர்=களவல்லாத பிறவற்றை அறியாதவர். எ-று.

தீயநினைவுகளாவன:—பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலியன. நினைத்தலுஞ் செய்தலாகலிற், 'செய்து' என்றும், அஃது உள்ளவறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின், 'ஆங்கே வீவர்' என்றுங் கூறினார். மற்றையவாவன:—துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு

சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்றாமை = அவற்றையே நுகர்ந்து அவ்வளவானிறைந்திருத்தலை அறியாமை. (இதனாற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.) (௯)

விளக்கம்:—அளவை நூலிற்குமாறாகிய தீய நினைவுகள் கொண்டு பொருளுடையாரை வஞ்சித்தலும், வஞ்சிப்பதால் அபகரித்த பொருள்களைக்கொண்டு தம் ஐம்புலன்களும் ஆசைதீரும் வண்ணம் ஆறத்துய்த்தலும் ஆகிய இவற்றையே நினைக்கின்ற களவாளர்கள் கெட்டுப்போவர் என்றும், அக்கெடுதலும் மனத்தில் நினைத்தவுடனே உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், முன்னர் கூறியவண்ணமே துறவறத்தில் உள்ளார் களவினை நினைத்தலும் செய்தற்குச்சமானம் ஆகும். அன்றியும், அந்நினைப்பும் முன் செய்த தருமங்களையெல்லாம் போக்குவதுடன்,வஞ்சகமாகிய சொற்களை வாக்கினாற் கூறியும் வஞ்சகமாகிய செயல்களைக் காயத்தினாற் செய்தும் உயிர் வாழச்செய்யுமென்றும், அச்சொற்களும் செயல்களும் இவ்விதத்துறவிகளை உடனே கெடுத்து விடுமென்றும் கண்டோம். அன்றியும், இத்திருக்குறளில் களவல்லாத பிறவற்றை யறியாதவர் என்று கூறுவதால், துறந்தார்க்கு உணவாக எடுத்துக்கூறிய காய், கனி, கிழங்கு, சருகு முதலியவைவயும், இல்வாழ்வார் செய்யுந் தருமங்களும் பெறப்படுகின்றன. இவ்விதம் மேல், துறவிகளது உணவிற்குக் கூறியவைகளை உண்டு அவ்வளவில் பசி நீங்கி மன அமைதியோடு இருத்தலைவிட்டு, அறியாமையால் பிறர்பொருளை இச்சிப்பாராகிய துறவிகள் கெட்டுப்போவது நிச்சயமென்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "திருட எண்ணுபவர் கெட்டுப்போவது திண்ணம் என்று அறிந்தோம். இக்கள்ளுதலால் கெட்டுப்போகின்றவர், எவ்விதம் கெட்டுப்போவர் என்பதையும் விளக்கல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

290. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(பரி.) இ-ள். கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் = களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும்; — கள்ளார்க்குப் புத்தேளுலகு

*தள்ளாது=அது செய்யாதார்க்கு நெடுஞ் சேணதாகிய புத்தேளுலகுந் தவறாது. எ-று.*

உயிர் நிற்றற்கிடனாகலின், உயிர்நிலையெனப்பட்டது. சிறப்பும்மைகளிரண்டும் விகாரத்தாற்றொக்கன. இம்மையினும் அரசனாலொறுக்கப்படுதலின், 'உயிர்நிலையுந் தள்ளும்' என்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலிற், 'புத்தேளுலகுந் தள்ளாது' என்றுங் கூறினார். "மற்றது— தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். (இதனால் இருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.) (௰)

விளக்கம்:—களவினிடத்தே ஆசைகொண்டு திருடுபவர்க்குத் தமமைவிட்டு வேறாகக்காணப்படாத உடம்பும் போய்விடும் என்றும், அவ்விதம் திருடுதலைச்செய்யாத தகுதியுடையார்க்கு நெடுந்தூரத்திலுள்ள தேவ உலகமும் தவறாது கிடைக்கும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், திருடுபவரை அரசன் தண்டித்து விடுவது நிச்சய மென்றும், அவ்விதம் தண்டிக்கப்படுவதிலும் கள்வார்க்குத் தண்டனை உயிரையே போக்கிவிடுவ தென்றும், அது பண்டைக் காலத்து வழக்கென்றும் நாம் காண்கின்றோம். இதனைச் சிலப்பதிகாரத்தினுள் கூறுகின்ற சதுக்கப்பூதத்தின் சரிதமே நமக்கு நன்றாக எடுத்துக் காட்டும். அதாவது:—

" தவமறைந் தொழுகுந் தன்மையி லாள
ரவமறைந் தொழுகு மலவைப் பெண்டி
ரறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்."

தம்மைப் பிறர் நம்பும் வண்ணம் தவவேடத்தில் மறைந்துகொண்டு அத்தவத்திற்குப் பொருந்தாத கூடாவொழுக்கத்தைச் செய்யும் பொய் வேடங்கொண்ட தவசிகளையும், தம்மைத் தம் கணவர் நம்பும்படி, பொய்யொழுக்கத்தில் மறைந்து நின்று தம்முடைய அழகால் வஞ்சித்துவரும் கற்பில்லா மங்கையரும் தம்முடைய பிலட்

கூடி முதலிய ஐந்தினோடு உயிர் உறுப்பு உரிமைக்குத்தக்கவ ரென்று எண்ணித் தம்மைத் தேரிய அரசரைக் கீழ்மை எண்ணும் அமைச்சரும், தமது மனைவியர் தனியாக இருக்க, நாயகனில்லாது தனித்து இருக்கும் பிறர் மனைவியரை விரும்பும் காமுகர்களும், தமது மனத்தால் அறிந்த பொருளை வஞ்சித்துப் பொய்ச்சாட்சி கூறுவோரும், சிறப்புச் செய்கின்ற காலத்தே செய்கின்றவனை மிகப் புகழ்ந்து பேசி அவர் புறத்தே அவர் கொடுத்த கொடையைப்பற்றி பழி தூற்றுவாருமாகிய இவர்களே என் கையில் கொண்ட இப்பாசம் என்னும் வலையுள் அகப்படுகின்ற அறிவிலோர் என்று தானிருக்கும் ஊர் நாற்காத எல்லைவரையும் பெருங்கூச்ச விட்டு யாவருங் கேட்கும்படி செய்து, பிறகு தான் கூறியதையும் கேட்டு மேற்சொல்லிய தவறு செய்பவர்களைத் தன்னுடைய பாசமானது கட்டியிழுத்து வந்தவுடன் நிலத்தில் மோதி யுண்ணும் பூதம் நிற்கின்ற பூத சதுக்கமும் என்று கூறுவதால் அக்காலத்து அரசன் கண்டு தேரியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும், அவ்விதம் ஏழு நாட்களுக்குள் அரசன் தெரிந்து தண்டியாவிடின் சதுக்கப் பூதம் தன் பாசத்தை விட்டுச் சோணர்ந்து மோதித் தின்றுவிடும் என்றும் அறிகின்றோம். பொய்யொழுக்கங் கொண்டு கள்ளுதலைச் செய்ய எண்ணினும் அக்காலத்து உயிரிழப் பதே நிச்சயமாகையால் களவினில் ஆசைகொண்டு புகுகின்றவர் கெடுவது உடம்பையும் ஒழித்து உயிர்க்கும் நீங்காத் துன்பத்தை இம்மையினும் மறுமையினும் தேடிக்கொள்வார் என்று நாம் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர் தவத்தோர்க்குக் கூடாவொழுக்கமும் கள்ளாமையும் கூறியதாயிற்று. இனி இத் தவசிகட்குக் கூறிய ஏனைய அறங்களையும் கூறல் வேண்டும் என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 30. அதிகாரம்.

## வாய்மை. (5)

(ப-ரை.) அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இ[illegible] னொழுக்கங் கள்ளாமையின் பின் வைக்கப்பட்டது.

**விளக்கம்:**—அதாவது மெய் கூறுவதின் இயல்பு. இல்லற இயலில் வாக்கின் குற்றங்களாகிய பொய் குறளை கடுஞ்சொல் பயனில் சொல் என்னும் நான்கனுள் பொய் துறந்தார்க் கல்லாமல் ஏனைய இல்லறத்தோர்க்கு முற்றிலும் கடிதல் முடியாது என்று பயனில சொல்லாமை என்னு மதிகாரத்தினுள் கூறினாராதலின், ஈண்டு காமத்தினாலேயும் பொருளாலேயும் உண்டாவதாகிய பொய்மையை விலக்க வேண்டும் என்று கூறவந்தவர், காமத்தின் காரியமாகிய கூடாவொழுக்கம் பொருளின் காரியமாகிய கள்ளுதல் ஆகிய இவ்விரண்டு அதிகாரங்களுக்குப் பிறகு இவ்வதிகாரம் வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், காமத்தாலும் பொருளாலும் பொய்ம்மை நிகழும் என்றீர். முதலில் பொய்ம்மை என்பது யாதென்றறிய ஆசைப்படுகின்றோம் என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

291. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(பரி.) இ-ள். வாய்மை எனப்படுவதுயாது எனின்=மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின்,—தீமை யாதொன்றும் இலாத சொலல்=அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். எ-று.

தீமை யாதொன்றுமிலாத என இயையும். 'எனப்படுவது' என்பது "ஊரெனப்படுவ துறையூர்" என்றாற்போல நின்றது. இதனான் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அது தானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாமென்பதுகருத்து. (க)

**விளக்கம்:**—இத்திருக்குறளால், மெய்ம்மை என்பதன் இலக்கணம் ஈதென நீங்கள் அறிதல் கூடும். அதாவது மெய்மை என்று உயர்ந்தோரால் மிகச் சிறப்பாகச் சொல்லப்படுகின்றது மற்றைய யாதொரு உயிர்க்கும் ஒரு சிறிது தீங்கும் உண்டாக்காத சொற்களைச் சொல்லுதல் என்பதாம். ஒருவன் உண்மையாகவே நடந்தது ஒன்றினை எடுத்துச் சொல்லுதல் மெய்ம்மையாகாதென்றும், நடந்த விஷயங்களைக் கூறும் சொற்களும் ஓருயிர்க்கும் தீமையினை

உண்டுபண்ணுதாயின் மெய்ம்மைச் சொற்களென்றும் தீமையுண்டு பண்ணுமாயின் பொய்ம்மைச் சொற்களென்றும் அறிந்தோம். ஏனெனின், விரதங்காக்க வந்தவனுகிய இவன் முதலிலேயே ஓரறிவுயிராயுள்ள புல்லுக்கும் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும் என்றும் அதற்குத் தீங்கு வருவதாயின் அதைக் காக்கும் நிமித்தம் தன் உடலை யொறுத்துக் கொண்டேனும் காக்க வேண்டும் என்றும் உள்ளதால், உயிர் காப்பதே விரதமாகக் கொண்ட இவன் ஏனைய உயிர்கட்குத் தீங்கு வாராது காக்கும் சொற்களைச் சொல்லுதலே மெய்ம்மைச் சொற்களாகும் என்று வாய்ம்மையின் இலக்கணம் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஏதோ உண்மை கூறினும் தீங்கு விளைப்பதாயின் பொய் என்றும் நன்மை விளைப்பதாயின் மெய் என்றும் கூறுவதால், உயிர்களை ஓம்பவிரதங் காக்கும் துறவியாகிய இவன் பொய்ம்மையும் சொல்லுதல் அமையும்போலும்' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 292. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்.

(பரி.) இ-ள். புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின் = பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், —பொய்ம்மையும் வாய்மையிடத்த = பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம். எ-று.

குற்றந் தீர்ந்தநன்மை = அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயிற் பொய்மையாம்; பயப்பின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவையிரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும் 'அவற்றதிலக்கணங் கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—இத்திருக்குறள், விரதி ஒருவன் சொல்லுகின்ற பொய்ம்மைச் சொற்களால் மற்றவர்க்கு நன்மையுண்டாகுமாயின், அவன் கூறிய பொய்யாகிய சொற்களும் மெய்யாகிய சொற்களே

யாகும் என்று கூறுவதால் எவ்வுயிரையும் தன் உயிராகப் பார்க்கும் அந்தணத் தன்மை அடைய முயற்சிக்கும் விரதியொருவன் ஒரு உயிர்க்கு கேடு ஆதலும் சாதல் ஆதலும் நேருமாயின் இவன் சொல்லுகின்ற பொய்ச் சொற்களால், கேடடையவும் சாக்காடடையவும் இருந்த அவ்வுயிர் அவற்றினின்றும் தப்பித்துக் கொள்ளுமாயின் அவன் கூறிய பொய்ச் சொற்கள் மெய்ச் சொற்களே ஆகிச் சொல்லிய அவனுக்கும் அறத்தினைப் பயக்கும் என்று இவ்விரண்டு திருக்குறளாலும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிறவுயிர் நன்மையடைவதற்கு மெய் கூறுது பொய் கூறுவதும் விரதியொருவனுக்கு அமையும் என்று கண்டோம்; ஆயின், அவ்விரதியே தனக்குக் கேடு சம்பவிப்பதாயின் எது செய்தல் வேண்டும்" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

293. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(ப-ரி.) இ-ள். தன் நெஞ்சு அறிவது பொய்யற்க=ஒருவன் தன்னெஞ்சறிவ தொன்றனைப் பிறரறிந்திலரென்று பொய்யாதொழிக;—பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச்சுடும்=பொய்த்தானாயின், அதனையறிந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனாய துன்பத்தையெய்து விக்கும். எ-று.

நெஞ்சு கரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணரார்தார்—தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு—ணெஞ்சறிந்த கொடியவைமறைப்பவு மறையாவா—நெஞ்சத்திற்குறுகிய கரியில்லை யாகலின்" என்பதனானுமறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனாற் கூறப்பட்டது. (௩)

விளக்கம்:—நீங்கள் வினவிய வினாவானது மிகுதியும் அறிவுடையதேயாகும். அதுகருதியே நம் தெய்வப்புலவர் "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு" என்னுந் திருக்குறளுக் கிணங்க உயிர்க்கு உறுகண் செய்யாதிருப்பதோடு பொய்ம்மையும் கூறியேனும் அவ்வுயிர்களைக் காக்க வேண்டும் என்பதை யறிவிக்க மேல் இரண்டு திருக்குறள்களைத்

கூறினர். பின்னர் தனக்குவரும் தீங்குகள் எவ்வளவானாலும் பொறுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி அவைகளைத் தவிர்த்தற் பொருட்டுப் பொய்ம்மை கூறாதிருக்க வேண்டுமென்று ஏனைய திருக்குறள்களை இவ்வதிகாரத்தினுள் ஒன்றன்பின் ஒன்றாக் கூறு கின்றனர். அவற்றுள் இத்திருக்குறளானது விரதியாகிய ஒருவன் பிறர் பார்க்கவில்லை யாதலால் தான் எது கூறினும் பொருந்தும் என்று எண்ணித்தான் அறிந்த பொய் ஒன்றினைச் சொல்லுதலாகா தென்றும், அவ்விதம் சொல்லுவானாயின் அவன் மனமே அவன் சொல்லிய பொய்யாகிய பாவத்திற்குச் சாட்சியாயிருந்து பொய் சொன்ன அவனுக்குத் துன்பத்தைவருவிக்கும் என்றும் கூறு வதால், பிறர் அறியவில்லை என்று ஒருவன் பொய் கூறித் தப்பித் துக்கொள்ள முயலுவானாயின் அம்முயற்சியானது பயன்படாது பொய்ம்மை வெளிப்பட்டுத் தீங்கினைப் பயக்குமென்றும், ஆதலால், பொய்க் கூறுதல் ஆகாதென்றும அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தன் உயிர்க்கும் உடலுக்கும் துன் பம் வருங்காலத்தும் அதைத்தவிர்ப்பதற்குப் பொய் கூறாதிருப்பா னாயின் அதனால் உலகத்து அவன் அடையும் நன்மை எதுவாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

294. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(பரி.) இ-ள். உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்=ஒருவன் தன்னுள் ளத்திற்கேற்பப் பொய் கூறா தொழுகுவனாயின்,—உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன்=அவன் உயர்ந்தோருள்ளத்தின் கணெல்லாம் உள னாம். எ-று.

'உள்ளத்தால்' என்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறாதொழுகுத லாவது மெய் கூறியொழுகுதல். அவனதறத்தின தருமைநோக்கி உயர்ந் தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பரென்பதாம். இதனான் இம்மைப் பயன் கூறப்பட்டது. (௪)

விளக்கம்:—ஒருவன் தன்மனமறியப் பொய் சொல்லாது இவ் வுலகத்து விரதத்தை அனுசரிப்பானாயின், அவ்விரதியானவன்

உயர்ந்தோரென்று உலகத்தார் கூறும் பெரியோர் யாவராலும் நன்கு மதிக்கப்படுவான் என்று இத்திருக்குறள் கூறுவதால், பொய் கூறாது மெய்யினையேகூறி ஒருவன் தான் விரதியாக நிற்க முயலு வானாயின், அவன்கொண்ட அறமாகிய துறவறத்தினது அருமை யினை உயர்ந்தோர்கண்டு எக்காலத்தும் அவனையே போற்றிக்கொண் டிருப்பர். ஆகவே, இதுவே அவன் அடையும் இம்மைப்பயன் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மனம் மாசு படாவண்ணம் நிற்றல்வேண்டும் என்பது, அதன்வழித் தோன் றும் சொற்களும் மெய்ம்மையுடையனவாய் இருத்தல் வேண்டும் என்றும் அறிந்தோம். இவ்வாய்ம்மையொன்றினைக் கடைப்பிடி யாகக் கொள்ளுவானாயின், அவன் கொண்டவிரதம் நன்கு கடை போகும்போலும், என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

295. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(ப-ரி.) இ-ள். மனத்தொடு வாய்மை மொழியின்=ஒருவன் தன்மனத் தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின்,—தவத்தொடு தானம் செய்வாரின் தலை=அவன் தவமுந்தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப் புடையன். எ-று.

மனத்தொடு பொருந்துதல்=மனத்திற்கேறுதல். புறமாகியமெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத் தென்பதாம். (௫)

விளக்கம்:—விரதியொருவன் தன்மனமும் வாக்கும் ஒன்று பட்டு உண்மையைச் சொல்ல முயற்சிப்பானாயின், அவன் துறவி கள் செய்யும் தவத்தினையும் இல்லறத்தார் செய்யும் தானத்தினையும், ஆகிய இரண்டு அறங்களையும் ஒருங்கே செய்பவனாகின்றானென்றும், உயர்ந்தோர் யாவரினும் சிறப்புடையவனாக ஆவன் என்றும் இத் திருக்குறள் கூறுவதால், பிறர்பார்க்கத்தேகத்தால் செய்யும் தான தருமங்களைக்காட்டிலும், அகத்திலுள்ளே தோன்றும் மனத் தூய் மையும் வாக்கிலுள்ளே தோன்றும் மொழிகளின் தூய்மையும் இவன்கொண்ட விரதத்தை முடியச்செய்து அதன் பயனாகிய

ஞானத்தையும் யடையச்செய்யும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கூறுவதால், வாய்மை ஒன்று கூறின் வேறு யாதொரு தருமமும் செய்யாமல் இம்மைமறுமைப் பயனையடைந்து விடுதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

296. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(ப-ரை.) இ-ள். பொய்யாமை அன்ன புகழ் இல்லை=ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையையொத்த புகழ்க்காரணமில்லை—எய்யாமைஎல்லா அறமும் தரும்=மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லாவறங்களையுந்தானே கொடுக்கும். எ-று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள் கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப் பயனையுந் தானே தருமென்பார், 'எய்யாமை எல்லாவறமுந் தரும்' என்றார். (சு)

விளக்கம்:—ஒருவனுக்குப் பொய்யாமையைப்போல் இம்மைப்பயனாகிய புகழினைத்தரும் காரணம் வேறொன்றும் இல்லை என்றும் அவ்விதம் இம்மைப்பயனாகிய புகழைத்தருவதோடு மறுமைப்பயனாகிய தேவபோகம் முதலியவைகளையும் தானேவலிந்து தரும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், பொருள்முதலியவைகளைச் சம்பாதித்து இல்லறத்தை நடத்திப் புகழைப்பெறவேண்டுமாதலாலும், உண்ணாமை முதலிய வருத்தங்களை மேற்கொண்டு துறவறத்தை நடத்தவேண்டுமாதலாலும் அவ்வித பொருள் கூட்டல், உண்ணாது தவஞ்செய்தல் ஆகிய இவைகட்கு வருந்தவேண்டியுள்ளதாதலாலும் அவ்வருத்தங்களில்லாமலே இவ்வாய்மையானது இருவிதபயனையும் கொடுத்துவிடும் என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், இதுவரையும் தவம் என்றீர்; கூடாவொழுக்கம் இருத்தலாகாதென்றீர்; தவத்தைச் செய்யாதிருக்கின் பாபம் உண்டாகுமென்றும், செய்தால் புண்ணியம்வரும் என்றும் கூறி இவ்வதிகாரத்திலுள்ள வாய்மையொன்றைக் கடைப்பிடித்தால் அதுவே போதுமென்று கூறுகின்றீர். இவ்

விதம் கூறுவதால் வாய்மையைக் கடைப்பிடிக்கின் ஏனையதருமங்களை யெல்லாம் செய்யாமலே இருமைப்பயனையும் "அடையலாமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**297. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.**

(ப-ரி.) இ-ள். பொய்யாமை பொய்யாமை ஆற்றின்=ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனாயின்,—பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று=அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று. எ-று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று; ஏனையது துணிவின்மேற்று. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற்கருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமல் செய்தல் நன்றென்பார், 'செய்யாமை செய்யாமை நன்று' என்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப்பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பது அதனாற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தருமாற்றலுடைத்தென மறுமைப் பயனது மிகுதி இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது. (எ)

விளக்கம்—ஒருவன் எக்காலத்தும் பொய் கூறாது நிற்பானாயின் அவன் மற்றைய தருமங்களைச் செய்தலேவேண்டாம். ஏனெனின் பலவிதப்பட்ட அறங்களை ஒருவன் செய்யமுயன்று, அவ்விதம் செய்யுங்கால் ஏதேனும் ஒன்றில் சிறிது குற்றப்படுவானாயின் அக்குற்றமானது எடுத்ததருமம் முடிவுபோகாமற் செய்துவிடும். ஆதலால் இப்பொய்யாமை யென்னும் ஒரே தருமத்தைச்செய்து எல்லாத்தருமங்களும் கொடுக்கும் எல்லாப்பயனையும் பெறக்கூடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றதென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வாய்மை ஒருவனுக்கு எவ்விதம் கைவருதல் கூடும்? அவ்விதம் கைவந்தவனை உலகத்தார் எவ்வித தகுதியுடையான் என்று எண்ணுவர்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**298. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்.**

**(ப-ரி.)** இ-ள். புறம் தூய்மை நீரான் அமையும்=ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீரானேயுண்டாம்—அகம் தூய்மை வாய்மையான் காணப் படும்=அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையானுண்டாம். எ-று.

காணப்படுவதுள்ளதாகலின், உண்டாமென் றுரைக்கப்பட்டது. உடம்புதூய்தாதல்=வாலாமைநீங்குதல், மனந்தூய்தாதல்=மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லையென்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம். (அ)

**விளக்கம்:**—ஒருவனுக்கு நீரால் உடம்பு சுத்தப்படுவதைப் போல் மனமானது பொய்பேசாமை யென்னும் உண்மைகூறும் விரதத்தால் சுத்தமடையவேண்டும் என்று இத்திருக்குறளால் அறி கின்றோமாதலால் துறவி ஒருவன்தான் பலகால் நீரில் மூழ்கி தேக அளவில் சுத்தமுடையவனாக இருப்பதுபோல், உண்மைகூறி மனத்தாலும் தூய்மையுடையவன் என்று காட்டவேண்டும். அவ் வாறு வாய்மை பேசுபவனை உலகத்தவர் மெய்யுணர்வுடையன் என்று கூறுவர். இது நீங்கலாக வேறு உபாயம் மெய்யுணர்விற்கு இல்லையென்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "மனந்தூய்மை யாதல் எனின் மெய்யுணர்வு என்றனர். மெய்யுணர்வினையாவரும் அடையாமல் செய்வதுயாது? வாய்மைக்கு அம்மெய்யுணர்வை யடைதற்குச்செய்ய உள்ளவலிமையாது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

**(பரி.)** இ-ள். எல்லா விளக்கும் விளக்கு அல்ல=புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா—சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே=துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடி யும் பொய்யாமையாகிய விளக்கே. எ-று

உலகத்தார் விளக்காவன—ஞாயிறு திங்கள் தீயென்பன. இவற்றிற்குப் போகாதவிருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்கு' என்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாதவிளக்கென்பது குறைந்துநின்றது. பொய் கூறாமையாகிய விளக்கென்றவாறு இனி இதற்குக் கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே யென்றுரைப்பாருமுளர். (க)

விளக்கம்:—துறவறத்தை மேற்கொண்ட துறவிகள் தம் மனத்திடத்தேயுள்ள இருள் என்னும் அறியாமையை நீக்க வேண்டுமாயின் பொய்யாமை என்கின்றவிளக்கு ஒன்றினைக்கொண்டே அவ்விருளை நீக்கவேண்டுமென்றும், ஏனைய உலகத்திலுள்ள விளக்குகளெல்லாம் அவர்க்குப்பயன்படா என்றும், ஏனெனின்? ஏனைய விளக்குகளாகிய சூரியன், சந்திரன், தீ என்பவைகள் புறத்தேயுள்ள இருள்களைக் களையுமேயன்றி ஒருவன் தோன்றியமுதல் அவன் மனத்து மாறாது இருந்து துன்பப்படுத்துகின்ற அகவிருளைக் கடிவதற்குக் கூடாமையாக உள்ளனவாகையால் அவ்வகத்திருளைக் கடியும பொய்யாமை என்னும் விளக்கு ஒன்றே விளக்கென்றும் இத்திருக்குறளால் அறிந்தோம். ஆதலால், உண்மையாகவே துறவியொருவன் வீட்டினை அடையவேண்டுமாயின் பொய்யாமை என்பதையே துணைக்காரணமாகக் கொண்டு மெய்யுணர்வினை யடைய வேண்டும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இப்பொய்யாமையொன்றை விரதம் மேற்கொண்ட துறவியொருவன் கடைப்பிடிப்பானாயின் அதனினும் மேற்பட்ட நன்மையொன்றினை அவன் செய்யவேண்டுவ தில்லைபோலும்? என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

300 யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. [றும்

(பரி.) இ-ள். யாம் மெய்யாக் கண்டவற்றுள்=யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்—எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை=யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை. எ-று.

மெய்யுணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன தங்கண் மயக்கமின்மையின் பொருள்களையுள்ளவாறுணரவல்லவாசய்க்காமம் ; வெகு

ளிகளின்மையின் அவற்றையுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர் அருளான் உலகத்தார் உறுதியெய்துதற்பொருட்டுக் கூறியவாகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃதொப்பமுடிந்ததென்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது. (க0)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள் வினவிய வினவிற்கு விடைதருவதாகின்றது. அது என்னையோ வெனின்? மெய்ந்நூல்களென்று காமம், வெகுளி மயக்கம் இல்லாமல் நின்ற இறைவனால் உணர்த்திய நூல்கள் மெய்ம்மை பேசுவதைக்காட்டிலும் மேலாகிய அறம் யாதொன்றுமில்லை என்று கூறுவதால் வாய்மையைக் காட்டிலும் மிக்கதோர் நன்மையுடைய அறம்வேறொன்றும் இல்லை என்றும், ஆதலால், உலகத்தார் உறுதியெய்துவதற்குக் கூறிய ஆகமங்களின்வழி துறவியொருவனுக்கு இம்மெய்ம்மையொன்றினைக் காட்டிலும் வேறோர் அறமும் வேண்டுவது இல்லையென்றும் இப்பொய்யாமையாகிய அறம் துறவியொருவனுக்கு இன்றியமையாததாயிற்று என்றும் கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்வித மெய்ம்மைகூறாது பொய்ம்மை கூறுகின்ற ஒருவனிடத்தே குற்றங்கள் கண்டகாலத்து மெய்ம்மையை யனுட்டிக்கும் துறவியொருவன் அவனை யிகழ்ந்து கோபித்தல்வேண்டுமோ? அன்றி தன்னளவில் விரதங்காத்தல் வேண்டுமோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 31 அதிகாரம்.

## வெகுளாமை.

(பரி.) அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டுளதாயவிடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது ஒருவன்மீது கோபித்துக்கொள்வதற்குத்தக்க காரணம் இருந்த இடத்தும் அவனைக் கோபியாதிருத்தல். ஏன்னை? ஒருவன், மிக்கதோர் துன்பத்தைத்தரும் பொய்ம்மை

யைக்கூறி, பலகுற்றங்கள் நிகழும்படி செய்வானாயினும், அது கண்ட துறவியானவன் தன்னுடைய மேலான நிலையைக்கருதி, தாழ்ந்த நிலையினையுடைய அவனிடத்துக் கோபியாதிருத்தலே துறவியின் தகுதியாகும்; ஆதலால் வாய்மைக்கு மாறாகிய பொய்ம்மையை ஒருவன் பேசுகின்ற காலத்தும், துறவுபூண்டவன் அவன் மாட்டுக் கோபியாதிருத்தல் வேண்டுமென்பதை அறிவித்தற்கு வெகுளாமை என்னும் இவ்வதிகாரத்தை வாய்மைக்குப்பின் வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்விதம் துறவியொருவன் கோபத்தைக்காத்துக் கொள்ளவேண்டுமாயின் எவ்விடத்துங் காத்துக்கொள்ளல் வேண்டுமோ? ஓரிடத்துக்காத்தும் மற்றோரிடத்துக்காவாதிருத்தலும் வேண்டுமோ?" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்
காக்கினென் காவாக்கா லென்! [துக்

(பரி.) இ-ள். சினம் செல்இடத்துக் காப்பான் காப்பான் = தன் சினம் பலிக்குமிடத்து அதனையெழாமல் தடுப்பானே அருளால் தடுப்பானாவான்;—அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் = எனைப்பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென்? தடாதொழிந்தாலென்? எ-று.

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தால் தன்னின்மெலியாரையும வலியாரையும், வலியார்மேற் காவாவழியும் அதனான் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அறனில்லையென்பார், 'காக்கினென் காவாக்காலென்' என்றார். இதனான் வெகுளாமைக்கிடங் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—ஒருவன் தன்னுடைய கோபத்தைச் செலுத்தி அதனால் கோபிக்கப்பட்டவனுக்குத் தீங்கினை இழைக்கக்கூடிய தகுதியுள்ளவிடத்துக் கோபியாதிருத்தலே கோபத்தைக்காத்துக் கொள்வதென்றும், அவ்விதமில்லாமல் தன்கோபம் செல்லக்கூடாத வலியவரிடத்து தன்கோபத்தைக் காத்துக்கொள்வதால் பயனில்லை என்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. அது என்னையோவெனின், கோபம் செல்லக்கூடியவிடத்துக் கோபத்தைத்தடுப்பதே உயிர்களிடத்துக்கொண்ட அருளால் தடுத்ததென்றும், அவ்விதமல்லாது வலி

யவனிடத்துக் காத்துக்கொண்டகோபம் அவன் தன்னை அழித்து விடுவான் என்ற பயத்தின்மிகுதியால் தடுத்ததாகுமேயன்றி அருளாகாதென்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "துறவியொருவன் வலியவனிடத்து, பயத்தால் காத்துக் கொள்கின்முன் என்றதால் வலியவனிடத்துக் காத்துக்கொள்ளாவிட்டால் தீமையுண்டாகுமென்று அறிந்தோம். ஆயின் செல்லக் கூடியவிடத்துக் கோபத்தைச் செலுத்துவனாயின் யாதொரு தீமையும் இல்லைபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 302. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து மில்லதனிற் றீய பிற.

(பரி.) இ-ள். சினம் செல்லா இடத்துத்தீது=ஒருவன் வெகுளி தன்னின் வலியார் மேலெழின் தனக்கே தீதாம்;—செல் இடத்தும் அதனின் தீய பிற இல்=மற்றையெளியார்மேலெழினும் அதனிற்றீயன பிற இல்லை. எ-று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே; ஏனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவமும் பயத்தலின், 'அதனிற்றீயன பிறவில்லை' என்முர். ஓரிடத்துமாகாதென்பதாம். (உ)

**விளக்கம்:**—துறவியொருவன் வலியான் ஒருவன்மீது கோபத்தைச் செலுத்துவானாயின் அக்கோபத்தால் தனக்கே தீமை விளையுமென்றும், வலியவனல்லாது மெலியான்மீது செலுத்துகின்ற கோபத்தால் தனக்கு நிகழுகின்ற தீமை அதனைக்காட்டிலும் மிகப்பெரியதாகுமென்றும், இதைப்போல் ஒருவனுக்குத் தீமை தருவது வேறு ஒன்றும் இல்லை என்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. ஏனெனின்? வலியவனிடத்துச் செலுத்திய கோபத்தின் பயனாகியதீமை இம்மையின்கண் அவ்வலியவரால் செய்யப்படும் துன்பமொன்றேயாகும். ஆயின், எளியோரிடத்து அருள் கருதாது செலுத்திய கோபமானது அவர்கள் சாபத்தால் இம்மையில் பழியும் மறுமையில் பாபத்தையும் உண்டாக்குமாதலால் எளியாரிடத்துச் செலுத்தும் கோபத்தால் வரும் தீங்கினைக்காட்டிலும் வேறு தீங்கு துறவியொருவனுக்கு இல்லையாகும். ஆதலால், வலி

யாரிடத்தும் மெலியாரிடத்தும் செலுத்தும் கோபமானது தீங்கையே பயக்கின்றதென்றுணர்ந்து எவ்விடத்தும் கோபத்தைச் செலுத்துதல் ஆகாதென்று அறிந்தோம். இதை வலியுறுத்தற் பொருட்டே அடுத்த திருக்குறளும் எழுந்தது என்று ஆசிரியர் மேலே கூறுவாராயினர்.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(பரி.) இ-ள். யார்மாட்டும் வெகுளியை மறத்தல் = யாவர்மாட்டும் வெகுளியையொழிக ;—தீய பிறத்தல் அதனான் வரும் = ஒருவர்க்குத் தீயன வெல்லாமுளவாதல் அதனான் வரும் ஆகலான். எ-று.

வலியார் ஒப்பார் எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் 'யார் மாட்டும்' என்றும், மனத்தாற்றுறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைக ளெல்லாவற்றையும் பிறப்பித்தலின், 'தீயபிறத்தலதனான்வரும்' என்றுங் கூறினார். (ந)

விளக்கம்:—மேற்கூறியவண்ணமே தன்னினும் வலியானிடத்தாவது எளியானிடத்தாவது கோபத்தைச் செலுத்துவானாயின் அக்கோபமானது தீங்கினைப்பயக்கும் என்றதோடு அமையாது தனக்கு ஒப்பானிடத்தும் கோபத்தைச் செலுத்தலாகாதென்றும், அவ்வாறு செய்வதால் மனத்தால் துறந்தானாகிய இவனுக்கு ஒரு போதும் ஆகாதனவாகிய தீயசிந்தனைகளையெல்லாம் அக்கோபம் பிறப்பித்து விடுமென்றும் ஆதலால் வலியார் ஒப்பார் எளியார் என்னும் யாவரிடத்தும் வெகுளியை யொழித்துவிடுதல் வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கோபத்தின் பயனானது துறந்தார்க்குத் தீங்கினைப் பயக்குமென்பது எத்தன்மைத்" என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

304. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(பரி.) இ-ள். நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் = துறந்தார்க்கு

அருளானுளவாய முகத்தின்கணகையையும் மனத்தின்கணுவகையையுங் கொன்று கொண்டெழுகின்ற சினமேயல்லது—பிறபகையும் உளவோ=அதனிற் பிறவாய பகைகளும் உளவோ? இல்லை. எ-று.

துறவாற் புறப்பகையிலராயினும் உட்பகையாய் நின்று அருண்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமுமெய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது. (ச)

விளக்கம்:—துறந்தான் ஒருவனுக்குப் புறத்தேபகைவர் இல்லையாயினும் அத்துறந்தான் கோபங் கொள்ளுங்காலத்து அன்பின் முதிர்ச்சியாகிய அருளையே ஒரு வடிவாகக்கொண்டுள்ள அவன் முகத்தினிடத்தே காணும் நகையினையும் உயிர்களைக்கண்ட காலத்தே எக்காலத்தும் உவக்கின்ற மனத்தில் தோன்றும் உவகையினையும் அடியோடு ஒழிக்கின்ற சினத்தைக்காட்டிலும் உட்பகை அத்துறவிக்கு வேறு ஒன்றில்லை என்று இத்திருக்குறளால் அறிந்தோமாதலால், அருள் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித் துன்பத்தினையும் அடைவிக்கும் சினத்தைக்காட்டிலும் வேறுபகையில்லை என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் சினங்கொண்ட துறவியொருவன் உட்பகையாகிய சினத்தைக் கொண்டமையால் தீங்கு எய்துவான் என்றமையால், அவன் தன்னைக் காத்துக்கொள்வதற்கு ஏதேனும் உபாயம் உள்ளதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

305. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(பரி.) இ-ள். தன்னைத் தான் காக்கின் சினம் காக்க=தன்னைத்தான் துன்பமெய்தாமற்காக்க நினைத்தானாயின், தன்மனத்துச் சினம் வாராமற் காக்க;—காவாக்கால் சினம் தன்னையே கொல்லும்=காவானாயின், அச்சினந்தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும். எ-று.

"வேண்டிய வேண்டியாங் கெய்தற்"* பயத்ததாய தவத்தைப் பிறர்மேற் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருங்கெய்துதலின், 'தன்னையேகொல்லும்' என்றார். "கொல்

* திருக்குறள்—265.

லச் சுரப்பதாங் கீழ்'' * என்புழிப்போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்ப மிகுதி யுணர்த்திநின்றது. (ரு)

விளக்கம்:—துறவியொருவன் சினத்தால் தான்கொண்ட தவத்தினது பயனையுமிழந்து பிறவித்துன்பத்தையும் அடைவது நிச்சயமாதலால், அவ்வித துன்பங்களையும் அடைந்து வேண்டியதை வேண்டியவாறே கொடுக்கும் தவத்தையும் இழந்து போகாதிருக்க எண்ணுவானாயின் தன்மனத்தினிடத்தே சினம் என்னும் பகைவன் தோன்றாதிருக்கக் காத்துக்கொள்ளுதல் வேண்டுமென்றும், அக் காத்தலே தனக்குத் துன்பம் வாராவண்ணம் காத்துக்கொள்ளும் காப்பு என்றும், அதனினும் வேறு காவல் இல்லை என்றும் இத்திருக் குறள் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ் விதம் எதன்பொருட்டு தவத்தையுமிழப்பன்?'' என்னலும், ஆசிரி யர் கூறுவாராயினர்.

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்
மேமப் புணையைச் சுடும். [னு

(பரி.) இ-ள். சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி=சினமென்னும் நெருப்பு—இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும்=தனக்கு இடமானவ ரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப் புணையையுஞ் சுடும். எ-று

'சேர்ந்தாரைக்கொல்லி' என்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத் தைக் கொல்லுந்தொழிலதென்றவாறு. சேர்ந்தாரையென உயர்திணைப் பன்மைமேல்வைத்து ஏனைநான்குபாலும் தங்கருத்தோடு கூடிய, பொரு ளாற்றலாற் கொண்டார்; ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத் தையே யாகலின். சினமென்னு நெருப்பென்றவிதப்பு, உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்தவிடத்தையே. இந்நெருப்புச் சேராத விடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டினமென்றது முற்றத் துறந்து தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதி மொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடும் என்னுந் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பது பொருளாகக்கொள்க. ஏமப்புணை= ஏமத்தையுபதேசிக்கும் புணை. 'இனமென்னுமேமப்புணை' என்ற ஏகதேச வுருவகத்தாற் பிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்ற

---

* "இரவலர் கன்றாக வீவாராவாக
விரகிஞ் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவரூன்ற வடியாபோல் வாய் வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்'' —நாலடியார்—ஈயாமை

வன வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. தன்னையும் மீட்டு எடுப்பாரையு மகற்று மென்பதாம். (க)

விளக்கம்:— துறவியொருவனுக்குச் சினமென்பது. நெருப்புப்போலுள்ளதென்றும், அந்நெருப்பானது ஏனைய உலகத்து நெருப்பைப்போல் தான்சேர்ந்தவிடத்துமாத்திரமன்றி சேராத விடத்தையும் சுடுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? இவன் கோபங்கொள்ளுவதால் இவனுக்கு இனமாய் இவனினும் ஞானத்துள் மிக்கோராய் இவனைப் பிறவிக்கடலுள் அழுந்தாதவிதம் கரையேற்றுகின்ற தெப்பம் போன்ற ஞானிகளாயுள்ளவர்களையும், இவனிடத்தே சேராவிதம் செய்யுமென்பதாம். ஏனெனின்? முழுவதும்துறந்து தவம் ஞானம் என்னும் இரண்டிலும் மிகப் பெரியராய்த் தம்மையடைந்து கேட்டவர்க்கு வீட்டையடைவதற்குக் காரணமாகிய உறுதிச் சொற்களை மிக இனிமைபடச் சொல்லுகின்ற துறவிகள் கோபங்கொண்ட ஒருவனிடத்துச் சேர்வதற்கு எண்ணங் கொள்ளார்களாகையால், கோபம் என்னும் நெருப்பு உலகத்து நெருப்புக்குச் சமானமாகச் சொல்லாது, அதனினும் மேற்பட்டுத் தான் சேர்ந்த இடத்தையும் தான் சேராத இடத்தையும் ஆகிய இரண்டையும் சுட்டெரிக்கும் மிகப் பெரிய வல்லமையுடையது என்றும் கண்டோம். ஆதலால், அந் நெருப்பை வளர்த்தல் ஆகாது என்றும் கூறியதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தன்னையும் தன்னைக் காப்பதற்குரிய பெரியோரையும் சுடுகின்ற இத்தீயானது சேர்ந்த ஒருவனை அழித்துவிடுவது உண்மைதானே? அதனின்றும் தன்னுடைய தவவலிமையால் தப்பித்துக் கொள்ளுதல் ஆகாதோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.**

(பரி.) இ-ள். சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு= சினத்தைத் தன்னாற்றலுணர்த்துவதோர் குணமென்று தன்கட் கொண்ட

வன் அவ்வாற்றலிழத்தல்,—நிலத்து அறைந்தான் கைபிழையாதற்று= நிலத்தின்கண் அறைந்தவன்கை அந்நிலத்தையுறுதல் தப்பாதவாறுபோலத் தப்பாது. எ-று.

வைசேடிகர்பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளென்றாற்போல, ஈண்டுக்குணம் பொருளெனப்பட்டது. 'பிழையாததற்று' என்பது குறைந்து நின்றது. இவை மூன்று பாட்டானும் வெகுண்டார்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—ஒருவன் தன்னுடைய அறியாமை மிகுதியால் தன்கையை பூமியினிடத்தே அறைவானாயின், அறைந்தகை அப்பூமியினிடத்தேசென்று சேர்ந்து அக்கைக்கு யிடையூறுவிளைதல் தப்பாதவாறுபோலத் தன்னுடைய வல்லமையைப் பிறர்க்கு உணர்த்துதற்குக்கோபத்தினை ஒருகுணமென்று அக்கோபத்தினைக் கொண்ட ஒருவன் தான் செய்யும் தவத்தால் ஆகிய வல்லமையை இழந்துவிடுவது நிச்சயம் என்று இத்திருக்குறள் கூறுவதாயிற்று. இதனால் கோபத்தைக்கொண்ட துறவியொருவன் பிறர்மேல் சாபமிடுதல் முதலிய வல்லமையைக் காட்டுவானாயின், அவன் தான் செய்யும் தவத்தையுமிழந்து பிறவித்துன்பத்தையும் அடைவது திண்ணம் என்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதுகாறும் கோபத்தினால் வரும் தீங்கு இது என்று அறிந்தோம். இனி இக்கோபத்தைத் தடுப்பார்க்கு வரும் நன்மையையும் சொல்லுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

308. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(பரி.) இ-ள். இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்=பல சுடரையுடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தாலொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும்,—வெகுளாமை புணரின் நன்று=அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின், அது நன்று. எ-று.

இன்னாமையின் மிகுதி தோன்ற 'இணரெரி' என்றும், அதனை மேன்மேலுஞ்செய்தல் தோன்ற 'இன்னா' என்றும், அச்செயல் முனிவனையும்

வெகுள்விக்குமென்பது தோன்றப் ' புணரின்' என்றுங் கூறினர். இதனன் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—ஒருவனுக்குப் பெரியதோர் தீயொன்று தேகத்திற் கொளுத்தினுல் எவ்வளவு துன்பமுண்டாகுமோ அவ்வளவு துன்பத்தைத் துறவியொருவனுக்கு ஒருவன் செய்து விட்டானாயினும், அவ்வித பெரியதோர் துன்பத்தினையும் துறவியானவன் பொறுத்துக் கொள்ளுவானாயின் மிக நன்மையுடையதாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், எவ்வளவு பெரியதோர் துன்பத்தைச் செய்தவனிடத்தும் கோபங்கொள்ளாது பொறுத்துக் கொள்ளுவதே நன்மையடைதற்கு ஏதுவாகும் என்றனர். இதுகேட்ட மாணுக்கர், "இவ்வித பெரியதோர் துன்பத்தைச் செய்தவனிடத்தும் கோபியாது பொறுத்துக்கொள்ளுகின்ற துறவியொருவன் எவ்வித நன்மையை யடைதல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

309. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(பரி.) இ-ள். உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின்—தவஞ்செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின்,—உள்ளிய எல்லாம் உடன் எய்தும்—தான் கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும். எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனன், அருளுடையுள்ளமென்பது முடிந்தது. அதனனுள்ளாமையாவது அவ்வருளாகியபகையைவளர்த்து அதனன் முற்றக்கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறு வேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றானே யெய்துமென்பார், 'உள்ளியவெல்லாமுடனெய்தும்' என்றார். இதனன் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. (க)

விளக்கம்:—தவத்தைப் பொருளாகக்கொண்டு நன்னிலையடைய எண்ணிய துறவியொருவன் அத்தவத்திற்கு அங்கமாகிய அருளுடைமை என்னும் குணத்தினை மிகுதியும் வளர்த்து அவ்வருளுடைமைக்குமாறாகிய பகை என்னும் கோபத்தை மனத்தா

னும் எண்ணாது ஒழிக்க முயலுவானாயின், அம்முயற்சியால் தான் கருதிய பேறாகிய இம்மை மறுமை வீடு என்கின்ற மூன்று வேறு வேறுபட்ட திறத்தனவாகிய கதிகளையெல்லாம் இவ்வருளுடைமை கொண்டு காக்கின்ற கோபத்தையடக்குதல் என்னும் ஒரு அறத்தி னானே பெறுதல் கூடும் என்று இத்திருக்குறளால் கூறியதாயிற்று. ஆதலால், கோபத்தையடக்குவோனுக்கு எல்லாவித நன்மைகளும் நினைத்தது நினைத்தவண்ணமே வந்து கூடுமென்று நீங்கள் மேல் வினவிய வினாவிற்கு இத்திருக்குறள் விடைகூறியதாயிற்று என் றனர். அதுகேட்ட மாணாக்கர், "அறவோய்! கோபம் கொள் ளாமையால் வரும் நன்மையையும் அறிந்தோம். ஆனால், கோபம் கொள்ளுகின்ற ஒருவனை உலகோர் எவ்விதம் எண்ணுகின்றனர்? அக்கோபத்தைக் கொள்ளாதானை எவ்விதம் எண்ணுகின்றனர்? அறிய ஆவலுறுகின்றோம்" என்றனர் ஆசிரியர் கூறுவாராயினர்.

310. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(பரி.) இ-ள். இறந்தார் இறந்தார் அனையர்=சினத்தின் கண்ணே மிக்கார், உயிருடையராயினும், செத்தாரோடொப்பர்;—சினத்தைத் துறந் தார் துறந்தார் துணை=சினத்தைத் துறந்தார், சாதற்றன்மையராயினும், அதனை யொழிந்தாரளவினர். எ-று.

மிக்கசினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர்நின்றதாயி னும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒரு தலையாகலின், அவரை 'இறந்தா ரனையர்' என்றும், சினத்தைவிட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடுபெறுதல் ஒரு தலையாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பரென்றுங் கூறினர். இதனான் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (ய)

விளக்கம்:—சினத்தையே தமக்குப் பொருள் என்று எண்ணி அதனிடத்தே யிருந்தாரை உயிருடையர்களாயிருந்தும் செத்தவர் களோடு எண்ணப்படுகின்றார்களென்றும் கோபத்தை யொழித்த, வர்கள் இறக்கும் தகுதியுடையவர்களாயினும் அச்சாதலைத்தவிர்த் தவர்களாகின்றார்களென்றும் இத்திருக்குறள் கூறுவதாயிற்று. இவ்

விதம் கூறுவதால் தவம்பூண்ட ஒருவன் ஞானத்தையடைந்து பிறப்பு இறப்பினை நீக்கத்தகுந்த தன்மையை யடைந்தும் கோபம் என்னும் இப்பெருந்தீங்கு ஒன்றைக்காக்க முடியாமையால் தவத்தையும் ஞானத்தையுமிழந்து பிறவிக்கடலைநீந்த அறியாது அக்கடலினுள்ளே அழுந்திவிடுகின்றானென்றும், தவஞானமற்று இல்லறம் ஒன்றையே பொருளாகக் கொண்டு பிறப்பினையும் இறப்பினையும் மாறிமாறியடையக்கூடிய வெற்றுடம்புடையானொருவன் கோபம் என்னும் இப்பெருந்தீங்கு ஒன்றினை ஒழிக்க முயலுவானாயின் அவ்வறம் ஒன்றினால் வீடு பேற்றையடைவதற்குரிய ஞானத்தை யடைய யோக்கியனாகவிருக்கின்றான் என்றும் இதனால் போந்த பொருளாகின்றது. ஆதலால், நீங்கள் வினவியபடி கோபத்தை யொழித்தார் எவராயினும் வீடுபேற்றை யடைவரென்றும், கோபத்தை யொழியாதவர் ஞானிகளாயினும் அவர்கள் பிறப்பினையடைவது உண்மையென்றும் அறிவதற்கு இடனாயிற்றுஎன்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியோய்! விரதத்தின்பாற்பட்ட வெகுளாமையின்பயன் ஈதென அறிந்தோம். இனி இவ்விரதத்திற்கேற்ப வேறு அறங்களையும் அருள்செய்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 32. அதிகாரம்.

## இன்னா செய்யாமை. (5)

(பரி.) அஃதாவது:—தனக்கு ஒரு பயனோக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளி யொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது ஒருவன் தனக்கு ஒருபயன் அடையக் கருதியோ, கோபம்குறித்தோ, அறியாமையாலோ ஓர் உயிர்க்கும் தீங்கினைச்செய்யாது இருத்தல். இவ்வித தீங்குசெய்தல் ஒருவனுக்குக் கோபந்தணிந்தபிறகு உண்டாவது ஒன்று ஆதலால், கோபத்

வந்தகாலத்து கோபத்தையடக்கிக்கொண்டு தீங்கு செய்யாவிடினும் கோபம் தணிந்தபிறகு தனக்குக்கோபம் உண்டாக்கியவனுக்குத் தீங்குசெய்ய மனத்தால் எண்ணுதலுமாகாது என்று கூறவந்தாராதலால், கோபித்தலாகாது என்னும் வெகுளாமைக்குப் பிறகு இன்னாசெய்யாமை என்னும் இவ்வதிகாரத்தை வைத்தனர்.

311. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(பரி.) இ-ள். சிறப்பு ஈனும் செல்வம் பெறினும்=யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னாசெய்து பெறலாமாயினும்,—பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள்=அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றான் மனந்தூயாரது துணிவு. எ-று.

உம்மை—பெறாமைமேற்று. சிறப்புடையதனைச் 'சிறப்பு' என்றும், அதன் பயிற்சியான் வாயுவை வென்றெய்தப் படுதலின், எட்டுச்சித்திகளையுஞ் 'சிறப்பீனுஞ் செல்வம்' என்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களற்றமையான் 'மாசற்றார்' என்றுங் கூறினர். (இதனால் தமக்கொரு பயனோக்கிச்செய்தல் விலக்கப்பட்டது.) (க)

விளக்கம்:—இத்திருக்குறள் துறவியொருவன் தனக்கு ஒரு பயன் கருதி பிற உயிர்க்கு யாதொரு தீங்கும் செய்தல் ஒண்ணாது என்பதை முதலில்அறிவிக்கவந்து அத்தீங்குசெய்வதால் வரும்பயன் யோகத்தால்வரும் அணிமா முதலிய அஷ்டசித்திகளையும் தரும் பெரிய செல்வமாயினும் அக்காலத்தும் பிறவுயிர்களுக்கு இன்னா செய்தல் ஆகாது என்று கூறுகின்றது. இவ்விதம் கூறுவதால், மிகப் பெரியதோர் யோகப்பயிர்ச்சியைச் செய்து முடிவில் அடையக் கூடிய அஷ்டமாசித்திகளையும் யாதொரு வருத்தமுமின்றி ஒருயிர்க்குத் தீங்கு செய்வதால் பெற்றுவிடக்கூடிய சுலபமுடையதாயினும் அக்காலத்தும் பிறவுயிர்க்குத் தீங்குசெய்தல் ஆகாது என்று அறிந்தோம். ஏனெனில்? பிறவுயிர்க்குத் தீங்குசெய்து பெறுகின்ற செல்வமானது வானிடத்தே தோன்றும் மின்னலைப்போல் நிலைபெறாது மறைந்துபோவதால், நிலைபெற நிற்கும் வீட்டு இன்பத்தைக்கருதி காமவெகுளிமயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும்

ஒழித்தமனத்தூய்மை கொண்ட பெரியோர் அதனைச்செற்றம் பற்றி யும் செய்யார் என்று கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "துறவியொருவன் தன் பயன்கருதி பிறர்க்குத் துன்பஞ் செய்தலாகாது என்பதறிந்தோம். ஆயின், செற்றம்பற்றியும் செய்த லாகாது என்பதுஎவ்விதம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர்.

## 312. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
## செய்யாமை மாசற்றார் கோள்.

(பரி.) இ-ள். கறுத்து இன்னா செய்தவக்கண்ணும்=தம்மேற் செற் றங்கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தவிடத்தும்—மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள்=மீண்டு தாம் அவனுக்கின்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு. எ-று.

இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்னாத வற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பால தென்பதாம். (உ)

விளக்கம்:—துறவியொருவன்மீது ஒருவன் கோபத்தாலா வது அல்லது பகையாலாவது துன்பஞ்செய்த காலத்தும் துன்பம் செய்தவனுக்குத் துறவியானவன் பிரதியாக ஓர்வித துன்பத்தை யும் செய்யாதிருத்தல் வேண்டும்என்பது அம்மனத்தூயானது துணி வாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆகவே, தனக்குத் தீங்குசெய்தவனுக்கும் துன்பம் செய்தல் கூடாது என்பதை யறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "தனக்குத்தீங்கு செய்த வனுக்கும் தீங்குசெய்தல் ஆகாது எனினும், தான் ஒரு தீங்கும் செய்யாதிருக்கும்போது மற்றொருவன் தனக்குத்தீங்கு செய்வானு யின் அவனுக்குத்தீங்கு செய்யாது விட்டுவிடுதல்வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 313. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
## னுய்யா விழுமந் தரும்.

(பரி.) இ-ள் செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்=தான் முன்போரின்னாமை செய்யாதிருக்கத் தன்மேற் செற்றங்கொண்டவர்க்கும்

இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்,—உய்யா விழுமம் தரும்= அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும். எ-று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல். (௩)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள் மேல்வினவிய வினாவிற்கு விடை தந்ததாயிற்று. அது வென்னையோவெனின்? தான் பிறனொருவனுக்கு முன்பு யாதொருதீமையும் செய்யாது இருந்தும் அவன் தனக்குத் தீங்கு செய்வானாயின் அக்காலத்தும் தீங்கு செய்தவனுக்குத் தீங்குசெய்யாதிருத்தலே துறந்தானுக்கு ஓர்விரதமென்று அறிவித்ததாகும். ஏனெனின்? தீங்கு செய்வானாயின் தான் கொண்டதவத்தையும் இழந்து பழியையும் பாவத்தையும் அடைவான். ஆதலால், அவ்வித பழியையும் பாவத்தையும் அடையாவண்ணம் இன்னா செய்யாதிருத்தல் மிகநன்மை யென்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் துன்பஞ்செய்தார்க்கும் துன்பஞ் செய்தலாகாது என்னின், வேறு எதைத்தான் செய்தல்வேண்டும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

314. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(பரி.) இ-ள். இன்னா செய்தாரை ஒறுத்தல்=தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தாரொறுத்தலாவது—அவர் நாண நன்னயம் செய்து விடல்=அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து அவ்விரண்டினையும் மறத்தல். எ-று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. (இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது) (௪)

விளக்கம்:—துறவியொருவன், தனக்கு எவனேனும் ஒரு துன்பத்தைச் செய்வானாயின், செய்த அவன் வெட்கப்படும்படி அவனுக்கு மிக நன்மைகளைச்செய்து அவன் செய்த துன்பத்தினையும் தான்செய்த நன்மையினையும் ஆகிய இரண்டையும் அப்போதே மறந்துவிடுதல் வேண்டுமென்றும், அதுவே துன்பஞ்செய்தவனைத்

தண்டித்ததாகும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், தீமை செய்தார்க்கும் நன்மைசெய்வதே அருளையே ஒருருவமாய்க்கொண்ட அருளாளராகிய துறவிகளினது இலக்கணமென்றும், அவ்வித இலக்கணம் வாய்ந்த பெரியோர் பிறவுயிர்க்கு யாதொரு இன்னாமையையும் செய்யாரென்றும் தெரிந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "செற்றம்பற்றித் துறவியொருவன் ஓருயிர்க்கும் ஒரு தீங்கும் செய்யாதிருத்தல் சிறப்பென்பதை யறிந்தோம். இனி சோர்வினால் இன்னாசெய்யாதிருத்தல் வேண்டும் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

315. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

(பரி.) இ-ள். அறிவினான் ஆகுவது உண்டோ = துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினானாவதொரு பயனுண்டோ?— பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றாக்கடை = பிறிதோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து. எ-று.

குறிக்கொண்டு காத்தலாவது = நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்களுறுவன வற்றை முன்னையறிந்து உறாமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணிய வுடம்புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப் படப் 'பிறிதினோய்' என்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கின்னா செய்தலா மென்றறிந்து காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி 'அறிவாற் பயனில்லை' என்றுங் கூறினார். (இதனாற் சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது.) (௫)

விளக்கம்:—துறந்தான் ஒருவன் உயிரின்தன்மையை உள்ளவாறு நூலறிவாலும் இயற்கையறிவாலும் அறிந்ததனாலாகிய பயனால் மற்றோருயிர்க்கு வரும் துன்பத்தினைத் தன்னுயிர்க்கு வந்ததுபோல அறிந்து காவாவிடின் அவ்வறிவு அவனுக்கு ஒரு பயனையும் தாராது என்று இத்திருக்குறள் கூறுவதால், துறவியொருவன் தான் நடக்கின்றகாலத்தும், உட்காருகின்றகாலத்தும், படுக்கின்ற

காலத்தும், நிற்கின்றகாலத்தும், உண்ணுகின்றகாலத்தும் மற்றும் எக்காலத்தும் பிறவுயிர்கள் அடையுந்துன்பங்களை முன்னரே யறிந்து அவ்வுயிர்கள் அவ்விததுன்பங்களை யடையாவண்ணம் அவைகளைக் காத்தல்வேண்டுமென்றும், இது பெரும்பான்மையும் நுட்பமாகிய உடம்பையுடைய புழு, சிதல், எறும்பு ஆகிய இத்தகைய உயிர்களை நோக்கியே சொன்னதென்றும், அவ்விதம் இன்னுண்ணிய உடம்புகளையும் அறிவுடன் காப்பதே தவத்தின் பயனுடைமையென்றும், அவ்வாறகாவாது அவ்வுயிர்கட்குத் துன்பங்களைத் துறவியொருவன் மேற்சொல்லிய நடத்தல் முதலிய தொழில்களால் செய்வானாயின், அவன் நுணுகிநுணுகிச் சென்று பெற்ற நூலறிவால்யாதும் பயனில்லையென்றும் அறியக்கிடக்கின்றது. ஆதலால், மறப்பினும் பிற உயிர்க்குத் துறவியொருவன் தீங்குசெய்யாதிருத்தலே வேண்டும் என்பது இதனால் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "சோர்வினும் இன்னுசெய்யாமை வேண்டுமென்று கூறியது அறிந்தோம். இனி காட்சியளவையிற் படாது நிற்கின்ற இன்னுதவற்றை எவ்வாறு அறிந்து காத்தல் கூடும் என்பதையும் விளக்கல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

316. இன்னு வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(பரி.) இ-ள். இன்னு எனத் தான் உணர்ந்தவை=இவை மக்கட்கின்னுதனவென அனுமானத்தாற் றனறிந்தவற்றை—பிறன்கண் செயல் துன்னுமை வேண்டும்=பிறன்மாட்டுச்செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும். எ-று.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப்படாமையறிக. அறமும் பாவமுமுளவாவது மனமுளனுயவழியாகலான், 'உணர்ந்தவை' என்றார். (சு)

விளக்கம்:—இன்பதுன்பங்கள் உயிரினது குணமாதலால் அவை காட்சியளவையால் அறியக்கூடாதனவாயினும், அனுமான அளவையால் இவையெல்லாம் மக்கள் உயிர்க்கு இன்னுதனவாகும்

என்று அறிந்து அவ்வின்னாதனவற்றைப் பிறனொருவனுக்குத் துறவியொருவன் செய்யாதிருத்தலே அறத்தையடைவதென்றும், அல்லாவிடின் பழியையும் பாவத்தையும் அடைய நேரும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், துறவியொருவன் உயிர்களின் குணங்களை அறிந்தவனாதலால் உயிர்கட்கு இவை துன்பம் இவை இன்பம் என்று அனுமான அளவையாலும் அறிந்து காத்தல் வேண்டும் என்பது பெற்றாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், “ஆம், பிறவுயிர்க்குக் காயத்தாலோ, வாக்காலோ அல்லது மனத்தாலோ இன்னாசெய்யாதிருத்தல் எவ்விதம் என்பதையும் விளக்கல் வேண்டும்?” என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

317. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணா செய்யாமை தலை.

(பரி.) இ-ள். மனத்தான் ஆம் மாணா=மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை—எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை=எக்காலத்தும் யாவர்க்குஞ் சிறியதாயினுஞ் செய்யாமை தலையாய வறம். எ-று.

ஈண்டு மனத்தானாகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் ‘எஞ்ஞான்றும்’ என்றும், எளியார்க்குமாகாமையின் ‘யார்க்கும்’ என்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் ‘எனைத்தானும்’ என்றுங் கூறினார். (எ)

விளக்கம்:—துறவியொருவன் தனக்கு எவ்வளவு வல்லமையிருந்தபோதிலும் எவ்வளவு எளியவரிடத்தும் மிகச்சிறியதோர் துன்பமாகிய செயல்களையும் மனமறிந்து செய்தலாகாதுஎன்று இத்திருக்குறள் கூறுவதால், வாக்காலும் காயத்தாலும் இன்னாசெய்தல் கூடாது என்பது சொல்லாமலே பெறப்படுகின்றது. அன்றியும், பரிமேலழகர், மனத்தான் ஆகாதவழிப்பாவமில்லை என்று கூறியதால், ஒருவன் தன்னையறியாமல் ஏதேனும் ஒருயிர்க்கு ஒரு துன்பத்தினைச்செய்து விடுவானாயின், அதனால் செய்த அவனுக்குப் பாவமில்லை என்று கூறினும், மேல்குறிக்கொண்டு காத்தல் என்று கூறியிருப்பதால் தவஞ்செய்வார் எண்ணும் துறவியொருவன் அப்புத்திபூர்வ

மாகவும் ஒருதீங்கினையும் ஒருயிர்க்கும் செய்தலாகாது என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அநுமானத்தா னும் அறிந்து உயிர்கட்குத் துன்பம்செய்தல் ஆகாது என்று மேற் கூறிய திருக்குறளில் உள்ளவிஷயத்தை மற்றோர் முறை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(பரி.) இ-ள். தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான்—பிறர் செய்யுமின்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாந்தன்மையை அனுபவித்தறிகின் றவன்,—மன் உயிர்க்கு இன்னாசெயல் என்கொல்—நிலைபேறுடைய பிறவு யிர்கட்குத் தானவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்! எ-று.

இவ்வாறே இவை பிறவுயிர்க்கும் இன்னாவென்பது அநுமானத்தா னறிந்து வைத்துச் செய்கின்ற இப்பாவங் கழுவப்படாமையின், இன்னாதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தானுமறிந்து ஒழி யற்பாலனென்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழியா மைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற 'என்கொலோ' என்றுங் கூறி னார். (இவை மூன்று பாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.) (அ)

விளக்கம்:—துறவியொருவன் பிறர்தனக்குச்செய்யும் இன்னா தனவாகிய காரியங்கள் தன்னுயிர்க்கு இன்னாதனவாம் தன்மை யுடைய துன்பங்களைத் தருகின்றனவென்று, அனுபவித்தறிந்த வனாகவிருக்க அதைச்சிறிதும் உள்ளவாறு அறியாது நிலைபே றுடைய பிறவுயிர்களுக்குத்தான் இன்னாதவற்றைச் செய்தல் என்ன காரணங்கருதி என்று இத்திருக்குறள் வினவுகின்றது. ஆத லால், புகைகண்டு நெருப்பு உண்டென்று அறிவதைப்போல், இவ் வுயிர்க்கு இது செய்யின் இத்துன்பம் அதற்குநேரும் என்று அறிந் தும் அதைச்செய்யாது அவ்வுயிரைக் காவாவிடில் இவன் கொண்ட துறவால் யாதொருபயனையும் அடையாமற்போவதுடன் கழுவப்ப டாதபாவத்திற்கும் காரணனாகின்றான்என்று அறிகின்றோமாதலால், துறவியொருவன் மயக்கத்தாலும் பிறவுயிர்க்கு இன்னா செய்யா திருத்தல் வேண்டும் என்பது பெற்றாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் அறிந்துவைத்துச் செய்தபாவம் கழுவப்

படாது தீங்கினைத்தரும் என்று கூறுவதால், செய்த ஒருவனுக்கு அத்தீங்கு எப்போது வந்துநேரும்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

(பரி.) இ-ள். பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின்=துறந்தவர் பிறர்க் கின்னாதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின்,—தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்=தமக்கின்னாதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமற்றாமேவரும். எ-று.

முற்பகல் பிற்பகலென்பன, பின் முன்னாகத்தொக்க ஆறும்வேற்று மைத்தொகை. தவமழிதலின், அங்ஙனங் கடிதினும் எளிதினும் வரும்; அதனால் அவை செய்யற்கவென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின், அச்செயறானே தமக்கின்னாதனவாய் வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க. (கூ)

விளக்கம்:—துறந்தவர் மற்றவர்களுக்கு இன்னாதனவாகிய விஷயங்களை ஒருபகலின் முற்பாகத்தில் செய்வாராயின், அதன் பின் பகலிலேயே அவ்வின்னாதன செய்துகொள்ளப்பட்டவர் களால் செய்யப்படாமலே தாமேவந்து அடையும் என்று இத் திருக்குறள் கூறியதால், ஒருவன் ஓர் துன்பத்தைப் பிறவுயிர்க்குக் காலைச் செய்யின் அதற்குப்பதிலாக மாலையில் துன்பத்தையடைய வேண்டும் என்பதும்பெற்றோம். அன்றியும், துறவியொருவன் பிற வுயிர்க்குத்தீங்குசெய்யஎண்ணுவானாயின், அத்தீங்குஅவன்கொண்ட அருளை யழித்துப் பாபத்தைப் பயந்து தவத்தைப் போக்கும் என் பது கண்டோம்என்றனர். அதுகேட்டமாணுக்கர், "இவ்விதம் 'முற் பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்பதை யறிந்தோம். ஆயின், உலகத்து இவர் பிறிதோருயிர்க்கு இன்னாதனசெய்தவர் என்று அறிந்துகொள்வதற்கு ஏதேனும் காட்சியளவையாகிய செயல்கள் காணப்படுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

320. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

(பரி.) இ-ள் நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்=இன்னா தனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்தார் மேலவாம்;—நோய்

இன்மை வேண்டுபவர் நோய் செய்யார்—அதனால் தம்முயிர்க்கு இன்னா தன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்யார். எ-று.

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே*. யாகலின், 'நோயெல்லா நோய்செய்தாாமேலவாம்' என்றார். இதுசொற்பொருட்பின் வருநிலை. இவை யிரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வருந்தீங்கு கூறப் பட்டது. (ம)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள் மேல் வினவிய ஐயத்தை யறவே யொழித்ததாகும். அது எவ்வாறெனின்? நோயோடுகூடிய உடம்பினையுடையாரெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்த வர் என்று நூல்கள் கூறுகின்றன. ஆகவே உடம்புகொண்டு துன் பப்படவேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னாதனவற்றைச் செய் யாதிருத்தல் வேண்டும் என்றும் அவ்வாறன்றித் தீங்குசெய்வா ராயின் அத்தீங்கின் பயனானது தீங்கு செய்தவர்க்கு உலகத்தா ரால் பார்க்கமுடியாத நோயுடம்பைத்தரும் என்றும் பெறுகின் றோம். ஏனெனில்? உழவன் ஒருவன் தன்நிலத்து இட்டவிதை எதுவோ அதனையே விளைவாகக் கொள்வதுபோல், மக்கட் பிறப் பைக் கொண்ட ஒருவன் தன் உயிராகிய நிலத்தில் எவ்விதவினையா கிய வித்தினை இட்டானோ அவ்வித வினையின் பயனையே அடைகிறான் என்பது திர்ந்தபொருளாயிற்று. அதாவது, பிறர்க்குத் தீங்குசெய்வது தீவினையாதலால், அத்தீவினையின்பயன் மேற் செய்த வனுக்குப் பொறுக்கலாகாத துன்பத்தினைத்தரும் நோயுடம்பினை யுண்டாக்கும்என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக் கர், "இன்னாசெய்யாமை என்பதை நன்றாகவுணர்ந்தோம். இனி, இவ்விரத இயலின்பால் பட்ட அறம் இன்னும் ஏதேனும் உள்ளதோ என்று அறியவும் ஆசைப்படுகின்றோம்?" என்றனர், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 33. அதிகாரம்.

## கொல்லாமை.

---

(பரி.) அஃதாவது:—ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையனவீறாய உயிர் களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்க ளெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறாத வறங்களையும் அகப்படுத்து நிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

---

* சீவகசிந்தாமணி,—முத்தியிலம்பக்கம்,—164.

விளக்கம்:—அதாவது, உலகத்து உள்ள ஐந்து அறிவினையுடைய உயிர்கள் முதல் ஓரறிவுடைய உயிர்கள் வரையில் கொல்லுதலைச் செய்யாமையாகும். அதாவது, தொடுதலால் அறியும் புல், மரம் முதலிய ஓரறிவுயிர்களையும், இதனோடு ரசத்தாலறியும் இப்பியும், சங்கும் முதலாகிய ஈரறிவுயிர்களையும், இவ்விரண்டனோடு கந்தத்தாலறியும் கறையான், எறும்பு முதலிய மூவறிவுயிர்களையும், இம்மூன்றனோடு உருவத்தாலறியும் தும்பி, வண்டு முதலிய நாலறிவுயிர்களையும், மேற்சொன்ன நான்கனோடு சத்தத்தாலறியும் தேவர், மக்கள், நரகர், விலங்கு, புள் முதலாகிய ஐயறிவுயிர்களையும் மறந்தும் கொல்லுதலைச் செய்யாமை. இவ்வறம் மேற்சொல்லிய அறங்கள் எல்லாவற்றிலும் சிறப்புடையதாதலாலும், இதனுள் கூறாத மற்றைய அறங்களையும் உட்படுத்தி நிற்றலாலும், இவ்வறத்தினைத் துறவிக்கு அவன் கொண்ட விரதத்தின்கடைசி அறமாக வைக்கப் பட்டுள்ளது என்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "விரதத்தின் இறுதியாக வைக்கப்பட்ட இவ்வறம் மேற்கூறிய எல்லா அறங்களிலும் எவ்விதம் சிறப்புடையதாயிற்று? விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

(பரி.) இ-ள். அறவினை யாது எனின் கொல்லாமை=அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஓருயிரையும் கொல்லாமையாம்,—கோறல் பிறவினையெல்லாம் தரும்=அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகளெல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான். எ-று.

அறம்—சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார். ஈண்டுப் பிறவினையென்றது அவற்றின் விளைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பம் ஏனைப்பாவங்களெல்லாங்கூடியும் விளைக்கமாட்டாவென்பதாம். கொல்லாமைதானே பிற வறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள்கூறி, அதற்கேது எதிர்மறை முகத்தாற் கூறியவாறாயிற்று. (க)

விளக்கம்:—அறங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து செய்யத்தக்க அறம் எது என்று நல்லறிவுடைய ஒருவன் வினவ

வானாயின், அது ஒருயிரையும் கொல்லாதிருத்தலேயாம் என்றும், அதைவிட்டு எவனேனும் கொல்லுதலைச்செய்வானாயின்இக்கொல்லுதல் என்னும் பாவம் ஒன்றே ஏனைய தீயசெயல்களால் வரும்பாவங்கள் அனைத்தையும் தப்பாது விளைக்கும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? கொலைப்பாவத்தால் உண்டாகும் துன்பம்போல் ஏனைய பாவங்களெல்லாவற்றாலும் வருவது இல்லையாதலால், இக்கொலைப்பாவமே பிறபாவங்களைக் கொண்டு சேர்க்குமென்றும், கொல்லாமையாகிய நல்வினையே பிற அறங்களாகிய நல்வினைகளின் பயனை எல்லாம் தரும் என்றும் கூறுவதால், இவ்வறமே ஏனைய அறங்கள் எல்லாவற்றினும் முதன்மையாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வறம் ஒன்றே சிறந்ததெதன எந்நூல் வல்லவர்களும் ஒத்துக்கொள்ளுகின்றனரோ? அன்றி, நம்தெய்வப் புலவர் தம்கொள்கை கொண்டு கூறுகின்றனரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

322. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(பரி) இ-ள். பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல்=உண்பதனைப் பசித்த வுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு ஐவகையுயிர்களையு மோம்புதல்—நூலோர்தொகுத்தவற்றுள் எல்லாம் தலை=அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்தவறங்க ளெல்லாவற்றினுந் தலையுரயவறம். எ-று.

பல்லுயிருமென்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஓம்புதல்=சோர்ந்துங் கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையாவுறுப்பாகலின், அச்சிறப்புத்தோன்ற, அதனை இறந்தகால வினையெச்சத்தாற் கூறினார். எல்லா நூல்களிலும் நல்லன வெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கியல்பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலையாயவறமென்றுங் கூறினார். (உ)

**விளக்கம்:**—அறவியொருவன் தான் உண்ணும் உணவினைப் பசித்த உயிர்களுக்கெல்லாம் பங்கிட்டுக்கொடுத்து மிகுந்ததையுண்டு உயிர்வாழ்வதோடு மேற்கூறிய ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரையும்மறந்தும் கொல்லுதலைச் செய்யாது அவைகளைக் காப்பாற்று

தலே தான் செய்யவேண்டியகடமை என்றும், அவ்வித கடமையே எல்லா அறங்களினும் தலைமையாகிய அறமாகவுள்ளது என்று 'அற நூல் கூறுகின்ற எல்லா மதத்தினரும் தொகுத்து உள்ளார்கள் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், இக்கொல்லாமை என்னும் அறத்தை மிகுத்துக்கூறுவது நம் தெய்வப்புலவர் ஒருவர்க்கு மாத்திரம் அல்லாமல் எல்லா நூலறிவுடையோருக்கும் ஒப்பமுடிந்திருக்கிறது என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் கூறுவதால், முன்னர் நம் தெய்வப் புலவர் வாய்மை என்னும் அதிகாரத்தினுள் 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையினல்ல பிற' * என்று கூறியுள்ளதால், நூல்கள் கூறும் எல்லாவற்றினும் அதுவே சிறந்ததென்று எண்ணினோம். இவ்விடத்துக் கொல்லாமையைக் கூற வந்த தெய்வப்புலவர் இக்கொல்லாமையே மிகச் சிறந்தது ; தலையாய அறம் என்று கூறுகின்றனர். இவற்றுள் எதுசிறந்தது என்று தெரிந்து கொள்வதற்கில்லை" என்று கூறவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

323. ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(பரி.) இ-ள். ஒன்ருக நல்லது கொல்லாமை = நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடிணை ஒப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை;—பொய்யாமை அதன் பின்சார நன்று = அஃதொழிந்தால் பொய்யாமை அதன் பின்னே நிற்க நன்று. எ-று.

நூலோர் தொகுத்தவறங்களென்பது அதிகாரத்தான் வந்தது, அதிகாரம் கொல்லாமையாயினும் மேற் 'பொய்யாமை பொய்யாமை யாற்றின்' † எனவும், 'யாமெய்யாக்கண்டவற்றுளில்லை' † எனவுங் கூறினாராகலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐயநிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்ருர், முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப்பின் சார நன்றென்றது, நன்மை பயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப்பற்ற அது திரிந்துவருதலானென வுணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது சிறப்புக்கூறப்பட்டது.

* திருக்குறள்—300. † திருக்குறள்—297.

விளக்கம் :—நூல்வல்லவர்கள் சொல்லிய அறங்களுள் தனக்குத் தானேசமானமுடையதாய் உள்ள அறம் கொல்லாமை என்னும் அறமே என்றும், அவ்வறத்திற்குப் பிறகேயே பொய்யாமை என்னும் அறம் வைக்கப்படும் என்றும், அதுவே முறையென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதுவென்னையோவெனின்? துறவியொருவன் தான் கொண்ட ஒழுக்கமாகிய விரதத்தை யனுட்டிப்பதற்கு உயிர்களை யோம்புதலே கருவியென்றும், அவ்வித உயிர் ஓம்புதலின் பொருட்டு நிகழாத ஒன்றைக் கூறியேனும் அவ்வுயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், ஒருயிர்க்குத் துன்பம் வருவது நிகழ்ந்தது ஒன்றைக் கூறுவதால் நேருமாயின், அதைச் சொல்லுதலாகா தென்றும் வாய்மையுள் கூறியிருப்பதால், துறவியொருவன், தான் கொண்ட விரதத்தை முடித்து ஞானத்தையடைய வேண்டுமாயின், உயிர்களைக் காத்தலே தனக்குத் துணைக் காரணமாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கொல்லாமை என்பது அறங்களுள் எல்லாம் சிறந்த அறம் என்று கூறுவதால், அவ்வறம் ஒன்றே நன்னெறியைப்பயக்கும் அறம் என்று நாங்கள் அறிகின்றோம். ஆதலால், அந்நெறி ஒன்றுதான் நன்னெறியோ என்பதையும் விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

324. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(பரி.) இ-ள். நல்லாறு எனப்படுவது யாது எனின்=மேற்கதி வீடுபேறுகட்கு நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி=அஃது யாதோருயிரையுங்கொல்லாமையாகிய அறத்தினைக்காக்கக் கருதும் நெறி. எ-று.

'யாதொன்றும்' என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல்=வழுவாமற்காத்தல். (இதனால் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்று கூறப்பட்டது.) (ச)

விளக்கம் :—கதி வீடுபேறுகளை யொருவன் இனியடைய வேண்டுமாயின் அவன் கொள்ளவேண்டிய நல்ல நெறி எது என்று வினவுவானானால், அந்நல்ல நெறி யாதோர் உயிரையும் மறந்தும்

கொல்லாமையாகிய விரதத்தினைக் காக்கும் நெறியொன்றேயாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், இந்நெறியைக் காட்டிலும் நன்னெறிவேறொன்று யார்க்கும்இல்லைஎன்பது பெறப்படுகின்றதென்றனர். அன்றியும், நீங்கள் எண்ணிய வண்ணம் இதுவே நன்னெறியாகும் என்பதில் யாதும் ஐயமில்லை என்றுங்கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "துறவுபூண்ட எல்லா மதத்தினரும் இக்கொல்லாமையை மேற்கொண்டு நிற்கின்றனரோ? சிலர் அக்கொல்லாமையை எண்ணுதிருக்கின்றனரோ? அக்கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகுகின்ற துறவிகள் தாம் சிறப்புற்றவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

325. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(பரி.) இ-ள். நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் — பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தாரெல்லாருள்ளும்—கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை — கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன். எ-று.

பிறப்புநின்றநிலையாவது:—இயங்குவ நிற்பவென்னுமிருவகைப் பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டாற் பலவாமாகலின், 'நீத்தாருளெல்லாம்' என்றார். இதனான் இவ்வறம் மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது. (ரு)

**விளக்கம்:**—துறந்தான் ஒருவன் பிறப்பு கடலலைபோல்ஓயாது மாறிமாறி வருவதால் அப்பிறப்பால் ஆகியதுன்பத்தைப் பொறுப்பதற்கு இயலாது வீட்டினுடைய இன்பத்தை யடைய எண்ணி அதற்குத் துணைக்காரணமாகிய துறவினைப் பூண்கின்றானாதலால், அவ்வித துறவி யொருவன் கொலைப்பாவத்தைச் செய்கின்ற ஏனைய துறவிகள் யாவரினும் சிறந்தவனாக உள்ளான் என்றும், இவ்வறத்தினை மறவாதவனே தான் கொண்டவிரதத்தை முடிக்கும் ஆற்றலுடையவன் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், இவ்வறமே பிறப்பினை நீக்கி வீட்டினையடையும் நெறி என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கொல்லா

மையை யொருவன் மேற் கொள்ளுவானுனல், அவனுக்கு வீட்டின் பம் கிடைக்கும் என்று இத்திருக்குறளால் அறிகின்றோம். ஆயின், இவ்வறத்தினைச் செய்தான் ஒருவனுக்கு இம்மையில் ஏதேனும் ஓர் பயன் கிடைத்தல் உண்டாகுமோ?" என்னனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

(பரி.) இ-ள். கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாண் மேல்=கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ் நாளின்மேல்—உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது=உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது. எ-று.

மிகப்பெரிய வறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பரென்னும் அறநூற்றுணிபுபற்றி, இப்போறஞ்செய்தான்ருனுங் கொல்லப்படான். படானுகவே, அடியிற்கட்டியவாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், 'வாழ்நாண்மேற் கூற்றுச்செல்லாது' என்றார். செல்லாதாகவே, காலநீட்டிக்கும்; நீட்டித்தால், ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுமென்பது கருத்து. (இதனுன் அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—இத்திருக்குறள், துறவியொருவன் கொல்லாமை என்னும் விரதமாகிய இவ்வறம் ஒன்றினையே தனக்கு நன்னெறி என்று கொண்டு உயிர்வாழ்வானுயின், அவ்வித ஒழுக்கமுடையவன் ஆகிய அவன் வாழ்நாளின்மீது உயிரைக் கூறுசெய்து உண்ணுகின்ற கூற்றுவனுவான் செல்லமாட்டான் என்று கூறுகின்றது. அது என்னேயோவெனின்? மிகப் பெரிய தருமத்தைச் செய்தவரும் மிகப் பெரிய பாபத்தைச் செய்தவரும் இம்மையிலேயே அச்செய்கைகளின் பயனை அனுபவிப்பார்கள் என்று அறநூல்கள் கூறுவதால், இப்பெரியதோர் கொல்லாமை என்னும் அறத்தைச் செய்தவன் நடுவில் கொல்லப்படான். கொல்லப்படாதிருத்தலும், இவனுக்குக் கருவினுள்ளேயே அமைந்துகிடந்த விதித்த வாழ்நாள் யாதொரு இடையூறுமில்லாமல் நடைபெறும். அவ்விதம் ஆயுள் குறையாது நடைபெறுதலால் இவனுக்கு வயது நீட்டித்தநா

யிருக்கும். நீண்ட வயதினனாகிய இவன் விரதம் முடித்து ஞான மடைந்து வீடு பேற்றினையடையும் தகுதியுடையவனாவான் என்று பொருள்படுதலால், இக்கொல்லாமை என்னும் அறம் ஒன்றினைச் செய்த ஒருவன் இம்மையில் அடையும் நன்மையையும் அறிந்தோம் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "உயிர் ஒன்றை யொருவன் தன்னலங்கருதிக் கொல்லுதல் ஆகாது என்பது மிகத் தகுதியேயாகும். ஆயின், ஏதேனும் ஒருயிர் ஒருவனைக் கொல்ல முயலுமாயின், அப்போது அவ்வுயிரைக் கொல்லுதல் அவனுக்குத் தகுதியேயாகு மன்றோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

327. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(பரி.) இ-ள். தன் உயிர் நீப்பினும்=அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினீங்கிப்போமாயினும்,—தான் பிறது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க=தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பினீக்குந் தொழிலைச் செய்யற்க. எ-று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்கவென்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தம்முயிர் போமாயினுமென்றுரைப்பாருமுளர்; பிற செய்தலுமாகாமையின், அஃதுரையன்மை யறிக. (எ)

விளக்கம் :—இத்திருக்குறள், ஒருவன் தன் உயிர்மேல் வருகின்ற மற்றோருயிரைக் கொல்லாதிருத்தலே சிறந்த தருமமென்றும், தான் இறந்துபடுவதாயினும் அப்போதும் தன்னைக் கொல்ல வருகின்ற உயிரினைக் கொல்லுதல் ஆகாது என்றும் கூறுகின்றது. அது என்னையோ வெனின்? துறவியொருவனை ஒருயிர் கொல்ல வருமாயின் அவ்விதம் கொல்ல வந்த அவ்வுயிரினைக் கொல்லுதலால் கொன்ற இவனுக்குப் பாவமிகுந்து கொண்டவிரதத்தினை இழக்க நேருகின்றது. அவ்வாறில்லாமல், அவ்வுயிரைக் கொல்லுதற்கு அஞ்சி அவ்வுயிரால் தான் கொல்லப்படுவானாயின், தான் கொலையுண்டமையால் கொலை யுண்டவன் தனக்குள்ள பாவம் முழு

வதும் நீங்கப்பெற்று நற்கதியடைகின்றான்; ஆகவே, நன்னெறி யடைய விரும்புகின்ற ஒருவன் தன்னைக் கொல்ல வருகின்ற வுயிரையும் கொல்லுதலாகாது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஏதேர் வேள்வி முதலியவைகளைச் செய்கின்ற காலத்து உயிர்களைக் கொல்லுதல் ஆகுமென்றும், அவ்விதம் கொன்று வேள்வியைச் செய்தால் பெரியதோர் தேவபோகம் முதலிய செல்வங்களையடையலாம் என்றும் கூறுவதாக அறிகின்றோம். அவ்விதம் கூறியது இத்துறவிக்கோ அன்றியாவர்க்கோ என்று அறியவும் ஆசைப் படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

328. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

(பரி.) இ-ள். நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும்=தேவர் பொருட்டு வேள்விக்கட்கொன்றால் இன்பமிகுஞ்செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும்,—சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை=துறவானமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவருஞ் செல்வங்கடை. எ-று.

இன்பமிகுஞ் செல்வமாவது :—தாமுந்தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கேதுவாகலானும், வீடாகியஈறிலின்பமெய்துவார்க்குக் 'கடை' எனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகாதென்றமையின், விதிவிலக்குக்கள் தம்முண் மலையாமை விளக்கியவாறாயிற்று. இஃதில்லறமன்மைக்குக் காரணம். (இவை யிரண்டுபாட்டானுங் கொலையது குற்றங் கூறப்பட்டது.

விளக்கம் :—தேவர்கள் விஷயமாக வேள்வியினிடத்தே ஒருயிரைக் கொன்றால் பெரியதோர் இன்பத்தைத் தரும் மிக்கதோர் செல்வத்தை அடையலாம் என்று இல்வாழ்வார்க்குச் சொல்லியிருக்கினும், துறவு பூண்ட சான்றோராகிய பெரியோர்க்கு அவ்விதம் வேள்வியினிடத்தே ஓர் உயிரைக்கொன்று அடைவதாகிய செல்வமானது மிகத் தாழ்ந்தது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. எவ்வாறெனின்? இல்லறத்தானொருவன் வேள்வியைச் செய்யின் தானும் தேவனாய்ப் பிறந்து தேவலோகத்துச் சென்று இன்

பம் அனுபவித்து மீண்டும் பிறப்பினையடைபவனாக இருக்கின்றான். ஆயின்; பிறப்பின் துன்பத்தை யறிந்து வீட்டினையடைய எண்ணித் துறவு பூண்ட துறவியாகிய ஒருவனுக்கு அது மிகுதியும் இழிந்ததோர் செல்வமேயன்றி வேறாகாது. ஆதலால், துறவிக்கு வேள்வியினும் ஒருயிரைக் கொல்லுதல் ஆகாதென்றும், வேள்வியென்பது இல்லறத்தார்க்குக் கூறியது என்பதும் அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஆயின் கொல்லுந் தொழிலைச் செய்கின்றவரை உலகத்தவர் எவ்விதம் மதிப்பர் என்பதையும் அறிய ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

329. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(பரி.) இ-ள். கொலை வினையர் ஆகிய மாக்கள்=கொலைத்தொழிலையுடையராகிய மாந்தர்,—புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையர்=அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர். எ-று.

'கொலைவினையர்' என்றதனான், வேள்விக்கட் கொலையன்மையறிக. 'புலைவினையர்' என்றது தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவரென்பதாம். (க)

விளக்கம்:—கொலைத் தொழிலினது இழிந்த தன்மையை யறியாது அதைச் செய்கின்ற மாக்களாகிய மனிதரை அக்குற்றத்தினை யறியாதார் யாதொரு குற்றத்தினுள்ளும் படுத்துவது இல்லையாயினும், அத்தொழிலின் மிகக் கொடுமையை யறிந்தாருடைய நெஞ்சத்து அவர்கள் புலையினரென்றே கருதப்படுகின்றனர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? ஜாதியால் புலையரல்லாவிடினும் கொலைத்தொழிலைச் செய்வதால் புலையர் என்றே மதிக்கப்படுகின்றார்களென்று அறிகின்றோம். ஆதலால், ஜாதியால் மேம்பட்டும் தொழிலால் கீழ்ப்பட்டுப் பலரால் பழிக்கப்பட்டு இம்மையில் கீழ்மையையே யடைவர் அன்றி மேன்மையை யடையார் என்பது பெற்றோம் என்றனர். அது கேட்டமாணாக்கர், " இக்கொல்லுந்

தொழிலைப் பிறவிகள் தோறும் பயின்ற ஒருவனே செய்வானன்றி இப்பிறப்பிலேயே இத்தீக் கருமத்தைச்செய்ய முயலானென்று எண்ணுகின்றோம். அவ்விதம் முற்பிறப்பில் ஒருவன் கொல்லும் தொழிலைச் செய்து பயின்றவனாயின் அவனை இப்பிறவியில் எவ் விததகுதியுடையவனாகக் காணுதல்கூடும் என்பதை யறிவித்தற்கு மேலோர் ஏதேனும் கூறியுள்ளரோ?" என்று கேட்டலும், ஆசிரி யர் கூறுவாராயினர்.

330 உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(பரி.) இ-ள். செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர் = நோக்க லாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழி தொழில் வாழ்க்கையினை யுடையாரை—உயிர் உடம்பின் நீக்கியார் என்ப = இவர் முற்பிறப்பின் கண் உயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்று சொல்லுவர் வினைவிளைவுகளை யறிந்தோர். எ-று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம்பினராதல் "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்—துக்கத் தொழுநோ யெழு பவே" என்பதனானுமறிக. மறுமைக்கண் இவையுமெய்துவரென்பதாம். (இவையிரண்டு பாட்டானுங்கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.) (ய)

அருளுடைமைமுதற் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற் றுள்ளே சொல்லப்படாத விரதங்களுமடங்கும்; அஃதறிந்தடக்கிக்கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

விளக்கம்:—பிறரால் பார்த்தற்கும் ஆகாத தொழுநோய் முதலிய நோய் உடம்புடனே வறுமையிருந்து இழிதொழில்களைச் செய்கின்ற உயிர்வாழ்க்கையை யுடையவர்களை, நல்வினை தீவினை யினது பயன்களை நூல்களால் அறிந்த நூலறிஞர்கள், இவர் முற் பிறப்பில் உயிர்களை அவை வசித்த உடம்புகளைவிட்டு நீக்கினவர்கள் என்று சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆத லால், ஒருபிறவியினுள் ஒருயிரைக் கொன்றவன் மற்றோர் பிறப் பினுள் நோயுடம்புடனும் தரித்திரத்துடனும் துன்பத்துடனும் உயிர்வாழ்வான் என்பதேபோந்த பொருளாயிற்று. இதனை நாலடியார், தீவினையச்சத்தினுள்,

"அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா
லலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்."

என்பதனாலும் அறிதல்கூடும். அன்றியும், இக்கொலைப் பாவத்தால் இம்மை மறுமை என்கின்ற இரண்டினையும் இழப்பதாகின்றதால், துறவியொருவனுக்கு இக்கொலைத்தொழிலைச் செய்யாதிருத்தலே சிறந்த அறமாகுமென்றும், இதுவே வீடு பேற்றினைத் தரும் ஞானத்தை யுண்டுபண்ணுமென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்டமாணாக்கர் "விரதம் என்பதனை அருளுடைமை முதல் கொல்லாமை ஈறாகக் கேட்டுணர்ந்தோம். இனி எங்கட்கு ஞானம் என்பதனையும் போதித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

# ஞானம்.

(பரி.) இனி அவற்றின் பயனாகிய ஞானங்கூறிய தொடங்கினார். ஞானமாவது வீடுபயக்கு முணர்வு. அது நிலையாமைமுதல் அவாவறுத்தலிறுதியாக நான்கதிகாரத்து ளடக்கப்பட்டது.

விளக்கம்:–ஞானமாவது அருளுடைமைமுதல் கொல்லாமை ஈறுகக்கேட்ட விரதங்களின்பயனாகிய அறிவுடைமை என்பதாகும். ஆதலால், ஞானமென்பது வீட்டினைக் கொடுக்கும் ஓர் உணர்வு. அவ்வித ஞானம் என்பது நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களால் சொல்லப்பட்டுள்ளது என்பதாகும்.

## 34. அதிகாரம்.

## நிலையாமை.

(பரி.) அவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற்*புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையுமுடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே யுடையவென்பாருமெனப் பொருட்பெற்றி† கூறுவார் பலதிறத்தராவர்; எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

விளக்கம்:—மேற்கூறிய நான்கு அதிகாரங்களுள் முதலாவதாகிய நிலையாமை என்பது தோன்றுகின்றயாவும் நிலைத்தலில்லா

---

* பேய்த்தேர்=கானல் நீர். † பொருட்பெற்றி=பொருளது தகுதி இதுவெனல்.

மல் ஒழிந்துபோம்தன்மையது. இந்நிலையாமையைப் பலதிறப்பட்ட மதத்தினர் பலவாறாகத் தம்மதம்பற்றி ஒடுக்கிக் கூறுவாரேனும் முடிவாக எம்மதத்தினரும் ஒழிந்துபோவதென்பதில் உடம்பாடாகவேயிருக்கின்றார்களாகையால், நிலையாமை என்பது யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமாகஉள்ளது. ஆதலால்இவ்விதம்தோன்றுவனயாவும் ஒழிந்துபோம் என்னும் நிலையாமையை யுணர்ந்தாலல்லது பொருள்களிடத்தே பற்றுவிடாதாதலால், ஞானத்தின் பகுதியினுள் இது முதலாக வைக்கப்பட்டுள்ளது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் நிலையாமை என்பதை உணர்ந்தாலன்றிப் பற்றுவிடாது என்றருள்செய்தீர். நிலையாத பொருளில் ஏன் உலகத்தவர் பற்றுச் செய்கின்றனர்? விளக்கல் வேண்டும்." என்றனர். ஆசிரியர் கூறுவாராயினர்.

331. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(பரி.) இ-ள். நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை = நிலையுதலிலவாகிய பொருள்களை நிலையுதலுடையவென்று கருதுகின்ற புல்லிய வறிவினையுடையராதல்—கடை = துறந்தார்க்கிழிபு. எ-று.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்றுகருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற் கேதுவாகலின், அது வீடெய்துவார்க்கிழுக்கென்பது இதனாற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற்கேதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனையனுபவிக்கும் யாக்கையின்கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப. (க)

விளக்கம்:—நிலைக்குந்தன்மை இல்லாது தோன்றிய முதல் அழிந்துபோகும் தன்மையினையுடைய நிலைத்தலில்லாத பொருள்களை நிலையுடைய பொருள்களென்று எண்ணுகின்ற அற்ப அறிவினால் மயங்குகின்ற இல்லறத்தார் போல் விரதங்கொண்ட துறவிகளும் எண்ணங்கொள்ளுவாராயின், அவ்வித எண்ணங்கொள்ளுதற்கு உரிய அவாது அறிவு இழிந்த அறிவே ஆகும் என்று இத்திருக்குறள் கூறு

கின்றது. இதனால், தோன்றுவன அழிவன அல்ல என்றுஎண்ணி, புல்லிய அறிவினைக் கொண்டு அப்பொருள்கள்மீது ஆசைகொண்டு பிறந்து பிறந்து இறக்கின்ற துன்பத்திற்கு ஆளாகநிற்பது இல்லறத் தாருடைய செயலேயன்றி, பிறவித்துன்பத்தை வெறுத்து வீட்டினையடைய முயலும் துறவிகட்கு அது மிகுதியும் இழுக்காகவே முடியும் என்று அறிகின்றோம். இனி, அற்ப அறிவினையுடையார் மிகுதியும் ஆசைகொள்வது சிற்றின்பத்துக்குக் காரணமாகிய செல்வத்தினிடத்தும் அச்செல்வத்தையனுபவிக்கும் தேகத்தினிடத்தும் ஆதலால், இனிவருகின்ற திருக்குறள்கள் அச்செல்வம் நிலையாமையையும் தேகம் நிலையாமையையும் கூறுவனவேயாகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஒருவனுக்குச் செல்வம் எக்காரணத்தால் வருகின்றது? வந்ததாகிய அச்செல்வம் எக்காரணத்தால் ஒழிந்து போகின்றது? விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்:

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(பரி.) இ-ள். பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று—ஒருவன் மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின் கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்,—போக்கும் அது விளிந்தற்று—அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற் போலும். எ-று.

பெருஞ்செல்வமெனவே துறக்கச் செல்வமுமடங்கிற்று. போக்குமென்ற எச்சவும்மையான், வருதலென்பது பெற்றாம். அக்குழாங் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கட் பலதிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித்தானும் போமாறுபோல, செல்வமும் ஒருவனல்வினை காரணமாக அவன்மாட்டுப் பலதிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமென்றதாயிற்று.

விளக்கம்:—ஒருவனுக்கு அளவுபடாத செல்வம் வருவதை நாம் பார்க்குங்காலத்துக் கூத்தாடும் இடத்தில் அக்கூத்தினைக்காண வருகின்றவர் கூட்டம்போல் உள்ளது என்றும், பின்னர் வந்த செல்

வமானது ஒழிந்து போவது கூத்தாட்டு முடிந்தவுடன் கூத்தைப் பார்க்க வந்த கூட்டம் போய் விடுகின்றது போலும் உள்ளது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், தேவஉலகத்திற்சென்றுஅடையும் பெருஞ்செல்வமாகிய துறக்கச்செல்வமும் ஒருவனது நல்வினையாகிய காரணத்தால் வந்து அவனையடைகின்றதென்றும், அந்த நல்வினை ஒழிந்து தீவினை வந்தகாலத்து அச்செல்வ முற்றும் போய்விடுகின்றதென்றும் கண்டோம். அதை உவமைவாயிலாய் யாரும் அறிய வேண்டி விளக்கவந்தாராய நம் தெய்வப் புலவர் கூத்துக்கொட்டகையை ஓர் உவமையாக்கி, நடிக்கின்ற கூத்தைப்பார்க்க விரும்பிய மக்கள் கூத்தின் காரணமாக அக்கூத்துக் கொட்டகைக்குவருவதும், அக்கூத்து ஒழிந்தால் அவர்கள் எல்லோரும் போய் விடுவதும் ஆகிய உவமைகளால் விளக்கினர் ஆயினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "துறவியாகிய வொருவனுக்கு நில்லாததாகிய இச்செல்வம் எற்றுக்கு? அவனுக்குச் செல்வம் எவ்விதம்வரும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

333. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

(பரி.) இ-ள். அற்கா இயல்பிற்றுச் செல்வம் = நில்லாத வியல்பினை யுடைத்துச் செல்வம்; — அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் = அதனைப் பெற்றால், அதனால் செய்யப்படும் அறங்களை அப்பெற்ற பொழுதே செய்க. எ-று.

அல்காவென்பது திரிந்து நின்றது. ஊழுள்ள வழியல்லது துறந்தாரால் பெறப்படாமையின் 'அது பெற்றால்' என்றும், அஃதில்வழி நில்லாமையின் 'ஆங்கே' என்றுங் கூறினார். அதனாற் செய்யப்படும் அறங்களாவன :— பயனோக்காது செய்யப்படுங் கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞான வேதுவாய் வீடுபயத்தலின், அவற்றை 'அற்குப' என்றும், 'செய்க' என்றுங் கூறினார். இவையிரண்டு பாட்டானும் செல்வ நிலையாமை கூறப்பட்டது. (௩)

**விளக்கம்:**—மேற்கூறிய வண்ணம் செல்வம் என்பது நில்லாத இயற்கையையுடையது என்றும், அவ்வித இயற்கையையுடைய

செல்வத்தைத் துறவி யொருவன் பெறுவானாயின், அச்செல்வத்தாற் செய்யக்கூடிய தருமங்களை அச்செல்வத்தை யடைந்த அன்றைப்பொழுதே செய்துவிடல் வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இவ்விதம் கூறுவதால் நீங்கள் மேல் வினவிய வண்ணம் துறந்தார்க்குச் செல்வத்தையடைய வேண்டிய ஊழ் ஒன்று இருந்தாலல்லாமல் செல்வமானது அத்துறவிகட்கு வாராதென்றும், அவ்விதம் ஊழ் வலியால் துறவியொருவன் செல்வத்தை யடைவானேயாயின், அது நில்லாது என்று உணர்ந்து, அச்செல்வத்தால் செய்யப்படும் கடவுட் பூசையும் தானங்களும் ஒரு பயனும் நோக்காமல் செய்ய வேண்டுமென்றும், அவ்விதம் செய்வதால் அச்செல்வத்தினாலாகிய பயன் நிலைத்து ஞானமயமாகி வீட்டினைத் தரும் என்றும் அறிகின்றோம். இவ்விதம் மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் செல்வம் நிலையாது என்றும் அது பெற்றால் நிலைத்த தருமங்களைத் துறவி யொருவன் செய்தல் வேண்டும் என்றும் பெற்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "செல்வம் நிலையாது என்பதை உணர்ந்தோம். இனி யாக்கை நிலையாது என்பதையும் உணர்த்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(பரி.) இ-ள். நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் = நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்,—உணர்வார்ப் பெறின் = அஃது உணர்வாரைப் பெறின். எ-று.

காலமென்னும் அருவப் பொருள் உலகியனடத்தற் பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாமையின், 'நாளென வொன்றுபோல்' என்றும், அது தன்னை வாளென்றுணர மாட்டாதார் நமக்குப் பொழுது போகா நின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலிற் 'காட்டி' என்றும், இடைவிடாதீர்தலான் 'வாளின் வாயது' என்றும், அஃதீர்கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப் பெறின்' என்றுங் கூறினார். உயிரென்னுஞ் சாதியொரு

மைப் பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது, ஈரப்படுவது அதுவேயாக லின். வாளென்பது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள் போலத் தோன்றி உயிரை யீர்வதொரு வாளாமென்றுரைப்பாரு முளர் : எனவென்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்று போற்காட்டி யென்பதற்கு ஒரு பொருட் சிறப்பின்மையானும், அதுவென்பது குற்றியலுகர மன்மையானும், அஃதுரையன்மையறிக. (௪)

விளக்கம் :—உடம்பானது நாள் என்று ஒரு காலத்தின் அளவினைக்காட்டி இடைவிடாது அறுத்துக் கொண்டிருக்கின்ற ஓர் வாளினுடைய வாயினிடத்தே உள்ளது என்றும், அவ்விதம் அந்நாளென்னும் வாளில் நின்று உடம்பானது அறுக்கப்படுகின்றது என்று அறிகின்ற அறிவினையுடையார்க்கே அது தெரியுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. என்னையோ வெனின்? காலம் என்னும் உருவமில்லாத பொருள் ஒன்று உலகத்தின் இயல்பு நடக்கும் வண்ணம் சூரியன் முதலிய அளவைகளால் பகுக்கப்பட்டதாக வழங்குவதல்லது, அக்காலம் என்னும் அருவப்பொருள் தானுகப் பகுக்கப்படாமையால் அவ்வுண்மை யறிந்த அறிஞர்கள் இக்காலமானது நாள் என ஒன்றுபோல் நமக்குக் காண்பித்து நம்முயிரைக் கொள்ளை கொள்கின்றது என்று அறிவாரென்றும், அவ்விதம் நம்முடைய உடல் என்னும் மரத்தை ஏனையவாள்கள் போலல்லாது இரவு பகலாக அறுக்கும் வாளாகவுள்ளது இக்காலமென்பது என்று அறியமாட்டாதார் தமக்குத் தினந்தோறும் உண்பன உண்டு உடுப்பன உடுத்து இன்புறுவனவற்றைத் தருகின்றது இக்காலம் என்று மயங்குவார் என்றும் கூறியதாயிற்று. ஆதலால், இடைவிடாது அறுக்கின்ற வாளாகக் காலம் என்பது உள்ளது என்றும், அவ்வாளின் வாயிலுள்ள உடலை இடமாகக் கொண்டு உள்ள உயிரானது நன்மையடைய வேண்டுமாயின் அவ்வுடம்பு அறுபட்டு ஒழிந்து போதற்கு முன்னமேயே நல்வினை செய்தல் வேண்டும் என்றும் பெற்றும் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "ஒருவன் நல்வினை செய்யவேண்டுமானுல் எக்காலத்தும் செய்தல்கூடும். இறக்குந் தறுவாயிலும் செய்தல்கூடும். என் விரைந்து செய்தல்வேண்டும்?" என்னலுமே, ஆசிரியர் கூறுவாராயினர்.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(பரி.) இ-ள். நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் = உரையாடா வண்ணம் நாவையடக்கி விக்குளெழுவதற்கு முன்னே—நல்வினை மேற் சென்று செய்யப்படும் = வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப் படும். எ-று.

மேனோக்கி வருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலேயன் றிச் சொல்லலுமாகாமையானும் 'வாராமுன்' என்றும், அதுதான் இன்ன பொழுது வருமென்பதின்மையின், 'மேற்சென்று' என்றுங் கூறினர். மேற்சேறல் = மண்டுதல். நல்வினைசெய்யுமாற்றின் மேல்வைத்து நிலை யாமை கூறியவாறு. (ரு)

விளக்கம் :—ஒருவன் தான் எண்ணிய எண்ணத்தைத் தெரி வியாவிதம் நா அடைபட்டு விக்குளானதுவிடாது வந்துகொண் டிருப்பதற்கு முன்னமே மோட்சத்தை யடைவதற்குக் காரண மாகிய அறத்தினை விரைந்து செய்தல்வேண்டும் என்று இத்திருக் குறள் கூறுவதால், தேகமானது எந்த நிமிடத்தும் இறந்து படு தல் கூடும் என்றும், அவ்விதம் இறக்கவரும் சமயத்தில் நாவானது பேசுவதற்கு இல்லாது போய்விடுமென்றும், அவ்வாறு பேசுவ தற்கு இல்லாது போய்விடுவதுடன் விடாது வருகின்ற விக்குள் என்னும் நோயானது வந்துவிடுமென்றும், அக்காலத்து அறத்தைச் செய்ய எண்ணியிருந்தவன் ஒன்றும் சொல்வதற்கில்லாமலும் செய்வதற்கில்லாமலும் போய் விடுவானென்றும், எக்காலத்தும் இறப்பு என்பது வந்துவிடும் என்றும், அது இன்னபொழுதுதான் வரும் என்பது அறிவதற்கு இல்லையாதலால், என்று தேகமானது நல்லறிவோடு கூடியுள்ளதோ அன்றே அறத்தினைச் செய்தல் வேண் டும் என்றும் முடிந்தபொருளாயிற்று. இதனையே நாலடியாரிலும்,

"மற்றறிவா நல்வினை யாமிளையமென்னாது
கைத்துண்டாம் போழ்தே காவா—தறஞ்செய்ம்மின்,
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு."

என்று கூறியுள்ளதனாலும் அறிதல் கூடும் என்னலும், மாணாக்கர்,

"அறவோய்! ஓர் உயிர் ஓர் உடலில் எத்துணை நாட்கள்தான் இருத்தல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(பரி.) இ-ள். ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும பெருமை உடைத்து=ஒருவன் நெருநலுளனாயினன் அவனே இன்றில்லையாயினனென்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து—இவ்வுலகு=இவ்வுலகம். எ-று.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையுமுணர்த்தி நின்றன. அவை பெண்பாற்குமுளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம். (சு)

விளக்கம்:—நேற்று ஒருவன் தோன்றினான் இன்று அவனே இறந்தான் என்னும் பெருமையை இவ்வுலகம் உடையதாய் உள்ளது என்று இத்திருக்குறள் கூறுவதால், நேற்று இன்று என்னுங் குறிகளால் ஒருநாட் பொழுதும் இவ்வுடலில் உயிர் நிற்பது இல்லை என்று காண்கின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதனால் ஒரு நாளேனும் உயிர் உடலில் தங்குவது நிச்சயம் இல்லை என்று உணர்ந்தோம். ஆயினும், இவ்வித தகுதியுடையதாகிய வாழ்க்கையை நம்பி உலகத்தவர்கள் ஏன் பல காரியங்களைச் செய்கின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(பரி.) இ-ள். ஒருபொழுதும் வாழ்வது அறியார்=ஒருபொழுதளவும் தம்முடம்பு முயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்;—கோடியும் அல்ல பல கருதுப=மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார். எ-று.

இழிவு சிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மேனின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று. பலவாய நினைவுகளாவன:—பொறிகளானு

கரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக் காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தா முயலுமாறும், அவற்றிற்கு வருமிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனான் நட்டாரை யாக்குமாறும், நள்ளாரை யழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரதியல் பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக்கருதுப வென்பதனை அஃறிணைப்பன்மைப்பெயராக்கி உரைப்பாரு முளர். (எ)

விளக்கம்:—இத்திருக்குறள் உலகத்து மக்கள், ஒருகணமேனும் உடம்போடு உயிர் சேர்ந்து நிற்கும் என்று அறிந்துகொள்ள யோக்கியமில்லாவிடினும், மயக்க அறிவால் பலகோடிகளாகிய எண்ணுள்பட்ட நினைவுகளை நினைந்து நினைந்து உயிர் இழக்கின்றுவர்களாகின்றனர் என்று கூறுகின்றது. அதாவது, ஒருவன் வினைக்குத்தக்க அளவாகவே உலகத்தில் வாழ்தல் கூடுமாதலால் வினையின் அளவு அறியாத மக்கள் மயக்க அறிவால் நெடும்பொழுது வாழ இருப்பார் போன்று பல நினைவுகளை நினைப்பவராகின்றனர் என்றும், அவ்வித நினைவுகள் பொறிகளால் நுகரப்படும் இன்பங்கள் எல்லாம் தமக்கு உரியனவென்றும், அந்நுகரற்குப் பொருள் துணைக்காரணமென்றும், அதனைத் தம்முயற்சிகளினால் வரும்படிச் செய்தல்வேண்டும் என்பனவும், ஆதலால் அவ்விதமே அப்பொருளின் பொருட்டு முயற்சி செய்யும் விதம் முயற்சி செய்வாரென்றும், அவ்வித முயற்சிகளில் பல இடையூறுகள் வருமாயின் அவ்விடையூறுகளை யெல்லாம் நீக்குவர் என்றும், நீக்கிய வழியே அப்பொருளைத் தேடுவரென்றும், தேடிய வப்பொருளை யயலவர் அபகரியா வண்ணம் காப்பாரென்றும், அதனால் நண்பினரை உயர்த்துவாரென்றும், கயவரை யழிப்பாரென்றும், பிறகு தாம் அவ்வின்பங்களை யனுபவிக்க எண்ணி அப்பொருள்மீதுப்பற்றுச் செலுத்துவாரென்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் ஒருகணமும் உடலிடத்தே உயிர் வாழாதுஎன்று கண்டோம். ஆயின், அவ்விதம் ஒன்று சேர்ந்து வாழாத உயிர்க்கும் உடம்பிற்கும் எவ்வித சம்பந்தம் உண்டு என்பதையும்அறிய விரும்புகின்றோம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

(பரி.) இ-ள். குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று — முன்றனி யாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போனதன்மைத்து — உடம்போடு உயிரிடை நட்பு — உடம்பிற்கும் உயிர்க்கு முளதாய நட்பு. எ-று.

தனித்தொழியவென்றதனுன், முன்றனியாமை பெற்றும். அஃதாவது கருவுந்தானும் ஒன்றாய்ப்பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல்; அதனால் அஃது உடம்பிற் குவமையாயிற்று; அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினர், பறந்து போதற்றொழிலான் உயிரோடொப்புமையெய்துவது அதுவேயாகலின். நட்பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப்போத லுணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாறுகலின், வினைவயத்தாற்கூடியதல்லது நட்பிலவென்பதறிக. இனிக்குடம்பை யென்பதற்குக் கூடென்றுரைப்பாருமுளர். அது புள்ளுடன் றோன்றுமையானும், அதன்கண் அது மீண்டும் புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக.

விளக்கம் :—இத்திருக்குறள் உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ளதாய நட்பானது, முட்டையினுள்ளிருந்த பறவையொன்று பருவம் வந்து உறுப்புகளெல்லாம் பெற்றபிறகு அம்முட்டையினின்றும் எவ்வாறு பறந்து விடுகின்றதோ அவ்விதமே யாதொரு சம்பந்தமுமில்லாமல் போய்விடுகின்றதாகவே உள்ளது என்று கூறியமையால், முட்டையும் அதனுள்ளிருக்கின்ற கருவும் ஒன்றாய்ப் பிறந்து இருந்தனவாயினும் உள்ளிருக்கின்ற கரு பதப்படும் வரையில் அக்கருவிற்கு ஆதாரமாய் நின்ற முட்டை என்னும் ஒட்டினுள் இருந்து பின்னர்ப் பறவையாய்ப் பறந்துபோய் விடுவதுபோல், உயிரும் உடம்பினுள் வினைக்குத் தக்கவளவாக இருக்கவேண்டிய காலம் இருந்து, அளவு வொழிந்தவுடன் பறவை முட்டையைத் திரும்பிப் பாராது பறந்து போவதுபோல் உடலைப்பாராது பறந்து போம் என்று கண்டோம். அன்றியும், முட்டையோடானது தனித்துக்கிடந்த காலத்தே ஒருவற்கும் பயனைத்தராது அழிந்து போ

வதுபோல் தேகமும் உயிர் நீங்கியவுடன் ஒருவற்கும் யாதொரு பயனும்தாராது ஒழிந்துபோகின்றது என்பதையும் உணர்ந்தோம். மேலும், இவ்வாசிரியர் உடம்பிற்கும் உயிர்க்கும்உள்ள நட்பு என்று குறிப்பாலுணர்த்தியது யாதொரு நட்பும் இல்லை என்பதைத் தெரிவிக்கவேண்டியேயாம் ஏனெனின்? உயிரோ அறிவுடையதாய், உருவில்லாததாய், எக்காலத்தும் இருப்பதாய் உள்ளது. உடம்போ அறிவற்றதாய், உருவுடையதாய், என்றேனும் அழிந்துபோவதாய் உள்ளது. ஆதலால், ஒன்றற்கொன்று ஒரு சிறிதும் ஒற்றுமையில்லாத உயிரும் உடம்பும் ஒன்றோடொன்றுகூடியிருப்பது வினையின் வசமேயன்றி வேறன்று என்று அதன் உண்மையை அறியாதார் மயங்குகின்றனர் என்றும் கூறியதாயிற்றென்றனர். அது கேட்ட மாணாக்கர், "பிறப்பும் இறப்பும் மாறிமாறி வரும் என்று அறிகின்றோம். அவ்விதம் வருவதை ஓர் உவமைவாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

339. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(பரி.) இ-ள். சாக்காடு உறங்குவது போலும்—ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடொக்கும்—பிறப்பு உறங்கி விழிப்பது போலும்—அதன்பின் பிறப்புவருதல் உறங்கி விழித்தல் வருதலோடொக்கும். எ-று.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்ற வாறறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது. (௯)

விளக்கம்:—ஒருவனுக்குச் சாதல் உண்டாவது தூக்கம் வருவது போலும், பிறப்பு வருவது தூக்கம் வந்த அவன் தூங்கி விழிப்பதுபோலும் உள்ளது என்று இத்திருக்குறள் கூறுவதால், பிறப்பும் இறப்பும் உயிர்களுக்கு விழிப்புவருவது போலேயும் உறக்கம் வருவதுபோலேயும் இயல்பாகவே அதி சீக்கிரமாக மாறி மாறி வரும் என்று அறிந்துகொள்ளுகின்றோம். ஆதலால், இவ்வதிகாரம் நிலையாமை கூறுகின்றது என்பதற்கு ஏற்க ஒருவன்

பிறந்து நெடுநாள் தேகத்தோடு வாழ்வதற்கு இல்லை என்றும், தேகத்தைவிட்டு நெடுநாள் பிரிந்து இருப்பதற்குமில்லை என்றும், பிறப்பும் இறப்பும் அதிவிரைவாக மாறி மாறிக் கடலலைபோல் ஓடி வருகின்றனவென்றும் கண்டோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "பெரியோய்! நிலையாக உயிரானது ஓர் உடலில் இருப்பது இல்லையோ? இல்லையாயின், அது ஏன் அவ்விதம் இருப்பது இல்லை என்பதையும் விளக்கல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

340. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(பரி.) இ-ள். உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு—வாதமுதலிய வற்றின் இல்லாயவுடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு—புக்கில் அமைந்தின்றுகொல்—என்ஞான்றுமிருப்பதோரில் இதுகாறும் அமைந்ததில்லை போலும்! எ-று.

அந்நோய்கள் இருக்கவமைந்த ஞான்று இருந்தும், வெகுண்டஞான்று போயும், ஒருடம்பினும் நிலைபெறாது வருதலால், 'துச்சிலிருந்த' என்றார். பின் புறப்படாது புக்கேவிடுமில் அமைந்ததாயின், பிறரிற்களுள் ஒதுக்கிராதென்பதாம்; ஆகவே, உயிரோடு கூடிநிற்பதோருடம்புமில்லையென்பது பெறப்பட்டது. இவையேழுபாட்டானும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஒரோவழிப் பிறந்த வளவிலே இறத்தலும், ஒரு கணமாயினும் நிற்குமென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய வன்மையுமென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டு கொள்க. (ம)

விளக்கம்:—உயிரானது வாதம் பித்தம் சிலேத்துமம் என்று மூன்றாலும் ஆக்கப்பட்ட வீடாகிய உடம்புகள் இடத்தே ஒதுக்கிடத்தில் இருந்து வாழ்ந்து போகின்றதாகக் காண்கின்றோமாகையால், இவ்வுயிர்க்கு எக்காலமும் இருப்பதற்கு அமைந்த ஓர் வீடு இது வரையும் உலகத்து அமையவில்லை போலும் என்று இத்திருக்குறள் குறிப்பாக வுணர்த்துவதால், உடம்பானது மேற்கூறிய வாத

பித்த சிலேத்துமமாகிய நோய்களுக்குச் சொந்தமாக இருக்கிறது என்றும், ஒதுக்கிடத்தே தருமத்துக்கு இருந்து எழுந்து போகின்ற யாசகரைப்போன்ற உயிரானது உடம்பாகிய வீட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய மூன்று நோய்களும் சம்மதித்து இருந்த காலத்தே வசித்தும் அவைகள் கோபித்த காலத்தே விட்டு நீங்குவது மாகக் காண்கின்றோம். ஏனெனின்? ஒன்றோடொன்று அந் நோய்கள் போராடுகின்ற காலத்தே உயிர் அவ்வுடலில் தரிக்க முடியாது போகின்றது. உடம்பினுள் உள்ள நோய்கள் மூன்றும் ஒன்றுக்கொன்று போராடுவதாவது, வாதம்பலங்கொண்டு நிற்கின்றவரையில் பித்தசிலேத்துமங்களாகிய ஏனைய இரண்டு நோய்களும் ஒன்றும் செய்வதற்கு இல்லையென்றும், வாதம் ஒடுங்கியவுடன் இரண்டாவதாகிய பித்தம் தன்னரசாட்சியைச் செய்வது போல் சிலகாலம் தேகத்தை நிலைபெறச்செய்யும் என்றும், அப் பித்தமும் ஒடுங்கியகாலத்து ஐப்பகுதி என்னும் சிலேத்துமம் தோன்றித் தோன்றியவுடன் தேகம் நிலைகெட்டு வுயிர் அங்குதங்குவதற்கு இல்லாமற்போம் என்றும் மருத்துவர் கூறுகின்ற முறையாகும். அதுகருதியே தேரையரும் "பித்தம் ஒடுங்கிடிற் பேசாமற் போம்" என்றனர். ஆதலால், உயிர்க்கு நிலையாகிய ஓர் உடலில்லை என்றும் கண்டோம். மேற்கூறிய ஏழுதிருக்குறள்களாலும் முறையே தேகங்களுக்கு அளவிட்ட நாள்கள் கழிகின்ற விதமும், அவ்வாறு கழிந்தால் அவைகட்கு உண்டாகும் நிலைமையினையும், அன்றியும் அவ் யாக்கைகள் தோன்றியவுடனே அழிந்துபோவதும், அவ்விதம் ஓர்கணமும் நில்லாது அவை அழிந்துபோம் என்பது தெளியா திருப்பதும், உயிர் நீங்கியவுடன் அவ் யாக்கைகள் கிடக்கின்ற தன்மையும், யாக்கைகட்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறித் தோன்றுவதும், யாக்கைகள் தாம் உயிர்க்குச் சொந்தம் அல்ல என்பதும் கண்டுகொண்டோம். ஆதலால், இவ்வதிகாரத்தால் செல்வமும் அதை யனுபவிக்கும் யாக்கையும் நில்லா என்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவை இரண்டும் நில்லா என்று கூறுவதை யுணர்ந்தோம். இனி அவற்றினின்று நீங்குவதற்கு ஏதேனும் உபாயம் உள்ளதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 35. அதிகாரம்.

### துறவு

(பரி.) அஃதாவது:—புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம்:—அதாவது, துறவு எனின் விடுதல் என்பதுபொருளாயினும் எதனை விடுதல் என்று நோக்கின் பற்றினை என்று அறிந்தோம். எதனிடத்தேயுள்ள பற்று? புறமாகிய செல்வத்தினிடத்தேயுள்ளதாகிய பற்றினையும் அகமாகிய யாக்கையில் உள்ள பற்றினையும் விடுதல். ஏனெனின்? அவை நில்லா என்று மேல் கண்டமையால். அதனாலேயே நிலையாமை யுணர்ந்த ஒருவனுக்கே துறவு அமையுமாதலால் துறவென்னும் இவ்வதிகாரத்தை நிலையாமை என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது. ஆதலால், மக்காள்! நீங்கள் வினவிய வண்ணம் நிலையாமை யுணர்ந்தபிறகு அந் நிலையாமைக்கு உரிய செல்வம் யாக்கை என்கின்ற இரண்டிடத்தேயும் ஆசைவிடுதல் என்னும் மனத்துறவை யடைவதே அதற்கு உபாயம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நெடும்பொழுது பழகியதாகிய யாக்கையினிடத்தே யுள்ளபற்றையும் செல்வத்தினிடத்தேயுள்ளபற்றையும் எவ்வாறு ஒரோவழி துறந்து விடுகின்றது? மிகுதியும் அச்சத்தைத் தருகின்றது. என்செய்வோம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

341. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(பரி.) இ-ள். யாதனின் யாதனின் நீங்கியான்=ஒருவன யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான்—அதனின் அதனின் நோதல் இலன்=அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதலிலன். எ-று.

அடுக்குக்கள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல்=துறத்தல். ஈண்டுத் 'துன்பு'மென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கட் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை: அஃதன்றி ஒரோவொன்றாகவிடினும் அவற்றான் வருந் துன்பமிலனாமென்பது கருத்து. (௧)

விளக்கம்:—எவனொருவன் எந்த எந்தப் பொருள்களில் ஆசையை யொழிக்கின்றானோ அந்த அந்தப் பொருள்களால் வரும் துன்பங்களை யவன் அடையாதவனாகின்றான் என்று இத்திருக்குறள் கூறுவதால், பொருளைத் தேடுகின்ற ஒருவன் தேடுவதற்குரிய துன்பமும், தேடிய பொருளைக்காத்தற்குரிய துன்பத்தினையும், காத்தும் ஊழ்வலியால் இழந்து விடுவானாயின் அதனால் வருகின்ற துன்பத்தினையும் இம்மையில் அடைவதோடு (தேடியபொருள் தீய வழியில் தேடியிருப்பானாயின்) அப்பாவத்தால் மறுமையில் வருகின்ற துன்பத்தினையும் அடைபவனாகின்றான் என்றும், எல்லாப் பொருளையும் ஒரேகாலத்தில் விட்டுவிடுவதே சிறந்த துறவானாலும் ஒவ்வொன்றாக விட்டாலும் அவைகளால் வருகின்ற துன்பங்கள் இல்லாமற் போதலால் ஒவ்வொன்றாகவேனும் விட்டு உயிர்க்கு உறுதி தேடவேண்டும் என்றும் கண்டோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஒவ்வொன்றாக விடுவதில் துன்பம் நீங்குமென்று கண்டோம். ஆயின், அவ்வாறு பற்றுவிடுதலை இப்போதே கொள்ளுதல் வேண்டுமோ? அன்றி முதுமையில் கொள்ளல் வேண்டுமோ? எப்போது கொள்ளல்வேண்டும் என்பதையும், துன்பம் நீங்குவதோடு துறப்பதால் ஏதேனும் இம்மையிலும் இன்பமுண்டாகுமோ என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

342. வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபி
 னீண்டியற் பால பல.

(பரி.) இ-ள். துறந்தபின் ஈண்டு இயற்பால பல=எல்லாப்பொருள்களையுந் துறத்தலால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல;—வேண்டின் உண்டாகத் துறக்க=அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக்காலம்பெறத் துறக்க. எ-று.

அவ்வின்பங்களாவன:—அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய்கள் அலேயாது நிற்றலானும், அவை நன்னெறிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கட்டுறந்தான் அவற்றை நெடுங்காலமெய்துமாகலின், 'உண்டாகத் துறக்க' என்றார். இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் துன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்களுளவாதலுமுண்டென்பதாம். (உ)

விளக்கம்:—ஒருவன் எல்லாப் பொருள்களிடத்திலும் ஆசை விடுவதால் அவனுக்கு இம்மையிலே உண்டாகும் இன்பங்கள் பலவுண்டு என்றும், அவ்வித இன்பங்களே அவன் அனுபவிக்க எண்ணுவானாயின் பொருள்களிடத்துள்ள ஆசையை இளமையிலேயே விட்டுவிடுதல் வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. எவ்வாறெனின்? அப்பொருள்களிடத்துள்ள ஆசையை விட்ட காலத்து அப்பொருள்களைத் தேடுவதற்காக மனம், வாக்கு, காயமாகிய மூன்றும் அலேயாது நிற்கின்றனவென்றும், அம்மூன்றும் துன்பப்படாது நிற்கின்றகாலத்து நன்னெறியாகிய இறைவன் திருவடியை அடையும் மார்க்கத்தில் அவை செல்லுகின்றன என்றும், அவ்வாறு செல்லுவதால் உயிர் இன்பத்தையடைந்து நிற்கின்றதென்றும், அவ்வித இன்பத்தை இம்மையிலேயே நெடுங்காலம் அனுபவிக்க விரும்பிய ஒருவன் இளமையிலேயே இருவிதப் பற்றினையும் விட்டுவிடுதல் வேண்டுமென்றும் அறிந்தோம் என்றனர். அன்றியும், இது கருதியே மணிவாசகப் பெருந்தகையும், தமது திருவாசகத்தில்,

> "காலமுண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
> ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
> ஆலமுண்டானெங்கள் பாண்டிப்பிரான் தன்னடியவர்க்கு
> மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே."

என்று திருவருள் செய்தனர். அன்றியும், இப்பொருள் விஷயமாக ஆசைப்பட்டு அறிவுடைய பலர் பொருளுடையவரிடத்திற் சென்று அவரைப் புகழ்ந்துபாடி இம்மை மறுமை வீடாகிய மூன்றினையும் இழக்கின்றனர். அதுசெய்யாது எல்லாம் தாவல்ல

இறைவன் திருவடியைப் பாடுவாராயின் யாவும் அடையலாம் என்னும் குறிப்புத் தோன்ற நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்வினும் தொண்டர்
[தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்
[புலவீர்காள்
இம்மையே தரும்சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே."

என்று உலகோரை நோக்கிப் பரிதபித்துக் கூறினர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "ஐய! இவ்விதம் பொருள்களைத் தேடுவதால்உண்டாகிய துன்பங்களினின்றும் நீங்கி நன்னெறியாகியஇறைவன் திருவடியடையும் மார்க்கத்திற் சென்றால் இன்பங்கள் பலவுண்டு என்று மொழிந்தீர். துறவியொருவனுக்கு அவன் திருவடியாகிய இன்பம் எவ்விதம் இருக்கும் என்று அறிய மிகுதியும் ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர், "அவ்வின்பத்தை நாம் என்னென்று கூறுவது? அந்நெறியிற் சென்றாரே அவ்வின்பத்தின் தகுதியை யறிதல் கூடும். ஆயினும், துறவிகள் அடையுமின்பம் இவ்விதம் என்று நம் தாயுமானார், கூறியுள்ள ஓர் செய்யுளை உங்களுக்கு உணர்த்துவேன். அதாவது,

"இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித்திட வலிய வந்து
இன்பங் கொடுத்தநினை யெந்நேர நின்னன்பர்
இடையறு தருகி நாடி
உன்னிய கருத்தவிழ உரைகுளறி யுடலெங்கும்
ஓய்ந்தயர்ந் தவசமாகி
உணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே
உணர்வார் களுள்ள படிகாண்
கன்னிகையொருத்தி சிற்றின்பம் வேம்பென்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதி நகையாவளது போல்

சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்ப மாம்
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.''

என்று கூறுவதால் அப்பேரின்பநிலையை யறிந்தாரே அவ்வின்பத்தின் தகுதியை இன்னதென்று அறியக் கூடியதாகவுள்ளது என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் பற்று விடுதற்குத் துறவறம் பூண்டார் என் செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

343. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(பரி.) இ-ள். ஐந்தன் புலத்தை அடல் வேண்டும்=வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையுங் கெடுத்தல் வேண்டும்—வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும்=கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருண் முழுதையும் ஒருங்கே விடுதல்வேண்டும். எ-று.

புலமென்றது அவற்றை நுகர்தலை. அது மனத்தைத் துன்பத்தாலும் பாவத்தாலுமன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டுநெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனை 'அடல்வேண்டும்' என்றும், அஃது அப்பொருள்கண்மேற் செல்லின் அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், 'வேண்டியவெல்லாமொருங்கு விடல்வேண்டும்' என்றுங் கூறினர். (௩)

விளக்கம்:—பிறப்புத் துன்பம் நீங்கி வீட்டினையடைய ஆசைப்படுகின்றவர்கள் ஐம்பொறிகளுக்கும் உரியனவாய சுவையொளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களையும் கெடுத்தல் வேண்டும் என்றும், அவ்விதம் கெடுக்குமிடத்து அப்பொறிகளால் நுகரப்படும் இன்பத்திற்கு உரியனவாகிய தாம் தேடிய பொருள்கள் முழுவதையும் உடனே ஒழித்துவிடுதல் வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? புலன்கள் இன்பத்தினிடத்தே செல்லுமாயின் அவ்வின்பங்களை யுண்டுபண்ணும்

பொருள்கள்மீது செல்லுமேயல்லாமல் வீட்டினைக் கொடுக்கும் வழியாகவுள்ள யோக ஞானங்களுள் செல்லாதாகையால் புலன்களை யடக்கல்வேண்டும் என்று கூறியதாயிற்று. ஆகையால், உண்மை யாகவே ஒருவன் வீட்டினையடைய வேண்டுமாயின் அதற்கு உபா யம் ஐம்புலன்களை யடக்குவதேயாம் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தவஞ்செய்பவனாகிய ஒருவன் எல்லாவற்றை யும் ஒருங்கே விடுதல் வேண்டும் என்று கூறுவதால் ஒவ்வொன் றாகவிட்டு வருவதால் என்ன தீங்கு உண்டாகும் என்பதையும் அறி வித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(பரி.) இ-ள். ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும்—பற்றப் படுவதொரு பொருளுமில்லாமை தவஞ்செய்வார்க்கு இயல்பாம்;—உடை மை பெயர்த்து மற்றும் மயலாகும்—அஃதன்றி, ஒன்றாயினுமுடைமை அத்தவத்தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற்கேதுவாம். எ-று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நோன்பென்பதூஉம் மய லென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலானென்பது திரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்தலானென வேற்றுமைப்படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளை விடாதவழியும், அது சார்பாக விட் டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கிடையீடாய் மனக்கலக்கஞ் செய்யு மென்பது கருத்து. (இவை நான்குபாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.) (௪)

விளக்கம் :—உண்மையாகவே தவத்தை விரும்புவார்க்கு இயற்கையாகிய தன்மை யாதொரு பொருளினிடத்தேயும் பற்றில் லாது இருத்தல் என்றும், அவ்வாறு இல்லாது ஒரு பொருளினிடத் தாயினும் பற்றுடைமை அத்தவத்தைப் போக்குவதற்கு ஏதுவாகு மென்றும் இத்திருக்குறள் கூறுவதால், எல்லாப் பொருள்களிடத் தேயும் ஆசை விட்டும் ஏதேனும் ஒரு பொருளிடத்தே ஆசை வைப்பானாயின் அவ்வாசையின் நிமித்தமாக விட்ட பொருள்க ளில் உள்ள எல்லாப் பற்றுக்களும் மீண்டும் வந்து சேரும் என் றும், ஆதலால் முழுவதும் பற்றுவிடுவதே துறவு என்றும் கூறப்

பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணக்கர், "பொருள்கள் மீதெல்லாம் ஆசைவிடுவது இயற்கையேயாகும். தேகத்தில் ஆசை விடுவது என்னின், அது மிக அருமையாகவே உள்ளது. தேகத்தில் உள்ள ஆசை எவ்விதம் ஒருவன் அத்துணைச் சுலபமாகவிட்டு விடுவான்? என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை.

(பரி.) இ-ள். பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை=பிறப் பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகை யாம்;—மற்றும் தொடர்ப்பாடு எவன்=ஆனபின், அதற்கு மேலே இயை பில்லனவும் சில தொடர்ப்பாடுளவாதல் என்னாம்! எ-று.

உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள் ளப்படும்.* அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகை யிந்திரியவுணர்வோ டும், ஐவகை வாயுக்களோடும், காமவினை விளைவுகளோடும் கூடிய மனம்; இது நுண்ணுடம்பெனவும்படும். இதன்கட் பற்று நிலையாமை யுணர்ந்த துணையான் விடாமையின், விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம் புகளால் துன்பம் இடையறாது வருதலையுணர்ந்து இவற்றானாய கட்டினை இறைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், 'உடம்பு மிகை' என்றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்து தலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும். (இதனான் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.) (ரு)

விளக்கம்:—பிறப்பினை யொழித்தலே தகுதி என மேற் கொண்ட துறவி யொருவனுக்கு அவ்விதம் ஒழித்தற்குக் கருவியா கிய உடம்பும் எதற்கென்று வெறுக்கின்ற காலத்தில், அதற்குரியன வாகிய பொருள்கள்மீது எதற்குப் பற்று வைத்தல்வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுவதால், துறவியொருவன் இருவித பற்றும் அறுத்தல் வேண்டும் என்று அறிகின்றோம். அதாவது, அருவு டம்பாகிய மனமும் உருவுடம்பாகிய தேகமும் ஆகிய இரண்டினி டத்தும் நிலையாமை யுணர்ந்தும் அவற்றினிடத்தே பற்றைச் செலுத்தி அவைகளால் வரும் துன்பங்களால் இடையூறு அடை

* உருவுடம்பு=தூல சரீரம்; அருவுடம்பு=சூக்கும சரீரம்.

யாது வீட்டினிடத்தே விரைந்துசெல்ல ஆசைப்படுபவர்க்கு இவ்வு டம்புகள் பயனற்றனவாம். ஆகையால், அகப்பற்று என்னும் தேகத்தையும் விரும்புவது ஒழிந்தாலன்றி துறவு என்று கூறுதற்கு ஆகாது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் இருவிதப் பற்றினையும் ஒழித்த துறவியொருவனுக்கு எது கிடைக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(பரி.) இ-ள். யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்—தானல்லாதவுடம்பை யானென்றும் தன்னோடியைபில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச் செய்தற்கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான்—வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்—வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தையெய்தும். எ-று.

மயக்கம்=அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற்பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின்கட் பற்றை விடுதல். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. (இதனான் இவ்விருவகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடுளதென்பது கூறப்பட்டது.) (சு)

விளக்கம்:—தன்னோடு சிறிதும் சம்பந்தமில்லாத உடம்பினைத் தானென்றும் தன்னோடு சிறிதும்சம்பந்தமில்லாத பொருளைத் தன்னுடையது என்றும் எண்ணி இவ்விரண்டிடத்தேயும் ஆசைப் படுவதற்கு உரியதாகிய மயக்க அறிவினை ஒழிப்பானொருவன் வானோர் என்னும் தேவர்களாலும் அடையக்கூடாததாகிய வீட்டு உலகமென்னும் மோட்சவுலகத்தை யடைவானென்று இத்திருக் குறள் கூறுகின்றது. ஆதலால்,தேகத்திலேயும்தேகம் அனுபவிக்கும் பொருள்களிலேயும் ஆசை விட்டவர் அடையும் பயன் வீடு என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விரண்டுபற் றினையும் விடாதவர்கள் துறவின் பயனை யடைவதற்கு இல்லைபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

347. பற்றி விடா அ விடும்பைகள் பற்றினைப்
'பற்றி விடா அ தவர்க்கு.

(பரி.) இ-ள். பற்றினைப் பற்றி விடாதவர்க்கு=இருவகைப்பற்றினை யும் இறுகப்பற்றி விடாதாரை—இடும்பைகள் பற்றி விடா=பிறவித்துன் பங்கள் இறுகப்பற்றி விடா. எ-று.

இறுகப்பற்றுதல்=காதல்கூர்தல்.* விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதவர்க்கு வீடில்லையென்பது கூறப்பட் டது. (எ)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணம் புறம் அகமாகிய இரண்டு பற்றுக்களையும் விடாத துறவிகளென்று கூறுகின்றவர்களைப் பிற வித்துன்பங்களானவை விடாதுபற்றிக்கொண்டு நிற்கும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பொருள்களில் ஆசைமிகுந்தார்க்குப் பிறவித்துன்பங்கள் நேருமேயன்றி வீட்டினை யடைவதற்கு வழி யில்லை என்று கண்டோமென்றனர். இதுகேட்டமாணுக்கர், "முதற் றிருக்குறளில் கூறியபடி ஒவ்வொரு பொருளினிடத்தே பற்று விட்டவர்க்கு ஒவ்வொரு துன்பம் நீங்கும் என்று ஒவ்வொன்றை விட்டு ஒழிதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். †

(பரி.) இ-ள். தீரத் துறந்தார் தலைப்பட்டார்=முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்;—மற்றையவர் மயங்கி வலைப்பட்டார்=அங்ங னந் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார். எ-று

முற்றத்துறத்தலாவது:—பொருள்களையும் இருவகையுடம்பினையும் உவர்த்துப் பற்றறவிடுதல். அங்ஙனந் துறவாமையாவது:-அவற்றுள் யாதனு மொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் 'தலைப்பட் டார்' என்றும், பொய்ந்நெறிகண்டே பிறப்புவலையுளகப்படுதலின், 'மயங்கி' என்றுங் கூறினர். (அ)

* கூர்தல்=மிகுதல்.

† இவ்வருமைத் திருக்குறளைக் கொற்றவன்குடி உமாபதி சிவம் தமது நெஞ்சுவிடு தூதில் எடுத்தாண்டுள்ளதை யறிக. இவ்விளக்கத்தின் நான்கா வது பக்கத்தைப் பார்க்க.

விளக்கம்:—இத்திருக்குறளால் ஒவ்வொன்றாகவிடாது முழுவதும் பற்றற்றவர்கள் வீட்டினை யடைந்தவர்களென்றும், அவ்விதம் முழுவதையும் துறவாது ஏதேனும் ஒன்றின்மீது சிறிது ஆசை செலுத்தினும் அது மறுபடியும் மயக்கமாகிய வலையினிடத்தே கொண்டு சேர்த்துப் பிறப்பு என்னும் தொடர்ச்சியினுள் புகுத்துமென்றும் கண்டோம். ஆதலால், முற்றத்துறந்தவரே துறவிகளாவார் என்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விரண்டு பற்றினையும் விட்டவர்க்கு வீட்டுலகம் என்பது கிடைப்பது எவ்வளவு காலத்தில் என்று அறியவும் ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

(பரி.) இ-ள். பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும்=ஒருவன் இருவகைப்பற்றுமற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பை யறுக்கும்;—மற்று நிலையாமை காணப்படும்=அவையறாதபொழுது அவற்றாற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும். எ-று.

காரணமற்றபொழுதே காரியமும் அற்றதாமுறைமைபற்றி, 'பற்றற்ற கண்ணே' என்றார்; "அற்றது பற்றெனி—லுற்றது வீடு" என்பதூஉம் அதுபற்றி வந்தது. (இவையிரண்டுபாட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.) (கூ)

விளக்கம்:—நீங்கள் வினவிய வினாவிற்கு இத்திருக்குறள் முற்றும் விடைதந்ததாகவே உள்ளது. என்னையோவெனின்? ஒருவன் இரண்டு விதங்களாகிய அகம் புறம் என்னும் பற்றுக்களை விட்டபோதே அவனுக்குப் பிறப்பு நீங்குமென்றும், அவ்விதம் விடாதபோழ்து பிறந்தும் இறந்தும் வருகின்ற நிலையாமை என்கின்ற துன்பமே மிகுதியும் காணப்படும் என்றும் கூறுவதால், பற்று விடுதலே மோட்சமென்று கண்டோம். இதனைத் திருவாய்மொழியினுள்ளும்,

"அற்றது பற்றெனி—லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி—லற்றிறைபற்றே."

என்பதனாலும் அறியலாம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர்,

"எவ்வளவு நிறுத்தினும் ஓயாது அலைகின்ற மனத்தினை யடக்கு வதற்கு இல்லாமையால், அதற்கு ஏதேனும் உபாயம் உள்ளதோ?" என்று வினவலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(பரி.) இ-ள். பற்றுஅற்றான் பற்றினைப் பற்றுக=எல்லாப் பொருளை யும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன் னெறி யென்று மனத்துக்கொள்க;—அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு=கொண்டு, அதன்கணுபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது வந்த பற்றுவிடுதற்கு. எ-று.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ஈண்டும் பொதுவகையாற் 'பற்றற்றான்' என்றார். பற்றற்றான் பற்றென்புழி ஆறாவது செய்யுட்கிழமைக்கண் வந் தது. ஆண்டுப் பற்றென்றது பற்றப்படுவதனை. அதன்கணுபாயமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்றென்பது அநாதியாய்வரும் உடம் பிற்பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனாற் கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—எல்லாப் பொருள்களிலும் இருந்து கொண்டு தனக்கென்று யாதொரு பற்றுமில்லாது எங்கும் நிறைந்துள்ள இறைவனாகிய கடவுள் உயிர்களுய்யத் திருவருள் செய்த வீட்டு நெறியினைத் துறவியொருவன் இதுவே நமக்கு நல்ல நெறி என்று மனத்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும், கொண்டவண்ணமே அந்நெறியினிடத்தே அருள் செய்துள்ள உபாயங்களை விடாமல் மனத்தால் நினைத்தல் வேண்டும் என்றும், இவ்விதம் செய்வதால் அநாதியாகவே உடம்பினிடத்தே வரும் பற்றானது விட்டுப்போ கும் என்றும், அப்பற்று விடுதற்கு இதனினும் உபாயம் வேறு இல்லை என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், வேண்டு தல் வேண்டாமை யில்லானாகிய கடவுள் திருவருள் செய்த நெறி யாகிய வீட்டு நெறியானது பொறி வாயிலைந் தவித்தலும் பொய்தீர் ஒழுக்கமும் என்று கண்டோம். இவ்விதம் கூறுவதால் இறைவன் திரு வடியாகிய வீட்டினையடைவதற்கு அவன் திருவருள் செய்த நூல் களேவழியாகும். அந்நூல்களோ சரியை, கிரியை, யோகம், ஞானங் களைப் பயிற்றுவனவாகவுள்ளன. இந்நான்கனுள் முதலிற் கூறிய

சரியையே ஏனைய மூன்றையும் அடைவதற்குக் காரணமாகும். ஏனெனின்? தாயுமானார் முதலிய பெரியார் பலர் சரியை யாதிகளே போதும் என்று அருள் செய்துள்ளார்கள். அச்சரியையாவது, நம் சமய குரவராகிய திருநாவுக்கரையர் அருள் செய்தவண்ணமே

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலு-மெம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கராசய-போற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

என்றபடி சரீரத்தால் செய்வன இவையென்று அறிவிக்கப்பட்டுள்ளன. இனி, கிரியையாவது தேவ பூசை முதலிய செய்தல். மற்றும் யோகமாவது பொறிகளின் வழியே செல்லாது மனத்தையடக்குதல். இதனைத் தாயுமானார்,

"காயிலை யுதிர்ந்தகனி சருகு புனல்மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையில் கருங்கல்போலசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடைவைகியும் தோயமதில் மூழ்கியும்
தேகங்களென் பெலும்பாய்த்
தெரியநின்றும் சென்னிமயிர்கள் குருவிகூடா
தெற்ற வெயிலூடிருந்தும்
வாயுவையடக்கியும் மனத்தினையடக்கியும்
மௌனத்திலேயிருந்தும்
மதிமண்டலத்திலே கனல்செல்ல வமுதுண்டு
வனமூடிருந்தும் அறிஞர்
ஆயுமறைமுடிவான அருள்நாடினர் அடிமை

அண்ட பகிரண்டமுமடங்க ஒருநிறைவாகி
ஆனந்தமானபரமே"

என்று கூறுவதால், உணர்வினையடக்கி மனத்தை ஒரு வழிப்படுத்தி இறைவன் திருவடியில் பற்று செய்தலே யோகமென்று கண்டோம். இவ்வித யோக நிலையால் மெய்யுணர்தலே ஞானமாகும். ஆதலால், இனி 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தால் இவ்வுண்மையை நாம் அறிவோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "எந்தாய்! துறவின் தன்மை ஈதெனமுற்று முணர்ந்தோம். இனி, மெய்யுணர்தல் என்பதையும் அறிவித்தல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

## 36. அதிகாரம்.

## மெய்யுணர்தல்.

---

(பரி.) அஃதாவது:—பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களானன்றி உண்மையானுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றித் துறவின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, பிறப்பு வீடு என்னும் இரண்டினையும், அவை அடைதற்குரிய காரணங்களையும் சந்தேக விபரீதங்கள் இல்லாமல் உண்மையால் உணர்தல். இவ்வித உண்மையால் உணர்தலே வடநூல் வல்லவர் தத்துவஞானம் என்று கூறுகின்றனர். இவ்வித மெய்யுணர்வானது யாதொரு பற்றுமற்ற இறைவன் திருவடியைப் பற்றிய காலத்து உண்டாவதாகலின், அவ்வுபாயத்தை யுணர்த்த வந்த துறவு என்னும் அதிகாரத்துக்குப்பின் இம்மெய்யுணர்தல் என்னும் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

351 பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

(பரி.) இ-ள். பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம்—மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்றுணரும் விப

ரீத வுணர்வானே உளதாம்—மாணாப் பிறப்பு=இன்பமில்லாத பிறப்பு. எ-று.

அவ்விபரீத வுணர்வாவது:—மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளுமில்லையெனவும், மற்றுமித்தன்மையவுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குகளை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப்பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின், 'மாணாப்பிறப்பு' என்றார். இதனாற் பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென்பதூஉங் கூறப்பட்டன. (க)

விளக்கம்:—உண்மைப் பொருள் அல்லாத பொருள் ஒன்றினை உண்மைப் பொருள் என்று அறிகின்ற மயக்கவறிவினால் எக்காலத்தும் இன்பமில்லாது துன்பத்தையே உண்டுபண்ணும் பிறப்பானது உண்டாகின்றதென்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? பொய்ப்பொருளை மெய்ப்பொருள் என்று உணர்வது விபரீதத்தால் உண்டாவதாதலால், அவ்விபரீத உணர்வு பிறப்பினைத் தருவதாகின்றது. அது எவ்விதமெனின்? சில மயக்க நூல்கள் இருவினைப்பயன் இல்லை என்றும், மறுபிறப்பு இல்லை என்றும், கடவுள் இல்லை என்றும் கூறுகின்றனவாதலால், அவ்வித மயக்க நூல்களை மெய் கூறும் நூல்களெனத் துணிந்து அவற்றிற் கூறிய வழியே ஒழுகுதலே விபரீதமாகின்றது. அன்றியும், மரக்கட்டையொன்றை இருளில்கண்ட ஒருவன் மகன் என்று மயங்குவது போலவும், முத்துச்சிப்பி ஒன்றை வெள்ளியென்று மயங்குவது போலவும், ஒரு பொருளை மற்றொரு பொருளாகத் துணிகின்ற காட்சியும் மயக்க அறிவென்று அறிகின்றோம். இவ்விதம் நல்லறிவு போதிக்கும் நூல்களைத் தெளிவதற்கு உரிய புண்ணியப் பேற்றினையடையாதவர்கள் துறவு பூண்டும் பிறப்பிற்கே ஆளாவார்கள் என்பது அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் மருளற்று நிற்கின்ற துறவிகட்கு என்ன பயன் உண்டாம்?" என்று கேட்டனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

352. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(பரி.) இ-ள். மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு=அவிச்சையினீங்கி மெய்யுணர்வுடையாரயினார்க்கு—இருள் நீங்கி இன்பம் பயக்கும்=அமமெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும். எ-று.

இருள்=நரகம்; அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேனின்றது. நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவென்பதன்றிரிபெனினுமமையும். மருணீங்கியென்னும் வினையெச்சம் காட்சியவரென்னுங் குறிப்பு வினைப்பெயர்கொண்டது. மாசறுகாட்சியென்றது கேவலவுணர்வினை.* இதனால் வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம்† கேவலப் பொருளென்பதூஉம் கூறப்பட்டன.

விளக்கம்:—பிறப்பிற்குக்காரணமாகிய மயக்கமானது நீங்கப் பெற்று ஒருவன் மெய்யுணர்வினை யுடையானாய் நிற்பானாயின், அவன் புண்ணிய மிகுதியால் அடைந்த உண்மை யுணர்வானது எக்காலத்தும் துன்பத்திற்கே காரணமாகிய பிறப்பினை நீக்கி இன்பத்திற்கே காரணமாகிய வீட்டினைக் கொடுக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், துறவியொருவன் தனக்குமேல் யாதோரின்பமுமில்லை என்னும் பொருள்படும் நிரதிசய இன்பமாகிய வீட்டினையடைய வேண்டுமாயின், அதற்கு நிமித்த காரணமாகிய கேவலப்பொருள் என்னும் சிவஞானத்தைக் கைக்கொள்ளுதல்வேண்டும் என்று அறிகின்றோம். ஆதலால், உண்மை யுணர்ந்தார்க்குப் பயன் வீடு என்பது அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித ஐயவிபரீதமற்று நின்ற துறவிகட்கு வீட்டுலகம் கிடைப்பது ஒரு தலையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

353. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(பரி.) இ-ள். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு=ஐயத்தினினறு நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு—வையத்தின் வானம் நணியது உடைத்து=

---

கேவலவுணர்வு=கைவல்யத்தின் தன்மையையறிதல் (மோக்ஷவுணர்வு)
நிமித்தகாரணம்=முதற்றுணை

எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக் கடவதாய வீட்டுலகம் நணித்தாத லுடைத்து. எ-று.

ஐயமாவது பலதலையாயவுணர்வு. அஃதாவது:—மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றிற்றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ கயிறோ அரவோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதங் களைந்து தம்மதநிறுத்தல் எல்லாச்சமயநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள் களுள் யாது மெய்யென நிகழுமையத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம் மனுபவத்தானீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என்றும், அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டையுலகியலுணர்வு தூர்ந்துவருமாகலின், அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின் வான நணியதுடைத்து' என்றுங் கூறினார்; கூறவே, ஐய வுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது. (௩)

விளக்கம்:—மேற்கூறியவண்ணம் பலவிதமாகிய உணர்ச்சி என்னும் சந்தேகமானது இல்லாது மெய்யினை யுணர்ந்தவர்க்கு வீட்டுலகமானது அவர்வாழ்கின்ற நிலவுலகத்தைக் காட்டிலும் சமீபமாக உள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? பலவித உணர்வினை உண்டு பண்ணும் ஐயத்தினைக் கொண்டானொருவன் 'மறுபிறப்பு என்று ஒன்று உள்ளதோ? உயிர்கட்கு இருவினைப்பயன் என்பதும் உள்ளதோ? இவ்வுயிர்கட்கெல்லாம் முதலாகி நிற்கின்ற கடவுளும் ஒன்றுண்டோ?' என்று ஆராய்ந்து ஒன்றினுந் துணிவு பிறவாது நின்றானால், அவனுக்கு அவ்வைய உணர்வானது பிறப்பினையே தரும் என்பதாயிற்று. ஆயின், அவ்வித ஐயத்தினை எல்லாச் சமய நூல்களையும் உணர்ந்து அந்நூல்களில் கூறுகின்ற பொருள்களுள் எது மெய் என்று நிகழும் சந்தேகத்தினைத் தம்முடைய யோக முதிர்ச்சியாலும் அதன் காரணமாக உண்டான அனுபவஞானத்தாலும் உண்மையினை யுணர்வாராயின், அவ்வித துறவிகள் ஐயத்தின் நீங்கித் தெளிந்தவர்களென்றும், அத்துறவிகளாவார்க்கு மெய்யுணர்வின் அனுபவமே மிகப்பழகிவருவதால் இவ்வனுபவ ஞானம் வருவதற்குமுன் உலகில் உள்ள பற்றுக்களெல்லாம் ஒழிந்து வீட்டிலேயே ஆசை பெருகும். ஆகையால், அவர்களுக்கு இப்போது

இருக்கும் நிலவுலகத்தைக் காட்டிலும் வீட்டுலகம் சமீபம் என்று கூறியதாயிற்று. ஆதலால், துறவியொருவன் மெய்யுணர்வை யண்ட வானாகில் வீட்டையடைவது திண்ண மெனபதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "முன்னர் துறவியொருவனுக்கு மனம் தன் வயப்படுமாயின் அதுவே பெரியது என்றும், அதனால் யாவும் அடையலாமென்றும் கூறியிருக்க, இப்போது மெய்யுணர்வு என்பதுவும் ஒன்று வேண்டும் என்று கூறுவதை நோக்க ஐயமுண்டாகின்றது. விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(பரி.) இ-ள். ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே=செல்லப் படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகியவுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்தாய வழியும், அதனாற் பயனில்லையேயாம்—மெய்யுணர்வு இல் லாதவர்க்கு=மெய்யினையுணர்தலில்லாதார்க்கு. எ-று.

ஐந்தாகிய வுணர்வு=மனம்; அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கணிற்றல். அங்ஙனநின்றவழியும் வீடு பயவாமையின், 'பயமின்று' என்றார். சிறப்பும்மை எய்துதற்கருமை விளக்கி நின்றது. இவையிரண்டு பாட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடுளதென மெய் யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது. (௪)

விளக்கம் :—புலன்களது வேறுபாட்டிற்குத் தக்கவளவாக அவற்றில் செல்லுகின்ற உணர்வும் ஐந்தாக உள்ளது என்றும், அவ் விதம் செல்லுகின்ற ஐந்தாகிய உணர்வு என்னும் மனம் அப்புலன் களில் செல்லாமல் துறவி யொருவனுக்குத் தன் வசமடைந்ததானு லும் மெய்யினை உணராவிடின் அத்துறவி அதனால் பயன் அடை தற்கு இல்லை என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது மனமானது தன் வயப்பட்டு ஒரு நிலையாய் எங்கும் ஓடாது தார ணைக்கண் நிற்குமாயினும், உண்மையறியாத காலத்து மனம் நின்ற நிலையினால் வீட்டின்பம் உண்டாகாதென்றும் காண்கின்றோம். இத னால் துறவி யொருவன் மனத்தை நிற்கச்செய்வதோடு மெய்யுணர் வினையும் உடையவனாய் இருத்தல் வேண்டும் என்றும், அவ்வித

மெய்யுணர்வினையுடைய துறவிக்கு வீட்டின்பம் உண்டாகுமென்றும் உணர்ந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித பெரியதோர் தகுதியை யடைந்த துறவிகள் ஏன் உண்மைகாணாது மயங்குவர்?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

355. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(பரி.) இ-ள். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்=யாதொரு பொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும்—அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு=அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது. எ-று.

பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினை யுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோரியற் பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனையாகலின், அவ்வாறுணராது நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்களின் றொகுதியெனவுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களுளொடுக்கிக் கொண்டுசென்றாற் காரணகாரியங்களிரண்டுமின்றி முடிவாய் நிற்பதனையுணர்தலாம். எப்பொருளென்றது பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுணரப்படும். இதனான் மெய்யுணர்வினதிலக்கணங் கூறப்பட்டது. (௫)

**விளக்கம்** :—துறவியொருவன் தான் காண்கின்ற பொருள் ஒன்று எவ்வித இயல்பாய்க் காணப்பட்டதாயினும், அக்காட்சியளவையினாலேயே உண்மை என்று கண்டு நின்றுவிடாமல் அப்பொருள் தோறும் உள்ள உண்மையை நுணுகிச் சென்று அறிவதே மெய்யுணர்வு என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உலகத்தவர் ஒவ்வொரு பொருளினையும் கற்பனையால் சொல்லுகின்ற கற்பனைகளை யெல்லாம் நோக்கிக் கழித்து நின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வாம், அது எதுபோலெனின்? ஓர் பொருளை

விசேடித்துக் கூறுங்காலத்து அப்பொருளின் தன்மையைப் பூல வாறு கூறுவது வழக்காதலால், அப்பொருளினது விசேடங்களை யெல்லாம் ஒழித்து பொருள் ஒன்றினை மாத்திரம் உணர்வதே உணர்வாகும். எவ்வாறெனின்? ஓர் பெண்ணை ஒரு கவிஞன் கூறு கின்ற காலத்தே அப்பெண்ணுக்கு உரிய இலக்கணங்களை யெல்லாம் மிகுத்துக் கூறினும், கடைசியாக அவ்வலங்காரங்களைப் பெண் ணென்று மதியாது அப்பெண்ணிற்கு உரிய உருவத்தால் ஓர் பெண்ணென்றே கருதுதல்போலும். உதாரணமாக

"............... ..வெண்ணகைச் செவ்வாய்க் கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே"
(திருச்சதகம் —செய்யுள் 19)

என்ற மணிவாசகத்தும், 'வெள்ளிய பற்களையும், சிவந்தவாயினையும், கரிய நீலோற்பலம் போன்ற கண்களையும் உடையவர்க்கு மனம் வருந்துகின்ற பாழ்மனமே,' என்று கூறியுள்ளபெண்ணிற்குள்ள இலக்கணங்களால் பெண்ணென்று நிர்மானிப்பதுபோல், தத்துவ ஞானியாகிய ஒருவன், நிலம் முதல் உயிர் கடைசியாக உள்ள பொ ருள்களெல்லாம் தத்துவங்களின் கூட்டமாகவுள்ளன என்றும், அவை காரண காரியமாக ஒன்றினுள் ஒன்று தோன்றிய முறை யாய் ஒடுங்குகின்றன என்றும் தத்துவ ஞானத்தால் உணர்ந்து மெய்யாகிய முடிந்த பொருள் ஒன்றினைக் காண்பதே மெய்யுணர் வாகும் என்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "இப்போது நாங் கள் மெய்யுணர்வு என்பதின் இலக்கணத்தை யறிந்தோம். மெய் யுணர்தலென்பது மெய்ப்பொருளைக் காண்பது என்றும் கண் டோம். அதனை எவ்விதம் காண்பதென்றும், அது கண்டார்க்கு எது கிடைக்குமென்றும் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(பரி.) இ-ள். ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார்—இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற்

தேட்டு அதனான் மெய்ப்பொருளை யுணர்ந்தவர்—மற்று ஈண்டு வாரா நெறி நினைப்படுவர்=மீண்டு இப்பிறப்பின்கண்வாராத நெறியையெய்து வர். எ-று.

கற்றென்றதனால் பலர் பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டென்றதனால் வீடுபேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெருதற்கருமையும் பெறும். ஈண்டு வாராநெறி=வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம்மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனையென்பன.* அவற்றுட் கேள்வி இதனாற் கூறப்பட்டது.

விளக்கம்:—எவன் ஒருவன் பல நூல் வல்ல ஆசிரியனிடத்துப் பலகாலும் சென்று அவன் கற்பிக்கும் நூல்களில் பழகி தத்துவ ஞானத்தால் பொருள்களைத் தோன்றிய வழியே ஒடுக்கி உண்மைப் பொருள் காண்கின்றானோ, அவனே மறுபடியும் இப்பிறப்பினையடைதல் இல்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? வீட்டிற்கு நிமித்த காரணமாகவுள்ள இறைவனை உணர்தற்கு மூன்று உபாயங்கள் உள்ளன. அவ்வுபாயங்கள் கேள்வி, விமரிசம், பாவனை என்பனவாகும். அவ்விதம் கூறிய மூன்றனுள் இத்திருக்குறள் முதலாவதாகியகேள்வி என்பதன் இலக்கணத்தைக் கூறியதாயிற்று என்றனர். அது கேட்ட மாணக்கர், "அனுபவமுடைய ஆசாரியரிடத்தே உபதேச மொழிகளைக் கேட்டு உணர்ந்தவர்தாம் மெய்ப் பொருளைக் கண்டு பிறப்பினிடத்தே மறுபடியும் வாராதவர்கள் என்றமையால், அம்மெய்ப் பொருளை யுணர்தல் மிகுதியும் அருமை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 357. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
## பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(பரி.) இ-ள். உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின்=அங்ஙனங் கேட்ட உபதேசமொழிப்பொருளை ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்து மாற்றானுந் தெளியவாராய்ந்து, அதனான் முதற்பொருளை புணருமாயின்,—பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா=அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா. எ-று.

* கேள்வி=சிரவணம்; விமரிசம்=சிந்தித்தல்; பாவனை=தெளிதல்.

ஒருதலையாவோர்த்தென இலையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே யுரைத்தாம்*. இதனால் விமரிசங் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—நீங்கள் மேல் வினவியபடிமெய்ப்பொருளை யுணர்தல் அருமை என்றும், ஆயின் துறவியொருவன் அம்மெய்ப் பொருளை அறிவதற்கு, ஆசிரியரிடத்திற்கேட்ட உபதேச மொழியின் பொருளை மனத்தால் அளவைகளைக்கொண்டும் பொருந்தும் விதமும் ஆராய்ந்து எக்காலத்தும் அழிதலில்லாத அம்முதற் பொருளை யுணர்தல் வேண்டுமென்றும், அவ்வித அருமையாகிய தெளிவினால் உணர்ந்த அவனுக்கு மறுபடியும் பிறப்பு என்பது இல்லை என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. என்னையோவெனின்? மாணக்கன் ஒருவன் கேட்ட உபதேசத்தை அதுவே பொருளென்று விட்டு விடாது கேட்ட அளவே அம்முதற் பொருளை மனத்தால் பல முறைச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும் என்பதாயிற்று. அத் தெளிவின் முதிர்ச்சியால் உண்மையுணர்தல் கூடும் என்றனர். அது கேட்ட மாணக்கர், "கேட்டலோடு சிந்தித்தல் இது என்று உணர்ந்தோம். இனி, மூன்றாவதாகிய பாவனை என்பதையும் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

358 பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்
செம்பொருள் காண்ப தறிவு. [னுஞ்

(பரி.) இ-ள். பிறப்பு என்னும் பேதைமை நீங்க=பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட—சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு=வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது. எ-று.

'பிறப்பென்னும் பேதைமை' எனவும், 'சிறப்பென்னுஞ் செம் பொருள்' எனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனையநான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினார். எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாகலால், வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மையாற்றன்னையொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள்

242-ம் குறளுரையிற் காண்க.

விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல்பற்றி, அதனைச் ‘ செம்பொருள் ’ என்றார். மேல் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங் கூறியதூஉம் இதுபற்றியெனவுணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதியெனவுஞ் சுக்கிலத்தியானமெனவுங் கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுமாதலான், அதனை முன்னே பயிறலாய இதனின்மிக்க வுபாயமில்லையென்பதறிக. இதனாற்பாவனை கூறப்பட்டது. (அ)

விளக்கம் :—பிறப்பிற்குக் காரணமாகிய அவிச்சை என்னும் மயக்கமானது கெட்டு செம்பொருளாகிய நிமித்த காரணனைக் காண்பதே ஒருவனுக்கு மெய்யுணர்வாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அன்றியும், இத்திருக்குறளில் பிறப்பென்பதைப் பேதைமை என்று கூறியுள்ளது. அது என்னையோவெனின்? பிறப்பு உண்டாதற்குக் காரணம் ஒன்றை ஒன்றாக வுணரும் மயக்க வுணர்வு ஆதலால், பிறப்பென்பது பேதைமையாக உபசரிக்கப்பட்டுள்ளது. அன்றியும், எல்லாப் பொருள்களிலும் சிறந்து நிற்றல் பற்றி வீட்டினைச் சிறப்பென்றனர். இது கருதியே, “ சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு, ஆக்கமெவனோ வுயிர்க்கு ”.* என்னும் திருக்குறளிலும் வீட்டினைச் சிறப்பென்று கூறியதைக் காணுதல் கூடும். அன்றியும், நிமித்த காரணனாகிய முதற்பொருள் தோன்றுதலும் கெடுதலுமில்லாது நித்தமாயிருத்தலாலும், தூய்மையுடைமையால் தன்னை ஒன்றும் கலவாது நிற்கின்ற தூய்மையாதலாலும், எல்லாப் பொருள்களோடும் தான் கலந்து நின்றும் யாதொரு விகாரமுமின்றி ஒரு தன்மையாய் இருத்தலாலும், அத்தகுதியுடைய முதற்பொருளைச் செம்பொருள் என்று கூறினர். அதனால், கடவுளை மெய்ப்பொருளெனவும், உள்ளது எனவும், செம்பொருளெனவும் அழைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவ்வித மெய்ப்பொருளைக் காண்கின்ற விதம் யாதெனின் ? உயிரானது மயக்கம்

நீங்கி அம்முதற் பொருளோடு ஒற்றுமையடைந்து இடைவிடாது அப்பொருளையே மனத்தில் பாவித்தலாகும். ஏன் இவ்விதம் பாவித்தல் வேண்டும் என்னின்? ஒருயிர் உடம்பைவிட்டு நீங்குங்காலத்தில் ,அவ்வுயிரால் எது ஒன்று உண்மை என்று பாவிக்கப்பட்டதோ, அவ்விதமே அவ்வுயிரானது மறுபடியும் தோன்றும் என்பது எல்லா நூல் வல்லவர்களுக்கும் துணிவாகையால், வீட்டினையடைய எண்ணிய துறவியொருவன் தன் உயிர் நீங்குங்காலத்து பிறப்பினையுண்டாக்கும் காரணங்களாகிய பாவனைகளை யெல்லாம் ஒழித்து விட்டு கேவலப் பொருளாகிய இறைவனையே எக்காலத்தும் இடைவிடாது பாவித்தல் வேண்டும். அவ்விதம் பாவிப்பதால், அவ்விறுதிக் காலத்தும் அப்பாவனையே தோன்றி வீட்டினை அடைவதற்குத் தகுதியாகும். ஆதலால், அவ்வித பாவித்தலாகிய பயிற்சியைக் கொள்வதைக்காட்டிலும் சிறந்த உபாயம் வேறு ஒன்று இல்லை என்று இத்திருக்குறளால் பாவனை யிலக்கணங் கூறியதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அவ்விதம் பாவித்தலால் துறவியொருவனுக்கு எவ்விதம் பிறப்பினையுண்டுபண்ணும் வினைகள் சாரா?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

359. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.*

(பரி.) இ-ள். சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின்=ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம்பொருளையுணர்ந்து இருவகைப்பற்று

*இவ்வருமைத் திருக்குறளைத் திருக்கடவூர்—உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப் படியாரிலே "சார்புணர்ந்து சார்புகெட வொழுகினென்றமையாற் — சார்புணர்வுதானே தியானமுமாம் - சார்பு—கெட வொழுகினல்ல சமாதியுமாங்கேதப்-படவருவதில்லை வினைப்பற்று," என வெடுத்தருளிச்செய்துள்ளனர். இவ்வுய்யவந்ததேவநாயனார் பெரும் பற்றப் புலியூரில் எழுந்தருளியிருந்தபொழுது தம்மையடைந்த ஓர் அதிபக்குவர் பொருட்டு இந்நூலைச்செய்து, இதன் பெருமையை உலகத்துள்ளார் உணர்ந்துய்யுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற்சென்று வணங்கி, திருக்களிற்றுப் படியிலே இந்நூலைவைக்குமளவில் அத்திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இதனைவாங்கிப் பரமகருணாநிதியாகிய நடராசரது திருவடியிலே கொடுத்தமையால், அத்திருப்படை வீட்டினுள்ள எழுநூறுதிருமடத்து முதலிகளும், தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், மகேசுரர் நாற்பத்தெண்ணாயிரவரும், திருக்கோயிற் றிருத்தொண்டுசெய்யும் திருப்பேர் ஏழாயிரத்துத் தொளாயிரவரும், பிறரும் சந்நிதியிலே கூடிநின்று வியப்புற்று, இந்நூற்குத் திருக்களிற்றுப் படியாரெனத் திருநாமஞ் சாத்தினர்களென்றறிக. இது சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கனுள் ஒன்று.

மற ஒழுகவல்லனாயின்,—சார்தரும் நோய் அழித்து மற்றுச்சார்தரா— அவனை முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக் கங்களை யழித்துப் பின்சாரமாட்டா. எ-று.

ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் 'சார்பு' என்றார். ஈண்டு ஒழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலை. அஃது இயமம், நிய மம், இருப்பு, உயிர் நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி யென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பிற்பெரு கும்; யோகநூல்களுட்காண்க. மற்றுச் சார்தராவெனவியையும். சாரக் கடவனவாய் நின்ற துன்பங்களாவன:—பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி யீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவு மொழியப் பின்னு மனுபவிக்கக் கடவனவாய்க்கிடந்தன. அவை விளக்கின் முன்னிருள்போல் ஞானயோகங்களின் முன்னோர்க் கெடுதலான், 'அழித்துச் சார்தரா' என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப்பிற்குக் காரணமாகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. மேன் மூன்று பாயத்தானும் பரம்பொருளையுணரப் பிறப்பறுமென்றார். அஃதறும் வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யுமென்னுங் கடாவையாசங் கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடைய வுயிரைச் சாரமாட்டா மையானும் வேறு சார்பின்மையானுங் கெட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது. (௯)

விளக்கம் :—மேல்வினவிய வண்ணம் எல்லாப் பொருள்களுக் கும் சாருமிடமாகவுள்ள சார்பாகிய அச்செம்பொருளை யொரு வன் உணர்ந்து யான் எனது என்னும் இருவகைப்பற்றும் நீங்க ஒழுகவல்லவனாயின், அவ்விதம் ஒழுகுகின்ற அவனைமுன் சாரக் கடவனவாய் இருந்த துன்பங்கள் அவன் உணர்ந்தசெம்பொருள் உணர்வினையும் பற்றற்ற ஒழுக்கத்தினையும் அழித்துப் பின் சார மாட்டா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இவ்விதம் இருவ கைப்பற்றும் நீங்க ஒழுகுதலென்பது யோக நெறியின்கண் நிற்றல் என்பதாம். அந்நெறியாவது இயமம், நியமம், ஆதனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எண்வி தப்படும். இவற்றுள் இயமமாவது கொலை களவு செய்யாமை, மெய் கூறல், கள்ளுண்ணாமை, பிறர் பொருளிச்சியாமை, இந்திரிய மடக்

நல் முதலிய. நியமமாவது தத்துவ நூலாராய்தல், தவம், தூய்மை, தெய்வ வழிபாடு, மனமுவப்பு முதலிய. ஆதனம்:—இது, அவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் முதலிய. பிராணயாமம்:—பிராணவாயுவை இரேசக பூரக கும்பிதஞ் செய்தல். பிரத்தியாகாரம்:—உபாதியை நீக்கி உண்ணோக்கல். தாரணை:—ஆதாரத்தானங்களாகிய மூலாதாரம், சிவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னு மாறுதாரங்களில் ஆதார தேவதைகளைக் குருமுகமாக வறிந்து மனதையும் வாயுவையும் அங்கங்கே நிறுத்தி அவ்விடத்துள்ள ஆதார தேவதைகளைத் தரிசித்து ஆநந்தமுறுவது. தியானம்:—ஐம்புல மடக்கி யோகஞ்செய்தல். சமாதி:—கரணங்களிறந்து மனோலயமான சாக்கிராதீதத்தில் தன்னிலைகண்டின்புறுதல். இதன் விரிவை விரிந்த நூல்களாகிய சிவயோகசாரம், சிவயோக மஞ்சரி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு, மெய்ம்மொழி, சகலாகமசிகாமணி, சிவதருமோத்திரம் முதலியவற்றில் காண்க. இனி,முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் என்றமையால், பிறப்பு ஓர் உயிர்க்கு அறுதியாய் வருதலால் அவ்வுயிரால் அளவில்லாமல் சேர்க்கப்பட்ட இருவினைகளின் பயன்களுள் தோன்றி மறைந்த பலதிறப்பட்ட உடம்புகளால் அநுபவித்த வினைகள் ஒழியப் பின் அநுபவிக்கக் கிடந்த வினைகளின் துன்பங்களேயாகும். இவ்வித துன்பங்கள் ஞானயோகங்களைக் கைக்கொண்ட ஓர் உயிரின் முன் ஒளிமுன் இருள்போல் ஒழிந்து போவனவாதலால், அத்துன்பங்களானவை மறுபடியும் அவ்வுயிரைச்சாரா என்று கூறியதாகும். ஆதலால், பரம்பொருளை உணர்ந்து விடாது சிந்தித்தலால் பிறப்பு அறுமென்றும், ஞானயோகங்களே அப்பிறப்பறுதற்கு வழி என்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், “ஞானயோக முதிர்ச்சியுடையார்க்குத் துன்பங்கள் வாரா என்றமையால், துன்பங்களைச் செய்வதற்கு முதலாவதாக உள்ளன எவையென அறிய விரும்புகின்றோம்” என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

360 காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(பரி.) இ-ள். காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட= ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சை

யென்னுமிக்குற்றங்கண் மூன்றனுடைய பெயருங் கூடக்கெடுதலான்,— நோய் கெடும்=அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா.' எ-று.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட் செல்லு மாசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமுமென வடநூலார் 'குற்றமைந்து' என்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும், அவாவுதல் ஆசைக்கண்ணுமடங்குதலான், 'மூன்று' என்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கண் மூன்றுங் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்துய்போலுமாகலின், அம்மிகுதி தோன்ற 'இவை மூன்றனுமங்கெட'வென்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவதுன்பங்களுமில்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல்வரக்கடவ துன்பங்களுமிலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இவையிரண்டுபாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமேயென்பது பெற்றாம். (ம)

விளக்கம்:—இத்திருக்குறள் நீங்கள் வினவிய வினாவிற்கு விடைதந்ததாகும். அது என்னையோவெனின்? ஞானயோகங்களின் நெறியில் நின்று அதில் முதிர்ச்சியடைந்தவர்களுக்கு விருப்பு, வெறுப்பு, மயக்கம் என்னும் மூன்றுகுற்றங்களும் அடியோடுகெடுதலால், அம்மூன்றனது காரியமாகிய நல்வினை தீவினைப் பயன்கள் உளவாகா. ஆதலால், அப்பயன்களாகிய துன்பங்களும் உண்டாக மாட்டா என்றும், இவ்விதம் இடையறாத ஞானயோகங்களின் முன்பு காம வெகுளி மயக்கமென்னும் மூன்றும் தானாகவே யுண்டாகும் காட்டுத் தீயாகிய பெருந்தீயின் முன் பஞ்சினது துனி போல் தீய்ந்துபோவதால் இம்மூன்றனுடைய பெயரும் துறவியின் முன் நில்லாமல் ஓடிப்போம் என்றும் அறிந்தோம். அன்றியும், காரணமாகிய இம்மூன்று குற்றங்களையும் அறவே வொழித்தார் அவற்றின் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், இவர்களுக்கு வரவேண்டியனவாகிய துன்பங்களும் இல்லை என்று அறிந்தோம். ஆதலால், மெய்யுணர்வின் பயன், முன்செய்த தீவினைகளின் துன்

பங்களும் இனி வரவேண்டிய வினைகளின் துன்பங்களும் இல்லாமற் போவது என்றும், அவ்வித மெய்யுணர்ந்தார்க்கு இருப்பன அவர்கள் அப்பிறவியிலெடுத்த உடம்பும் அவ்வுடம்பிற்கு வரும் வினைப் பயன்களுமேயென்றுங் கூறினர். அது கேட்ட மாணுக்கர், "யோக ஞான முடையார்க்கு காம வெகுளி மயக்கமாகிய இம்மூன்றின் பெயரும் கூட இல்லாமல் ஒழிந்துபோம் என்று அறிந்தோமாதலால், இனி, துறவியொருவன் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 37. அதிகாரம்.

## அவாவறுத்தல்.

(பரி.) அஃதாவது:—முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவுசெல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வான றுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம் :—அதாவது, ஆசையையறுத்தல். முன் இருந்த துன்பங்களையும்இனிச்சாரவேண்டிய துன்பங்களையும் அறுத்த துறவியொருவனுக்கு அப்போது நின்ற உடம்பும் அவ்வுடம்பிற்கேற்ற வினைப்பயன்களும் உள்ளனவாகையால், மேற்கூறிய வண்ணம் நிலையாமையுணர்ந்து துறவுபூண்டு மெய்யுணர்ந்து நின்றானாயினும் பழைய வழக்கத்தின் தகுதியால் தான் வென்ற புலன்களின்மீது நினைவுசெல்லுமென்றும், அவ்வித நினைவானது மயக்க அறிவினை யுண்டுபடுத்திப் பிறவியை யுண்டுபண்ணும் என்றும், அதனை இடைவிடாதமெய்ப்பொருள் உணர்தலால் அறுத்தல் வேண்டும் என்றும் அறிந்தோம். ஏனெனின்? பெருங்காயமிருந்த குடுக்கையொன்று உள்ளிருந்த பெருங்காயத்தினை யெடுத்து நன்றாகக் கழுவிய பின்பும் அக்காயத்தின் வாசனையைச் சிறிது காட்டுவதுபோல், புலன்களின் வழியாகச் சென்ற நினைவும் பிறவிகள் தோறும் விடாது சென்று

இருந்ததாதலால் மீண்டும் அப்புலன்கண்மேற் செல்லும். அதனை அறுப்பதாயின் மெய்ப்பொருள் உணர்வு ஒன்றே விடாதுவேண்டும் என்றும், அதுவே அவாவறுத்தற்கு வழியாகுமென்றும், அதனாலேயே மெய்யுணர்வு என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இவ்வதிகாரத்தை வைத்தனர் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இத்துணை வருந்தித் துறவுபூண்டு மெய்யுணர்ந்தாராகிய துறவிக்கும் சிறிது அவாவுண்டாமாயின் பிறப்பு வந்துவிடும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

361. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(பரி.) இ-ள். எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து=எல்லாவுயிர்கட்கும் எக்காலத்துங் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து—அவா என்ப=அவாவென்று சொல்லுவர் நூலோர். எ-று.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்தவினையும், அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனைப் 'பிறப்பீனும் வித்து' என்றும், கதிவயத்தானுளதாய அவ்வுயிர் வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி*யென்னுங் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின், 'எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்' என்றும், இஃது எல்லாச் சமயங்கட்கு மொத்தலான் 'என்ப' என்றுங் கூறினார். இதனாற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—உலகத்து உள்ள உயிர்களெல்லாம் விடாது அடைந்து வருகின்ற பிறப்புகளுக்கெல்லாம் காரணமாயுள்ளது ஆசையென்று நூல்வல்லவர் கூறுகின்றனர் என்று இத்திருக்குறளால் அறிந்தோம். அது என்னையோவெனின்? ஒருவனுக்கு உயிர்

---

* உற்சர்ப்பிணியாவது:—உலகம் வாழ்நாள் போக முதலியவற்றான் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது:—அஃது அவற்றான் தேய்பிறைபோலச் சுருங்குங் காலம்.

உடம்பைவிட்டு நீங்கிப்போகவேண்டிய காலத்தில் அவ்வுயிரினிடத்தே இனிவரப்போகின்ற வினையும், அவ்வினையினால் உண்டாகும் விலங்கு, மக்கள், தேவர், நரகர்என்னும் நான்குகதிகளில் இனிஉண்டாகும் கதி நிமித்தங்களும், அக்கதியினிடத்தே ஆசையும் வந்து முறையே தோன்றவும், தோன்றிய அக்காலத்து நின்ற அறிவினை ஆசையானது மறைக்கவும், அறிவு மறைந்த காலத்து அவ்வாசையானது அவ்வுயிரை வந்து உதித்த கதியினிடத்துக் கொண்டு செலுத்துதலுமாகுமென்றும், ஆகவே அது பிறப்பினையுண்டாக்கும் விதைபோலுள்ளது என்றும் கூறினர். ஆதலால், புலன்களின் வழியே மனத்தைச் செலுத்துவதால் உண்டாகும் ஆசையானது உண்டாகா வண்ணம் நீக்குதலே பிறப்பினை யறுத்தலாகும் என்று கூறினர். அது கேட்ட மாணுக்கர், "பிறவாமை என்பதை யொருவன் விரும்புவானாயின் அவன் செய்யவேண்டுவது எது?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(பரி.) இ-ள். வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்=பிறப்புத்துன்பமாதலறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டும்;—அது வேண்டாமை வேண்ட வரும்=அப்பிறவாமைதான் ஒரு பொருளையும் அவாவாமையைவேண்ட அவனுக்குத் தானேயுண்டாம். எ-று.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களாற்றுன்பமுற்று வருகின்றமையை யுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலிற் 'பிறவாமையை வேண்டும்' என்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒரு பொருளை அவாவின் அது பிறப்பினும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் 'அது வேண்டாமை வேண்டவரும்' என்றுங்

---

இவ்வருமைத் திருக்குறள் திருக்களிற்றுப் படியாரிலே,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டுமஃதே யஃதொன்றும்—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டு மவன்பால்."

என வெடுத்தருளிச் செய்யப்பட்டது.

கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது. (உ)

விளக்கம்:—பிறப்பானது துன்பம் என்று அறிந்த துறவியொருவன் ஒன்றை விரும்பினால் அவ்விருப்பமானது பிறவாமை யென்னும் விருப்பமாகவே யிருத்தல் வேண்டுமென்றும், அப் பிறவாமை என்னும் இன்பமானது அத்துறவியாவான் ஒரு பொருளையும் விரும்பாதிருப்பதினாலேயே உண்டாகுமென்றும் இத்திருக்குறளால் அறிந்தோம். அது என்னையோவெனின்? துறவியொருவன் அனாதியாகவே உயிரானது பிறப்பு, நோய், மூப்பு, இறப்புஎன்னும் நான்கினால்துன்பத்தையடைந்துவருகின்றமையையுணர்கின்றனாகையால், அவ்வித துறவியொருவன் ஏதேனும் ஒன்றை விரும்பினால் அவன் விரும்புவது பிறவாதிருக்கும் இன்பமே என்றும், அவ்விதம் கருதிய அவன் அப்பேரின்பத்தினைவிட்டு நில்லாத இன்பமாயிருக்கின்ற சிற்றின்பத்தை விரும்பி ஒரு பொருளின்மீது ஆசையைச்செலுத்துவானாயின் அவ்வாசையானது பிறப்பினைக் கொடுக்கும் வித்தாகி இன்பம் விரும்பிய அவனுக்குப் பின்னும் முடிவில்லாத துன்பத்தையே விளைக்கும் என்றும் அறிகின்றோம். ஆகையால், உண்மையாகவே இன்பம் என்னும் வீட்டினை விரும்பி, துன்பம் என்னும் பிறப்பினை யொழிக்கக் கருதுகின்ற துறவியொருவன் அவாவறுத்தல் வேண்டுமென்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " இந்நில உலகத்து ஒருவன் அடையும் செல்வமும், தேவ உலகத்து அடையும் செல்வமும் ஆகிய இரண்டினைக் காட்டினும் இவ்வவாவறுத்தலால் உண்டாகின்ற இன்பம் பெரியதோர் தகுதியுடையதோ ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(பரி.) இ-ள். வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை = ஒருபொருளையும் அவாவாமையையொக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கணில்லை,—ஆண்டும் அஃது ஒப்பது இல் = இனி அவ்வளவேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை யொப்பதில்லை. எ-று.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேலொன்றுக்குக் கீழாதலுடைமையின், தனக்குமேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு இரண்டுலகினு மொப்பதில்லையென்றுங் கூறினர். ஆகமவளவைபோலாது காட்சியளவை எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள் செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமா மெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (ரு)

விளக்கம் :—மக்காள் ! நீங்கள் வினவியவினாவிற்கு இத்திருக்குறள் விடைகூறுகின்றது. அதுஎன்னையோவெனின்? துறவியொருவனுக்கு ஒரு பொருளையும் விரும்பாதிருத்தல் என்னும் பெரிய செல்வத்தைப்போல் வேறொரு செல்வம் இவ்வுலகத்தும் இல்லை. இவ்வுலகம் மாத்திரமல்லாமல் நூல்களால் சொல்லப்படும் துறக்க உலகத்தும் இல்லை. ஆகவே, இவ்வுலகத்து மக்கள் அடையும் செல்வமும், தேவவுலகத்துத்தேவர்கள்அடைந்துள்ள அமுதம்முதலாகிய செல்வங்களும் ஒன்றின்பின் ஒன்றாகவைத்துஆய்ந்துநோக்கின்ஒன்றற்கு ஒன்று கீழாதலும் மேலாதலும் ஆகிய இரண்டு தகுதிகளையும் பெற்றுப் பின்னர் இன்பமேதாராது துன்பத்திற்கு வித்தாகிய பிறப்பினையே தருவதால், பிறப்பினையும் அதன் துன்பத்தையும் தாராத ஆசையறுத்தலாகிய பெரியதோர் செல்வத்திற்கு அச்செல்வங்களெல்லாம் ஈடாகாவென்றும், எல்லாவற்றையும் ஒழித்தலே துறவியொருவனுக்குப் பெரிய செல்வமென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் எல்லாங்கடந்த துறவியொருவனுக்குப் பழக்கமிகுதியால் அவாவுண்டாகும் என்று கூறுவதால், அவ்வவா இல்லாமையை உண்டுசெய்வதற்குத் துறவியொருவன் என்செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

364. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(பரி.) இ-ள். தூய்மை என்பது அவாவின்மை=ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை;—அது வாய்மை வேண்ட வரும்=அவ்வவாவில்லாமை தான் மெய்ம்மையை வேண்டத் தானேயுண்டாம். எ-று.

வீடாவது உயிர் அவிச்சைமுதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூய்மையென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் 'தூய்மையென்பதவாவின்மை' என்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மை யென்றுங் கூறினர். மற்று, மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல்=இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்குப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்பதூஉம் அது வரும் வழியும் இதனாற் கூறப்பட்டன. (௪)

விளக்கம் :—இத்திருக்குறள் வீடு என்று சொல்லப்படுவது ஆசையில்லாது இருத்தலே என்றும், அவ்வாசையில்லாமையை யொருவன் விரும்பினால் எக்காலத்தும் அழிதலில்லாத மெய்ம்மையாகிய பரம் பொருளை விரும்புதல்வேண்டுமென்றும் போதிக்கின்றது. அஃதென்னையோவெனின்? ஒருவன் அவாவினைநீக்கல்வேண்டுமாயின் இறைவனை இடைவிடாது பாவித்தல் வேண்டும். அதனால் அவிச்சை முதலிய மாசு நீங்கப் பெற்றுத் தூய்மையுடையவனாவன். அக்காலத்து நில்லாப்பொருள்களின் மீது ஆசைசெல்லாது நிலையுதலையுடைய பரத்தின் மீது ஆசை செல்லும். ஆதலால், அவா அறுத்தற்கு உபாயமாவது அவன் திருவடியில் பற்றுச் செலுத்துதலேயாம் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "அவா அற்றவர்தாம் பிறவி யற்றவரோ?" என்று வினவுதலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

365. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

(பரி.) இ-ள். அற்றவர் என்பார் அவா அற்றார்=பிறவியற்றவரென்று சொல்லப்படுவோர் அதற்கு நேரே யேதுவாகிய அவாவற்றவர்கள் ;—மற்றையார் அற்றாக அற்றதிலர்=பிறவேதுக்களற்று அஃதொன்றுமறாதவர்கள், அவற்றாற் சில துன்பங்களற்றதல்லது, அவர்போற் பிறவியற்றிலர். எ-று.

இதனால் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறப்பட்டது (௫)

விளக்கம் :—பிறவியை நீக்கினவர் என்று சொல்லப்படுபவர் அப்பிறவியறுத்தற்கு நேரே காரணமாகிய அவா அற்றலே உடையார் என்றும், அவ்வித அவாவொன்றனை நீக்காது ஏனைய காரணங்

களையெல்லாம் ஒழித்தவர்கள் அவ்வொழிந்ததினால் நீங்கும் சில துன்பங்கள் ஒழிந்தவரே யல்லாமல் அவா அற்றவர்கள் போன்று பிறவியற்றவர்கள் அல்லவென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், எல்லாத்துன்பங்களும் ஒழியக்கூடிய காரணங்களையெல்லாம் விட்டு இருந்தாலும் பிறவிக்கு ஏதுவாகிய ஆசை ஒன்று அறு விடில் பிறவியறாது என்பது அறிந்தனம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நிலையாமை முதல்மெய்யுணர்தல் ஈறாகியஎல்லாவற்றை யும் உணர்ந்து அவற்றின்படி நடக்கவல்ல துறவியொருவனையும் அவா என்பது மயக்கவல்லதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

366. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(பரி.) இ-ள். ஒருவனை வஞ்சிப்பது அவா=மெய்யுணர்தலீறாகிய காரணங்களெல்லாமெய்தி அவற்றான் வீடெய்தற்பாலனாய ஒருவனை மறவி வழியாற் புகுந்து பின்னும் பிறப்பின் கண்ணே வீழ்த்துக்கெடுக்க வல்லது அவா;—அஞ்சுவதே அறன்=ஆகலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது. எ-று.

ஓருமென்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஓரோவழி வாய்மை வேண்டலை யொழிந்து பராக்காற் காவானாயின், அவ்விடமாக அவனறியாமற் புகுந்து, பழைய வியற்கையாய் நின்று பிறப்பினையுண்டாக்குதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். காத்தலாவது:—வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக்காப்பதே அறமென்பதூஉங் கூறப்பட்டன. (சு)

விளக்கம்:—நீங்கள் வினவியவண்ணம் நிலையாமையுணர்ந்து துறவுபூண்டு மெய்யுணர்ந்தவனாகிய ஒருவன், வீட்டினை யடையா வண்ணம் மறப்பின் வழியாகப் புகுந்து பின்னும் பிறப்பினிடத்துச் செலுத்திக் கெடுக்கவல்லது ஆசையே என்றும், ஆதலால் அவ்விதவஞ்சகத்தைச் செய்து கெடுக்கவல்ல அவாவிற்கு மிகுதியும் பயந்து அதனைவாராமல் காத்துக் கொள்வதே துறவறமாகும் என்றும் இத்திருக்குறள் கூறியதாயிற்று. அது என்னையோவெனின்? அநாதியாக ஒருவனிடத்தே புகுந்திருக்கும் ஆசையினை முன் கூறிய

வாய்மையாகிய பரம்பொருளைப் பாவித்தலால் ஒழிக்காது பராக்கில் நிலைப்பானாயின், அவ்வவாவானது அப்பராக்கையே தனக்கு இடமாகக்கொண்டு அவன் அறியாமலே அவனிடத்துப் புகுந்து பண்டுபோல இயற்கையாகவே பிறப்பினை உண்டாக்கும். ஆகையால், அவ்விதம் வஞ்சிக்கின்ற அவாவினையொருவன் காத்துக்கொள்ளவேண்டுமாயின், இடைவிடாது இறைவனையே சிந்தித்தல் வேண்டும் என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவாவினால் வருகின்ற குற்றமும் அதனைக் காக்கின்ற முறையும் இவையென அறிந்தோம். இனி, அவாவினை யொருவன் அறுப்பதாயின் அதன் பயனாக அவனுக்கு மேலாகிய நன்மையுண்டாகுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

367. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

(பரி.) இ-ள். அவாவினை ஆற்ற அறுப்பின்=ஒருவன் அவாவினையஞ்சித் துவரக்கெடுக்க வல்லனாயின்,—தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும்=அவனுக்குக் கெடாமைக் கேதுவாகிய வினை தான் விரும்புநெறியானே யுண்டாம். எ-று.

கெடாமை=பிறவித் துன்பங்களானழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினை—சாதி யொருமை. தான் விரும்புநெறி=மெய்வருந்தாநெறி. அவாவினை முற்றவறுத்தானுக்கு வேறறஞ் செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—ஒருவன் தன்னிடத்து ஆசை யென்பது அணுகலாகாது என்று பயந்து அவ்வாசையை முற்றுங் கெடுக்கவல்லவனாக இருப்பானாயின், அவ்வித வல்லவனுக்குப் பிறப்பினால் கெட்டுவிடா வண்ணம் தான் விரும்பும் நன்னெறியே யுண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? ஆசை என்பதை ஒருவன் அறவே வொழிப்பானாயின் அவன் மேற்கொண்ட துறவறம் கைகூடுமென்றும், இது ஒன்றினைச் செய்தவன் வேறு அறங்களைச் செய்யவேண்டாவென்றும், இவ்வவாவறுத்தலைச் செய்தலாலேயே எது செய்யினும்நல்லறமாகவே முடியுமென்றும் கண்

டோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், "அவாவறுத்தல் வல்லார்க்கு உண்டாகும் சிறப்பு ஈதென்று கண்டோம். இனி, அவாவொன்று தானே துன்பத்திற்குக் காரணம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

(பரி.) இ-ள். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும்=அவாவில்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமுமில்லை;— அஃது உண்டேல் தவாது மேன்மேல் வரும்=ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாமின்றி அஃதொன்று முண்டாயின், அதனனே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும். எ-று.

உடம்பு முகந்து நின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாதலின், ஈண்டுத் துன்பமென்றது இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. 'தவாது மேன்மேல் வரும்' என்றதனன், மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றாம்.* இதனல் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—அவா என்னும் தீங்கினைத் துறவியொருவன் அறத் துடைப்பானாயின் அவனுக்கு வரக்கூடியதாகிய துன்பம் வேறொன்றும் இல்லை என்றும், அதைக் காவாது ஏனைய அறங்களை யெல்லாம் செய்து ஒரு தீமையினையும் செய்யானாயினும், இவ்வாசை யென்னும் ஒன்றினாலேயே எல்லாத் துன்பங்களும் இடைவிடாமல் முடிவின்றி வரும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதாவது, துறவியொருவன் முற்பிறப்புக்களில் முன்னின்ற துன்பத்தினையும் இனி வரப்போகின்ற துன்பத்தினையும் அடைதற்கில்லாதிருந்தும், இப்போது செய்துகொள்ளும் ஆசையென்னும் தீமைதரக்கூடிய துன்பமே துன்பமாக நின்று மேலும் பிறப்பினை உண்டாக்குமென்றும், ஆகவே அவாவொன்றே துன்பத்திற்கெல்லாம் காரணம் என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர்;

* மூவகைத் துன்பங்கள்=காமம், வெகுளி, மயக்கங்களான் வருந் துன்பங்கள்.

"துன்பத்தைத் தருகின்ற ஆசையாகிய ஒரு தீங்கினை யொருவன் காத்துக்கொள்வானாயின், அவனுக்கு வரும்வினைய வெல்லாம் இன்பமே போதும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

369. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்

(பரி.) இ-ள். அவா என்னும் துன்பத்துட்டுன்பம் கெடின் = அவா வென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின்;— ஈண்டும் இன்பம் இடையறாது = அவன் வீடுபெற்ற வழியேயன்றி உடம்போடு நின்றவழியும் இன்பமிடையறாது. எ-று.

துன்பத்துட்டுன்பம் = எல்லாத் துன்பங்களெல்லாம் இன்பமாக வருந்துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து 'அவா வென்னுந் துன்பத்துட்டுன்பம்' என்றும், அதுகெட்டார்க்கு மனந்தடுமாறாது நிரம்பி நிற்றலான் 'ஈண்டுமின்பமிடை யறாது' என்றுங் கூறினார். இனி ஈண்டுமென்பதற்குப் பெருகுமென்றுரைப்பாருமுளர். இதனால் அவா வறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—ஆசையென்று சொல்லப்படுகின்ற பெரியதோர் துன்பம் ஒருவனுக்கு இல்லாது அறவே யொழிந்து விடுமாயின், அவன் வீடுபேற்றினை யடைந்த காலத்து அடையும் இன்பமாத்திரமேயல்லாமல் உடம்போடு இவ்வுலகத்து வாழ்ந்தகாலத்தும் இன்பமென்பது இடையறாது அவனுக்கு வந்து சேரும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? இவ்வொரு துன்பமே எல்லாத் துன்பங்களினும் மிக்கதோர் துன்பமாகவுள்ளதால், ஆசையென்னும் இப்பெரிய துன்பம் ஒழிந்துவிடின் மற்றைய துன்பங்களெல்லாம் இதற்குச் சமானமில்லாது போகுமென்றும், ஆகவே அவையெல்லாம் இன்பமாகவே காணப்படுமென்றும் ஆசையொழிந்தார்க்கு மனம் பலவழிகளிற் சென்று தடுமாறாது இன்பமே நிரம்பி இருக்குமாதலால் உடம்போடு கூடிநின்றகாலத்தும் இன்பமே அனுபவிப்பர்என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவாவறுத்த துறவியொருவன் வீட்டின்பத்தினை உடம்போடு

வாழுங்காலத்தும் அடைவான் என்று அறிந்தோம். ஆயின், அவா அற்ற ஒருவனுக்கு வீடு என்னும் நிரதிசய இன்பம் எக்காலத்துக் கிடைக்கும்? அது எவ்விடத்துள்ளது?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

370. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(பரி.) இ-ள். ஆரா இயற்கை அவா நீப்பின்=ஒருகாலும் நிரம்பாத வியல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின்,—அந்நிலையே பேரா இயற்கை தரும்=அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனுமியல்பைக் கொடுக்கும். எ-று.

நிரம்பாமையாவது:-தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின், வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவற்சிகளும் பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர் நிரதிசயவின்பத்ததாய் நிற்றலின், 'வீட்டினைப் பேராவியற்கை' என்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒரு தலையாகலின் 'அந்நிலையே தரும்' என்றுங் கூறினார். "நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்—தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பாழுலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து—சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்—லன்றேயப் போதேவீடு மதுவே வீடுவீடாமே"* என்பதும் இக்கருத்தேபற்றி வந்தது. இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்தனென்ப. இதனால் வீடாவது இதுவென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே யுளதாமென்பதூஉங் கூறப்பட்டன. (ம)

விளக்கம் :—எக்காலத்தும் எவ்விததகுதியாலும் நிரம்பாத இயற்கையினையுடைய ஆசை யென்னும் தீங்கு ஒன்றினை ஒருவன் தன்னை விட்டு நீக்குவானாயின், அவ்விதம் நீக்கிய அவனுடைய தகுதியானது நீக்கிய அவனுக்கு நீக்கிய அப்பொழுதே எக்காலத்தும் ஒரே நிலைமையாக விருக்கும் இயல்பாகிய வீட்டு இன்பத்தைக் கொடுத்துவிடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? ஆசையென்பது எவ்வளவு பொருள்களை யொரு

* திருவாய்மொழி—78-ம் திருப்பதிகம், 6.

வன் தேடிச் சேர்த்தானாயினும் தேடிச் சேர்த்த பொருளோடு அமைந்து நில்லாது மேன்மேலும் பொருள் தேடுவதிலேயே வளர்ந்து நிற்றலும் அதனால் அமைவுபெறுமற்போதலுமாக இருப்பதால், இவ்வாசையை ஆரா இயற்கை என்றுகூறியதுடன் அவ்வியற்கையற்றால் அப்பொழுதே உயிர் நிரதிசய இன்பத்தைப் பெறும் என்றும் கூறியதாயிற்று. ஏனெனின்? முன்னரே துறவியொருவனுக்கு ஆராதவியற்கையையுடைய ஆசையை நித்தமாகிய இயல்பினையுடைய மெய்ம்மை வடிவினனாகிய இறைவனிடத்துவைத்தல்வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளதால், அவ்வித உபாயத்தினையறிந்து அவன் திருவடியில் பற்றுவைப்பானுக்கு அவ்வாராவியற்கையுடைய ஆசையானது அவ்வழியாக அத்திருவடியில் ஆராது நின்று எக்காலத்தும் நீங்காதவியற்கையையுடைய நிரதிசயவின்பத்தை அடைவிக்குமென்றறிந்தோம். இதனால் ஆசையொன்றையடக்குதலே மிக அருமை என்றும், அவ்வரிய காரியத்தைச் செய்வார் அரும்பயனாகிய பேரின்பத்தை யடைதல் கூடும் என்றும் அறிந்தோம். இவ்வாசையறுத்தல் மிக அருமை என்று பின்வரும் தாயுமானார் செய்யுளே விளக்கும்.

"ஆசைக்கொரளவில்லை யகிலமெல்லாங் கட்டி
யாளினும் கடன்மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாளிருந்த பேரும்
நிலையாகவேயினும் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதுமாக முடியும்
உள்ளதே போதும் நானெனக் குளறியே
ஒன்றை விட்டு ஒன்று பற்றிப்
பாசக்கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே."

ஆகவே, ஆசையறுத்தலே நிலையாமையுணர்ந்து துறவுபூண்டு மெய் யுணர்தலாகிய ஞானத்தின் பயனாகுமென்றும், இஞ்ஞானமே உயிர் வீடு பெறுதற்கு ஏதுவென்றும் கண்டோம். மக்காள் ! நாம் அறத்தின் பகுதியாகிய துறவறவியலில் ஞானமென்பதை இதனால் அறிந்து உணர்ந்தோம் என்று முடித்தனர். அதுகேட்ட மாணாக் கர், "ஐய! அறத்துப்பால் ஈதென உணர்ந்தோம். இவற்றிற்கெல் லாம் முதற்காரணமாய் நிற்பது ஊழ் என்பதேதோ ஒன்று உள் ளது என்று சிலர் கூறக் கேட்டிருக்கின்றோம். அதைப் பற்றி நம் தெய்வப் புலவர் யாது கூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறு வாராயினர்.

துறவறவியல் முற்றிற்று.

---

(பரி.) இவ்வாற்றான் இம்மை மறுமை வீடென்னு மூன்றனையும் பய த்தற் சிறப்புடைத்தாய அறங் கூறினார் ; இனிப் பொருளுமின்பமுங் கூறு வார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

---

## 38. அதிகாரம்.

## ஊழ்

---

(பரி.) அஃதாவது:—இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒருபொருட்கிளவி. இது பொருளின்பங்களிரண்டற்கும் பொது வாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடியை புடைமையானும், அதனிறுதிக்கண் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளின் பிரயோஜனம் அவற்றைச் செய்தவனாகிய ஒருவனைச் சென்று அடைவதற்குக் காரணமாகிய நியதி என்பதாம். இவ்வூழ் பொருள் இன்பங்கள் இரண்டினுக்கும் பொதுவாக நின்று ஒன்ற னுள் வைக்கப்படாமையானும், இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றினையும் உண்டாக்கும் அறத்தோடு சேர்க்கையுடைமையா னும் அறத்துப்பாலின் கடைசியில் வைக்கப்பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உலகத்து முயற்சியினால் எதுவும் உண்

டாகுமென்றும், முயற்சியின்மையால் எதுவும் ஒழிந்துபோகுமென்றும் கூறுவதை நாங்கள் கேட்கின்றோம். அவ்விதமிருக்க, ஊழ்தான் இருவினைப்பயனை அடையச் செய்வதற்கு ஏதுவாகவுள்ளது என்று கூறுவது என்னை?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

371. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(பரி.) இ-ள். கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும்=ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சியுண்டாம்;—போகு ஊழால், மடி தோன்றும்=அஃதழிதற்குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம். எ-று.

ஆகூழ் போகூழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு=மடி. பொருளினாக்க வழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையுந் தானே தோற்றுவிக்குமென்பது கருத்து. (க)

விளக்கம்:—ஒருவனுக்குப் பொருள் கிடைக்கத் தகுந்த ஊழ் இருக்குமாயின் முயற்சியுண்டாகுமென்றும், பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழ் இருக்குமாயின் சோம்பலுண்டாகுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், பொருள் வருதற்கும் அழிதற்கும் துணைக்காரணமாய் நிற்பது முயற்சியென்றும், இத்துணைக்காரணமாகிய முயற்சி முயற்சியின்மைகளை நடத்துவதற்கு ஊழ்முதற்காரணமாய் உள்ளதென்றும் அறிந்தோம். இதனைப் பாண்டம் ஒன்று செய்வதற்கு மண் மூதற்காரணமென்றும், தண்டசக்கரங்கள் துணைக் காரணமென்றும், செய்கின்ற குயவன் நிமித்த காரணமென்றும், மண் ஒன்றே ஏனைய இரண்டு காரணங்களையும் நிகழச்செய்வதுபோல் ஊழ் என்னும் முதற்காரணம் ஒருவனுக்கு நன்மை தீமைகளைப் பயந்து தண்ட சக்கரங்களாகிய துணைக்காரணம்போல் உள்ள முயற்சியையும் முயற்சியின்மையையும் உடனிருந்து தொழிற்படுத்துமென்றும், இவற்றிற்கெல்லாம் முதல்வனாகிய இறைவன் குயவனைப்போல் இன்பதுன்பங்களை ஒருவனுக்கு ஊட்டுவிப்பானென்றும் பெற்றோம் என்றனர்.

அதுகேட்ட மாணாக்கர், "எவ்விதம் ஊழானது முயற்சியையும் முயற்சியின்மையையும் உண்டாக்கும்? அதை யறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

## 372. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று மாகலூ ழுற்றக் கடை.

(பரி.) இ-ள். இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப்படுக்கும்= ஒருவனுக்கு எல்லாவறிவுமுளவாயினும் கைப்பொருளிழத்தற் கேதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்;—ஆகல் ஊழ் உற்றக்கடை அகற்றும்=இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்து அஃததனை விரிக்கும். எ-று.

கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ் ஆகலூ ழென்பனவிரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடை யென்பது முன்னுங் கூட்டப்பட்டது. இயற்கையானுய அறிவையும் வேறுபடுக்குமென்பதாம். (உ)

விளக்கம் :—மேற் கூறிய வண்ணம் ஒருவனுக்குப் பொருளை இழக்கின்ற ஊழ் வந்தகாலத்து அவன் எவ்வளவறிவுடையனாயினும் அவ்வூழானது அவனுக்கு எல்லாப் பேதைமையையும் உண்டாக்குமென்றும், பொருளை யுண்டாக்குதற்குக் காரணமாகிய ஊழ்வந்தகாலத்து அவன் எத்துணைப்பேதைமையுடையனாயினும் அப்பேதைமையைக் கெடுத்து அவன் சுருங்கிய அறிவினை விரிந்த அறிவாக்கும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், அறிவுடையவனையும்இழக்கின்ற ஊழ் பேதைமைப்படுத்துமென்றும், பேதைமையுடையவனையும் ஆகும் ஊழ் பேதைமையை நீக்கி அறிவை விரியச் செய்யும் என்றும் கண்டோமாதலால், ஊழ்வலிக்குத் தக்கவளவாக அறிவுண்டாய காலத்து முயற்சியும், அறிவு இல்லாதகாலத்து முயற்சியின்மையும் உண்டாகும். ஆதலால், ஊழே முதற் காரணமாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் இயற்கையாகவுள்ள அறிவினைத்தான் இவ்வூழானது கீழ்ப்படுத்தல் கூடும்.

செயற்கையறிவாகிய நூலறிவினையும் கீழ்ப்படுத்த இவ்வூழ்வல்ல தோ?" என்று கேட்டலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

(பரி.) இ-ள். நுண்ணிய நூல் பல கற்பினும்=பேதைப்படுக்கு மூழு டையானொருவன் நுண்ணியபொருள்களை யுணர்த்தும் நூல்பலவற்றையுங் கற்றானாயினும்,—மற்றும் தன் உண்மை யறிவே மிகும்=அவனுக்குப் பின் னுந் தன்னூழானாகிய பேதைமையுணர்வே மேற்படும். எ-று.

பொருளினுண்மை நூலின்மேலேற்றப்பட்டது. மேற்படுதல்=கல்வி யறிவைப் பின்னிரங்குதற்காக்கிச் செயலுக்குத் தான்முற்படுதல். "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா—வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்"* என்பதுமது. செயற்கையானாய வறிவையுங் கீழ்ப்படுத்து மென்பதாம். (௩)

விளக்கம் :—ஒருவனுக்குப் பல நூல்களைக் கற்ற செயற்கை யறிவு மிகுந்து இருக்கினும் அவனுக்குப் பேதைமையடையக்கூடிய ஊழ்வந்த காலத்து அவன் கற்ற நூலறிவு யாவற்றையும் அவ்வூழ் விலக்கித் தன்னுடைய தகுதியாலாகிய பேதைமையினையே அதி கப்படுத்தும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னை யோவெனின்? ஊழ் முதற்காரணமாதலால் நுண்ணியநூல் பலகற் றவனாயினும் அவனுக்குள்ள செயற்கை யறிவினையும் மாற்றித் தன் வலியையே காட்டும். ஆதலால், ஊழ்வலியே முதன்மையானது. இதனை,

"காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா
வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமாற்
றூது துற்றபு தங்கிய வண்டனார்க்
கேதமிற்றென லெண்ணுமென் னெஞ்சரோ."

என்னும் சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம் 76-வது பாட்டா கிய இச்செய்யுளும் விளக்கும். ஆதலால், செயற்கையறிவினையும் ஊழ்கெடுக்கவல்லது என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என்னை? இயற்கை செயற்கை ஆகிய இரண்டு அறிவினை

யும், சுருக்குவதும் விரியச்செய்வதும் ஊழின் வலி என்றறிந்தோம். அறிவுடையார் உலகத்து வறிஞராகவிருக்கவும் பேதைமையுடையார் செல்வமுடையராக விருக்கவும் காண்கின்றோம். அது எற்றிற்கு?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(பரி.) இ-ள். உலகத்து இயற்கை இருவேறு = உலகத்து ஊழினாய வியற்கை இரண்டு கூறு; — திருவேறு தெள்ளியராதலும் வேறு = ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு, அறிவுடையராதலும் வேறு. எ-று.

செல்வத்தினைப்படைத்தலுங், காத்தலும், பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லதியலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்காகுமூழ் செல்வமுடையராதற்காகாது ; செல்வமுடையராதற்காகுமூழ் அறிவுடையராதற்காகாதென்றதாயிற்று. ஆகவே செல்வஞ் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாவென்பது பெற்றாம். (௪)

விளக்கம் :—உலகத்தில் ஊழாலாகிய இயற்கையானது இரண்டுவிதமென்றும், ஒன்று செல்வமுடையாராக விருத்தலென்றும், மற்றொன்று அறிவுடையாராக விருத்தலென்றும் அறிகின்றோம் என்று, இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? அறிவுடையார்க்குச்செல்வத்தினையுண்டாக்கலும், உண்டாக்கியசெல்வத்தைக் காத்தலும், காத்த செல்வத்தால் பயன் கொள்ளுதலும் எளிமையாகவிருந்தும், அவ்வாறு செல்வத்தையடையாது வறிஞராகவிருக்கவும், அறிவேயில்லாதார் எல்லாச் செல்வங்களையும்பெற்றுச் செல்வந்தராயிருக்கவும் காண்பது அறிவுடையார்க்கு உள்ள ஊழ் செல்வம் உடையவர்க்கு ஆகாது என்றும், செல்வம் உடையவர்க்கு ஆக வேண்டிய ஊழ் அறிவுடையார்க்கு ஆகாதென்றும் காண்பதுடன், செல்வம் செய்வதற்கு முதற்காரணமாகிய ஊழ் ஒன்றே வேண்டுமென்றும், துணைக்காரணமாகிய அறிவு வேண்டுவதில்லை என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "செல்வந்தர் செல்வத்தைச் செய்யுங்காலத்து நாள் முதலியன ஒன்றும்

பாராமலே காரியத்தைத் தொடங்கிச் செல்வத்தைத்தேடி தட்டின்றி அடைவதும், அறிவுடையார்கள் நாள்முதலியன நல்லனவாகக் கொண்டு பொருள்தேட முயன்றும் அதுகைகூடாது நிற்றலும் காண்கின்றோம். அது என்னை?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

375. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(பரி.) இ-ள். செல்வம் செயற்கு=செல்வத்தையாக்குதற்கு—நல்லவை எல்லாம் தீயவாம்=நல்லவையெல்லாந்தீயவாய் அழிக்கும்,—தீயவும் நல்லவாம்=அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும், ஊழ்வயத்தான். எ-று.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழாமென்பது அதிகாரத்தாற்பெற்றும். அழிக்குமூழுற்றவழிக் காலமுதலிய நல்லவாயினும் அழியும், ஆக்குமூழுற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறு படுக்குமென்பது பெற்றும். (ரு)

விளக்கம் :—ஒருவன் செல்வத்தைச்செய்கின்ற காலத்து ஊழின் வசமானது அவனுக்கு ஆகூழாய் நிற்குமானல் காலம், இடம், கருவி, தொழில் முதலியவைகளெல்லாம் தீயவாக விருந்தும் அது அத்தீயவை எல்லாவற்றையும் நீக்கி நன்மையாகவே முடித்துச் செல்வத்தைப் பெருக்குமென்றும், செல்வம் ஆக்குதற்கு அல்லாத ஊழ் இருக்குமாயின் மேற் சொல்லிய காலம் முதலியவைகளெல்லாம் நன்றாகவிருக்கினும் அந்நன்மைகளையெல்லாம் அத்திய ஊழானது ஒழித்துச் செல்வந்தேடுவதைக் கெடுக்குமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், ஒருவனுக்கு ஆகூழ் இருக்குமாயின் காலம் முதலிய துணைக்காரணங்கள் வேண்டுவதேயில்லை என்றும், முதற்காரணமாகிய ஊழ் ஒன்றே போதுமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், "நல்லூழிற்கு நன்னாள் முதலியவும் வேண்டாமென்று அறிந்தோம். ஆயின், சிலர் தமக்குக் கிடைத்த பொருளை எவ்வளவு வருந்திக் காத்தாலும் போய்விடுகின்றதைக் காண்கின்றோம. அது என்னை?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

376. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(பரி.) இ-ள். பால் அல்ல பரியினும் ஆகாவாம் = தமக்கூழல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்;—தம உய்த்துச் சொரியினும் போகா = ஊழாற்றமவாய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும், தம்மை வீட்டுப்போகா. எ-று.

பொருள்களினிலையும் போக்கும் ஊழினானவதல்லது காப்பிகழ்ச்சி களானாகாவென்பதாம். இவையாறு பாட்டானும் பொருட்குக்காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (௬)

விளக்கம்:—தமக்கு ஊழால் அநுபவித்தற்கு ஆகாத பொருள்களை எவ்வளவுதான் வருந்திக் காத்தாலும் அப்பொருள்கள் வருந்திக்காத்த அவர்களிடத்து நில்லாமல் போய் விடுமென்றும், அநுபவிப்பதற்கு உரியதாகிய ஊழ் உள்ளவர்களுக்குக் கிடைத்த பொருள்களைச் சிறிதும் காவல் செய்யாது எவ்விடத்தே வைத்து வைக்கினும் அவை அவர்களைவிட்டு நீங்காவென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், அநுபவிக்கும் ஊழ் உள்ளவனுக்குப் பொருள்களைக்காவல் செய்து காக்கவேண்டுவதில்லை என்றும், அவ்வித ஊழ் இல்லாதவன் எவ்வளவு வருந்திக் காத்தாலும் அப்பொருள்கள் அநுபவிப்பதற்கு இல்லாமல் போய் விடுமென்றும் கண்டோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "ஊழ்வலி இல்லாவிடின் ஒருவனுக்கு இருந்த பொருளும் நில்லாது என்றும் அறிந்தோம். ஆயின், பொருளை மிகுதியும் படைத்து உள்ள சிலர் அதனாலாகிய பயனை அநுபவியாது நிற்கின்றனர். அது என்னையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

377. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(பரி.) இ-ள். கோடி தொகுத்தார்க்கும் = ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள கோடியை முயன்று தொகுத்தார்க்கும்—வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது = தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தலுண்டாகாது. எ-று.

ஒருயிர் செய்தவினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், 'வகுத்தான்' என்றனர். "இசைத்தலுமுரிய வேறிடத் தான" * என்பதனன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்கு மென்றமையான், உம்மை எச்சவும்மை. வெறுமுயற்சியாளர்க்கு† பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது அதற்கு ஊழ் வேண்டுமென்பதாயிற்று. (எ)

விளக்கம் :—ஒருவன் மெய், வாய், கண், மூக்கு, செவி யாகிய ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களைக் கோடியளவாக முயற்சி செய்து சேர்த்தானாயினும், அவன் அனுபவிப்பதற்கு இவ்வளவென்று வகுத்ததாயுள்ள அளவிற்குமேல் அனுபவித்தல் முடியாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், இறைவன் அவரவர்க்கென அவரவருடைய வினைக்குத் தக்கவளவாகப் பங்கிடுகின்ற வல்லமையுடையவனாதலால், அவன் வகுத்த அளவே பொருளைப் படைத்த ஒருவன் அனுபவித்தல் வேண்டுமேயன்றி வேறொன்றும் செய்வதற்கு ஆகாது என்று கண்டோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்விதம் பொருளைத் தேடுவதற்குரிய ஊழ் ஒன்றே இவர்க்கு உரியதென்றும், அவ்வாறு தேடிய பொருளையனுபவிக்கும் ஊழ் இவர்க்கு இல்லை என்றும் இதனல் அறிந்தோம். இனிச் செல்வம் அடையாதார்க்கு உள்ள ஊழ்வலியும் ஈதென அறிய ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

378. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின்.

(பரி.) இ-ள். துப்புரவு இல்லார் துறப்பார்—வறுமையானுகர்ச்சியில்லாதார் துறக்குங் கருத்துடையராவர்,—உறற்பால ஊட்டா கழியு மெனின்—ஊழ்கள் உறுதற் பாலவாய துன்பங்களை உறுவியா தொழியுமாயின். எ-று.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்பெறுவன தாமே விடப்பெற்று வைத்துங் கருத்து வேறு பாட்டாற்றுன்ப

* தொல்காப்பியம்—சொல்லதிகாரம், கிளவியாக்கம், 59.
† வெறுமுயற்சி—நல்வினை தீவினை யிரண்டினும் படாமுயற்சி.
(இலக்கணக்கொத்து, வினையியல் பதினேழாஞ் சூத்திரவுரையிற் காண்க.)

முறுகின்றது ஊழின் வலியாமெனின் என்பது எஞ்சி நிற்றலின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (அ)

விளக்கம் :—ஊழின் வலிமையால் வறுமை யடைந்தார் அநுபவிப்பதற்கு ஒன்றுமில்லாது வருந்துவாராதலின் துறக்கின்ற எண்ணமுடையவராதல் கூடுமென்றும், ஆயின் அவ்வித எண்ணமும் ஊழ்கள் அவர் அநுபவிக்கவேண்டிய துன்பங்களை அவருக்குக் கொண்டுவந்து விடாத காலத்தேயே உண்டாகுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வறுமை மிகுதியால் தம்மால் விடக்கூடிய பொருள்களெல்லாம் தாமே விடப்பெற்று வைத்தும் துறவாரென்றும், ஏனெனின்? அவ்வாறு துறப்பாராயின் அவர் அநுபவிக்கவேண்டிய துன்பங்களை அநுபவிப்பதற்கில்லாமற் போகுமென்றும், ஆதலால் உயிர்கள் யாதொரு பொருளும் தமக்கென்று அடையக்கூடாத காலத்தும், நன்னெறியாகிய துறவு மார்க்கத்தில் அவைகளைச் செல்லவொட்டாது அடையக்கூடாத பொருள்களின்மீதே ஆசைப்படும்படிச்செய்து அவ்வாசையால் உண்டாகும் பிறவித்துன்பங்கள் முதலிய பல துன்பங்களையும் கொண்டுவந்து துன்புறச்செய்யும் ஊழ்வலியேமிக்கது என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "பொருளைப் பெறாத காலத்து ஏன் மக்கள் வருந்துகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

379. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்.

(பரி.) இ-ள். நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர்=நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்தனுபவிப்பார்—அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன்=வினைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறனுபவியாது துடைக்குந்திறன் நாடி அல்லலுழப்பது என் கருதி! எ-று.

தாமே முன்செய்து கொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டு மியைந்தனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்தனுபவித்து ஏனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம்.

இவை மூன்று பாட்டானும் இன்பத்துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலி கூறப்பட்டது. (க

விளக்கம் :—ஒருவனுக்கு நல்வினை வந்து அடையுங் காலத்து அந்நல்வினையின் பயனால் விளையும் இன்பங்கள் முற்றும் தனக்கு வேண்டாம் என்று நீக்குவதைச் சிறிதும் எண்ணாது கிடைத்த அவ்விளைவு மிகநல்லது என்று கொண்டு அதனாலாகிய இன்பங்களை யெல்லாம் பொருந்தி யனுபவிக்க, நல்வினைக்கு மாறாகிய தீவினையின் பயனால் உண்டாகும் துன்பங்களையும் அவற்றோடு பொருந்தி அனுபவியாது, தான் செய்த தீமையால் விளைந்த துன்பத்திற்கு வருந்துதல் அறிவாகாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், ஒருவன் தனக்கு வரும் இன்பத்தினையும் துன்பத்தினையும் இருவினையின் பயனென்றும், அவற்றிற்கு முதற்காரணம் ஊழின் வலி என்றும் அறியவேண்டும் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்வொன்பது திருக்குறளால் ஊழே ஒருவனுடைய இன்ப துன்பங்கட்கு முதற் காரணமென்று அறிந்தோம். ஆயின், இதனினும் வலிய பொருள் உலகத்து இல்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(பரி.) இ-ள். மற்றொன்று சூழினும் தான் முந்துறும்—தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாகவந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்,—ஊழிற் பெருவலி யா உள—அதனால் ஊழ் போல மிக்க வலியுடையன யாவை யுள? எ-று.

பெருவலி—ஆகுபெயர். சூழ்தல்—பலருடனும் பழுதறவெண்ணுதல். செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி * கொடாதென்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் பழியாக வருதலுடைமையின், ஊழேவலியதென்பதாம். இதனான் அவ்விருவகையூழின் † வலியும் பொதுவாகக் கூறப்பட்டது. (ய)

* அவதி—பொழுது.

† இருவகையூழ்—பொருளுக்கான ஊழ்; இன்பதுன்பங்களுக்கான ஊழ்.

விளக்கம் :—ஊழை விலக்கும்பொருட்டு அதற்கு மாறாகிய ஒரு உபாயத்தினை ஒருவன் எண்ணிச் செய்யினும், அவன் எண்ணிய அவ்வுபாயமாகவாவது வேறொரு வழியாகவாவது வந்து அவன் செய்த உபாயத்திற்கு முன் ஊழானது நிற்கும் ஆதலால், அவ்வூழ்போல் மிகுந்த வன்மையுடையபொருள்கள் உலகத்துவேறு எவை உண்டு என்று இத்திருக்குறள் வினவுகின்றது. இதனால், ஊழைக் காட்டிலும் வலிமையுடைய பொருள் உலகத்து இல்லை என்றும், ஒருவன் தன்னுடைய அறிவின் முதிர்ச்சியால் தனக்குள்ள ஊழினை எவ்விதம் தடுக்க முயலினும் அவ்விதம தடுக்க முயன்ற அவ்வுபாயத்தினும் தான் முன்னதாகவந்து ஊழ் நுழைந்து கொள்ளுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "ஐய! இதுகாறும் இல்லறம் துறவறம் ஆகிய இவற்றிற்கு இயைபுடைய ஊழ் என்பதனை நன்கு கேட்டு அறிந்தோம். இனி பொருள் என்னும் இரண்டாம் பகுதியினையும் கேட்க ஆசைப்படுகின்றோம" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

அறத்துப்பால் முற்றிற்று.

பக்கம் 458

தொடர்ச்சிக்குத் தொகுப்புரை காண
ப்பார். பக்கம் 522 முதல்
அநுபந்தம் தெரியும்

செய்யுள்கள் I முதல் X வரை
பக்கங்களில் தொகுப்புரை
எண் முதலியன உள்ளது.

அநுத்துறைகள் [illegible]
இவ் பகுதிக்கு [illegible]
ஆம் தொகுப்புரையின் பக்கம்
513 — 522 பார்